நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின் சட்டமன்ற உரைகள்

(பாகம் - 1)



நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

(பாகம் - 1)

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுருகன்றம்

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல்பதிப்பு : மே, 2007

RY LIBRARY
CHENNAI - 600 085.
894.8115
TAM

விலை ரூ. **300/-**

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு

நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத் தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான்

அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என்

இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக் கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில்

எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப்

பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவி யங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்'' பொன்விழா கொண்டாடப்படும் இந்தக்

குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

– தமிழ்க்கனி பதிப்பகத்தார்

நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

ಕರ್ನಾಟಕ ಕಲಾಪಿಠ

ಪ್ರಶ್ನಿಕಾಲ ಅಭ್ಯಾಸ ಸೂಚಿ

ಫಲಜ್ಯೋತಿಷ

நிதிநிலை அறிக்கை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

உரை :1 நாள் : 5.3.1958

கலைஞர் மு. கருணாநிதி : மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின் முன் சமர்ப்பித்துள்ள நிதி அறிக்கையைப்பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். **''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை''** என்கிற வான் சிறப்புடன் ஆரம்பமாகி, நாம் வளமாக வாழ வேண்டுமானால் வடக்கு வரம் தந்துதான் தீரவேண்டும் என்ற நிலையை விளக்கி, நம்பி இருந்தவரில் ஒருவரும், நம்மில் ஒருவரெனக் குறிப்பிட்டவருமான ஒருவர் திரும்ப வந்துவிட்டார் என்ற சோக முற்றுப்புள்ளியோடு, நிதி அமைச்சரின் அறிக்கை முடிந்திருக்கிறது. ஏறத்தாழ 26 பக்கம் கொண்ட அந்த அறிக்கையை திரும்பத் திரும்பப் படித்தால்...

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : பரவாயில்லை. பட்ஜெட்டில் பக்கத்தையாவது பார்த்திருக்கிறீர்களே. அது முன்னேற்றம்தான்!

கலைஞர் மு. கருணாநிதி : பக்கம் மாத்திரமல்ல, அதிலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தின் அபத்தத்தையும்

குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு அறிக்கைக்கும், இந்த ஆண்டு அறிக்கைக்கும் இருக்கிற வித்தியாசம் என்ன என்று துருவித் துருவிப் பார்த்த நேரத்தில், 5ம் பக்கத்தில், அவர்கள் தந்திருக்கிற ஆங்கில அறிக்கையில், 140,000 டன் அம்மோனியம் சல்பேட் உரம் வழங்கத் திட்டமிட்டிருந்தோ மென்றும், தமிழ் அறிக்கையிலே ஒரு லட்சத்து நாலாயிரம் டன் திட்டமிட்டிருந்தோமென்றும் புள்ளி விவரங்கள் தருகின்றன; அந்தப் பிழையைப் போன்று சில வேறுபாடுகளைத் தவிர வேறு அந்த அறிக்கைக்கும் இந்த அறிக்கைக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை. மத்திய சர்க்காரிடத்தில் நாம் சென்று உதவி கேட்டோம். அந்த உதவிகள், கோரிக்கைகள் புறக்கணிக்கப் பட்டன. ஓரளவுக்குத்தான் நிறைவேற்றப்பட்டன. அத்தகைய நிலைகள் சென்ற ஆண்டு அறிக்கையில் காணப்படுவது போலவே இந்த ஆண்டு அறிக்கையிலும் காணப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

இந்த ஆண்டு அறிக்கையில் சில வரிகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு அறிக்கையில் வரிகள் விதிக்கப்படவில்லை. அதனால் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் அதைப்பற்றி பேச முடியாமல் ஏமாந்து போய் விட்டார்கள் என்று கூறிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இந்த ஆண்டில் வரிகள் விதித்திருப்பதை எதிர்த்து பேச வில்லையா என்பதை நாம் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். ஒரு பூனை எலியைக் கவ்வுவதற்கும், அதே பூனை தன்னுடைய குட்டியைக் கவ்வுவதற்கும் வித்தியாசம் உண்டு என்று அழகாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய சென்ற வரவு செலவு திட்டப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதை இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வரியை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் குட்டியைக் கவ்வுவது போலல்ல; எலியைக் கவ்வுவது போலவே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு அறிக்கையில் விவசாய வருமான வரியைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு எதிர்ப்பு இருக்கிறது, காங்கிரஸில்! அதைப் போலவே பொழுது போக்குக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். விவசாய வருமான வரியை

இந்த வருஷமே விதிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. சென்ற மந்திரிசபையின் போது விவசாய வருமான வரி விதிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களால் கோரப்பட்டது. அந்த நேரத்தில் அதற்கு என்ன பதில் சொன்னார்கள் என்றால், காபி, தேயிலை தோட்டங்களுக்கு வரிகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. அதனால் விவசாய வருமானத்திற்கு வரி விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். அத்துடன் நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டப்போகிறோம், அதனாலும் அதற்கு வரி விதிக்க வேண்டிய அவசியமில்லை என்று அந்த நேரத்தில் பதில் சொன்னது எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. நம்முடைய மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில் கூட நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டப்போகிற காலம் விரைவில் வரப்போகிறது என்று காணப்படுகிறது. ஆனால் இப்பொழுது அந்த உச்சவரம்பு வரவில்லை. அதற்கு பதிலாக விவசாய வருமான வரி வந்திருக்கிறது. மற்றும் பொழுதுபோக்கிற்கு வரி விதிக்கப் படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள், நாங்கள் அதை எதிர்ப்போம் என்று! ''அவர்கள் கட்சியில்தான் சினிமாக்களில் ஈடுபடக் கூடியவர்கள் இருக்கிறார்கள், அதனால் திராவிட முன்னேற்றக் கட்சி இதை நிச்சயமாக எதிர்த்தே தீரும்'' என்று அவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள். உள்ளபடியே அங்கத்தினர்கள் நினைத்தபடி இல்லாமல் இந்த வரி, தேவைப்படும் என்று அரசினர் கருதினால் அந்த வரியை நாங்கள் எதிர்க்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : சென்ற வருஷம் அவர்கள்தான் இந்த ஆலோசனையை கூறினார்கள். ஆகையால்தான் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : எங்களுடைய யோசனையை இவற்றிலாவது எடுத்துக்கொண்டதற்கு பாராட்டி எங்களுடைய நன்றியை செலுத்திக் கொள்ளுகிறேன்.

கைத்தறி சம்பந்தமாக ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். கரை போட்ட வேஷ்டியையும், சேலையையும் உற்பத்தி செய்வதை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்று இதற்கு முன்பு இருந்த அமைச்சர் அவை ஏற்றுக்கொண்டு அதை மத்திய சர்க்காரின் மாளிகையில் அழுக்குப்படிந்த ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருக்கிறது. அதைத் தட்டி எழுப்ப இந்த சர்க்காரால் முடியவில்லை. அப்படி எழுப்பி வேண்டிய நடவடிக்கைகளை இந்த சர்க்கார் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை.

மற்றும் இங்குள்ள பல வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள இந்த சர்க்கார் தவறி விட்டது. செய்யப்பட வேண்டிய பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்து நடத்தி நாட்டின் வளத்தை உயர்த்த வேண்டும் என்று சொன்னால் அவைகளை எடுத்து நடத்த வசதி இல்லை என்ற சொல்லி விடுகிறார்கள். தென்பக்கம் இயற்கை வசதியே இல்லை என்றும் சொல்கிறார்கள். இதைக் கேட்கும்போது திருக்குறளில் உள்ள ஒரு அரிய குறள் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது ''இலமென் றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்'' என்று அழகாக வள்ளுவர் உழவு அகர அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதன் பொருள் என்னவென்றால் வாழ்வதற்கு வழி இல்லை என்று அழுது கொண்டிருக்கும் ஒருவனைப் பார்த்து நிலம் என்ற மடந்தை ஏன் சோம்பி முடங்கிக் கிடக்கிறாய், நான் இருக்கிறேன், என்னைப் பயன்படுத்திக் கொள்ள உன்னால் இயலவில்லையா?'' என்று ஏளனம் செய்வது போல் கேட்கிறாள் என்று கூறியிருக்கிறார். அதைப்போன்று தமிழ் நாட்டில் ஏராளமான வசதிகள் இருக்கின்றன. நிலக்கரி இருக்கிறது, இரும்பு இருக்கிறது, ஜிப்சம் போன்ற பொருள், அணுவுக்கு ஏற்ற மணல் முதலியன இருக்கின்றன. இவைகளை ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? அவைகள் இருக்கும் போது வசதி இல்லை, திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று ஏன் கூறவேண்டும்?

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : நீங்கள் அதிகார மயக்கத்தில் இருப்பது போல் தோன்றுகிறது. அங்கே குறிப்பிட்டிருப்பது நீர்ப்பாசன திட்டங்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : எனக்கு மயக்கம் ஏற்படுவது இல்லை. ஏனென்றால் நான் மதுவிலக்குத் திட்டத்தை தீவிரமாக ஆதரிப்பவன்.

இந்தப் பொருள்களை இங்கே உபயோகப்படுத்த முடியவில்லையா? இயற்கை வசதி இல்லை என்று கூறுவது சரியா? இயற்கை வசதி இல்லை என்று கூறினால் அதை ஒத்துக் கொள்ள முடியாது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றி பேசினார். அந்த துறைமுகத் திட்டத்தை எடுத்து நடத்தினால் அது கொழும்பு துறைமுகத்துடனும் பம்பாய் துறைமுகத்துடனும் போட்டி போடக்கூடிய ஆழ்கடல் துறைமுகமாக மாறும். நூறு மைல் அளவிற்கு ஒரு கால்வாய் அமைத்தால் அந்தத் துறைமுகத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு முடியும். இலங்கையின் மேற்கு கடற்கரைக்கும் இங்குள்ள தென்கோடி கீழ் கடற்கரைக்கும் இடையே உள்ள பாறைகளை அகற்றினால் இன்னும் பல நல்ல துறைமுகங்களை அமைக்கலாம். அதற்கு சுமார் பத்து கோடி ரூபாய் செலவு ஆகும் என்று கூறப்படுகிறது. தென்னகத்திலிருந்து சுமார் 35 கோடி ரூபாய் வடநாடு துறைமுக வரி மூலமாக வசூலித்துக் கொண்டிருக்கிறது. அந்த 35 கோடி ரூபாயில் பத்து கோடி ரூபாயை எடுத்து தென்னகத்திற்கு என்று செலவு செய்யக் கூடாதா என்று கேட்கிறேன். திரு. ஏ.ராமசாமி முதலியார் தலைமையில் ஒரு குழு இந்த சேது சமுத்திரத் திட்டத்தைப் பரிசீலனை செய்து ஒரு ரிப்போர்ட்டையும் சமர்ப்பித்து அது மத்திய சர்க்காருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையும் இன்னும் கவனிக்கப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டின் வரியை வட நாட்டார் வாங்கிக் கொண்டு வளம் பெறவும் அவர்களுக்கு நாம் அடிமைப்பட்டுக் கொண்டிருக்கவும் வேண்டியதாக இருக்கிறது. நம் நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு நாம் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. சூயெஸ் கால்வாயைத் தாண்டி கீழ்த்திசை பிற தேசங்களுக்கு வரும் கப்பல்கள், நிலக்கரியைப் பெற கொழும்புக்குப் போகிற கப்பல்கள், தூத்துக்குடி துறைமுகம்

பெரிதாக்கப்பட்டால் அங்கே வந்து தென்னகத்தின் பொருள் வளத்தை செழிப்பாக்கும். நாம் ஏன் அப்படிப்பட்ட இந்த திட்டத்தை எடுத்து நடத்தக்கூடாது? இதனால் நமக்கு லாபமும் வருமானமும் வரக்கூடியதாக இருக்கிறது. அதன் மூலம் நமது நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக் கூடாதா? நல்ல வளமான திட்டங்களை இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துக் காட்டி அவைகளை நிறைவேற்றிவைக்க ஏன் போராடக் கூடாது என்று கேட்கிறேன். திராவிட நாட்டு வரிகள் வட நாட்டிற்கு கொட்டிக்கொட்டி குவிக்கப்படுகிறது. இன்றைய தினம் அதிலிருந்து கொஞ்சமாவது வாங்கி ஏன் இந்தத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றக்கூடாது என்று கேட்கிறேன். திராவிட நாடு விடுதலை பெறாத காரணத்தால் நாம் வாழ்வில் உயராமல் இருக்கிறோம். உலகத்திலுள்ள மற்ற நாடுகளைப் பார்த்தால் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வளவோ உயர்ந்திருக்கிறது. எகிப்து நாட்டை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 465 ரூபாய். லெபனான் நாட்டின் மனிதனுடைய ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 600 ரூபாய். சுவிட்ஜர்லாண்டை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 4,000 ரூபாய். ஐஸ்லாண்டை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டில் மாத்திரம் ஒரு மனிதனுடைய ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 270 ரூபாய்தான். இங்குள்ளவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவே இல்லை. இதை எல்லாம் அரசினர் உணர்ந்துதான் இருக்கிறார்கள். ஆனால் நாம் வரியை மட்டும் கொள்ளை கொள்ளையாக கொட்டிக்கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். ''வெள்ளிப்பணம் கேட்டவர்களுக்கு அள்ளி அள்ளி கொடுத்த கையால் - இப்போது கொள்ளிக்காக வாங்கினேனே - கொடும்பாவியானேனே'' என்று ஒரு பாடலை அரிச்சந்திர நாடகத்தில் கேட்டிருக்கிறேன். அதைப் போலத்தான் யவனத்திலும் கிரேக்கத்திலும் ரோமாபுரியிலும் வாணிபப் பொருள்களைக் குவித்து தங்க நாணயங்களைத் தமிழ்ச் சிறார்கள் தெருவிலே வாரியிறைத்து விளையாடினார்கள்

என்ற சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டாராம். இன்று வட நாட்டாரிடம் கொள்ளிக்காசு வாங்கிப் பிழைக்கிறோம். இடுகாட்டில் கொள்ளிக்காக வாங்குகிறவன் அதிகாரக் குரலில் கேட்பான். இதுவோ அடிமைக்குரல். ஆகவேதான் தெற்கு என்ற தெய்வானையே போதும் வடக்கு என்ற வள்ளி வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுகிறது. ஆனால் தெற்கு என்ற தெய்வானை மட்டும் போதாது வடக்கு என்ற வள்ளியும் வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் சொல்கிறார். காரணம் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் சுப்ரமணியமாக இருப்பதுதான் போலும். முடிவாகத் திராவிட நாட்டிற்கு என தனியான வரவு செலவுத் திட்டங்களை அமைத்து திராவிட நாடு தனியாக இயங்கும் பொன்னாள் வரவேண்டும் என்பது எங்களுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக் கொண்டு திராவிடம் வெல்க, திராவிடம் வாழ்க என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



உரை : 2 நாள் : 4.3.1959

கலைஞர் மு. கருணாநிதி : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் எட்டாவது முறையாக வைத்திருக்கிற நிதி நிலை அறிக்கையின்மீது மூன்றாவது முறையாக நான் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் வரிகள் இல்லாத திட்டம், உபரியைக் காட்டுகிற திட்டம் என்று ஆளுங்கட்சி அங்கத்தினர்கள் வெகுவாக புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். அந்தப் புகழ் பாடுவதில் எதிர்க் கட்சியில் உள்ள அங்கத்தினர்களும் பங்கு கொள்ள வேண்டுமென்று அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் பேசியபோதெல்லாம் சுட்டிக்காட்டப் பட்டது. வரியில்லாத நிதி நிலை அறிக்கையென்று மகிழ்ச்சி அடைவதைவிட வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு வரி அறிக்கையிலே காணப்படுமேயானால் அப்படியடையும் மகிழ்ச்சியே பொருளுடையதாகும். ''பாராட்டுங்கள்; பாராட்டுங்கள்'' என்று நேற்றைய தினம் பேசிய சௌந்தரம் அம்மையார் அவர்கள் உட்பட அனைவரும் கேட்டுக்கொண்டார்கள். இந்த அறிக்கை பாராட்டுக்குரியதாக இல்லை. வரி விலக்கு இருந்தால் ஒரு வேளை பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும்.

கவர்னர் பெருமான் உரை 1959ம் வருடம் பிப்ரவரி மாதம் 4ம்தேதி நிகழ்த்தப்பட்டது. அவர் உரையில் இந்த ஆண்டு பருவ நிலை பரவாயில்லை எனலாம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். அடுத்து ஒரு மாதத்திற்குப் பிறகு 1959ம் வருடம் மார்ச் மாதம் 2ந்தேதியில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ''இவ்வாண்டின் பருவநிலை மோசமெனத்தான் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டிருக் கிறார். இப்படி ஒரு மாதத்திற்குள் இரண்டு வித அபிப்பிராயங்கள்

கூறப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு உரைகளும் ஒரே இலாகாவினரால் தான் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பருவ நிலை பரவாயில்லை யென்று கவர்னர் அவர்களும் பருவநிலை மோசமேயென்று நிதியமைச்சரும் குறிப்பிடுவது விந்தையிலும் விந்தையாக விசித்திரமாகத்தான் தோன்றுகிறது. அடுத்து கவர்னர் உரையில் இந்த ஆண்டு 1,200 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்றும், மொத்தம் 8,000 கிராமங்கள் மின்சார வசதி பெறும் என்றும் குறிப்பிடுகிறார். நிதி அமைச்சரோ அடுத்த ஆண்டு ஆயிரம் கிராமங்கள் மின்சார வசதி பெற்று, மொத்தம் மின்சார வசதி பெற்ற கிராமங்கள் ராஜ்யத்தில் 9000 வரை உயரும் என்கிறார்.

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : அங்கத்தினருக்குக் கூட்டல் கழித்தல் தெரியுமென்று நினைத்தேன்.

கலைஞர் மு. கருணாநிதி : எனக்கு கூட்டல், கழித்தல் நன்றாகவே தெரியும். அமைச்சர்தான் யாருக்குக் கீழே அமைச்சராய் இருக்கிறார் என்பதை மறந்துவிடவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் குறிப்பிடும் 8,000 கிராமங்களையும் சுட்டிக் காட்டிவிட்டு, அடுத்த ஆண்டு 9,000 கிராமங்கள் மின்சார வசதி பெறும் என்ற நிலையைக் குழப்பமில்லாமல் விளக்கம் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதற்கு வேண்டிய விளக்கம் தரப்படாமைக்கு வருந்துகிறேன். அவருடைய அறிக்கையின் வாசகங்களை வைத்துத்தான் நான் பேச வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய கிராமங்களுடன் கவர்னர் சொல்லியிருக்கக்கூடிய எண்ணிக்கையையும் சேர்த்து இன்னும் ஆயிரம் கிராமங்களுக்கு அடுத்த ஆண்டில் மின்சார வசதி கிடைக்கும் என்று தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்பினேன்.

நிதி நிலை அறிக்கையில் அமைச்சர் புள்ளி விபரங்களை அள்ளி வீசியிருக்கிறார். புள்ளி விபரங்களைக் காட்டினால் போதுமா? கொடுக்கப்பட்டுள்ள மருந்துகளின் பட்டியலைக் காட்டுவதைவிட குணமாக்கப்பட்டுள்ள நோயாளிகளைக் காட்டுவதுதான் நல்ல டாக்டருக்கு அழகாகும் என்பதை உணர வேண்டும். அதிலும் இப்போது கொடுக்கப்பட்டுள்ள புள்ளி

விபரங்கள் சரியானவைகள்தானா; நம்பத்தகுந்த புள்ளி விபரங்கள் தானா என்ற ஐயப்பாடு எழுகிறது.

1958-59ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ராஜ்ய நிலையை மொத்தமாக மதிப்பிடும்போது 1956-57ஆம் ஆண்டில் இருந்த அளவு உற்பத்தி இல்லாத போதிலும்... என்று குறிப்பிடப்படுகிறது.

அவர் இந்த ஆண்டு தந்துள்ள புள்ளி விபரத்தை எடுத்துப் பார்த்தால் 1956-57ல் 57.2 லட்சம் ஏக்கரா நிலம் சாகுபடியாயிருக்கிறது. 1958-59ல் 57.2 லட்சம் ஏக்கராதான் சாகுபடியாயிருக்கிறது. அதேசமயம் 1956-57ல் 31.96 லட்சம் டன்னும், 1958-59 இல் 32.98 லட்சம் டன்னும் அரிசி உற்பத்தி ஆகி இருக்கிறது எனக் குறிப்பிடுகிறார். 1958-59ல் உற்பத்தி நிலைமை பெருகவில்லை யென்று கூறிவிட்டு, 1959-60 அறிக்கையில் பெருகியிருப்பதாகப் புள்ளி விபரம் காட்ட வேண்டிய நோக்கம் என்ன? இந்த புள்ளி விபரங்களில் எப்படி நாங்கள் நம்பிக்கை வைப்பது என்று கேட்கிறேன். இப்படி உற்பத்தியாகியும் விலைவாசிகள் விஷம்போல் உயர்ந்து கொண்டேதானிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன?

உணவு தானியங்கள் மொத்த வியாபாரத்தை சர்க்கார் எடுத்து நடத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாத் தொழில்களும் தேசிய மயமாக வேண்டுமென்ற கொள்கை யுடையதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த முறையில் இந்த உணவு தானிய வியாபாரத்தையும் சர்க்கார் ஏற்று நடத்துவதில் தி.மு.க.வுக்கு எந்த வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் இப்போது சர்க்கார் எடுத்துக் கொண்டு நடத்தும் எந்தத் துறையைப் பார்த்தாலும் அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறதா என்று பார்த்தால், இல்லை என்ற பதிலே கிடைக்கிறது. நிர்வாக ஊழல்களாலும், திறமையின்மையாலும், பொறுப்பற்ற முறையில் அதிகாரிகள் நடந்து கொள்வதாலும் அவைகள் நல்ல முறையில் நடைபெறவில்லை. தெனாலிராமன் பூனை வளர்த்த கதைபோல் இருக்கிறது; இந்த சர்க்காரின் தேசிய மயமாக்கும் திட்டமும், கொள்கையும்! பூனை வளர்ப்பதற்காகத் தரப்பட்ட பொன் மூட்டையை செலவழிக்காமல் வைத்துக் கொள்வதற்காக, சூடாக பாலை பூனைக்கு வைத்து அதைக் குடித்த பூனையின்

உதட்டைக் கருக்கிவிட்டானாம். மறுநாள் குளிர்ந்த பாலை வைத்தாலும் பூனை அதைக் குடிக்க வரமாட்டேன் என்று மறுத்துவிட்டதாக கதையொன்றுண்டு. அதைப்போல் தேசிய மயமாக்குகிற திட்டங்களில் - சர்க்காரே ஏற்று நடத்துகிற தொழில்களில் பொறுப்பற்ற தன்மையும், ஊழல்களும் வளர்ந்து வருவதைப் பார்க்கும்போது, தேசிய மயமாக்கும் திட்டமே தேவையில்லை யென்று தெனாலிராமன் பூனைபோலப் பொதுமக்கள் கூறி விடுவார்களோ என்று பயம் ஏற்படுகிறது. இத்தகைய முடிவுக்கு மக்கள் தள்ளப்படுவார்களேயானால் அதற்கு சர்க்காரே பொறுப்பு என்பதுதான் என் கருத்து.

அது மாத்திரமல்லாமல், கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டபடி இரண்டு லட்சம் டன் தானியத்தை மட்டுமே சர்க்கார் கொள்முதல் செய்து வியாபாரம் செய்வது என்று முடிவு செய்வது எங்களால் கண்டிக்கப்படக் கூடியது. பாதிக்கிணறு தாண்டுவது போலத்தான் இந்த இரண்டு லட்சம் டன் உணவு தானியத்தை சர்க்கார் கொள்முதல் செய்து வியாபாரம் செய்வது என்பதாகும். மொத்தத்தில் எடுத்து, பொறுப்புள்ள அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து, நிர்வாக ஊழல் மலியாத நிலையில் அந்த வியாபாரத்தை நடத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக சர்க்கார் எடுத்து நடத்தும் காரியங்கள் எதுவாக இருந்தாலும் ''முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டினேன், இரண்டு குளம் பாழ், ஒரு குளம் தண்ணீர் இல்லை'' என்ற கதையாகத்தான் முடிகிறது. விதைப்பண்ணைகளை அமைக்கும் விஷயத்தில் அந்த முடிவைத்தான் நாம் காண்கிறோம். 360 விதைப் பண்ணைகளை 1959-60ம் ஆண்டுக்குள் இந்த நாட்டில் வைத்துக் காட்டப் போகிறோம் என்று பெருமிதத்தோடு இந்த மாமன்றத்திலே கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் ''360 விதைப் பண்ணைகளை அமைக்க முயன்று, சில பலவற்றைக் கைவிட்டு, சில பலவற்றை மூடி, 130 விதைப் பண்ணைகளை நடத்தத் தயாராக இருக்கிறோம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆக, 130 விதைப் பண்ணைகளை அமைத்து, அவற்றைக் கட்டிக் காப்பாற்றினால் போதும் என்ற நிலைமைக்கு

வந்திருக்கிறார்கள். வைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதோ 360 பண்ணைகள். ஆனால் வைக்கத் தயாராக இருப்பது 130 பண்ணைகள்தான். விதைப்பண்ணைகளில் மாத்திரம் இவர்கள் எதிர்பார்த்த விளைவின் அளவு மாத்திரம் 1,325 டன். ஆனால் சோககரமான புள்ளி விவரம் என்ன கூறுகிறது? 977 டன்தான் விதைப் பண்ணைகளில் இருந்து அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் வரவில்லை. மொத்தமாகப் பார்த்தால் விதைப் பண்ணைகளால் ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்பது நமக்குத் தெரியாமல் இல்லை. நெடும்பலத்தில் ஒரே ஒரு பண்ணையில் மாத்திரம் செலவிடப்பட்ட தொகை 25,837 ரூபாய். அதிலிருந்து கிடைத்த வருமானம் சுமார் 14,549 ரூபாய் என்றும், கிட்டத்தட்ட அதில் 11,324 ரூபாய் நஷ்டம் என்றும் கேள்விப்படுகிற நேரத்தில், உள்ளபடியே சர்க்கார் திட்டமிட்டுச் செய்கின்ற காரியங்கள் எல்லாம் சரிவர நடைபெறுகின்றனவா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே இவ்வாறு போடுகின்ற திட்டங்களில் இந்த நாட்டு மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்பட முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

நெல் சராசரி விளைச்சல் அதிகரித்துக் கொண்டே போகிறது என்பதற்காக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்தால் அதில் ஏக்கர் ஒன்றுக்கு 1955-56ல் 1,214 பவுண்டுகள், 1956-57ல் 1,255 பவுண்டுகள் 1957-58ல் 1,300 பவுண்டுகள் விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. இது ஒன்றும் பிரமாதமான உயர்வைக் காட்ட வில்லை. இதே அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு கூறும்போது, ஜப்பான் நாட்டில் ஏக்கர் ஒன்றுக்கு 2,550 பவுண்டு விளைகிறது என்றும், சீனத்தில் 1550 பவுண்டு விளைகிறது என்றும் சொல்லி இருக்கிறார்கள். அத்தகைய நிலையை எட்ட இங்கே, இந்த மாமன்றத்திலே இருக்கிற அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். அதற்காக என்ன முயற்சி எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள் என்பது பற்றி அமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே ஒன்றும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதிக்கான திட்டங்கள் ஏராளமான அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரம் கூறுகிறது.

நான் இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிற நேரத்தில் எல்லாம் சொல்லிவருகிறேன் - என்னுடைய குளித்தலைத் தொகுதியில் குடகனாறு திட்டம் நிறைவேறுமானால் 7,8 ஏரிகளில் தண்ணீர் நிரம்ப வழி ஏற்படும். அந்தத் திட்டம் மிகச் சிறிய திட்டந்தான். 10 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படக்கூடிய திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் வரண்டு கிடக்கும் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதின் காரணமாக அங்குள்ள மக்களுக்கு வளமும், வாழ்வும் ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையின் 29ம் பக்கத்தில் ''மேலும் எந்தத் துறையிலாவது திட்டத்தை விரிவாக்கும் அவசியம் ஏற்படுமேயானால் அதற்கான நிதியை வழங்குவதில் சிரமம் இருக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்'' என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்த ஒரு வார்த்தையை என்னுடைய ஆயுதமாக வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்களை குளித்தலைத் தொகுதியில் குடகனாறு திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் திட்டங்களை விரிவாக்குவதற்கு நிதி அளிப்பதில் சிரமம் இருக்காது என்று கருதுகிற காரணத்தால் நீங்கள் குடகனாறு திட்டம் சிரமம் இல்லாத அளவில் நிறைவேற உங்கள் நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரும் தொழில்களை நாம் அபிவிருத்தி செய்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்ட புள்ளி விவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இரண்டு பெரிய திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஒன்று நெய்வேலித் திட்டம். இன்னொன்று பெரம்பூர் ரெயில்வே பெட்டி செய்யும் தொழிற்சாலை. இந்த இரண்டும் இந்த அரசாங்கத்திற்குச் சொந்தமானவையா? இந்த இரண்டின் நிர்வாகப் பொறுப்பு யாரிடம் இருக்கிறது? இவைகள் இரண்டும் வடக்கத்தி சர்க்காருக்கு உரிமையானவை. நெய்வேலித் திட்டத்தில் கிடைக்கிற லாபத்தில் 25 சதவிகிதந் தான் தமிழகத்திற்குக் கொடுக்கப்படுகிறது என்பதை நான் வெட்கத்தோடும் வேதனையோடும் குறிப்பிட விரும்புகிறேன். 65 சதவிகிதம் வெளிநாட்டில் இருந்து வரும் சாமான்களைக் கொண்டு பெட்டிகள் கோக்கப்படுகின்றன பெரம்பூரில் ! அந்த நிலைமையில் இரண்டு பெரிய தொழில்கள் என்று சொல்லப் படுவது கூட வடக்கத்தி சர்க்காரிடம் இருக்கிறது. நீங்கள்

தொழில் வளர்ச்சியடைந்துவிட்டது என்பதற்காக காட்டக் கூடிய புள்ளிவிவரங்கள் பூராவும் தனியார் துறையில் இருக்கும் தொழில்களைப் பற்றிக் கூறப்படும் விவரங்கள், சமதர்ம சமுதாயத்தை நிறுவப் போகிறோம் என்று சொல்லுகிற நீங்கள், சோஷலிச பாணி சமுதாயத்தை நோக்கி நடை போடுகிறோம் என்று கித்தாப்பு கொள்கிற நீங்கள் தனியார் துறை பற்றிய புள்ளி விவரத்தைச் சொன்னால் சமதர்மத்தின் உச்சியை அடைந்தவர்கள் ஆகிவிடுவீர்களா என்று கேட்க விரும்புகிறேன். வடக்கே வளத்தைத் தரக்கூடிய பெரும் தொழிற்சாலைகள் - ரூர்கலா இரும்புத் தொழிற்சாலை, பிலாய் உருக்குத் தொழிற்சாலை, துர்காபூர் தொழிற்சாலை என்று ஆரம்பித்துக் கொண்டே இருக்கிறார்கள். அங்கு எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாயில் திட்டங்கள் போடப்படுகின்றன. அப்படி இருக்கும்போது நம்முடைய தமிழகத்திற்கு இந்த இரண்டு திட்டங்களும் போதுமா? நம்முடைய நாடு வஞ்சிக்கப்பட வில்லையா என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரிகளைத் திருத்துவதற்காகச் செலவிடப்படுகிற தொகை நிச்சயமாகப் போதுமானதாக இல்லையென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வெளிநாட்டில் இருந்து வருகிறவர் களுடைய கண்களில் சேரிகளை மறைப்பதற்குத்தான் இந்த தொகை செலவழிக்கப்படுகிறது. வெளி நாட்டிலிருந்து கனா நாட்டுப் பிரதமர் வந்தாலும், மார்ஷல் டிட்டோ வந்தாலும், எடின்பரோ கோமகன் வந்தாலும் அவர்களைத் தெருவிலே உலா வரச் செய்கிற நேரத்தில், அவர்கள் பவனி வருகிற நேரத்தில் நம்முடைய அரசாங்கத்திற்குப் பல தட்டிகள் தேவைப்படுகின்றன. சாலைகளின் பக்கத்தில் இருக்கும் சேரிகளை, தட்டிகளைக் கட்டி மறைத்து வெளிநாட்டில் இருந்து வருகிறவர்கள் கண்களில் நம்முடைய சேரிகள் படாமல் காக்கிறார்கள். அந்தத் தட்டிகளை நான் திருச்சிக்குச் சென்றிருந்தபோது பார்த்தேன். அப்பொழுது மார்ஷல் டிட்டோ பவனி வருவதாக இருந்தது. சிந்தாமணி என்ற பகுதியில் பார்த்தால் அரைப்பனை மர உயரத்திற்கு மூங்கில் தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு ஏன் வைக்கப் பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு ‘‘அந்தப் பகுதியில் ஆதித்

திராவிட பெருமக்கள் சேரிகள் இருப்பதாகவும், சாக்கடை ஓரத்தில் அந்தச் சேரிகள் அமைந்திருப்பதாகவும், அவைகளை மார்ஷல் டிட்டோவின் கண்களில் படாமல் இருப்பதற்காகத் தான் அந்தத் தட்டிகள் கட்டப்பட்டிருப்பதாகவும்'' கூறினார்கள். இந்த மாதிரி தட்டிகளைக் கட்டி வைத்துவிட்டு, மார்ஷல் டிட்டோவை அழைத்து வந்து ''இதைப்பார், அதைப்பார், எங்கள் எழிலான நாட்டைப் பார்'' என்று கித்தாப்புக் கொட்டுகிறார்கள். உள்ளபடியே இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை சேரிகளின் சீரமைப்புக்குப் போதுமான தொகை அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1958-59ம் வருஷத்தில் ஹரிஜன பள்ளி மாணவர்களுக்காக மத்தியான உணவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 27 லட்சம் ரூபாய். இப்பொழுது இந்த வகையில் மத்தியான உணவுக்கு மாத்திரமல்லாமல் உணவு விடுதிக்கும் சேர்த்து ஹரிஜன மாணவர்களுக்காக செலவழிக்கப்படும் தொகை 19 இலட்சமாக ஆகிறது. இவ்வாறு 27 லட்சத்திலிருந்து 19 லட்சமாகக் குறைந்திருப்பதற்கு இந்த அரசாங்கத்தை நாம் பாராட்ட வேண்டுமா?

கடைசியாக, சமுதாய நலத் திட்டத்தைப் பற்றிப் பார்ப்போமேயானால், அது சர்க்கார் கட்சிக் கண்ணோட்டத் துடன்தான் அணுகப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கம்யூனிஸ்டுக் கட்சியினர் பகுதியிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகப் பகுதிகளிலும் சரி, மற்றும் பொதுவாக எதிர்க்கட்சியினர் பகுதிகளில் அவர்களுடைய ஆய்வுரைகளையோ, ஆலோசனைகளையோ இந்தச் சமுதாய நலத்திட்டம் சம்பந்தமாக ஏற்றுக் கொள்வதில்லை. ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். கோபியிலே திராவிட முன்னேற்றக் கழக மாநாடு சில காலத்திற்கு முன் நடைபெற்றது. அதற்குப் பின்னர் காங்கிரஸ் கட்சி மாநாடு கோபியிலே நடைபெற்றது. அந்தக் காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்காக ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் செலவழித்த தொகையின் புள்ளி விவரத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கோபியை இணைக்கும் ஈரோடு-சத்தியமங்கலம் ரோடு செப்பனிடுவதற்காக 20,000 ரூபாய்,

கோபி-தாராபுரம் ரோடு செப்பனிட 10,000 ரூபாய், கோபி-சவுர்தாபூர் ரோடு செப்பனிட10,000 ரூபாய் தனிப்பட்ட பழுது பார்க்கும் வேலைகளை ஈரோடு–சத்தி சாலையில் செய்வதற்காக 60,000 ரூபாய், கோபி - தாராபுரம் சாலையில் தனிப்பட்ட பழுது பார்க்கும் வேலைக்காக 20,000 ரூபாய், சத்தியமங்கலம்-மேட்டுப்பாளையம் சாலை தனி ரிப்பேர்களுக்காக 73,000 ரூபாய் ஆக இரண்டு லட்சத்து நாற்பத்தெண்ணாயிரத்து இருநூறு ரூபாய் செலவில் அவசர அவசரமாகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.



உரை : 3 நாள் : 16.3.1960

கலைஞர் மு. கருணாநிதி : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1960-61ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் என் கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையை பல ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஆதரித்துப் பேசினார்கள். குறிப்பாக, தேனி தொகுதி அங்கத்தினராகிய ஸ்ரீ தியாகராஜ நாயக்கர் இந்த அறிக்கை சர்க்கரைப் பொங்கலாகத் தித்திக்கிறது என்று குறிப்பிட்டார். நாங்களெல்லாம் இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தோமே தவிர, தின்று பார்க்கவில்லை (சிரிப்பு). ஒருவேளை, அவருக்கு இது தித்திப்பாக இருக்கக்கூடும். மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது, இந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சபையைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று வழக்கமாக முடிப்பார். ஆனால் இந்த ஆண்டு அவர் இந்த அறிக்கையை முடிக்கும்போது 'இந்த அறிக்கையை சபை ஏற்றுக்கொள்ளும் என்ற முழு நம்பிக்கையோடு முடிக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கனம் அமைச்சர் எந்த ஆண்டிலும் இல்லாமல் இந்த ஆண்டு இந்த நம்பிக்கையைப் பெற்றதற்குக் காரணம் என்ன என்று நான் எண்ணிப்பார்க்கும்போது, இந்த வருஷம் புது வரி எதுவும் இல்லை என்பதாலும், அழுகும் பொருள்களின் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரி இப்போது நீக்கப்படுகிறது என்பதாலும் இந்த அறிக்கை மக்கள் மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றுவிடும் என்று அவர் கருதியிருப்பார் என்று நான் நினைக்கிறேன். புது வரிகள் போடாமல் இருப்பதுடன் இருக்கும் வரியையும் நீக்குவதாகக் கூறுவதற்குக் காரணம் என்ன என்று நான் சிந்திக்கும்போது ஒன்று

தெரிவிக்க விரும்புகிறேன். ஒட்டகத்தின் மீது நிறையப் பாரத்தை ஏற்றிவிட்டு அதற்கு மேல் இரண்டு கற்களையும் வைத்துவிட்டு, எடுப்பதற்காகவே வைத்திருந்த கற்களை சிறிது நேரத்திற்குப் பிறகு எடுத்துவிடும்போது ஒட்டகம் எழுந்து நடக்கும் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதே போல மதிப்பிற்குரிய நிதி அமைச்சர், மக்கள் மன்றத்தையும் ஒட்டகத்தைப்போல எண்ணிக்கொண்டு வரிப்பளுவை அதிகமாக அவர்கள் மீது சுமத்திவிட்டு பிறகு ஏதோ இரண்டு மூன்று வரிகளை எடுத்துவிட்டதாகக் கூறுகிற காரணத்தினால் மக்கள் நிம்மதி அடைந்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பாரானால் அது மிகவும் வருந்தத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் நமது நிதி அமைச்சர் சமர்ப்பிக்கும் எல்லா நிதி நிலை அறிக்கைகளிலும் வழக்கமாக விலைவாசி என்ற பகுதி முதலில் இடம் பெறும். இந்த வருஷ நிதி நிலை அறிக்கையில், மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் விலைவாசியைப் பற்றி முதலிலேயே கூறாமல், இந்த அரசாங்கத்தால் செய்யப்படும் அரிய பெரிய காரியங்கள் அத்தனையையும் 36 பக்கங்கள் வரையில் எடுத்துரைத்துவிட்டு கடைசியில் அந்த சோகக் கதையை ''க்ளைமாக்ஸ்'' கட்டத்தில், விலைவாசி, சம்பள உயர்வு இவைகள் ஒரு சுழல்போல இருக்கின்றன என்று கூறியிருக்கிறார். இதுவரையில் முன்னால் சொல்லப்பட்டுவந்த விலைவாசிச் சங்கடம் இந்தத் தடவை ஏன் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது ? விலைவாசிச் சங்கடத்தைப் பற்றி இந்த ஆண்டு மட்டும்தான் இத்தகைய குரல் எழுப்பி யிருக்கிறார்களா? அல்லது ஆண்டுதோறும் இந்தக் குரல் இந்த மன்றத்தில் எழுப்பப்படுகிறதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். 1957-58ஆம் வருஷ நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த இதே நிதி அமைச்சர் கனம் ஸ்ரீ சுப்ரமணிய கௌண்டர் அவர்கள் அந்த அறிக்கையில் விளைச்சல் பெருகியதின் காரணமாக விலைவாசிகள் குறைந்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டில், விலை அதிகமாக உயர்ந்துள்ளது... உணவுப் பற்றாக்குறை இல்லாத காலத்தில், வேளாண்மையே முக்கிய தொழிலாகவுள்ள ராஜ்யத்தில், விவசாய விளைபொருள்களின் விலை உயர்வு பொதுவாக வரவேற்கத் தக்கதாகக்கூட இருக்கலாம். ஆனால் நாட்டில்

பற்றாக்குறையின் காரணமாக, உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தால் அது மிகவும் அபாயகரமானது. நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டு பார்க்கும்பொழுது அரிசிப் பற்றாக்குறை ஓரளவு உயர்ந்துள்ளது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதும் நாளுக்குநாள் கஷ்டமாகிக் கொண்டு வருகின்றது. இந்நிலையில் உணவு நிலைமையை அரசாங்கம் விழிப்புடன் கவனித்து வருகிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். 1958-59ம் வருட நிதிநிலை அறிக்கையில் ''நல்ல அறுவடையின் பயனாக விலைவாசிகள் இப்பொழுது ஸ்திரமாகி வருகின்றன. இருந்த போதிலும் நாம் இன்னும் நிலைமையை விழிப்புடன் கவனிக்க வேண்டிய அவசியம் இருந்து வருகிறது'' என்று குறிப்பிட்டார்கள். 1959-60ம் வருடத்திய அறிக்கையில் ''... விலைவாசிகளின் உயர்வு இன்னும் பெரும் பிரச்சினை யாகவேயிருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக உணவுப் பொருள்களின் விலையேற்றம் கவலைக்கிடந்தரக்கூடியதாக உள்ளது. தானிய மொத்த விலைக் குறி எண்1957 டிசம்பரில் 512ல் இருந்தது. 1958 டிசம்பரில் 569அளவுக்கு உயர்ந்தது... இதைப் பரிசீலனை செய்த தேசீய அபிவிருத்திக் குழு, உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் தானிய மொத்த வியாபாரம் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்துவதுதான் வழியென்ற முடிவிற்கு வந்திருக்கிறது...'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் ''...விலைவாசிகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

விலைவாசி உயர்வைப் பற்றி ஆண்டுதோறும் பாடிய பல்லவியே மீண்டும் மீண்டும் பாடப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இதே பல்லவியைப் பாட, விலைவாசி உயர்ந்து கொண்டே போவது சங்கடமாகத்தான் இருக்கிறது என்பதைச் சொல்ல வீட்டிலே இருக்கக்கூடிய பாட்டியே போதும். அதற்கு ஒரு பாராளுமன்ற அமைச்சர் தேவையில்லை என்று மிகமிக வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். கரும்பு சாகுபடி, எண்ணை வித்துக்கள், முந்திரி, தேங்காய், விவசாய வளர்ச்சி, மண் வளப்

பாதுகாப்பு, நீர்ப்பாசன வசதிகள், சமுதாய நலத் திட்டங்கள் என்று வரிசையாகத் தாங்கள் செய்திருக்கக்கூடிய காரியங்களைச் சொல்லிவிட்டு, இவ்வளவுக்கும் பிறகு ''விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறேன்'' என்று கூறுகிறார். இது எப்படி இருக்கிறது என்றால், 8 டாக்டர்கள் பார்த்து 7 லட்சம் ரூபாய் செலவாகியும் நோய் இன்னதென்று கண்டுபிடிக்க முடிய வில்லை; ஆகவே ஆள் காலி'' என்பதைப் போல் இருக்கிறது. பார்த்தவர்கள் டாக்டர்களா என்று சந்தேகம் மக்களுக்கு ஏற்படுகிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டு மென்று 5, 6 வருஷ காலமாக அமைச்சர்களும் மக்களோடு சேர்ந்து பேசி வருகிறார்கள். மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து விலைவாசி குறைய வழியில்லையா என்று கேட்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர்களைப் பார்த்து விலைவாசி கட்டுப்படுத்தப்படுமா என்றும் அமைச்சர்கள் மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து விலைவாசி கட்டுப்படுத்தப்படுமா என்றும் கேட்பதே ஒரு பெரிய சுழலாக இருக்கிறதே தவிர, விலைவாசியும், ஊதிய உயர்வும் பெரிய சுழலாக இல்லையென்று குறிப்பிட விரும்புகிறேன். மத்திய சர்க்கார் பொருள் துறை வேலையோடு பிணைக்கப்பட்டிருப்பது இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத காரணங்களில் ஒன்றாகக் காட்டப்படுகிறது. அப்படியானால் மத்திய சர்க்கார் பொருள் துறை பிணைப்பிலிருந்து இந்த மாகாணம் விலகிக் கொள்ளுமானால், இந்த மாகாணம் விடுதலை பெறுமானால், நிச்சயமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அமைச்சரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பக்கத்துக்குப் பக்கம் புள்ளி விவரங்களைக் கடுகு தாளிப்பதைப் போல் கொட்டி ஏட்டை நிரப்பி விடுவதால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு காட்டப்படுகிற புள்ளி விவரங்களை நாங்கள் நம்ப வேண்டு மென்று சொல்லுகிறார்கள். உள்ளபடியே அந்தப் புள்ளி விவரங்கள் ஆதாரபூர்வமானவையா? நம்பிக்கைக்கு உரியனவா? உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதிர்ச்சி தரக்கூடிய முரண்பாடு என்று சொல்ல மாட்டேன். 1959-60ம்

ஆண்டு அறிக்கையில் 1956-57ம் ஆண்டு 2.6 லட்சம் டன் உரம் வழங்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முரண்பாடு சாதாரணமானதுதான். ஆனால் இது புள்ளி விவரம் என்ற மயக்கத் திரையைக் கிழிக்கப் பயன்படுகிறதல்லவா? புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு இந்த நாட்டு மக்களை ஏமாற்ற, இந்த நாட்டு மக்களுடைய கண்களை மூட, முயற்சி செய்கிறது என்று நான் இந்த அமைச்சரவையைக் குற்றம் சாட்டுகிறேன். கோழிப் பண்ணைகளில் உள்ள கோழிகள் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எத்தனை என்று கேட்டால், மந்திரி மாவட்ட அதிகாரியைக் கேட்கிறார். மாவட்ட அதிகாரி கிராம அதிகாரியைக் கேட்கிறார். கிராம அதிகாரி தலையாரியைக் கேட்கிறார். தலையாரி இந்த ஊரிலே 15 கோழிகள் இருக்கின்றன என்று சொன்னால் அந்தப் புள்ளி விவரம் மந்திரி கையில் வந்து சேருவதற்குள் 4 கோழிகள் பிரியாணியாகக் கொதித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை, கவைக்கு உதவாத புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

உணவு உற்பத்தியை பெருக்க சரியாக திட்டம் இல்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல சிறிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றப் பணம் இல்லை. பணம் கேட்டால் வடக்கத்திச் சர்க்காருக்குக் கொடுக்க மனம் இல்லை. இப்போது பரம்பிக்குளத் திட்டம் குழம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நீங்கள் சொல்கிற கட்டளைக் கால்வாய், புல்லம்பாடிக் கால்வாய், மேட்டூர் கால்வாய் இவைகளைப் பற்றிய 1924ம் ஆண்டு ஒப்பந்தத்தை சென்னை சர்க்கார் மீறிவிட்டது என்று மைசூர் சர்க்கார் குற்றம் சாட்டுகிற முறையில், மத்திய சர்க்கார் அதை ஏற்று எப்படித் தீர்ப்புக் கூறப் போகிறதோ என்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவ்வளவோ நிறைவேற்றப்பட வேண்டியிருக் கின்றன ஒவ்வொரு ஆண்டும் பேசுகிற நேரத்தில் அவைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அவ்வாறு பேசுகிற நேரத்திலே, கனம் கக்கன் அவர்கள்கூட, ''நாங்கள் சொல்ல ஒரு திட்டம் கூட பாக்கி இல்லாமல் நீங்களே எல்லாத் திட்டங்களையும் கூறி விடுகிறீர்களே'' என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். அவ்வளவையும் விட்டுவிடுங்கள். என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய குடகனாறு திட்டத்தைப்பற்றி இந்த அவையிலே பேச ஆரம்பித்த நாள்முதல் கூறிக்கொண்டு வருகிறேன். திண்டுக்கல் வட்டத்திலே, வேடசந்தூர் அருகில் கல்வார்பட்டியில் குடகனாற்றில் ஒரு அணை கட்டி 20 மைல் நீளத்திற்கு வாய்க்கால் வெட்டினால் ஐந்தாறு ஏரிகள் நிரம்பும். பத்தாயிரம் ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்ய முடியும். இது பற்றிப் பல முறை பேசியிருக்கிறேன். மந்திரி அவர்களிடத்திலும் தனியாகச் சந்தித்து எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒரு மந்திரி என்னுடைய தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நேரத்தில் 'நீங்கள் கருணாநிதிக்கு ஓட்டுப் போட்டீர்களே, அவன் உங்களுக்குக் குடகனாறு திட்டத்தை நிறைவேற்றித் தருவானா? என்ற வகையில் பேசுகிறார். இதற்குப் பெயர் ஜனநாயகமா? அல்லது கடைந்தெடுத்த சர்வாதிகாரமா? என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர்கள் தொகுதி மக்களைப் பார்த்து ''நீங்கள் கருணாநிதிக்கு ஓட்டுப் போட்ட காரணத்தினால் உங்களுக்கு குடகனாறு திட்டம் கிடையாது'' என்று பயமுறுத்துவது அடுத்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று அச்சுறுத்துவது போலாகும். இதை நான் குற்றம்சாட்டிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த ஆண்டுக்குள்ளாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லட்டும். நாளையே அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தால், நான் இன்று மாலையே என்னுடைய பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : குடகனாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டாமென்று மராமத்து மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் கருணாநிதி அவர்கள் இந்த சபையிலே இருக்கவேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி : ஒரு பொறுப்புள்ள அமைச்சர் ஒரு திட்டம் பற்றி பேசுகிற நேரத்தில் ''கருணாநிதிக்கு ஓட்டுப் போட்டாயே. அதனால் அந்தத் திட்டம் கிடையாது'' என்று பேசுவது அவருடைய பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறதா என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் கூறினேனே தவிர நிதியமைச்சர் அவர்களின் கேலிக்காகவோ கிண்டலுக்காகவோ குறிப்பிட வில்லை. கருணாநிதி விரும்பினாலும், விரும்பா விட்டாலும் பொதுமக்கள் தேர்ந்தெடுத்தால் இங்கு வருவான். ''அண்ணாதுரை 2,000 கோடி ரூபாய் திட்டம் கொடுத்தால் நான் ராஜினாமா செய்து விடுகிறேன்'' என்று நிதியமைச்சர் பேசினார். அண்ணா அவர்கள் திட்டம் கொடுத்தால் உங்களுடைய பதவி போய்விடுமே என்ற காரணத்தால் நாங்கள் கொடுக்கவில்லை என்று நாங்கள் அப்போது கூறியதையே நீங்கள் இப்போது திருப்பிக் கூறவேண்டிய அவசியம் இல்லை. சமுதாய நலத் திட்டங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசப்படுகிறது. இந்த மன்றத்தில் பலர் அதைப் பற்றிப் பேசினார்கள். சமுதாய நலத்திட்டங்கள் அரசியல் விளம்பரத்திற்கு ஒரு கட்சியின் விளம்பரத்திற்காக, ஏற்படுத்தப்பட்ட திட்டங்களா? இதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பிறந்த ஊரான திருக்குவளை கிராமத்தில் என் தாய் தந்தை பெயரால் முத்துவேலர்-அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி கட்ட அறிஞர் அண்ணா அவர்களால் கல்நாட்டு விழா செய்யப்பட்டது. அதற்காக சுமார் 7,000 ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டு, சமீபத்தில் 5,000 ரூபாய் பணத்தையும் அனுப்பி வைத்தேன். அதுபற்றி அங்குள்ள தோழர்கள் எனக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தைப் படித்துவிட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் எழுதியிருக்கிறார் -

''நமது திருக்குவளை முத்துவேலர்-அஞ்சுகம் மருத்துவ மனையின் கல்நாட்டு விழா 22.5.59ம் நாளில் நடைபெற்றது. அதற்கு பிறகு தஞ்சை டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் அவர்கள் தங்களிடம் திருக்குவளை கட்டிட Plan and Estimate கேட்டு கடிதம் எழுதியிருந்தார். அதைத் தாங்கள் எனக்கு அனுப்பி இருந்தீர்கள். அதற்குப் பிறகு நாகை வட்டார

அபிவிருத்தி அதிகாரிகள் துணையுடன் குடந்தையில் இருக்கும் Retired சந்திரசேகர அய்யர் அவர்களிடம் Plan and Estimate தயாரித்து தங்கள் சார்பாக D.H.Oவுக்கு அனுப்பியிருந்தேன். அது அனுப்பப்பட்ட தேதி மேலவாழக்கரை அஞ்சல் அலுவலகத்தில் 14.12.59ல் 182ம் நம்பரில் ரிஜிஸ்டர் செய்துள்ளேன். அதற்குப் பிறகு டிசம்பர் கடைசி வாரத்தில் நாம் அனுப்பியிருந்த Plan and Estimate-ஐ எடுத்துக் கொண்டு நாகை Health Inspector இடத்தைப் பார்வையிட வந்தார். வந்து பார்வையிட்டுவிட்டு, ஒரு கக்கூசும், காம்பவுண்டு சுவரும் சேர்க்கவேண்டுமென்று என்னிடமிருந்து தங்கள் சார்பாக இசைவுக் கடிதம் பெற்றுக் கொண்டார். இன்னும் ஒரு வாரத்தில் D.H.O Office–ல் இருந்து Plan Approval ஆகி வந்து விடும். அதற்கு முன்னெச்சரிக்கையாக கல், சிமெண்ட் முதலான தளவாட சாமான்களைத் தயார் செய்து வைத்துக் கொள்ளுமாறு கூறிச் சென்றார். உடனே, நாங்கள் கட்டிடத்திற்கு வேண்டிய கற்கள் முழுவதையும் கட்ட வேண்டிய இடத்தில் சுமார் 40,000 கற்களும், கான்கிரீட் போடுவதற்கு 100 வண்டி சல்லிகளும், மணல் 50 வண்டியும், 65 மூட்டை சிமெண்டும் சேகரித்து வைத்திருக்கிறோம். அவர் சொல்லிவிட்டுச் சென்ற நாளில் இருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை. அதன் பிறகு தஞ்சை D.H.O -வுக்கு 15.1.60ல் 188 நம்பரில் ரிஜிஸ்டர் செய்து ஒரு ரிமைண்டர் எழுதியிருந்தேன். அதற்கும் எவ்விதப் பதிலும் இல்லை.

நாகை சென்று Health Inspector அவர்களை சந்தித்துக் கேட்டதற்கு நாம் அனுப்பிய Plan and Estimate சரியில்லை என்றும், சென்னையில் உள்ள Director of Public Health மூலமாக Sanitary Chief Engineer அவர்களிடம் சுமார் 8,000 ரூபாய்க்கு Plan and Estimate தயாரிக்க D.H.O ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். இம்மாதிரியான வழக்கம் இந்த மாவட்டத்திலேயே இதுவரையில் நடந்ததில்லை. நான் டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அவர்களுக்கு பிப்ரவரி முதல் வாரத்தில் ...

திரு J. மாதா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை ஒன்று எழுப்ப விரும்புகிறேன். தனிப்பட்ட ஒருவர் எழுதிய கடிதத்தை இந்த மன்றத்தில் கனம் அங்கத்தினர் ஒருவர் வாசிக்கலாமா, அது

சபையின் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டதாகுமா என்று தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

உதவி சபாநாயகர் : May I know what that Hon. Member is reading ?

மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் : யாரோ நண்பர் ஒருவர் எழுதிய கடிதத்தை வாசிக்கின்றார்.

உதவி சபாநாயகர் : How can the Hon. Member read that letter here?

கலைஞர் மு. கருணாநிதி : வாசிக்கக் கூடாது என்றால் நான் வாசிக்கவில்லை. கடிதம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 100 வண்டி சல்லிகளும், 50 வண்டி மணலும், 65 மூட்டை சிமெண்டும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. சிமெண்டு கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. சாமான்கள் வந்து ஏழெட்டு மாதங்கள் ஆகின்றன. மணல் கரைந்து கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று கேட்டு எழுதியிருக்கிறார். அண்ணாதுரை திறந்து வைத்தார். கருணாநிதி கட்டிக் கொடுக்க இருக்கிறார்; அந்தத் தொகுதியில் காங்கிரஸ்காரர் வெற்றி பெற்றிருக்கிறார்; ஒரு வேளை கருணாநிதிக்குப் பெயர் வந்துவிடுமோ என்ற காரணத்தினால்தான் தடைப்படுத்தப் படுகிறது, வேறு காரணம் என்ன இருக்க முடியும் என்று கேட்டுக் கொண்டு...

உதவி சபாநாயகர் : The Hon. Member's time is up. He has already exceeded the time limit. So he must finish his speech soon.

கலைஞர் மு. கருணாநிதி : சமுதாய நலத்திட்டம் வெறும் அரசியல் விளம்பரச் சாவடிகள் என்று சொல்லி பட்ஜெட்டானது சர்க்கரை பொங்கல் அல்ல, முழுக்க முழுக்கக் கசப்பானதா என்று கேட்டீர்களேயானால் - கசப்பு என்றால் மருந்து என்று சொல்ல முடியாதே, அதனால் இதுவெறும் மாய்மாலம் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

உரை : 4 நாள் : 6.3.1961

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1961-62ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை இங்கே கூறுவதற்கு விரும்பி நிற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையினுடைய துவக்கத்தில் ''தமிழ்நாடு சட்டமன்றம்'' என்று குறிப்பிட்டிருப்பதை மிகவும் பெருமையுடன் அந்த அறிக்கையை முதலில் வாசித்த கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்பு எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை பிரிக்கிற நேரத்தில் அதைக் கண்டு நாம் அகமகிழ்வதற்கு வழி இல்லை. அது வேதனையைத் தருவதாக இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ''தமிழ்நாடு சட்டமன்றம்'' என்று அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவது என்பது அரைக்கிணறு தாண்டிய அளவில் ஏற்பட்ட மகிழ்ச்சிதான் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. நல்ல மொழியில் எழுதக்கூடிய நல்ல வல்லமை பெற்ற வல்லுனர், அறிஞர் டாக்டர் ஜெபர்ஸன் அவர்கள் இதைப்பற்றி வெகு அழகாக குறிப்பிட்டிருக்கிறார். ஒரு ஊரின் பெயரையோ அல்லது நாட்டின் பெயரையோ தலைநகரத்தின் பெயரையோ மாற்றுவது என்பது ஒரு லேபிளை எடுத்துவிட்டு மற்றொரு லேபிளைப் போடுவது என்பது அல்ல என்று அவர் எழுதி இருக்கிறார். அதேபோன்று ஒரு நாட்டின் மக்களுடைய ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களின் விருப்பப்படி மாற்றுவதற்கு அவருடைய பொன்மொழிகளை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே தமிழ்நாடு சட்டமன்றம் என்று மாற்றி எழுதிவிட்டால் மட்டும் மகிழ்ச்சி அடைந்துவிட முடியாது என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையை வாசிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் பெருமையுடன் வாசித்தார். இந்த அறிக்கையில் எந்தவிதமான வரியும் இல்லை என்கிற நிலையில் பெருமையுடன் வாசித்தார். ஆனால் மத்திய அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட வரியைக் கண்டு தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் அதைத் தாங்க முடியாமல் வேதனைப்படுகிறார்கள். அதைக் கண்டு இவர்கள் பெருமைப்படுவார்களா என்பதை மறந்து விடக்கூடாது. இங்கு வரி விதிக்கவில்லை என்ற பெருமையை இங்குள்ள மக்கள் அனுபவிக்க முடியாமல் மத்திய அரசாங்கத்தினுடைய வரிக் கொடுமை இவர்களை வாட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே இங்கு வரி இல்லை என்ற பெருமையை இங்குள்ள அமைச்சர்கள் பூரணமாக அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதனால் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய பிணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டால்தான் இந்தப் பெருமையை அவர்களும் பூரணமாக அனுபவிக்க முடியும், அவர்களுக்காக நாமும் நிச்சயமாக அந்தப் பெருமையை பூரணமாக அனுபவிக்கக்கூடும். ஏனென்றால் அறிக்கையிலே உணவுப் பிரச்சினையைப்பற்றி கூறப்படுகிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உணவு உற்பத்தி மிகக் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்றும், மூன்றாவது திட்ட காலத்திற் குள்ளாக 15 லட்சம் டன் அதிகப்படியான உணவு உற்பத்தி லட்சிய இலக்கை எதிர்பார்க்க முடியும் என்றும் தம் நம்பிக்கையைத் தெரிவித்து, அதே நேரத்தில் அந்த திட்ட லட்சிய அளவை எட்ட முடியாததற்குத் தடையாக இருப்பது ரசாயன உரம் என்றும், 1957ஆம் ஆண்டு நமக்கு 1.2 லட்சம் டன்தான் கிடைத்தது, 1961ம் 1.3 லட்சம் டன் அளவில்தான் கிடைக்கும் என்ற வருத்தமான செய்தியையும் அதோடு பாசன வசதி பெருகாவிட்டால் திட்ட லட்சிய அளவை அடைவது சிரமமாக இருக்கும் என்றும் தெரிவித்தார். உணவு தான்ய உற்பத்தியில் லட்சிய அளவை அடைவது சிரமமாக இருக்கும் என்றும் தெரிவித்தார். உணவு தான்ய உற்பத்தியில் லட்சிய அளவை அடைவதற்குத் தடையாக இருப்பது பாசன வசதிக்

குறைவு என்று சொல்லி தப்பிவிடுவதைக் காட்டினாலும், எனக்கு முன் பேசிய ஒரு நண்பர் அவர்கள் தம்முடைய தொகுதி நீர்வளம், நிலவளம் நிரம்பப்பெற்றது என்று குறிப்பிட்டதோடு தமிழகம் எங்கிலும் அத்தகைய வளங்கள் எல்லாவற்றையும் பார்க்கலாம் என்று பெருமையோடு சொன்னார். ஆனால் குறிப்பாகவும், சிறப்பாகவும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற குளித்தலை தொகுதியில் குடகனாறு திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்தில் பலமுறையும் சொல்லி வந்திருக்கிறேன். ஏழாயிரத்து ஐம்பது ஏக்காவுக்கு மேல் பாசன வசதி பெறக்கூடிய அந்தத் திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இது மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதுவும் (B)பி -வரிசையில் எட்டாவதாக இடம் பெற்றிருக்கிறது என்கிறபோது இது வெறும் கண்துடைப்பாகச் சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர இத்திட்டம் நிறைவேற்றப்படுமா? அதற்குரிய செயல்களை இந்த அரசாங்கத்தார் எடுத்துக் கொள்வார்களா என்கிற ஐயப்பாடு எழுந்துகொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சிறிய சிறிய பாசனத் திட்டங்கள் எல்லாம் கூட 20 லட்சம், 10 லட்சம் என்று செலவாகக்கூடிய திட்டங்கள் எல்லாம் கூட நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் நாம் கேட்ட பங்குத்தொகை, தமிழகத்திற்குரிய பங்குத் தொகை கொடுக்கப்படாததுதான். கேட்டதில்கூட நூறு கோடி ரூபாயைக் குறைத்துப் போய் விட்டுவா என்று புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகையால்தான் கொடகனாறு போன்ற சிறிய திட்டங்கள் எல்லாம்கூட நிறைவேற்றப்படாமல் கைவிடப்படுகின்றன. அதுவும் இவர்கள் தங்கள் சிப்பந்திகளுடைய சம்பளத்தை உயர்த்தியதனால் ஏற்பட்ட கஷ்டத்திற்கு உதவியாக அவர்கள் கொடுத்து வந்த தொகையைக்கூட இவ்வாண்டில் இருந்து இழக்கக்கூடிய பரிதாபகரமான நிலையில் - நாங்கள் கேட்டோம், கெஞ்சினோம் - மன்றாடினோம் - மண்டியிட்டும் பலனில்லை என்று கையை விரிக்க வேண்டிய நிலை எதனால் ஏற்படுகிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்காவிட்டாலும் விலை வாசிகள் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகின்றன? அதைக் கட்டுப்படுத்த இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேறிய ஒரு மசோதாவைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றியமையாத பொருள்களின் விலையும், உணவுப் பொருள்களின் விலையும் அங்கே ஏறிக்கொண்டு போவதைத் தடுக்க, ஓர் அளவிற்குள் கட்டுப்படுத்துவதற்கு இலங்கைப் பாராளுமன்றம் ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது. எந்த வணிகரானாலும் அவர்கள்மீது சட்டத்தை மீறிய குற்றத்திற்காக கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வகை செய்கிறது அந்த மசோதா. அதைப் பத்திரிகையில் பார்க்கிறோம். இந்த அரசு அத்தகைய ஒரு மசோதாவைக் கொண்டு வர முடியுமா? அப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டு வருவதற்குத் திராணியற்றது இது, வகையற்றது இது என்பதை நான் அறிவேன். மத்திய அரசினருக்கு எடுத்துச் சொல்லி விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கேட்க விரும்புகிறேன். இவ்வளவு பெரிய பேரரசில் எவ்வாறு அப்படிப்பட்டதொரு மசோதாவைக் கொண்டுவர முடியும் என்று கேட்கலாம். அதனாலேயே சொல்கிறேன். இவ்வளவு பெரிய பேரரசாக இருக்கத் தேவையில்லை. சிறிய நாடாக இருந்தாலும், இலங்கையைப் போன்று இருந்தாலும் போதும். தமிழகம் தனித்து இயங்கினால்தான், திராவிட நாடு தனி அரசாகத் திகழ்ந்தால்தான் இந்த நாட்டு தமிழ்ப் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1952ம் ஆண்டு இரண்டாம் ரக அரிசியின் விலை 7% ஆக உயர்ந்திருந்தது. 1960ம் ஆண்டு அது 73% ஆக உயர்ந்திருப்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டும். அடுப்புக்கரி 25%, விறகு 38%, ஜவுளி 31% என்று இப்படி ஒவ்வொரு பொருளும் விலை உயர்ந்துகொண்டே போகிற நேரத்தில் அதைக் கட்டுப்படுத்தாமல் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதானது குதிரை கொழுக்கிறது, ஆனால் அதற்கான கடிவாளம் இல்லை, மாடு கொழுத்து

வருகிறது, அதற்கான மூக்கணாங்கயிறு இல்லை என்ற அளவில் விட்டுவைத்துக்கொண்டே போனால் நாடு சீரழியும். ஆகவே உடனடியாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசிடத்தில் வற்புறுத்தவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியைப் பற்றி பிரமாதமாகப் பேசப் படுகிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் புயலினாலும், பெரு மழையினாலும், பெரும் அளவுக்குப் பயிர்கள் பாதிக்கப்பட்டது என்று ஒரு அமைச்சர் வெளியிடவும், இன்னொரு அமைச்சர் பாதிக்கப்படவில்லை என்று வெளியிடவும், அறுவடையாகிற இந்தக் காலத்தில் நெல் மணிகளைப் பார்த்தால் எல்லாம் பதராகிப் போயிருக்கிறது என்கிற நிலைமை தெரிவித்துவிட்ட பிறகும் அந்த நிலங்களுக்கு வரி விலக்குச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் இந்த அரசுக்கு வரவில்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சேதுசமுத்திரத் திட்டத்தில் தூத்துக்குடித் துறைமுக விஸ்தரிப்புத் திட்டம் அடங்கியுள்ளது என்று மூன்றாவது திட்ட வரைவு பக்கம் 97ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்தியுடன் இணைந்திருப்பது சேது சமுத்திரத் திட்டம் என்று நிதிநிலை அறிக்கை கூறுகிறது. அதோடு தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை மூன்றாவது திட்டத்தில் வலியுறுத்துவதாக சொல்லப்படுகிறது. தூத்துக்குடி இல்லை, சேதுசமுத்திரமும் இல்லை என்று நிலைமை இப்படிப் போனால் இவைகளைப் பற்றிக் கேட்கிறபோது வடக்கு, தெற்கு பேசுகிறார்கள், இப்படியெல்லாம் பேசுவது சரியல்ல என்கிறார்கள். ''நாட்டுப்பிரிவினை தானே உங்களுக்குத் தெரியும்'' என்று ஸ்ரீ கக்கன் சொல்கிறார். திரு. அண்ணா அவர்களும், மற்றவர்களும் பேசுகின்ற சர்வ கட்சிக் கூட்டங்களில் நிதி அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே பேசப்படுகிற விஷயங்களை அவர்கள் தெரிந்து கொண்ட தில்லையா? ஜனநாயகத்தை வலியுறுத்திப் பேசுகின்றபோது,

ஜனநாயகம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்பதும், இது அறியாமை என்று சொல்வதும், உங்கள் கட்சியின் நிலைமைதான் சந்தி சிரிக்கிறதே என்று எடுத்துக் காட்டுவதும் - யார் கட்சி சந்தி சிரிக்கிறது என்பது மக்களுக்குத் தெரியாதா - எங்களைச் சந்தி சிரிக்கச் செய்யாது. நேற்று ஆந்திராவில் இருந்து டெல்லிக்குப் போய் அவர்கள் கட்சி சந்தி சிரிக்கிறது. மைசூர் விஷயம் சந்தி சிரிக்கிறது, அதிகாரிகளை அழைத்துக் கொண்டு போய் அமைச்சர்கள் தேர்தல் நிதி வசூலிப்பது சந்தி சிரிக்கிறது - இவற்றை எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : Sir, on a point of order. The Hon. Member can speak only about the Budget and this House is not a Party platform to conduct any propaganda. I am not able to understand the Hon. Member referring to "Santhi Siruppu' and I want a ruling from the Chair whether it is parliamentary.

தற்காலிக அவைத் தலைவர் திரு. எஸ்.எம். அண்ணாமலை : That is not a point of order.

ஒரு உறுப்பினர் : It is not a point of order.

திருமதி டி.என். அனந்தநாயகி : Only the Chair can say that and not the Hon. Member.

கலைஞர் மு. கருணாநிதி : பட்ஜெட் உரையில் என்ன பேச வேண்டுமென்பதை நான் அறிவேன். அம்மையாருக்கு அது தெரியாததை நினைத்து அமைச்சர் பாஷையில் அவர்களது அறியாமையைக் கண்டு வருந்துகிறேன்.

உரை : 5 நாள் : 2.7.1962

கலைஞர் மு. கருணாநிதி : கனம் அவைத் தலைவர் அவர்களே! 1962-63ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்து அது இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களை அதன் மீது கூற விரும்புகிறேன். வழக்கம் போல புள்ளி விவரங்களை அள்ளிக்கொட்டி, இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

இப்பொழுது தரப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் வழக்கம் போலவே ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு கொண்டதாகவே இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இரசாயன உரம் போதிய அளவுக்குக் கிட்டாத நிலையிலும் 9 லட்சம் டன் உணவு தானியங்கள் அதிகமாக உற்பத்தி செய்ய முடிந்தது என்ற நிலைமையில் நமது புதிய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இதே மன்றத்தில் இதற்கு முன் வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய நிதி அமைச்சர் அவர்கள் 1961 - 62 ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் ஏழு அல்லது எட்டு லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். இடைக்காலத்தில் ஒன்று அல்லது இரண்டு லட்சம் டன்கள் அதிகமாக நிதிநிலை அறிக்கையில் எப்படி புகுந்தது என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட முரண்பாடான புள்ளி விவரங்களை, மக்களைக் கவரும்படியான அதிகமான புள்ளி விவரங்களை தொகுத்து இருக்கிற நிலைமையில் இந்த அறிக்கை இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் உணவு தானியங்களை 17 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. பழைய லட்சிய அளவைப் பார்க்கும்போது இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 12.79 லட்சம் டன் உணவு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. அப்படி உற்பத்தியாகி இருக்க வேண்டும். ஆனால் அந்த 12.79 லட்சம் டன் உணவு அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை. நான் முன்பே முரண்பாடுள்ள இரண்டு புள்ளி விவரங்களைக் காட்டினேனே அந்தளவில்தான் உணவு உற்பத்தி அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்தளவு லட்சியங்கள் ஈடேறுகிற நேரத்தில், நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிற, 17 லட்சம் டன் உணவு உற்பத்தி அதிகமாகும் என்ற லட்சிய அளவை எந்த அடிப்படையில் நாம் உறுதியாக நம்புவது என்று புரியவில்லை. உரம் போதிய அளவு கிடைக்காத காரணத்தினால்தான் இரண்டாவது திட்ட காலத்தில் நமது லட்சிய அளவை நாம் அடைய முடியவில்லை என்று நமது பழைய நிதியமைச்சர் அவர்கள் காரணம் காட்டினார்கள். இப்பொழுது உரம் அதிகமாகக் கிடைப்பதற்கு என்னென்ன நம்பிக்கை ஊட்டப்படுகிறதென்று நான் அறிய விரும்புகிறேன். 1956-57ல் சல்பேட் உரம் 1.2 லட்சம் டன் என்ற அளவில் வழங்கப்பட்டு அதற்குப் பிறகு நான்காண்டுக் கணக்கில் 1960-61 முடியப் போகிற நேரத்தில் 1.3 லட்சம் டன்தான் வழங்க முடிந்தது என்றால் எந்தளவு அது அதிகமாக ஆகியிருக்கிறது? நெய்வேலியில் தயாரிக்கப்படயிருக்கிற உரத்தையும், மற்ற வகைகளில் தயாரிக்கப்படும் உரத்தையும் பற்றிச் சொல்லப் படுகிறது. மூன்றாவது திட்ட கால முடிவிற்குள் பாசன வசதி நிலங்களுக்கு 4 லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உரம் தேவை என்று சென்ற வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்தக் கணக்குகளை வைத்துப் பார்க்கும்போது உரத்தைப் பொறுத்த வரையில், 17 லட்சம் டன் உணவு உற்பத்தியை அதிகமாக்குவதற்கு முயற்சிகள் போதுமான தாகயிருக்கிறதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அடுத்து உணவு உற்பத்திக்கு இன்றியமையாததாக இருப்பது விதைப் பண்ணைகள். 1959–60க்குள் 360 விதைப் பண்ணைகள்

ஏற்படுத்தப்பட வேண்டுமென்று 1958 -59 வரவு செலவுத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டது. அப்படி 360 விதைப் பண்ணைகளுக்கு திட்டமிட்டு, இப்போது 130 பண்ணைகள்தான் நிறுவ முடிந்தது என்று கணக்கு காட்டப் பட்டு, அதைப் பெருக்குவதற்குப் பதிலாக ஏற்கனவே ஆரம்பித்த பண்ணைகள் திறமையாக நடந்தால் உணவு உற்பத்திக்கு போதும் என்றளவில் 1959-60ல் வலியுறுத்திக் கூறப்பட்டது. 136 விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்று கூறியுள்ளார்கள். 210 விதைப்பண்ணைகள் நமக்கு வேண்டுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை மூலம் பழைய முடிவை மறுத்திருக்கிறார்களா? அல்லது 210 விதைப் பண்ணைகள் நமக்குத் தேவை என்ற லட்சிய அளவை அடைய என்ன என்ன முயற்சிகள் எடுக்கப்போகிறார்கள் என்பதைப் பற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. உரத்தைப் பொறுத்தவரையில் நல்லதொரு முன்னேற்றம் இல்லாத வகையில், நம்பிக்கை ஊட்டத்தக்க வகையில் ஒன்றுமே காட்டப்படாத அளவில், 360 பண்ணைகளுக்கு திட்டமிட்டு 136 தான் நிறுவ முடிந்தது என்று கூறி, இதுவே போதும் என்ற அளவில் குறிப்பிடப்பட்டு அதனால் திருப்தி அடைந்து, 210 பண்ணைகள் இருந்தால் நல்லபடி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று குறிப்பிட்டு 136தான் இருக்கிறது என்று கூறி, 210 பண்ணைகள் நிறுவ வழி எதுவும் கூறாதிருக்கிற நிலையில் லட்சிய அளவை, 17 லட்சம் டன் உணவு உற்பத்தியை எப்படி அதிகப்படுத்தப்போகிறார்கள் என்ற சந்தேகத்தை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் நமது நிதியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தொழில் வளர்ச்சியில் நமது மாநிலம் பின்தங்கிவிடவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமக்கெல்லாம் தெரியாத தொரு புதுமையை சர்க்காரை நடத்துகிற நிதியமைச்சர் அவர்கள் இன்றைய தினம் எடுத்துக் கூறுகிறார்கள். இடறி விழுந்தால் தொழிற்சாலையில் விழ வேண்டும், தடுக்கி விழுந்தால் தொழிற்சாலையில் விழ

வேண்டும் என்று தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் இருப்பதைப் போன்று, இதை நீங்கள் யாருமே பார்க்கவில்லையா என்பது போல, தொழில் துறையில் நமது மாநிலம் பின்தங்கிக் கிடக்கவில்லை என்ற மாபெரும் உண்மையை நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரவேட்டிலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரவேட்டிலும், நமது மாநிலம் தொழில் துறையில் பின்தங்கிக்கிடக்கிறது என்று குறிப்பிட்டிருக்க, கோரிய 399 கோடியை வடநாட்டு சர்க்கார் மறுத்து 290 கோடியே தரப்பட்டு இருக்கும்போது திடீரென தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேறியிருக்கிறது, அல்லது மற்ற மாநிலங்களைவிட நமது மாநிலம் தொழில் துறையில் பின்தங்கிவிடவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவதை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இப்படியெல்லாம் மக்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்காதீர்கள் என்று நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித் திருக்கும் நிதியமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். திரும்பத் திரும்ப நெய்வேலித் திட்டத்தைப் பற்றி கீரல் விழுந்த கிராமபோன் பிளேட்டைப்போல் இந்த மன்றத்தில் அடிக்கடி எடுத்துச் சொல்லப்படுகிறது, ''நெய்வேலித் திட்டம் நெய்வேலித் திட்டம்'' என்று! மற்ற தொழில்களைப் பொறுத்த மட்டில், பூர்வாங்க ஆலோசனையில் இருக்கிறது. ஆராய்ச்சி நடக்கிறது. இடம் பார்த்தாகிவிட்டது நிலம் வாங்கியாகி விட்டது, என்ற கட்டங்களில் இருக்க, இந்த மாநிலத்தில் தொழில்வளம் அதிகரித்திருக்கிறது. அல்லது மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டுக் காட்டும் அளவிற்கு எந்த தொழில்வளர்ச்சியை நிதியமைச்சர் அவர்கள் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. பெரும்பாலான தொழிற்சாலைகள் யார் யாருக்கு விடப் பட்டிருக்கின்றன? மறுபடியும் மறுபடியும் தனியார் துறைக்குத்தான் விடப்பட்டிருக்கின்றன. விடப்பட்டு வருகின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் நமது மாநிலத்தில் தொழில் நடத்த பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் 908. அதில் பப்ளிக் லிமிடெட் 66. பிரைவேட் லிமிடெட் 842. அடுத்து ரசாயன உற்பத்தியில் நாம் வெகுவாக முன்னேறியிருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் என்பது யார்? நாம்

என்று கூறும்போது சர்க்காரைத்தான் குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணினேன். ஆனால் அப்படி குறிப்பிட்டிருப்பது யாரை என்று பார்த்தால், தாரங்கதரா, இந்தியா சிமெண்ட் போன்ற ஸ்தாபனத்தாரைத்தான் அப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். தனியார் துறை முன்னேற்றத்தைத்தான், நாம் முன்னேறி யிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். இந்த நாம் தாரங்கதரா, விஸ்கோஸ், சேஷசாயி, மதராஸ் அலுமினியம் கம்பெனி, பாரி கம்பெனி இவைகளைப் பிரதிபலிக்கிற நாமாக இருப்பதால்தான், ''நாம் இந்த ஆட்சியில் சுகம் காண முடியாது. நாம் இங்கிருந்தால் வாழ முடியாது; ஆகவே கப்பல் ஏறுவோம்'' என்று கப்பல் ஏறி, கொடுமைகள் பல அனுபவித்து வருகிறார்கள் ஏழை மக்கள். அந்த நாம் என்ற வார்த்தையின் பிரதிநிதிகள் ஏழை மக்களை வாழ்விக்கும் நிலையில் தொழில் திட்டங்களை வகுக்கவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாக இம்மன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையை ஏன் வளர்க்க வேண்டும். அதற்குள்ள காரணங்கள் என்ன? ஏன் இப்படி பொதுத் துறையையும் தனியார் துறையையும் கதம்பம் மாதிரி கலக்கிற பொருளாதாரத் திட்டத்தை இந்த அரசினர் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்குள்ள காரணங்களை இந்த அமைச்சரவையிடம் எதிர்பார்க்கிறேன். தனியார் துறையினர் அடிக்கும் கொள்ளை லாபம் தடுக்கப்பட்டு அரசினர் அதை ஏற்று நடத்தினால் மேலும் மேலும் வரிகளைப் போட்டு மக்களை வாட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு 7 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. அப்படி 7 கோடி ரூபாய்க்கு வரி போடப்படும் என்ற முதலமைச்சர் அவர்கள் அநேகமாக வரி போடுவதற்கு முன்னரே, இம்மன்றத்தில் இப்பேச்சு வருவதற்கு முன்னதாகவே வரி வருகிறது வரி வருகிறது என்று பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களை ஓரளவு தைரியப்படுத்தி விட்டு...

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7 கோடி என்று சொல்லவில்லை. வரி கூடாதென்று பல மாண்புமிகு அங்கத்தினர்கள் இந்த மன்றத்தில் சொன்னதற்கு முதலமைச்சர் அவர்கள் ''வரி போட்டால் என்ன தப்பு'' என்று சொன்னார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழு கோடி என்று சொல்லாவிட்டாலும் தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளியிட்ட சுவரொட்டிகளில் 7 கோடி ரூபாய்க்கு வரி போடுவார்கள் என்று உணர்ந்து நாட்டு மக்களை எச்சரித்திருக்கிறோம். ஆனால் நாட்டு மக்கள் அதைக் கேட்காததினால் நீங்கள் 139 அங்கத்தினர்கள் என்றும் நாங்கள் 50 அங்கத்தினர்கள் என்றும் வர நேரிட்டது. தேர்தல் வரை ஒன்று சொல்லிக் கொண்டிருப்பார்கள், பின்னர் தேர்தலில் ஓட்டு அளித்ததற்கு நன்றியாக வரிகளை போடுவார்கள் என்பதை இந்நாட்டு வாக்காளப் பெருமக்கள் இனிமேலாவது உணருவார்கள் என்று நம்புகிறேன். இன்று ஏழு கோடி ரூபாய்க்கு வரி போடப் பட்டிருக்கிறது. அபிவிருத்தி திட்டங்களை மனதிற் கொண்டு பார்க்கும்போது வரி போடும் முயற்சியை தடுக்க முடியாதென்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டி ருக்கிறார்கள். 1962-63க்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இம்மன்றத்தில் சமர்ப்பித்தது எல்லோருக்கும் தெரியும். அதில் பழைய நிதியமைச்சர் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், வரவு 92.71 லட்சம். செலவு 99.67 லட்சம்; துண்டு விழுவது 7 கோடி என்று குறிப்பிட்டார்கள். அதோடு, திருத்தப்பட்டு மதிப்பீடு மறுபடியும் வரலாம் என்று சூசகமாக வெளியிட்டார்கள். இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் ஏழு கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று சொல்லிவிட்டு,தேர்தலுக்கு முன்பு அந்த பட்ஜெட் இங்கே சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தால், இந்த ஏழு கோடி ரூபாயை எப்படி நாம் நிறைவு செய்யப்போகிறோம் என்பதற்கான வழிவகை சொல்லாமல் இப்பொழுது வேறு காரணங்கள் சொல்லப்படுவது ஏன் என்பதை அமைச்சர் அவர்களே இந்த மன்றத்தில் ஆராய்ந்து பார்த்துக் கூறும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அப்பொழுது ஏழு கோடி ரூபாய் எப்படிச் சரிக்கட்டப் படும் என்று பழைய நிதி அமைச்சர் சொன்னார்?

‘‘...பொதுவாக மத்திய அரசின் வரி இனங்களின் வருமானம் வளர்ச்சியுற்று வருகின்றது. அதிலும் குறிப்பாக பொருள்களின் மேல் விதிக்கப்பட்டுள்ள வரிகள் மூலமாகக்

கிடைக்கும் வருமானம் கணிசமாக உயர்ந்து வருகிறது. ஆகவே நம் மாநிலத்திற்கு இந்த வரி இனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பங்கு கணிசமாக உயர ஏது உண்டு. இது நமக்கு ஓரளவு நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. மேலும் மாநிலங்கட்கு மத்திய வருமானத்திலிருந்து கொடுக்கப்படும் பங்கைப்பற்றி மூன்றாவது நிதிக் கமிஷன் தற்போது ஆராய்ந்து வருகிறது. மாநில வரிகளில் பெரும்பாலானவை போதுமான அளவிற்கு விரிந்து கொடுப்பன அல்ல என்பதைப் பற்றியும், மக்களின் அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மாநில அரசாங்கங்கள் மேலும்மேலும் அதிகப்படியான பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கிறது என்பது பற்றியும் நிதிக் கமிஷனுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். விரைவில் சமர்ப்பிக்கவுள்ள நிதிக் கமிஷனின் அறிக்கை தக்க முறையில் மாநிலங்கட்கு நிதி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது...'' என்று இந்த மன்றத்திலே இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது கூறப்பட்டது.

அந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசிய ஆளும் கட்சியில் உள்ளவர்கள், 'ஏழு கோடி ரூபாய் துண்டு விழுந்தும் வரி போடாத அரசு அல்லவா அரசு' என்று பாராட்டினார்கள். அந்தக் காரணங்களெல்லாம் இப்பொழுது எங்கே போயின? 'ஏழு கோடி ரூபாய் துண்டு விழுந்தாலும் பயப்படமாட்டோம், வரி போடுவோம்' என்று அப்பொழுது சொன்னால், எங்கே தேர்தலில் ஓட்டுப் போடாமல் இருந்து விடுவார்களோ என்பதற்காக அப்பொழுது ஒன்றும் சொல்லாமல், தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சர்கள் ஆளும் கட்சியினராக வந்த பிறகு வரி போடுகிறார்கள் என்பது தவிர வேறு அர்த்தம் என்ன? அப்பொழுது நிதி அமைச்சர் தந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? நிதிக் கமிஷன் நீதி வழங்கவில்லையா? இதற்கான பதிலை கனம் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தருவார் என்று நான் கருதுகிறேன்.

1961-62ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் நேரத்தில் பழைய நிதி அமைச்சர், ''ஜனநாயக அடிப்படையில் இயங்கும் நாட்டில் வரி மூலம் நிதி திரட்டுவதற்கு ஓர் எல்லையுண்டு'' என்று தமது உரையில்

குறிப்பிட்டிருக்கிறார். 'பழைய நிதி அமைச்சர்' என்று நான் குறிப்பிடுகிறபோது, புதிய நிதியமைச்சர், 'அது வேறு, இது வேறு', என்கிற அந்தப் பிரச்சினைக்கு வரமாட்டார் என்று கருதுகிறேன். 'திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால் நிலையான சர்க்கார் இருக்கவேண்டும்' என்று இந்த அமைச்சர்கள் அடிக்கடி கூறி வருகிறார்கள். ஆகவே, நிலையான சர்க்கார் இருக்க வேண்டும் என்ற அவர்களுடைய கொள்கையின் அடிப்படையிலேயே பழைய நிதி அமைச்சர், புதிய நிதி அமைச்சர் என்று குறிப்பிட்டாலும், இருவரும் ஒரு ஆளும் கட்சியின் சர்க்காரைச் சார்ந்தவர்களாதலால், ஒரே கொள்கை பிரதிபலிக்கும் என்ற அளவிலேதான் நான் குறிப்பிடுகிறேன்.

'ஜனநாயக அடிப்படையில் இயங்கும் நாட்டில் வரி மூலம் நிதி திரட்டுவதற்கு ஓர் எல்லையுண்டு' என்று குறிப்பிட்ட அந்த வாசகம் இந்த நிதிநிலை அறிக்கையில் எங்கே போயிற்று? மைசூர் மாநில நிதி அமைச்சர் இரண்டு நாட்களுக்கு முன்பு என்ன பேசியிருக்கிறார்? '42 கோடி ரூபாய் அளவிற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நாம் வரி போட வேண்டும் என்று இருக்கிறது; போடுவதற்கு சாத்தியம் இல்லை; 20 கோடி ரூபாய் அளவிற்குத்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் போட முடியும்; துண்டு விழும் தொகையை திட்டக் கமிஷன் தந்தாக வேண்டும்' என்ற வேண்டுகோளை மைசூர் அரசாங்கம் வடக்கே இருக்கும் திட்டக் குழுவிற்கு விடுத்திருக்கிறது. அதுபோல நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் தைரியமாக இதை ஏன் சொல்லக் கூடாது? நம்முடைய நிதி அமைச்சர் தைரியம் இல்லாதவரா? சென்ற தடவை போலீஸ் அமைச்சராக இருந்தவர்தானே. ஆகவே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நிச்சயமாக திட்டக் குழுவினிடம் அவர் போராட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பொழுது ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்காகப் போடப்படுகிற வரிகளைக் குறித்து, இன்றையதினம் மேலெழுந்தவாரியாக யாருக்கோ போடப்பட்ட வரி என்று சொல்லிவிடலாம். இதனால்

பெரும்பாலும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

பஸ்களுக்கு வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. கால் ஆண்டுக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்ற விகிதங்களில் வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. பஸ்களுக்குப் போடப்பட்டிருக்கிற இந்த வரியை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை. ஆனால் அப்படிப் போடப்பட்டிருக்கிற வரி யாருடைய தலையிலே சுமத்தப் படுகிறது என்பதை ஆராய வேண்டும். இது பிரயாணி களுடைய தலையிலே பஸ் கட்டணம் மூலமாகச் சுமத்தப்படும் என்பதைக் குறித்து அறிக்கைகளெல்லாம் பிரபல பஸ் முதலாளிகள் பத்திரிகைகளில் அழகாக வெளியிட்டு விட்டார்கள். 'பஸ் கட்டணத்தை உயர்த்த இருக்கிறோம்' என்று அவர்கள் அறிக்கை வெளியிட்டுவிட்டார்கள். பஸ் கட்டணம் உயர்ந்த பட்சம் 7½ பைசா என்று இருந்தாலும், இன்றைக்கு நான்கு பைசாவிலிருந்து ஆறு பைசா அளவிலேதான் கட்டணம் விதிக்கப்படுகிறது. இந்த வரி வந்த பிறகு, அவர்களுக்கு இருக்கும் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஏழு, ஏழரை பைசா வரையிலும் கட்டணத்தை வசூலிக்க முற்படுவார் களானால், இந்த வரி மூலமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகள், பாட்டாளிப் பொதுமக்கள் என்பதை நான் இங்கே உணர்த்த விரும்புகிறேன். ஆகவே இந்த வரியைப் போடுகின்ற இதே நேரத்தில், 'கட்டணம் நிச்சயமாக உயர்ந்து விடாது என்பதற்கு சர்க்கார் தகுந்த பாதுகாப்பு அளிக்கும்' என்று அமைச்சர் அவர்கள் இங்கே உறுதிமொழி அளிக்க வேண்டும். சட்டத்தைத் திருத்தி ஐந்து அல்லது ஆறு பைசா அளவிலேதான் கட்டணம் இருக்க வேண்டும் என்று இந்தச் சர்க்கார் இதற்கான சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும். அப்படிப்பட்ட உறுதிமொழியைத் தந்துவிட்டு, இந்த வரியைப் போட்டால்தான் பொதுமக்கள் பாதுகாக்கப்படுவார்கள்; இல்லாவிட்டால், அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவது போல் அழு' என்று பஸ் முதலாளிகளைப் பார்த்துச் சொல்வதாகத்தான் இருக்கும். பஸ் தொழிலைத் தேசீயமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கையைப்

புறக்கணித்துவிட்டு இன்றைய தினம் பஸ்ஸுக்கு வரி போடுவது எப்படியிருக்கிறது என்றால், தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் கதை'யாகத் தான் இருக்கிறது. பஸ் தொழில் தேசியமயமாக்கப்படுமானால் வரியை விட அதன் மூலம் அதிகமான வருமானம் நிச்சயமாக வரும் என்பதை நான் இந்த சர்க்காருக்குச் சுட்டிக் காட்டுகிறேன்.

லாரிகளைப் பொறுத்தவரையில், சிறிய லாரிக்காரர்கள் பஸ் முதலாளிகள் பெறுகிற அந்த அளவுக்கு லாபம் சம்பாதிக்கவில்லை. அவர்களுக்கு வரி போடுவதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். பத்து, இருபது லாரிகள் வைத்திருப் பவர்கள் இந்த வரியினால் பாதிக்கப்படமாட்டார்கள் என்றாலும், ஒரு லாரி, இரண்டு லாரிகள் வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள். அதை இந்த அமைச்சரவை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். லாரிகளுக்கு வரி போடும் காரணத்தால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்திற்கு அது காரணமாகும். இவைகளை இந்தச் சர்க்கார் யோசிக்க வேண்டும்.

மின்சார உபயோகத்தின் மீது வரி விதிப்பதைப் பொறுத்த வரையிலும், 'லோ டென்ஷன்' மின்சாரம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. அதற்கு வரியிலிருந்து விலக்கு தேவை. வீடுகளைப் பொறுத்தவரையில், ஆடம்பரமான விளக்குகள், வர்ண விளக்குகள், வாழைத் தண்டு விளக்குகள் முதலியவற்றைப் போட்டிருந்தால், அதற்கு மின்சார வரி இருக்கலாம். ஆனால் 15 வாட்ஸ், 25 வாட்ஸ் என்ற அளவில் மின்மினிப்பூச்சி போல் விளக்கு வைத்துக் கொண்டிருக்கிற, சாதாரண நடுத்தரக் குடும்பங்களுள்ள அந்த வீடுகளுக்கு விலக்கு அளிக்கப்பட வழிவகை காணவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நில வரியைப் பொறுத்தவரையில், குறிப்பிட விரும்புகிறேன். சென்ற முப்பது ஆண்டுகளிலே நிலங் களினுடைய தரம் பல நிலைமைகளாக மாற்றப்பட்டிருக்கிறது. மானாவாரிப் பாசனமாக இருந்தது வளமான பாசனமாக மாறியிருக்கிறது; வளமாக இருந்தது வானம் பார்க்கின்ற

சீமையாக இருக்கிறது. முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், புதிய நிலைமைகள், இவைகளை கவனித்து, நிலங்களின் தரம் சரியானபடி வகுக்கப்பட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்படுகிற குழு, தற்போது இருக்கிற நில வரி விகிதத்திலே மாறுதல் செய்யலாம். இப்பொழுது புதிதாக விதிக்கப்படுகிற நில வரியைக் கைவிட வேண்டும். அந்தக் குழு அமைக்கப்பட்ட பிறகு, நில வரி மாறுதலைக் கவனிக்கலாம்.

குதிரைப் பந்தய வரி விகிதங்களை இரட்டித்து, அதன் மூலம் 24 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. குதிரைப் பந்தய முறையை ஒழிக்க வேண்டுமென்று மக்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மது விலக்குத் திட்டம் வந்த காரணத்தால், மது ஒழிக்கப்பட்டது. கலால் வரி மூலம் கிடைத்து வந்த 17 கோடி ரூபாயை இழந்து அந்தத் தீய செயலை நாட்டிலிருந்து ஒழித்து விட்டோம் என்ற பெருமை பெற்றிருக்கிற இந்த சர்க்கார் குதிரைப் பந்தயத்தையும் ஒழித்து, அதனால் கிடைக்கின்ற சொற்ப வருமானத்தை இழக்கத் தயாராயிருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இறுதியாக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மக்களுடைய வாழ்க்கையை அரித்துக் கொண்டிருக்கிற விலைவாசி உயர்வுப் பிரச்சினையைப் பற்றி அமைச்சர் அவர்கள் எதுவுமே குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது. விலைவாசி ஏற்றத்தின் காரணமாகத்தான் பொருளாதாரத் துறை பாதிக்கப்பட்டிருக்கிறது; பொருளாதார வளர்ச்சி குன்றிக் கிடக்கிறது. நம்முடைய திட்டங்களின் முன்னேற்றம் பாதிக்கப் படுகிறது என்று பழைய நிதி அமைச்சர் கூறியிருக்கிறார். அதைப் புதிய நிதி அமைச்சர் கவனிப்பாரா என்று கேட்டுக் கொண்டு, இந்த விவாதத்தில் என்னுடைய கருத்தை இந்த அளவில் முடித்துக் கொள்கிறேன்.

உரை : 6 நாள் : 7.3.1963

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறுவதுதான் நல்லது என்று கருதுகிறேன். காரணம், எதிர்ப்பதாக ஆரம்பத்தில் சொல்லிவிட்டு ஏழெட்டு குறைபாடுகளை எடுத்துக் காட்டினாலும் அதை ஆளுங்கட்சியினர் எதிர்க்கவே தொடங்கு கிறார்கள். ஆரம்பத்தில் ஆதரிப்பதாகச் சொல்லிவிட்டு ஆயிரம் குறைபாடுகளைச் சொன்னாலும் அதை இந்த மன்றத்தில் ஆதரிப்பதாகவே எடுத்துக்கொள்கிற காரணத்தினால் இதை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறுவதே நல்லது என்று கருதுகிறேன். (மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம்: முடிவில் நிராகரிக்கிறேன் என்று சொல்லிவிடுங்கள்.)

இதை வரவேற்பதற்கு இன்னொரு காரணத்தையும் கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ பதின்மூன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படிப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எத்தனை வற்புறுத்தி எடுத்துச் சொன்னாலும், எந்தக் கொள்கை வாதங்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தாலும், அவை அத்தனையையும் ஆட்சியாளர் நிராகரித்துவிட்டு தங்கள் இஷ்டம்போல் தயாரித்து அளிப்பதனால் இன்றைய நாட்டு மக்கள் ஆட்சியாளர்க ளுடைய கொடுமையைப் புரிந்துகொண்டு தாங்கள் செய்த தவறை உணர்வார்கள் என்ற காரணத்திற்காக இதை நான் வரவேற்கிறேன் என்று சூசகமாகச் சொல்லக்கூடும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி இந்த மாமன்றத்திலே இரு தரப்பிலிருந்தும் பலதரப்பட்ட கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் அவர்கள் இந்த வரவு–செலவுத் திட்டத்தினுடைய இறுதி உரையில் குறிப்பிட்டிருக்கின்ற வாசகம் மிக மிக முக்கியமானது. இந்த நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் தொடக்கூடியது என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் மறுப்பதற்கில்லை.

> ''பாதுகாப்பு, அபிவிருத்தி இந்த இரண்டு இலட்சியங்களுக்குள் முரண்பாடு ஒன்றுமில்லை. ஆனால் இவை இரண்டையும் ஒருங்கே அடைய வேண்டுமென்றால் நம்முடைய ஆள் பலம், பொருள் பலம் எல்லாவற்றையும் திரட்ட வேண்டும். அப்படித் திரட்டுகையில் தியாகங்களைச் செய்ய வேண்டி நேர்ந்தால், சுதந்திர நாட்டினர் என்ற முறையில் நாம் பின்வாங்கக்கூடாது''

என்று நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே எங்களைப் பொறுத்த வரையிலே வேறுபாடான கருத்து நிச்சயமாக இருக்க முடியாது. இந்தியாவினுடைய வட எல்லைப் பகுதியில் சீனர்கள் நடத்துகின்ற ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக இந்தியா போர்க்கொடி உயர்த்திய அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சியத்தையே நிறுத்தி வைத்துவிட்டு, இந்தப் போராட்டத்திற்கான ஆதரவை இந்திய சர்க்காருக்கு இதய சுத்தத்தோடு வழங்குவதற்குத் தீர்மானித்தது என்பதையும், அந்தத் தீர்மானத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் எள்ளளவும், பின்வாங்காமல் சீனா ஆக்கிரமிப்பை முறியடிப்பது ஒன்றுதான் நம்முடைய முதல் வேலை என்பதை உணர்ந்து பணிபுரிந்து வருகிறது என்பதையும் நான் மிகப் பெருமையோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கின்ற குடிமகன் ஒவ்வொருவனுக்கும் உயிர்ப்பிரச்சினை இது. அந்தப் பிரச்சினையில் நாம் எந்த அளவுக்கு நாட்டம் செலுத்த வேண்டும். எந்த அளவுக்குத் தியாகங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இந்த அறிக்கையிலே

894.8115
ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.

நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியதுதான்.

ஆனால் இதனைச் சற்றுச் சிந்திக்கிற நேரத்தில், ''தியாகங்களைச் செய்கிறவர்கள் ஏழை மக்களாக மாத்திரந்தான் இருக்க வேண்டுமா? இந்தப் போரினால் ஏற்படுகின்ற சாதக பாதகங்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற முதலாளி வர்க்கத்தை தீண்டக்கூடாதா? பணக்காரர்களுடைய வீடுகளின் படிக்கட்டை மிதிக்கக்கூடாதா?'' என்றுதான் கேட்க விரும்புகிறேன். நாட்டின் அபிவிருத்திக்குப் பொருள் தேவைப்படும். அந்தப் பொருளை ஈட்டுவதற்கு, வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிகளைக் காணவேண்டியதுதான். ஆனால் அதற்கான வழி காண்கிற நேரத்தில், அந்தப்பாரம் முழுவதும் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழைக் குடிமகனுடைய தலையிலே மட்டும் விழலாமா என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். 'இது வரி போடப்படாத வரவு செலவுத்திட்டம் அல்லவா' என்று ஆளும் கட்சியைச் சார்ந்த அத்தனை உறுப்பினர்களும் எடுத்துப் பேசினார்கள். அது மாத்திரமல்ல. ''வரி போடாது நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற காரணத்தால் எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்குப் பேசுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது; ஆகவே அவர்கள் ''அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறார்கள்'' என்று பேசினார்கள். பேசிய அத்தனை உறுப்பினர்களும் எதைச் சொல்லத் தவறினாலும் அந்தப் பழமொழியைத் தவறாமல், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றையதினம் பேசிய மதிப்புக்குரிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'இந்த வரவு-செலவுத்திட்டத்திலே வரி போட்டிருப்போமானால் அதுதான் கடைசி வரியாக இருக்கும்'என்று குறிப்பிட்டார்கள். அந்த வாசகத்திற்குப் பொருள் என்னவாக இருக்கமுடியும்? போட வேண்டிய வரிகளையெல்லாம் போட்டாகிவிட்டது, இனிப் போடுவதற்கு வரி எதுவும் இல்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. நாலைந்து தினங்களுக்கு முன்பாக நீர் வரி, நிலவரி மசோதாவை நிறைவேற்றினோம். அந்த வரிகளின்

சுமை ஏழைக் குடிமகனின் தலையிலே விழுந்திருக்கிறது. மத்திய சர்க்காருடைய வரித் திட்டங்கள் வேறு இந்த நாட்டுக் குடிமக்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. 'இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே வரிபோட எங்கே இடம் இருக்கிறது?' என்றுதான் கேட்க விரும்புகிறேன். அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவனுடைய உடலில் ஊசி குத்தக் கூட இடம் இல்லை என்று கூறுவது போல், எல்லா வரிகளும் இன்றைய தினம் போடப்பட்டு இந்த நாட்டு மக்கள் பெருத்த வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். 'வரிபோட்டிருந்தால் எதிர்க்கட்சிக்காரர்கள் பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்கும், வரி போடாத காரணத்தால் அவர்களுடைய வாய் மூடிவிட்டது' என்று சொல்லும் ஆளும் கட்சியினருக்கு, மாண்புமிகு மாதா கவுடர் அவர்கள் இந்த மன்றத்திலே வரியை எதிர்த்துப் பேசிய வாசகத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1957ம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம்தேதி தோட்ட வருமான வரி திருத்த மசோதா ஒன்று வந்தது.

அந்த வரியை உயர்த்த எதிர்க்கட்சியிலிருந்து அத்தனை பேரும் எங்கள் ஆதரவை தெரிவித்தோம். அப்போது இந்த மன்றத்திலிருந்த சின்னதுரை அவர்கள்கூட, அந்த வரி 45 பைசா என்பதை 50 பைசா என்று ஆக்குவதில் கூடத் தவறில்லை யென்று குறிப்பிட்டார்கள். அந்த நேரத்தில் நண்பர் மாதா கவுடர் அவர்கள் பேசிய வாசகம் எனக்கு நினைவிருக்கிறது. ''நம்முடைய தொழில் முறையும், பிளான்டேஷனும் நல்ல விதமாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டுமென்றால், அவர்களுக்கும் ஊக்கம் கொடுக்க வேண்டும். ஊக்கம் கொடுத்தால்தான் அவர்களும் அந்தப் பயிர்களை நன்றாக விளைவிப்பார்கள். விளைபொருள்களை அந்நிய நாட்டுக்கு அனுப்பி அந்நியச் செலாவணிகூட ஓரளவுக்கு அதிகமாகப் பெறக்கூடும். அப்படி முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொழில் மீது ஒரேயடியாக அதிகமாக வரி போடுவதை நான் மிக வன்மையாக கண்டிக்கிறேன்'' என்று நண்பர் மாதா கவுடர் அவர்கள் ஜூலை மாதம் 25ஆம் தேதியன்று இந்த மன்றத்திலே பேசியிருக்கிறார். எதிர்க்கட்சியில் இருக்கும் நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவராயினும், வேறு எந்த முற்போக்கு எதிர்க்கட்சியின

ராயினும், தாங்க முடியாதவர்கள் மீது சுமத்தப்படுகிற வரிச்சுமையைத்தான் எதிர்த்து வந்திருக்கிறோமே தவிர, தாங்கக் கூடியவர்கள் மீது போடப்படுகின்ற வரிகளை ஆட்சேபிப்பது கிடையாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் 'வரியே இல்லை' என்று சொல்லும் நேரத்தில், இதிலே மகிழ்ச்சி தரக்கூடிய வேறு என்ன இருக்கிறது? தினந்தோறும் மனைவியை அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கும் கணவன், ஒரு நாள் 'இன்றைய தினம் உன்னை அடிக்கப்போவதில்லை' என்று மனைவியைப் பார்த்து கணவன் கூற, 'என் மீது அவ்வளவு காதலா பிறந்துவிட்டது' என்று மனைவி கேட்க இல்லை ! இல்லை! உன்னை அடித்து அடித்து என் கை வலி வந்துவிட்டது' என்று பதில் கூறினானாம். அதைப் போலத்தான், வரி போட வழி இல்லாத அளவுக்கு ஏற்கனவே எல்லா வரிகளையும் போட்டுவிட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த வரவு செலவுத் திட்டத்திலே புதிய வரிகளைப் போட முடியவில்லை. நாட்டிலே, வாடுகின்ற மக்கள் வாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். வரிப்பளுவை தாங்கிக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் 'சுமை இறக்கப்படாதா?' என்று சோகத்தோடு பெருமூச்சு விட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ரஷ்யத் தலைவர் குருஷேவ் அவர்கள் இந்தியா வந்திருந்த நேரத்தில் மிக அழகாகக் குறிப்பிட்டார்கள்.

''சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய மனிதனுடைய தலையாய உரிமையானது,

வேலை செய்யவும், இன்றைக்கும் நாளைக்கும் பாதுகாப்பான வாழ்வைப் பெறவும், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகிய பயங்கரப் பயமுறுத்தல் களிலிருந்து விடுதலை பெறவும் உள்ள உரிமையேயாகும்.

தொழிற்சாலைகள், மில்கள், பாங்குகள், வீடுகள், நிலம், இயற்கைச் செல்வாதாரம் முதலிய உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் தம்முடைய கையில் வைத்துக் கொண்டு கொழுக்கின்றவர்களின் சுரண்டலில் இருந்து மனிதன்

விடுதலை பெறுவதுதான் தனிநபர் சுதந்திரத்தின் மிக உயர்வான வடிவமாகும்''. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த அடிப்படையிலே இந்த நாட்டிலே வரவு செலவுத் திட்டம் தீட்டப்படுகிறதா? வருமானத்தைப் பெருக்குவதற்கு வரிகளை மாத்திரம் நம்பினால் போதுமா? தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று நாங்கள் எடுத்துக் கூறுகின்ற கருத்தை இந்த அரசு ஏன் கவனிக்க மறுக்கிறது? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தால் கூட தனியார் துறை, பொதுத்துறைக் கணக்கினை ஆராய்ந்து பார்த்தால்–பொதுத்துறையில், நெய்வேலித்திட்டம், கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை, நீலகிரி கச்சா பிலிம் தொழிற்சாலை, கனரக கொதிகலன் தொழிற்சாலை, ஆவடிக்கருகில் பாதுகாப்புச் சாதனத் தொழிற்சாலை ஆகியவைகள்தான் வருகின்றன. ஆனால் தனியார் துறையிலோ, சேலம் மாவட்டத்தில் கலவை உருக்குத் தொழிற்சாலை, சர்க்கரை ஆலைக்கான இயந்திரங்கள் தயாரிக்க இரண்டு தொழிற்சாலைகள், சோடாக்காரம் மற்ற ரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் தாரங்கதாரா ஸ்தாபனம் (அதற்காகவே) மேட்டூர் கெமிக்கல் ஸ்தாபனம், எண்ணூர் உரத்தொழிற்சாலை, கடலூர் உரத்தொழிற்சாலை, கோவை உரத் தொழிற்சாலை, பாரி ஸ்தாபனத்தின் 'அம்மோனியம் பாஸ்பேட்' உற்பத்தி தொழிற்சாலை, சேஷசாயி காகிதத் தொழிற்சாலை, சங்கரிதுர்கம் சிமெண்டு தொழிற்சாலை, கரூர் சிமெண்டு தொழிற்சாலை, விஸ்கோஸ் ஸ்தாபனத்தின் ரயான் தொழிற்சாலை என்ற அளவில் தனியார் துறை விரிவுபடுத்தப் படுகிறது. இதிலே எங்கே ஆவடி சோஷலிசம் இருக்கிறது? இப்படிப்பட்ட கலப்பட சமதர்மத்தால் ஏழைக் குடிமகனுடைய வாழ்விலே ஒளியை உண்டாக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட முதலாளிகள் பெருத்த லாபம் அடைந்து வரக்கூடிய பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னால், அதிலே ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்? ஏறத்தாழ ஐயாயிரம் பஸ்களை நிர்வகிக்கின்ற 200க்கு மேற்பட்ட மோட்டார் மன்னர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பஸ்

போக்குவரத்தை எடுத்து தேசிய மயமாக்கினால் என்ன? 'எனக்கு மட்டும் அதிகாரம் இருக்கிறது என்றால் எல்லாப் போக்குவரத்துத் துறைகளையும் தேசியமயமாக்குவேன்' – நான் சொன்னதாகச் சிரிக்க வேண்டாம், சொன்னது நான் அல்ல. 'எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் எல்லாப் போக்குவரத்துத் துறைகளையும் தேசியமயமாக்குவேன்' என்று சொன்னது யார்? அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொருளாதாரக் கூட்டத்தில் பிப்ரவரி மாதம் 26ம் தேதியன்று பேசியவர் சர்.சி.பி.ராமசாமி அய்யர் ஆவார்கள். ஏன் இந்த யோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது? திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்யவேண்டுமென்கிற அவரது யோசனையை மாத்திரம் ஏற்றுக் கொள்ளுகின்ற நீங்கள் ஏன் இந்த யோசனையையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது? ஏன் பஸ் தொழிலை தேசீய மயமாக்கக்கூடாது என்று நான் கேட்கிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும் நேற்றையதினம் நான் பார்த்த செய்தி ஒன்றை நான் இத்துடன் இணைக்க விரும்புகிறேன். சென்னை மாநகரில் டாக்சிகளை 50 வாடகைக் கார்களை ஒரு தனிப்பட்ட முதலாளி ஸ்தாபனத்தினிடம் கொடுப்பதற்கு சர்க்கார் அனுமதிப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கீவராஜ் மோட்டார் ஸ்தாபனத்திற்கு 50 வாடகைக் கார்களைத் தருகிறோம் என்று அனுமதி அளித்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இன்றைய தினம் சென்னை மாநகரில் டாக்சிகளை வைத்துக் கொண்டு வாடகைக்கு விட்டுக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் சிறிய, நடுத்தர நிலையில் உள்ளவர்கள்தான். அவர்கள்தான் இந்த வாடகைக் கார்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரேயடியாக இந்த டாக்சிகளை தேசீயமயமாக்குவதைப் பற்றி நான் ஆட்சேபனை செய்ய வில்லை. அதுவரையில் இந்த சிறிய, நடுத்தர வாடகைக் கார்கள் சொந்தக்காரர்களை பாதிக்காத அளவிற்கு இந்த 50, 100 என்று வாடகைக் கார்களை தனிப்பட்ட இந்த கீவராஜ் போன்ற ஸ்தாபனங்களிடம் தராமல் இருக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். என்ன நிபந்தனையோடு அவர்கள் இப்படி கொடுக்கப்போகிறார்கள் என்று நான் கேள்விப்படுவது, சென்னை டாக்சி ட்ரைவர்கள் ஸ்ட்ரைக்

செய்ய ஆரம்பித்தால் அந்த நேரத்தில் இந்த ஸ்தாபனத்தின் வாடகைக் கார்கள் எல்லாம் எங்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்பதுதான். சுருங்கச் சொன்னால் கருங்காலி வேலை செய்யவேண்டுமென்ற நிபந்தனை மீது இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டு மெத்த வருத்தம் அடைகிறேன். ட்ரைவர்கள் நியாயமான கோரிக்கை களுக்காக நடத்துகிற போராட்டங்களைக்கூட வீழ்த்துவதற்கும், உடைப்பதற்கும், முறியடிப்பதற்கும் இந்த முறை பயன்படுமா அல்லவா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அடுத்து ஒரு நாட்டின் நல்வாழ்விற்காக விவசாயம் வளர்ச்சி, விவசாய தொழில்துறை முன்னேற்றம் இவைகள் இன்றியமையாதவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தாலும், அதை நாட்டிலுள்ள எல்லா தரப்புக் கட்சிகளில் இருப்பவர்களும் ஒப்புக் கொண்டபோதிலும் அது செயல்படும் விதத்தில் இருக்கிற மாற்றங்களை, முரண்பாடுகளை நான் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜப்பான் நாட்டில், ஏறத்தாழ 60 லட்சம் விவசாயிகளைக் கொண்ட அந்த நாட்டில், விவசாயத் துறையில் ஏற்பட்டிருக்கிற வேகத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது அமெரிக்காவையும் ரஷ்யாவையும் ஒப்பிட்ட நேரத்தில் இன்னொரு நாட்டோடு ஒப்பிடலாமா என்ற கேள்வி எழுந்தது. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையை ஆராயும்போது உலகத்திலுள்ள இதர நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதுதான் திட்டங்களின் வளர்ச்சிக்கு நல்ல இலக்கணமாக இருக்க முடியும். அந்த இலக்கண அடிப்படையில் வேறு நாடுகளில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சிகளை நாம் காண வேண்டும். அப்படிக் கண்ட பிறகு அது குறித்து நாம் வருந்தவோ அல்லது தாழ்ந்திருக்கிறோம் என்று வருத்தப்படவோ வேண்டுமென்று சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால், அந்த வளர்ச்சியைக் கண்டு அதை எட்டிப்பிடிக்க நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டுமென்றுதான் பிற நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். விவசாயத்தைப் பெருக்க அரசாங்கம் பல விதங்களில் முயற்சி

செய்கிறது என்று குறிப்பிட்டாலும், நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் செயல்முறை தாமதமாகவும், தீய முறையிலும் நடந்து வருகின்றது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. விவசாயத்திற்குத் தேவையான உரம், ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் எடுத்துக்காட்டியது போல், நியாய விலையில் கிடைப்பதில்லை, காலத்தில் வந்து சேருவதும் இல்லை. பொறுக்குவிதை சர்க்காரால் வினியோகிக்கப்படுவதைவிட, தனிப்பட்ட விவசாயிகளே வினியோகித்தால் நல்லமுறையில் இருக்கும் என்று ஆளும் கட்சியைச் சார்ந்த தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் இந்த மன்றத்தில் நேற்றைக்கு முன் தினம் எடுத்துரைத்தார்கள். இது சர்க்காரால் வினியோகிக்கப்பட வேண்டாம் என்பதற்காக நான் சொல்லவில்லை. வினியோகிக்கப் படுகிற இந்த முறை ஒழுங்கான முறையில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். கிராம சகாயக்குகள் பொறுக்குவிதைகளை பெருக்கித் தயாரிப்பதில் போதுமான பயிற்சி பெற்றவர்கள் அல்ல. அதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன். இன்று பல இடங்களில் பொறுக்குவிதை போடுவதால் ஏற்கனவே வயலில் பயிரிடும்போது ஏற்படுகிற களையைவிட அதிகமாக களை உற்பத்தியாவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். வரவு செலவுத் திட்டத்தைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்படுகிற வாதமாக இதை எடுத்துக் கொள்ளாமல் பிரத்தியட்ச நிலையை இந்த மன்ற அங்கத்தினர்களும், அமைச்சரவையும் உணர்ந்து பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை எடுத்துக் கூறுகிறேன். அனுபவப் பயிற்சி பெறாத கிராம சகாயக்குகளால் இந்த ஆபத்து நேரிடுகிறது என்பதையும் அதைத் தொடர்ந்து விவசாயிகளுக்கும் தொல்லை ஏற்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. விஞ்ஞான முறைப்படி பொறுக்குவிதை தயாரித்தால் போதும் என்று கருதுவது நல்லதல்ல, அனுபவமும் தேவை. பி.ஏ. அல்லது எம்.ஏ. படித்த ஒரு பெண்ணை, சமையல் வேலை தெரியாத அந்தப் பெண்ணை, சமையல் கட்டுக்கு அனுப்பி சமையல் செய் என்று சொன்னால், அப்பெண் விஞ்ஞான முறையில், சுகாதார முறைப்படி சமைக்க வேண்டு மென்று நினைத்து கத்தரிக்காயையும், வெண்டைக்காயையும் சோப்பு

போட்டுக் கழுவி குழம்பு வைத்தால் அந்தக் குழம்பு எப்படியிருக்குமோ, அதே போன்று அனுபவம் பெறாத கிராம சகாயக்குகளால் தயாரிக்கப்படுகிற பொறுக்குவிதைகளைப் போட்டு விவசாயிகள் நல்ல விளைச்சலை காண முடியாதிருக்கிறது. அடுத்து பழத்தோட்டம் என்ற முறை இருக்கிறது. இந்தப் பழத்தோட்டங்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நான் வட ஆற்காடுக்கு செல்கிற வழியில் காட்பாடி ரெயில்வே கேட்டுக்கு அருகாமையில், கேட்டை அடிக்கடி மூடுவதால் காரை அங்கு நிறுத்த வேண்டிவருகிறது. அதன் பக்கத்தில் பழத்தோட்டம் என்று அழகான, கவர்ச்சிகரமான பலகை தொங்கிக் கொண்டிருக்கிறது. காரைவிட்டு இறங்கி பழத்தோட்டம் எங்கே இருக்கிறது என்று தேடிப்பார்த்தால் அதைக் காணவில்லை. அந்தப் பழத் தோட்டம், மாயப் பழத்தோட்டம் காட்பாடி ரெயில்வே கேட்டுக்கு அருகில் இருக்கிறது. அங்கு போர்ட் மட்டும் இருக்கிறது. ஐந்தாறு குழிகள்தான் அங்கு இருக்கின்றன. அங்கு பழத்தையும் காணவில்லை. தோட்டத்தையும் காணவில்லை, செடிகளையும் காணவில்லை. நான் இந்த முறையைக் கண்டிக்கவில்லை. நோக்கத்தை கண்டிக்கவில்லை. ஆனால் அது செயல்படுகிற விதத்தில் ஏற்படுகிற முரண்பாடுகளைத்தான் தவறுதல்களைத்தான் நான் இங்கு சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். தேனீப்பண்ணை என்ற பெயரால் 6,000 ரூபாய் வரையில் பஞ்சாயத்து யூனியன் மூலம் செலவிடப்படுகிறது. ஆனால் இப்பணம் ஒழுங்காகச் செலவிடப்படுகிறதா என்ற கண்காணிப்பு இருக்க வேண்டும். நோக்கத்தை நான் குறை கூறவில்லை என்பதை நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். செயல்முறையில் ஏற்படுகிற தவறுதல்களைத் தான் நான் எடுத்துக் காட்டுகிறேன். கண்காணிப்பு நல்ல முறையில் இருக்க வேண்டும். விவசாயத் துறையில் நல்ல முறையில் விளைவு காண, இசை மூலம் விவசாயத்தில் நல்ல விளைச்சலைக் காணமுடியும் என்ற ஆராய்ச்சி 1950ம் ஆண்டு முதல் இந்த பரிதாபத்திற்குரிய தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. ஆனால் இது பற்றி நேற்றைய தினம் விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டபோது ''எனக்கு அது தெரியாது நான் அதைப் பார்த்ததில்லை'' என்று சொல்கிறார்.

அது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். இதைக் கூடப் பார்க்காதவர் விவசாய அமைச்சராக இருக்கிறாரே என்பதற்காக அல்ல. கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதுகூடத் தெரியவில்லையே என்பதற்காக நான் உள்ளபடியே ஆச்சரியப் படுகிறேன். அதற்கான ஆதாரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தருவதற்காக இதை நான் எடுத்துக் கொண்டு வந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டி.சி.எஸ்.சிங் என்ற ஒரு வட நாட்டுக்காரர் இருக்கிறார் - தனிப்பட்டவர் மீது எங்களுக்கு துவேஷம் இல்லை என்பதற்கு இது ஒரு சான்று - அவர் தாவர ஆராய்ச்சி இலாகாவின் தலைவராக இருக்கிறார். அவர் கண்டுபிடித்த ஆராய்ச்சியின் சில விவரங்களை நான் இங்கு எடுத்துக்கூறுவது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். 1950 டிசம்பரில் இருந்து அண்ணாமலை சர்வகலாசாலையில் சோதனை நடைபெற்று வருகிறது. நாதசுவரத்தில் சாருகேசி ராகத்தை ஒலிபரப்புவதன் மூலம் 25 சதவிகிதத்தில் இருந்து 60 சதவிகிதம் வரை நெல் அதிக உற்பத்தி கிடைத்திருக்கிறது. அதே விதத்தினால் வேர்க்கடலை உற்பத்தி 45 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. கானடா நாட்டில் ஒண்டோரியோ என்ற இடத்தில் வயலின் மூலம் ஐரோப்பிய சங்கீதத்தை ஒலிபரப்பியதில் கோதுமை உற்பத்தி 66 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. புகையிலை கன்றுகளின் உற்பத்தியில் 50 சதவிகிதம் முதல் 60 சதவிகிதம் வரையில் அதிக விளைச்சல் கிடைத்திருக்கிறது. வரப்பிற்கு ஒரு அடி உயரத்தில் ஒலி பெருக்கி பொருத்தி தினசரி காலை 6லிருந்து 7 மணிக்கு இடையில் அரை மணி நேரம் இசை ஒலி பரப்பப்பட்டது. காற்றுவீசும் திசை நோக்கி பொதுவாக ஒலிபெருக்கி அமைக்கப்படும். மண்சோதனை நடத்தி ஒரே மாதிரி தரமுள்ள இரு நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றில் இசை ஒலிபரப்பு பயிர்கள் வளர்க்கப்பட்டன. அது இல்லாது இன்னொன்றில் வளர்க்கப்பட்டன. இரண்டிலும் ஒரே மாதிரி உரங்கள் ஒரே அளவில் ஒரே நாளில் போடப்பட்டன. பாண்டிச்சேரி மாநிலத்தில் அரசினர் நிலச் சொந்தக்காரர்கள் உதவியுடன் கீழ்க்கண்ட இடங்களில் நெற்பயிர் மீது சோதனை நடத்தினர். கீழ்காதமங்கலம், ராமநாதபுரம், இருளம்காந்தி,

கரிகளம்பாக்கம், கவலிக் குப்பம், நைனார் மண்டபம். இதில் விளைவு, நெல் உற்பத்தியில் 8 சதவிகிதத்தில் இருந்து 57 சதவிகிதம் வரை உயர்வு கிடைத்திருக்கிறது. வைக்கோல் அறுவடையில் 10 சதவிகிதம் முதல் 83 சதவிகிதம் வரை உயர்வு கிடைத்துள்ளது. கீழ்க்காத மங்கலத்தில் இசையால் ஊக்குவிக்கப் பட்ட குதிரைவாலி சம்பா பயிர் அது இல்லாத பயிரைவிட 5.48 அங்குலம் அதிகம் உயர்ந்திருக்கிறது. இப்படி புள்ளி விவரங்கள் நிறைய என்னிடம் இருக்கின்றன. கனம் நிதி யமைச்சர் விரும்பினால் இதைத்தர நான் தயாராயிருக்கிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதில் அக்கறை இல்லையோ அல்லது அதைக் காண தவறிவிட்டார்களோ என்னவோ காரணம் எனக்கு புரியவில்லை. இந்த அளவுக்கு நெல்லில் மட்டுமல்ல, கரும்பில்கூட, உருவையாறு என்ற கிராமத்தில் பயிர் நாலரை மாதம் வளர்ந்த பிறகு அறுவை காலம் வரை நாதஸ்வரத்தில் சாருகேசி ராகம் இசைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு ஏக்கருக்கு 8 டன் அதிகமாக விளைந்திருக்கிறது. இம்மாதிரி நாதஸ்வர இசையின் மூலமாக விளைச்சலைப் பெருக்க முடியும் என்பதற்கு நமக்கு பல ஆதாரங்கள் கிடைத்திருக் கின்றன.

இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட ஆராய்ச்சி யாளரைப்பற்றி வட ஐரோப்பாவில் முக்கியத்துவம் வாய்ந்ததும், நார்வே நாட்டு மிகப்பெரிய தினசரியான ''ஆஃப்தன் போஸ்டன்'' என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் இந்த இந்திய விஞ்ஞானியை மனித சமுதாயத்திற்கு உபகாரம் செய்தவராகக் கருதி அவருக்கு நோபல் பரிசு உரித்தாக்குவதற்கும் சாத்தியம் இருக்கிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட செல்வாக்குமிக்க அந்தப் பத்திரிகையில் இக்கட்டுரை வெளியாகியிருப்பதால் நோபல் கமிட்டி இதைப்பற்றி சிந்திப்பதற்கும் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. பாண்டிச்சேரி அரசின் விவசாய இலாகா கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறது. மேலும் ஆராய்ச்சியாளர் டி.சி.எஸ் சிங்கிற்கு 1955ம் ஆண்டு பிருத்வி டிரஸ்ட், பிருத்வி பரிசை வழங்கி யிருக்கிறது. அதாவது 2,000

ரூபாயையும் ஒரு தங்க மெடலும் 'டீன் ஆஃப் பிலாசபி' என்ற பட்டமும் வழங்கியிருக்கிறது.

இதே ஆராய்ச்சியாளர் அவர்கள், இந்திய அரசு இதை மேற்கொள்ள வேண்டும் என்று நேருவிற்கு கடிதம் எழுதினார். இதை மேற்கொள்வதில் பல சிரமங்கள் இருக்கலாம் என்றும், இதற்கான முயற்சிக்கு விவசாய இலாகாவை அணுகவேண்டும் என்றும் நேரு கடிதம் எழுதிவிட்டார். ஆனால் நம்முடைய விவசாய இலாகாவினர் இது குறித்து எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை. எப்படி காட்ட முடியும்? நம்முடைய விவசாய மந்திரிக்குத்தான் இப்படிப்பட்ட ஓர் ஆராய்ச்சி நடப்பதாகவே தெரியாதே. இனிமேலாவது இதில் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மாண்புமிகு திரு. கே. காமராஜ்: இசையில் மந்திரி கவனம் செலுத்தவில்லை, விவசாயத்தில்தான் கவனம் செலுத்தி வருகிறார்கள்) இசைக்கும் விவசாயத்திற்கும் இசைந்த தொடர்பு இருக்கிறது என்றுதான் குறிப்பிடுகிறேன்.

விவசாயத்துறையில் மட்டும் அல்ல, தொழில் துறையிலும் நாம் எந்த அளவுக்கு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இந்த நாட்டிலே எழுந்த பெருத்த முழக்கத்திற்குப் பிறகு ஆளும் கட்சியினரின் திருப்திக்காக வேண்டுமென்றால் பெருத்த கூச்சலுக்குப் பிறகு என்று சொல்லுகிறேன் - பெரிய கூச்சலுக்குப் பிறகு இந்த நாட்டில் ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் இந்த மாநிலத்திற்கு கிடைத்திருக்கின்றன. அந்த அளவில் ஒன்றிரண்டு திட்டங்கள் இந்த மாநிலத்திற்கு கிடைத்திருக்கின்றன. சேலம் உருக்குத் தொழிற்சாலை ஏற்படுவது 1938வது ஆண்டிலிருந்தே ஆராய்ச்சியில்தான் இருந்து வருகிறது. தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம், சேதுசமுத்திரத்திட்டம் – இந்தத் திட்டங்கள் எல்லாம் இதில் இடம் பெறாத நிலையில் இருக்கிறது. ஏறத்தாழ ஐநூறு மைலுக்கு மேல் இலங்கையை சுற்றிச் செல்லுகின்ற அனாவசியமான பயணத்தை தூத்துக்குடிக்குச் செல்லுகின்ற கப்பல்கள் தவிர்க்க முடியும். இப்படிப்பட்ட திட்டம் இதில் இடம் பெறவில்லை. முக்கியமாக நாம் எந்த அளவுக்குத் தொழில் துறையில் பின் தங்கியிருக்கிறோம் என்பதற்கு

ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நான் எடுத்துச் சொல்லவில்லை. ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1958-59ம் ஆண்டு கணக்குப்படி சர்க்கரை உற்பத்தி, பீகாரில் 311 ஆயிரம் டன்னாகவும் பம்பாயில் 321 ஆயிரம் டன்னாகவும், உத்திர பிரதேசத்தில் 888 ஆயிரம் டன்னாகவும், தமிழகத்தில் 74 ஆயிரம் டன்னாகவும் இருக்கிறது. இப்போது வேண்டுமென்றால் சிறிதளவு ஏறியிருக்கலாம். ஆனால் நான் முக்கியமாக குறிப்பிட விரும்புவது ''தென்இந்தியா, பம்பாய், இவைகளைப்போல் உத்திரபிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்கள் கரும்பு விளைச்சலுக்கு ஏற்றவை அல்ல. எனினும் பல ஆலைகள் அங்கு நிலைத்து விட்டன'' என்று இந்தியப் பொருளியல் என்ற புத்தகத்தில் 196வது பக்கத்தில் டாக்டர் பா.நடராஜன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

பேரவைத் தலைவர் : The Hon. Member has already taken 25 minutes.

கலைஞர் மு. கருணாநிதி : இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

பேரவைத் தலைவர் : Then it will be against the rules and regulations. இரண்டு நிமிடங்கள்தான் இனி கொடுக்கமுடியும். அதற்குள் முடித்துவிடுங்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : மேலும் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ''பம்பாயில் பஞ்சாலைத் தொழிலும், உத்திரப்பிரதேசம், பீகார் மாநிலங்களில் சர்க்கரை தொழில்களும், வங்கத்தில் சணல் தொழிலும், வங்கம், பீகார் மாநிலங்களில் நிலக்கரிச் சுரங்கங்களும் செழித்துள்ளன. இவ்வாறு ஒரே தொழில் ஓரிடத்தில் செழிப்புறுவதால், அத்தொழிலில் ஏற்படும் தளர்வு அங்குள்ள மக்களை அல்லற்படுத்தும். ஓரிடத்திலேயே ஏற்படும் தொழிற்செறிவால் ஏனைய மாநிலங்கள் புறக்கணிக்கப்படலாம். அத்துடன் தொழில்கள் ஓரிடத்தில் திரண்டு செறிவதால் போர்க்காலத்தில் அப்பகுதிகள்

அழிக்கப்படும்போது நாடே அவதியுறும்'' என்று டாக்டர் பா. நடராஜன் அவர்கள் ''இந்தியப் பொருளியல்'' என்ற புத்தகத்தில் 174வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முக்கியத்துவத்தை கருதியாவது இந்தத் தொழில் நிலையங்கள் எல்லாம் ஒரே இடத்தில் குவிந்திருப்பது அபாயகரமானது என்பதை உணர்ந்து, பின் தங்கிய இடங்களில் முதன்மையாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்திற்கு நல்ல பெரிய திட்டங்களை இந்திய அரசினிடமிருந்து நமது அமைச்சர்கள் போராடிப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது ஏற்கனவே நான்கு கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய தொகை வெட்டப்பட்டிருக் கிறது. இம்மாதிரி வெட்டப்பட்ட தொகைகளை துணிச்சலாக கேட்டுப் பெற வேண்டும். மேற்கு வங்காளத்தில் சங்கர்தாஸ் பானர்ஜி அவர்கள் மத்திய அரசாங்கத்தை கண்டித்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நியாயமான பல வரிப் பங்குகளை கொடுக்காமல் இருப்பது நியாயமா என்று கேட்டு போர்க்குரல் எழுப்பியிருக்கிறார்கள். காலஞ் சென்ற திரு. பி.ஸி.ராய் அவர்கள் தங்கள் மாநில கோரிக்கையை எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் எங்களுடைய திட்டத்தை நாங்களே வகுத்துக் கொள்கிறோம், அதைப்பற்றி திட்டக்குழுவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, எங்கள் நாட்டில் செய்ய வேண்டியதை நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று போர்க்குரல் கொடுத்திருக்கிறார்கள். அத்தகைய துணிச்சலை நம்முடைய அமைச்சர்கள் பெற வேண்டும். நம்முடைய அமைச்சர்கள் எப்படியிருக்கிறார்கள் என்றால், வெளியில் 10, 20 பயில்வான்களை அடித்து வீழ்த்திவிட்டு, வீட்டுக்கு வந்தவுடன், ''பெண்டாட்டி தாயே, பெரிய தாயே!'' என்று சரணடைகிற பயில்வானைப் போலத்தான், நமது அமைச்சர்கள், என்னைப் பார்த்து ''உங்களை ஒழித்துவிடுகிறோம் பாருங்கள்'' என்ற உறுமுகிறார்கள். ஆனால் மத்திய சர்க்காரிடத்தில், டெல்லி சர்க்காரிடத்தில் போய்மட்டும், வெளியில் குத்துச் சண்டையெல்லாம் போட்டுவிட்டு வீட்டுக்குப் போனவுடன் வேறு விதமாக நடந்து கொள்ளும் பயில்வானைப் போல் நடந்து கொள்கிறார்கள். இந்நிலை நமது அமைச்சர்களுக்கு மாற வேண்டும் என்றும், டெல்லி

சர்க்காரிடத்தில் நமது கோரிக்கைகளை துணிச்சலாகக்கேட்டுப் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு சொல்லொணாத அவதிக்கு ஆளாகியிருக்கின்ற பொற்கொல்லர்களின் நிலைமையை ஆராய்ந்து, வேலை யற்றிருக்கின்ற இவர்களுக்கு வேலை தேடித்தருவதற்கு இந்த மாமன்றத்தில் கொலுவீற்றிருக்கின்ற மந்திரிகள் வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். பொற்கொல்லர்கள் இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் என்ற ஆற்றில் மிதந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நீந்தத் தெரியாது, நீச்சல் பழக்கம் இல்லாதவர்கள், அவர்களைக் காப்பாற்ற வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்பதை நான் சுட்டிக் காட்டவிரும்புகிறேன். மாண்புமிகு காமராஜ் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை தொடர்ந்து வாசித்துக் கொண்டு வருகிறேன். அவர் இளம் வயதினராக இருக்கும்போது, அவருடைய நண்பர் ஒருவரை நீந்தக் கற்றுக் கொடுப்பதற்கு நீந்து நீந்து என்று சொன்னாராம். அந்த நண்பர் மறுக்கவே பக்கத்திலுள்ள ஆற்றில் பிடித்து தள்ளிவிட்டாராம், பின்னால் ஆற்றில் நீந்தத் தெரியாமல் நண்பர் உயிருக்கு மன்றாடித் திணறித் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது அந்த நண்பரை, மாண்புமிகு காமராஜ் அவர்கள் கரைக்கு ஏற்றினாராம்.

கரையேற்றி காப்பாற்றிய இந்த நிகழ்ச்சியைப் படித்து நான் மெத்த சுவைத்தேன். அந்த முறையில் இன்று வேறு வேலைகள் எதுவும் தெரியாத இந்தப் பொற்கொல்லர்களை நட்டாற்றில் பிடித்து தள்ளியிருக்கிறீர்கள். அன்று ஆற்றில் தள்ளிவிட்டு பிறகு நண்பரை கரையேற்றியது போல் இவர்களையும் காப்பாற்றுகின்ற வகையில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து உதவி செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இத்தகைய சந்தர்ப்பத்தில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த வரவு செலவுத்திட்டத்தை ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதையும், வரவேற்கக் கூடிய பாக்கியம் நமக்கு கிட்டவில்லையே என்ற வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

உரை : 7 **நாள் : 7.3.1964**

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1964-65ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிற எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னதோடு, இந்த வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிக் காட்டப்படாததும், நிவாரணம் அளிக்கப்படாததுமான பல பிரச்சினைகளை இந்த மன்றத்தின் முன்னே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பஞ்சப்படியை உயர்த்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிற என்.ஜி.ஓ பிரச்சினையை அலட்சியப் படுத்தியது பற்றியும், மத்திய அரசு, மாநில அரசு ஊழியர் களுடைய ஊதியத்திலே இருக்கிற ஏற்றத்தாழ்வு குறித்தும், கல்விப் பிரச்சினையைப் பற்றி பக்கம் பக்கமாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆசிரியர் களுடைய நிலை உயர்வதற்கு உகந்த வழிகள் பற்றி ஒரு வரி கூட இந்த வரவு செலவுத் திட்டத்தின் சுட்டிக் காட்டப்படாததற்காக வருத்தம் தெரிவித்தும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித்தரவேண்டிய பிரச்சினை குறித்து இந்த மன்றத்திலே பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர் களுக்குத் கட்டித்தருவது போல ஆசிரியர்களுக்கும் கிராமங் களிலே வீடுகள் கட்டித்தரவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இந்த மன்றத்திலே எடுத்து வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த வரவு செலவு திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று எண்ணியோ என்னவோ சட்டமன்ற உறுப்பினர்களுடைய தங்கும்

இடத்திற்கு ரூ.40 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்கிற செய்தி காணப் படுகிறது. ரூ.40 லட்சம் செலவில் சட்டமன்ற உறுப்பினர் களுக்குத் தங்கும் விடுதி இவ்வளவு அவசரம், அவசியமாகக் கட்டப்பட வேண்டியதுதானா என்பது விவாதத்திற்கு உரிய பிரச்சினையாகும்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் திட்ட வட்டமாகக் கருத்துத் தெரிவித்தால் அதை வைத்துக் கொண்டு நாங்கள் புனராலோசனை செய்யத் தயாராய் இருக்கிறோம்.

கலைஞர் மு. கருணாநிதி : நான் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு வசதி தேவையில்லை என்று திட்டவட்டமாக அறிவிப்பேன் என்றும், அதன் மூலமாக என் மீது சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் ஒரு விரோத உணர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும் நினைத்து, தனக்கே உரிய சாதுரியமான பாணியில் அமைச்சர் அவர்கள் என்னை மடக்கப் பார்க்கிறார்கள் போலும் (சிரிப்பு). ரூ.40 லட்சம் என்கிற அதிகத் தொகை இதற்கு தேவையில்லை. பெரும்பான்மையான அளவுக்கு அந்தத் தொகையைக் குறைக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஏனென்றால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு இடத்தில், தஞ்சையிலுள்ள மருத்துவக் கல்லூரிக்கு 400 கட்டில்களைக் கொண்ட ஒரு மருத்துவமனையிலாகட்டும் வேறு பல மருத்துவமனைகளில் ஆகட்டும் நோயாளிகளுக்கான வசதிகளைக் கண்காணிக்கிற நேரத்தில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் கட்டிலில் படுப்பதற்கு வழி இல்லாமல் தாழ்வாரங்களிலே கீழே தள்ளப்பட்டிருக்கும் உருக்கமான காட்சியை நாம் காணத் தவறுவது இல்லை. அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் 400 கட்டில்கள் என்பதை 600 கட்டில்கள் ஆக்குவதற்கும், தஞ்சையில் மட்டும் அல்லாமல் அவதிக்குள்ளாயிருக்கிற பல்வேறு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வசதி செய்யவும், இந்தப் பணத்தில் பெரும் பகுதியை செலவழிக்கலாம். நானூறு கட்டில்களை விஸ்தரிப்பதற்கு ரூ.5 லட்சம் செலவழிக்கப் படுகிறது என்றால், இன்னும் 10 லட்சம் செலவழித்து இரு மடங்கு வசதிகளை நோயாளிகளுக்குச் செய்து கொடுக்கலாம்.

இப்பொழுதிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களின் வசதிகளை ஓர் அளவிற்குப் பெருக்கினால் போதும். ரூ.40 லட்சம் அதற்காகச் செலவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருத வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வரவு செலவுத் திட்டத்தில் விலைவாசி உயர்வுபற்றி அமைச்சர் அவர்கள் வழக்கமாகச் செய்கிற ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை இந்த வரவு செலவுத் திட்டத்திலும் கொடுத்திருக்கிறார்களே தவிர விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு தக்க வழிகள் உடனடி நடவடிக்கைகள், உறுதியான செயல்கள் என்ன என்பதைத் தெரிவிக்கவில்லை. ஆனால் ''விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது'' என்று கேட்ட நிலை போய், விலைவாசி ஏறியிருக்கிறது என்ற நிலையை உணர்ந்து அதைக் குறைக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ள வந்தது வேண்டுமானால் பாராட்டுவதற்குரியதாக இருக்கலாம். உணவுப் பொருள் களுடைய விலை இறங்கினால் மாத்திரம் போதாது. அதை விளைவிக்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான பொருளின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எதிர்கட்சியில் உள்ள நாங்கள் சொல்லியிருக்கிறோம். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தவிர விவசாய உற்பத்திச் செலவும் அதிகரித்திருக்கிறது. இவற்றிற்கேற்ப விவசாய விளை பொருள்களுக்கு நியாயமான, நிலையான குறைந்த பட்ச விலை கிட்டும் முறையில் நாம் ஒரு கொள்கையை வகுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட ஒரு கொள்கை இங்கிலாந்து நாட்டில் 47ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, விவசாயத் திட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு கொள்கை வரையறுக்கப்பட்டு இருப்பதை நான் கவனமூட்ட விரும்புகிறேன். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் நிலையான விலைகளை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்திற்கு அந்தச் சட்டத்தின் மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்டது. இரண்டாவதாக ஆண்டு தோறும் விவசாய நிலைமையை ஆராய்ந்து, அதற்கு ஏற்ப விவசாயப் பொருள்களின் விலை தீர்மானிக்கப்பட்டது. உற்பத்தி பெருகினால் விலைவாசி ஏற்றம் குறைந்துவிடும் என்கின்ற முழக்கம் நாட்டில் ஆளும் கட்சியினரால் செய்யப்பட்டு

வருகிறது. ஆனால் உற்பத்தி பெருக வேண்டும் என்கிற அந்தக் கொள்கை நல்ல முறையில் செயல்பெற்று இருக்கிறதா என்றால், இல்லை. உற்பத்தியைப் பெருக்குவதில் விவசாயிகளுக்கு மேலும் அக்கறையும் அவ்வாறு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கமும் ஏற்படுவதற்கு இங்கிலாந்து நாட்டு 1947ஆம் ஆண்டு சட்டத்திலே காணப்படுகிற சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு நிலத்தின் சொந்தக்காரரோ, சாகுபடியாளரோ நிலத்தை நன்றாகப் பராமரிக்கா விட்டாலும் சரியாக சாகுபடி செய்யாவிட்டாலும், அதனை அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர அதிகாரம் அளிக்கப் பட்டது. அந்த ஒரு ஆண்டில் சரியான அளவு உற்பத்தி ஏற்படாவிட்டால், நிலத்தின் உரிமையாளரிடம் நிலத்தை விலைக்கு வாங்கவோ, சாகுபடியாளரை விலக்கவோ, அரசாங்கம் அதிகாரம் பெற்றது. இந்தச் சட்டம் நல்ல முறையில் விவசாயம் நடைபெறுவதற்கான வழி வகைகளை வகுத்தது என்று இங்கிலாந்து வேளாண்மைத் துறையின் நிர்வாகம் சொல்லிக் கொண்டு இருக்கிறது. விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக சென்ற ஆண்டிலும், இந்த ஆண்டிலும் தஞ்சையிலும், திருச்சியில் சில வட்டாரங்களிலும் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதம் நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் தஞ்சையில் இருக்கிற திருச்சி வட்டாரத்தில் இருக்கிற பெருங்குடி மக்கள் சென்ற தடவை செலுத்த வேண்டிய கிஸ்தியைச் சேர்த்து இன்று கிஸ்தி செலுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. சென்ற தடவை 45 காசு, இந்தத் தடவை 45 காசு, இரண்டையும் சேர்த்து 90 காசு செலுத்த வேண்டிய அவதிக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அது கவனிக்கப்படவில்லை. இப்பொழுது கவனிக்கப்படாவிட்டாலும் அவர்களை ஊக்குவிப்பதற்கும், உற்சாகப்படுத்து வதற்கும், அடுத்த ஆண்டிலாவது வரி விலக்கு அளித்து விவசாயிகளை ஊக்கப்படுத்துகிற முயற்சிகளை அமைச்சர் அவை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த

வரவு செலவுத் திட்டம் புவனேசுவர மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஜனநாயக சோஷலிசக் கொள்கை அடிப்படையில் அமைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று இடங்களில் இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சோஷலிசத்தைப் பற்றி உத்தமர் காந்தியார் கூறிய வாக்கியத்தை மாத்திரம் நான் இங்கே ஞாபகப்படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். ''சோஷலிசம் தன்னைத்தானே மாற்றிக் கொள்ளும் முதலாவது ஆளுடன் ஆரம்பமாகிறது. அத்தகைய ஒருவர் இருந்தால் அந்த ஒன்றுடன் பக்கத்தில் பூஜ்யங்களைச் சேர்த்துக் கொண்டே போகலாம். ஒன்று பத்தாகவும், பத்து நூறாகவும் இவ்வாறு சேர்க்கும் ஒவ்வொரு பூஜ்யமும் முன் இருப்பதைப் பத்து மடங்காகப் பெருக்கிவிடும். ஆனால் ஆரம்பிப்பவரே பூஜ்யமாக இருந்தால், பிறகு பூஜ்யங்களை எவ்வளவுதான் சேர்த்தாலும், அதன் மதிப்பு பூஜ்யமாகவே இருக்கும். அந்தப் பூஜ்யங்களை எழுதுவதற்குச் செலவான காகிதமும் நேரமும் வீணாகும்.

ஆரம்பமே பூஜ்யமாக இருந்தால் அடுத்தடுத்து, போடப்படுகிற பூஜ்யங்களுக்கு மதிப்பில்லை என்று காந்தியார் கூறியிருக்கிறார்கள். சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம், புவனேசுவர சோஷலிசம் என்ற எல்லாம் பேசுகிற காங்கிரஸ் ஆட்சியாளர்கள் காங்கிரஸ் கட்சியிலுள்ள சோஷலிசக் கொள்கைகளை வைத்துக் கொண்டு அந்தக் கொள்கைப் படியாவது நடத்திச் செல்கிறார்களா? உண்மையிலேயே சோஷலிசக் கொள்கைக்கு காங்கிஸ் கட்சி மதிப்பு அளித்திருக்கிறதா? ''சோஷலிசம்'' என்கிற தித்திப்பான வார்த்தையை மக்களிடத்திலே அடிக்கடி பேசி, தேர்தல் அறுவடையை ஏற்படுத்திக் கொள்வதற்காக அதை ஒரு தந்திரமாகக் கையாளுகிறார்களா என்பதை நாம் பார்க்க வேண்டும். உண்மையிலேயே சோஷலிசத்திலே நம்பிக்கை இருந்தால் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி பஸ் முதலாளி களையும் ஆலை அரசர்களையும் நம்பி இருக்க வேண்டிய தில்லை, பஸ் முதலாளிகளும், ஐஸ்வரியச் சீமான்களும் இல்லாவிட்டால் தேர்தல் காலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக்கு இடம் இல்லாமல் போய்விடும்

என்பதற்காக, ஒரு புறத்திலே பஸ் முதலாளிகளையும், ஆலை அரசர்களையும் வளர்த்து, அவர்களுக்கு அதிகமான லாபத்தை உண்டாக்கி, அவர்களையெல்லாம் கொழுக்க வைத்து அவர்கள் மூலமாகக் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு இன்றைக்கு சோஷலிசம் பேசுகிறார்கள். காந்தியாரின் வார்த்தையின்படி இந்த சோஷலிசம் ஒன்று என்று எண்ணிலிருந்து ஆரம்பிக்கப் படாமல், பூஜ்யத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சோஷலிசமே தவிர, வேறு இல்லை என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அப்படிப்பட்ட முரண்பட்ட கொள்கைக்குத் தான் தமிழ்நாட்டு மக்கள் அண்மைக்காலத்தில் தங்களுடைய மேலான தீர்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தீர்ப்பு திருச்செங்கோடடில் வழங்கப்பட்டது. பிறகு திருவண்ணா மலையில் தொடர்ந்தது. இப்பொழுது சென்னை மாநகராட்சித் தேர்தலிலே வழங்கப்பட்டிருக்கிறது. தோல்வி அடைந்த காங்கிரஸ் நண்பர்கள் அந்த நல்ல தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, கேலி பேசும் அளவுக்கு முற்பட்டிருக்கிறார்கள். ''அது கொள்கைக்குக் கிடைத்த வெற்றி அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடைத்த வெற்றி அல்ல, ஏதோ சில சினிமா நடிகர்களுக்காகக் கிடைத்த வெற்றி என்றும் சினிமா நடிகர்கள் தேர்தல் பிரசாரம் செய்யலாமா'' என்றும் சட்டமன்றத்திலே கேள்விகள் எழுப்பப்பட்டன என்பதை நாம் நன்றாக அறிவோம். சினிமா நடிகர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டால் அது தங்களுடைய உள்ளத்தில் பெரிய எரிச்சலை ஏற்படுத்தும் என்று கருதுகிறார்களே அவர்கள் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி தேர்தலில், கென்னடி வெற்றி பெற்றதற்குப் பாடுபட்டது சினிமா நடிகர்கள் என்பதை மறந்து விட்டார்களா? இந்தியத் துணைக்கண்டத்தில் கிருஷ்ண மேனன் பம்பாயிலே தேர்தலில் போட்டியிட்ட நேரத்திலே, கிருஷ்ணமேனனின் வெற்றிக்குப் பாடுபட்டது. வட பாகத்தில் இருக்கிற பிரபல சினிமா நடிகர்கள் என்பதை ஏனோ மறந்து விட்டார்கள். சினிமா என்றால் ஏதோ ஒரு தீண்டத்தகாத ஒன்று என்றும் சினிமா என்றாலே நாட்டிலே இருக்கக்கூடாத ஒரு கலை என்றும் எண்ணக்கூடிய எண்ணம் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஒரு சில அமைச்சர்களுக்கு இல்லா

விட்டாலும், காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு இருப்பது ஏனோ எனக்குப் புரியவில்லை.

அதே காங்கிரஸ் கட்சி பிலிம் சேம்பர் ஆப் காமர்ஸ் இடமிருந்து தேர்தலுக்கு 4 நாட்களுக்கு முன்பு 18ம் தேதி அல்லது 19ம் தேதி என்று கருதுகிறேன், சென்னை சினிமா வர்த்தக சங்கத்தினிடமிருந்து ரூ. 10,000 தமிழ்நாடு காங்கிரஸ் நிதிக்காகப் பெற்று இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அவர்களே சினிமா நடிகர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடலாமா என்ற வினாக்களை எழுப்பும் நேரத்தில் எனக்கு சிரிப்புதான் வருகிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பிலிம் சேம்பரிலிருந்து ரூ.10 ஆயிரத்தைத் தேர்தல் நிதிக்காகப் பெற்றுக் கொண்டு அவர்களே இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து அது ஒரு சினிமா கட்சி என்று கூறுகிறார்களே அதுதான் பெரிய வேடிக்கையாக இருக்கிறது. ஒரு அம்மையார் ஒரு காலத்தில் கலை உலகத்தில் புகழ் விளக்காக விளங்கியவர்கள் இன்றைக்கும் மறையாத புகழோடு இருப்பவர்கள் தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதும் போது கூறுகிறார்கள். ''அந்தக் காலத்தில் காங்கிரஸ் மேடையில் நான் பாடாவிட்டால் கூட்டம் சேராது! திருவாளர் சத்தியமூர்த்தி நான் எங்கே இருந்தாலும் என்னைத் தேடி அழைத்து வந்து விடுவார். நான் தேசிய கீதம் பாடியதும்தான் கூட்டம் ஆரம்பிக்கும். என்னுடைய கணவர் இறந்தபிறகு நான் கூட்டங்களில் கலந்து கொள்ளுவதை நிறுத்திவிட்டேன். பின்பு தமிழ்நாட்டுக்கு மகாத்மா காந்தியடிகள் வந்த காலத்தில் என்னை அழைத்து 'கணவயன் இறந்தால் கணவனைக் காலம் முழுதும் நினைத்துக் கொண்டு வருந்தப் போகிறாயா, கூட்டங்களில் மறுபடியும் கலந்து கொள்ள வேண்டும்' என்று எனக்கு ஆணையிட்டார்கள்'' என்று குறிப்பிடுகிறார்கள்! கலை உலகத்தில் ஒளியாக இருந்த கொடுமுடி கோகிலம், சுந்தராம்பாள் அம்மையார் அவர்கள்தான் இவ்வாறு தன் வாழ்க்கைச் சரித்திரத்தில் எழுதியிருக்கிறார். காங்கிரஸ் கட்சி சினிமாவை சினிமாக்காரர்களை ஒதுக்கிவிட்டது போலும், அவர்களுக்கும் தங்களுக்கும் ஒட்டுறவு வேண்டாம் என்பதைப் போலவும்

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் சினிமா நடிகர்களோடு இணைந்து வாழ்ந்து கொண்டு இருப்பதாகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

மாநகராட்சித் தேர்தலில் தோல்வியை அணைத்துக் கொண்டவர்கள், எங்களை சினிமா நடிகர்களை இணைத்துக் கொண்டார்கள் என்று சொல்லுவது மட்டுமல்லாமல், சின்னசாமி படத்தை வெளியிட்டீர்கள், அதனால்தான் நீங்கள் வெற்றி பெற்றீர்கள் என்றும் சொல்கிறார்கள். சின்னச்சாமி படத்தைப் போடுவது முறையா என்று கேட்கிறார்கள். நண்பர் அன்பில் தர்மலிங்கம் கூடக் கேட்டார்கள். இறந்தவருக்கு ஒரு மரியாதை செலுத்துவது கூட தவறா என்று. உடனடியாக முதல் அமைச்சர் அவர்கள் எழுந்து 'மரியாதை செலுத்தலாம், ஆனால் படத்தை வெளியிட்டு ஒட்டிக் கொண்டது பண்பல்ல' என்று குறிப்பிட்டார்கள். சின்னச்சாமி படத்தை வெளியிட்டது பண்பல்ல. ஆனால் திருப்பதி வெங்கடாசலபதி படத்தைக் காளை மாட்டுச் சின்னத்தோடு இணைத்துப் போட்டு வெளியிட்டது பண்பா என்று நான் முதல் அமைச்சர் அவர்களை மிக்க மரியாதையோடு கேட்கிறேன். திருப்பதி வெங்கடாசலபதிக்குப் பக்கத்தில் காளை மாட்டைத் தேர்தலில் போடுவது மதப் பிரசாரத்தின் மூலமாகக் கடவுளை வைத்து ஓட்டுப் பெற்று வெற்றி அடைவது என்பதற்கு சரியாகும் என்ற காரணத்தினால் அது தேர்தல் சட்டப்படி தவறு என்பது என் கவனம். திருப்பதி வெங்கடாசலபதி படத்தைத் தேர்தல் சின்னத்தோடு காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஒரு வட்டத்தில் அல்ல பல வட்டங்களில் வழங்கினார்கள். அப்படி அவர்கள் பெரியசாமி படத்தை போடலாம் என்றால் நாங்கள் இந்த சின்னசாமி படத்தைப் போடுவது தவறா என்று கேட்டால் அதற்கு அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்ற பிறகு 17 ரூபாய்க்கு ஒரு காளை மாட்டை வாங்கி அதைத் துரத்தி அடித்துக் கொன்று போட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். கனம் அமைச்சர் அவர்களும் வெகு அவசர அவசரமாக எழுந்து ''கறியை தின்றுவிட்டார்களா'' என்று கேட்டார்கள்.

எனக்குக் கூட ஒரு சந்தேகம், அமைச்சர் கேட்ட அவசரத்தைப் பார்த்தால் ''கறி மிச்சம் இருக்கிறதா!'' என்று கேட்பதுபோல் இருந்தது. இந்தச் செய்தி பற்றி ஒரு பத்திரிகையில் பார்த்தேன், ''லெட்டர்ஸ் டு தி எடிட்டர்'' தலைப்பில் வந்தது ராயப்பேட்டை பக்கத்தில் 17 ரூபாய்க்கு ஒரு மாட்டை வாங்கி விரட்டினார்கள் என்று. அதை அம்மையார் அவர்கள் நுங்கம்பாக்கத்தில் என்று சொன்னார்கள். பதினேழு ரூபாய்க்குக் காளை மாடு சென்னையில் வாங்குவது என்பது எவ்வளவு வேடிக்கையானது.

நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அவ்வளவு மலிவாக மாடு கிடைக்கிறது என்றால் நான் கூடப் பத்து பதினைந்து மாடுகளை வாங்கி வீட்டிலே வளர்க்கத் தயாராக இருக்கிறேன் என்பதுதான். ஆனால் 17 ரூபாய்க்குக் காளை மாட்டை வாங்கி கொன்றார்கள் என்று கூறிய நேரத்திலே எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. காங்கிரசைத் தீவிரமாக ஆதரித்து வருகிற பெரியார் ராமசாமி சமீபத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்கு மாட்டு இறைச்சி சாப்பிட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஒரு வேளை காங்கிரஸ் காரர்களும் திராவிடக் கழக நண்பர்களும் பெரியார் அவர்களுடைய ஆணையை நிறைவேற்றுவதற்காகக் காளை மாட்டை அடித்திருக்கலாம் என்ற சந்தேகம் தோன்றியது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் அப்படிப்பட்ட கொடூரமான காரியங்களில் ஈடுபட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. ஆகவே சட்ட மன்றத்திலே பொறுப்புள்ள அம்மையார் அவர்கள் ஆதாரம் இல்லாததைப் பற்றி அப்படிப் பேசியதற்கு நான் வருந்துகிறேன்.

இன்றைய தினம், காங்கிரஸுக்குள்ளே இருக்கிற பொறுப்பான அமைச்சர்களைக் குறைகூற மாட்டேன். ஆனால் அவர்கள் அறிந்தோ, அறியாமலோ காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு பயங்கரமான சக்தி ஊடுருவிக் கொண்டு வருகிறது. அந்த சக்தி காங்கிரஸோடு கூட்டணி அமைத்துக் கொண்டு பரவுகிறது. அண்மையில் கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் ராமநாதபுரத்தில் பேசியதை ஒரு பத்திரிகையிலே படித்தேன். அவர்கள் அங்கே தெளிவாகக்

குறிப்பிட்டிருந்தது இதுதான். ''சீன ஆக்கிர மிப்பின் பயனாக இந்தியப் பொதுவுடைமையாரின் உண்மை வடிவம்; அவர்களின் போக்கு எல்லாம் நமக்கு நன்கு தெரிந்து விட்டதே; இந்நிலையில் அவர்களுக்கு ஆதரவு அளிப்பது மகாபாபம்; பாபம் மட்டுமல்ல; அது தெரிந்து செய்யும் பெருங்குற்றமாகும்; வெட்கக்கேடுமாகும்.'' இந்த வகையிலே ராமநாதபுரம் கூட்டத்திலே பிப்ரவரி 11ம் தேதி மதிப்பிற்குரிய போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அணி சேர்ந்திருக்கும் கூட்டணிக்காரர்கள் தங்களை முற்போக்கு சக்தி என்று கூறிக் கொண்டு நாங்கள் இணைந்திருந்து 3 பேரும் ஒன்றாகயிருந்து பிற்போக்கு சக்திகளை முறியடித்தே தீருவோம் என்கின்ற இந்த திரை மறைவு நாடகத்தின் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை கொலை வெறிக்கு ஆளாக்குகிற தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். தேர்தல் முடிந்தபிறகும் அதே பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஆயுள் கைதி என்றால் பொதுவாக 20 வருஷ காலம் தண்டிக்கப்பட்டு அவர் குறைந்த காலத்தில் விடுவிக்கப் பட்டால் மிச்சமுள்ள காலம் வரை போலீசார் அவர்களை கண்காணிப்பார்கள். ஆனால் அரசியலில் ஈடுபடும் ஆயுள் கைதி இந்த ஆட்சியில் இப்படிப்பட்ட கண்காணிப்புக்கு உட்படுவது இல்லை போலும். அப்படிப்பட்ட ஆயுள் கைதிக்கு காங்கிரஸ் அரசு ஆதரவு அளிப்பதால் அந்த கைதிக்கு இப்படிப்பட்ட கண்காணிப்பு இல்லையா என்று நாம் அறியோம். இப்படிப் பட்ட சூழ்நிலையை வளரவிட்டால் காங்கிரஸ் அரசியலில் கடைசியில் ஆயுள் கைதிகள்தான் மிச்சப்படுவார்கள், வேறு யாரும் மிச்சப்படமாட்டார்கள் என்பதை மிக்க பணிவோடு அரசியல் நாகரிகத்தைக் கருதி எடுத்து தெரிவிக்கிறேன். அந்த ஆயுள் கைதி, ''தூக்குமேடை ஏறினாலும் சரி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்தே தீருவேன்'' என்று ஒரு கூட்டத்திலே பேசியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியினுடைய பிரதான ஏட்டில் கொட்டை எழுத்தில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கட்சி சாதாரண எதிர்க்கட்சி. அதை ஒழிப்பதால் அவர் தூக்கு மேடை ஏறவேண்டும் என்றால், அதிலுள்ள உள்

நோக்கம் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள ஒரு சில குறிப்பிட்ட தலைவர்களை ஒழிப்பது என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கும் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ''நாங்கள் யாரோடு சேர்ந்திருக்கிறோம் தெரியுமா? ஆளுங்கட்சி எங்களுக்கு அரவணைப்பு. ஆகவே எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது'' என்ற ரீதியிலே அவர் பேசுகிறார்.

இன்னொரு நண்பர் பத்திரிகையிலே எழுதுகிறார். சொல்ல நாவு கூசுகிறது. இங்கே அமர்ந்திருக்கிற மதிப்பிற்குரிய அமைச்சர்களை நான் கேட்கிறேன். இந்த மாமன்றத்தில் மாட்டப்பட்டிருக்கும் படத்தில் உள்ளவரும் நமது மரியாதைக்கு உரியவரும் ஆன திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களைக் குறித்து, தமிழ்த் தேசியக் கட்சி நண்பர் ஒருவர், ''ஆச்சாரியார் அவர்களே! உம்முடைய தலையைவிட காமராஜருடைய செருப்புக்கு விலை அதிகம்'' என்று ஒரு பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார். அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு நான் தங்கள் மூலமாகச் சொல்கிறேன், அப்படிப்பட்டவர்களை உங்கள் கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; ஆச்சாரியார் என்கிற அறிவாளியினுடைய படம் இந்த மாமன்றத்தில் அலங்கரிக்கத் தேவை இல்லை; அதைவிட உயர்ந்தது என்று சொல்கிறோரே ஒன்று,அதை மாட்டுவது பற்றி சிந்திப்போம். ஆச்சாரியாருடைய படம் இங்கே இருக்க லாயக்கா? ஆச்சாரியாரின் தலையினுடைய விலையை எதோடு மதிப்பிடுகிறார்? இதையெல்லாம் நீங்கள் வளர்த்துக்கொண்டு போனால், இந்த அமைச்சரவையின் ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்று, காங்கிரஸ் கட்சியைத் தங்களோடு இணைத்துக் கொண்டு பேசுமானால், தமிழ்நாட்டின் எதிர்காலம் என்ன ஆகும்? தமிழ் நாட்டின் எதிர்காலம் எவ்வளவு இருளடைந்து விடும்? அரசியல் நாகரிகம் எந்த அளவுக்குக் கெட்டுப் போய் விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் - மதிப்பிற்குரிய நண்பர், மரியாதைக்கு உரியவர் - நாகப்பட்டினத்திலே

பேசுகையில், ''அண்ணாதுரை, கருணாநிதி என்ற காலிப் பயல்கள்'' என்று குறிப்பிட்டார். உடனே பெரும் குழப்பம் ஏற்பட்டது. கூட்டம் நடந்த மறுநாள், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த காங்கிரஸ் வேட்பாளர் திராவிட முன்னேற்றக்கழக நண்பர்களைச் சந்தித்து, அந்த நிகழ்ச்சிக்காக வருத்தம் தெரிவித்தார்கள். ''அப்படிப் பேசிய பேச்சுக்கு நீங்கள் யாரும் வருந்தக் கூடாது'' என்று அந்தப் பேச்சுக்காக வருத்தம் தெரிவித்திருக்கிறார். இந்த நிலைமைக்கு அரசியல் நாகரிகம் தேர்தலிலே உச்சகட்டத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. இது எங்கே போய் நிற்குமோ!

நேற்றைய தினம் கனம் உறுப்பினர் திரு. ராஜாராம் அவர்கள் எதற்கோ சொன்னார் பஸ்மாசுரன் கதையை. பஸ்மாசுரன் கதை வேறு யாருக்குப் பொருந்தினாலும் பொருந்தாவிட்டாலும், இன்றைய தினம் காங்கிரஸ் தலைவர்களுக்கு மிகமிக நன்றாகப் பொருந்தும். அவர்கள்தான் இப்படிப்பட்ட நிலைமையை வளர்த்துவிட்டிருக்கிறார்கள். இப்படி வளர்க்கப்பட்ட காரணத்தால்தான் 27.2.1964 அன்று, இதே சென்னை மாநகரத்தில் மாதவப் பெருமாள் கோயில் தெருவில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். ''இந்த நாட்டினுடைய அமைச்சர்கள், அதிலும் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சாதகமாக இருப்பதாகத் தெரிகிறது. அவர் அப்படி சாதகமாக இருப்பாரேயானால், நாம் கொடுக்கின்ற முதல் அடி - நான் 'அடி' என்று கௌரவமாகக் குறிப்பிடுகிறேன் - முதல் அமைச்சர் பக்தவத்சலம் முதுகிலே விழ வேண்டும்'' என்று பேசியிருக்கிறார். நான் குறிப்பிட்டதற்குக் காரணம், நீங்கள் வளர்த்துவிடுகிற அலாவுதீன் பூதத்திற்கு வேலை கொடுக்காவிட்டால், அது ஆணையிட்டவரையே விழுங்கிவிடும் என்பதை ஞாபகப் படுத்துவதற்காகத்தான், அதைப்போல, வரம் கொடுத்த பரமசிவன் தலையிலேயே கை வைத்த பஸ்மாசுரனைப் போல, நண்பர் நினைவுபடுத்திய கதையைப்போல, அமைச்சருடைய தலையிலேயே கைவைக்க வந்திருக்கிறார்கள். அமைச்சர் களுக்கே இந்தக் கதியானால், எங்களுடைய கதி என்ன?

எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் என்ன என்ன பேசினார்கள் என்று சுருக்கெழுத்தாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டங்களுக்கு வந்து அவர்களுடைய பேச்சுக்களைப் பதிவு செய்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெறுகிற கூட்டங்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவது இல்லை. இனி மேலாவது அமைச்சர்கள் அருள்கூர்ந்து அப்படிப்பட்ட பேச்சுக்களை குறிப்பு எடுப்பதற்கு அனுப்பி வைப்பார்களானால், நிலைமையை நன்றாகப் புரிந்து கொள்ள வசதி ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். (மணி அடிக்கப் பட்டது.)

நான் பஸ்மாசுரன் கதையைப்பற்றிக் குறிப்பிட்டேன். இந்தி என்கிற இன்னொரு பகாசுர சக்தி தமிழகத்தை உருக்குலைப்பதையும், அந்தப் பகாசுரச் சக்தியை அழித்து ஒழிப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படையாக அறப் போர்க் கோலம் கொண்டிருந்தாலும், தமிழகத்திலே இருக்கும் புலவர் பெருமக்கள், சான்றோர்கள், நல்லோர்கள் எல்லோரும், இந்தியினுடைய ஆதிக்கம் தமிழகத்திலே பரவுமானால் பேராபத்து தமிழகத்திற்கு விளையும், தமிழ் நாட்டுக் குடிமக்கள் இரண்டாந்தர மக்களாகி விடுவார்கள் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்று இந்தியாவில் மத்திய அரசு உத்தியோகங்களுக்கான யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வு எழுதுபவர்கள் எந்த மொழியைப் பயன்படுத்துவது என்பதை ஆலோசனை செய்ய நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செல்கிற இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, முதல் அமைச்சர் அவர்கள் முன் வைப்பதற்கு நான் விரும்புகிறேன். மத்திய அரசினுடைய உத்தியோகங்களுக்கான தேர்வு எழுதுவதற்கு தமிழ் போன்ற பிரதேச மொழிகள் பயன்படா என்று அமைச்சர் திரு. நந்தா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். தமிழ் போன்ற பிரதேச மொழிகளை விட, இன்றைய தினம் ஒர பிரதேச மொழியின் தகுதியிலே இருக்கிற இந்தி எந்த அளவுக்கு உயர்ந்துவிட்டது என்று எனக்குப் புரியவில்லை.

இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அங்கே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செல்ல இருக்கிறார்கள். அங்கே செல்ல இருக்கிற முதல் அமைச்சர் அவர்களை நாங்கள் வேண்டி விரும்பி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாத்திரம் அல்ல. எதிர்க்கட்சி யினுடைய சார்பாக, தமிழ்நாட்டு மக்களுடைய சார்பாக, இந்தி பேசாத மாநிலங்களினுடைய சார்பாக, பணிவோடு கேட்டுக் கொள்கிறோம். தயவு செய்து அங்கே போய் தைரியமாக நிமிர்ந்து உட்கார்ந்து அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்காகப் போராட வேண்டும். வங்கத்துச் சிங்கம் பி.ஸி.ராயை அவர் தம்முடைய மனதிலே பேசினால் காங்கிரஸ்காரர்கள் வருத்தப்படுவார்களோ என்று கருதக்கூடாது; அவர்களுக்குப் பக்கபலமாக இந்த ஒரு விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்பதை அவர் மறந்து விடக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் மாத்திரமல்ல, காங்கிரசிலே கூட இந்தக் கருத்தை வெளியிலே சொல்லப் பயந்துகொண்டு பலபேர் அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள். கனம் சபாநாயகர் மூலமாக, கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அங்கு செல்வதற்கு முன்பு, என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள், இந்த மன்றத்தைக் கூட்டி, இந்த மன்ற அங்கத்தினர்களுடைய கருத்தை அறிந்து கொள்வதற்காக ஒரு விவாதத்தைத் தொடங்கி அதன் மூலமாக அங்கத்தினர்களுடைய கருத்தைப் பெற்று, முதல் அமைச்சர் அவர்கள் டில்லி மாநகரத்திற்குச் சென்று, அங்கே சேரன் செங்குட்டுவனைப் போல, நெடுஞ்செழிய பாண்டியனைப் போல, கரிகால் பெருவளத்தானைப் போல, நிமிர்ந்து உட்கார்ந்து, தமிழ் நாட்டுக்காக, தம்முடைய நாட்டுக்காகப் பணி புரிகிறோம் என்கிற வீரத்தோடு, அவர்கள் சென்று வர வேண்டும். ''சென்று வருக, வென்று வருக'' என்று அவர்களுக்கு நான் வாழ்த்து கூறுகிறேன். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதற்குச் செல்கிற நேரத்தில் இந்த வார்த்தைகளை உபயோகப் படுத்தியதாகக் கூறி சதிக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்தாலும் கூட, ''சென்று வருக, வென்று வருக'' என்று நான் இப்பொழுது சொல்வது தமிழ்நாட்டைக் காப்பாற்றுவதற்காக, தமிழைக் காப்பாற்றுவதற்காக என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

உரை : 8 நாள் : 4.3.1966

கலைஞர் மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, 1966–67ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்து அதற்காக நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களால் 'இது வரி இல்லாத நிதிநிலை அறிக்கை' என்று தொடக்கத்திலே புகழப்பட்டு, அவர்களுடைய உரையின் முடிவில் அவரவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டு, அவரவர்களுடைய தொகுதியிலே உள்ள குறைகளைப் பற்றி எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே போடப் பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களை எல்லாம் எடுத்துக் காட்டி தங்களது உரைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். வரி இல்லாத வரவுசெலவுத் திட்டம் என்று மகிழ்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை. காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரி இல்லாத வரவுசெலவுத் திட்ட அறிக்கையிலே வரி போட்டால் அது பெரும் பிரச்சினையாகும் என எண்ணி' மிகத் தந்திரமாக, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே போட வேண்டிய வரியையெல்லாம் போட்டு, இந்த மன்றத்தினுடைய பெரும்பான்மையான ஒப்புதலையும் பெற்று அந்த வரிகள் இன்றைய தினம் நடமாடிக் கொண்டிருக்கிற நேரத்தில் வரி இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக ஒரு வாதத்தை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிக் கொண்டிருப்பது உள்ளபடியே விந்தையாக இருக்கிறது,

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேலும் வரி இல்லை என்பதுதான் வாதம்.

கலைஞர் மு. கருணாநிதி : மேலும் வரி இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். தோட்டா இல்லாத துப்பாக்கி என்று கூறுவதைப் போல்தான். 'மேலும் வரி இல்லை' என்று கூறுவது இருக்கிறது. தோட்டா இல்லாத துப்பாக்கி என்றால் தோட்டாவே போடப்படாத துப்பாக்கி என்று பொருளும் அல்ல. இருந்த தோட்டாக்கள் ஏழை எளியவர்கள் என்ற புள்ளிமான்களை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்டு இப்போது தோட்டா இல்லாத காலித் துப்பாக்கியாகக் காட்டப்படுகிறது. மேலும் வரி இல்லை என்று கூறப்படுகிறது. இரண்டு திங்களுக்கு முன்பாக ஏறத்தாழ எட்டு கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டு விட்டு மேலும் வரி இல்லை' என்று தோட்டா இல்லாத துப்பாக்கி காட்டப்படுகிறது அதே சமயத்தில், வடக்கே மத்திய சர்க்காரில் பீரங்கிகள் வெடிக்கின்றன. பருத்தித் துணியின் மீது வரி, புகையிலை வரி,டீசல் எண்ணெய்மீது வரி, சர்க்கரை வரி என்ற இன்னோரன்ன பல வரிகள் நாட்டு மக்களுடைய தலையிலே சுமத்தி வைக்கப்படுகிற நேரத்தில், இந்த வரவு செலவுத் திட்டத்திலே வரி இல்லையென்று கூறி மகிழ்ச்சி அடைவதற்கு எந்த விதமான முகாந்திரமும் கிடையாது. சென்னை அரசாங்கத்தினுடைய வருவாய் இந்த ஆண்டு ஏறத்தாழ 24 கோடி ரூபாய் அதிகமாக ஆகியிருக்கிறது.

இதை வரவு செலவுத்திட்டம் நமக்குக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்த 24 கோடி ரூபாய் வருமானம் சோஷலிசம் செயல்பட்ட காரணத்தால் ஏற்பட்டதா? அல்லது தனியார் வசம் இருந்த தொழிற்சாலைகள் எல்லாம் பொதுத்துறைக்கு மாற்றப்பட்டு, அந்த ஜனநாயக சோஷலிச எழுச்சியின் காரணமாகக் கிடைத்த வருமானமா? பெரும் பஸ் முதலாளி களுடைய தொழில்கள் எல்லாம் தேசீய மயமாக்கப்பட்டு அதன் காரணமாக சோஷலிச ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள வருமானமா? என்றால் இல்லை. எட்டு கோடி ரூபாய்க்கு முன்பே கூடுதலாக வரி போட்டதன் காரணமாக – அந்த வரியில் நிலவரி உயர்வு, நீர் வரி உயர்வு அடங்கும் - அவற்றை ரத்து செய்யவேண்டுமென்று மன்றத்திலுள்ள

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எடுத்துக் காட்டி யிருப்பதையும், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூட குடந்தையில் பேசிய கூட்டத்தில் விவசாயிகளுக்கு வரிச் சலுகை செய்யப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டியிருப்பதையும் நான் இந்த அமைச்சரவைக்கு கவனமூட்ட விரும்புகிறேன். இந்த எட்டு கோடி ரூபாய் அல்லாமல் மத்திய அரசிடமிருந்து ஒதுக்கப் பட்டிருக்கிற 7 கோடி ரூபாயும், விற்பனை வரி மூலம் மேலும் கிடைக்கிற ஆறு கோடியும், மோட்டார் வாகன வரி மூலம் மேலும் கிடைக்கிற ஒரு கோடியும் இப்படி தொடர்ந்து பல வரிகளைச் சுமக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆளும் கட்சி அங்கத்தினர்கள், வரி இல்லை என்ற காரணத்தினால் எதிர்கட்சியில் உள்ளவர்கள் எல்லாம் ஏமாந்து விட்டார்கள், வரி இருந்தால் என்னென்னவோ எல்லாம் பேசியிருப்பார்கள், ஆகவே அவர்களுக்கு இதனால் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

வரி போட்டாலும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வரவேற்பார்கள், வாழ்த்துவார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தை வரி போடாவிட்டாலும் வரி போடாத பட்ஜெட் ஆகவே வாழ்த்துகிறோம் என்று குறிப்பிடுவார்கள். ஆகவே அதைப் பொறுத்து இதில் ஏமாற்றம் எதுவும் இல்லை. எங்களுக்குள்ள ஏமாற்றம் எல்லாம் போடப்பட்டிருக்கிற இவ்வளவு வரிகளில் ஒன்றிரண்டு வரிகளையாவது விலக்கியிருக்கிறோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தாங்கி இந்த நிதிநிலை அறிக்கை வரும் என்று எதிர் பார்த்தோம். உண்மையா அல்லது உண்மை அல்லவா எனக்குத் தெரியாது; ஒரு ஒட்டகத்தின் மீது, மேலும் மேலும் ஏற்றப்படுகிற பளுவைத் தாங்கிக் கொண்டு நடக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால் ஒன்றிரண்டு சாமான்களை கீழே இறக்கிவிட்டு அதை நடக்கச் செய்வதற்கு முயற்சி செய்வார்கள். அந்த முயற்சி கூட இந்த வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறாதது உள்ளபடியே வருந்தத்தக்கது. (மாண்புமிகு திரு எம். பக்தவத்சலம் : நாங்கள் ஏமாற்ற மாட்டோம்) ஏமாற்ற மாட்டோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடு கிறார்கள். ஒட்டகம் கூட அந்தப் பளு

குறைக்கப்படுகிற காரணத்தினால் நடக்கிறது. அது ஏமாற்றப்படுகிறதா இல்லையா என்ற அடிப்படையில் ஆராயாவிட்டாலும் அதை எடுத்தால் அது நடக்கும் என்ற சிந்தனை காரணமாக அது எடுக்கப்படுகிறது. ஆனால் இந்த மாநிலத்தில் போடப் பட்டிருக்கிற நில வரி உயர்வு, நீர் வரி உயர்வு கொடுமையானது, அநியாயமானது, விவசாயிகளை வாட்டக்கூடியது. உழவர்களின் வாழ்வில் மண்ணை அள்ளிப் போடக் கூடியது, என்று எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து மாத்திரமல்ல. ஆளும் எதிர்க்கட்சித் தரப்பிலுள்ள முற்போக்கானவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன பிறகும் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்றால் முதல் அமைச்சர் அவர்களுடைய பிடிவாத குணத்தைப் பாராட்டலாமே தவிர இரக்க குணம் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்க்க வேண்டிய அவசியத்திற்கு இன்றையதினம் ஆளாக்கி விடப்பட்டிருக்கிறோம். பொதுவாக இந்த வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி எதிர்கட்சிக்காரர்கள் என்ன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள் என்பதற்கு முன்பு, ஆளும் கட்சியில் உள்ள மதிப்பிற்குரிய டாக்டர் நடராஜன் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றில் அவர்கள் கூறியிருக்கிற அபிப்பிராயத்தை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த ஏட்டில் 'டாக்டர் பி. நடராஜன்' என்ற அளவில்தான் அவர் பெயர் பொறிக்கப்பட்டு அந்தக் கட்டுரை வந்திருக்கிறது. 'எம்.எல்.ஏ' என்ற தொடர்பு கூட அதில் சேர்க்கப்படவில்லை. ஒரு வேளை ஆளும் கட்சி எம்.எல்.ஏ ஆக இருந்து கொண்டு அதைச் சொல்வது சரியா என்ற எண்ணத்திலேயோ என்னவோ 'டாக்டர் பி.நடராஜன்' என்ற பெயரில் அந்தக் கட்டுரை வந்திருக்கிறது.

பேரவைத் தலைவர் : He is so well known.

கலைஞர் மு. கருணாநிதி : ''நாட்டில் மிக முக்கியப் பிரச்சினையான உணவுப் பிரச்சினைக்கு இந்த பட்ஜெட் முக்கியத்துவம் தரவில்லை'' என்று எழுதுகிறார். மேலும் அவர் குறிப்பிடும்போது ''நமது பொருளாதாரத்தின் நெருக்கடியான கட்டமான இந்த நேரத்தில் முதல் முக்கியத்துவம் உணவு உற்பத்தி அதிகப்படுத்தலுக்குத் தர

வேண்டும். அது உணவு தான்யங்களுக்கு மட்டுமல்லாது மீன், கோழி, காய்கறிகள் போன்றவற்றுக்கும் தரப்படுதல் வேண்டும். இந்தக் கோணத்தி லிருந்து தற்போதைய நிதி ஒதுக்கீட்டை நோக்கும்போது, விவசாயம் ஒரு கோடி ரூபாய் வருவாயுள்ள நிதி நிலை அறிக்கையில் இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 9 கோடி ரூபாய்தான். 5½ சதவிகிதம்தான். மூலதனச் செலவின் கீழ்ப் பார்க்கப்பட வேண்டிய முக்கியமான இனம் நீர்ப்பாசனம். ஆனால் அதில் கூட நிதி ஒதுக்கீடு குறைவுதான். விவசாயச் சீர்திருத்தம், விவசாய ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான மூலதனச் செலவும் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக எல்லா சக்திகளையும் ஆதாரங்களையும் அதன்பால் திருப்ப வேண்டிய ஒரு கால கட்டத்தில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் குறைவாகச் செலுத்தப்பட்டுள்ளது. காலத்தையும் தேவையையும் பரிசீலிக்கும்போது பட்ஜெட் போட்ட நிலை திருப்திகரமாக இல்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பலர் பேசுகிறார்கள். நாட்டில் விலைவாசி ஏறியிருக்கிறது. நாட்டு மக்கள் வறுமையால் வாடுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கூறும் போது, ஆளும் கட்சித் தரப்பிலிருந்து சொல்லப்படுவது என்ன வென்றால், மக்களுக்கு வாங்கம் சக்தி அதிகரித்திருக்கிறது. தமிழக மக்கள் ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், கடிகாரம் கட்டாதவர்களைக் காணமுடியவில்லை. சட்டை போடாதவர்களைக் காண முடியவில்லை என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆனால் உணவுப் பொருள்களை வாங்கக் கூடிய அளவிற்கு சக்தி படைக்காதவர்கள் ஏராளமான பேர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்ற கருத்தை – நான் அல்ல - போஷாக்கு ஆராய்ச்சி நிலைய டைரக்டர் டாக்டர் கோபாலன் அவர்கள் எவ்வளவு உருக்கமாக எடுத்துக் காட்டியிருக் கிறார்கள் என்பதை இங்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

''இப்போதுள்ள நமது விவசாயப் பொருளாதார நிலைமையில் நமது நாட்டில் போஷாக்கின்மை ஏற்பட்டிருப்

பதற்கு, போதிய உணவு சப்ளை இன்மையும், நமது மக்களின் கணிசமான பகுதியினர் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ள பண வசதியில்லாதிருப்பதுமே காரணம்'' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் வியாழக்கிழமை இரவில் அரிசி, கோதுமைக்குப் பதிலாக வேறு உணவை உட்கொள்ள சிபார்சு செய்கிறார்கள். எந்த நிலையில்? உணவுப் பொருள்களை வாங்குவதற்குள்ள பொருளாதார வசதி கணிசமான அளவு மக்களுக்கு இல்லை என்று டாக்டர் கோபாலன் அவர்கள் உருக்கமாகச் சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் வியாழக்கிழமை இரவு அரிசி, கோதுமைக்குப் பதில் வேறு உணவை சிபார்சு செய்கிறார்கள். ஜவ்வரிசி பகாளபாத், கடலைச் சுண்டல், கீரை வகைகள் இவைகளை எல்லாம் நம் முதல் அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்கிறார்கள். உணவுப் பொருள்களை வாங்குவதற்குள்ள பொருளாதார வசதியே கணிசமான அளவு மக்களுக்கு இல்லை என்று டாக்டர் கோபாலன் அவர்கள் கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : டாக்டர் கோபாலன் அவர்களை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கருத்துக்கு இணங்கத்தான் என் கருத்தைத் தெரிவித்தேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அவைகளை வாங்குவதற்குள்ள சக்தி கணிசமான அளவு மக்களுக்கு இல்லை என்ற அந்த அடிப்படையின் காரணத்தினால்தான் இதைக் குறிப்பிடுகிறேனே தவிர, வேறு இல்லை. வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதாக ஆளும் கட்சியினர் பேசுவது, ஆற்றிலே நடந்து செல்கிறவன், நீந்திச் செல்ல முடியாதவன், கழுத்தளவு தண்ணீரையும் கடந்து பிணமாக மிதந்து செல்வதைப் பார்த்து, அவனுக்கு மிதக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறது என்று கரையில் இருந்து கொண்டு கை கொட்டிச் சிரிப்பதுபோல் இருக்கிறது. கரையில் இருந்து கை கொட்டிச் சிரிப்பது போன்று - இன்று ஏழை மக்கள், பாட்டாளி மக்கள், சாமான்ய மக்கள் உணவுப் பொருள்களை

வாங்குவதற்குத் திண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப் பேசப்படுகிறது ஆளும் கட்சித் தரப்பிலிருந்து. இந்த வரவு செலவுத் திட்டத்தின் 6வது பக்கத்தில், ''விலைவாசி ஏற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி, பொதுவாக நகர்ப்புற மக்களுக்கும் குறிப்பாக நிலையான வருவாயுடையவர் களுக்கும் சற்று ஆதரவு அளித்துள்ளோம்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ''வெள்ளைக் காக்காய் மல்லாக்காகப் பறக்கிறது'' என்று கூறுவதுபோல் இருக்கிறது விலைவாசி கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது என்று கூறுகிற வாதம். இது எவ்வளவு உண்மைக்குப் புறம்பானது, உண்மைக்கு மாறானது என்பதை ஒன்றிரண்டு உதாரணங்கள் மூலம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். வீட்டில் சமையலுக்கு வாங்கும் அன்றாடப் பொருள்களின் விலை எந்த அளவிற்கு ஏறியிருக்கிறது. இந்த ஒரு வருட காலத்தில் என்பதைப் பார்ப்போம். 1965 மார்ச் மாதத்திற்கும் 1966 மார்ச் இன்றைய நாளுக்கும் இடையில் எந்த அளவிற்கு விலைவாசி ஏறியிருக்கிறது என்பதை சாதாண உதாரணங்கள் மூலம் குறிப்பிட விரும்புகிறேன். துவரம் பருப்பின் விலை 1965 மார்ச் மாதத்தில் ஒரு லிட்டருக்கு விலை 1 ரூபாய், இன்றைய தினம் அதன் விலை 1 ரூபாய் 20 காசு. உளுத்தம்பருப்பு 1965 மார்ச்சில் லிட்டருக்கு 90 காசு, இன்றைய தினம் அதன் விலை ஒரு ரூபாய் ஐந்து காசு, பயத்தம்பருப்பு லிட்டருக்கு 1965 மார்ச்சில் விலை 90 காசுகள், இன்றைய தினம் அதன் விலை ரூ 1.20. 1965 மார்ச்சில் மிளகாய் கிலோ ரூ. 2.32. இன்றைய தினம் ரூ.3.75. தனியா கிலோ ரூ.2.40, இன்றைய தினம் அதன் விலை 3 ரூபாய். சீயக்காய் 1965 மார்ச்சில் கிலோ ரூ.1.50 என்றிருந்தது. இன்று ரூ.1.80 ஆக இருக்கிறது. 1965 மார்ச்சில் புளி கிலோ ரூ.1.52 ஆக இருந்தது. இன்றைய தினம அதன் விலை ரூ. 2.70. புலி கூட வாங்கிவிடலாம் போல் இருக்கிறது. புளி வாங்குவது அவ்வளவு கஷ்டமாகி யிருக்கிறது. நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ.2.95 ஆக இருந்தது. இன்றைய தினம் ரூ.3.90 ஆக இருக்கிறது. கடலையெண்ணெய் ரூ.2.87 ஆக இருந்தது. இன்று ரூ.3.80 ஆக இருக்கிறது. தேங்காய் எண்ணெய் 1965 மார்ச்சில் ஒரு கிலோ 4 ரூபாய்; இன்றைக்கு 6 ரூபாய் 20 காசு. இது தவிர இறைச்சியின் விலையை எடுத்துக் கொண்டால், 1965 மார்ச்சில் ஒரு கிலோவுக்கு 3

ரூபாய், இன்றைக்கு 4 ரூபாய். முட்டை மார்ச்சில் 20 காசாக இருந்தது. இப்போது 25 காசு. இந்த அளவில் 20 ரூபாய் 56 காசு எடுத்துக் கொண்டு 1965மார்ச் திங்களில் ஒருவன் கடைக்குப் போனால் நான் குறிப்பிட்ட இத்தனை சாமான்களையும் வாங்குவதற்கு 28 ரூபாய் 60 காசு கொண்டு போனால்தான் வாங்கி வர முடியும். ஒரு சாதாரண குடும்பத்தை ஆண்டவன் அருளால் அதிகமாகப் பிள்ளைகள் இல்லாத குடும்பத்தை எடுத்து கொண்டால், ஒரு ஆணும் பெண்ணும் இருக்கின்ற குடும்பத்தை எடுத்துக் கொண்டால்,நான் குறிப்பிட்ட இத்தனை சாமான்கள் வாங்குவதற்கு 28 ரூபாய் ஆகும். இது தவிர, அரிசி வாங்க வேண்டும். வீட்டு வாடகை கொடுக்க வேண்டும். மருத்துவச் செலவு பார்க்க வேண்டும். சலவைச் செலவு வேறு, பொழுது போக்கு செலவு வேறு, நன்மை தீமைகள், இவைகள் அத்தனையையும் கணக்கிட்டால் ஒரு சாதாரண குடும்பம் இன்றைய தினம் நிம்மதியாக வாழ முடியுமா? ஏட்டில் இருக்கின்ற புள்ளி விவரங்களை மட்டும் ஆட்சியாளர்கள் காட்டுகிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் நாட்டு மக்களுடைய பிரதிபலிப்பாகத் தோன்றுகின்றனவா? ஏட்டைப்பாருங்கள் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் நாட்டில் இருக்கின்ற நிலைமையைப் பாருங்கள் என்று நாங்கள் கேட்கிறோம். நாட்டில் இருக்கின்ற பெருவாரியான சாதாரண குடும்பங்களை எடுத்துக்கொண்டுப் பார்த்தால், எங்காவது நிம்மதியான நிலைமை இருக்கிறதா? எங்காவது பெருமூச்சு இல்லாத இடம் இருக்கிறதா? 100க்கும் குறைவாக 75 ரூபாய், 60 ரூபாய் என்று சம்பாதிக்கின்ற ஒருவருடைய குடும்பத்தை எடுத்துக் கொண்டால், அவர் குடும்பத்தில் குழந்தை குட்டிகளே இல்லை என்று வைத்துக் கொண்டாலும், ஒரு ஆணும் பெண்ணும் சிக்கனமாகச் செலவு செய்தால் - நம்முடைய சர்க்காரைப்போல் செலவு செய்தால் ஒழுங்காக வாழ்க்கை நடத்த முடியாது - ஓரளவுக்காவது வாழ்க்கை நடத்த முடியுமா என்று பார்த்தால் அதுவே கேள்விக்குரிய விஷயம் தான். இந்த நிலையில் சாதாரண குடும்பம் இந்த நாட்டில் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? உணவுக் கஷ்டம். விலைவாசிகள் எல்லாம் விஷம் போல் ஏறிக்கொண்டே

போகின்றன. உணவு இல்லாமல்கூட வாழ்க்கையை நடத்த முடியும் என்று வைத்துக் கொண்டாலும், தாகத்திற்குத் தண்ணீராவது தாராளமாகக் கிடைக்கின்றதா இந்த தர்மவான்களுடைய ஆட்சியில் என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை வெகு பயங்கரமாகக் கொடிகட்டி பறந்து கொண்டிருக்கின்றது. சென்னை மாநகரத்திற்கு 200 மைல்களுக்கு மேல் தொலைவில் இருக்கின்ற காவேரியிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் திட்டம் ஏன் வரவில்லை? இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றெடுக்க வேண்டியது அரசாங்கம்தான் என்றிருந்தும், சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் உட்கார்ந்திருக்கின்ற காரணத்தால் அவர்கள்தான் பொறுப்பாளி என்பதைப்போல் கற்பனைக் காரணங்களை எல்லாம் காட்டிப் பேசுகின்ற இந்த நேரத்தில், மற்றவர்களும் நகராட்சியைப் பார்த்து, ஏன் இந்த காவேரித் திட்டம் கொண்டு வரப்படவில்லை' என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வி நியாயமான கேள்விதான். ஆனால் கேட்கப்படுகின்ற இடம்தான் தவறியிருக்கின்றது. இன்றைய தினம் நாங்களும் அவர்களும் சேர்ந்து அரசாங்கத்தைக் கேட்கின்றோம். வற்புறுத்துகின்றோம். 200 மைல் தொலைவில் இருக்கின்ற காவேரித் தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக நிச்சயமாக குடிதண்ணீர்ப் பிரச்சினையை வெகுவாக சமாளிக்க முடியும். இது சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் இருக்கின்ற பிரச்சினை. ஆனால் திருச்சியில் காவேரியும் கொள்ளிடமும் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி யிருந்தும் திருச்சி நகரத்தில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு. நல்லவேளையாக அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தவர் நிர்வாகத்தில் இல்லை. காங்கிரஸ் கட்சிதான் நிர்வாகம் நடத்துகின்றது. பக்கத்தில் ஆறு போய்க் கொண்டிருக்கிறது. இருந்தும் திருச்சியில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. திருச்சிக்கு அடுத்தாற்போல் இருக்கின்ற தஞ்சையில் 1961ல் ஜனத்தொகை 1 லட்சத்து 10 ஆயிரம், இன்றைய தினம் ஜனத்தொகை 1 லட்சத்து 25 ஆயிரம். இந்த அளவுக்குப் பெருகுகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப தண்ணீர்த் திட்டம் எதுவும் இல்லை. அங்கேயுள்ள மக்களுக்குத் தேவையான

தண்ணீர் என்று கணக்கிடப்படுவது தினம் ஒன்றுக்கு 15 காலன்; ஆனால் முந்தின காலத்தில் 10 காலன் தரப்பட்டது. இன்றைய தினம் 6 காலன் கூட சரியாகத் தரப்படுவதில்லை. இந்த அளவில் குறைந்து கொண்டேயிருக்கின்ற நிலைமையில் அங்குள்ளவர் களுக்குப் போதுமான காலன் (தண்ணீர்) தான் கொடுக்கப் படுமா அல்லது அவர்களுக்கு காலன்தான் வந்துவிடுவானே என்ற நிலையில் தஞ்சை நகரத்து மக்கள் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். வெண்ணாற்றுத் திட்டம் ஒன்று போடப் பட்டது. இப்போதுள்ள பள்ளி அக்ரகார வடிநிலை அருகில் 'பேவாரி'யின் வண்டலால் அடைக்கப்படுகிறது. இதுவும் கவனிக்கப்படவில்லை, குடிதண்ணீருக்காக இங்கே 30 லட்சம் ரூபாய்க்குப் போடப்பட்ட திட்டம் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு பூசை செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியும். வேண்டுகோள் விடுத்தும் - அதுவும் அங்கே நடப்பது காங்கிரஸ் கட்சியினுடைய நகர சபைதான் - அவர்களே அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும் இன்றைய தினம் வரையில் அது நிறைவேற்றப்படவில்லை. தஞ்சை என்று சொல்லும்போது, நீர்வளம், நிலவளம் உள்ள நாடு, சோழ வளநாடு என்று கதை எழுதுபவர்கள் தஞ்சையைப் பற்றி எழுதும்போது ஆரம்பிப்பார்கள். அத்தகைய தஞ்சை மாவட்டத்தின் தலைநகரத்தில் குடிதண்ணீருக்கு மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் கேள்வி மூலமாக - கோவை நகரத்தில் எந்த அளவிற்கு குடி நீர்ப் பிரச்சினை பயங்கரமாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன். அதற்கு சிறுவாணித்திட்டம் நடைபெறாத காரணத்தால் இப்பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. இந்த சிறுவாணித் திட்டம் என்பது தமிழ் நாட்டின் எல்லையிலிருந்து இரண்டு ஃபர்லாங் தூரத்தில் இருக்கிறது. கோவை நகரத்திலிருந்து 22 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தப் பகுதி இருக்குமிடம் கேரளாவோடு சேர்ந்திருக்கிறது. கேரளாவின் உதவியைப் பெற்று இந்த சிறுவாணித் திட்டத்தை கோவை நகரத்திற்கு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இதை நமக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ள முடியாத காரணத்தால் கோவை நகரத்து மக்கள்

இன்றைய தினம் குடி தண்ணீருக்காக தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோவை நகரத்திற்கு முன்பு 50 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்பட்டது. இப்போது 35 லட்சம் காலன் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் ஒன்றரைக் கோடி காலன் தண்ணீர் கிடைக்கும் என்று அறுதி யிட்டுக் கூறியிருக்கிறார்கள். இந்த சிறுவானி அணையிலிருந்து கேரளாவுக்கு தண்ணீர் பயன்படவும் இல்லை. ஆகவே, இதை நாம் பயன்படுத்த முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்காக துளைக் கிணறுகள் போடுவதாக சொல்லப்பட்டது. பல்வேறு இடங்களிலும் துளைக்கிணறுகள் போடப்படுவதாக சொல்கிறார்கள். அதிலும் கட்சி வேறுபாடுகள் வருகின்றன. போடப்படுகின்ற இடங்களில் சிலவற்றில் கட்சி மாச்சரியங்கள் காரணமாக நிறுத்தப்படுகின்றன. சில இடங்களில் போடப்படுகின்ற துளைக் கிணறுகளில் தண்ணீர் இல்லை. நீர்த்தொட்டிகள் இருக்கின்ற இடத்தில் பம்ப்செட் வைப்பதற்கு மின்சாரம் கொடுக்க போர்டு முன் வருவதில்லை. அங்கே ஒரு என்சினியரும் கிடையாது. மூன்று மாத காலமாக யாரும் இதுவரை நியமிக்கப் படவில்லை என்றும் அதற்குக் கட்சி அரசியல்தான் காரணம் என்றும், சில பெரியவர்களுடைய தலையீடு இருப்பதாகவும் கூறுகிறார்கள். அது உண்மையாக இருந்தால் அதற்குத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் - இந்த நிலையில், கோவை நகரத்தில் லாரிகள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற தண்ணீருக்கு - அந்தந்த வட்டாரத்தில் இருக்கின்ற கவுன்ஸிலர் ரேஷன் கார்டு முறை வைத்து அதிகார பூர்வமாகக் கையெழுத் திட்டு, ஒரு குடம், இரண்டு குடம் என்கிற அளவுக்கு இன்றைய தினம் கோவை நகரத்தில் குடி தண்ணீர் வழங்கப்படுகிறது.

உணவில்லை, உடையில்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை. இத்தனையும் இல்லையென்றால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் என்னதான் இருக்கிறது? இதைப் பார்க்கின்ற நேரத்தில் எனக்கு தெனாலிராமன் கதைதான்

ஞாபகத்திற்கு வருகிறது. தெனாலிராமனிடத்தில் மன்னர் ஒரு வீட்டைக் கொடுத்து, அதில் சித்திரம் தீட்டி வைக்க வேண்டும் என்று அதற்காகும் பொருளையும் கொடுத்தார். அவர் கொடுத்த பொற்கிழியையும் பெற்றுக் கொண்டு, வீட்டில் வந்து நன்றாகத் தூங்கிவிட்டு, மன்னர் ஓவியங்களைப் பார்க்க வருகின்ற ஒரு மணி நேரத்திற்கு முன்னால் எழுந்திருந்து - என்ன செய்வது, மன்னர் வந்து விடுவாரோ - என்ன பதில் சொல்வது - என்ற பயத்தின் காரணமாக ஒரு துடைப்பத்தை எடுத்து, சாணத்திலே துவைத்து,அந்த வீட்டின் சுவரிலே அங்கும் இங்குமாக நாலைந்து கோடுகளைப் போட்டு வைத்தான். மன்னர் குறிப்பிட்டபடி வந்து, எங்கே ஓவியம் என்று கேட்ட போது,அங்கேயுள்ள கோடுகளைக் காட்டினான் தெனாலி ராமன். இது என்ன என்று மன்னர் கேட்டதற்கு இது குதிரையின் வால்' என்று கூறினான். 'வால் இருக்கிறதே, '' குதிரை எங்கே?'' என்று மன்னர் கேட்டதற்கு ''குதிரை சுவருக்கு பின்னால் இருக்கிறது'' என்று குறிப்பிட்டானாம். அதைப்போல், வரவு செலவு திட்டத்தில் மக்களுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டம் எங்கேயிருக்கிறது என்று கேட்டால் வாலைத்தான் காட்டுகிறார்கள். இதுதான் திட்டம் என்கிறார்கள். திட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் வாழ்வு எங்கேயிருக்கிறது என்று கேட்டால் மறுபக்கத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த முறையில்தான் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. திட்டம் திட்டம் என்று பேசப்படுகிறதே ஒழிய திட்டமிட்ட பொருளாதாரம் என்று வலியுறுத்தப்பட்டு பேசப்படுகிறதே தவிர, தமிழ்நாட்டுக்காக உருப்படியாக எந்தத் திட்டத்தைப் போராடிப் பெற்றிருக்கிறீர்கள்? நேற்றுத்தான் முதன்முதலாக நம்முடைய அமைச்சர் அவர்கள் நமது போர்க்குரலை சென்னை மாநிலத்தில் கிளப்பியிருக்கிறார்கள். வெகு வேடிக்கையாகவும் உலக அதிசயங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. நமது தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் 'மத்திய சர்க்காரின் குறுகிய புத்தி' என்ற சொற்களைக் கூட குறிப்பிட்டிருக் கிறார்கள். எப்போதும் கனிவான வார்த்தைகளையே பேசுகின்றவர், அவருக்குக் கோபம் என்பதே வராது. அப்படிப்பட்ட நமது தொழில் அமைச்சர் அவர்கள் அதிலும்

நமது முதலமைச்சர் அவர்கள் அருகாமையில் இருக்கக்கூடிய சூழ்நிலையில், நமக்குப் பயன்படுகிற திட்டங்கள் நமக்குத் தரப்படவில்லை என்று கோபமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் ஏறத்தாழ 1¾ ஆண்டு காலத்திற்கு முன்பு ஏற்கப்பட்டு விட்டதாக அமைச்சர் அவர்கள் பத்திரிக்கையாளர்களிடத்தில் கூறி ஆனந்தப்பட்டுக் கொண்டார். 1¾ ஆண்டு காலத்திற்கு முன் ஏற்றுக் கொள்ளப்பட்ட தூத்துக்குடித் திட்டத்தை இன்னும் மத்திய சர்க்கார் அங்கீகரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அடுத்த கிழமை என்று கருதுகிறேன் – அமைச்சர் கே.எல்.ராவ் அவர்கள், பாராளு மன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, ''தூத்துக்குடி யாவது ஒன்றாவது? எப்போது அதற்கு அங்கீகாரம் அளித்தோம்? அதெல்லாம் கிடையாது'' என்று கை விரித்தார்கள். அப்படிக் கை விரித்த செய்தி அறிந்ததும் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்தோ அல்லது அவர்களே வந்தோ - எப்படி இருந்தாலும் தவறு இல்லை - அவர்களிடத்தில் குறிப்பிட்டார்கள். 'இதோ இருக்கிறது கே.எல்.ராவ் அவர்களின் கடிதம்; இந்தத் திட்டத்திற்கு அமைச்சர் திரு டி.டி.கே.யும், திட்டக் கமிஷன் தலைவர் திரு அசோக் மேத்தா அவர்களும், இதே திரு. கே.எல்.ராவ் அவர்களும், அனைவரும் இதே திரு கே.எல்.ராவ் அவர்களும், அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து, தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, நிறைவேற்றுவது என்பது முடிவு எடுக்கப்பட்டு, அதிகார பூர்வமாகத் தமிழக அமைச்சர் அவைக்கு குறிப்பாக அவருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்'' என்ற கடிதத்தையும் பத்திரிகை யாளரிடத்தில் எடுத்துக் காட்டினார்கள். இதற்குப் பிறகும் இவ்வளவு நடந்த பிறகும், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் சந்தேகத்தில் இருக்கிறது என்றால், என்ன காரணம்? தமிழ் நாட்டு அரசாங்கம் தட்டிக் கேட்பதில்லை. தமிழ்நாட்டு அரசாங்கம் தயவை எதிர்பார்ப்பது போல்

போகிறது. நாமும் அவர்களுக்கு வரி கொடுக்கிறோம். ஆகவே அவர்களிடத்தில் அதிகாரமாகக் கேட்கக்கூடிய குரலைப் பெறுவதில் தவறு இல்லை என்ற உணர்ச்சி தமிழக அரசாங்கத்திற்கு இல்லாமல் போய்விட்டது. அவர்கள் எள் என்று கேட்டால் எண்ணை கொடுக்கமாட்டார்கள். எண்ணெய் என்று கேட்டால்தான் எள்ளாவது கொடுப்பார்கள். நீங்கள் கேட்கப் போகும்போதே 'எள்ளாவது கொடுங்கள்' என்று கேட்கிறீர்கள். 'எள் இல்லை' என்று சொன்னால் 'இல்லாவிட்டால் பரவாயில்லை' என்று கூறுகிறீர்கள். எள் கேட்டு கொள் கூடப் பெறமுடியாமல் மாநில அரசு சங்கடத்தில் சிக்கிக் கொண்டு, எப்போதாவது இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கோப தாபங்களை வெளியிடும் நிலைக்குத் தங்களை ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு 10 ஆண்டு கால வரலாறு உண்டு. 1956-57ம் ஆண்டிலிருந்து சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் இது வரையில் என்ன உருவான பலன் ஏற்பட்டிருக்கிறது? ஆராய்ச்சிகள், ஆராய்ச்சிகள், ஆராய்ச்சிகள்; சுற்றுப் பயணங்கள் சுற்றுப் பயணங்கள், சுற்றுப்பயணங்கள்; அங்கிருந்து வருகிறார்கள், இங்கிருந்து செல்லுகிறார்கள். இதைத் தவிர என்ன உருவான பலன் கிடைத்திருக்கிறது? இதன் வரலாற்றுச் சுருக்கத்தை இந்தச் சபையிலே ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன்.

1957ம் ஆண்டு,ஜூன் திங்கள், 29ம் நாள். இங்கு நிதி அமைச்சராக வீற்றிருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிடுகிறார். ''தேசீயத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேசன், சேலம் மூலக் கனிப்பொருள்களைக் கொண்டு இரும்பு உருக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜம்ஷட்பூரில் இதற்கு வேண்டிய பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன.'' இது 1957ம் ஆண்டு, ஜூன் மாதம் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்டது. ஜூலை 1957ல் அவர் குறிப்பிடுகிறார் ''நமது ராஜ்யத்தில் நிறைய இரும்பு உற்பத்தி செய்தால்தான் பெரும் தொழில்களை ஆரம்பிக்க முடியும். சேலத்தில் இரும்புக் கனி இருக்கிறது. நிலக்கரி இல்லாததால் அந்த இரும்புக் கனியைக் கொண்டு ஆரம்பிக்க இயலாது' என்று

பிரிட்டிஷ் அரசின் காலத்தில் கூறப்பட்டது. இப்போது நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. அடுத்தபடியாக இரும்புத் தொழிற்சாலை வரும். வந்தே தீரும். சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் விஷயத்திலே, 'வடக்கு தடையாக இருப்பதால் நாங்கள் வடக்கிற்கு 'ஆமாம்' போடுகிறோம்' என்பதில்லை. சேலத்தில் கிடைக்கும் இரும்பு எப்படிப்பட்டது? அதைக் கொண்டு எவ்வகைத் தொழில் தொடங்கலாம்? என்று ஜாம்ஷெட்பூரில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன'' இதையும் திரு சுப்பிரமணியம் சொல்கிறார். அடுத்து, 17.3.1960ல் இங்கு வீற்றிருந்த எங்கள் தலைவர் அண்ணா அவர்கள், நிதி அமைச்சரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார் – ''சேலம் இரும்புத் தொழிற்சாலை மூன்றாவது திட்டத்தில் வந்து விடுமா'' என்று, அதற்கு திரு. சுப்பிரமணியம் பதில் சொல்லுகிறார் - ''நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு இந்த இரும்பைப் பயன்படுத்த முடியுமா என்ற சோதனை வெற்றி பெற்றால், இரும்புத் தொழிற்சாலை மூன்றாவது திட்டத்தில் வந்துவிடும்'' என்று. பிறகு ''புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கும்போது, ஓரளவு குறைவான விலையில் இரும்பு உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக் கிறது, லாபரட்டரி டெஸ்ட் சாதகமாக முடிந்திருக்கிறது, பைலட் டெஸ்ட்க்கு முன்னோடிச் சோதனைக்கு 2000 டன் நிலக்கரி வேண்டியிருக்கிறது'' என்ற அளவோடு 1961ம் ஆண்டு நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் தன் பதிலை நிறுத்திக் கொண்டார். 7.7.1962ல் அமைச்சர் திரு.வெங்கட்டராமனிடத்தில் நான் எழுப்பிய கேள்வி ''சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை எந்த நிலையில் உள்ளது? இதுபற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி முடிவு என்ன? என்பதாகும். ''நெய்வேலி லிக்னைட், சேலம் இரும்புக் கனி இரண்டுக்குமான முன்னோடிச் சோதனை (பைலட் டெஸ்ட்) கிழக்கு ஜெர்மனியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. லாபரட்டரி டைரக்டர் அவர்கள் அது பற்றிய அபிப்பிராயத்தைக் கூறும்போது அவை வெற்றிகரமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்'' என்று இங்கு எல்லோரும் நம்பிக்கை பெறுகிற அளவுக்கு அந்தச் செய்தியை மகிழ்ச்சியோடு அமைச்சர் வெங்கட்டராமன் சொன்னார்கள்.

22.1.1964ல் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் நேரத்தில் நிலக்கரியைப் பயன்படுத்துவது, எவ்வாறு தொடங்குவது, என்றெல்லாம் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இது சாத்தியப்படும் என்று நன்றாகப் புலப்படுகிறது'' என்று தெரிவித்தார்கள். 1965ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23ம் நாள், அமைச்சர் வெங்கட்ட ராமன் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, ''மத்திய அரசு சேலம் உருக்காலையை ஏற்று நடத்தத் தவறினால், ராஜ்ய சர்க்காரே ஏற்று நடத்தும்'' என்று கூறியிருக்கிறார். கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி கேட்ட கேள்விக்கு, வடக்கே இருக்கிற ஆளும் கட்சி அனுகூலமாக இருந்து இதை நிறை வேற்றாவிட்டாலும், அதற்கு வேண்டிய முதலை நாங்களே உற்பத்தி செய்து கொள்வோம் என்று நம்பிக்கையோடு அமைச்சர் அளித்த பதில் பசுமையாக இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது, ''அப்படியானால் நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எல்லாம் செலவழிக்கப்பட்டு வருகிறதா? நில ஆர்ஜிதம் செய்வதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?'' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் ''நில ஆர்ஜிதம் செய்வதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன, நில ஆர்ஜிதம் செய்வது என்றால் குறைந்தது 9, 10 மாதங்கள் ஆகும்'' என்று கூறினார்கள். கவர்னர் உரையிலே சேலம் உருக்காலை வரவில்லை என்று வருத்தப்பட்டபோது, முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ''கவர்னர் உரையில் சேலம் உருக் காலை பற்றிக் கூறப்படவில்லை என்று கருத்தறிவித்தார்கள். ஏன் மறுபடியும் கூறவில்லை என்றால், ஒரு முறை கருத்து தெரிவித்தால், அதில் ஏதாவது மாறுதல் இருந்தால்தான் வருகிற ஆண்டில் நிகழ்த்தப்படுகிற உரையில் குறிப்பிட வேண்டும். எப்படியும் சேலம் உருக்குத் தொழிற்சாலை வந்தே தீரும். நாம் முன்பு தெரிவித்தது போல இது சிறிய திட்டமாக இருக்கும். இது நிறைவேறக்கூடிய திட்டமென்று ஜப்பான் நிபுணர்கள் பூர்வாங்கமாக ஒத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இன்னும் அவர்களது அறிக்கை வர வில்லை'' என்று கடந்த 5.2.1966ல் கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஏதாவது மாற்றம் இருந்தால்தான் அதை நாங்கள் இந்த அறிக்கைகளிலே குறிப்பிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இப்போது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது எங்களுக்கெல்லாம் பயம் வந்துவிட்டது. 'மாற்றம் இருந்தால்தான் குறிப்பிட வேண்டும் என்று சொன்னார்களே, இப்போது குறிப்பிட்டிருக்கிறார்களே, திட்டம் என்ன ஆகுமோ? என்ன நிலைமையோ? என்ற பயம் ஏற்பட்டுவிட்டது. அதைக் குறிப்பிட்டு என்ன முடிக்கிறார்கள்? ''நெய்வேலி - சேலம் உருக்காலைத் திட்டம். தொழில் நுட்ப முறையிலும் பொருளாதார வகையிலும், நடைமுறைக்கு ஏற்ற ஒன்றே என்பதை மெஸர்ஸ் தஸ்தூர் கம்பெனி தயாரித்த விரிவான திட்ட அறிக்கை ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளது. ஜப்பானிய ஆலோசனை நிலையை ஆய்வுக் குழுவினரின் அறிக்கை விரைவில் இறுதி செய்யப்படுமென எதிர்பார்க் கிறோம். அதன் பின்னர் கூடிய விரைவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்'' என்று பட்ஜெட் உரையிலே, வரவு-செலவுத்திட்ட உரையிலே அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். இந்தப் பத்து ஆண்டு காலம் பெரு மூச்சே கூட வருகிறது - இந்தச் சேலம் உருக்காலைக்கான ஆராய்ச்சி முடிவதற்குள்ளாக, ரஷ்யர்களும், அமெரிக்கர்களும் வான வெளியில் ஆராய்ச்சி நடத்தி, 'விண்வெளியில் செல்லலாம்; விண்வெளியில் சென்று ஒருவனோடு ஒருவன் சந்தித்துப் பேசலாம்' என்று உலகுக்குக் காட்டி, 'விண்வெளி ஆராய்ச்சியே வெற்றி பெற்றுவிட்டது. ஆனால், சேலம் உருக்குத் தொழிற்சாலை ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள் ஜப்பான் சென்று வந்திருக்கிறார் - சென்ற உலக யுத்தமும் ஜப்பானில் தான் முடிவு அடைந்தது - அதே போல சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை போராட்டமும் ஜப்பானுடன் முடிவுற வேண்டு மென்று என்னுடைய வாழ்த்துக்களை அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திறமை உள்ள அமைச்சர் திரு. வெங்கட்டராமன் இருக்கும் போது இந்த நிலை. அவரும் வடக்கே போவதாகக் கேள்விப்படுகிறோம். அவரும் போய் விட்டால் சேலம் தடை படாதா என்ற கேள்வி எழுகிறது. நம்மை விட அக்கறை உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடுத்த தடவை வந்து விடுவார்கள். அவர்கள்

பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் போகலாம். ஒரு வேளை நீங்களே பெரும்பான்மை வருவது என்றால், நீங்களே இருந்து முடித்துக் கொடுத்துவிட்டு, வடக்கோ, தெற்கோ, கிழக்கோ, மேற்கோ எங்கே வேண்டுமானாலும் செல்லுங்கள்; நீங்களே பெரும் பான்மையாக வருவதாக இருந்தால், நீங்கள் இருந்து முடிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். இதற்காகப் போராடவில்லை. இதை அக்கறையோடு எடுத்துச் சொல்லவில்லை; நம் திறமைகள் இதற்காகப் பயன்படுத்தப்படவில்லை; நான் நிலைமைகளைச் சுட்டிக் காட்டியதுபோல, 10 ஆண்டு காலமாக இருக்கிற பரிதாபச் சரித்திரத்தை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லித் தமிழகம் கொதிப்பு அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டுக் கூற வேண்டும். மறைந்த லால்பகதூரிடம் முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள் என்ற செய்தி பார்த்தேன். அந்த அழுந்தந்திருத்தம் மேலும் மேலும் தொடர்ந்து, சேலம் உருக்காலை தமிழகத்தில் வர வேண்டும் என்ற அளவிற்கு அமைய வேண்டும். அது கூட; ஐந்து லட்சம் டன்னா? இரண்டரை லட்சம் டன்னா? என்ற இந்த விவகாரங்கள் எல்லாம் இருப்பதாகத் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பேசி இருப்பதாகப் பத்திரிகையிலே படித்துப் பார்த்தோம். இந்த விவகாரங்க ளெல்லாம் விரைவிலே தீர்க்கப்பட்டு; சேலம் இரும்புத் தொழிற்சாலை வருவதற்கான அந்தக் காரியத்திலே ஈடுபட வேண்டும். தமிழ்நாட்டின் குரலை அங்கே சரிவர எடுத்து ஒலிக்கவில்லை என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் கூறி விரைவிலே என்னுடைய உரையை முடித்து விடலாம் என்று கருதுகிறேன், கனம் சபாநாயகர் அவர்களுடைய கண்களைப் பார்த்த அளவில்.

விவசாயம், பாசனம், தொழில், போக்குவரத்து, கல்வி இவைகளில் தனிச் சலுவை பெறவேண்டும்; தனித்திட்டம் வகுக்க வேண்டும் என்ற அளவில் சில பகுதிகளைப் பின் தங்கிய பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தில் பல மாநிலங்களிலிருந்து வருகின்றன. அப்படிப்பட்ட கோரிக்கை,

தமிழகத்தைப் பொறுத்த வரையில், புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், அறந்தாங்கி இப்படிப்பட்ட பகுதிகளைப் பின்தங்கிய பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை, இருந்து வருகிறது. இந்தக் கோரிக்கையை வைத்து, இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவராக இருக்கிற, பாராளுமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பாராளு மன்றத்தில் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். ''தமிழ்நாட்டில் பின்தங்கிய பிரதேசங்கள் என்று புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம் அறந்தாங்கி ஆகிய இந்தப் பகுதிகள் நிர்ணயிக்கப்படுமா?'' என்று கேட்டிருக்கிறார். அதற்கு அப்பொழுது பதில் சொன்ன திட்ட மந்திரி திரு. பகத் அவர்கள், ''உத்தரப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில், இது போன்று சில இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தப் பகுதிகளுக்குத் தனிச் சலுகை அளிக்க வேண்டும் என்பதற்காகத் தனியாக பத்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என்று அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து 4.11.1965 அன்று, கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு அதே உறுப்பினர் ஒரு கேள்வி கேட்டார்கள். ஒருக்கால் அவர் சிறையிலிருந்து அனுப்பினாரோ என்னவோ தெரியாது. அந்தக் கேள்வியில், ''ஏன் தமிழ்நாட்டுப் பகுதிகள் அதில் காணப்படவில்லை?'' என்று கேட்டிருக்கிறார். அதற்குப் பதிலளித்த திரு பகத் அவர்கள், ''உத்தரப் பிரதேச சர்க்கார், அங்குள்ள பின் தங்கிய பகுதிகளைக் குறித்து எனக்குக் கடிதம் எழுதினார்கள். ஆகவே, அதுபற்றி யோசிக்கப்பட்டு, அவைகளுக்காகப் பத்து கோடி ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம்; ஆனால் தமிழ்நாட்டு சர்க்கார் அது குறித்து எங்களுக்கு எந்தவிதமான தகவலும் தரவில்லை, தந்தால் கவனிப்போம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, சொல்லவேண்டிய விஷயங்கள் ஒழுங்காக உரிய நேரத்தில், மத்திய சர்க்காருக்குச் சொல்லப்படவில்லை என்பதற்கு இது ஒரு தக்க உதாரணமாகும். அல்லது சொல்லியிருந்து இந்த இடைக் காலத்தில், இரண்டு திங்களுக்குள் ஏதாவது நடந்திருந்தால் மகிழ்ச்சி அடைகிறேன். சொல்லப்படாம

லிருந்தால் சொல்ல வேண்டும் என்று நான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பல இடங்களில் இழைந்தோடியிருக்கும் ஒன்று சிக்கனம். சிக்கனத்தைக் கடைப் பிடிக்க வேண்டும், திறமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லவேண்டும் என்ற பல குறிப்புகளை வைத்திருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால் சுருக்கமாகச் சொல்கிறேன். நம்முடைய தணிக்கைக் குழுவின் அறிக்கையைப் படித்துப் பார்த்தால் எந்த அளவிற்குச் சிக்கனம் பாழ்பட்டிருக் கிறது என்று நன்றாகத் தெரியும். நான் அவைகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். குறைந்த சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்காக வாடகை வீடு கட்டித் தரும் திட்டம், 1960 - 61ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆகும் செலவைத் தருவதாக ஒப்புக் கொண்டு வீட்டு வசதி போர்டிடம் இந்த அரசு பொறுப்பை ஒப்படைத்தது. தேவையான தொகையை லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடத்தில் கடன் வாங்கி, வீட்டு வசதி போர்டுக்குக் கொடுத்தது. அதன் மூலம் அந்தத் தொகை உடனடியாகச் செலவழிக்கப்படாமல், அதிலே பாதிப் பணம் தான் செலவழிக்கப்பட்டது, 1964ஆம் ஆண்டு வரையில் அந்த வேலை நடக்காமலிருந்து, அந்த வீட்டு வசதி போர்டு காரிய மாற்றாமல் இருந்து இருக்கிறது. காரியம் ஆற்றுகிற சமயத்தில் பணத்தைப் பெற்றுத் தருகிற அந்த நோக்கம் அரசியலில் உள்ள இலாக்காக்களுக்கு இல்லாததால், வட்டியாக மாத்திரம் 8 லட்சத்து 24 ஆயிரம் ரூபாயைத் தந்திருக்கிறது. எட்டு லட்ச ரூபாய் என்பது சாதாரணத் தொகை அல்ல; நான் சொன்ன தஞ்சாவூர் குடி தண்ணீர்த் திட்டத்திற்குத் தேவையான முப்பது லட்ச ரூபாயில் ஒரு பகுதியை அடைக்கக்கூடிய தொகையாகும். ஆகவே, இப்படியெல்லாம் பணம் வீண் விரயம் செய்யப்பட்ட பிறகு சிக்கனத்தைப்பற்றிப் பேசுவதில் அர்த்தம் இல்லை.

விழுப்புரம் பகுதியில் விமானம் மூலமாகப் பூச்சிநாசினி தெளிப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு,

பூர்வாங்க வேலைகளுக்காகப் பத்தாயிரம் ரூபாய் செலவிட்டுவிட்டார்கள். பூர்வாங்க வேலைக்காகப் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து விட்டபிறகு திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவித்தார்கள். ஏனென்றால், அதற்கான விமானத்தை இந்திய சர்க்கார் அனுப்பத் தயாராக இல்லை, விமானம் வருமா, வராதா என்று தெரிந்து கொண்டு அந்தப் பூர்வாங்க வேலைகளுக்குப் பத்தாயிரம் ரூபாயைச் செலவிடக் கூடாதா?

அடுத்து, கேந்திர கிராமத் திட்டத்தைப் பொறுத்த வரையில், 1961 முதல் 1964 வரை இந்தத் தமிழக அரசு 15 கேந்திர கிராமங்களைத் திறந்தது. கேந்திர கிராம ஊழியர் படி, பொலிக்காளை பராமரிப்பு அதற்கான செலவு 1964 முடிய 18 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய். கால்நடைகளைச் செயற்கை கருத்தரித்தல் முறையில் அபிவிருத்தி செய்வது அந்தக் கேந்திர கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். 1961-62ல் தொடங்கிய 6 கேந்திர கிராமங்களில் விருத்திக்கு ஏற்றதாக இருந்த கால்நடைகளின் எண்ணிக்கை 202,686. அவை மூலம் எதிர்பார்க்கப்பட்ட கன்றுகள் எண்ணிக்கை 81,074. ஆனால், கிடைத்த கன்றுகள் பாவம்! 6,888. 1962-63ல் ஆறு கேந்திர கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை 116,969. எதிர்பார்க்கப்பட்ட கன்றுகள் எண்ணிக்கை 46,787. கிடைத்த கன்றுகள் 784 தான். இந்தத் தோல்விக்கு இலாக்கா சொல்லும் காரணம் என்ன? ''சில பசுக்கள் மலடு. சில வயதானவை.'' இது முதலில் தெரியவில்லையா? ''பால் தராத காலங்களில் பல பசுக்கள் விவசாய வேலைக்குப் பயன்பட்டன. தீவனம் பற்றாக்குறை புல் தரை கிடைக்கவில்லை. கேந்திர கிராம வட்டாரங்கள் இன விருத்தியற்ற பிரதேசங்களில் அமைந்தன'' என்று காரணம் சொல்லப்படுகிறது. இவைகளை முதலில் யோசிக்காததால் விரயம 18 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் இப்படிய அநியாய விரயம் செய்துவிட்டு, சிக்கனம் சிக்கனம் என்று பேசுவதிலே அர்த்தம் இல்லை என்ற நான் குறிப்பிட விரும்புகிறேன். சிக்கனம் ஒழுங்காகப் பயன்படுவதாக இருந்தால், நம்முடைய அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ள முன் வரவேண்டும். அது மற்றவர்களும் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதற்கு நல்ல வழிகாட்டக்கூடிய நடவடிக்கையாக

அமையக் கூடும். எவ்வளவு குறைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கூற வரவில்லை. காரணம், இன்றைக்கிருக்கும் விலைவாசித் தொல்லை அவர்களுக்கும் உண்டு, உள்துறை அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்களுடைய துணைவியார் அவர்களே ஒரு சமயம் ஒரு மாநாட்டில் குறிப்பிட்டிருக் கிறார்கள். ''1500 ரூபாய் வாங்கியும் எங்கள் குடும்பம் பல கஷ்டத்திற்கிடையேதான் இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே அவர்களே யோசித்து, ஓரளவுக்கு சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுவார் களானால் அது மற்றவர்களுக்கு வழிகாட்டுவதாக அமையக்கூடும்.

கவர்னர் பதவி என்று இருப்பதன் காரணமாகப் பல லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. அதையும் மீதப்படுத்தலாம். அந்தப் பதவி இல்லை என்று ஆகிவிட்டால், அதுவும் சிக்கனத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமையும்.

மந்திரிகளும் தங்களுடைய சுற்றுப் பயணத்தை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ளலாம். ''மக்களைச் சந்திக்கிறோம்'' என்று சொல்வது சரியான வாதம் அல்ல. அதை நான் சொல்லவில்லை. காமராஜ் திட்டம் கொண்டு வந்த திரு. காமராஜ் அவர்களே கூறியிருக்கிறார்கள். அமைச்சராக இருந்து மக்களைச் சந்திக்க முடியவில்லை. மக்களைச் சந்திக்க வேண்டும் என்று போகிற நேரத்தில் கிராமத்தில் பெரிய பெரிய நந்திகள் குறுக்கே நிற்கின்றன. ஆகவேதான் ராஜினாமா செய்கிறேன்'' என்று கூறியிருக்கிறார். மந்திரிகளுடைய சுற்றுப் பயணங்கள் குறைக்கப் படுவதன் மூலமாகவும் இந்தச் சிக்கனத் திட்டம் நிறைவேறலாம்.

கடைசியாக 1967 பொதுத் தேர்தலுக்கு முன்பு, ஒரு மூன்று மாதங்களுக்கு முன்பு, மந்திரிகள் தங்களுடைய பதவிகளை ராஜினாமா செய்விடுவார்களானால், அதன் மூலம் மந்திரிகளுக்காகத் தரப்படுகிற சம்பளம் சிக்கனப்படுத்தப்படும். ஜனநாயகமும் காப்பாற்றப்படும். மூன்றே மூன்று மாத காலம்தான். அதிகம் கூட வேண்டாம். அவர்களுக்கும் ஆசை இருக்கலாம். அடுத்த தடவை வருகிறோமோ, இல்லையோ மூன்று மாதமும் இருந்துவிட்டுப்

போகலாமே என்ற ஆசை இருக்கலாம். ஆனாலும் ஒரு மூன்று மாத காலம் அவர்கள் ராஜினாமாச் செய்துவிட்டுப் பொதுத் தேர்தலில் ஈடுபடுவதன் காரணமாக, இந்தியத் துணைக்கண்டத்தில் ஜனநாயகத்தை மலரச் செய்வதற்கு, பல காரியங்களுக்கு இந்தத் தமிழ்நாடு சர்க்கார் காரணமாக இருந்தது. ஆரம்பமாக இருந்தது என்று பெருமை அடித்துக் கொள்ளுகிற நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் பெரு மக்கள் இந்தக் காரியத்தையும் செய்து நல்ல முன்னோடியாக விளங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இங்கே எடுத்துச் சொன்ன இவ்வளவு காரியங் களுக்கும் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே நல்ல பரிகாரங்கள் இதுவரை அளிக்கப்படாத காரணத்தால்தான், அவைகளையெல்லாம் நான் சுட்டிக்காட்ட நேர்ந்தது. இந்தப் பரிகாரத்தைத் தேடுவதற்கு இந்த அமைச்சரவையினர் மிச்சம் இருக்கும் ஓராண்டுக் காலத்திலாவது முனைந்து முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லாவிட்டால், 18 ஆண்டு கால ஆட்சியிலே அனுபவித் திருக்கும் கொடுமைகளுக்கு, ஏழைகளுடைய துயரத்திற்கு, வாட்டத்திற்கு; வறுமைக்கு வடித்த கண்ணீருக்கு, விடுத்த பெருமூச்சுக்கு 1967ம் ஆண்டு பதில் சொல்லித் தீரவேண்டிய கட்டத்திலே இந்த அமைச்சரவை இருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, இடைக்கால நேரத்தில் இதையாவது செய்தார்கள் என்ற பெயரைப் பெரும் அளவிலே இந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

உரை : 9 நாள் : 29.3.1971

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தத் துணை மதிப்பீடுகள் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு சுதந்திராக்கட்சி தலைவரும், மாற்றுக் கட்சிகளின் உறுப்பினர்களும் இங்கே விளக்கமாகப் பேசி இருக்கிறார்கள். ஆக்க பூர்வமான யோசனைகளைப் பரிசீலித்து தக்கது செய்வதற்கு முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை மாத்திரம் அவர்களுக்குக் கூறிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

திரு. ஹாண்டே அவர்கள் பேசுகிற நேரத்தில் முதலமைச்சர் உறுதி மொழி கொடுக்க வேண்டும். கொடுக்க வேண்டுமென்று பல விஷயங்களில் உறுதி மொழி கேட்டார்கள். உறுதி மொழி கொடுப்பது பெரிதல்ல. ஆனால் கொடுக்கிற உறுதிமொழிகள் காப்பாற்றத்தக்க அளவுக்கு இருந்திட வேண்டும்.

ஆகவே அவைகளை எல்லாம் பரிசீலித்து நிச்சயமாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்வேன் என்ற உறுதிமொழியை மாத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அவர்களுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அவர்கள் கல்லூரியின் விரிவுரையாளர்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள். இரண்டாவதாக சம்பளக் குழுவில் இருக்கும் குறைபாடுகளை நீக்குவதற்கு இன்னொரு சம்பளக் குழுவைக் கூட்டலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். இரண்டாவது சம்பளக் குழுவின் செயலாளரே தொடர்ந்து அந்தக் குறைபாடுகளை எல்லாம் கவனிப்பதற்கு அந்தப் பணியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அப்படி அந்தப் பணி செவ்வனே நடைபெறும் என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஓய்வு ஊதியம் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு இரண்டாவது சம்பளக் குழு ஆராய்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தாலும், புறக்கணிப்படக்கூடாதது என்பது எது, நியாயமானது எது என்பதை அரசு நிச்சயமாகக் கவனிக்கும் என்பதை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பல இடங்களில் நடைபெறுகிற வன்முறைச் சம்பவங்களை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் நேற்றைய தினம் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் தரப்பட்டபோது இந்த அவையிலே அதைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறேன். அவர்களே சொன்னார்கள். எண்ணூரில் 3 கொலைகள் விழுந்தன. முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டார் என்றும் சொன்னார்கள். இந்தக் கொலைகள் எப்படி விழுந்தன, யார் பக்கம் அதிகம் விழுந்தது என்று பார்க்காமல், அப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்து கொள்வதற்கும், தடுத்து நிறுத்துவதற்கும் எல்லாக் கட்சியில் இருப்பவர்களும் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போலவே காவல் துறையும் கடமைப்பட்டு இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கு இல்லை. ஆனால் திடீர், திடீர் என்று ஏற்படும் சம்பவங்களுக்கு அங்கே எல்லாம் காவல்துறை முன்கூட்டியே போய் இருப்பது என்பது இயலாத காரியமாகி விடுகிறது. இந்த மன்றத்திலிருந்து கூறுகிறேன். காவல் துறை எந்தவிதமான பாரபட்சமின்றி, நடுநிலையில் நின்று நிச்சயமாகப் பணிபுரிபவர்கள், அப்படிப் பணிபுரிய வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்.

அம்மையார் சொன்னார்கள், நொச்சிக் குப்பத்தில் நடந்த கலவரத்தைப் பற்றி அப்படிப்பட்ட புகார் என்னிடத்தில் வந்திருக்கிறது. அதைப்பற்றி விசாரித்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

துணை மதிப்பீடுகள் தேவைதானா என்ற பிரச்சினையை அவர்கள் இங்கே கிளப்பினார்கள். துணை மதிப்பீடுகள் என்பது நாம் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட, உறுதி செய்யப்பட்ட செலவு திட்டத்திற்கு மேலும் தேவைப்படுகிற

தொகையைப் பெற்றுக் கொள்வதுதான். அப்படி தேவைப்படுகிற தொகை ஒதுக்கப்படாவிட்டால், கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட முடியாமல் போய்விடும்.

சூரிய காந்திப் பூ முக்கியமான பிரச்சினையா என்று கேட்டார்கள். யாருடைய தலையிலும் சூடுவதற்காக சூரியகாந்திப் பூ பயிரிடப்போவதில்லை. 'சன்பிளவர்' என்கிற எண்ணெயைத் தயாரிப்பதற்காகத்தான். இது இரண்டு விதத்தில் உபயோகமாகிறது. இந்த எண்ணெய் நல்ல எண்ணெயைவிட, தேங்காய் எண்ணெயைவிட மிகச் சிறந்தது. சில மருத்துவர்கள் எண்ணெய் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று சொல்வார்கள். நல்ல எண்ணெய் சேர்த்துக் கொள்ளக்கூடாது. தேங்காய் எண்ணெய் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பார்கள்.

அதிலே பெரும்பாலும் நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் 100க்கு 90 பேர் அப்படிப்பட்ட சங்கடத்தில் அகப்பட்டிருப்பார்கள். மேடை ஏறிப் பேச ஆரம்பித்தாலே வயிற்றுநோய் தானாக வந்துவிடும். அப்படிப்பட்ட சங்கடத்தில் அகப்பட்டிருப்பார்கள். மேடை ஏறிப் பேச ஆரம்பித்தாலே வயிற்றுநோய் தானாக வந்துவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் சூரியகாந்தி எண்ணெய் உபயோகித்தால், அதன் மூலமாக எல்லாவிதமான ஹீட்டும் குறையும். இந்த எண்ணெய் எல்லா வகையிலும் நேர்த்தியான எண்ணெய் என்று சொல்லப்பட்ட காரணத்தாலே, நம்முடைய கூட்டுறவு அமைச்சர் மேல் நாடுகள் சென்று வந்த நேரத்தில் அந்த சூரியகாந்திப் பூவைப் பற்றி, சூரியகாந்தி எண்ணெயைப் பற்றி அடிக்கடி வற்புறுத்திச் சொன்ன காரணத்தாலே, அது மேலை நாடுகளில் நல்ல வகையில் பயன்படுவதை நானும் சென்று பார்த்து வந்த காரணத்தாலே, அந்த சூரிய காந்தி விதைகளை இங்கே உற்பத்தி செய்ய சொன்னோமே தவிர வேறு அல்ல. அந்தப் பூ சூடுவதற்கு அல்ல, எண்ணெய் ஆகுவதற்குத்தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (சிரிப்பு).

சக்தி பைப்ஸ் பற்றிச் சொன்னார்கள். சக்தி பைப்ஸ் என்ற நிறுவனம் இன்று ஆரம்பித்தது அல்ல, நீங்களெல்லாம் ஆரம்பித்து நல்ல போஷாக்கில் வைத்து இருந்த நிறுவனம்தான். அதனுடைய போதாத காலம் அந்த நிறுவனத்தில் பொருளாதார சிக்கல் ஏற்பட்டு அது மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே உருவானபோது அங்கே வேலை செய்யும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்ற அச்சம் ஏற்பட்டது. எப்படி வேறு பல தனிப்பட்ட நிறுவனங்களில் இந்த அரசு பொறுப்போடு நடந்து கொண்டதோ, முன் நோக்காக, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்க்கு எந்த அளவுக்கு உதவி செய்ததோ, அதே போல் சக்தி பைப்ஸ் நிறுவனத்திற்கும் உதவி அளித்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக நாம் போட்டு இருக்கும் 14 கோடி ரூபாய் குடிநீர்த் திட்டத்திற்குத் தரமான பைப்கள் தேவைப்படும். நம்முடைய மாநிலத்தில் இருக்கும் ஒரே ஒரு பைப் செய்யும் தொழிற்சாலை சக்தி பைப்ஸ் நிறுவனம்தான். அதையும் மூடிவிட இந்த அரசு விரும்பாத காரணத்தால் அவர்களுக்கு இந்தத் தொகை ஒதுக்கியதே தவிர எந்த விதமான விருப்போ, வெறுப்போ அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே திரு. சுப்பு அவர்கள் பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் இந்த அரசு நல்ல முறையிலே கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். எடுத்துச் சொல்லப்பட்டவைகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லாத காரணத்தினால் அவைகள் கவனிக்கப்படமாட்டா என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். நேரம் இல்லாத காரணத்தினால்தான் அவை விடப்படுகின்றனவே தவிர, வேறு அல்ல என்பதையும் குறிப்பிட்டு, இவைகளையெல்லாம் ஆதரித்து ஒப்புதல் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

உரை : 10 நாள் : 29.6.71

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் மீது மாமன்றத்து உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய விழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல், அவரோடு சேர்த்து 100 பேர் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு நல்ல கருத்துக்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 64 பேரும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே 11 பேரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலே 6 பேரும் முஸ்லீம் லீகின் சார்பிலே 4 பேரும் பி.எஸ்.பி கட்சியின் சார்பிலே 4 பேரும் சுதந்திரக் கட்சியின் சார்பில் 3 பேரும், பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் 3 பேரும், தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஒருவரும், சுயேச்சைகளில் 3 பேரும் நியமன உறுப்பினர் ஒருவருமாக 100 பேர் இந்த விவாத அரங்கிலே கலந்து கொண்டு நிதி நிலை அறிக்கைபற்றி எதிர்ப்பான கருத்துக்களையும், ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்தமைக்காக அந்தக் கருத்துக்கள் ஏதாவது ஒரு வகையில் இந்த அரசின் காரியங்களுக்குப் பயன்படும் என்ற நிலையில் நான் நன்றி கூறி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்திலே கலந்து கொண்டு உரை ஆற்றிய உறப்பினர்களில் பலர் உள்ளபடியே இந்த நிதிநிலை அறிக்கை தங்களுடைய உள்ளத்துக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்பதை அவர்களுடைய மனச்சாட்சியே கூறினாலும் இந்த மன்றத்திலே அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து

இருக்கின்ற காரணத்தால் எதிர்த்துத் தீரவேண்டிய அவசியத்திற்கு ஆளானார்கள் என்பதையும் நான் மறந்து விடவில்லை. இதிலே புரட்சி எதுவுமே இல்லை, புதுமை எதுவுமே இல்லை என்று பத்திரிகைக்குத் தலைப்புச் செய்தியை முதலில் கொடுத்துவிட்டு நம்முடைய மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தன்னுடைய உரையை தொடங்கினார்கள். இதிலே புரட்சியும் புதுமையும் இருக்கிறதா இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற திட்டங்கள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்திலேதான் தெரியுமே அல்லாமல், நாம் நிதிநிலை அறிக்கையைப் படித்து முடிந்ததும், உடனடியாக இந்த மாமன்றம் தலைகீழாகச் சுழன்று ஒரு பெரிய புரட்சிகரமாக மாறும் என்று நானும் எண்ண வில்லை. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் எண்ணியிருக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

பல உறுப்பினர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் புகழ்கின்ற நேரத்தில், நம்முடைய டாக்டர் ஹண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது? மயக்க மருந்து உட்கொண்டவர்கள் அதாவது ''க்ளோரபார்ம்'' கொடுக்கப் பட்டவர்களைத் தவிர மற்ற யாரும் இதைப் புகழ முடியாது என்று சொன்னார்கள். (க்ளோரபார்ம்'' கொடுக்கப்பட்டவர்கள் பேசவே முடியாது. நல்ல டாக்டர்களுக்கு இது தெரியும்). (கரவொலி). ஆனால் என்ன காரணத்தாலோ நம்முடைய டாக்டர் ஹண்டே அவர்கள் இந்த பட்ஜெட்டைப் புகழ்கிறவர்கள் எல்லாம் 'க்ளோரபார்ம்'' மயக்கத்தில் இருப்பவர்கள் என்று குறிப்பிட்டார்கள். இது பொருளாதாரம் தெரியாமல் தயாரிக்கப்பட்டு இருக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கை என்று ஹண்டே அவர்கள் குற்றம் சாட்டினார். வரிகள் போடுவதால் விலைவாசி உயரும் என்ற ஒரு கருத்தும், உயராது என்கிற ஒரு கருத்தும் பொருளாதார மேதைகளால் சொல்லப்பட்டு இருக்கிறது. கீன்ஸ் மாஸ்கிரேவ் போன்ற மேதைகள், வரிகள் போடுவதால் மக்களிடத்திலுள்ள பணத்தைக் குறைப்பதன் மூலம் விலைவாசி குறையும் என்ற தத்துவத்துக்குச்

சொந்தக்காரர்களாய் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஹண்டே அவர்கள் சொல்வதுபோல் நான் பொருளாதார மேதை அல்ல. நான் அந்த மேகா விலாசத்தின் அடிப்படையில் இந்த அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன் என்று வாய்ப்பறை அடித்துக் கொள்ளவும் நான் தயாராயில்லை. நானும் எனது கட்சியும் கொண்டிருக்கிற பொருளாதார மெல்லாம் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய சாதாரண நடுத்தர பாட்டாளி மக்கள் தொழிலாளி மக்கள் நல்வாழ்வைப் பெறவேண்டும், அதற்கேற்ற வகையிலே என்னென்ன திட்டங்கள் தீட்டவேண்டும் என்கிற அடிப்படையிலே எதை யோசிக்கிறோமோ அதைத்தான் நாங்கள் கொண்டுள்ள அல்லது நாங்கள் சிறப்பாகப் போற்றுகின்ற பொருளாதாரமாகக் கருதிக் கொண்டு இருக்கின்றவர்கள்.

மத்திய அரசு இன்றைக்கு இந்த மாநில அரசுக்கு இட்டிருக்கின்ற கட்டளைப்படி ஆண்டு ஒன்றுக்கு திட்டத்தின் வாயிலாக 70 அல்லது 80 கோடி ரூபாய்தான் செலவிடலாம் என்ற வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்த 70 கோடி அல்லது 80 கோடி ரூபாய் என்கின்ற வரையறையில் திட்டங்களை வரையறுப்பது முடியாது என்ற காரணத்துக்காக, நம்முடைய ஓராண்டுத் திட்டத்தை 100 கோடியிலிருந்து 150 கோடி ரூபாய் வரையில் உயர்த்தி, அதற்கான நிதிவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கின்ற ஒரு நல்ல அரசின் இலக்கணத்துக்கு உட்பட்டு, வழிவகைகளை எல்லாம் ஆராய்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தின் முன்னால் நாங்கள் வைத்திருக்கிறோம்.

நண்பர் மாரிமுத்து பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். ரெவின்யூ கணக்கை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கேற்ற வகையிலே வரிகளை எல்லாம் குறைத்துக் கொள்ளலாம் என்று அவர் சொன்னார். மூலதனக் கணக்கையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்துத்தான் மொத்த வருமானம் எவ்வளவு, மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும் சேர்த்து, ஊதிய உயர்வை எப்படி சரிக்கட்டுவது என்று ஆராய்ந்து, மூலதனக் கணக்கிலே தொழில்

வளர்ச்சிக்கென்று நாம் முதலீடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

கட்டிடங்கள், பொதுத்துறை என்ற தலைப்பிலே பல்வேறு கட்டிடங்கள், அரசுக்கு ஆதாயம் கிடைக்காத வகையிலேயுள்ள பல்வேறு வசதிகளை இயற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம் நாம்.

இவைகளெல்லாம் மக்களுடைய வசதிக்காகத்தானே தவிர, அரசுக்கு ஆதாயம் வரவேண்டுமென்ற நோக்கத்தில் நாம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவில்லை. எனவே இந்த மூலதனம் என்ற அம்சத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளவோ ஒளிந்து கொள்ளவோ முடியாத நிலையிலிருக்கிறோம்.

இது போன்ற மூலதனச் செலவுகளுக்கு வருவாய்க் கணக்கிலேதான் மிச்சத்தை நாம் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதுவும் போதாததால் மொத்தமாக எல்லாக் கணக்குகளிலும் ஏற்படும் துண்டு எவ்வளவு என்று பார்க்க வேண்டியிருக்கிறது என்று அவர்களுடைய சந்தேகத்திற்கு விளக்கமாகத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் உறுப்பினர்கள் வரவேற்கும் திட்டங்கள் ஏராளம். ஆனால் தோழமை கட்சியிலே உள்ள சில பேர் கூட, குறிப்பாக தஞ்சைப் பெரியவர் மணலி கந்தசாமி அவர்களைப் போன்ற ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள், மக்கள் நல்வாழ்வுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களைப் பாராட்டாமல் இருப்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு மனக்குறைதான். ஒரு வேளை முதலமைச்சர் தஞ்சாவூர்காரர் என்பதற்காகவோ என்னவோ, தஞ்சாவூர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி இருக்கக்கூடும்.

அவர்கள் இவ்வளவு நல்ல காரியங்கள் செய்வதற்கு விற்பனை வரியிலே அரை சதவீதம் உயர்த்தினால்தான் என்ன, என்று கேட்ட நேரத்தில் எனக்கு மிகத்தெம்பாக இருந்தது. இவ்வளவு தூரம் பழுத்த அனுபவம் வாய்ந்த ஒரு நல்லவருடைய, வல்லவருடைய ஆதரவு இந்த அரசுக்கு இந்த வரி விதிப்பிலே கிடைத்திருக்கிறது என்பதில் எனக்கு

மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் மணலி பேசிய பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் தமக்கிடையே நடத்திய ரகசிய கூட்டத்தில் என்ன முடிவு எடுத்தார்களோ எனக்குத் தெரியாது. அவர்கள் நேற்றைய தினம் இந்த வரியை எதிர்த்துப் பேசியதோடு இன்றைக்கும் அதன் தொடர்பாகப் பேசியிருக்கிறார்கள்.

வரவேற்ற திட்டங்கள் என்று எடுத்துக் கொண்டால், எல்லா மாவட்டங்களிலேயும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கிற மனைகளைச் சொந்தமாக்க வேண்டும் என்கிற திட்டம் முதற்கட்டமாகத் தஞ்சை மாவட்டத்திலே நிறை வேற்றப்படவிருக்கின்றதை இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பலராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது.

ஐம்பதாயிரம் ஏக்கர் காட்டு நிலத்தை இந்த ஆண்டு புதிதாக விவசாயிகளுக்கு தரத்திட்டம் தீட்டப்பட்டிருப் பதையும் அனைவரும் வரவேற்றிருக்கின்றார்கள். இதிலெல்லாம் கேரளாவைப் பின்பற்ற வேண்டுமென்று திரு கே.டி.கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி முதன் முதலாகப் பீடத்தில் அமர்ந்த காலம் 1957. அந்த ஆண்டிலேயிருந்து 1971ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட ஒரு பதின்மூன்று பதினான்காண்டுக் காலம் அவர்கள் தொடர்ந்து ஆட்சிப் பீடத்திலே இல்லாவிட்டாலும் அந்தக் கொள்கைகள் கேரள மாநிலத்தில் பரவலாக்கப்பட்டு அதற்கு ஏற்றவண்ணம் அந்த மண் பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

ஆனால் கேரளாவிற்கு கிஞ்சிற்றும் சளைக்காத அளவுக்கு புதுமைகளையும் அமைதியான புரட்சிகளையும் ஏழை எளியோர் வாழ்க்கையிலே செய்திட வேண்டும்; ஏழைகள் நிமிர்ந்து நடக்கவும், அவர்கள் முகத்திலே புன்னகை காணவும் வழிபிறக்க வேண்டுமென்று எண்ணி செயலாற்றுகின்ற இந்த அரசு, ஆட்சிப் பொறுப்பேற்று எத்தனை ஆண்டு காலமாகிறது என்பதனையும், இடையிலே எவ்வளவு பெரிய சோகப் புயல்களை எல்லாம் ஆளும் கட்சி தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதனையும் உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

பயணிகள் பேருந்துகளை தேசியமயமாக்கியிருப்பதை நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள். அவைகளுக்கு உச்ச வரம்பு கட்டப்பட்டிருப்பதையும் வரவேற்றிருக்கிறீர்கள்.

வேலைவாய்ப்பிற்காக வழி செய்திருக்கிறோம் என்பதையும் இம்மாமன்றத்தின் உறுப்பினராகிய நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்.

காவல் துறைக்கு எஸ்.எஸ்.எல்.சி படித்தவர்கள் 1000 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்ஜீனியர்கள் மூவாயிரம் பேருக்கு சிறுதொழில் துவங்க கடனுதவி செய்யப்படும். பட்டதாரி மாணவர்கள் 2000 பேருக்கு இளைஞர்கள் அணி மூலமாக வாய்ப்பு தரப்படும். கிராமப் புறங்களிலே மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு கிடைக்கும் தொகை, 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப் பளிக்கப் போதாதென்று வாதாடி வருகிறோம். முடிவு தெரியும் வரையிலே காத்திராமல் - நம் மாநில அரசின் மூலமாக மேலும் 15 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பளிக்கிறோம். ஆக 30 ஆயிரம் பேருக்கு கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புத் தருகிறோம். இதுவன்றி 150 மருத்துவர்களுக்கும் 200 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்புத் தருகிறோம். இது போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இதிலே கட்சிக் கண்ணோட்டம் இருக்கக்கூடாதென்று எதிர்கட்சித் தரப்பிலேயிருக்கின்றவர்களும் தோழமைக் கட்சியிலே உள்ளவர்களும் எடுத்துரைத்ததை நாங்கள் மறந்துவிடமாட்டோம்.

இதற்கெல்லாம் தகுதியானவர்கள் இதற்கு ஆற்றல் படைத்தவர்கள் ஆகியவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பவார்களே தவிர, இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இவர் இவரை அறிவார்; எனவே தேர்ந்தெடுக்க வேண்டும் என்கின்ற அளவிலே - தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் தேர்ந் தெடுக்கப்படுவார்கள்.

தகுதி, திறமை யாருக்கிருந்தாலும் அவர்கள் அதுவரை எந்தக் கட்சியிலே இருந்தாலும் அவர்கள் உள்ளத்திலேயே

எந்தக் கட்சி உணர்வு இருந்தாலும் அவைகளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் திறமைசாலிகள்தான், இந்த அரசினுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றக்கூடிய ஆற்றலுள்ளவர்கள் தான் - தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இது உறுதி.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் ஒரு திட்டத்தை இந்த அரசு தயாரித்து அதற்காக நிதியினைத் திரட்டி வருகிறது. அது பற்றி நமது பொன்னப்ப நாடார் அவர்கள், இது ஒரு நல்ல திட்டம், ஆனால் இதிலே ஊழல் நடக்க விடக்கூடாது என்று கூறினார்கள். எல்லாத் திட்டங்களையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கக்கூடாது. நாம் நிதி சேர்ப்பதோ பிச்சைக்காரர்களுக்கு, அதில் சிலர் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்கள் பிச்சைக்காரர்களுக்குத் துரோகம் செய்கிற கொடியவர்கள், தீயவர்கள் என்கிற கணக்கிலே எடுத்துக் கொள்ளவேண்டுமே அல்லாமல், இதற்கெல்லாம் ஏன் சீரியல் நெம்பர் போடவில்லை என்று கேட்பதிலே அர்த்தமில்லை.

கொடிநாள் என்று எத்தனையோ ஆண்டு காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தக் கொடிநாளில் கொடிகளுக்கு விலை இவ்வளவு என்று குறிக்கப்படுகிறது. அந்தக் கொடிகள் பள்ளிகளில் - சிறார்களிடத்தில் குறிப்பிட்ட தொகைக்கு விற்கப்படுகின்றன. அப்படி விற்கப்படுகின்ற எந்தக் கொடிக்கும் சீரியல் நம்பர் போடப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகவே, அச்சடிக்கப்பட்ட அட்டைகள் எவ்வளவு? அப்படி யாரும் அச்சடிக்க முடியாதபடி அதிலே என்னுடைய கையெழுத்து பதிக்கப்பட்டிருக்கிறது.

உத்தமர் காந்தியடிகள் மூன்று பிச்சைக்காரர்களுக்கு சிகிச்சையளிக்கின்ற படம் இன்னொரு புறத்திலே குறிக்கப் பட்டிருக்கிறது. இவைகளைக் கணக்கிட்டு ஒவ்வொரு இடத்திலும் தரப்பட்டு, இதன் மூலமாக இந்த நிதிக்கு இவ்வளவு தொகை வரவேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே தவறு நடந்துவிடாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தவறுகள்

சுட்டிக் காட்டப்படுமேயானால் அரசு சார்பில் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நான் தயாராயிருக்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும் 2400 பொறியாளர் களுக்கு வேலை வாய்ப்பும், பின்தங்கியோர், ஹரிஜனமக்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்குச் சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. இவைகளன்னியில் பல குடிநீர் திட்டங்களும் இந்த வரவு செலவுத் திட்டத்திலே 'பார்ட் 2 ஸ்கீமில்' சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால்தான் நாம் வரிகளைப் போடவேண்டிய நிலைமைக்கு ஆளாகி யிருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொன்ன திட்டங்களால் மட்டும் நமது மாநிலத்தின் தேவைகள் பூர்த்தி அடைந்துவிடுமா என்றால் இல்லை. இன்னும் ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகளையெல்லாம் – இங்கே பேசிய உறுப்பினர்கள் தொகுதி வாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிதி நிலை அறிக்கை விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மறுபடியும் விரும்பினால் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து படித்துக் கொள்ளலாம் என்கிற நிலைமை இருந்து வந்திருக்கிறது. அவைகளில் சில மறந்தும் விடலாம். கூடிய வரையில் அந்த நிலைமைக்கு இடம் தராத வகையில் தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றிக் கோடிட்டுக் காட்டுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் அவைகளை ஆராய தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வருவாய் வாரிய உறுப்பினர்களில் ஒருவர், ஆக மூவர் கொண்ட குழு அமைக்கப்பெற்று அந்தக் குழு, பேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து ஒவ்வொரு துறையின் தலைவர், துறையினருடைய செயலாளர்கள் அலுவலர்கள் இவர்களோடு கலந்து ஆராய்ந்து அமைச்சர் அவைக்கு அறிக்கைகளை அறிவித்து, அதிலே பெரும்பாலானவற்றை இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேயே நிறைவேற்ற வழிவகைகள் வகுக்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காகத்தான் - நாம் எப்படியும் தவிர்த்து விடலாம் என்று எண்ணினால்கூட வரிகளின் மூலம் அவற்றிற்குத் தேவையான நிதிவாயில்களைப் பெருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். விற்பனை வரியில் கூட 3 சதவீதம் வரியை 3 ½ சதவீதமாக ஆக்கிய அதே நேரத்தில் நேற்று அந்தத்துறை தொடர்புடைய அமைச்சர் அவர்கள் இங்கே சில சலுகைகளை அளித்திருக்கிறார்கள். 15000 ரூபாய் வரை டர்னோவர் உள்ளவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்பதை மாற்றி 25000 ரூபாய் வரை டர்ன்ஓவர் உள்ளவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்றும் ரூ.75000 வரை காம்பவுண்டிங் பண்ணலாம் என்பதை ஒரு லட்ச ரூபாய் வரை காம்பவுண்டிங் பண்ணலாம் என்றும் சலுகைகளை நேற்றைய தினம் தெரிவித்து இருக்கிறார்கள்.

பத்து சதவீதம் சர்சார்ஜ் விற்பனை வரி பற்றி இந்த மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். வேறு சில உறுப்பினர்கள் இது சென்னை நகரத்துக்கு மாத்திரம் இருக்கிற காரணத்தினால் இதைப் பயன்படுத்திக் கொண்டு சென்னை புறநகர்ப் பகுதியிலுள்ளவர்கள் இதை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ளக்கூடும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தோம்.

சென்னைக்கு மட்டும்தான் இந்த வரியா? கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற நகர்ப் பகுதிகளுக்கு இந்த வரி கிடையாதா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆகவே சென்னையின் புற நகரப்பகுதிகளுக்கும் கோவை, திருச்சி, மதுரை, சேலம் போன்ற நகரங்களையும் அவற்றின் புறநகர்ப்பகுதிகளையும் இணைத்து இதே விற்பனை வரி சர்சார்ஜை விதிக்கலாம் என்று உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க, 10 சதவிகிதம் என்று இருக்கும் மேல் வரியை 5 சதவிதமாகக் குறைத்து விதிக்கலாம் என்று கருதுகிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். பத்து சதவீதம் என்று இருந்தது 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரிலும் மற்ற நகரங்களிலம் உள்ள பல்லாயிரக்கணக்கானவர்கள் ஒரு கிரவுண்ட்வரை உள்ளவர் களுக்கு நகர்புற நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மனைவரியின் மூலமாக சென்னை நகரிலும் பிற இடங்களிலும் ஒரு கிரவுண்ட் வைத்திருக்கிற பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வரிவிலக்கு செய்யப்பட்டதன் மூலமாக அதன் மூலம் ஒரு சமதர்ம நோக்கோடு அவர்களெல்லாம் இந்த வரியிலிருந்து விடுபடக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டதும் வேளாண்மை வரிபற்றி நிருபர்களிடத்திலே கருத்து தெரிவிக்கையில் உறுப்பினர் திரு கே.டி.கே. தங்கமணி அவர்கள், கிராமங்களிலே அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களை வரிகள் தொடவில்லையென்று சொன்னார்கள். வேளாண்மை மூலம் அதிக ஆதாயம் பெறக்கூடியவர்களை மட்டுமே பாதிக்கின்ற அளவுக்குச் சில மாறுதல்களைச் செய்திருக்கிறோம். அதற்கான மாறுதல் சம்பந்தப்பட்ட மசோதா இந்த மன்றத்திலே வரவிருக்கிறது.

இந்த வரிகளை எல்லாம் குறிப்பிட்ட டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு கையால் கொடுத்துவிட்டு இன்னொரு கையால் திரும்பி வாங்கிக் கொள்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 2400 கோடி ரூபாய் இந்த 2400 கோடி ரூபாயில் அரசு ஊழியர்கள் ஊதியமாகப் பெறுகின்ற தொகை 100 கோடி ரூபாய். இது இந்த மாநில வருமானத்தில் 20ல் ஒரு பங்காகும். இப்போது கூடுதலாக எழுப்புகின்ற வரிகள் மூலம், நிதி வாயில்கள் மூலம் கிடைக்கின்ற தொகை 25 கோடி ரூபாய் என்றால் அதில் ஒரு பங்கைத்தான் ஒரு கோடி ரூபாய்க்கான வரிப் பளுவைத்தான் அரசு ஊழியர்கள் ஈரக்க வேண்டி இருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்காக இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசுபடி 25 கோடி ரூபாய் ஊதிய உயர்வு தந்திருக்கிறோம். அதனை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை வாரியம், குடிசைகளை மாற்றி நல்ல கட்டிடங்களை ஏழை எளிய மக்களுக்காக கட்டித்தருகிற

திட்டம் நல்ல திட்டம். குடிநீர் வாரியத் திட்டம் இவைகளுக்காக நாம் ஏராளமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

குறிப்பிட்ட காலத்திற்குள் 1972ம் ஆண்டு முடிவதற்குள்ளாக தமிழ்நாட்டிலே எங்கு பார்த்தாலும் மின்னொளி இல்லாத கிராமமே இருக்கக்கூடாது என்று சூளுரைத்து, அத்திட்டத்தை நிறைவுபடுத்துகிறோம்.

''இதுவரை தமிழ்நாடு முதல் இடம் வகித்துவந்தது. ஆனால் இப்போது அந்த வகையில் 2வது இடத்திற்கு வந்துவிட்டது. அரியானா முதல் இடத்திற்கு வந்துவிட்டது'' என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அது முதல் இடத்தில் இருக்கிறதா என்பதை வடக்கே உள்ள பத்திரிகைகள் வெகுவாக எழுதிக் கொண்டிருக் கின்றன. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தின் பிரச்சினைகளில் தலையிடுவது நல்லதல்ல. அந்த சர்ச்சையில் நான் இறங்கவும் இல்லை. அரியானா முதலிடம் பெற்றது என்றால் அது தமிழ்நாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு - தமிழக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு கூட இல்லை. வட ஆர்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மூன்று மாவட்டங்கள் சேர்ந்த தொண்டை மண்டலம்தான் அரியானா.

நாம் எல்லா கிராமங்களுக்கும் உண்மையிலேயே விளக்குப் போட தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். இன்னும் 2, 3 ஆண்டுகளில் ஒளி வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலைக்கு ஏற்பாடுகள் செய்வோம் என்று சூளுரைத்து அதன் காரணமாக உங்கள் பாராட்டுதலைப் பெறும் நிலைக்கு ஆளாவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத் திட்டக்குழு பற்றி இங்கே பேசப்பட்டது. திட்டக் குழுவின் பணிகள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை என்று தங்கமணி அவர்கள் கூறினார். ஏற்கனவே திட்டக்குழுவின் பணிகள் பற்றிய பட்டியல் அறிவிக்கப்பட்டு அது இதழ்களில் வந்துள்ளது. அதை உறுப்பினர்களுக்கும் வழங்கச் செய்வேன்.

மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்ட நேரத்தில் இதை ஒரு அதிர்ச்சியுடன் மற்ற மாநிலங்கள் பார்த்தன.

இன்றைக்கு ஒவ்வொரு மாநிலமும் திட்டக் குழு அமைக்க முன் வருகிற காட்சியைப் பார்க்கிறோம். திட்டக்குழு அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருப்பது ஒரு நல்ல அம்சம் ஆகும். நமது திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்தியில் அமைச்சராக இருந்த போதுதான் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது என்று பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். அவர் சுப்பிரமணியத்தைக் குறிப்பிட்டார்களே தவிர,அசோக் மேத்தாவும் அதற்குக் காரணம் என்பதைக் குறிப்பிடவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்பது பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும். அவர் பக்கத்தில்தான் இருக்கிறார். அது தவிர பெருமதிப்புக்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த போதுதான் இந்த நாணய மதிப்புக் குறைப்பு செய்யப்பட்டது. இது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பது அல்ல. அப்போதெல்லாம் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகின்ற அளவில் இந்த மாமன்றத்தில் இருந்தார்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள். ஆனால் எங்களுடைய அதிர்ஷ்டம் இப்போது மத்திய அரசைக் குற்றம் சாட்டும் அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணி எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்; புளகாங்கிதம் அடைகிறேன்.

மத்திய மாநில உறவுகளைப் பற்றிய ராஜமன்னார் அவர்களுடைய அறிக்கையை அநேகமாக அனைவரும் இங்கே வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் இதிலே ஏதோ பெரிய அபிப்ராயம் சொல்லப் போவதாகச் சொல்லிவிட்டு, ஏதும் சொல்லவில்லை. ஒரு வேளை ராஜமன்னார் அறிக்கை விவாதத்துக்கு வரும் நேரத்தில் அதைப் பற்றிப் பேசுவார் என்று நான் கருதுகிறேன். நாம் மாநிலத்துக்கு சுயாட்சியும் மாநிலத்துக்கு அதிக அதிகாரங்களும் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி கூட, மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது.

திருமதி த.ந. அனந்தநாயகி: என்னவோ இன்றைக்குக் கூடி தீர்மானம் போட்டோம் என்பது சரியல்ல. 1967லேயே எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களால் கூறப்பட்டிருக்கிறது. பல மாகாணங்களிலும் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. அகில இந்திய ரீதியில் இந்தத் தீர்மானம் போடப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதை யார் சொன்னாலும் சரி போடப்பட்ட நேரம்தான் முக்கியம். யார் முன்னாலே சொன்னார்கள் என்பதல்ல. ஆனால் மாநிலங்கள் அதிக அதிகாரம் பெறவேண்டும், மாநில சுயாட்சி பெறவேண்டும் என்கிற கருத்தைப் பற்றி நம்முடைய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 'கல்கி' ஏட்டில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் அதை நான் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

''சார்லஸ் லாம்ப் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் கூறுகிற ஒரு வேடிக்கைக் கதை. ஆதி காலத்தில் சீனத்தில் ஒரு வீடு பற்றி எரிந்தபோது அதிலிருந்த ஒரு பன்றியும் வெந்து மாண்டது. அந்தப் பிராணியைத் தொட்டவன் சூடு பொறுக்கமாட்டாமல் விரலை வாயில் வைத்துக் கொண்டான். வெந்த பன்றி மாமிசம் மிகச்சுவையாக இருப்பதாகக் கண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் தங்கள் வீடுகளை எல்லாம் கொளுத்தி, அங்கிருந்த பன்றிகளை வேகவைத்து ருசி பார்த்தார்கள். இப்படியாகத் தானே ஊனைச் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது. இந்த வேடிக்கைக் கதையை நினைவூட்டும் முறையில் சில முதன் மந்திரிகள் நடந்து கொள்கிறார்கள். அதாவது மத்திய சர்க்காருக்கு எதிராக ராஜ்ய சர்க்கார் அதிக சுயாதீன உரிமை பெற வேண்டும் என்ற தங்களது கருத்துக்கு கிழக்கு வங்கத்தின் கோரிக்கை வலுவூட்டுவதால் பங்களா தேசக் கொந்தளிப்பை இந்த முதன் மந்திரிகள் வரவேற்கிறார்கள்'' என்று அவர் சொல்லியிருக்கிறார். உள்ளபடியே பன்றிக் கறியைத் தொட்டு சுவைத்துப் பார்ப்பதற்காக வீட்டைக் கொளுத்தியவர்கள் குற்றப் பட்டியலில், நேற்றைய தினம் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியையும் - ராஜாஜி அவர்கள் கூற்றுப்படி சேர்த்துவிட்டிருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

ஆனால் பன்றிக் கறியை முதலில் தொட்டுப் பார்த்து, அது சுவைக்கிறது என்று சொன்னவர் யார் என்று பார்த்தால் -

''சமஸ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். நாம் வகுத்த இந்திய அரசியலமைப்பு இதை கவனத்தில் கொள்ளத் தவறிவிடவில்லை. ஆயினும் 1947க்குப் பிந்திய இந்திய அரசியல் சரித்திரமோ, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் சபலம் எப்படி இடையறாது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து, அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

இதைச் சொன்னவர் ராஜாஜி அவர்கள். ஆக பன்றிக்கறி சுவைக்கிறது என்று முதலில் எடுத்துக் காட்டியவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் – ''நமது ஜனநாயகம்'' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார் - ''பிரதேச ஆட்சியை பலவீனப்படுத்தும் போக்கு'' என்ற தலைப்பில் அந்தப் புத்தகத்தின் 53ஆம் பக்கத்தில் அவர் எழுதியுள்ள கட்டுரையைத்தான் இங்கே குறிப்பிட்டேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : There is difference of opinion between the two points. That was when Rajaj wanted us to have more financial resources. He introduced sales tax which is giving us plenty of Revenue now. Rajaji objects to this particular habit of fighting with the Centre for anything and every thing - seeing the manner in which it is going on in West Bengal and Tamil Nadu, if it were to spread to the other States, it will be bad for the country. As a visionary, Rajaji is primarily concerned with it. In the manner in which it is being done, it does not augur well. Rajaji as one interest in the welfare of the country is concerned with it. It is very easy to deride and make fun of him. But, we must remember, as a visionary, he has said this does not augur well and will bring us down as between the Centre and State.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்தப் புத்தகம் 1958ல், வெளியிடப்பட்டது. 1958லேயே காலம்

பக்குவமாகக் கனிந்திருக்கிறது. ஆனால் 1971ல் காலம் பக்குவப்படவில்லை என்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. நாங்களும் மத்திய அரசு பலவீனப்பட்டு விடவேண்டும் என்று சொல்லவில்லை. அவர் எங்களைவிட ஒரு படி மேலாகவே சென்று, கிழக்கு பாகிஸ்தானுடைய விடுதலைப் போரை ஆதரித்து, பாகிஸ்தானத்திலிருந்து விடுபட்டு தனியாக துண்டாகப் பிரிய வேண்டும் என்பதைக்கூட ஆதரித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இங்கே நாம் கேட்கும் மாநில சுயாட்சி, அதிகார அளவில் அல்லாமல், தனியாக துண்டித்துக்கொண்டு போக வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். மத்திய அரசுடன் நமக்கு இருக்கும் உறவுகள், நட்புகளில், நமக்கு ஏற்படும் சங்கடங்களை, அதன் அடிப்படையில் இடைக்கால வரவுசெலவுத்திட்டத்தில் விளக்கமாகக் கூறி, அது பற்றி எழுந்த ஐயப்பாடுகளுக் கெல்லாம் நான் அந்த நேரத்தில் மிக விளக்கமான பதில் கூறி இருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி மீண்டும் ஒரு முறை விரிவாகச் சொல்வது அவசியமில்லை என்று கருதுகிறேன்.

மத்திய அரசோடு நாம் போராடவேயில்லை, போராடி எதையும் பெறவேயில்லை என்று யாரும் கூறி விட முடியாது. இன்றைக்கு கூட ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை நான் சொல்ல முடியும். மத்திய அரசினுடைய அனுமதி பெற்று, மத்திய அரசு உதவியுடன் திருத்துறைப்பூண்டி, பூதலூர், குற்றாலம், லால்குடி, காட்டுமன்னார் கோயில், பட்டுக் கோட்டை ஆகிய 6 இடங்களில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்கவும். அவற்றோடு இணைந்து 56 கிராமச் சாலைகள் ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டத்தைத் தொடங்க 1½ கோடி ரூபாய் மத்திய அரசு இரண்டு நாள் முன்பு நமக்கு அனுமதித்திருப்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, நாம் தேவைப்படும் நேரத்தில் எல்லாம் பின்வாங்காமல் மத்திய அரசோடு வாதாடிப் போராடி, நம்முடைய மாநிலத்துக்கு உரியவைகளைப் பெறுவதிலே என்றைக்கும் சளைத்து விடவில்லை. ஆனால் ''எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சி, மாநில சுய ஆட்சி என்று அதையே சொல்லி நீங்கள்

மக்களிடத்திலிருந்து தப்பித்துக்கொள்கிறீர்கள் - கல்லூரி அனுமதியா, மருத்துவச் சாலை அனுமதியா, மருத்துவச் சாலைக்கு 2, 3 புதிய படுக்கைகள் வேண்டுமா - இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் கூட நீங்கள் மாநில சுயாட்சியைக் காட்டித் தப்பித்துக்கொள்கிறீர்கள்'' என்ற குற்றச்சாட்டை ஹண்டே அவர்கள் எடுத்துச் சொன்னார். ஒரு வேளை அவர்கள் மாநில சுயாட்சியை வரவேற்கக்கூடும். ஆனால் அதே நேரத்தில் எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சியைக் காட்டுகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டவும் கூடும். ராஜமன்னார் குழு அறிக்கை மீது பேசுகிற நேரத்தில்தான் மத்திய மாநில அரசு உறவு பற்றிச் சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றத்தை ஹண்டேமூலம் நாம் பார்க்க முடியும். ஏனென்றால், சுதந்திராக்கட்சிக்குள்ளேயே இதுபற்றிய பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. சுதந்திராக் கட்சிக்காக நடைபெறுகின்ற ''சுய ராஜ்யா'' பத்திரிகையில் மதிப்புக்குரிய சந்தானம் அவர்கள் ராஜமன்னார் குழு அறிக்கையை வரவேற்று நீண்ட கட்டுரைகளை எழுதிக் கொண்டிருக் கிறார்கள்.

ஹாண்டே அவர்களுக்கு ராஜமன்னார் அறிக்கையை இங்கு எடுத்துக் கொடுத்தவர் திரு. பொன்னப்ப நாடார். அவர் எடுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். ராஜமன்னார் குழு அறிக்கை மீது பின்னால் பேசுகிறேன் என்று பீடிகை போட்டார். இன்று பிரமாதமான விமரிசனம் கேட்கலாம் என்று நினைத்து வந்த எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்துக்கு வந்தது. ஒரு பள்ளிக் கூடத்தில் ஆசிரியர், பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுவற்றில் ஒரு துளை. அதில் ஒரு எலி நுழைந்து கொண்டிருந்தது. ஆசிரியர் நான் குறிப்பிட்டதெல்லாம் நுழைந்ததா? என்று கேட்டார். வால் மாத்திரம் பாக்கி என்று அவன் சொன்னான். அதைப்போல் ராஜமன்னார் அறிக்கையிலே அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ள முதலமைச்சருடைய படத்தை மாத்திரம் காட்டி, இது தேவை தானா? 'பர்சனாலிட்டி கல்ட்' வளருகிறது என்று குற்றம் சாட்டி, இது ஏதோ ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கூட அந்த

உணர்ச்சியில் இருக்கிறார்கள் என்பதைப்போல் இங்கேயும் ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் பேசினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை 'பர்சனாலிடி கல்ட்' இல்லை. இவரை விட அவர் பெரியவர், அவரை விட இவர் பெரியவர் என்று பார்க்கும் உணர்ச்சியை வளர்த்துக்கொண்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற தலைவனிலேயிருந்து தொண்டர்கள் வரை நாங்கள் ஒரே குடும்பம் என்று எண்ணி அண்ணன் - தம்பிகளாகப் பழகி வருகிறவர்கள். இங்கே தனியார் தோத்திரம், தனியார் துதி என்பதற்கெல்லாம் எள்ளளவும் இடம் இல்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதற்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய அருமை நண்பர் வீராசாமி அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு புத்தகங்களைக் கொண்டு வந்து காட்டி, அதிலே காமராஜர் படம் இல்லையா? நேரு படம் இல்லையா? என்று கேட்டார்கள். ஹாண்டே விரும்பியது அது அல்ல. ஹாண்டே பேசும் பொழுது இப்படிச் சொன்னால் நேரு, காமராஜர் படம் போடப்பட்டதையும் எதிர்த்திருக்கிறோம். ஆகவே இதையும் எதிர்க்கிறோம் என்று குறிப்பிடுவார். எனவே அவர் விரும்புகிற படத்தைக் காட்ட விரும்புகிறேன்.

'மெட்ராஸ் இன்பர்மேஷன்' என்ற சர்க்கார் பத்திரிகையில் 1952ம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது வெளி வந்த படம் இது. (படத்தை அவையில் எடுத்துக் காட்டினார்.) இது பர்சனாலிடி கல்டா? எளியேனுக்குத் தெரியாது!

அது மாத்திரம் அல்ல. புதியதாக மாநில கவர்னர் அவர்கள் வந்து பதவியேற்றுக் கொள்கிறார்கள். அவரது படம் முகப்பு அட்டையில் வந்திருக்கிறது. அடுத்து போடப்பட்ட படம்தான். இது பர்சனாலிடி கல்டா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

'கலைமகள்' 'கல்கி' போன்ற பத்திரிகைகளில் - அதிலும் முக்கியமாக அவருக்குத் தொடர்புடைய கல்கியில்– அவர் கவர்னர்-ஜெனரலாகப் பதவியேற்றுக் கொண்ட போது எழுதிய தலைப்பில் ''அரியாசனத்தில் ஜனகமகராஜர்'' ''ஜனக

ராஜரிஷி' என்பதாக எல்லாம் வருணிக்கப்பட்டது. அது மாத்திரம் அல்ல. 1952ம் ஆண்டு இந்த மன்றத்திலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் ராஜாஜி அவர்களால் கொண்டு வரப்பட்டபோது நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது எதிர்தரப்பில் இருந்து திரு. அந்தோணிப் பிள்ளை பேசிய பேச்சை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

"... The intention behind this Resolution is to show that this is not usual type of Ministry headed by nonentities ro mediocritis like previous Ministries, but something wonderful, headed by a master statesman. That is the intention behind this Resolution. The present tendency within the Congress is to develop a leader cult, (even during the last elections one noticed it) Congress went about canvassing votes not on the basis of the Five Year Plan but asked the voters to vote for the congress candidate though he be a donkey or a mule, because their vote for a congress candidate was a vote for the great leader,' Nehru. Unfortunately for them, that particular tactics of building up cult of leadership did not succeed in South India. Hence, the necessity for the Congress to build up a South Indina Messiah. This new cult, Rajaji himself has tried to foster. He has claimed that he is the chosen instrument of God's ambassador - Pleni - Pootentiary on earth. It will not be long, indeed I would not be surprised, if one day Rajaji climed to be God himself. When the Chief Minister appealed to the people to be pray to God for rain and when the rain came in this State some of the Congressmen began to look upon him as God, and that he has been responsible for the recent rain. If this be true, then, I would submit that it is time we sent up a special Resolution to Union Government asking them not to waste the tax-payer's money any more in carrying on research on how to bring about the artificial rain. All that is necessary to do in the way of giving help to any particular State where there is suffering due to drought is to send Rajaji there as Chief Minister of the State."

என்பதாக திரு அந்தோணிப் பிள்ளை அவர்களால் பர்சனாலிடி கல்ட் கூட அல்ல, கடவுளாகவே ராஜாஜி தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்று, குற்றஞ்சாட்டுகிற நிலைமையில் அன்றைக்கு ராஜாஜி வளர்க்கப்பட்டார்.

அது மாத்திரம் அல்ல - ஏவிஎம் தயாரித்த சினிமாப் படத்தில் ராஜாஜி ஏர் உழுவதுபோலக் காண்பிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக ஏர் உழுது களைத்துப் போனவர் அல்லவா? (சிரிப்பு).

அது மாத்திரமல்ல, பல ஆங்கில ஏடுகளில் இன்னும் பூணூலைக் காதிலே மாட்டிக் கொண்டு அவரே துண்டு துவைப்பது போலப் படம்போட்டுக் காட்டப்பட்டது.

சுதந்திராக் கட்சியினரைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ராஜாஜி இல்லாவிட்டால், அதற்குப் பிறகு யார் என்ற நிலை. அது பர்சனாலிடி அல்லவா? அந்த முறையில் பர்சனாலிடி கல்ட் வளர்த்து விட்டார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சொல்லுகின்றேன் - கருணாநிதி இல்லாவிட்டால் அதை அடுத்து பல பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பர்சனாலிடி கல்ட் என்ற அந்தக் குற்றத்தை எங்கள் மீதும் எங்களுக்கு எல்லாம் அரசியல் வழிகாட்டியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் சுமத்திய நேரத்திலும், நான் எண்ணிக் கொண்டேன். ராஜாஜி உயிரோடு இருக்கும் போது தான் ராஜாஜி ஹால் என்று பெயரிடப்பட்டது. ராஜாஜி உயிரோடு இருக்கும்போதுதான் இந்த மாமன்றத்தில் அவரது பெரிய படம் திறந்து வைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்த்திருந்தேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : What I objected to was the Hon. Chief Minister himself was trying to encourage this personality cult. Even in this House, when the Hon. Member Thiru Cheemaichamy, had mentioned something about Swathantra Party the Hon. Chief Minister said தலையா ? வாலா? meaning that he would follow தலை and not ''வால்''. It is that sort of mentality that I object to. I want that sort of mentality to be removed.

அந்த மாதிரியான மனப்பான்மை மாறி நல்ல டெமாக்ரடிக்காக ஜனநாயக வாதியாக ஆகவேண்டும் என்று சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஜனநாயகம் உங்களிடம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பின்னால் பேசுகின்ற நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ராஜமன்னார் குழு அறிக்கை டெல்லி போய்ச் சேர்ந்ததாகக் கூடத் தெரியவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ராஜமன்னார் அறிக்கை அங்கே போய்ச் சேர்ந்து இம்மாதம் 26ம் தேதி அன்று பெருமதிப்பிற்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் அனுமதியுடன் அதைப் படிக்கிறேன்.

New Delhi,
June 22,1971.

Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State Relations Enquire Committee. Your Govenment will probably examine the recommendations of this Report. As you know the Administrative Reforms Commmission also went into this question and has already submitted a report, which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.

With regards,

Your Sincerely,

(Sd.) Indira Gandhi.

என்பதாக இந்திய முதல் அமைச்சருடைய கடிதத்தில் கூட இது பற்றிப் பரிசீலிப்பதற்கு இந்திய தலைமை அரசு தயாராக இருப்பதற்கு அறிகுறி காணப்படுவதைக் குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்குத் தமிழ்நாடு ராஜமன்னார் குழுவின் அறிக்கை மூலம் பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது குறித்து பெருமை அடைகிறேன். அதற்காக என்னை ஆளாக்கிய

பேரறிஞர் அண்ணா அவர்களின் கல்லறைக்கு என் அஞ்சலியைச் செலுத்திக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்தில் பேசப்பட்ட முக்கிய பொருள் மதுவிலக்குக் கொள்கை பற்றியது. மதுவிலக்குக் கொள்கை இங்கே இருக்கிற நம்மால் மாத்திரம் அல்ல. உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும் பல்வேறு நாட்டு மக்களாலும், பல்வேறு நாட்டு அரசுகளாலும் சட்டபூர்வமாக அமுல்படுத்தத் திட்டமிட்டு தோற்றுப்போய் இருக்கிறார்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் நிறையக் காட்டுகின்றன.

அமெரிக்க நாட்டில் 1919ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16ஆம் நாள் அரசியல் சட்டத்தையே திருத்தி மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். பதினான்கு ஆண்டுக்காலம் அமல்படுத்தப்பட்டதில் கடைசியாகக் குற்றங்கள் அதிகமாயின, கள்ள மதுவைத் தடுக்க முடியவில்லை. கள்ளக் கடத்தல் அதிகமாயிற்று. மதுவிலக்கை அமல் நடத்த வேண்டியவர்கள் லஞ்சப் பேயானார்கள் என்று கூறப்பட்டு, 1938ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ஆம் தேதி மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

பின்லாந்து நாட்டில் 1907ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டு 1931ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தின் பயனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குடிவெறி அதிகமாகி இருப்பதாகவும், குற்றம் புரிவோர் தொகை அதிகமாகிவிட்டதாகவும் அந்தக் குழு கூறியது. அந்த முடிவின்படி 1932இல் அந்த நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

நார்வே 1919ல் மதுவிலக்கைக் கொண்டு வந்தது. அது 1927இல் ரத்து செய்யப்பட்டது.

நியூபவுண்ட்லாண்ட 1915இல் மதுவிலக்கை அமல் செய்தது. 1924ல் அதை ரத்து செய்தது. துருக்கி 1920ல் மதுவிலக்கை அமல்படுத்தியது. 1924இல்அதை ரத்து செய்தது மாத்திரமல்ல, 1926ல் அரசாங்கமே அந்த வியாபாரத்தை மேற்கொண்டது.

நான் முஸ்லிம் லீக் மெம்பர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகமானாலும் முஸ்லிம் லீகானாலும் காங்கிரசானாலும், கம்யூனிஸ்ட்டானாலும், பி.எஸ்.பி கட்சி ஆனாலும் தமிழரசுக் கழகமானாலும், சுதந்திரா ஆனாலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் தமிழக அரசைப் பொறுத்தவரையில் மதுவிலக்குக் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அதில் இரு வேறு கருத்துகளுக்கு இடம் இல்லை. ஆனால் அதைச் சட்டபூர்வமாக அமல்படுத்திவிட முடிந்ததா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அன்றே சொன்னேன். முஸ்லிம் மத அடிப்படையில் மதுவிலக்குக் கொள்கையைப் பொன்னே போல் போற்றவேண்டிய துருக்கி, சிரியா, ஈராக், ஈரான், எகிப்து, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய முஸ்லிம் நாடுகளில் சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல் படுத்த முடியவில்லை. அங்கெல்லாம் சட்டம் இல்லை என்பதற்காக நாட்டு மக்கள் அத்தனை பேரும் குடித்துச் கொண்டிருக்கிறார்கள் என்பது பொருள் அல்ல. இங்கும் சட்டம் தளர்த்தப்படுவதன் மூலம் இந்தியப் பேரரசு இந்திய பூபாகம் முழுமைக்கும் மதுவிலக்கை அமல் படுத்த முன்வருகிற நாள்வரை நாம் அந்தச் சட்டத்தை ரத்து செய்வது என்பது கூட இல்லை. அதற்கு ஓய்வு கொடுப்பதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை பேரும் குடிகாரர்களாக மாறிவிடுவார்கள் என்று நாம் கூறிவிட முடியாது. அந்தக் கருத்தைத்தான் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு மொய்தீன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

அடுத்து மதுவிலக்கைப் பற்றி ஆராய்வதற்காக நீதிபதி தேக்சந்த் என்பவர் தலைமையில் மத்திய திட்டக் குழு ஒரு கமிட்டியை 1963ல் நிறுவியது. இந்தக் குழு ஏன் நிறுவப்பட்டது என்றால் 1956ல் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"This House is of opinion that prohibition should be regarded as an integral part of the Second Five-year Plan and recommends that the Planning Commission should formulate the necessary programme to bring about nation-wide prohibition speedily and effectively."

1956ம் ஆண்டிலே இந்தக் குழு அமைக்கப்பட்டு, நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தியது. 1963லே ஒரு அறிக்கையைக் கொடுத்தது. தனது ரிபோர்ட்டிலே அந்தக் கமிட்டியார் என்ன என்ன சிபாரிசுகளைச் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமான சிபாரிசு காது மருந்துகளில் (ear drops) ஆல்கஹால் (Alcohol) இருக்கிறது. ஒரு மாநிலத்தில் மாத்திரம் ஆயிரக்கணக்கான பவுண்டுகள் அந்த மருந்து செலவாவதாகத் தெரிகிறது. ஒரு சில மாநிலங்களில் அதிக விற்பனையாகிறது. ஆகவே இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்தது. அடுத்தது, அளவுக்கும் மீறிய ஆல்கஹால் உள்ள டிஞ்சர் உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கமிட்டி சிபாரிசு செய்தது. இவற்றையெல்லாம் மத்திய அரசால் செயல்படுத்த முடியவில்லை.

அடுத்து டிரக்ஸ் ஆக்டில் (Drugs Act) பல திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தேக்சந்த் கமிட்டி கூறியது. அதையும் மத்திய அரசு காது கொடுத்துக் கேட்வில்லை. அஸ்வா, அரிஷ்டம் ஆகிய மருந்துகள் முறைப்படி தயாரிக்கப்பட்டால் அதில் 10 முதல் 12 பர்சென்ட் ஆல்கஹால்தான் இருக்க முடியும். ஆனால் 80 பேர் சென்ட், 90 பர்சென்ட் ஆல்கஹால் உள்ள அரிஷ்டங்கள், அஸ்வா போன்ற மருருந்துகள் விற்பனைக்கு வருகின்றன. இதற்கு டிரக்ஸ் ஆக்ட் திருத்தப்பட வேண்டும் என்ற தேக்சந்த் கமிட்டி கூறியது. அது செய்யப்படவில்லை.

அடுத்து, 'கள்ளச் சாராயத்தைவிட கள் ஆபத்துக் குறைந்தது' என்று அந்தக் கமிட்டி கூறியது. சில பாதுகாப்பு களுடன் கள்ளை அனுமதிக்கலாம் என்றும் அது கூறியது. கமிட்டியின் குறிக்கோள் மதுவிலக்குதான். ஆனால் இடையில் சில சிபாரிசுகளைக் கூறியது. அவை 5 சதவீதம் ஆல்கஹால் உள்ள கள்ளை அனுமதிக்கலாம், கள் புளித்துவிடாமல் இருக்க குளிர்ப்பதன சாதனங்களைப் பயன்படுத்தலாம், விற்பனை யாகும் இடங்களில் மட்டுமே குடிக்க வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் சென்று குடிக்க தடை விதிக்க வேண்டும், கள் மீதுள்ள தீர்வை குறைவாக இருக்க வேண்டும், அப்போதுதான் மக்கள்

கள்ளச் சாராயத்தை நாடிப் போகமாட்டார்கள். இப்படியாகப் பல சிபாரிசுகளை அந்தக் கமிட்டி செய்தது.

நாடு முழுவதிலும் உள்ள கள்ளச் சாராயத்தின் விற்பனைக் கணக்குகளை அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. 1963-64ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் கள்ளச் சாராய விற்பனை 52 கோடி ரூபாய். அதில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய், மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கின்ற மாநிலங்களில் கள்ளச் சாராய விற்பனை 43 கோடி ரூபாய். மொத்தம் 52 கோடியில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய், மதுவிலக்கு அமலில் உள்ள மாநிலங்களில் 43 கோடி ரூபாய் விற்பனையாகிறது. இதில் கள்ளச் சாராயம் மாத்திரமே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதர மது வகையாராக்கள் சேர்க்கப்படவில்லை. இது அரசாங்கத்திற்கு வராமல் போகிற பணம் என்பதையும் அந்தக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.

அடுத்து 'வெட் ஏரியா'வில் மதுவிலக்கிற்கு முன்பு 100 யூனிட்டுகளாக இருக்குமானால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 20 சதவீதம் மக்கட் தொகை அதிகரிப்பிற்கும் இதர நிலைகளுக்கும் பிறகு அது 130 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. 'டிரை' ஏரியாவில் 100 யூனிட்டாக இருந்தது, பத்தாண்டுகளுக்குப் பின்பு 90 யூனிட்டாக குறைந்திருக்கிறது என்பதையும் இது எல்லாம் கள்ள மது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது எனவும் தேக்சந்த் குழு கூறியுள்ளது.

நாடெங்கும் மதுவிலக்கைக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தந்த விவரங்கள்தான் நான் குறிப்பிட்டவை. 1957ம் ஆண்டும், 1962ஆம் ஆண்டும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தின்போது என்ன அறிக்கைகளை வெளியிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

Prohibition has long been the Congress Policy and has been introduced in some Parts of the Country. Progressive steps should be taken to introduce it in other Parts."

இது 1957ம் ஆண்டின் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.

"The Congress Policy of Prohibition should be maintained and encouraged."

இது 1962ம் ஆண்டின் காங்கிரஸ் அறிக்கை, 1962ம் காங்கிரஸ் அறிக்கைக்குப் பிறகு மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். 1963ல் அதாவது தேக்சந்த் கமிட்டி நிறுவப்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு, மதுவிலக்குக் கொள்கையை மராட்டியம் தளர்த்தத் தொடங்கியது. அப்போது மாநில முதலமைச்சர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது –

Policy statement issued by the Chief Minister on the 31st December 1963 -

"Beverages with an alcohoic content not exceeding 3.5 percent will be made freely available".

"Toddy with alcoholic content not exceeding 3.5 percent will be made freely available.

என்கிற அளவுக்கு மதுவிலக்குக் கொள்கை மராட்டிய மாநிலத்திலே தளர்த்தப்பட்டது மட்டுமல்ல, அம்மாநில முதலமைச்சர் அவர்கள் மேலும் கூறியதாவது -

"However the experience of the implementation of this policy over the last 14 years compels us to make a more realisttic and rational view of the situation as it has developed. We find that the biggest factor which works against Prohibition is not the consumer who is only the victim fo the evil of drinking but the illicit distiller, the bootlegger and trafficker."

என்று பேசி, 1963ஆம் ஆண்டு மதுவிலக்குக் கொள்கை அங்கே தளர்த்தப்பட்டது.

1968ம் ஆண்டு குன்ஹா நகரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் தேசம் முழுவதும் பூரண மதுவிலக்கு அமல் செய்ய ஏழு ஆண்டுக்காலம் அவகாசம் தர வேண்டும் என்ற ஒரு திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அப்போது திரு நிஜலிங்கப்பா

அவர்கள்தான் தலைவராக இருந்தார். திரு சி. சுப்பிரமணியம் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக இருந்தார். திருமதி சுசீலா நய்யார் போன்ற காந்தியடிகளைப் பின்பற்றிய வீராங்கனைகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் 1968ல் இருந்து, இன்னும் 7 ஆண்டுக் காலத்தில் இந்திய முழுமையிலும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்பது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு சி.சுப்பிரமணியம் அவர்கள், மது விலக்குப் பிரச்னையை உணர்ச்சி பூர்வமாக அணுகக் கூடாது என்றும் நடை முறையில் அமல் செய்யும் வகையில் அணுக வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அந்த நேரத்தில் தமிழ் நாட்டிலே உள்ள ஒரு பத்திரிகை எழுதிய தலையங்கத்தைத் தலைவரின் அனுமதியோடு படித்துக் காட்டுகிறேன்.

''பனாஜியில் நடைபெறும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் அதற்கு முன்னால் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் மதுவிலக்கு பற்றி காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருப்பதில் வியப்பில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் மதுவிலக்கினை நாம் ஒரு அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நமது அரசியல் சட்டமும் கட்டளைக் கொள்கைகள் பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளது. (Directive Principles) பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளது.

ஒன்றைக் கொள்கையளவில் ஒப்புக் கொள்வது வேறு. அதை நடைமுறையில் அமல் செய்வது பற்றி அபிப்பிராய பேதங்கள் எழுவது வேறு. பூரண மதுவிலக்குக் கொள்கையினை எப்போது அமல் செய்வது, எப்படி அமல் செய்வது என்பது பற்றிக் காங்கிரஸ் மேலிடத்தில் நிலவிடும் கருத்து வேற்றுமையினை யாரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை.

மதுவிலக்கு என்பது வெறும் ஒழுக்கக் கோட்டபாடு மட்டுமல்ல, அதற்குப் பின்னே பொருளாதார விளைவுகளும் உண்டு. எனவே மதுவிலக்கினை அமல் செய்யும் விஷயத்தில் பல்வேறு ராஜ்ய முதல்வர்கள் காட்டியுள்ள தயக்கத்தினை

அலட்சியப்படுத்துவதோ அல்லது மதுவிலக்கு விஷயத்தில் அவர்கள் தேவையான ஆர்வம் காட்டத் தவறிவிட்டார்கள் என்று விமர்சிப்பதோ அவர்களுக்கு நியாயம் வழங்கியது ஆகாது.

பூரண மதுவிலக்கோ அல்லது பகுதி மதுவிலக்கோ அமலாகும் ராஜ்யங்களிலேகூட அது முழு வெற்றியடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. உதாரணமாக, பூரண மதுவிலக்கு நடைமுறையிலிருக்கும் தமிழகத்தில் மது இறக்குவதும் விற்பதும் சட்டப்படி தடைப்படுத்தப்பட்ட காரியங்கள். ஆனாலும் ஆங்காங்கே பரவலான குடிசைத் தொழிலாக அது அமோகமாக நடைபெற்று வருவதைச் சட்டம் கண்ணை மூடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இப்படி ஒரு சட்டத்தையும் போட்டு அது மீறப்படுவதை கையாலாகத்தனத்தோடு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதைவிட அப்படியொரு சட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதே விவேகமான செயலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தவிர மதுவின் தீமையையும் ஒழிக்க முடியாமல் அதனால் கிடைக்கும் வருமானத்தையும் இழப்பது, ஒழுக்கம், நீதி ஆகிய இரண்டு முனைகளிலும் பெரு நஷ்டம் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

கவுரவப் பிரச்சனையாகக் கருதி சில பல திட்டங்களை மேற்கொள்வதைவிட சமூக நலனுக்கான சாத்தியக் கூறுகளை மனதில் கொண்டு திட்டமிடுவதும் செயல்படுத்துவதும் வரவேற்கக்கூடியதாகும்.

மதுவிலக்கு கூடாது என்பதல்ல நமது வாதம், ஒழுங்காக அமல் செய்ய முடியவில்லையானால் நிதிநிலை வசதி கருதி அதைக் கைவிடுவதுகூடத் தவறு அல்ல என்பது நமது நிலை.''

இது 'நவசக்தி'யின் தலையங்கம். 1968ம் ஆண்டு நவம்பர் மாதம் 6ம் தேதியன்று 'நவசக்தி' பத்திரிகையில் எழுதியுள்ள தலையங்கம் (கரவொலி). ஆனால் இன்றைக்கு வேறே எழுதுவார்கள். ஆனால் அன்றைக்குக் கைவிட்டு விடுவது சாலப் பொருத்தம் என்றும், மாநில முதல்வர்களே

பலர் அலட்சியப்படுத்தும் காரணத்தாலும், ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் அவர்கள்மீது குற்றம் கூறக் கூடாது என்றும் அன்றைக்கு நவக்தி பத்திரிகை எழுதியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அண்ணாவைப்பற்றிச் சொன்னார்கள். அண்ணா வழியிலே வந்தவர்கள், அண்ணாவின் வழியில் முழுக்க முழுக்கப் பின் செல்லுபவர்கள், அதை மீறிப் போகலாமா என்றெல்லாம் கேட்டார்கள். அண்ணாவின் ஆன்மா கண்ணீர் விடும், அண்ணாவின் ஆன்மா சபிக்கும் என்று காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவதாகச் சொன்னபோது குன்ஹா நகர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சட்டமன்றத்தின் முன்னாள் கொறடா என்ன பேசினார் என்றால் 'குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக்கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி உத்தரவிட்டுள்ளதாக அவர் அகில இந்தியக் காங்கிரஸ்' கமிட்டிக் கூட்டத்தில் குற்றஞ்சாட்டினார். குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக்கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதல் மந்திரி அப்பொழுது அண்ணா முதலமைச்சர் உத்தரவிட்டுள்ள தாகவும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சொன்னார். அண்ணா தீவிரமாக மதுவிலக்கை அமல் படுத்துவதாகச் சொல்வதற்காக அவருக்குப் பரிசாக அந்தப் பேச்சு அமைந்திருந்தது! இப்பொழுது வேண்டுமென்றே அண்ணாவை இழுக்கிறார்கள். அண்ணாவின் கொள்கையை மீறிவிட்டீர்கள். நீ யார் என்றெல்லாம் டாக்டர் ஹண்டே அவர்கள் கேட்டார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் 1968ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் தேதி எங்கள் தலைவர் அண்ணா அவர்கள், ஐந்தாண்டுக் காலத்தில் தமிழகத்திலுள்ள கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்தான் பாடமொழியாக இருக்கும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தை நாங்கள் அமல் படுத்துவதற்காக செயல்

வடிவத்திற்குக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் எழுந்த கிளர்ச்சிகளை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. அதற்காக லட்சுமணசாமி முதலியார் கமிட்டி போடப்பட்டு அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்குப் புறம்பாக, தமிழகம் முழுவதும் எல்லா இடங்களிலும் தமிழே பாடமொழியாக இருக்கும் என்பதற்கு மாறாக, லட்சுமணசாமி முதலியார் குழுவின் சிபாரிசின் அடிப்படையிலே இன்றைய தினம் அரசு கல்லூரிகளில்கூட ஆங்கிலத்தைப் பாடமொழியாக விரும்புகின்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நிலையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால் அண்ணா அவர்கள் காலத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை என்ன செய்தீர்கள் என்று ஹாண்டே அவர்கள் கேட்க வேண்டாமா? கேட்கவில்லை. காரணம் அது அவருக்குச் சாதகமான விஷயம்.

அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கால வேறுபாடு, கால மாறுபாடு, நாட்டு நிலை ஆகியவைகளை உணர்ந்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து முடிவெடுத்து அந்தத் தீர்மானத்தைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுதுகூட, மதுவிலக்கை ஒத்தி வைத்திருக் கிறோம் என்றுதான் சொல்லுகிறோம். சுதந்திராக் கட்சியின் சார்பிலும் சிலர் மதுவிலக்கை ரத்து செய்வதை வரவேற்றார்கள். சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரும் மேலவையிலே வரவேற்றிருக்கிறார். கீழவையில் எதிர்க்கிறார்கள். மேலவையில் திரு. ஈஸ்வர மூர்த்தி அவர்கள் வரவேற்றுப் பேசியிருக் கிறார்கள். நம்முடைய சுதந்திராக் கட்சியின் பெரியவர், பேராசிரியர் ரத்தினசாமி அவர்கள் ஒரு கட்டுரை எழுதி, அந்தக் கட்டுரையை நாங்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று தொழிலமைச்சரவர்களுக்கு அவரே அனுப்பியிருக்கிறார். அதிலே குறிப்பிட்டிருக்கிறார். மது விலக்கை ரத்து செய்தாலும் செய்யாவிடினும் குடிப்பவன் குடித்துக் கொண்டுதான் இருக்கிறான். நல்ல சரக்கு கிடைக்காவிட்டால் கண்டதையெல்லாம் குடிக்கிறான். அவதியுறுகிறான். திரு.ராஜகோபாலாச்சாரியார் கள்ளுக் கடையைத் திறந்தால் மனைவியை அடிக்கும் குற்றம் பெருகும்

என்கிறார். குடிக்காதவன் மட்டும் மனைவியை அடிக்காமலா இருக்கிறான். பெருவாரியான குடியர்கள் மனைவியை அடிப்பதில்லை. மட்டோடுதான் குடிக்கின்றனர். இது பேராசிரியர் ரத்தினசாமி, எம்.பி. அவர்கள் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியாகும்.

கடைசியாக நம்மடைய திரு பொன்னப்ப நாடார் அவர்களும் என்ன பேசினார்கள்? மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்ற கருத்தைப் பேசிவிட்டு கடைசியாக சட்டத்தைப் போடுங்கள், ஜாக்கிரதையாக இருங்கள் என்று சேலத்தைச் சுட்டிக்காட்டி, ஒத்திவைத்ததற்கு அவரும் அனுசரணையாகத் தான் வந்தார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நான் அனுசரணையாக இல்லை என்ற தன்னிலை விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்கு இருக்க வேண்டு மென்று பரிபூரணமாக நம்புகிறேன். அதற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: களங்கம் கற்பிக்கவும் மாட்டேன், காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : The chief Minister has not told this House why he is going away from the path of Thiru Annadurai. My only point is this. I accept that there was a brilliant speech of the Chief Minister defending the policy of scrapping of prohibition. But the point is how exactly he can claim in this particular matter an important point a major issue in 1968 that he has not gone away from the path of Anna. He must explain how exactly he can call that this is the policy of Anna. That is the pinpoint of the question which I am asking. How can he claim that there is a change in the last two years Will the Hon. Chief Minister categorically and intellectually say why he has gone away from the path of Anna in this particular thing. Let him say that I have no objection.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : அண்ணா வழி ஒரு ஜனநாயக வழி. அதைப் பின்பற்றுபவர்கள் நாங்கள். ஜனநாயக வழிகளில் ஒரு காலத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் வேறொரு காலத்திலே பரிசீலிக்கப்படலாம்.

அண்ணா அவர்கள் திராவிட நாடு கொள்கையில் அழுத்தந் திருத்தமாக இருந்தார்கள். பிறகு நாட்டின் நிலை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளை உத்தேசித்து திராவிட நாடு கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்காகப் பொதுக் குழுவைக் கூட்டினார்கள். பொதுக்குழு ஆராய்ந்து பரிசீலித்தது. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கூறியது. அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைத்தான் நாங்களும் கடைப்பிடித்து வந்தோம். மறுபரிசீலனை செய்ய வேண்டு மென்று பொதுக்குழு விரும்பியது. அமைச்சரவைக் கட்டளை இட்டது. பொதுக்குழுவின் கட்டளைக்கு நாங்கள் தலை வணங்கினோம். அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கினார், நாங்களும் ஜனாநாயகத்திற்குத் தலை வணங்கு கிறோம். ஆகவே, இது அண்ணா வழிதானே தவிர வேறல்ல.

டாக்டர் எச்.வி.ஹாண்டே : அண்ணாவிற்கு மதிப்பளிக்க வில்லை. பொதுக்குழுவிற்குத்தான் மதிப்பளித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : அண்ணா வணங்கிய பொதுக் குழுவிற்கு நாங்கள் தலை வணங்குகிறோம். நாங்கள் கல்கி தோட்டத்திற்கு மாத்திரம் தலை வணங்குபவர்கள் அல்ல.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: அண்ணாவின் பெயரைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிறார்கள்.

(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எக்ஸ்பஞ்ச் பண்ணிவிடலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தயவு செய்து வேண்டாம். அண்ணாவின் பெயரைச் சொல்லி நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோமா இல்லை என்பது ஊருக்குத் தெரியும். உளறுவாயர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. (ஷேம் ஷேம்.)

டாக்டர் எச்.வி. ஹாண்டே: சொல்வதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

(பல உறுப்பினர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரையும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள், ஊரை ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னதைச் சபைக் குறிப்பிலே இருக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையுடன் கூறியதால் அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர் சொல்லியதை, 'என்ன யோக்கியதை' என்ற சொல்லியதைத் திரும்பப்பெறவேண்டும்.

டாக்டர் எச்.வி.ஹாண்டே: எதை வாபஸ் வாங்க வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொன்னதை, இந்த மன்றத்தின் மரபுக்கு முரணான வார்த்தையை வாபஸ் வாங்கவேண்டும்.

மாண்புமிகு திரு. K. அன்பழகன் : The hon. Member should yield to the order of the Chair first, in the beginning. Then only if he wants to give any explanation, he can give it personally to you and not in the House. He cannot also exchange feelings here.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : என்ன யோக்கியதை இருக்கிறது என்று சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால்...

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வது நல்லது அல்ல என்ற கருத்தை, உணர்ச்சியை எப்பொழுதும் புண்படுத்த விரும்ப வில்லை. டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் வேண்டுமானால் எங்கள் உணர்ச்சிகளைப் புண்படுத்தலாம். ஆனால் யாருடைய உணர்ச்சியையும் புண்படுத்த நான் விரும்பவில்லை.

மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசினார்களே, அது திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல. தமிழரசுக் கழகத்தின் சார்பிலே சொல்லப்பட்டதும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? பி.எஸ்.பி கூறிய கருத்துக்களும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல.

அவர்களெல்லாம் உள்ளபடியே மதுவிலக்கில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவேதான் உணர்ச்சி பூர்வமாகப் பேசினார்கள். அந்த உணர்ச்சிகளுக்கு நான் என்றைக்கும் மதிப்பளிக்கத் தயாராகயிருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிப் பதற்குத் தயாராகிக் கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்கத் தயாராகிக் கொள்ள வேண்டும். இன்றைக்கு அண்ணாவின் வழியைப் பின்பற்றுகிறோம் என்றறுசொன்னால் அண்ணாவின் வழி ஜனநாயக வழி. அந்த ஜனநாயக வழியைப் பின்பற்றுகிறோம். எந்தக் கருத்தையும் பொதுக் குழுவில் வைத்து பொதுக் குழுவின் கட்டளையை ஏற்றுக் கொள்வதுதான் அண்ணாவின் வழியாகும். அதே வழியைப் பின்பற்றிதான் இந்தக் கொள்கையைப் பற்றிப் பொதுக்குழுவின் முன்னால் வைத்து ஆய்ந்து பொதுக் குழுவின் கட்டளையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே இது அண்ணனின் வழியா, அண்ணனின் வழியா என்று கேட்டால், இந்தியாவில் இருக்கிற காங்கிரஸ் முதலமைச்சர்கள் மதுவிலக்கை ரத்து செய்துவிட்டதால் அவர்கள் எல்லாம் காந்திய வழியில் நம்பிக்கையற்றவர்கள் என்றா அர்த்தம்?

அன்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சில பேருக்காவது மதுவிலக்கில் இருந்து விதிவிலக்குச் செய்தாக வேண்டும். இராணுவ வீரர்களுக்கு மது கிடைக்கச் செய்ய வேண்டும். இதில் எல்லாம் காந்தியைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு காலத்தில் காந்தியார் இராணுவமே வேண்டா மென்று சொன்னார்கள். இராணுவம் இல்லாமல் இந்தியா வாழ முடியுமா? ஆகவே மது அருந்தும் உரிமைகள் இராணுவத்திற்கு அளித்தாகவேண்டும் என்று குல்காபூரில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிலே பேசினார்.

இவர்கள் எல்லாம் பழைய காங்கிரசாக இருந்தபோது தான் மராட்டியத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. மைசூரிலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. ஆந்திராவிலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. வேறு எந்த மாநிலத்தில் மதுவிலக்கு ரத்து செய்யப்படாமல் இருக்கிறது? அவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களுக்கு இருந்தாலும் அவர்கள் காந்திய வழிக்குப் புறம்பாக, காந்திக்கு மரியாதை தரக்கூடாது என்றா செய்தார்கள். அந்த அளவிலே இந்த அரசை, இந்த அரசில் இருக்கும் அமைச்சர்களை, அண்ணாவால் தயாரிக்கப்பட்ட எங்களை எண்ணிப் பார்க்கவேண்டும். அண்ணாவின் பெயரைப் பயன்படுத்தி எங்கள் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறார்கள். அதற்கும் எங்கள் அண்ணாவைப் பயன்படுத்தி எங்களை ஒழித்துவிடலாம் என்று நினைக்காதீர்கள். எங்கள் அண்ணன் எங்களை அவ்வளவு சாதாரணமாக விட்டுவிடமாட்டார் என்று அவர்களுக்குக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசிப் பகுதியை டிராஜடி என்றார்கள். மதுவிலக்கு அமலில் இருந்தபோது எவ்வளவு டிராஜடிகள் நடந்திருக் கின்றன? இதே சென்னையில் 7.8.1967 அன்று வார்னிஷ் குடித்து 113பேர் மருத்துமனையில் சேர்க்கப்பட்டு 54 பேர் இறந்தார்கள். காஞ்சிபுரத்தில் 145 பேர் வார்னிஷ் சாப்பிட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 24 பேர் இறந்தார்கள். செங்கற்பட்டில் 151 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 14 பேர் இறந்தார்கள். வாலாஜாபாத்தில் 84 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 14 பேர் இறந்தார்கள். அந்த டிராஜடியை நிறுத்தத்தான் இந்த டிராஜடி என்றால் நான் இது டிராஜடி என்பதை உள்ளபடியே ஏற்றுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு தோல்வியுற்றுவிட்டது. அந்தச் சட்டம் இங்கே வெற்றிகரமாக நடைபெற முடியவில்லை என்பதை முன் இருந்த அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். நாங்கள் அதைத் தாராளமாக ஒத்துக்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின் – தோழமைக் கட்சி நண்பர்களின் உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சில பேர் என்னைக் கெஞ்சிக்கூடக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக் கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம்விட நான் வயதிலே சிறியவன். அப்படி மன்றாடிக்

கேட்டதை கெஞ்சிக் கேட்டதைத் தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இதைத்தவிர வேறு வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம். இந்தியா முழுவதற்கும் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் கூறியிருக்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பல கருத்துக்களை எடுத்துக்கூறிய மாண்புமிகு உறுப்பினர்கள். கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, இடையில சூடு ஏற்பட்டாலும் அந்தச் சூட்டைத் தமிழ்ப் பண்பின் காரணமாக நிச்சயமாக மறந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்களுக்கெல்லாம் நன்றி கூறி அமர்கிறேன்.

உரை : 11 நாள் : 10.3.1972

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது இதுவரையில் 64 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து, அவர்கள் அளித்த கருத்துக்களின் அடிப்படையிலே, எழுப்பிய பல்வேறு வினாக்களின் அடிப்படையிலே, கூறியிருக்கின்ற ஐயப்பாடுகளின் அடிப்படையிலே இயன்ற அளவிற்கு என்னுடைய பதிலை இந்த மன்றத்திலே அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் இங்கே பேசும்பொழுது, கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டிருந்தால் ஏதோ கேரள சட்டமன்றத்தில் நாங்களெல்லாம் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற உணர்வும், கேரளத்தின் நிதியமைச்சர் அங்கு என்னென்ன காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் என்கின்ற பட்டியலைத் தருகின்ற உணர்வும் ஏற்படாமல் போகாது. அந்த அளவிற்கு அவர்கள் தமிழ்நாட்டை அறவே மறந்துவிட்டு கேரளத்திலேயிருக்கின்ற அவர்களுடைய கட்சியின் கூட்டு அரசு எப்படிப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறது என்பவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

நான் கேரள மாநிலத்தோடு போட்டி போட்டு இந்த மாநிலம் முற்போக்கான திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறது என்றெல்லாம் வம்புக்கு நிற்க விரும்பவில்லை. கேரளம் அவர்கள் கூறியதைப்போல் அந்த அளவிற்கு முற்போக்கான நிலைக்குச் சென்றிருக்குமேயானால் நாமும் அந்த அளவிற்கு நியாயமான முற்போக்கான நிலைமைகளுக்குச் செல்ல வேண்டும் என்கின்ற உணர்ச்சியைப் பெறுவதில்

எந்தவிதமான தவறும் இல்லை. ஆகவேதான் கேரளத்தை அவர்கள் பல்வேறு நிலைகளிலே எடுத்துக்காட்டுக்கு பயன் படுத்திய நேரத்தில் அதைப்போல் நம்முடைய தமிழகமும் முன்னேற்றம் பெற வேண்டும் என்கின்ற அந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் பேசியிருப்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. அவர்களே இங்கு எடுத்துக் கூறியதைப் போன்று இப்பொழுது இருக்கின்ற கேரள அரசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இயங்கும் அரசு அதற்கு முன்பு இருந்த அரசு இன்னும் தீவிரமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே இருந்த அரசு. பல நேரங்களில் கேரள மாநிலத்தின் அரசியலில் பிற்போக்கு சக்திகள் வீழ்த்தப்பட்டு முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் தொடர்ந்தோ அல்லது இடையிடையே தொய்வு ஏற்பட்டாலும் மீண்டும் ஆட்சி பீடத்திலே அமர்ந்து பரிபாலனம் செய்த காரணத்தால் முற்போக்கு விதைகளை கேரளம் போன்ற மண்ணிலே ஊன்றுவது என்பது சுலபமான காரியமாகும்.

ஆனால் நம்முடைய தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் கடந்த நான்கைந்து ஆண்டு காலமாகத்தான் நாம் அந்த முயற்சியிலே வேகமாக ஈடுபட்டு வருகிறோம். நான் இதைச் சொல்லுகின்ற காரணத்தால், இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் முற்போக்கு எண்ணம் தலைகாட்டவே இல்லை என்று நான் கூறமாட்டேன். தலைகாட்டி, தலைகாட்டி மீண்டும் அது தன்னுடைய தலையை மறைத்துக் கொண்டது என்பதை நாம் யாரும் மறுத்திட இயலாது.

இன்றைய நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பொருளாதார சூழ்நிலைகள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் நிதி ஆதாரங்களைப் பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. மாநிலத்தின் இன்றைய வருமானம் 397 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந் திருப்பது சுட்டிக் காட்டப்பட்டு அந்த அளவிற்கு நாம் வரியைப் போட்டுவிட்டோம் என்றெல்லாம் இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள்.

இந்த மன்றத்தில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருக்கின்ற மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் கூட வெளிமேடைகளில் பேசுகின்ற நேரத்தில் '200 கோடி ரூபாய்களுக்கு வரியைப் போட்டு அந்த வரிப்பணத்தை எல்லாம் என்ன செய்தார்கள் என்றே தெரியவில்லை; மந்திரிகளின் பாக்கெட்டுக்கு அது போய்விட்டதா' என்கின்ற ஒரு கேள்வியைக் கூட எழுப்பினார்கள். நான் அவைகளை எல்லாம் மிகுந்த வருத்தத்தோடு உற்று நோக்குகின்றேன்.

ஏனென்றால் ஒரு அரசாங்க நிர்வாகத்திலே எட்டாண்டு காலத்திற்கு மேலாக முதலமைச்சர் பொறுப்பை வகித்த பெருமைக்குரிய தலைவர் காமராஜர் அவர்கள். வருகின்ற பணம் யார் மூலமாகச் செலவழிக்கப்படுகிறது; அமைச்சர் களுக்குச் செக்கில் கையெழுத்துப் போடும் அதிகாரமாவது உண்டா; எப்படிப்பட்ட நிர்வாகம் அரசாங்கத்தில் இருக்கிறது; நிதி இலாகா என்ன வேலையைச் செய்கிறது என்ற இவைகளை எல்லாம் காமராஜர் அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் சட்டசபையில் வாய்திறந்து பேசாமல் இருந்தார்கள் என்றாலும், நிர்வாகத்திலே நல்ல அனுபவமும் ஆற்றலும் வாய்ந்தவர்கள் என்பதை நான் என்றைக்கும் மறுக்கத் தயாராக இல்லை. அப்படிப் பட்டவர்களுக்கு வசூலிக்கப்படுகின்ற வரிப்பணம் எல்லாம் மந்திரிகளுடைய பாக்கெட்டுக்குப் போகிறதா என்ற கேள்வியைக் கேட்கக்கூடிய எண்ணம் ஏற்பட்டது உள்ளபடியே எனக்கு ஆச்சரியத்தையும், வேதனையையுந்தான் உண்டாக்கியது.

1967ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 200 கோடி ரூபாய்க்கு வரிபோட்டுத் தள்ளுகிறேன் என்று அவர்கள் அறிவித்து, அண்ணா அவர்கள் அறிவித்த அந்த திட்டத்தை இந்த அரசு முனைந்து நிறைவேற்ற 200 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறோம் என்று யாரும் தயவு செய்து எண்ணிவிடக்கூடாது.

இன்றைக்கு மாநிலத்திற்கு வரிகளின் மூலம் கிடைக்கும் வருமானம் 210 கோடி ரூபாய். வரிகளின் மூலம் கிடைக்கின்ற வருமானம் 210 கோடி ரூபாய் என்றால் அந்த 210 கோடி ரூபாய்க்கான வரிகளை இப்போது இந்த அரசு போட்டது

என்று யாரும் தவறாக எண்ணிவிடக்கூடாது. 397 கோடி ரூபாய் வருமானத்தில் 210 கோடி ரூபாய் இன்றைக்கு ஸ்டேட் டாக்ஸ் மூலமாகக் கிடைக்கிறது என்றால் சென்ட்ரல் டாக்ஸ் ஷேர் 75 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கிறது; கிராண்ட்ஸ் இன் எய்டு ஃப்ரம் கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா 33 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்கிறது; நான்-டாக்ஸ் ரெவின்யூ 78 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்கிறது. ஆக மற்ற வருமானங்கள் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாயில் 50 சதவிகிதம்; வரி வருமானம் 50 சதவிகிதம் என்ற நிலைமையில்தான் இன்றைக்கு மாநிலத்தினுடைய வருமானம் இருக்கிறது.

1956-57ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கணக்கினைப் பார்த்தால் அதே அளவில்தான் இந்த சதவிகிதம் வளர்ந்து கொண்டு வருகிறது. 1956-57ம் ஆண்டு 56.23 கோடி ரூபாய் வருமானம் என்று வைத்துக் கொண்டால் அதிலே ஸ்டேட் டாக்ஸஸ் 30.34 கோடி ரூபாய். 7.21 கோடி ரூபாய் ஷேர் ஆஃப் சென்ட்ரல் டாக்ஸஸ் கிராண்ட்-இன் எய்டு ஃப்ரம் கவர்ன் மெண்ட் ஆஃப் இந்தியா 4.88 கோடி ரூபாய். நான்-டாக்ஸ் ரெவின்யூ 13.80 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அப்போது கிடைத்திருக்கிறது. அப்போதும் இதர வருமானங்கள் என்ற அளவிலும், வரிகள் என்ற அளவிலும் 50 சதவிகிதம், 50 சத விகிதம் என்ற அந்தக் கணக்குத்தான் இருந்திருக்கிறது.

அதற்குப் பிறகு 1961–62ல் 43 கோடி ரூபாய் அளவில் வரிமூலம் வருமானம் ஆயிற்று; 1966-67ல் அது 95.84 கோடி ரூபாய் ஆயிற்று; 1971-72ல் அது 163 கோடி ரூபாய் ஆயிற்று; 1972-73ல் அது 210 கோடி ரூபாய் ஆயிற்று. இதிலே 210 கோடி ரூபாயில் 35 கோடி ரூபாய் அளவுக்கு மதுவிலக்கை ரத்து செய்ததன் மூலமாக கிடைக்கின்ற வருமானத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. 1961க்கும் 1966-67க்கும் இடையில் 43 கோடி ரூபாய் என்று இருந்த மாநிலத்தினுடைய வரி வருமானம் 95 கோடி ரூபாயாக ஆகி இருக்கிறது என்றால் 2.2 மடங்கு அதிகமாகியிருக்கிறது. அதைப் போலத்தான் 95 கோடி ரூபாயிலிருந்து இன்றைக்கு 200 கோடி ரூபாய் அளவுக்கு மாநில வரி வருமானம் ஆறு ஆண்டு காலத்தில் - முதலில் ஐந்து ஆண்டு காலம் என்று சொன்னேன் - 2.2

மடங்குதான் உயர்ந்திருக்கிறது. இப்படி நாம் பெறுகிற வருமானத்தைக் கணக்கிடுகிற நேரத்தில் அது பாக்கெட்டுக்குப் போய் விடவில்லை. பயனுள்ள பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம் என்பதற்கு நிதிநிலை அறிக்கையில் நான் பல்வேறு திட்டங்களைத் தொகுத்து அளித்திருக்கிறேன்.

வரிகளை அதிகப்படுத்தியிருக்கிறோம். வரி விலக்கே செய்யவில்லை என்று குறை கூறப்பட்டது. வரிகளிலே கூட விற்பனை வரியைப் பொறுத்தவரையில் வியாபாரிகளுக்கு சிறு வியாபாரிகளுக்கு நாம் அளித்திருக்கும் சலுகைகள் ஏராளம் என்பதை இந்த மாமன்றம் நிச்சயமாக அறியும். முன்பு பத்தாயிரம் ரூபாய்க்குக் கீழ் விற்பனை செய்கிற வியாபாரி களுக்குத்தான் விற்பனை வரி கட்ட வேண்டியதில்லை என்ற சலுகை இருந்தது. 1967ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அந்த பத்தாயிரம் ரூபாய் என்பதை மாற்றி, பதினைந்தாயிரம் ரூபாய் வரை விற்பனை செய்கின்றவர்கள் விற்பனை வரி கட்டத் தேவையில்லை என்று மாற்றப்பட்டது. சென்ற ஆண்டு அந்தச் சலுகை பதினைந் தாயிரம் ரூபாயிலிருந்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

சாதாரண வியாபாரிகளுக்கு விற்பனை வரிச் சலுகை என்பது மட்டுமல்லாது, கம்பவுண்டிங் முறையில் விற்பனை வரி செலுத்துகிறவர்களுக்கு 75000 ரூபாய் என்று இருந்த வரம்பை ஒரு லட்சம் ரூபாய் வரை என்று அந்த வரம்பு நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் இந்த அவை தெளிவாக உணரும்.

விற்பனை வரியின் மீது போடப்பட்ட உபரி வரிகூட யாருக்குப் போடப்பட்டது என்றால், ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் என்ற அளவில் விற்பனை செய்கிற அந்த வியாபாரிகளுக்குத்தான் விற்பனை வரி மீது வரி போடப்பட்டதே அல்லாமல் வேறல்ல. மூன்று சதவிகிதமாக இருந்த விற்பனை வரியை மூன்றரைச் சதவிகிதமாக்கினோம் என்று பலமுறை குறைபட்டுப் பேசப்பட்டது. சென்ற ஆண்டு 'வரி போடாமல் என்ன செய்வார்கள்? திட்டங்களை நிறை வேற்ற வேண்டாமா?'

என்று பெரியவர் மணலி அவர்கள் பேசி, அதற்குப் பிறகு பேசிய திரு. தங்கமணி அவர்கள் 'என்னதான் மணலி பேசினாலும், 3 சதவிகிதம் என்று இருந்த வரியை 3½ சதவிகிதம் என்று ஆக்கியது அக்கிரமம், அநியாயம் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது' என்று பேசினார்கள். அவர்கள் கேரளத்தைப் பற்றி இங்கு பேசியதற்காக ஞாபகமூட்ட விரும்புகிறேன் - அங்கு இந்த ஆண்டு 3 சதவிகிதமாக இருந்தது 3½ சதவிகிதமாக உயர்த்தப் பட்டிருக்கிறது என்ற தகவலைத் திரு.கே.டி.கே. தங்கமணி அவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு). அவர்களுக்குத் தெரியும் என்று சொல்லுகிறார்கள். எனக்குத் தெரியாத விஷயங்களைத் தான் சொன்னார்கள் இதுவரையில் – அவர்களுக்குத் தெரிந்த விஷயங்களை யெல்லாம் என்னிடத்தில் சொல்லவில்லை. அவர்கள் போற்றிப் புகழ்ந்த கேரளத்தில் 3 சதவிகிதம் என்ற விற்பனை வரி 3½ சதவிகிதமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரக் கட்டணத்தைப் பற்றி காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இங்கு 1.2 பைசாதான் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. 10.8 பைசா என்று இருந்தது. 12 பைசா அளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களையும்விட இந்த 12 பைசா குறைவானது என்பதற்கு பல்வேறு நிலைகளில் ஆதாரங்கள் எடுத்துத் தரப்பட்டிருக்கின்றன. இது ஆந்திரத்தை விடக் குறைவு; மைசூரை விடக் குறைவு. வடக்கேயிருக்கிற பல்வேறு மாநிலங்களிலே இருப்பதைவிடக் குறைவு என்று எடுத்துக் காட்டப்பட்ட போதெல்லாம் கேரளாவைவிடக் கொஞ்சம் அதிகம்தானே என்று சுட்டிக் காட்டப்பட்டது. இப்போது கேரளத்திலும் அதை அதிகப்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கும் அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கேரளத்தின் பேரில் மிகுந்த அன்பு கொண்டவர்களுக்கு கேரளத்தைச் சுட்டிக் காட்டி இடித்து உரைத்தவர்களுக்கு சமர்ப்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விற்பனை வரியிலும் பல்வேறு விதமான சலுகைகளை அளித்து வரி விலக்குகளைச் செய்திருக்கிறோம். குறிப்பாக, 110க்கு மேற்பட்ட பொருள்களுக்கு கடந்த நாலைந்து ஆண்டு காலத்தில் விற்பனை வரியிலிருந்து ரத்து செய்யப்பட்டிருக் கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் கூடைகள், பாய்களுக்கு விற்பனை வரி கிடையாது; உப்புக்கு விற்பனை வரி கிடையாது; தேங்காய் கொள்முதல், வேளாண்மைக் கருவிகள் அரிசிமாவு, நொய், சோளம், கம்பு, கேழ்வரகு, மைலோ, மக்காச்சோளம், தவிடு ஆகியவற்றுக்கு விற்பனை வரி கிடையாது. தென்னை நார், தென்னை நார்ப் பொருள்கள், கதர்-பருத்தி உடைகள் இப்படி நூற்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கிறது. விற்பனை வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல நகர்ப்புறங்களில் ஒரு கிரவுண்டு, ஒரு கிரவுண்டுக்குக் கீழ் உள்ள மனைதாரர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைக்கு முழுவதும், நஞ்சைக்கு ஐந்து ஏக்கர் வரையிலும் அடிப்படை நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. வரி வருமானம் 210 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்ற காரணத்தால் நாங்கள் வரியை விதித்துவிட்டோம் என்று சொல்வது சரியாகாது.

திரு. தங்கமணி அவர்கள் கூட போட்டிருக்கிற வரிகளைச் சொல்கிறேன், கேளுங்கள் என்று ஒரு பட்டியலைப் படிக்கும் பாவனையில் பேச ஆரம்பித்து ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல்விட்டுக் காட்டினார்கள். அவை,

ஒன்று, குதிரைப் பந்தயத்திற்கு போடப்பட்டுள்ள வரி. அதைப் பற்றி விமர்சனம் செய்யவில்லை.

இரண்டாவதாக, மோட்டார் வாகனங்களுக்குப் போட்டவரி. அதைப் பற்றியும் அவர்கள் அதிகமாகச் சொல்ல வில்லை.

மூன்றாவதாக கிராமப்புறங்களில் உள்ள யூனியன் களுக்கு ரூ.1.50 என்று இருக்கக்கூடிய செஸ்ஸை ரூ. 2.50 வரையில் வசூலித்துக் கொள்ளலாம் என்பது. அது ஒரு வரி விதிப்பல்ல. அனுமதிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால்

அவர்கள் போட்டுக் கொள்ளலாம். அதுவும் கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக அரசு 1500 மக்கள் வாழ்கிற இடங் களுக்கெல்லாம் அக்கிராமங்கள் எல்லாம் முக்கிய சாலைகள் வழி செல்கிற அந்தச் சாலைகளோடு இணைக்கக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை எடுத்துக் கொண்டு அதை நிறைவேற்றும் போது மோட்டார் வாகனங்கள் மீது 10 சதவிகிதம் வரி விதித்திருப்பது தவறு அல்ல.

திருமதி அனந்தநாயகி அவர்கள் கூட மிகவும் உருக்கமாகச் சொன்னார்கள். எடுத்ததற்கெல்லாம் இந்த மோட்டார்காரன்தானா உங்களுக்கு கிடைத்தான். பஸ்காரன் தானா உங்களுக்குக் கிடைத்தான். அவர்கள்மீது உங்களுக்கு ரொம்ப நாட்களாகவே ஆத்திரம் என்று சொன்னதிலிருந்து அவர்களுக்கு ரொம்ப நாட்களாகவே அவர்களிடம் அன்பு இருக்கிறது என்பது மறைமுகமாகத் தெரிந்தது. (ஆரவாரம்.) ரொம்ப நாட்களாக ஆத்திரம் என்று சொன்னார்கள். நாலைந்து தினங்களுக்கு முன்பு அவர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களிடம் சில கேள்விகள் கேட்கும்போது சொன்னார்கள் ''மூன்று பைசா என்று ஏன் ஆக்கியிருக்கிறார்கள்? 2½ பைசாவாக இருந்த போதே பஸ் முதலாளிகளுக்கு பெருத்த, ஏராளமான லாபம் கிடைத்து வந்ததே. ஆகவே ஏன் அதை மூன்று பைசாவாக ஆக்க வேண்டுமென்று'' கேட்டார்கள். அவர்களின் கேள்வியின் அடிப்படை வாதத்தை நான் அப்படியே ஏற்றுக் கொண்டு 2½ பைசா என்றிருந்தபோதே அதிகம் லாபம் சம்பாதித்தார்களே இப்போது அதை ஏன் மூன்று பைசா என்று அனுமதித்தீர்கள் என்றார்கள். அதற்காகத்தானே லாபம் சம்பாதிப்பவர்கள்10 சதவிகிதம் மோட்டார் வாகன வரி கொடுத்தால் என்ன என்று அவர்கள் கேட்ட கேள்விக்கு வாதமாகச் சொல்கிறேனே தவிர என்னைப் பொறுத்த வரையில்...

திருமதி த.ந. அனந்தநாயகி : I mentioned not only buses but I particularly mentioned about lorries and private cars. அதற்குத்தான் கேட்டேன். டக் என்று பஸ்ஸுக்குத் திரும்புவது நியாயம் அல்ல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தங்கள் கருணை யிலிருந்து பஸ்கள் தப்பித்ததற்கு மகிழ்ச்சி.(சிரிப்பு.)

அதேபோல் எப்படி யூனியன்களில் 1500 பேர்கள் இருக்கிற இடங்களை எல்லாம் முக்கிய சாலைகளுடன் இணைக்கக்கூடிய திட்டத்திற்கு அதற்குத் தேவையான கிராமச் சாலை வளர்ச்சி நிதி என்ற ஒன்றை உருவாக்கி அதற்கு அந்த வரியைப் பயன்படுத்துகிற வகையில் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே யூனியன்களுக்கு கட்டுப்பட்டிருக்கின்ற ஒன்றியங்களின் பல கிராமங்களில் இன்றைக்கும் எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. நாம் சுதந்திரம் பெற்ற பிறகு இன்றைக்கும் கூட சாதாரண கிராமங்களில் உள்ள ஹரிஜன மக்கள் தாங்கள் நடந்து செல்வதற்கு சரியான பாதைகள் இல்லை என்பது மட்டுமல்ல. இறந்த பிறகு கூட அந்தப் பிணத்தை எடுத்துச் செல்வதற்கு, இடுகாட்டிற்குச் செல்வதற்கு வழி இல்லாத நிலை இன்றைக்கும் இருக்கிறது. அவர்கள் அந்தப் பிணங்களைத் தூக்கிக் கொண்டு நடப்பட்டிருக்கின்ற கழனி களின் வழியாகச் செல்கின்ற காட்சிகளைப் பல இடங்களில் இன்றும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், ஒற்றையடிப் பாதையில் நான்கு பேர்கள் தலையில் பிணத்தைத்தூக்கிக் கொண்டு செல்ல, சருக்கி விழுந்து பிணமும் வயலில் விழுந்து விடும் கோரக் காட்சிகள் எல்லாம் இன்றைக்கும் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற கோரக் காட்சிகளாக இருக்கின்றன. ஆகவேதான் அந்த இடங்கள் எல்லாம் சீர் பெற வேண்டும். செம்மை பெற வேண்டும் எல்லாக் கிராமப்புறங் களிலும் இணைப்புச் சாலைகள் வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இப்படிப்பட்ட வசதிகளை நாம் உடனடியாகச் செய்து தர வேண்டும் என்பதற்காகத்தான் ஒன்றியங்களுக்கு ஒரு 1.50ல் இருந்து ரூ.2.50 வரையில் உயர்த்திக் கொள்வதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோமே அல்லாமல், அவர்கள் சொன்னது போல், இந்து பத்திரிகையில் எழுதியிருந்தாலும், வேறு எந்தப் பத்திரிகையில் எழுதியிருந்தாலும் அல்லது குறை கூறியிருந் தாலும், இரண்டரை ரூபாய் வரிவிதித்துவிடவில்லை. அதற்கான அனுமதி வழங்கியிருக்கிறோம். அது கூட காமராஜ் அவர்கள்

சொன்னதைப் பார்த்து அவரது அறிவுரையை ஏற்றுத்தான் இதைச் செய்திருக்கிறோம். எப்படி என்றால் மாயவரத்தில் மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் பேசும் போது ஒன்று சொன்னார்கள், நகராட்சி வரவேற்பில் பேசும் போது, ''இவர்கள் மாநிலச் சுயாட்சி கேட்கிறார்களே, கிராமங்களுக்கு சுயாட்சி கொடுத்தார்களா? கிராமங்களில் இன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரி போடுகிற அதிகாரத்தைக் கூட இவர்கள் கொடுக்கவில்லையே'' என்று சொன்னார்கள். அவர் பெரிய தலைவர், அவ்வளவு பெரிய தலைவரின் மனக்குறையைத் தீர்க்க அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த வரி போடும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோமே அல்லாமல், அது வரி அல்ல. (ஆரவாரம்.)

அதேபோல் 200 கோடி ரூபாய் தொடக்கத்தில் நான் எடுத்துக் காட்டியதுபோல், வரிகள் மூலம் கிடைத்திருக்கிற வருமானம் – மீண்டும் மீண்டும் சொல்கிறேன், புதிதாகப் போட்ட வரிகளினால் அல்ல. அப்படி புதிய வரிகளினால் 30 அல்லது 40 கோடி உயர்ந்திருக்கலாம். மதுவிலக்கை ரத்து செய்த காரணத்தினால் ரூ. 35 கோடி உயர்ந்திருக்கலாம். மற்ற வரிகள் எல்லாம் நாட்டிலே வாணிப வளர்ச்சியையும் தொழில் பெருக்கத்தையும், சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங் களையும் அடிப்படையாக வைத்து உயர்ந்திருக்கிற வருமானம் என்பதை மறந்துவிடக்கூடாது. அதோடு அதிகாரிகள் ஒழுங்காக வரிவசூல் செய்கிறார்கள் என்பதையும் இது பொறுத்திருக்கிறது என்பதையும் மறந்து விடக்கூடாது. உபரி பட்ஜெட் போட்டு விட்டு, வரி போடலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அவ் வரிகள் எல்லாம் எத்தன்மை வாய்ந்தவை, யார் யாரை பாதிக்கக்கூடியவை என்பதைப்பற்றி ஏற்கனவே நான் கூறிவிட்ட காரணத்தினால், மீண்டும் அவைகளை விளக்க முடியாமல் இருக்கிறேன். ஆனால் உபரி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். உபரி என்றால் அது ரெவின்யூக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற உபரிதான். அதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கே.எம்.சுப்பிரமண்யம் அவர்கள் கூட உபரி பட்ஜெட்டைப் போடுவது என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்

திற்கு உகந்ததல்ல, நாம் துண்டு விழுகிற பட்ஜெட்டைப் போட்டு திட்டங்களை அதிகமாகப் போட்டிருக்கிறோம் என்று காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்துக்கு நான் மறுப்பளிப்பவன் அல்ல. ரெவின்யூக் கணக்கில் இன்று உபரி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் 60-66 கோடி இன்று மத்திய அரசோடு நாம் பேசி செம்மைப்படுத்திக் கொண்ட வகையில், நம் திட்டங்கள் தடைபடக்கூடாது என்பதற்காக எதிர்பார்த்து நாம் பணத்தைச் செலவழித் திருக்கிறோம். ஆகவே உபரி என்று கூறுவது ரெவின்யூக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற ஒன்று என்பதை இந்த அவைக்கு மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வரிகளைப் போட்டீர்களே வசதிகளைப் பெருக்கினீர்களா என்று இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுவாமிதாஸ் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பினார்கள். இந்த விவாதத்தில் ஒரு வேடிக்கை விவாதம் குமரியில் எழுந்து குமரியிலேயே முடிந்திருக்கிறது. நான் குமரன் பேசிக் கொண்டிருக்கிறேன். (ஆரவாரம்.) குமரிமுனையில் இந்த விவாதம் எழுந்து நமது பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த விவாதத்தின் இறுதியில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் முடித்து வைத்திருக்கிறார்கள். நான் வரிகளைப் போடவில்லை, வரிகளைப் பெருக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டினேன். எப்படி வரி வருமானம் அதிகப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துச் சொன்னேன். ஆனால் வசதிகள் பெருகவில்லையே என்று கூறினார்கள். நான் இந்த நிதிநிலை அறிக்கையில் தந்திருக்கிற பட்டியலைக்கூட, ஒரே வரியில் தங்கமணி அவர்கள் சொல்லிவிட்டு ''பார், பார்'' கேரளத்தை, அங்கு 27 நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.அவை ஆங்கிலப் பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கின்றன என்று எடுத்துக் கூறினார்கள். இங்கு நம் சக்தியனுசாரப்படி எவ்வளவு முடியுமோ அதை அண்ணா அவர்கள் உருவாக்கிய இந்த அரசு சார்பில் எந்த தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நடுத்தர மக்கள் இவர்கள் வாழ்க்கையில் நல்ல வளம் பெற வேண்டுமென்று கருதினார்களோ அந்த வகையில் இந்த நாலைந்து ஆண்டுகளாக நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

பிற்பட்டோர் நலனுக்காக பின்தங்கியோர் நலக் குழு அமைப்பதற்கு முன்பு, இங்கு 1966ம் ஆண்டு வரையில் அவர்களுக்காகச் சில சலுகைகள் வழங்கப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்ட தொகை 91 லட்சம் ரூபாய் என்றால் இன்றைய தினம் அந்த மக்களுக்காக இந்த ஆண்டு செலவழிக்கப்பட இருக்கிற தொகை 4.68 கோடி ரூபாய் என்பதை நாம் பார்க்கும் போது நாம் அவர்களுக்காகப் பணியாற்றுகிறோமா இல்லையா என்பதற்கான விடை கிடைக்கும். பரவலாக இந்தத் தொகை எல்லோருக்கும் போய்ச்சேரவில்லையே என்று திரு. மாரிமுத்து அவர்கள் குறைப்பட்டுக்கொண்டார்கள். சில இடங்களில் பாராட்டினார்கள். ஒவ்வொரு பாராட்டுக்கும் இடையே ஒரு ''ஆனால்'' எழுந்து ''பாராட்டுகிறேன்''. ஆனால் பாராட்டுகிறேன், ஆனால் என்று ஆனால் வந்து விழுந்து கொண்டே இருந்தது. பரவலாக இது பயன்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான்கு கோடி ரூபாய் பின்தங்கிய மக்களுக்காகச் செலவழிக்கப் படுகிறது என்றால் எந்த முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவரும் இந்தப் பணத்தை அவர்களுடைய சௌகரியங் களுக்காகத் தட்டிப் பறித்துக் கொண்டு போய்விடவே முடியாது.

அதேபோல் ஹரிஜன மக்களுக்காக 1966-67ல் ரூ.3.59 கோடி செலவழிக்கப்பட்டதற்கு மாறாக இன்று ரூ.8.41 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருமானமும் பெருகியிருக்கிறது, அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி ஒதுக்கமும் பெருகியிருக்கிறது. எதையும் நாம் விட்டுவிடவில்லை.

கிராமப்புறங்களை இணைக்கிற வகையில் ஆயிரம் மைல் நீளத்திற்குப் பேருந்துகள் செல்கிற சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது என்ற இந்த ஆண்டு முடிவு செய்திருக்கிறோம். கல்விக்காக 1966-67ல் ரூ.43.85 கோடி செலவிட்டதற்குப் பதிலாக 1972-73க்கு ரூ.89.85 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து 1966-67 வரை தமிழகத்தில் இருந்த கலைக்கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 105. அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற கலைக்கல்லூரிகள் மாத்திரம் 64. இந்த 4-5 ஆண்டுகளில் 64 கல்லூரிகள் தோன்றியிருக்கின்றன. ஆக இப்போது 169

கலைக்கல்லூரிகள் இருக்கின்றன. அதைப்போலவே 1966-67 வரை இருந்த உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2372. இந்த 4-5 ஆண்டு காலத்தில் 341 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் மாத்திரம் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் இருப்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். 1967ம்ஆண்டு வரை சென்னை நகரம், தமிழகத்தில் வேறு சில பகுதிகளும் சேர்ந்து 4155 குடியிருப்புகள் தான் அந்த மக்களுக்காக, குடிசை வாழ் மக்களுக்காகக் கட்டப்பட்டன. 1967லிருந்து 1971வரையில் 7,722 குடியிருப்புகள் கட்டப் பட்டன. அவைகளன்னியில் 2,300 தீப்பிடிக்காத வீடுகளும் அவர்களுக்காகக் கட்டப்பட்டன. 1971-72ல் மாத்திரம் 7700 குடியிருப்புகள் மேலும் கட்ட முடியும். எனவே 1967 வரை 4,155 குடியிருப்புகள் இருந்தன என்பதற்கு மாறாக, 1967லிருந்து 1972க்குள் 17000 குடியிருப்புகள் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையிலும், மக்கள் நல்வாழ்வுத் துறையிலும் முன்பு செலவழித்ததைவிட இப்போது அதிகப் பணம் செலவழிக்கிறோம் என்பதற்கான ஆதாரங்கள் பலவற்றை நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டி யிருக்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் படிப் படியாக நிறைவேற்றி வந்தும் கூட, இப்போதும் தந்திருக்கின்ற கோரிக்கைகளை ஆராய்வதற்காக, முரண்பாடுகளைக் களைவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் எடுப்பதற்காக, சேலம் மாநாட்டில் வைத்த அவர்களுடைய கோரிக்கைகளை ஆராய்வதற்காக, தலைமைச் செயலாளரைத் தலைமையாகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆலோசனைக் குழுவில் அரசு ஊழியர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு, ஆசிரியர் களுக்கு எல்லாம் இடம் அளிக்கப்பட்ட பிறகும் அன்றைக்குப் பேசிய அம்மையார் அவர்கள் சொன்னார்கள். என்.ஜி.ஓ. வோக்களைக் கவனிக்கவில்லை. அவர்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று. இரகசியக் குறிப்பேட்டை மட்டும் எடுத்துவிட்டால் போதுமா என்று கேட்டார்கள்.

இந்த இரண்டாவது ஊதியக்குழு வருவதற்கு முன்னாலே, அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே 1.10.1967 முதல் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலுமே அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி அளிக்கப்படாது இருந்த நேரத்தில் நம் மாநிலத்தில் நகர ஈட்டுப்படி அளிக்கப்பட்டது. இதன்படி ரூ.500 வரை சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்கள் அந்தப்படியினைப் பெறுவதற்குரியவர்கள் ஆவர். சென்னைக்கு மாத்திரமல்லாமல், சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மதுரைக்கும் அந்தத் திட்டம் நீடிக்கப்பட்டது. அடுத்து ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகத் தொகை பெறுதல், 30 நாள் ஈட்டிய விடுப்பு எடுத்தால் மேலும் 30 நாள் ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகத் தொகையைப் பெறுவதற்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது பின்னர் சம்பளம் ஆணைக் குழுவால் தாராளமாக்கப் பட்டது அனைவருக்கும் தெரியும். மலைவாழ்வுப்படி அளிக்கப் பட்டது. திருமணக் கடன் கொடுப்பதற்கு என்று ஒரு புதிய திட்டம் துவக்கப்பட்டு 1.4.1969 முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஓய்வு ஊதியமாகக் கொடுக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வு ஊதியம் திங்கள் ஒன்றுக்கு 30 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அகவிலைப்படி திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் அந்த அகவிலைப்படி மூன்று முறை உயர்த்தப்பட்டது.

1967ல் ரூ. 6.88 லட்சமும், 1968ல் ரூ.3.60 லட்சமும், 1969லிருந்து ரூ. 3.60 லட்சமும், இவற்றைத் தவிர அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாகத் தரப்பட்ட அந்த 10 ரூபாய்க்கும், ரூ.500க்குக் குறைவாக சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்களுக்கும் அந்த 10 ரூபாய் அளிப்பது என்ற அந்தத் திட்டத்தின்படி, சம்பளகுழு வருவதற்கு முந்தைய ஆண்டு இந்த அரசின் சார்பில் ஆசிரியர்கள், மற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இதனால் அரசு அலுவலாளர்களுக்கு ரூ. 6 கோடி வழங்குவதற்கான செலவு ஏற்பட்டது.

சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளின் மேல், அரசுக்கு ஏறக்குறைய ரூ. 23 கோடி வரையில் போயிற்று என்பதும், அதிலே சில குறைபாடுகள் முரண்பாடுகள்

இருக்கின்றன என்று அவர்கள் குறைகள் தெரிவித்ததன் பேரில், அதற்கான நிவர்த்தி செய்யும் முயற்சிகளை இப்போது அரசு எடுத்து இருக்கிறது என்பதனை நான் மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்திற்கு நினைவூட்டுகிறேன்.

பயிரிடத்தக்க நிலங்களையும் வீட்டு மனைகளையும் கேரளத்திலே வழங்குகிறார்கள். இங்கே வழங்குகிறார்களா, இல்லையா என்பதைப் பற்றி சுட்டிக் காட்டாமல், கேரளத்தில் வழங்குகிறார்கள் என்ற அளவோடு நம்முடைய கே.டி.கே தங்கமணி அவர்கள் நிறுத்திவிட்டார்கள். தமிழ்நாட்டில் 1947ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை 20 ஆண்டு காலத்தில் ஒப்படை செய்யப்பட்ட பயிரிடத்தக்க நிலங்கள் மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டவை 2.88 இலட்சம் ஏக்கர்கள்தான். இவற்றால் பயன்பெற்றவர்கள் 1.15 இலட்சம் பேர். ஆனால் 1967-68லே 7,019 பேரும், 1968-69ல் 24,604 பேரும், 1969-70ல் 71738 பேரும்,1970-71ல் 99,138 பேரும், 1972 ஜனவரி முடிய 45,000 பேரும் ஆக மொத்தம் ஏறத்தாழ 2,47,000 பேருக்கு இந்த 4-5 ஆண்டு காலத்தில் அந்த பயிரிடத்தக்க நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக் கின்றன என்கிற நிலை இருக்கிறது.

இதுவரையில் விவசாயத் தொழிலாளர்கள் கண்டு வந்த கனவு நிறைவேற்றப்படுகிற அளவில், விவசாயத் தொழிலாளர் களுக்கு குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்குகிற திட்டம் அறிவிக்கப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் ஒரு இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தால் இந்தச் சட்டத்தால் பயன்பெறுவார்கள் என்றும் அதனுடைய ஆரம்ப விழாவை சென்ற திங்களில் திருவையாற்றில் துவக்கி வைத்து, முதல் தடவையாக 6,000க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர் களுக்கு அந்த வீட்டு மனைகளை ஒப்படை செய்திருக்கிறோம்.

அதைப்போலவே, குத்தகையாளர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படாத அளவுக்கு நாம் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். 25,000 பேர் வெளியேற்றப் படுகிறார்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் திரு. காமராஜர் சொன்னார். அவரது கணக்குப்படி 25 ஆயிரம் பேருக்கு

மேற்பட்டவர்கள் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலேயும், மற்ற மாவட்டத்திலேயும் உள்ளவர்களைக் காப்பாற்றுகின்ற அளவுக்குக் குத்தகையாளர்கள் நிவாரணச் சட்டம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

அதைப் போலவே, ஒரு காலத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் விவசாயிகளுக்கு மாத்திரம் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்து, அந்தக் காலத்திலே அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டார்கள். அன்றைக்கு ராஜாஜி செய்ததையே நாங்கள் செய்தாலும்கூட அதைவிட இன்னும் சில பேரைச் சேர்த்துக் கொண்டு, உழைப்பாளிகள், தொழிலாளர்கள், அரசு அலுவலாளர்கள் ஆகியோருக்கு இந்த நிவாரணம் அளிக்கிறோம் என்று சொன்னாலும்கூட, அதைப் பாராட்டுவதற்கு நம்முடைய ஹாண்டே போன்றவர்கள் முன்வரவில்லை என்று எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே நெஞ்சம் கொஞ்சம் சஞ்சலம்தான் கொள்கிறது. ஆனால் அவர்கள் வாயாரப் பாராட்ட விரும்பா விட்டாலும், உள்ளூர மகிழ்வார்கள் என்று நம்புகிறேன். வாயார வாழ்த்துவதை விட மனதார வாழ்த்துவது மேலும் சிறப்பானது. சிலாக்கியமானது என்று மகிழ்ச்சியடைகிறோம். இராஜாஜியே பாராட்ட மாட்டாரா? ஹாண்டே மாட்டாரா? நான் 1938ல் கொண்டு வந்ததைத்தான், இப்போது இவர்கள் செய்து இருக்கிறார்கள். பரவாயில்லை என்று சொல்லி யிருப்பார். ஆனால் அரசியலுக்காகப் பாராட்டத் தோன்றாது.

முன்னேற்றக் கழக அரசு முற்போக்கு எண்ணங்களின் அடிப்படையில் செல்லுகிற அரசு, ஏழைகளின் அரசு, தொழிலாளர்கள், விவசாயிகள், உழவர் பெருமக்கள், உழைப்பாளிகள், அலுவலாளர்கள் இவர்களுக்காகப் பாடு படுகிற இந்த அரசு, சமதர்ம அடிப்படையிலேதான் இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அவையிலே அறிவித்து இருக்கிறது. இந்த சமதர்மத் திட்டத்தின் அடிப்படையிலே கட்சி நடத்தி வருகிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி போன்றோர் கூட இன்னும் கொஞ்சம் வாயார மனமாரப் பாராட்டி இருந்தால் என்ன? அதில் ஏன் இவ்வளவு சிக்கனம்? இவ்வளவு செட்டு? பக்கத்திலே இருக்கிற

கேரளாவை வாழ்த்துகின்ற அளவுக்கு வாழ்த்தாவிட்டாலும், தமிழ்நாட்டில் இருக்கும் எங்களை அதிலே ஒரு 50 சதவிகிதமாவது வாழ்த்தியிருக்கக் கூடாதா?

தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஹரிஜன மக்களின் காலனிகளை நீங்கள் எண்ணிப் பார்த்தால், பல ஆண்டு காலமாகக் கணக்கெடுத்துப் பார்த்ததில் 1966ம் ஆண்டு வரை 20,000 - 25,000 ஹரிஜன குடியிருப்புகள் 2400 குடியிருப்பு களுக்குத்தான் ஆண்ட அரசு அவர்களுக்குக் கட்டிக் கொடுத்து இருந்த வீடுகள், ஹரிஜனக் குடியிருப்புகள் 1153 குடியிருப்புகளுக்குத்தான் மின்சார வசதி செய்து கொடுக்கப் பட்டது. ஆனால் இந்த 4 ஆண்டு காலத்தில் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 15,600 ஹரிஜன குடியிருப்பு களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது. 1972-73க்குள் எல்லா ஹரிஜனக் காலனிகளுக்கும் மின்வசதி செய்து கொடுக்கும் திட்டம் வெற்றிகரமாக முடியும்.

அதைப்போலவே, தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கும் திட்டமும் முழுமையாக வெற்றி பெறும். அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள். 1966ல் 1070 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இப்போது 150 மெகாவாட்தான் அதிகரித்து இருக்கிறது என்று குறை கூறினார்கள். அது தவறான கணக்காகும். தற்போது 1475 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது 315 மெகாவாட் அதிகரித்து இருக்கிறது. எண்ணூர் அனல் மின் திட்டத்தின் 3வது பிரிவு இந்த மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கும். இதனால் மேலும் 110 மெகாவாட் உற்பத்தி அதிக மாகக் கிடைக்கக்கூடும். ஆகவே 1966லிருந்து 1972வரை கூடுதல் உற்பத்தித் திறன் 515 மெகாவாட் ஆகும். மேலும் குந்தா 4வது நிலையின் மூலம் 110 மெகாவாட்டுகளும், என்னூர் 5வது பிரிவின் மூலம் 110 மெகாவாட்டும், சுருளியார் மூலம் 35 மெகாவாட்டும், சேர்வலார் மூலம் 30 மெகாவாட்டும், நெல்லித்துறை மூலம் 50 மெகாவாட்டும், ஆக எடுத்துக் கொள்ளப்படவிருக்கிற இந்தத் திட்டங்களின் மூலம் மொத்தம் 335 மெகாவாட்டுகள் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

இது தவிர, பாண்டியார் - புன்னம்புழா திட்டம் 100 மெகாவாட்டும், சோளத்திப்புழா திட்டம் 40 மெகாவாட்டும், காடம்பாரை திட்டம் 400 மெகாவாட்டும் தரக்கூடிய இந்தத் திட்டங்களும் விரைவில் எடுத்துக் கொள்ளப்பட விருக்கின்றன.

மேலும், இந்த ஆட்சியில் தொழில் வளர்ச்சியே இல்லை. தொழில் வளம் நலிந்துவிட்டது என்று சில பேர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், தற்போது 100 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யக்கூடிய தூத்துக்குடி உரத் தொழிற்சாலை ஹெவி வாட்டர் ப்ளான்ட் போன்ற திட்டங்கள் பழைய அரசினரால் கைவிடப் பட்டு, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கி யிருக்கிறது என்பதைத் தொழில் வளர்ச்சி இல்லை என்று சொல்பவர்கள் கவனிக்க வேண்டும்.

300 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் விரைவிலே தொடங்கவிருக்கிறது. அதற்கு எல்லாவகையான தொடக்க வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. எட்டுக் கோடி ரூபாயில் நைலான் தொழிற்சாலையும் 10 கோடி ரூபாய் செலவில் ரப்பர் டயர் தொழிற்சாலையும் தொடங்கப்படவிருக்கிறது. பாலிஸ்தர் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இங்கே மூடப்பட்ட தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை. இந்த அரசிற்கு சரியான தொழிற்கொள்கை இல்லை. தொழிலாளர்களை எப்படி நடத்துவதென்று தெரியவில்லை என்றெல்லாம் குறை கூறப்பட்டது. நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களும் கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் சுதந்திரா உறுப்பினர்களும் மற்ற கட்சி உறுப்பினர்களும் அதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி அரங்கண்ணல் அவர்கள் பேசியபோது மற்ற மாநிலங்களில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார். மைசூர் மாநிலத்தில் 871ம், ஆந்திரத்தில் 647ம், மேற்கு வங்கத்தில் 531ம், கேரளத்தில் 293ம், ஒரிசாவில் 66மாக தொழிற்

சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றிலே மறுபடியும் தொடங்கி நடத்தப்படுகிற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைவானதுதான் என்கின்ற கணக்கே தவிர வேறல்ல.

ஆனால் தமிழ்நாட்டில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் 22 தான். மற்ற மாநிலங்களைப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில்தான் குறைவான தொழிற்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. அதிலும் 6 தொழிற்சாலைகள் திறக்கப் பட்டுவிட்டன. இங்கே மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளும் நாம் மத்திய சர்க்காரை அணுகி இன்றைக்கு அதிலே கிடைத்திருக்கின்ற வெற்றிகளும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். ஆகையால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் தொழிலாளர்களின் கிளர்ச்சியில் இந்த அரசு நிதானமாகக் கவனிக்கும் தன்மையில், அதற்கு முந்தைய அரசு கவனித்திருக்கிறதா என்பதையும் தொழிலாளர்களின் நலன் ஒன்றுதான் எங்கள் குறிக்கோள் என்று இங்கே முழக்கமிட்ட மாண்புமிகு உறுப்பினர் கே.டி.கே. போன்றவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

அனந்தநாயகி அவர்கள் நேற்றுச் சொன்னார்கள் ''நானும் சிம்சன் அறுவர் குழுவில் இருந்து பார்த்துவிட்டேன். அங்கே கோரிக்கைகளைவிட வன்முறைச் செயல்கள்தான் வளர்ந்திருக் கின்றன என்பதைப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். தமிழக Industrial fabric will be completely torn by these elements என்பதைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். மேற்கு வங்கத்தில் தொழில் அமைதி கெட்டுப்போய்த் தொழில்கள் வேறு இடங்களுக்குப் பறந்துபோய்க் கொண்டிருக்கிற அதே நிலை தமிழ்நாட்டிலும் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே நாம் இங்கு வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே வன்முறைச் செயல்கள் நடக்காத முறையில் பார்த்துக் கொண்டால்தான் தொழில் அமைதி ஏற்படும்'' என்று சொன்னார்கள். முழுக்க முழுக்க ஆதரிக்கவில்லை. ஆனால் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் ஏற்படும். அந்த வன்முறையைத் தூண்டி விடுபவர்கள் யார் என்றெல்லாம் நான் இந்த அவையிலே எடுத்துக் காட்டியபோது

அவர்களுக்குச் சார்பாக நின்று கொண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசை ஒரு மூலையிலே தள்ளி அதன் மீது யார் யார் குற்றம் சாட்டுகிற பணியிலே ஈடுபட்டிருந்தார்களோ அவர்கள் எல்லாம் இந்த உண்மையை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வன்முறை மூலமாக எந்தக் காரியமும் அது எந்தப் பகுதியிலே நடைபெற்றாலும், அதை நாம் அனுமதிக்க முடியாது. அதில் எந்தக் கட்சிக்காரர்கள் ஈடுபட்டாலும் இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்காது என்பதற்கு அடையாள மாகத்தான் அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்டவர்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களா அல்லது காங்கிரசுக்கு ஆதரவாளர்களா - கம்யூனிஸ்டுகளா என்றெல்லாம் பார்க்காமல் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் ஐம்பதுக்கும் மேற்பட்ட கழகச் சார்புடைய தொழிலாளர்கள் அடிபட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபோதும் கூட அவர்களால் புகார் செய்யப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்படவில்லை. ஏனென்றால் தொழில் அமைதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக. அதைப்போல, கழகம் அல்லாத தொழிலாளி தாக்கப்பட்ட நேரத்தில் கழகச் சார்புள்ள முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டதையும் இந்த அவை அறியும். ஆகவே நாங்கள் தயவு தாட்சண்யம் இல்லாமல் பாரபட்சம் காட்டாமல் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

எத்தனையோ கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன. மறந்திருக்க முடியுமா? 1947-48லிருந்து நடைபெற்ற போராட்டங்களில் 1967 வரை காங்கிரஸ் ஆட்சியில் துப்பாக்கிகள் பேசின. இந்த அரசில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை என்று கூறவில்லை. எந்த அளவுக்குக் குறைவாக நடந்திருக்கின்றன?

எவ்வளவு பய உணர்ச்சியோடு துப்பாக்கிப் பிரயோகங்கள் கையாளப்பட்டிருக்கின்றன? எந்தெந்த கட்டங்களுக்குப் பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது? அப்படி மீறி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு உடனடியாக எத்தனை நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது? இந்தக் கணக்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

ஆனால் முதுகுளத்தூர் போன்ற பெரிய சம்பவங்களுக்குக் கூட நீதி விசாரணை வைப்பதற்கு முடியாது என்று மறுத்தவர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே மேடைகளிலே ஏறிக்கொண்டு ஜனநாயகத்தைப்பற்றி முழங்குகிற முழக்கங்கள் இருக்கிறதே! ஆஹா ஹா... அதைப் பார்த்தால் நமக்கே வேடிக்கையாக இருக்கிறது. அந்த அளவுக்கு முழங்கியிருக்கிறார்கள்.

இங்கே அண்ணா அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் நண்பர் சசிவர்ணத்தேவர் போன்றவர்களும் அன்றைக்கு கேட்டதெல்லாம், முதுகுளத்தூரிலே 40 நாள் ரணகளம் ஏற்பட்ட பிறகு வைக்கோல் போர் கொளுத்தப்பட்டு – வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு ஐந்து பேரோ ஆறு பேரோ கைகளும் கண்களும் கட்டப்பட்டு, கீழத்தூவலிலே துப்பாக்கியால் நேருக்கு நேரே சுடப்பட்டு வயல்களிலே குழந்தைகளுடைய பிணம், வாய்க்கால்களிலே பெண்கள் பிணம் - வைக்கோற்போரிலே கற்பழித்த மாதர்கள் என்கின்ற அளவுக்கு பயங்கரமான பட்டியல் வெளிவந்த அந்த காலத்தில் குறைந்தபட்சம் கேட்கப்பட்டது. ஒரே ஒரு நீதி விசாரணைதான் வைக்கப்பட்டதா? இல்லை. ஆனால் ஒரு துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் செத்தார்கள் அல்லது ஒருவர் காயம் அடைந்தார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : May I Just but one question to the Chief Minister? அன்றைக்கு விசாரணைக்கு ஒரு ஐ.சி.எஸ். அதிகாரியைப் போட்டு நீதி விசாரணை நடத்தினார்கள். முதல்வர் அவர்கள் அதை மறைப்பதைப் போல் கூறுவது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஐ.சி.எஸ் அதிகாரி போதாது. நீதிபதி விசாரணை வேண்டுமென்றுதான் சொன்னோம். இன்றைக்கு உங்களுக்கு இங்கே இருக்கிற நீதிபதியே போதவில்லையே? மற்ற மாநிலங்களிலிருந்தல்லவா நீதிபதி வேண்டுமென்று சொல்கிறீர்கள்? அந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறீர்களே? அதிலே முற்போக்கு சக்தியாக இருக்கிறீர்களே? அன்றைக்கு 40 நாட்கள் ரத்த வெள்ளம் ஓடியது. அன்றைக்குக் கேட்டதெல்லாம் என்ன?

யார் தூண்டிவிட்டார்கள்? ஏன் இவ்வளவு பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள்? ஏன் கட்டி வைத்துச் சுட்டார்கள்? அப்படிச் செய்ததற்கு எல்லாம் நீதி விசாரணை வேண்டும் என்று அன்றைக்கு அண்ணா அவர்களும், சசிவர்ணத் தேவரும், மூக்கையாத் தேவரும் கேட்டார்கள். ஆனால் அன்றைக்கு அதற்கு ஒத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்களா? இல்லை அதற்கு காமராஜர் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த திரு. சி.எஸ். அவர்கள் காமராஜரின் பக்கத்திலிருந்து கொண்டு சொன்னார்கள். எடுத்ததெற் கெல்லாம் நீதிவிசாரணை வைத்தால் போலீசார் புகழ் கெட்டுவிடும் என்று சொன்னார்கள். அது குறிப்பிலிருக்கிறது. இப்படிச் சொல்லக்கூடிய நிலை அன்றைக்கு. ஆனால் இன்றைக்கு அப்படியா? அன்றைக்கு. மதுரை டி.வி.எஸ். நிறுவனத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த காரணத்தால் 27.1.1948 முதல் நிகழ்ந்த வேலைநிறுத்தத்தின் போது கலவரம் ஏற்பட்டு, காவல் துறையினர் கண்ணீர்ப் புகையும், தடியடியும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 17.1.1948லிருந்து 31.1.1948 வரை வேலை நிறுத்தம் முடியும்வரை இரவில் ஊரடங்கு உத்தரவும் மதுரை நகரத்தில் பிறப்பிக்கப்பட்டது. 21.11.1949ல் நாமக்கல் காவல் நிலையத்தில் கைது செய்து வைக்கப்பட்டு இருந்த சில கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக காவல் நிலையம் நோக்கி ஓடி வந்த கும்பலைக் கலைக்க காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மூவர் காயமுற்றனர்.

8.6.1953ல் பவானி எஸ்டேட். நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட தொழிலாளர் கலவரத்தின்போது காவல்துறை தடியடிப்பிரயோகம் செய்யவேண்டி நேர்ந்தது.

15.7.1953ல் திராவிட முன்னேற்றக் கழக ரயில் நிறுத்தப் போராட்டத்தின்போது தூத்துக்குடியிலும், டால்மியாபுரத்திலும் காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அறுவர் உயிர் இழந்தனர்.

26.1.1957ல் வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தின்போது காவல்துறை தடியடிப் பிரயோகம் செய்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். நால்வர் இறக்க அறுவர் காயமுற்றனர்.

1958ல் துறைமுகத் தொழிலாளர் போராட்டத்தின் போது, துப்பாக்கிப் பிரயோகத்தில் அறுவர் இறந்தனர்.

26.11.1960ல் கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங் கோட்டில் மீனவர்கள் சிலரை மதுவிலக்குக் குற்றங்களுக்காகப் பிடிக்கச் சென்றபோது, கலவரம் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் இறந்தார்.

17.3.1963ல் மீன் பிடித்தல் தகராறு சம்பந்தமாக திருமங்கலம் (மதுரை மாவட்டம்) அருகே உரப்பனூரில் கலவரம் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் அங்கேயே மாண்டார். இருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது மாண்டனர். பத்து பேர் காயமுற்றனர்.

1964ல் அரிசிப் பற்றாக்குறை காரணமாக எழுந்த கலவரங்களில் 17.10.1964ல் அர்ச்சுனன் கோவை நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2.12.1964ல் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மாணவர்கள் காயமுற்றனர். 28.4.1965ல் சேடப்பட்டி பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தல் குறித்து நடந்த கலவரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இருவர் மருத்துவமனையில் இறந்தனர். நால்வர் காயமுற்றனர்.

சேலம் சிறைச்சாலையிலே 28 கம்யூனிஸ்ட் கைதிகளைச் சுட்டுக் கொன்றார்கள். பூட்டப்பட்டிருந்த சிறைச்சாலையின் கதவு துவாரத்தில் துப்பாக்கி முனையை வைத்து பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த 23 கம்யூனிஸ்டு கைதிகளையும் சுட்டுக் கொன்றுவிட்டு அந்த 23 பிணங்களையும் கொண்டு வந்து மீன்களை மார்க்கெட்டிலே அடுக்கி வைப்பதுபோல் அடுக்கி வைத்துக் காட்டியவர்கள் காங்கிரஸ் கட்சியினர். இரணியன் யார்? குப்பு யார்? இவர்களெல்லாம் துப்பாக்கிப் பிரயோகத்தில் சுட்டுக் கொல்லப்படவில்லையா? அப்போதெல்லாம் சட்டம், அமைதி கெட்டுப் போகவில்லையா? அந்தத் துப்பாக்கிச் சூடுகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன? அதையெல்லாம் விட்டுவிட்டு இன்றைக்கு தமிழ் நாட்டிலே சட்டம் அமைதி

ஒழுங்கு எல்லாம் சீர்குலைந்துவிட்டது என்று பேசப் படுவதேன்? ஏதோ ஒன்றிரண்டு இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களை வைத்துக்கொண்டு இவ்வாறு பேசுவது முறைதானா? தமிழ்நாட்டைப் பற்றி பேசுகின்ற நீங்கள் மற்ற மாநிலங்களிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்த்தீர்களா?

தமிழ்நாட்டிலே 1965ல் மாநிலமெங்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே 51 பேரைச் சுட்டுக் கொன்றார்கள். இதை நான் சொல்லவில்லை. முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே சொன்னார்கள். இந்தச் சட்டமன்றத்திலே மதியழகன் அவர்கள், ''150 பேரை சுட்டுக் கொன்றீர்களே'' என்று கேட்டார். அதற்கு அப்போதைய முதலமைச்சர் பக்தவத்சலம் 51 பேரைத்தான் சுட்டுக் கொன்றோம் என்று இதே மன்றத்தில் கணக்குக் கொடுத்தார்கள். கிளர்ச்சியின் போது துப்பாக்கிச் சூட்டிலே இரண்டு மாணவர்கள் இறந்தார்கள். தமிழ் வாழ்க இந்தி ஒழிக என்று தீக்குளித்து எட்டு பேர் செத்தார்கள். இதைப்பற்றியெல்லாம் அப்போது கேட்கின்ற நேரத்திலே பக்தவத்சலனார் என்ன சொன்னார் தெரியுமா! அவர்கள் எல்லாம் கடன்பட்டல்லவா செத்தார்கள்? என்றார்.

அந்த அளவுக்கு இழிவாகவும், பழி கூறியும் தீக் குளித்துச் செத்தவர்களைப் பற்றி இந்த மாமன்றத்தில் அன்றைக்கிருந்த முதலமைச்சர் பேசவில்லையா? இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஏதோ பெரிய கலவரம் என்று எல்லாம் பேசுகிற இதே நேரத்தில் மற்ற மாநிலங்களிலே என்ன நிலைமை? பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும்.

Firing at Thumba : boy dies - Trivandrum.

Police Firing on Fishermen at Thumba – Trivandrum.

Police – Student Clash in Quilon - Trivandrum.

Hartal in Quilon over college incidents – Quilon.

Curfew Follows Police Firing in Ahmedabad.

Eight die in Punjab Firing in Ahmedabad.

Eight die in Punjab Police Firing.

Police Firing in West Bengal Town.

Rajasthan Government Staff lathicharged.
Five injured 16 Huts Damaged in Clash - Trivandrum.
One killed in Police Firing in Bengal.
Mob Violence in Gulbarga : Police Open Fire.
Two killed in Poll Clash near Vijayawada.
Army Column arrives in Riot-torn Gulbarga.
Mob Lathi-charged in Srinagar.

இப்பொழுதே எண்ணிறந்த ஆதாரங்கள் பல்வேறு மாநிலங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. இப்படி மற்ற மாநிலங்களிலே நடக்கக் கூடியவைகளை எல்லாம் சொன்னதால் இங்கே எதுவும் நடைபெறவில்லை என்று நான் பைத்தியக்காரத்தனமாக வாதிட விரும்பவில்லை. அசம்பாவிதங்கள், வன்முறைகள் நடைபெறக் கூடாது என்பதிலே நாங்கள் எவ்வளவு அக்கறை காட்டி வருகிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இவைகளை யெல்லாம் இங்கே குறிப்பிட்டேன்.

தமிழ்நாட்டிலே இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெற்ற சில சம்பவங்களை வைத்துக் கொண்டு, இங்கே சட்டம், ஒழுங்கு அமைதி கெட்டு விட்டது. அராஜகம் நடக்கிறது ஊழல் மலிந்து விட்டது. ஆகவே இந்த தி.மு.க அரசை ஒழித்துக் கட்ட அணிதிரளவேண்டுமென்று காமராஜர் வீர முழக்கம் செய்து வருகிறார். ஆனால் காமராஜர் 'ஐந்தாண்டுக்காலம் ஆளட்டும்; அதற்குப் பின்னால் பதவியில் வரவிடாமல் ஒழித்துக்கட்டுவோம். அதுவரையும் பொறுத்திருப்போம்' என்று கூறுகிறார். ராஜாஜி அவர்களோ, இப்பொழுதே ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்று குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார். தன்னுடைய துணைக்குக் காமராஜரையும் இழுக்கிறார். ஆனால் பச்சைத் தமிழர் காமராஜர் ராஜாஜியின் வலையில் விழமாட்டார் என்று நிச்சயம் நம்புகிறேன்.

'கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது' என்று வீர முழக்கம் எழுப்பிய பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட எங்களை, அந்த உயர்ந்த பாரம்பரியத்தில் வளர்ந்த எங்களை அவ்வளவு சுலபத்தில் நினைத்தாலே

ஒழித்து விடலாம் என்று, ராஜாஜி அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வியைப் பொறுத்த வரையில் காமராஜ் அவர்கள் எடுத்த சரியான நடவடிக்கையின் காரணமாக குடியாத்தம் தேர்தலிலே காமராஜர் வெற்றிபெற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா பாடுபட்டார்கள். ஆனால் இன்றைக்குக் காமராஜ் அவர்கள், இந்த அரசை மாற்றியே ஆக வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசை மாற்றி விடுவதிலே காமராஜரை விட ராஜாஜிக்கு அதிக அக்கறை ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேளை ராஜாஜிக்கு வயது அதிகமாகி விட்டதால் விறுவிறுப்பாகச் செயல்பட்டு விரைவிலே இந்த அரசை ஒழித்துக்கட்டி, அதைப்பார்த்து மகிழவேண்டுமென்று விருப்பம் கொண்டிருக்கின்றாரோ என்று நினைக்கிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : The Hon. Chief Minister made a remark that how long Rajaji may live or whatever it is. I am coming to the point.

ராஜாஜி அவசரமாக இருக்கிறார்கள். வயது ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது. (சில உறுப்பினர்கள் உட்கார், உட்கார்.) அதனால்தான் இப்படி நினைக்கிறார் என்று முதலமைச்சர் சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் பேசவில்லை. அவர் எத்தனை ஆண்டு இருப்பாரோ நமக்குத் தெரியாது. நான் கேட்பதெல்லாம் மற்ற மாநிலங்களிலே நடப்பவைகளைப் பற்றியும், வேறு பல நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்ற முதலமைச்சர் அவர்கள் சிம்சன் விவகாரத்தைப் பொறுத்தவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

What are the steps we are going to take? That is the subject matter of the controversy. There is no point in going round and getting vicarious satisfaction in what is happening in other States. What is the Solution?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் இதுவரை எடுத்து...

திரு. ஜே. ஜேம்ஸ் : சார் ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது உட்கார் உட்கார் என்று சொன்னார்கள் அது முறையல்ல. It is not fair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்லியிருந்தால் அது முறையல்லதான். It is not fair.

A VOICE : It is not a fair price shop.

Thiru R. PONNAPPA NADAR : Hon. Members should not say that it is not a fair price shop. That is also not fair.

Thiru. J. JAMES: It is not a toddy shop also.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் கழக உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது. இந்த விவாதத்தை வேகமுடையதாக்கவேண்டாம். விவேகம் உடையதாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ராஜாஜி அவர்களுக்கு வயது அதிகமாகிவிட்டது ; அதனால் அவருடைய காலத்திலேயே தி.மு.க அரசை ஒழித்துக்கட்டி, அதைப் பார்த்து மகிழ்ந்திட நினைக்கிறார் என்று நான் சொல்வதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் நினைக்கின்றார்கள். நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. ராஜாஜி அவர்கள் நீண்ட நாள் வாழ வேண்டும் என்பதிலே டாக்டர் ஹாண்டே அவர்களைவிட நான் மிகுந்த அக்கறை உடையவன். 1976லும் இந்த அரசு கவிழாமல், இதே மாதிரியான கூட்டணியோடு தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு ராஜாஜி அவர்களின் இம்மாதிரியான உதவி எங்களுக்குத் தேவைப்படுகிறது. 1981லும் இந்த ஆட்சி நடைபெறுவதை அவர் பார்த்து மகிழ வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நான் குறிப்பிட்டது, காமராஜரை விட ராஜாஜிக்கு அதிக வயதாகிவிட்டதால், அவரைவிட அதிகக் கோபம் வருகிறது. அதனால்தான் இப்படிப் பேசுகிறார் என்பதுதான், இதைத் தவிர வேறொன்றுமல்ல.

சிம்ஸன் தொழிற்சாலையைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே என்று சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலைத் தகராறுகளை விரைவிலே தீர்க்கின்ற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அரசின் நடவடிக்கைகள்

போதாது. கோபால் அவர்கள் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் ஒரு குழு அமைத்து அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த யோசனையை ஏற்றுக் கொண்டு அறுவர் குழு ஒன்றை அமைத்தோம். கோபால் தானாகவே விலகிக் கொண்டார்கள். அனந்தநாயகி அம்மையார் அவர்கள்தான் அதன் கன்வீனராகவும் இருந்தார்கள். குழு அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே எங்களுக்குத் தெரியாமலேயே அறுவர் குழுவைக் கலைத்துவிட்டார்கள் கலைத்துவிட்ட பின்னால் சொன்னார்கள், 'சேதி தெரியுமா, அறுவர் குழுவைக் கலைத்துவிட்டோம்' என்று. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மா.வே.நாராயணசாமி அவர்களும் அறுவர் குழுவிலே இடம் பெற்றிருந்தார்கள். ஆனால் பெரும்பான்மை முடிவு எப்படி இருக்கிறதோ அதற்கு ஒத்துப்போகும்படி அவரைக் கேட்டிருந்தோம். இப்போது அந்தப் பிரச்சனையில் நல்லதொரு முடிவினைக் காண்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே வந்திருந்த மத்திய அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறோம். அந்த ஏற்பாட்டினாலும் சரியாகவில்லை என்றால், மேலும் என்ன செய்யலாம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

திருமதி த.ந. அனந்தநாயகி: அறுவர் குழு கலைக்கப் பட்டது. முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதற்குக் காரணம் அந்த அந்த அகில இந்தியத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டது தான். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வேறு வழியில்லாததால் அறுவர் குழு கலைக்கப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர்களுக் கெல்லாம் கொடுத்த மதிப்பை எங்களுக்குக் கொடுத்திருந்தால், எல்லோரும் போன பின்னாலும் நாம் இருவருமாவது இருந்திருக்கலாமே (பலத்த சிரிப்பு.)

Dr. H. V. HANDE : I will be happy if the Hon. Chief Minister in his reply concerning Simpson and Company would say whether it is possible for the Chief Minister to think of holding an election as early as possible. I have a feeling that unless an election takes place and

somebody - X, Y or Z, it does not matter - is elected, unless a democratic process is adopted there, it will not be possible to solve the problem. May I request the Hon. Chief Minister to give consideration to this point of view in an objective manner?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதைப்பற்றி வேறு விரிவாகச் சொல்லவில்லை. யோசித்துக்கொண்டிருக்கிறேன். அதைத்தான் திரு. கடிலகர் அவர்களிடமும் சொல்லியிருக் கிறேன். அதைத்தொடர்ந்து ஏற்பாடுகள் நடைபெறும்.

சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டுவிட்டது என்று பேசுவதற்கு அடுத்தபடியாக - அடுத்தபடி என்று இல்லாமல் முதற்படியாகவே ஊழல்,லஞ்சம் இவைகளைப் பற்றி இந்த மாமன்றத்தில் அதிகமாகப் பேசப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட எந்தக் குற்றச்சாட்டும் எடுத்து வைக்கப்படாமல் - அதை விசாரியுங்கள், இதை விசாரியுங்கள் என்று கூறுவது பொருத்தமுடையதல்ல, ஆதாரத்தோடு தெரிவிக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் இருந்து விளக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு பார்வேட் ப்ளாக் உறுப்பினர் திரு கே.கந்தசாமி அவர்கள் பழைய காங்கிரஸ் ஆட்சியைக் குற்றம் சாட்டிப் பேசியபோது கூட திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இப்படி எல்லாம் ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டுவது பொருத்தம் தானா? இப்படிச் சொல்வதை முதல் அமைச்சர் அவர்களால் விசாரிக்க முடியுமா? என்று கேட்டார்கள். நான் அதற்கு ''விளக்கம் தேவையில்லை. வதந்தி என்பது இருபுறம் கூருள்ள கத்தி போன்றது. பயன்படுத்துகிறவர்களையே தாக்கக்கூடும்'' என்றேன். அதைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வதந்திகளை வைத்து நான் விசாரணை நடத்த முடியாது. குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைச் சொன்னால் விசாரணை நடத்தத் தயார் என்று கூறியிருக்கிறேன்.

அரசியல் நிலையில் ஊழல் எப்படி நடைபெறுகின்றது என்று எண்ணிப்பார்த்தால் வெளியில் பேசுவதை எல்லாம் வைத்துக் கொண்டு முன்னாள் முதல் அமைச்சர் பெரிய அளவில் ஊழல் நடப்பதாகப் பேசிவருகிறார். என்ன ஊழல் நடந்தது? யார் காலத்தில் நடந்தது என்பதை மக்களே அறிவார்கள். 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவை 15 ஸ்டாண்டர்ட்

ஏக்கராவாகக் குறைத்ததன் காரணமாக எத்தனை ஏக்கராக்கள் அரசுக்குக் கிடைத்தன என்று கேட்கிறார்கள். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக நாம் குறைத்தபோது அதிகமாக பலன் காணமுடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? இரண்டாயிரம் ஏக்கரா, மூவாயிரம் ஏக்கரா, நாலாயிரம் ஏக்கரா என்று நிலம் வைத்திருந்தவர்கள் எல்லாம் 1959ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னால் பெரும் பகுதியை விற்றுவிட்டார்கள்.

அப்படி நிலங்களை விற்றவர்கள் யாரேனும் ஒருவர் பெயருக்கு விற்றார்களா என்றால் இல்லை. குறிப்பாக திரு. கருப்பையா மூப்பனார் - கபிஸ்தலம் - அவர்களுக்குச் சொந்தமாக இருந்த நிலம் 2028 ஏக்கராவாகும், அவரிடம் இருந்து சர்ப்பளஸ் எதிர்பார்த்தது 1983 ஏக்கராக்கள். ஆனால் 1959ம் ஆண்டு கடைசியில் 1464 ஏக்கராக்களை அவர் விற்று விட்டார். அந்த நிலங்களையும் 30க்கும் மேற்பட்டவர்களுக்கு விற்று இருக்கிறார். இப்படி விற்பனை செய்யப்பட்ட வகையில் 1464 ஏக்கராக்கள் போய்விட்டன. கடைசியாக அவரிடம் இருந்து சர்க்காருக்குக் கிடைத்தது 5 ஏக்கராக்கள்தான்.

உக்கடை எ. அப்பாவுத் தேவர் அவர்களுக்குச் சொந்தமானது 1695 ஏக்கராக்கள். அவரிடம் இருந்து 1541 ஏக்கராக்களை அரசு எதிர்பார்த்தது. ஆனால் 60ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின்படி அவரிடம் இருந்து கிடைத்தது 113 ஏக்கராக்கள் தான். காரணம் 59ம் ஆண்டு கடைசிக்குள்ளாக அவர் 502 ஏக்கராக்களை 21 பேர்களுக்கு விற்றுவிட்டார். பாக்கி நிலங்களை டிரஸ்டுகளாக எழுதி வைத்துக் கொண்டுவிட்டார்.

உக்கடை ஏ. விஸ்வநாத தேவர் அவர்களுக்குச் சொந்தமானது 582 ஏக்கரா. அதில் இருந்து சர்க்காருக்கு ஒன்றுமே வரவில்லை. பூண்டி ஏ.வீரய்ய வாண்டையாருக்குச் சொந்தமானது 467 ஏக்கரா. அதில் இருந்தும் சர்க்காருக்கு ஒன்றும் வரவில்லை. பூண்டி ஏ.அப்பாவு வாண்டையாருக்குச் சொந்தமானது 385 ஏக்கராக்கள். அவரிடம் இருந்து 337 ஏக்கரா சர்ப்ளஸ் எதிர்பார்க்கப்பட்டது. 307 ஏக்கராக்களை விற்றுக் கொண்டு விட்டார். கிடைத்தது 30 ஏக்காதான். பூண்டி

வி.அப்பாசாமி வாண்டையாருக்குச் சொந்தமானது 625 ஏக்கரா. அதில் இருந்து 552 ஏக்கரா சர்ப்ளஸ் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு விட்டார். ஆகவே அதில் இருந்து கிடைத்தது ஒன்றுமே இல்லை. ஆக வாண்டையார் குடும்பத்திற்கு மட்டும் நாலாயிரம் ஏக்கராக்களுக்கு மேல் 1959ம் ஆண்டில் இருந்தும் 60ம் ஆண்டு சட்டப்படி அந்தக் குடும்பத்தில் இருந்து 48, 49 ஏக்கராக்களுக்கு மேல் அரசுக்கு சர்ப்ளஸ் கிடைக்கவில்லை. இதைப்போல ஏற்கனவே வி.எஸ்.தியாகராஜ முதலியாருக்கு மட்டும் ஏழாயிரம் ஏக்கரா கரும்புத்தோட்டம் என்கிற அடிப்படையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுவிட்டது.

நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 128 பேர்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன். தஞ்சாவூர், மாயவரம் நாகப்பட்டினம் தாலுக்காக்களில் மட்டும் 138 பேர்களுக்கு 1959ஆம் ஆண்டு இறுதியில் சொந்தமாக இருந்திருக்கக்கூடிய நிலம் 48,924 ஏக்கராக்கள். அதிலே 60ம் ஆண்டு உச்ச வரம்பு சட்டப்படி அரசுக்குக் கிடைத்தது 6624 ஏக்கராக்கள்தான். நான் கேட்கிறேன். எப்படி திடீரென்று 1959ம் ஆண்டு இறுதியில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இந்த 138 நிலச் சொந்தக்காரர்கள் மட்டும் தங்கள் நிலங்களை விற்றுவிட வேண்டும் என்ற உணர்ச்சிக்கு வந்தார்கள்.

இது போன்ற உச்சவரம்புச் சட்டம் வரப்போகிறது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. என்ன என்ன அறக்கட்டளைகளுக்கு விலக்கு அளிக்கப்போகிறார்கள் என்பதும் தெரிந்துவிட்டது. ஒருவர் தம் பங்களாவில் உள்ள கிருஷ்ணன் படத்திற்கு பூஜை செய்வதற்காக என்று 63 ஏக்கராவை டிரஸ்ட் செய்து வைத்திருக்கிறார். கிருஷ்ணன் படத்து பூஜைக்காக டிரஸ்ட் எழுதி வைக்கட்டும். கல்விக்காக டிரஸ்ட் எழுதி வைக்கட்டும். கன்னிகாபரமேஸ்வரி அம்மனுக் காகவோ, காளிக்காகவோ, மாரியம்மனுக்காவோ டிரஸ்ட்டுகள் என்ற பெயரால் எழுதி வைக்கப்பட்ட நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்பது தெரிந்துவிட்டதன் காரணத்தினால் தான் அவர்கள் அன்றைக்கு அப்படி எழுதி வைத்தார்கள். நான் சொன்னது எல்லாம் 138 பேர்களுடைய கணக்குத்தான்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா அவர்களுக்குத் தெரியும். திரு. மணலி கந்தசாமி அவர்களுக்குத் தெரியும். சர்வோதய கமிட்டித் தலைவர் திரு. ஜகந்நாதன் அவர்களுக்குத் தெரியும். கட்டளைகளின் பெயரால் இப்படிப் பல்லாயிரம் ஏக்கராக்களை எழுதி வைத்துவிடுவதற்கு ஏற்பாடு செய்து விட்டதன் மூலம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான நிலமற்ற ஏழை விவசாயிகள் 1960ம் ஆண்டிலே ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதைவிட பெரிய ஊழல் ஒன்று இருக்க முடியுமா?

திருமதி த.ந. அனந்தநாயகி : 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவை பதினைந்தாகக் குறைத்ததன் மூலம் அரசாங்கத்திற்கு எவ்வளவு நிலம் கிடைத்தது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: அதைத்தான் சொல்கிறேன். அடிப்படை ஊழல் 1959லேயே நடந்து விட்டது. 48 ஆயிரத்துச் சொச்சம் நிலங்களில் இருந்து கிடைத்ததே 6624 ஏக்கராக்கள்தான் என்கிறபோது இதில் இருந்து அதிகமாக எவ்வளவு கிடைத்துவிட முடியும்? சிலர் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு வைத்திருந்தார்கள். இன்னும் சில புத்திசாலிகள் 25 ஏக்காவுக்கு 20 ஏக்காவுக்குக் கூட குறைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி : தவறு 1959இல் நடந்தது என்று சொன்னதுபோல இப்போது தவறு நடக்கவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்போது கிடைத்த நிலம் எவ்வளவு என்று சொல்வார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நாலாயிரம் போனது பற்றிக் கவலையில்லை - யானை போனது பற்றிக் கவலைப்படவில்லை - பூனை போகுமோ என்று கவலைப் படுகிறார்கள். அந்தச் சட்டத்திற்கு இப்போதுதான் குடியரசுத் தலைவருடைய அனுமதி கிடைத்திருக்கிறது. அதன்பேரில் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் பூர்த்தியானவுடன் இந்த விவரங்களும் தெரியும்.

Dr. H.V.HANDE : Even in the Committee meeting where we all met, it was clearly decided that this sort of malpractice should be com-

pletely put down and that action must be taken. But the point is when the Chief Minister and the Cabinet brought this 15 acres ceiling. Did the Government examine what is the quantum of available surplus and was it not placed before this House? In other words, were all these things taken into consideration? Now the Government is coming and saying in the House that practically nothing is there - practically very little and there is nothing much to be talked of. Why were all these things not considered? May I know whether it is also because of some malpractice that has taken place recently or is it because of some malpractice that has taken place recently or is it because of the malpractice that took place earlier. After 15 acres ceiling has been brought, the Chief Minister says there is not much surplus land...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1960ல் நடந்ததுபோல் நடக்க முடியாது. அப்போதுதான் திட்டமிட்டு நடத்த முடிந்தது. இதெல்லாம் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து ஆலோசனைக் கமிட்டியில்கூட தெரிவித்து அன்றைக்கு விவாதித்தோம்.

Dr. H. V. HANDE : I will be the last man to subscribe to this. முதல் அமைச்சர் அவர்கள் உட்பட I am not particular about any Minister or the Government. I want to know whether any person is trying to cheat now also. Because he says not much of surplus is available now. I want to know whether all these aspects were thoroughly gone into by the department or the Government. That is my question.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் முழுவதும் ஆராய்ந்த பிறகு அந்தப் பட்டியலைப் பேரவையில் வைக்கத் தயாராக இருக்கிறேன். அதிகமாக வராது என்று தெரிகிறது. இரண்டாயிரம் மூவாயிரம் ஏக்கர்கள் கிடைக்கலாம். நாற்பதினாயிரம் ஏக்கர் சிறுசிறு அளவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டது. அவர்களிடத்திலிருந்து எடுக்கும்போது கொஞ்சம் தான் கிடைக்கும். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்று இப்போது கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் நிலச் சீர்திருத்தம் பொறுத்தவரையில் வேறு பல சட்டங்களும் கொண்டு வருவோம். கரும்புத்தோட்டம், மேய்ச்சல் நிலங்கள்

போன்றவைகளை ரத்து செய்வோம். கரும்புக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்குச் சட்டம் கொண்டு வர இருக்கிறோம். தொடர்ந்து சர்க்கார் அதிகாரிகளை வேகமாக நடவடிக்கை எடுக்கும்படி செய்து எவ்வளவு நிலம் கிடைக்கும் என்ற அறிக்கையை நிச்சயமாக இந்த மன்றத்தில் வைப்பேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இது குறித்து ஆலோசனைக் குழு சிபாரிசு செய்திருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் படிப்படியாக சொல்ல இருக்கிறேன். எல்லாவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வோம். இப்போது இந்த மன்றத்தில் வைத்து இருக்கும் உங்கள் யோசனையைப் பொறுத்த வரையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அடுத்தபடியாக லஞ்சம் ஊழல் என்று சொல்லி கழக அரசு நம்பிக்கை இழந்து இருக்கிறது என்று நம் மாநிலத்தில் இருக்கிற கட்சிகள் பேசுகிற நேரத்தில், புதுவை மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய ஆட்சியில் அமைச்சராக இருக்கும் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகிற நேரத்திலே கட்சி அளவிலே பேசுகிற நிலைமை இருக்கிறது. அப்படிப் பேசுவதற்கு உரிமை இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. நீண்ட காலமாக காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் அவர்கள் (சிரிப்பு.) ஒரு மத்திய அமைச்சர் மாநில அமைச்சர் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையையொட்டி இவ்வளவு தரக்குறைவாகப் பேசி யிருப்பது என்னை மாத்திரமல்ல - இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரையும் புண்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், 'திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களை இப்படிச் சொல்லியிருக்கிறாரே' என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ஒருவேளை நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற காரணத்தால் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சென்னைக்கு அவர் வந்திருந்தபொழுது நிதிநிலை அறிக்கையின் ஆங்கில நகல் வேண்டுமென்று

கேட்டார்கள். நானும் நினைத்தேன். திரு. மோகன் குமாரமங்கலம் போன்றவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டுப் பாராட்டுவார்கள் என்று மகிழ்ச்சியோடு இருந்தேன். அவர் நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு, ''கங்கை காவிரி இணைப்புத் திட்டத்தை இவர்தான் கண்டுபிடித்தார் என்பதைப் போல் சொல்லியிருக்கிறார்'' என்று கூறியது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. கங்கை - காவிரி இணைப்பு பற்றி நான் குறிப்பிட்டது ஆங்கிலக் குறிப்பை அப்படியே படிக்கிறேன்.

""On behalf of the State Government. I have discussed with the Union Planning Minister and the Union Minister for Irrigation the need to take up immediately the massive scheme of linking up the Cauvery with the Ganga".

என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

''நான்தான் கண்டுபிடித்தேன் என்று சொல்வதாக சொல்லியிருக்கிறார். மேலும் அவர் ''வேண்டுமானால் இவருக்கு இன்னொரு டாக்டர் பட்டம் கொடுக்கலாம்'' என்று திரு. மோகன் குமாரமங்கலம் கூறியிருக்கிறார். டாக்டர் பட்டம் வந்தது பற்றி கிண்டலுக்கு உரியது என்று தெரிவிக்கிறார். அப்படிப்பட்ட பெரியவர்களின் பாராட்டுக்களை நான் எதிர்பார்க்கவில்லை (சிரிப்பு).

கங்கை – காவிரி இணைப்பு பற்றி சர் சி. பி. ராமஸ்சுவாமி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் ''சர் சி. பி. ராமஸ்சுவாமி அவர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைக்கச் சொன்னார்களே என்று கேட்ட நேரத்தில் இந்தப் பக்கத்தில் இருந்த அமைச்சர்கள் ''அது குழுவல்ல அப்படி ஒரு ஆலோசனைத் தெரிவிக்கப்பட்டது'' என்றுதான் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் நானும் தொழில்துறை அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும் திரு. சாதிக் பாட்சா அவர்களும் மத்திய அமைச்சரிடத்தில் பேசியிருக்கிறோம். கங்கை-காவிரி இணைப்பு என்பது புதிதாகக் கண்டுபிடித்தது என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் 1971ல் இந்திரா

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் போட்டுவிட்டோம், ''நாங்கள்தான் கண்டுபிடித்தது'' என்று கூறி சின்ன பிள்ளைகள் எச்சில் துப்பிவைத்து, அதை யாரும் தொடக்கூடாது என்பார்களே அதுபோல திரு. மோகன் குமாரமங்கலம் பேசுகிறார். அவர் எத்தனை ஆண்டுக்காலம் காங்கிரஸில் ஈடுபாடு கொண்டு நிலைத்திருக்கிறார் என்று தெரியவில்லை (சிரிப்பு.) அவர் அப்படிப் பேசுவது நல்லதல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்களைப்பற்றிப் பேசுகையில், ''சின்ன பிள்ளைகள் எச்சில் துப்பி வைத்து... என்று சொல்வது பொருத்தமானது அல்ல'' என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மத்திய அமைச்சர்களே சொல்ல ஆரம்பித்துவிட்ட பிறகு மாநில அமைச்சர்களும் சொல்லலாம்.

(திரு கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : ''மாநில சுயாட்சியைக் கேட்டுவிட்டு, கங்கை-காவிரி இணைப்பைப் பற்றிச் சொல்கிறாரே, இது போன்ற முரண்பாடான கருத்து இருக்க முடியுமா?'' என்று திரு. மோகன் குமாரமங்கலம் கேட்டிருக்கிறார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் ரொம்ப நாளாக இருந்திருக்கிறார்கள். பிறகு வேறு கட்சிக்குச் சென்றிருக்கிறார். அதைப்பற்றி திரு. மணலி கந்தசாமி அவர்களுக்கும், திரு. தங்கமணி அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். என்னைவிட அதிகமாகத் தெரியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அது குறித்து திரு. மணலி கந்தசாமி அவர்கள் இந்தச் சபையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ரஷ்யாவிடத்தில் அவருக்குப் பற்று உண்டு. ரொம்ப தொடர்பு உண்டு. ரஷ்யா நாட்டிலே மாநில சுயாட்சி இல்லையா? இருக்கிறது. அங்கே ஒழுங்காக இருக்கிறது. வால்கா, டான்

போன்ற பல நதிகள் இணைக்கப்பட்டு, வாய்க்கால்கள் எல்லாம் இணைக்கப் பட்டிருக்கின்றன. ஏஷியாடிக் ரஷ்யா, யூரோப்பியன் ரஷ்யா என்ற இரண்டையும் இணைக்கின்ற அளவுக்கு வால்கா-டான் நதித்திட்டம் நிறைவேறி இருக்கிறது. அதேபோல ரைன் நதியானது பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகளை ஒன்றாக இணைக்கிறது. டான்யூப் நதி யூகோஸ்லோவியா, ஹங்கேரி, ஆஸ்திரேலியா, ஜெர்மனி ஆகிய நாடுகளை இணைக்கிறது. ஆகவே, கங்கை – காவிரி இணைவதால் மாநில சுயாட்சி இருக்க முடியாது என்று சொல்கிற வாதம் பொருத்தமற்ற வாதமாக, அர்த்தமற்ற வாதமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கங்கை - காவிரி இணைப்புத் திட்டம் தேசீய ஒருமைப்பாட்டை இதன்மூலம் வலியுறுத்துகிறது என்று சொல்லலாம் அல்லவா? இந்த மாநில சுயாட்சியால் பிரிவினை நோக்கம் எள்ளளவும் கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். வெறுமனே பிரிவினையைக் கேட்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போய்விடக்கூடாது.

"People's Action" - Sarva Seva Sangh Journal of News and Views – என்ற பத்திரிகையில் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார். ஜயப்பிரகாஷ் நாராயண் என்னையெல்லாம் பெருமையாக எண்ணி, அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

"But at the same time it must be recalled with pride the ringing words of Chief Minister Mr. Karunanidhi which he is recently reported to have spoken at a public meeting at Thanjavur :

I feel that the Hon. Chief Minister is losing control over the entire situation and he might be reaching a point of no - return and that is why I am cautioning the Government...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கட்சியினுடைய தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமே தவிர, தீர்மானத்தையொட்டிப் பேசப்படுகிற கருத்துக்களை வைத்துப் பேசப்படுவது முறையல்ல. மாநில சுயாட்சி இல்லாவிட்டால் பிரிவினையில் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். ஏன் மாநில சுயாட்சி

இல்லாமல் போகப் போகிறது? இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் என்ன ஜனநாயகம் தெரியாதவர்களா? மாநில சுயாட்சிக்காக வாதாடாதவர்களா? இப்பொழுதே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று தெரிவித்து விட்டார்கள். அவர்கள், என்ன என்ன அதிகாரங்கள் என்று சொல்லுங்கள், ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். தனியாகச் சொல்லுவதாகக் குறிப்பிட்டார்கள். வீரேந்திர பாட்டீல் அவர்கள் ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார்கள் :

'Further, our Party will strenuously strive for getting greater powers for the State commensurate with the responsibilities and obligations to the people cast by the Constitution without affecting the unity and integrity of the country.'

இதைத்தான் நாங்களும் சொல்கிறோம்.

இதைக் குறிப்பிட்ட அவர்களேதான் இதிலே எவ்வளவு தீவிரமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

"will fight in a determined manner'

என்று உறுதியான தன்மையிலே சொல்கிறார்கள். அது மட்டுமல்ல. நாங்கள் கேட்பது வெறும் அட்டானமி. அவர்கள் கேட்பது for greater autonomy for the State and against all discrimination and step - motherly treatment by the Centre.'' என்கின்ற அளவுக்கு வீரேந்திர பாட்டீல் உறுதியாகக் கேட்டிருக்கிறார். நான் பேசிய அதே நாளிலேதான் வீரேந்திர பாட்டீல் கட்சியைச் சேர்ந்தவர்களை ஆதரித்து அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பெங்களூரிலே அங்கே வெளியிடப் பட்டிருக்கிற தேர்தல் பிரகடனத்தின் அடிப்படையிலே வாக்குகள் கேட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஸ்டேட் அட்டானமி என்று நாங்கள் சொன்னால் தவறு, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னால் தவறில்லை. வேண்டுமானால் நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம், மாநில சுயாட்சி வேண்டுமென்று வீரேந்திர பாட்டீல் கேட்டாரே அதே வாசகத்தையே காமராஜர்

கேட்டால், அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்துக் கூட நிற்கிறோம். கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று சொல்கிற துணிவு காமராஜருக்கு இருக்கிறதா? வீரேந்திரபாட்டீல் சொல்கிற கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று சொல்கிற அளவுக்குத் துணிவு அனந்தநாயகி அம்மையாருக்கு இருக்கிறது? அப்படிச் சொன்னால் அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்து நிற்கத் தயாராக இருக்கிறோம்.

இதுவரையிலும் இந்த விவாதத்திலே கருத்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நேரம் அதிகமாகிவிட்டதால் இதற்கு மேலே மற்ற மற்ற பிரச்னைகளை எல்லாம் அந்த அந்த மானியங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றபோது விவாதித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

உரை : 12 நாள் : 07.03.1973

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் உட்பட 81 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 175 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் 38 உறுப்பினர்களும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லாத மற்றக் கட்சிகளைச் சேர்ந்த 58 உறுப்பினர்களில் 43 உறுப்பினர்களும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு அரிய கருத்துக்கள் பலவற்றை அவரவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கட்சிகளின் கொள்கைகளுக்கு ஏற்ப இங்கு விளக்கியிருக் கிறார்கள். அந்தக் கருத்துக்களில் சாதகமான கருத்துக்கள், பாதக மான கருத்துக்கள் எவை இருந்தாலும் அவைகள் அனைத்தும் இந்த ஆட்சிச் சக்கரம் நல்லமுறையில் சுழல்வதற்குப் பயன்படும் என்ற வகையில் கருத்து அறிவித்த எல்லாக் கட்சிகளினுடைய உறுப்பினர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் முதற்கண் தெரிவித்துகொள்கிறேன்.

வழக்கமாக ஆளுநரின் உரையின்மீது நடைபெறுகிற விவாதம் ஆளும் கட்சி உறுப்பினரால் பாராட்டுத் தீர்மானம் கொண்டுவரப்பெற்று அதற்குப் பிறகு விவாதம் தொடங்கும். முதல் அமைச்சருடைய அல்லது நிதி அமைச்சருடைய நிதிநிலை அறிக்கையின்மீது தொடங்குகிற விவாதம் வழக்கமாக எதிர்க்கட்சி முதலில் எதிர்த்துப் பேசி பிறகு விவாதம் தொடங்கும். ஆனால் முதல் தடவையாக என்று நான் கருதுகிறேன், இந்த மாமன்றத்தில் ஆளும் கட்சியின் சார்பிலும் தொடங்கப் பெறாமல் மரபுவழி எதிர்க்கட்சியின்

சார்பிலும் தொடங்கப் பெறாமல் தோழமைக் கட்சியின் சார்பில் இந்த விவாதம் தொடங்கப்பெற்று ஆக ஆரம்பத்திலேயே இதற்கு எதிர்ப்பு இல்லை என்கிற அளவில் இந்த விவாதம் தொடங்கி யிருப்பதைக் காண நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பேசி நல்வாழ்த்துக்களைக் கூறி விவாதத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இங்கு பேசிய கட்சித் தலைவர்களும், சில உறுப்பினர் களும், என்னுடைய அருமை நண்பரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவருமான கே.டி.கே. தங்கமணி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முடியாமல் தடுக்கப்பட்டு விட்டார்கள் என்ற கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசியபோது, எனக்கு அது புரிந்தது. சுதந்திராக் கட்சியின் சார்பில் திரு. ஹாண்டே அவர்கள் பேசியபோது அது எனக்குப் புரிந்தது. ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தவிர மற்றவர்கள் பேசியபோதும் அது எனக்குப் புரிந்தது. ஆனால் பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் வேறு சிலரும் பேசிய நேரத்தில் எனக்கு அது புரியவில்லை. ஏனெனில், இங்கே சுதந்திராக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது ஆளும் காங்கிரஸ் கட்சியோ தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஆட்சிப் பொறுப்பை இது வரையில் ஏற்றுக்கொண்டு இருந்த கட்சிகள் அல்ல. ஆனால் நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்களுடைய காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டை 20 ஆண்டுகாலம் அரசோச்சிய கட்சியாகும். அந்தக் கட்சியின் சார்பில் நம்முடைய நிறுவன காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் என்னை 62 நாட்கள் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் பூட்டி வைத்து விட்டு இங்கே சட்டசபை நடத்துவதற்கு துணையாக இருந்தவர்கள். நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தண்டிக்கப்பட்டு சென்னைச் சிறைச்சாலையில் இருந்தபோது அவர் தலைமை

வகிக்கும் பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு ஒரு நாள் வந்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று, அந்தக் குழுவை நடத்தி வைக்க ஒரு நாள் விடுமுறை கேட்டபோது, அதற்காக வெளியே வந்து விட்டுப்போக அனுமதி கேட்ட போது, அதை மறுத்த அன்றைய பழைய காங்கிரஸ் கட்சி யினுடைய போக்குக்குத் துணையாக இருந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதைப் பற்றிப் பேசும்போது தான் எனக்கு வேடிக்கையாக இருந்தது.

ஆனால், நடைபெற்று இருப்பது என்ன? திரு. தங்கமணி அவர்கள் மீது ஒரு வழக்கு. நான் அந்த வழக்கின் சாராம்சத்திற்குள்ளே நுழைய விரும்பவில்லை, அது நீதி மன்றத்தின் படிக்கட்டிற்கு சென்றுவிட்ட காரணத்தால். ஏன் அதை அரசு திரும்பப் பெற்றுவிடக்கூடாது என்று ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அது வேறு பிரச்னை. ஆனால் அவருக்கு நீதிமன்றத்தில் தரப்பட்டிருக்கும் நிபந்தனை அவர் சென்னையில் தங்கியிருக்கலாம் என்பதுதான். சென்னையிலே தங்கியிருக்கலாம் என்று அளிக்கப்பட்டிருக்கும் அந்தத் தீர்ப்பு எப்படி சட்டசபைக்கு அவர் செல்லக்கூடாது என்று தடுக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. சென்னையில்தான் சட்டசபை நடந்து கொண்டு இருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் நடந்தது போல் உதகமண்டலத்தில் சட்டசபை நடந்து, சென்னையில் திரு. தங்கமணி அவர்கள் தங்கியிருக்க வேண்டுமென்று சொன்னால், ''ஐயோ! சட்டசபைக்கு அவர் வர முடியாமல் தடுத்து விட்டார்களே'' என்று ஆதங்கப்பட நியாயம் இருக்க முடியும். சென்னையில் சட்ட மன்றம் நடந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் நேற்றோ அதற்கு முதல் நாளோ என்று கருதுகிறேன் – இன்று படித்துக் காட்டிய நண்பர் தங்கமணி அவர்களின் கடிதத்தை என்னிடம் காட்டி அவர் சட்ட சபைக்கு வருவதற்கு விரும்பு கிறாரே, ஏன், அவர் ஜாமீன் கோரினால் விட்டுவிடக் கூடாதா என்று கேட்டார்கள். நான் உடனே அவரிடத்தில் சொன்னேன், அது என் கையில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ''அது நீதிமன்றத்தில் இருக்கும் விஷயம். ஆனால், நான் உங்களுக்கு ஒரு செய்தி சொல்கிறேன். அவர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கும்

தீர்ப்பில், அவர் சென்னையில் தங்கியிருக்கலாம் என்று இருக்கிறது. சட்டசபை நடவடிக்கை களுக்கு வர எந்தத் தடையில்லை'' என்று சொன்னேன். ஓகோ அப்படியா என்று கேட்டுக் கொண்டார். ஆறுதல் பெற்றுச் சென்றார். இங்கே பேசுகிறபோது அவர் அப்படித்தான் பேச வேண்டும், பேசினார். ஆனால் அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து எடுத்துச் சொல்லப் பட்டக் கருத்துக்களை அதிலும் பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னபோது நான் உள்ளபடியே வியப்பு அடைந்தேன்.

இப்போதும் நாட்கள் ஒன்றும் ஆகிவிடவில்லை. இந்த மாமன்றம் இந்த மாதம் இறுதி வரையிலும், அதைத் தாண்டி ஏப்ரல் திங்கள் முதல் வாரம் வரையிலும் கூட நடைபெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே கலந்து கொள்ளும் வாய்ப்பினை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பெற முடியும்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் நான் கோடிட்டுக் காட்டி இருக்கின்ற ஒரு முக்கியமான விஷயத்தில் கொஞ்சம் கருத்து வேறுபாடு கொண்டார்கள். குறிப்பாக திரு. சௌடி சுந்தரபாரதி அவர்களும், வேறு சில உறுப்பினர்களும் நிதி ஆணைக் குழு தலையாய இடத்தை மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பெற வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டி இருக்கின்ற கருத்துக்களை அவர்கள், தங்களுக்கு இருக்கின்ற வேறுபாட்டுக் கருத்தின் மூலமாக மறுத்துரைத்தார்கள். திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் நிதி ஆணைக்குழு மூலமாக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற ஒரு கொள்கை சொல்லப் பட்டிருக்கிறது. அது ஒரு சரியான கொள்கையாக எனக்குத் தெரியவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லும் விளக்கம் எல்லாம், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெற வழி வகுப்பதில் நிதி ஆணைக்குழுவே தலையாய இடம் பெறவேண்டு மென்றுதான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேனே அல்லாமல், திட்டத்திற்கு ஆகும் செலவுகளை நிதி ஆணைக்குழுவே கணக்கிலே எடுத்து பரிந்துரைக்க வேண்டும் என்பதும், நிதி ஆணைக்குழுவின் கொள்கைக்கு ஏற்ப

ஆண்டுக்கு ஆண்டு திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு உதவி அளிப்பதில் திட்டக் குழுவிற்குப் பொறுப்பு கொடுக்கலாம் என்பதும் நம்முடைய கருத்தாகும். அதைத்தான் இந்த அறிக்கையில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். நிதி ஒதுக்குவதில் திட்டக்குழுவிற்கு எந்தவிதமான பங்கும் இருக்கக்கூடாது என்பது என்னுடைய வாதமல்ல.

மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு, நிதி ஆணைக்குழு கொடுக்கும் துண்டு மானியங்கள் இப்போதுள்ள நிலைமைகளில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி கொடுக்கப்படுகின்றன. அது அப்படியே இருக்கவேண்டு மென்று நாம் கூறுகிறோம். இவைகளை மாநில அரசு தன்னுடைய விருப்பப்படி செலவு செய்வதற்கான உரிமை பெற்ற அரசாக இருக்கிறது. ஆனால் திட்டக்குழு மாநில திட்டச் செலவுகளுக்கு என்று ஒதுக்கும் தொகையில் – அதை அனைவரும் அறிந்து கொள்வது நலம் என்று கருதுகிறேன் – திட்டக்குழு மாநிலங் களுடைய திட்டச் செலவுக்காக ஒதுக்குகின்ற தொகையில் உதவியாகத் தருவது, கடன் உதவியாகத் தருவது, 70 சதவீதம், மானியமாகத் தருவது 30 சதவீதம்தான் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அதிலே நான் சொல்வது இந்த உதவி மானியத்தைப் பொறுத்தவரையில் நிதி ஆணைக் குழுவின் பொதுவான பரிந்துரைப்படி, திட்டக் குழு மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென்பதும், மத்திய நிர்வாக சீரமைப்புக் குழுவின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கிறது என்பதாகும். திட்டக் கடன் உதவி, பெரிய குறிப்பிட்ட திட்டப்பணிகளுக்கு கடன் அளிப்பதற்கு அனைத்து இந்திய கடன் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தி, அதிலே மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்தாகும்.

மத்திய அரசின் சார்பில் மாநிலம் நடத்தும் பணிகள் உதவி (சென்டிரலி ஸ்பான்சர்ட் ஸ்கீம்ஸ்) மத்திய அரசின் பல துறைகள் தொடங்கும் திட்டங்களை மாநிலத்தில் மாநில அரசு நடத்துவதற்கு உதவி ஆகியவைகளை எல்லாம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு உட்படுத்தவேண்டும் என்றுதான் சொல்லி இருக்கிறோமேயல்லாமல் எல்லா

வற்றையும் நிதி ஆணைக்குழுதான் வழங்க வேண்டும், திட்டக் குழுவே அந்தப் பணியைச் செய்யவேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அவர்களுக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களை தங்களுடைய உரையில் குறிப்பிட்டார்கள். திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். ''பொதுச் சுகாதாரம் என்பதின் கீழ் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 12.45 கோடி ரூபாய், திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இதற்கான செலவு 10.04 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டிருக்கிறது, குறைந்து இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் கவனித்து எடுத்துகாட்டியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர்களுக்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் 12.45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இருப்பதில், குடும்ப நல திட்டத்திற்காக நிதி ஒதுக்கம் 3.86 கோடியாகும். இதை நீக்கி விட்டுப் பார்த்தால் 8.59 கோடி ரூபாய்தான் பொதுச் சுகாதாரத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டது. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற 10.04 கோடி ரூபாயில் இந்த குடும்ப நல திட்டத்திற்காகச் செலவு செய்யப்படுவது அதிலே சேரவில்லை.

திருமதி. த.ந. அனந்தநாயகி : அதே நேரத்தில் அடுத்தப் பக்கத்தில் பார்த்தால் குடும்ப நலத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது எப்படி வந்தது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைத்தான் நான் சொல்கிறேன். குடும்ப நலத்திட்டத்திற்காக 6 கோடி தனியாகப் போடப்பட்ட காரணத்தால் இதிலே அதைச் சேர்க்கவில்லை. பொதுச் சுகாதாரம் நிதி ஒதுக்கீடு 8.59 கோடி ரூபாய், திருத்த மதிப்பீடு 10.04 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது என்று நாம் தெரிந்துகொள்ள முடியும். பொதுவாக மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் திட்டம் என்ற மூன்று துறைகளுக்கும் 1972–73 வரவு செலவுத் திட்ட

ஒதுக்கீடு ரூ.34.69 கோடி மொத்த மதிப்பீடு. திருத்தப்பட்ட மதிப்பீடு 38.9 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. இது பட்ஜெட் டூடெயில்ஸ் என்ற புத்தகத்தில் பார்த்தால் விளக்கமாகத் தெரியும்.

திரு. ஹாண்டே அவர்கள் இதே போன்று இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். வேளாண்மைக்காக செலவிடப்படும் திட்டத்தொகை குறைந்து வருவதாகச் சொன்னார்கள். அதிலே இருப்பதை எடுத்துக் காட்டினார்கள். 1972–73 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு இதற்கு 619 லட்சம் ரூபாய், 1972–73 திருத்த மதிப்பீடு நிதி ஒதுக்கீடு 564 லட்சம் ரூபாய் என்று இருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இதிலே திட்டச் செலவு, திட்டம் இல்லாத செலவுகள் என்று இரண்டு இருக்கின்றன. நாம் அந்தக் குழப்பம் நீக்கப்பட வேண்டுமென்று அடிக்கடி நிதி நிலை அறிக்கையில் பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொல்லி வருகிறோம். திட்டச் செலவு, திட்டமில்லாத செலவு என்று இரண்டையும் சேர்த்து கொடுக்கவேண்டுமென்று அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம். ஆனால் இந்த ரூ.619 லட்சத்தில் திட்டச் செலவு ரூ.564 லட்சம். திட்டச் செலவு குறைந்து இருக்கிற அதே நேரத்தில் வேளாண்மைத் துறைக்கு திட்டம் இல்லாத செலவுகளின் மூலமாக நிறைய ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த 619 இலட்சம் ரூபாய் திட்டச் செலவோடு 1972–73ல் நிதி ஒதுக்கீடு 20.16 கோடி ரூபாய்தான். ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீடு 24.18 கோடி ரூபாயாக இருக்கிறது. ஆகவே, அது குறைந்து விடவில்லை. திட்டச் செலவு என்ற வகையில் பார்த்தால் திரு. ஹாண்டே அவர்கள் சொன்னது சரியாக வரும். ஆனால் திட்டச் செலவு, திட்டம் இல்லாத செலவு என்று இணைத்து பார்க்கிற நேரத்தில் பொதுவாக வேளாண்மைத் துறைக்கு நாம் செலவு செய்யும் பணம் எதுவும் குறைந்துவிடவில்லை என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. காசிராமன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் இங்கு இல்லா விட்டாலும், அவர்கள் சொன்ன கருத்து பத்திரிகையில் வந்திருக் கின்ற காரணத்தினால் நான் அதற்குப் பதில்

அளிக்கவேண்டிய கடமை உடையவனாக இருக்கிறேன். அவர்கள் எடுத்துக் காட்டிய குறிப்பு, 1966–67ல் நிலவரி, பாசன வரி, செஸ் வரி, விவசாய வருமான வரி இவைகள் எல்லாம் சேர்ந்து, இந்த அரசுக்கு இவைகளின் மூலம் மொத்தம் ரூ.840 இலட்சம் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு, அதே இனங்களில் இந்த அரசுக்குக் கிடைக்கும் தொகையும் ரூ.840 இலட்சம்தான். எனவே, இதில் மாற்றம் இல்லை, எந்த வரியும் குறைக்க வில்லை, ஆகவே நில வரியைக் குறைத்தோம் என்று சொல்வது ஒரு மாயை 'மித்' என்று திரு. காசிராமன் அவர்கள் அன்றைக்கு குறிப்பிட்டார்கள். இதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டுமானால், விவசாய வருமான வரியில் நாம் செய்திருக்கிற மாற்றங்களை மறந்து விடக்கூடாது. 5 ஏக்கர் வரையிலே நஞ்சைக்கும், புஞ்சை நிலத்திற்கும் அடிப்படை நிலத் தீர்வை இல்லை என்று நாம் அறிவித்துவிட்ட பிறகு, பணப்பயிர்கள் செய்துகொண்டிருக்கிற வசதி படைத்த விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியை நாம் இங்கே உருவாக்கி, அதன் மூலமாகக் கொஞ்சம் அதிகமான பணத்தையும் பெறுகிறோம். அதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி கணக்கில் எடுத்துக்கொள்வது மாத்திரம் போதாது. இந்த நிலவரியை வசூலிப்பது பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு கிடைக் கின்றது என்ற கணக்கைவிட, ஒவ்வொரு ஐந்து ஆண்டு காலத்திற்கும் சராசரி எவ்வளவு கிடைத்திருக்கிறது என்பதைக் கணக்கிட வேண்டும். ஏனென்றால், சில ஆண்டுகளில் வரிவஜா அல்லது தவணை என்கின்ற இவைகளெல்லாம் வந்து சேரும். ஆகவே, ஒரு ஐந்தாண்டுக் கணக்கை எடுத்துப் பார்த்து, சராசரி பார்த்தால், 1966–67 முடிய, திரு. காசிராமன் குறிப்பிட்டுக் காட்டிய 1966–67 முடிய உள்ள ஐந்து ஆண்டுகளுக்கு நில வரியின் கீழ் சராசரி வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 கோடி அதே போல 1973–74ஆம் ஆண்டோடு முடிவடைகிற ஐந்து ஆண்டுகளுக்கு சராசரி நிலவரி வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ.6.3 கோடி. ஆகவே, ரூ. 2 கோடி அளவுக்கு குறைந்திருக்கிறது. அடிப்படை நில வரியை ரத்து செய்ததன் காரணமாக சாதாரண விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் மூலம் பயன் கிடைத்திருக்கிறது. இன்னும் போகப் போக இந்த

வரியின் மூலம் கிடைக்கின்ற தொகை குறையக்கூடுமே அல்லாமல், அதிகரிப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லை என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய கம்பம் தொகுதியைச் சேர்ந்த திரு.கோபால் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''1965–66ல் தொழில் அபிவிருத்திக்காக ரூ.6.56 கோடி ஒதுக்கப்பட்டது, 1973–74ல் ரூ.4.48 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என்று சொன்னார்கள். அவர்கள் பட்ஜெட் மெமொராண்டம் பக்கம் 37ஐப் பார்ப்பார்களே யானால், ஒன்றைப் புரிந்துகொள்ளலாம். எண் 35 ''தொழில்கள்'' என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 1965–66ம் ஆண்டுக்கு ரூ.6.56 கோடி ஆகும். வரும் ஆண்டில் அதே எண் 35ல் ''தொழில்கள்'' என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ.7.50 கோடி ஆகும். தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை நான்கு கோரிக்கைகளின் கீழ் வருகிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது. சென்ற ஆண்டையும், அதற்கும் முந்தைய ஆண்டையும் பார்த்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தான் இம்மாதிரி தனித்தனியாக கோரிக்கைகள் வைக்கப்படுகின்ற ஒரு முறையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் சேர்த்துத்தான் 1965–66ல் திரு. கோபால் அவர்கள் சொன்னதுபோல ரூ.6.56 கோடி தொழிலுக்காக ஒதுக்கப்பட்டது. இதில் ஒரு கோரிக்கையை மாத்திரம் எடுத்துச் சொல்வது சரியல்ல. ஆனால் ''டான்சி'' நிறுவனத்திற்கு ரூ. 3.35 கோடி ஒதுக்கியதும் அடங்கியிருக்கிறது. இப்பொழுது டான்சி நிறுவனத்தின் மூலம் செலவழிக்கப்படுகின்ற தொகை ரூ.7 கோடி, அதிலே இது அடங்காமல் தனியாக செலவழிக்கப்படுகிறது. இது மாநில நிதிநிலை அறிக்கையில் இப்பொழுது தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.7.5 கோடிக்கும் மேற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, இந்த இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 1965–66ல் ரூ.6.56 கோடி தொழில் வளர்ச்சிக்காக செலவிடப்பட்டது என்பதற்கு மாறாக, இப்பொழுது சுமார் ரூ.15 கோடி அளவில் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை புலனாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசினார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை இங்கு சமர்ப்பிப்பதற்கு முதல் அமைச்சருக்கு உரிமையே கிடையாது என்று பேசினார்கள். நல்ல வேளையாக அப்படிப் பட்ட தகுதியற்ற ஒருவர் நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்த காரணத்தினால், அதிலே தான் பேச முடியாது என்று சொல்லிவிடாமல், என்பால் அன்பு வைத்து, அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் தன்னுடைய ஆழ்ந்த கருத்துக்களை யெல்லாம் எடுத்துச் சொன்னதற்கு, திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே இப்பொழுது இல்லாவிட்டாலும் திரு.பொன்னப்ப நாடார் அவர்களின் மூலம் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.ஜேம்ஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். '1966–67ம் ஆண்டில் ரூ.194 கோடி வருமானம் இருந்தது மாநில அரசுக்கு. 1973–74ல் ரூ. 465 கோடி வருமானம் மாநில அரசுக்கு என்று சொல்லிவிட்டு 465லிருந்து 194ஐக் கழித்தார்கள். கழித்து, ஆக 271 கோடி ரூபாய் வரி அதிகமாக மக்கள் மீது சுமத்தப் பட்டிருக்கிறது. ஆக வருமானம் முழுவதையும் வரி என்று கணக்கில் எடுத்துக்கொண்டு ரூ.465 கோடி வரி இப்பொழுது, 1966–67ல் ரூ.194 கோடி வரி, ஆக 465ல் 194 போனால் ரூ.271 கோடி என்று கணக்கிட்டு ஒன்றைச் சொன்னார்கள். இது சுலபமான வாதம். ''7–ம் 8–ம்-15'' என்று சொல்கிறார்கள். நாம் அதை மறுக்கிறோம். ''7–ம் 8–ம்-15'' என்பதை எப்படி மறுக்கிறாய்'' என்று கேட்கிறார்கள்.

நாம் சொல்வதெல்லாம் சந்தேகமின்றி 7–ம் 8–ம் 15–ம் தான். ஆனால் 7–ஐ நீங்கள் எப்படிக் கணக்கிடுகிறீர்கள் என்றால், 4–ம் 2–ம் 7 என்று கணக்கிட்டு, பிறகு 7–ம், 8–ம் 15 என்றுதான் சொல்கிறீர்கள்'' என்றுதான் பதில் அளிக்கிறோம். அந்த வகையில் திரு.ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்ட ரூ.194 கோடி மாநில அரசுக்கு வரி மூலமாக 1966–67ல் வருமானம் வந்திருக்கிறது என்பது அதுவும் தவறு. 1973–74ல் ரூ.465 கோடி வரி மூலம் வந்தது என்பது அதுவும் தவறாகும். இந்த வருமானத்தில் பல இனங்கள் சேருகின்றன. 1966 – 67ல் ரூ.29 கோடியாக இருந்த மத்திய வரியின் பங்கு

இப்பொழுது ரூ,96 கோடியாக உயர்ந்திருக்கிறது. அம்மையார் அவர்களுக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கும். பாருங்கள், 1966–67ல் மத்திய அரசு ரூ.29 கோடி தான் கொடுத்தது. இப்பொழுது ரூ.96 கோடி கொடுக்கிறது. இப்படிக் கொடுத்தும்கூட கருணாநிதி மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்கிறாரே, அது நியாயமா என்று கேட்பதற்கு அவர்களுக்கு மேடைக்கு ஒரு சரியான பாயிண்டு கிடைத்தது என்று கருதுகிறேன். ஆனால், நான் சொல்ல விரும்புவ தெல்லாம் தமிழ்நாட்டிலும் சேர்த்து வசூல் பண்ணுகின்ற வரிப்பணத்திலிருந்துதான் மத்திய அரசு பங்குத் தொகையை அளித்து வருகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. மத்திய அரசின் மூலம் ரூ.29 கோடி வந்த வரிப் பங்கு இப்பொழுது ரூ.96 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1966–67ல் ரூ.23 கோடியாக இருந்த மத்திய அரசினுடைய உதவித் தொகை இப்பொழுது ரூ,89 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் கழித்து அதாவது நான்–டாக்ஸ் ரெவின்யூ ரூ.46 கோடியாக இருந்தது. அது இப்பொழுது ரூ.54 கோடியாகியிருக்கிறது. 1966–67ல் வரி தவிர்த்த வருமானம் பார்த்தால் 1966–67ல் வரி ரூ.194 கோடி அல்ல, வருமானம் ரூ.194 கோடி. அதிலே வரி மாத்திரம் ரூ.95 கோடிதான். 1966–67ல் அதைப்போல கழித்துப் பார்த்தால் இப்பொழுது மாநில வரி ரூ. 225 கோடி. 1966–67ல் ரூ.95 கோடி வரி. இப்பொழுது மாநில வரி ரூ.225 கோடி. இது எந்த புதிய வரிகளையும் தாங்க முடியாதவர்கள் மீது போட்டு உயர்ந்த வரி அல்ல என்பதையும் இந்த அவையிலே பல நேரங்களில் அமைச்சர்களும் நானும் எடுத்து விளக்கியிருக்கிறோம். பழைய வரிகளை சிறிது உயர்த்தியதாலும், சீரமைப்புகள் பலவற்றைச் செய்ததாலும், நாட்டில் நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி இவைகளிலே நாம் உண்டாக்கிய முன்னேற்றங்களினாலும் ரூ.95 கோடி என்கின்ற அந்த வரி 7 ஆண்டு காலத்தில் ரூ.225 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த 7 ஆண்டு காலத்தில் இவ்வளவு உயரலாமா? ஒரு நல்ல கேள்வி. ரூ.95 கோடியாக இருந்த வரி 7 ஆண்டுகாலத்தில் ரூ.225 கோடியாக உயரலாமா என்பது நல்ல கேள்விதான். அதே நேரத்தில் 1967–க்கு முன்பு ஒரு ஏழு

ஆண்டு காலம் நாம் பின்னோக்கிச் சென்று பார்க்க வேண்டும். 1967–க்கு ஏழு ஆண்டுக்கு முன்பு 1959–60ல் ரூ.39 கோடியாக இருந்த வரி, 1966-67ல் ரூ.95 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது 2.45 மடங்கு அதிகம். 1959-60ஐக் காட்டிலும் 1966-67ல் உயர்ந்த வரி 2.45 மடங்கு அதிகம். அதை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஏழு ஆண்டுகாலத்தில் 95 கோடி ரூபாயாக இருந்தது 225 கோடி ரூபாயாக உயர்திருப்பது 2.36 மடங்குதான் அதிகம் என்பதை நன்றாகப் புலப்படுத்தும். ஆகவே, முந்தைய ஏழாண்டு காலங்களிலே பார்க்கிறபோது, 2.45 மடங்கு உயர்ந்திருக்கிறது. இப்பொழுது ஏழாண்டு காலங்களிலே 2.36 மடங்குதான் உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : இந்த ஆறு, ஏழு ஆண்டு காலங்களிலே – ஆறு ஆண்டு காலத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் – 1967லிருந்து 1973 வரை 130 கோடி ரூபாய் அளவுக்கு வரியிலே உயர்வு இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஒப்புக் கொள்ளாவிட்டால் வரி வராதே.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் திரு. கோபால் அவர்கள் பேசியதற்கு பதில் சொன்னார்கள். கோபால் அவர்கள் இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். விளம்பரத்திற்கு ஏராளமான பணம் செலவு செய்கிறார்கள் அது எதற்காக என்று சொன்னார்கள். அதற்கு பதில் என்ன?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. ஹாண்டே அவர்களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது. அடுத்த பாயிண்ட் அதுதான். திரு. கோபால் அவர்கள் சொன்னார்கள், குறித்து வைத்திருக்கிறேன். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது – இரண்டாண்டு காலத்திலே பத்திரிகை விளம்பரச் செலவுகளுக்காக ரூ.2.18 லட்சம் என்றும், அது இப்போது அதிகமாகிவிட்டது என்றும் திரு.கோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். முதலிலே ஒரு விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சிட்கோ, சிப்காட், சுற்றுலா வாரியம், குடிசைமாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை இல்லை. இப்போது இந்த நிறுவனங்களின் சார்பாகவும் விளம்பரங்கள் தரப் படுகின்றன. அது மட்டுமல்ல, 1969–க்குப் பிறகு பத்திரிகைகளின் விளம்பரக் கட்டணங்களை உயர்த்தி யிருக்கிறார்கள். திரு.கோபால் அவர்கள் பேச்சை கட்டம் கட்டிப் போட்ட பத்திரிகைகளுக்கே கூட இது நன்றாகத் தெரியும்; பத்திரிகை விளம்பரக் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறார்கள். அப்படியே இருந்தாலும்கூட, திரு.கோபால் அவர்கள் சொன்னது தவறான கணக்காகும்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து ஆட்சி புரிந்த இரண்டாண்டு காலத்தில் 2.18 லட்சம் ரூபாய்தான் விளம்பரங்களுக்கு செலவிட்டார்கள் என்பது தவறு. முற்றிலும் தவறு. 1967–68ல் மாத்திரம் அண்ணா அவர்கள் ஆட்சி புரிந்தபோது 5,20, 945 ரூபாய், 1968–69ல் 8,09,151 ரூபாய் ஆக 13 லட்சத்திற்கு மேல் அந்த இரண்டாண்டு காலத்தில் விளம்பரத்திற்காக அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தரப்பட்டிருக்கிறது. 1969–70ம் ஆண்டிலே 12 லட்சம் ரூபாய், 1970–71ம் ஆண்டில் 20,43,000 ரூபாய், 1971-72ல் 24,83,000 ரூபாய். இந்த மூன்று, நான்கு ஆண்டு காலத்தில் விளம்பரத்திற்காக மொத்தம் செலவிட்ட தொகை 57 இலட்சம் ரூபாய். இதிலே அவர்கள் குறிப்பிட்டார்கள் – 1½ லட்சம் ரூபாய்க்கோ, 2 லட்சம் ரூபாய்க்கோ முரசொலிக்கு விளம்பரம் தந்துவிட்டார்கள் என்று. உண்மை. 57 இலட்சம் ரூபாயில் 1½ அல்லது 2 லட்சம் ரூபாய் முரசொலிக்கு விளம்பரம் தந்ததுபோக மிச்சம் உள்ள 55 இலட்சம் ரூபாய் மற்ற பத்திரிகைகளுக்கு விளம்பரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு பெரிய தவறு நடந்துவிட்டதாக யாரும் சொல்லமுடியாது.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : முரசொலிக்கு விளம்பரம் கொடுத்ததற்காக நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் சர்க்குலேஷன் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று கோபால் அவர்கள் இங்கே சொன்னார்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன்.

What is the basis on which the advertisement is given? What is the circulation of 'Murasoli' and whether the advertisement is proportionate to its circulation. That is the only question I want to ask and if the Hon. Chief Minister gives the figures, it would be more useful to the House and also we would be having an objective assessment of the problem.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொல்கிறேன் அதைப்பற்றி. விளம்பரச் செலவு இங்கே மாத்திரம் உயர்ந்திருக்கவில்லை. மத்திய அரசிலே பார்த்தால் கூட 1963–64ல் 55 லட்சம் ரூபாயாக இருந்தது 1971–72ல் 115 லட்சம் ரூபாயாக அங்கே உயர்ந்திருக்கிறது. எந்த அடிப்படையிலே தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அன்றைக்கு செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்த அடிப்படையில் தரவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள் என்றால், அதைப் படிக்கிறேன் - கேட்டுக்கொள்ளுங்கள்.

''டிசம்பர் மாதம் 8''ந்தேதி புது டில்லியில் செய்தி விளம்பரத் துறை அமைச்சர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து பேசும்போது ''அரசாங்க விளம்பரச் சாதனங்கள் அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பரப்புவதற்குத்தான் பயன்படுத்த முடியுமே தவிர, அரசாங்கத்தின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சிக்கின்றவர்களுக்காக அல்ல'' என்பதை இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இன்னும் சொன்னார், 'மக்கள் ஒரு அரசாங்கத்தை அவர்களுடைய கொள்கைகளை அமுல் நடத்துவதற்காகத் தேர்ந்தெடுத்து இருக்கும்போது, அந்த மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யக்கூடிய இந்த விளம்பரம், அந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்ற முறையில் இருக்க வேண்டும் என்றும் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனாலும்கூட, இந்தியப் பிரதமர் அவர்கள் தெரிவித்த அதே கொள்கையிலேதான் இங்கே விளம்பரங்கள் தரவேண்டு மென்று நான் வைதீக முறையில் இல்லாமல் கொள்கை வேறுபாடு இருந்தாலும், அவதூறாக – பொய்யாக இந்த அரசாங்கத்தை இழித்தும் பழித்தும் வேண்டுமென்றே செய்திகளை வெளியிடுகிற பத்திரிகைகளை ஒதுக்கிவிட்டு,

மற்றப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருகிறோம். இந்திரா காந்தி அவர்கள் சொன்ன அந்த கொள்கை வேறுபாடு என்கிற அந்த அடிப்படைகூட இல்லாமல் எல்லா பத்திரிகைகளுக்கும் இந்த அரசாங்கம் விளம்பரம் தந்துகொண்டிருக்கிறது.

திருமதி த.ந. அனந்தநாயகி : அப்படியென்றால் நியூட்ரல் பேப்பர்ஸ் எத்தனையோ இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுத்திருக்கலாம். தனிப்பட்ட பத்திரிகைகளுக்கு மட்டும் என்றில்லாமல் மக்கள் மத்தியிலே ''நியூஸ் வால்யூ'' இருக்கின்ற பத்திரிகைகளும் இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுக்கலாம், உங்கள் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் கொடுக்கிறீர்கள் என்றால் இது நியாயமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே சொன்னேன். 57 லட்சம் ரூபாயில் 55 லட்சம் ரூபாய் மற்ற பத்திரிகைகளுக்கு கொடுக்கப்படுகின்றது. 1½ அல்லது 2 லட்சம் ரூபாய் முரசொலிக்குத் தரப்படுகிறது என்று திரு. கோபால் அவர்கள் சொன்னார்கள். அது முரசொலிக்குத் தரப்படுகிறது. அதிலே தவறு ஏதுமில்லை. அது தொடர்ந்து நடத்தப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H.V. HANDE: What is the circulation of 'Murasoli' and what is the amount given towards advertisement charges and whether it is proportionate to its circulation? Of Course, the Hon. Chief Minister says that he is not going to give advertisement to newspapers which criticise him harshly. That is a different matter which I do not want to go into now. Also what is the circulation of newspapers like 'Dinamani, 'The Hindu' and 'The Indian Express' which the Government consider as neutral papers and what is the amount given to them towards advertisement charges? I am asking a specific question and I want a specific answer. In this connection, I want to point out that so far as the circulation of 'Murasoli' is concerned, it is about 15,000. If it is more than 15,000 it has to pay 2 paise extra as tax to the Central Government and that is a different matter. So, I request the Hon. Chief Minister to clarify whether the amount of advertisement charges is commensurate with its circulation.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்கு இந்த அவையிலே அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். விளம்பரம் பத்திரிகைகளின் எண்ணிக்கையைப் பார்த்துக் கொடுப்பது இல்லை என்றும் பத்திரிகையின் 'டோன் அண்டு கன்டென்ட்' ஆகியவைகளைப் பொறுத்துத்தான் கொடுக்கப் படும் என்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சர்க்குலேஷனைப் பற்றிக் கேட்டேன்.) இந்த அவையில் அன்றைய சர்க்குலேஷன் பற்றி ஏற்கனவே டில்லிக்குக் கொடுக்கப்பட்ட பதிலில் – நீங்கள் டில்லியிலே கொண்டு போய்க் கொடுத்த புகார் பட்டியலுக்கு அளிக்கப்பட்ட பதில் புத்தகத்தில் இருக்கிறது. திரு. ஹாண்டே அவர்கள் அதை ஓய்வாகப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்து, மிக முக்கியமான விலைவாசி உயர்வு குறித்து இந்த மாமன்றத்திலே எல்லா உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். அதற்கு இந்த அரசு கவலைப்படவில்லை; கொஞ்சம்கூட சிந்தித்துப் பார்க்கவில்லை என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், ஹாண்டே அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களும் நேற்றைய தினம் சொன்னார்கள். ''இதற்கெல்லாம் நீங்கள் யாரும் கவலைப்படவில்லை'' என்று சொன்னார்கள். கவலை எடுத்துக்கொள்ளவில்லை என்று திரு. ஹாண்டே அவர்கள் சொன்னதை அவர்களே மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசும் மாநில அரசும் மட்டுமே இந்தப் பிரச்சினையில் கவலைப்பட வேண்டுமே அல்லாது பாமர மக்கள் கவலைப்பட வேண்டியதல்ல என்று குறிப்பிட்டார்கள். அதோடு வாக்கியத்தை நிறுத்திவிடக்கூடாது. பாமர மக்கள் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நாமே இந்த மன்றத்திலே விவாதித்து இதற்கு யார் பொறுப்பு என்பதை அக்கறை செலுத்தியாக வேண்டும். அதை மக்கள் இடத்தில் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

திரு. மணலி அவர்கள்கூட சொன்னார்கள். பழையகால மித்திரன் பத்திரிகையில் இருந்து ஒரு பாட்டை எடுத்துக்காட்டி, இந்தப் பாட்டை ஆளுங் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் பாடுங்கள் என்றுகூடச் சொன்னார்கள். தமிழிலும் பாடலாம். மலையாளத்திலும் அதை மொழி பெயர்த்து கேரளத்திலும் போய் பாடலாம். அகில இந்தியாவில் எல்லா மாநிலங்களிலுமே பாடவேண்டிய பாட்டாகத்தான் அந்த பாட்டு இருக்கிறது. இதைக் கேலியாகச் சொல்லவில்லை. அவர்கள் சொன்ன இலக்கிய நயத்தோடு பதிலளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இது ஒரு மாநிலத்தின் பிரச்சினையாக இல்லாமல் இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்கள் பிரச்சினையாகவும் இருக்கிறது. அந்த முறையிலே இந்தப் பயங்கரமான பிரச்சினையை அணுகி ஆகவேண்டும். இதற்கு நாம் மத்திய அரசு பொறுப்பு என்று சொல்கிற நேரத்தில் மக்களிடத்திலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்குச் சொல்லவில்லை. ஒரு உண்மையைச் சொல்கிறோம்.

அதற்கு விளக்கம் அளிக்கிறோம். அந்த விளக்கம் ஏற்கனவே இருந்த பழைய அரசுகளால் அளிக்கப்படவில்லை. அப்போது எப்படி விளக்கம் அளிக்கப்பட்டதென்றால், விலை வாசி உயர்ந்துவிட்டால், அப்போது தரப்பட்ட பதிலெல்லாம், அப்படித்தான் விலைவாசி உயரும், என்பதுதான். விலைவாசி உயர்ந்துவிட்டது என்று நாங்கள் கிளர்ச்சியில் ஈடுபடுகிறோம் என்றால், அது கேலி புரியப்பட்டது. அரிசிக்காக கியூ நிற்கிறார்களே என்று சொன்னால், சினிமாவிற்கு கியூ நிற்க வில்லையா என்கின்ற கேள்வியின் மூலம் பதிலளிக்கப்பட்டது. இன்று இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் எதிரொலித்த அதே கருத்துக்களை இந்த அரசும் எதிரொலிக்கக் கடமைப் பட்டிருக்கின்றது. நாங்கள் பொறுப்பிலேயிருந்து தட்டிக்கழித்து விட என்றைக்கும் நினைத்ததில்லை. நினைக்க விரும்பியது மில்லை. ஆனால் உண்மை நிலைமைகளை மக்களுக்கு உணர்த்த நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு நாட்டிலும், (1) தேசிய வருமான வளர்ச்சி, (2) நாணயப் புழக்கம் Money supply – இந்த இரண்டையும்

ஒப்பிட்டுப் பார்த்தாக வேண்டும். அப்படிப் பார்த்தால், இங்கே கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா வெளியிட்டிருக்கின்ற ''இகானமிக் சர்வே 1972 – 73'' அந்தப் புத்தகத்தில், மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1968–ம் ஆண்டைவிட 1968–69ல் தேசிய வருமான வளர்ச்சி 7 சதவிகிதம்தான் உயர்கிறது. அதே நேரத்தில் நாணயப் புழக்கம் 8.1 சதவிகிதம் என்று உயர்கிறது. 1969 – 70ல், 1968 – 69 ஐ விட தேசிய வருமான வளர்ச்சி 7.3 சதவிகிதம் என்று உயருகிறது. நாணயப் புழக்கம் 10.8 சதவிகிதம் என்று உயருகிறது. 1970–71ல் தேசிய வருமான வளர்ச்சி முன் ஆண்டைவிட 4.6 சதவிகிதம் அதிகமாகிறது. அதே சமயத்தில் நாணயப் புழக்கம் முன் ஆண்டைவிட 11.1 சதவிகிதம் அதிகமாகிறது. ஆனால், திடீரென்று பயங்கரமாக 1971 – 72ல் தேசிய வருமான வளர்ச்சி 1.5 என்ற வீதத்திலிருந்து இரண்டு புள்ளி என்று இழுபறி நிலைக்குப் போய் நிற்கிறது. அதற்கு மாறாக, நாணயப் புழக்கம் 12.9 சதவீதம் என்று உயர்கிறது. இதே நிலைமைதான் 1972 – 73லேயும் ஏறத்தாழ நீடிக்கிறது. ஆகவே, தேசிய வருமான வளர்ச்சிக்கு மேலாக நாணயப் புழக்கத்தை அனுமதித்துவிட்டால், அதன் விளைவாக, விலைவாசி பாதிக்கப்படுகிறது. ஆகவே, நாணயப் புழக்கத்தைக் கட்டுப் படுத்துகின்ற உரிமை - அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறதா? அல்லது ரிசர்வ் பாங்கிக்கு மற்ற பாங்குகளைக் கட்டுப் படுத்துகின்ற அதிகாரம் இருக்கிறதா? அந்த கேள்விக்கு பதில் காண்கின்ற நேரத்திலேதான் நாணயப் புழக்கத்தை கட்டுப் படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசின் பொறுப்பு அல்ல, மத்திய அரசின் பொறுப்பு என்று சொல்கின்றோம். அப்படி பொறுப்போடு சொல்கின்ற நேரத்தில், ஒரு விரலைக் காட்டி, குற்றவாளி என்று சொல்லவில்லை. அந்தப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் இடைஞ்சல்கள் இருக்கின்றன. திட்டங்கள் போட வேண்டுமானால் அதற்கு பணப்புழக்கம் தேவை. ஆகவே, இப்படி இது ஒரு பெரிய சர்க்கிளாக சுழன்று கொண்டிருக்கிறது. அந்தச் சங்கடம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, பொறுப்பு மாநில அரசுக்கு அல்ல, மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேனே அல்லாமல் வேறல்ல.

திருமதி த.ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இவ்வளவு விவரமாக பொறுப்பு மாநில அரசுக்கா, மத்திய அரசுக்கா என்று கனம் முதலமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள். தேர்தலிலே அன்றைக்கு நின்றபோதே மத்திய அரசுக்குத்தான் அந்தப் பொறுப்பு என்ற உணர்ச்சியோடு போதாது. ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் குறைத்துவிடுவோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரியை யெல்லாம் குறைப்போம்'' என்று சொன்னார்களே, இன்றைக்கு அவர்களுடைய பங்கு என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் நல்லது. இன்றைக்குத் தப்பித்துக்கொள்கின்ற வகையில் பழியை மத்திய அரசிடம் போடுகிறார்கள். இது எப்படிச் சரியாகும்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : என்ன செய்வது? உங்களை நம்பித்தான் சொன்னோம். மத்திய அரசு பொறுப்போடு நடைபெறும் என்று நம்பித்தான் சொன்னோம். நம்பிக்கை மோசம் செய்துவிட்டீர்கள். (கரவொலி). எங்களுக்கு மாத்திரமா செய்தீர்கள்? அவர்களுக்கும் சேர்த்துத்தான் செய்தீர்கள். (மீண்டும் கரவொலி).

டாக்டர் எச்.வி. ஹாண்டே : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்தப் பணவீக்கத்தைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். நானும் அதைத்தான் என்னுடைய பேச்சின்போது, எகானமிக் சர்வே ஆப் இண்டியாவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன். உடனே, மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள், ''இது பாராளுமன்றத்தில் பேச வேண்டிய பேச்சு'' என்று என்னைத் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் அதையே நான் உங்களுக்குச் சொல்ல வில்லை. இது நீங்கள் இங்கே பேச வேண்டிய பேச்சுத்தான். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், ''இன்க்ரீஸ்ட் புரொடக்ஷன்.'' பொருள்கள் உற்பத்தி செய்தால்தான் இதற்குப் பரிகாரம் என்று சொல்ல வந்தேன். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டீர்கள் என்று கேட்டேன்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ''உங்களை நம்பித்தான் சொன்னேன்'' என்று சொன்னார்கள். இன்றைக்கு எங்களை நம்பித்தான் ஆட்சி நடத்துகிறீர்களா,

அல்லது அன்றைக்கு எங்களை நம்பித்தான் வெற்றி பெற்றீர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா? என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவ ரவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் இதே விஷயத்தைத்தான் சொல்ல வேண்டுமென்று கருதியிருந்ததாகச் சொன்னார்கள். அவர் சொன்னால் என்ன, நான் சொன்னால் என்ன? அவர்கள் கடைசியாகச் சொல்ல வந்ததாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். உற்பத்தி பெருகினால்தான் இப்படிப்பட்ட பணப்புழக்கம் ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிற நேரத்தில் பொருளாதார வளர்ச்சியும் பெருகிட வேண்டும். அந்தப் பெரிய இடைவெளியைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

அது மாத்திரமல்ல. இன்னம் சில காரணங்கள் இருக்கின்றன. விலைவாசி உயர்வுக்கு மேலும் ஒரு பெரிய காரணமாக இருப்பவர்கள் வரி ஏய்ப்பவர்கள். நாட்டில் இந்த வரி ஏய்ப்பவர்களிடமிருக்கிற கறுப்புப் பணம் ''அன் அக்கௌண்டட் மணி'' – புழக்கத்திற்கு வராமலேயே அடிபட்டு விடுகிற காரணத்தால் விலைவாசி உயர்கிறது. நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தக் கறுப்புப் பணக்காரர்களை – அன்அகௌண்டட் மணி வைத்திருப்பவர் களை – வெளியே கொண்டு வருகின்ற அந்தப் பொறுப்பும் நமக்கில்லை என்பதும், அது மத்திய அரசிடம்தான் இருக்கிறது என்பதும், அதன் காரணமாக நாட்டில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன என்பதும் யாரும் அறியாதவர்கள் அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கறுப்புப் பணம் எப்படி விளையாடுகிறது என்பதை முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைப் போலவே உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு நமது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அரிசியை உற்பத்தி செய்கிறோம். அதே நேரத்தில், அரிசி விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய அந்தச் சூழ்நிலை நமக்கு இருக்கிறது.

வேறு மாநிலங்களுக்குச் செல்லாமல் அப்படிக் கட்டுப்படுத்துகிறோம். மற்ற உணவுப்பண்டங்களில் பெரும்பாலானவை அப்படி அல்ல. நமது மாநிலத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிற காரணத்தால், உணவுப் பண்டங்களிலே முக்கியமான அரிசியின் விலையை நாம் கட்டுப்படுத்திவைக்க முடிகிறது. அப்படி இல்லாத காரணத்தால் பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களுக்கெல்லாம் நாம் வேறு மாநிலங்களை நம்பியிருக்கவேண்டிய காரணத்தால் – இந்தச் சூழ்நிலை இந்தியா முழுமைக்குமாகப் பரவிக் கிடக்கின்ற காரணத்தால் –இப்பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால், தீர்க்க முடியாத சங்கடத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம்.

இந்தக் காரணங்களால்தான் பருப்பு போன்ற தானிய வகைகளையெல்லாம் தமிழ்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முனைப்போடு, முயற்சியோடு இருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலும் கவர்னருடைய பேருரையிலும் இந்த அரசின் சார்பாக எடுத்துக்காட்டி யிருக்கிறோம். மத்திய அரசே பொறுப்பு என்று கூறிவிட்டு மாநில அரசு எந்தப் பொறுப்பும் எடுத்துக் கொள்ளாமலிருந்து விடுமென்று யாரும் கருதத் தேவையில்லை. இயன்ற அளவுக்கு எல்லாப் பொறுப்புக்களையும் எடுத்து விலைவாசியைக் கட்டுப்படுத்து கின்ற வகையில் என்னென்ன வழிவகைகளை கையாள முடியுமோ அத்தனை வழிகளையும் இந்த அரசு கையாளு மென்ற உறுதிமொழியை மிகமிக முக்கியமாக இந்தப் பிரச்சினையில், இந்த மாமன்றத்திற்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்று நமது தமிழ்நாட்டில் பரபரப்பிற்கு ஆளாகியிருப்பது மின்வெட்டு. அதைப்பற்றியும் அனைவரும் இங்கு பேசியிருக்கிறார்கள். தமிழகமே இருளில் மூழ்கிக் கிடக்கிறது என்றெல்லாம் மிகைப்படுத்தப்பட்டுப் பேசப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசியல் கட்சிகள் அவரவர் கட்சிகளின் இயல்புக்கேற்ப இந்தப் பிரச்னையை அணுகுகின்றன. நான் எல்லா அரசியல் கட்சிகளையும் மிகுந்த

பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இது ஒரு பொதுப் பிரச்னை. ஒரு தனிப் பிரச்னை அல்ல. கொள்கைப் பிரச்னை அல்ல. குறிப்பாக, மாணவர்களுக்கு பயிற்றுமொழி ஆங்கிலமா, தமிழா என்ற கேள்வி வருகின்ற நேரத்தில் மாணவர்கள் தங்களுக்குப் பயிற்று மொழி ஆங்கிலம்தான் என்றும் தமிழ் தேவையில்லை என்றும் சொல்கிற நேரத்தில் இதைத் தமிழ் மக்கள், தமிழ்நாடு என்று பார்க்கிற நேரத்தில், இது பொதுப் பிரச்சினையாக வருகிறது என்றாலும்கூட அதை விட்டுக் கொடுத்து அதிலேகூட அரசியல் காரணம் ஏற்பட்ட நேரத்தில் அதை அரசியலுக்காகச் சிலர் பயன்படுத்திக் கொண்ட நேரத்தில் அரசியல் பிரச்சினையாக அணுகி யிருக்கிறோம்.

அப்படி இல்லாமல் இது அனைவரையும் பாதிக்கக் கூடியது என்று - திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல, திரு. மணலி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல –இது ஓர் போர்க்காலச் சூழ்நிலையைப்போலக் கருதி நாம் ஈடுபட வேண்டிய பெரிய காரியமாகும்.

அதே நேரத்தில் ஒரு அரசு தன்மீது சுமத்தப்படுகிற பழி, சொல்லப்படுகிற குற்றச்சாட்டு ஆகியவற்றுக்குப் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் எப்படி இது ஒரு பொதுப் பிரச்சினை என்று சொல்லி, அரசை ஒரு மூலையில் கொண்டுபோய்த் தள்ளி மற்றவர்கள் குற்றம் சாட்டுவதற்கு விரும்புகிறார்களோ அதைப்போலத்தான், தான் அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்ட நிலைமையில் இல்லை, தான் அதற்குப் பொறுப்பு இல்லை என்பதை எடுத்துச் சொல்கிற உரிமையை அரசும் பெற்றிருக்கிறது.

இந்த அரசு வந்த பிறகு மின்சார உற்பத்தியே நடைபெறவில்லை. ஆகவே தான் சங்கடங்கள் ஏற்பட்டன என்று திரு. மணலி அவர்களே சொன்னார்கள், நாம் உஷாராக இருக்கவில்லை என்றும் சொன்னார்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு 110 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 315 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 510 மெகாவாட் மின்சாரம்

கிடைத்தது. ஆக 51 முதல் 67 வரை ஏறத்தாழ பதினைந்து வருடத்தில் நமது மாநிலத்தில் 935 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 67 முதல் 72 வரை. இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 625 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுக் காலத்தில் 935 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 625 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே நாம் உற்பத்தி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இந்த அரசை ஆளாக்குவது முறை அல்ல என்பதற்கான விளக்கத்தை இதன் மூலம் நான் தர விரும்புகிறேன்.

இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. கேரளாவை எடுத்துக் கொண்டால் அங்கே ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 60 லட்சம் யூனிட்தான். மைசூருக்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 130 லட்சம் யூனிட், ஆந்திரத்திற்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 90 லட்சம் யூனிட். ஆகவே இந்த மூன்று மாநிலங்களையும் சேர்த்துக்கொண்டாலும் கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களையும் சேர்த்துக் கொண்டாலும், ஒரு நாளைக்கு தேவையான மின்சாரம் 280 லட்சம் யூனிட்தான். ஆனால் தமிழ்நாட்டுக்கு மட்டும் தேவையான மின்சாரம் ஒரு நாளைக்கு 225 லட்சம் யூனிட். இங்கே தொழில் வளர்ந்திருக்கிற காரணத்தினால் – இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 6 லட்சம் பம்பு செட்டுக்கு மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற காரணத்தினால் (ஆரவாரம்) – கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரு நாளைக்கு ஆகிற மின்சார அளவை கிட்டத்தட்டப் போய்த் தொடுகின்ற அளவுக்கு 225 லட்சம் யூனிட் இந்த மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது.

இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள் நீர் மின்சார நிலையங்களுக்கு இயற்கையினால் ஏற்பட்டுவிட்ட ஆபத்தே தவிர வேறு அல்ல. இயற்கை திடீரென்று, எதிர்பாராத வகையில் ஏமாற்றிவிட்ட காரணத்தினால் நமக்கு நீர் மின்

நிலையங்களில் இருந்து கிடைக்க வேண்டிய மின்சாரம் கிடைக்க வில்லை.

நாம் திட்டங்களே கேட்கவில்லையா, மத்திய சர்க்காரிடம் இருந்து என்று பார்த்தால் பத்துத் திட்டங்களைக் கேட்டிருக்கிறோம். (1) சேர்வலாறு திட்டம், (2) நெல்லித்துறை திட்டம், (3) சோலாட்டிபுழா திட்டம், (4) மேல் அமராவதி திட்டம், (5) பாலையாறுத் திட்டம், (6) சண்முகா நதித் திட்டம், (7) கூனூர் கல்லாறுத் திட்டம், (8) கீழ் மோயாறுத் திட்டம், (9) தூத்துக்குடி அனல் மின் நிலையம், (10) மேட்டூர் அனல் மின் நிலையம் ஆக இந்த பத்துத் திட்டங்களின் மூலம் 1035 மெகாவாட் கிடைக்கக்கூடிய திட்டங்களை மத்திய கமிஷனின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம்.

Thirumathi T.N. ANANDANAYAKI : All these ten schemes have been sent to the Centre to be included in the Fifth Plan which starts from 1974 and ends in 1979. Why did you not send the same for inclusion in the Fourth Plan? That is the point.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சண்முகா நதித் திட்டமானது நான்காவது திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக் கிறதா, அல்லது ஐந்தாவது திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக் கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்தத் திட்டங்கள் எல்லாம் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் அது எந்தத் திட்டத்திற்கு உட்படும் என்பது தெரியும்.

இவைகள் அன்னியில் கல்பாக்கம் விரிவுத் திட்டம் நெய்வேலி இரண்டாவது அனல் மின்நிலையம், தூத்துக்குடி இரண்டாவது அனல் மின் நிலையம் ஆகிய மத்திய அரசின் திட்டங்களை நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இந்த மன்றத்தில் தீர்மானங்கள் போட்டதை எல்லாம் முன்பொரு தடவை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

ஆளும் காங்கிரசைச் சேர்ந்த திரு. குமாரசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் – அம்மையார் அவர்களும்

சொன்னார்கள், அதை ஒட்டி வருகிறது – நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்த மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் - திரு. குமாரசாமி சொன்னார் – பிறகு ஏன் அதில் அவர்கள் குறுக்கிடப் போகிறார்கள் - இது அவர்கள் கேள்வி. நமக்குத் தேவையான திட்டத்தை நாம் போட்டுக்கொண்டு மத்திய அமைச்சர்களிடம் சொல்லிவிட்டு, நாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதுதானே, அப்படிச் செய்யத் தவறியதால் தான் இந்த நிலைமை என்று திரு. குமாரசாமி சொன்னார். எனக்கு இருக்கிற பயம் எல்லாம் ஏதோ சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்பது அல்ல. இதே கருத்தைப் பொதுமக்களிடத்தில் சொல்கிற நேரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் என்ன கருதிக்கொள்வார்கள்? நான்காவது திட்டத்தில் ஒரு மின்நிலையத்தை ஏற்படுத்த மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், மத்திய அரசின் அனுமதியைக்கூட பெறாமல் நாம் அதனை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று திரு. குமாரசாமி சொல்லிவிட்டார். அமைச்சர்கள் இதை ஏன் செய்யாமல், வீணே பொழுதைக் கழித்தார்கள் என்றுதான் பொதுமக்கள் எண்ணத் தோன்றும்.

ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அந்த மின்நிலையத்தை உடனடியாக ஏற்படுத்திவிடுவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பதை ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் நன்கு உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

முதலில் திட்டத்திற்கு விரிவான அறிக்கையைத் தயாரித்து அனுப்புகிறோம். அந்த அறிக்கையை மத்திய நீர் மின்குழு ஆராய்ந்து, மத்திய மின்சாரத் துறை அமைச்சரின் ஒப்புதலைப் பெற்றபின், திட்டக் குழுவிற்கு அதை அனுப்பும். திட்டக் குழுவில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு மறுபடியும் அதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு ஒப்புதல் அளிக்கிறது. இந்த சம்பிரதாயங்களின்படி இந்த வழிமுறைகளில் ஒரு திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. உதாரணமாக, நெல்லித்துறை, சேர்வலாறு, பரலியாறு ஆகிய திட்டங்கள்

1970–71ல் அனுப்பப்பட்டன. இன்னும் அந்தத் திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

திட்டக் குழுவின் அனுமதி இல்லாமல் நாம் ஏன் ஏற்படுத்திவிடக் கூடாது என்று திரு. குமாரசாமி குறிப்பிட்டார். கடற்கரையில் அம்மையாரும் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். அப்படி மத்திய அரசின் அனுமதியைப் பெறாமல் நாம் செயல்பட முற்பட்டால் அந்த நிலையத்திற்கான சாதனங்கள் – பாய்லர் ஜெனரேடர் ஆகிய கருவிகளை மத்திய அரசின் அனுமதி இல்லாமல் எந்தத் தொழிற்சாலையும் உற்பத்தி செய்து தர முன்வராது. அது மாத்திரம் அல்ல. அந்தக் கருவிகளை இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து பெற முடியாமல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்றால் மத்திய அரசின் ஒப்புதலைத்தான் நாம் பெற்றாக வேண்டும். ஆக, அவர்களைக் கேட்காமல் பிறகு ratification வாங்கிக் கொள்ளலாமென்று மாநில அரசிற்குத் திட்டங்களை நிறைவேற்ற எந்த வழியும் இல்லை என்பதை நான் விளக்க விரும்புகிறேன்.

நாம் மின்சாரத்தைச் செம்மையாகவும், சிக்கனமாகவும் செலவழிக்கிறோமா? ஏதோ ஊழல் நடந்திருக்கிறது, நடந்திருக் கிறது என்று சொல்கிறார்கள். உடனேயே அதற்கு ஊழல் விசாரணைக் குழு போடவேண்டும், நீதி விசாரணைக் குழு போடவேண்டும் என்கிறார்கள். இப்படி எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரில் இருந்து வரவேண்டும். தேர்தல் நடக்கிறதா, மத்திய சர்க்காரில் இருந்து தேர்தல் அதிகாரி வரவேண்டும், ஏஜெண்டு போடுகிறார்களா மத்தியில் இருந்து வரவேண்டும், போலிங் பூத்தில் உட்காருகிறார்களா, மத்தியில் இருந்து வரவேண்டும் இன்னும் கொஞ்ச நாட்களில் இங்கே சட்டமன்றம் நடக்கும்போது திருமதி இந்திரா காந்தி அவர்கள் அங்கே பாராளுமன்றத்தை நடத்தாமல் விட்டு இங்கே வந்து முதலமைச்சர் பொறுப்பைப் பத்து நாள் பார்த்துவிட்டு மறுபடியும் டெல்லிக்குப் போக வேண்டுமென்று சொன்னாலும் சொல்வார்கள் என்று கருதுகிறேன். அப்படிச் சொல்லி மத்தியில் இருந்து அமைச்சர்களை வரவழைத்தால்

அவர்கள் நிற்க மாட்டார்கள் என்பதை இந்திய வரலாறு சொல்லிக்கொண்டிருக் கிறது. தேர்ந்தெடுக்கப்படுகிற அமைச்சர்கள்தான் வரவேண்டும். நியமிக்கப்படுகிற அமைச்சர்கள் வந்தால் அவர்களின் ஆட்சி நிற்பதாக இந்தியாவின் சரித்திரம் சொல்லவில்லை.

திருமதி த.ந. அனந்தநாயகி : அப்படி நியமனம் செய்யப்படுகிறவர்கள் அடுத்த 6 மாதத்திற்குள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டே வந்தாகவேண்டும் என்பதை நினைவுகொள்ள வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் ஆறு மாதக் கதையைச் சொல்லவில்லை. அதற்குப் பின் நடந்த கதையைச் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஓரிசாவில் எப்படி மந்திரிசபை கவிழ்ந்ததோ அதுபோல நடக்காதிருக்க ஆயாராம், கயாராம் நம்மிடையே இருக்கக் கூடாது என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆயாராம் கயாராம்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது என்பது பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் தெரியும். இப்படி எல்லாம் மின்சார வாரியத்தில் ஊழல், ஊழல், விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். மத்திய அமைச்சராக இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய திரு.கே.எல்.ராவ் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார். அது இந்துஸ் தான் டைம்ஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது. நல்ல வேளையாக அவர்கள் போட்டார்கள், போனால் போகட்டும் என்று. கே.எல். ராவ் அவர்களது பேச்சின் ஒரு பகுதி இது.

He complimented Tamil Nadu for making the best use of power without wastage.

என்று கே.எல். ராவ் அவர்கள் தமிழ்நாட்டைப் பாராட்டி நாடாளுமன்றத்தில் பேசியிருக் கிறார்கள். அது மாத்திரம் அல்ல. பொதுவாக மின்திட்டங்கள் மத்திய அரசு அளவில் சரியாகச் செயல்படவில்லை என்பதை அவரே குறிப்பிட்டிருக்கிறார். திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்பட

வேண்டும், மின்சாரத் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்தை ஒரு கருத்தரங்கில் அவர் சொல்கிறார்.

The power planning so far had been totally wrong. It should never have been linked to the general Five Year Plans. Power Planning should be a continuous process.

என்று கே.எல்.ராவ் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் 23.02.1972லே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன், உங்கள் தகவலுக்காக, 26.07.72லே ஐதராபாத்திலே நடைபெற்ற ஸோனல் கவுன்சில், மண்டலக் குழுவிற்கு நானும் கல்வி அமைச்சரும், தொழில் அமைச்சரும் சென்றிருந்தபொழுது அங்கே திரு.கே.எல்.ராவ் பேசும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது ஒரு மாநிலத்திலே இருக்கிற ஆட்சியினுடைய அக்கறையற்ற தன்மையினால் இந்த சங்கடங்களெல்லாம் ஏற்பட்டு விட்டதாகச் சொல்கிறார்களே அதற்காக நான் சொல்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கவனமாகக் கேட்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

The power supply position in the States of Southern Zone was going to be extremely bad because of delay in the construction of 390 MW Idikki project due to labour trouble and delay in the commissioning of the 89 MW Unit at Sharavathi on account of delay in supply of equipment, etc., for the project.

என்று சொன்னார்கள். அப்பொழுது இடிக்கியிலே ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலை நிறுத்தத்தை நடத்தியவர்கள் வேறு கம்யூனிஸ்டுகள். ஆனால் வேலை நிறுத்தம் விரைவிலே முடிவடைந்து இருக்குமானால் 390 மெகாவாட் உற்பத்தி அங்கு வந்திருக்குமேயானால், 'சதர்ன் சோன்' தென் மண்டலத்திலே இருக்கிற தமிழ் நாட்டிற்கு நாம் கேரளாவிலிருந்து கொஞ்சம் அதிகமான மின்சாரத்தைப் பெற்றிருக்க முடியும். இப்படிப் பல்வேறு நிலைமைகள் பல இடங்களிலே நடைபெற்றுவிட்ட காரணத்தினாலே தான் இந்த மின்சார வெட்டினால் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இதையே சொல்லிக்கொண்டிராமல் ஆகவேண்டிய காரியங்களையும் நாம் பார்க்க வேண்டும்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : கே.எல். ராவ் சொன்ன கருத்தைத்தான் நான் காலையிலே சொன்னேன். இப்பொழுது இருக்கிற குறையெல்லாம் பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசிலே 70 மெகாவாட் இருந்த காலத்தில் இன்ஸ்டால்ட் கப்பாசிட்டி, 60 மெகாவாட் உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. இப்பொழுது 97.5 இருக்கிற நேரத்தில் 35 மெகாவாட்தான் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆக, நம்முடைய உற்பத்தியிலும் கொஞ்சம் கோளாறு இருக்கிறது என்றுதான் நான் காலையிலே சொன்னேன்.

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசில் கட் இல்லாத நேரத்தில் சென்ற ஆண்டு 24 லட்சம் யூனிட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 30 லட்சம் யூனிட் தயார் செய்யப்படுகிறது. குறைந்துவிட்டது என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. அதுமட்டுமல்ல, எண்ணூரிலேகூட அப்படித்தான் என்று சொன்னார்கள். பவர் கட் இல்லாதபொழுது முழுமையாக இருந்தது என்று சொல்கிறார்கள். இப்பொழுது நாங்கள் உற்பத்தியைப் பெருக்கவில்லை, எங்களுடைய கவனக் குறைவு என்று சொல்கிறார்கள். அதற்காகச் சொல்கிறேன், எண்ணூரிலேகூட சென்ற ஆண்டு, பவர் கட் இல்லாத நேரத்தில் 40 லட்சம் யூனிட்தான் தயார் செய்யப் பட்டது. ஆனால், இந்த ஆண்டு 73 லட்சம் யூனிட் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி : ஒரே ஒரு இன்பர்மேஷன். பவர் கட் இல்லாதபொழுது நாங்கள் இவ்வளவு உற்பத்தி செய்தோம், இன்றைக்கு எவ்வளவு உற்பத்தி செய்கிறோம் என்பதல்ல. பவர் கட் இல்லாதபொழுது நீர் நிலையத்திலிருந்து உங்களுக்குத் தேவையான மின்சாரம் வந்து கொண்டிருந்ததால் அதிலே சற்று அக்கறை இல்லாமல் இருந்தது. இப்பொழுது பவர் கட் இருக்கிறது, இப்பொழுது அனல் மின்சார உற்பத்தியை புல்லஸ்டு கப்பாசிடிக்கு யுடிலைஸ் செய்கிறீர்களா என்பதுதான் எங்களுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : அது முழுமையாக ஓடிக் கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய அமைச்சர்

டாக்டர் கே.எல். ராவ் கூறும் பொழுதுகூட, அது ஓடவில்லை யென்று சொல்லவில்லை. தண்ணீர் வராததற்கு தட்டுப்பாடு இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லி யிருக்கிறார்களே தவிர, குறை இருப்பதாகச் சொல்லவில்லை. குறையில்லாமல், தமிழ்நாட்டிலே ஜெனரேட்டர்களை திருப்தி கரமாக ஓட்டியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : நான் சொன்னது வேறு. மெகாவாட் கணக்குத்தான் கேட்கிறேன். அவர் கொடுப்பது லட்சம் கணக்கு. அது உங்களுக்கு ரொம்பச் சாதகமாக இருக்கும். எவ்வளவு லட்சம் என்று இன்பர்மேஷனைக் கொடுக்கிறார்கள். மெகாவாட் கணக்குத்தான் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நேரத்தைக் கொஞ்சம் நீடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மின்சார வெட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களைப்பற்றிக் கவலையே கொள்ளாமல் இந்த அரசு அலட்சியமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கடந்த பல தினங்களாக வேறு எந்த வேலையையும்கூடக் கவனிக்காமல் இந்த வேலையை நானும் அமைச்சரவையிலே இருப்பவர்களும், அதிகாரிகளும் கவனித்து வருகின்றோம். குறிப்பாக, கைத்தறியாளர்களுக்காக ஆலை அதிபர்களோடு நேற்றையதினம் பேச்சுவார்த்தை நடத்தி, கணிசமான நூலைப் பெறுவதற்கு முயற்சிகள் முடிவுற்று இருக்கின்றன என்பதை இன்று பத்திரிகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருக்கலாம்.

ஆலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர் களுக்குக் கூடுமான வரையில் அவர்களுடைய சங்கடங்களைத் தவிர்க்க அரசு, தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள் அடங்கிய முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டிருக் கிறது. அதனுடைய பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் என்னையும், வேறுசில அமைச்சர்களையும் இரண்டு நாட்களுக்கு முன்பு விவசாயிகளுடைய பிரதிநிதிகள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து சந்தித்தார்கள். நீண்ட நேரம் 10 மணியிலிருந்து கிட்டத்திட்ட 2 அல்லது 2½ மணிநேரம் எங்களோடு விவாதித்தார்கள். நல்ல பயனுள்ள விவாதமாக இருந்தது. பல சங்கடங்களை யெல்லாம் எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்து இப்பொழுது 4 மணி நேரம் கொடுக்கப்படுவது சரியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சில இடங்களிலே கோளாறு ஏற்படுகிறது என்றும் 4 மணி நேரத்தை 6 மணி நேரமாக ஆக்கித்தர வேண்டுமென்றும் சொன்னார்கள். அதை ஆராய்ந்து பார்த்ததில் தற்பொழுது 4 மணி நேரம் தரப்படுகிற மின்சாரத்தை 5 மணி நேரமாக ஆக்குவதற்கு இப்பொழுது நாம் முடிவு செய்திருக்கிறோம். (ஆரவாரம்) அதற்கு பரீட்சார்த்தமாக முதல் கட்டமாக நேற்றையதினம் வேலூர் மின்திட்டத்தில் முதல் பிரிவு காலை 4 மணி முதல் 9 மணி வரை என்றும், இரண்டாவது பிரிவு காலை 8½ மணி முதல் பகல் 1½ மணிவரை என்றும், மூன்றாவது பிரிவு பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரை என்றும் பிரித்து மின்சாரம் வழங்கப்படுகிறது. இது தொடர்ந்து, மற்ற இடங்களிலே வெகு விரைவிலே அதைப் பார்த்துக்கொண்டு அமுலாக்கப்பட இருக்கிறது.

டிரான்ஸ்பார்மர்களில் மின் பளு 'லோட்' அதிகமாகி பழுது ஏற்படுவதை தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று கூறினார்கள். அதற்கு பல புதிய டிரான்ஸ்பார்மர்களுக்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் ஆயிரம் டிரான்ஸ்பார்மர்களை அங்கங்கே நிறுவுவதற்கு முடிவெடுக்கப்பட்டு, அந்தப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மின் வெட்டு நிலைமை சீர்படும் வரையில் மின்சாரத்திற் கான குறைந்தபட்ச கட்டணம் விவசாயிகளுக்கும் தொழிற் சாலைகளுக்கும் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பருவ மழை தவறும் நேரங்களில் எந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்கப்படுகிறதோ, அதே சலுகைகள் இப்போதும் மின் வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விரைந்து அளிக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாரியம் வழங்கும் மின்சாரத்திற்கு மாற்றாக தனியார் ஜெனரேட்டர்கள் வாயிலாக உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு விதிக்கப்படும் வரி இந்த நெருக்கடி தீரும்வரை ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களில் தெரு விளக்குகள் இரவு 7 மணி முதல் 10 மணி வரையில் மட்டுமே எரியலாம். அலங்கார விளக்குகளுக்கு ஜெனரேட்டர்தான் பயன்படுத்த வேண்டும்.

திரைப்பட அரங்குகளில் மின்சாரத்தை உபயோகித்து ஒரு காட்சி மட்டுமே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய திருப்பூர் மொய்தீன் அவர்களுக்கு ஓரளவு மகிழ்ச்சி தரும் என்று கருதுகிறேன். திரைப்பட அரங்குகளில் மின்சாரத்தை உபயோகித்து ஒரு காட்சி மட்டுமே நடத்தப்பட வேண்டும். பிற காட்சிகளை ஜெனரேட்டர் மூலம் நடத்த எந்தத் தடையும் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள தெர்மல் நிலையங்களின் நிலக்கரி தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, ஆறு மாதத்திற்கு அயல் நாட்டுக் கப்பலை பயன்படுத்துவதற்கு ஷிப்பிங் டைரக்டர் ஜெனரலின் அனுமதி கிடைத்துள்ளது. தென்னிந்திய ஷிப்பிங் மேனேஜிங் டைரக்டர் திரு. தஸ்தாருடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை முடிவு செய்யுமாறு மின்வாரியத் தலைவருக்கு கூறப்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு 21,000 டன் நிலக்கரி கொண்டு வருவதற்கான இத்திட்டம் நம் தேவையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் என்றும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : கலைக் கண்காட்சிகள் எங்கு பார்த்தாலும் நடத்தப்படுகின்றனவே, அதற்கு மின்சாரம் கொடுக்கப்படுமா, நிறுத்தப்படுமா என்று அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தயவுசெய்து எங்கே நடக்கிறது என்று சொன்னால் சரியாக இருக்கும். எங்கே நடக்கிறது?

திருமதி த.ந. அனந்தநாயகி : பல இடங்களிலே பார்க்கிறோமே அந்த போர்டை, 36–வது டிவிஷனிலே இன்று நடக்கிறதே.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : 36–வது டிவிஷன் என்று சொன்னார்கள். அதை முதலமைச்சர் விளக்கவேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர்களுக்கு ஜெனரேட்டர் கூட அல்ல, லைசென்சே வழங்கப்படவில்லை. அவர்கள் கொட்டகைகளை எல்லாம் போட்டுவிட்டு, நாங்கள் போட்டுவிட்டோம், இருந்தாலும் முதல் அமைச்சர் நீங்கள் இப்படி அறிவித்தீர்கள். எப்படியாவது, நாங்கள் செலவு செய்துவிட்ட காரணத்தினாலே கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். முடியவே முடியாது என்று சொல்லியாகி விட்டது. கொடுக்கப்படவில்லை.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : ஒரு அமைச்சர் போய் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அமைச்சர்களே போய் திறந்து வைத்தாலும் அதற்கு லைசென்சுகள் வழங்கப்படமாட்டாது என்பது கண்டிப்பான உத்தரவு.

பிறகு நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சுப்பையா அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே வழங்கப்பட்ட குடியிருப்பு மனை பட்டாக்களிலே சில புகார்களைச் சொன்னார்கள். ஏதோ, முதலமைச்சர் ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேருக்கு வழங்கினார், பல பேருக்கு கிடைக்கவே இல்லை, சில பேருக்குத்தான் கிடைத்தது என்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் உடனடியாக அதைப் பற்றி விளக்கங்கள் எல்லாம் சேகரித்தேன்.

27.02.1972லே திருவையாற்றிலே வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப் பட்டா 6,764. 15.06.1972லே திருத்துறைப்பூண்டியில் 26,150. அதிலே திரு. மணலி அவர்களும் திரு. சுப்பையா அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். 14.09.1972 என்றும், 28.02.1973 அன்றும் கும்பகோணத்தில் 1,15,227. ஆக, பிப்ரவரி 1972 முடிய வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 1,48,000. இதிலே, இந்த 1,48,000 குடியிருப்பு மனைப் பட்டா பெற்றவர்களில் 1,41,000 பேர் அதைப் பெற்றுக்கொண்டதற்கான அக்னாலெட்ஜ்மென்ட்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவை அதிகாரிகளிடத்தில் இருக்கின்றன. இன்னும் ஏழு ஆயிரம் பேர்களிடமிருந்து அக்னாலெட்ஜ்மென்ட் வந்தாக வேண்டும். பட்டா வழங்கப்பட்ட பிறகு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டும், உரிமை மறுப்பு தெரிவிக்கப்பட்டும் விசாரணையில் இருப்பவை 8,700 ஆகும். ஆக இதையும் சேர்த்து மொத்தம் 1 இலட்சத்து 57 ஆயிரத்தில் 1 இலட்சத்து 41 ஆயிரம் பட்டாக்களுக்கு அதைப் பெற்றுக் கொண்டதற்கு ரசீது கிடைத்துவிட்டது. எட்டு ஆயிரம் பட்டாக்களிலே வழக்கு இருக்கிறது. ஏழாயிரம் பட்டாக்களுக்கு ரசீதுகள் வரவில்லை. ஆக 1 லட்சத்து 57 ஆயிரம் பட்டாக்களுக் கான அந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தகைதாரர் சட்டம் போன்ற 9 அறிவிப்புகள் இந்த மாமன்றத்திலே அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தாழத்தப்பட்ட மக்களுக்கு பிற்படுத்தப்பட்டமக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு இந்த அரசு எந்த எந்த வகையிலே தன்னுடைய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக, பொதுவுடைமைக் கொள்கையில், சோஷலிஸக் கொள்கையில், இந்த அரசு கொண்டிருக்கின்ற அழுத்தமான நம்பிக்கைக்கு அடையாளமாக 9 அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீ என்ன 9 அறிவிப்புகள்தந்தாய், நான் 10 அறிவிப்புகள் தருகிறேன் என்று நண்பர் ஹாண்டே அவர்கள் காலையிலே பேசும்போழுது பத்து பாயிண்டுகளை வைத்துக்கொண்டு, இவைகளுக்கு எல்லாம் என்ன பதில் என்று கேட்டார்கள். நான் அந்த பத்து பாயிண்டுகளுக்கும்

என்னால் முடிந்தவரையில் பதில் அளித்திருப்பதாகக் கருதுகிறேன். இந்த 9 அறிவிப்புகள் மாத்திரம் போதாது தமிழ்நாட்டை முன்னேற்றிவிடுவதற்கு என்பதை நான் உணராமல் இல்லை.

குத்தகைதாரர்கள் சட்டம் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அதிலே அடிக்கடி மாண்புமிகு மணலி அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் மற்ற உறுப்பினர்களும் கேரள நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பாருங்கள், பாருங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

கேரள நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் – விதிவிலக்குகள் தமிழ்நாட்டிலே எவை எவைக்கு விதிவிலக்கு அறிவித்திருக்கின்றோம், கேரளத்திலே எவையெவைக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள் என்பதை நான் ஆராய்ந்து பார்த்தேன். தமிழ்நாட்டிலே மாநில மத்திய அரசின் நிலங்கள், உள்ளாட்சி நிறுவனங்களின் நிலங்கள் விதிவிலக்கு, கேரளத்திலே மாநில மத்திய அரசின் நிலத்திற்கு விதிவிலக்கு.

தமிழ்நாட்டிலே அரசின் உத்திரவுபெற்ற தொழிற்சாலை, வாணிப நிலை நிறுவனங்கள் – விதிவிலக்கு. கேரளத்திலே தொழிற்சாலைகளும் வாணிப நிறுவனங்களும் – விதிவிலக்கு.

தமிழகத்திலே மலைத் தோட்டம் விதிவிலக்கு. கேரளத்தில் மலைத் தோட்டம் விதிவிலக்கு.

தமிழகத்திலே கோயில், மசூதி, மாதா கோயில், அறநிலையங்களின் நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்தில் கோயில், மசூதி, மாதாகோயில் நிலங்கள் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் நிலங்கள் வைத்திருக்கும் கோயில்கள் 1.3.1972க்குப் பிறகு மேலும் நிலம் வாங்க முடியாது என்று இருக்கிறது. கேரளத்திலே இருப்பதாகத் தெரியவில்லை.

பழத்தோட்டங்கள், தோப்புகள் 1.7.1959ல் இருந்த நிலம் மட்டும் தமிழ்நாட்டிலே விதிவிலக்கு. கேரளத்திலே தனியார் காடுகள் விதிவிலக்கு.

பூதான் நிலங்களுக்கு தமிழ்நாட்டிலே விதிவிலக்கு. கேரளத்திலும் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் பல்கலைக்கழக நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்தில் பல்கலைக் கழக நிலங்கள் விதிவிலக்கு. தமிழ் நாட்டில் கல்லூரிகளுக்கு 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம், உயர்நிலைப் பள்ளிக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம், ஆரம்ப அல்லது உயர்தர ஆரம்பப் பள்ளிக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம், மாணவர் விடுதிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், தொழிற் பள்ளிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், விவசாயப் பள்ளிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், அனாதை இல்லத்திற்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், பிற டிரஸ்டுகளுக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இன்றைக்கு இருக்கிறது. கல்வி நிலையங்கள், டிரஸ்டுகள் கேரளத்தில் விதி விலக்கு.

ஆகவே உச்சவரம்பைப் பொறுத்தவரையிலே கேரளாவி லிருந்து நாம் மிகவும் பின்தங்கிவிடவில்லை யென்பதையும் சில விஷயங்களிலே நாம் கொஞ்சம் முற்போக்காக இருக்கிறோம் என்பதையும் நான் நம்முடைய மணலி அவர்களுக்கும் மற்றவர் களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சொல்வது எல்லாம் உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி அல்ல. அந்தச் சட்டத்திற்குப் பின்னால் கொண்டுவரப்பட்ட லேன்ட் ரிபார்ம் ஆக்ட்ஸ் 1969 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 1970 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி அமலுக்கு வந்து இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி நிலத்தை உழுபவன் அந்த நிலத்திற்கு உரிமையாளனாகிவிடுகிறான். இடைத்தரகர் வர்க்கமே எடுக்கப் பட்டிருக்கிறது. கோயில் நிலமாக இருந்தாலும் அவனுக்குச் சொந்தம் உண்டு. ஆனால் அதிலே அந்த விதிவிலக்குகளில் எல்லாம் விடப்பட்டு போகின்றன. அந்தச் சட்டத்தைப் பற்றித்தான் நாங்கள் சொல்கிறோம். நீங்கள் அதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எல்லாம் சேர்ந்த சட்டத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன், இணைப்புச் சட்டம் பற்றி தான் நான் சொல்கிறேன். குத்தகைதாரர்கள் சட்டம்பற்றி விரிவாக விவாதிக்க இருக்கிறோம்.

திரு. சுப்பு அவர்கள் கூடச் சொன்னார்கள், அங்கே குத்தகைதாரர்கள் சட்டத்திலே உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நஷ்ட ஈடு அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. முறைகள், வகைகள் எல்லாம் வேறுபாடாக இருக்கின்றன. குத்தகைதாரர்கள் சட்டம் பற்றி நாம் அதிகமாக விவாதிக்க இருக்கிறோம், அப்பொழுது பேசிக் கொள்ளலாம் என்பதால் இதோடு விட்டுவிட விரும்புகிறேன்.

நம்முடைய மணலி அவர்களுடைய பேச்சில் பெரும்பாலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு நிறைந்த அறிவுரைகளை வழங்கினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்தை நீங்கள் எல்லோரும் படிக்க வேண்டுமென்று திரு. மணலி அவர்கள் சிபாரிசு செய்தார்கள்.

திரு. மணலி அவர்கள் எப்பொழுது இப்படி மாறினார் என்று எனக்குப் புரியவில்லை.. எந்தப் புத்தகமானாலும் ஒரு கட்டுரையானாலும் கடைசியிலே என்ன கருத்தைச் சொல்லி முடிக்கிறார்களோ அதுதான் அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் எல்லது தலைவர், அல்லது எழுத்தாளர் அல்லது கட்டுரையாளரின் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும். 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்தில் கடைசிப் பக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் 'திருப்பரங்குன்றம் மாநாடு கண்டவர்கள்' அங்ஙனம் கூறத் துணியார். திராவிட நாட்டை திராவிடர் காக்கும் தீரப்படையொன்று உண்டு, என்பதை திருப்பரங்குன்றம் மாநாடு காட்டிற்று. எங்கிருந்து கிடைத்தது இந்த எழுச்சி நிலை! தம்பி! எல்லாம் உன் வீரத்தின் விளைவு! எழுச்சியின் பலன்! உழைப்பினில் விளைந்த உயர்வு! வாழ்த்துகிறேன் உன்னை! வளர் நின் ஆர்வம்! வெல்க திராவிடம்! அண்ணன், அண்ணாத்துரை' என்று எழுதி முடிக்கிறார். இதை இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று திரு. மணலி அவர்கள் சொல்வது எனக்கு புதிராக இருக்கிறது. இதை மீண்டும் படியுங்கள், இதன்படி நடவுங்கள் என்று திரு. மணலி அவர்கள் ஏன் சொன்னார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு கலைஞர் அவர்கள் ரொம்ப லாவகமாக எனக்கு ஒரு கேள்வி போட்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது எல்லாம் அந்தப் புத்தகத்திலே பொது வாழ்வில் எப்படியிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிற நியதிகளையெல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் படித்துப் பார்க்கவேண்டும் என்பதுதானே தவிர, நான் அந்தப் புத்தகம் பூராவையும் ஒப்புக்கொண்டதாக நான் கூறவில்லை. இன்றைக்கு உங்களுடைய நிலைமையும் மாறியிருக்கிறது. நீங்கள் திராவிட நாடு திராவிடர்க்கே என்று சொன்ன நிலையிலே எல்லாம் இன்றைக்கு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொது வாழ்விலே அதிலே குறிப்பிட்ட நியதிகள் ஒழுக்கம் இவைகளை யெல்லாம் நீங்கள் மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பொது வாழ்விலே இருக்கிறவர்கள் அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து, அந்தக் கட்சியையே அழிப்பதற்கு முனையக்கூடாது என்ற கருத்தையும் 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் இன்றைக்கு உங்களோடு உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. உறுப்பினர் திரு.கே.எம்.சுப்பிரமணியம் அவர்கள் நான் ஏ.டி.எம்.கே.யில் சேர்ந்த பிறகு அண்ணா அவர்களின் கட்டுரைகளைப் படிக்க ஆரம்பித்தேன் என்று சொன்னார்கள். நான் உள்ளபடியே ரொம்ப வருத்தப்படுகிறேன், படித்துப் பார்த்துவிட்டு அதனால் கவரப்பட்டு ஒரு கட்சிக்குச் செல்வதுதான் முறையே தவிர ஒரு கட்சியிலே சேர்ந்துவிட்டு, பிறகு அந்தக் கட்சியினுடைய கொள்கை புனிதமானது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. அவர் எல்லாப் புத்தகங்களையும் படித்து இருப்பார் என்று கருதுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய ஒரு புத்தகத்தில் அவர் அதைப் படித்திருப்பாரோ என்னவோ எனக்குத் தெரியாது. அதிலே,

பேராசைப் பெருந்தகையே போற்றி!
பேச நா இரண்டுடையாய் போற்றி!
தந்திர மூர்த்தி போற்றி!

தாசர்தம் தலைவா போற்றி!
வஞ்சக வேந்தே போற்றி!
வன்கண நாதா போற்றி!
கொடுமைக் குணாளா போற்றி!
கோழையே போற்றி, போற்றி!
பயங்கொள்ளி பரமா போற்றி!
படுமோசம் புரிவாய் போற்றி!
சிண்டு முடிந்திடுவோய் போற்றி!
சிரித்திடு நரியே போற்றி!
ஒட்டுவித்தை கற்றோய் போற்றி!
உயர் அநீதி உணர்வோய் போற்றி!
எம் இனம் கெடுத்தோய் போற்றி!
ஈடில்லாக் கேடே போற்றி!
இறைவா, போற்றி, போற்றி!
ஏத்தினேன் போற்றி, போற்றி!

என்று எழுதியிருக்கிறார்கள் ''ஆரிய மாயை'' என்ற புத்தகத்தில். அதை அவர்கள் படிக்கவில்லை என்று கருதுகிறேன். நல்ல பொருத்தமான அட்டையெல்லாம் போடப் பட்டு இருக்கிறது இந்தப்புத்தகம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: முன்பொரு நாள் உங்கள் கட்சியிலே இருந்துவிட்டு – இப்பொழுது உங்கள் கட்சிதான், எங்கள் கட்சியல்ல – பிறகு அந்தக் கட்சியிலிருந்து இரண்டு கட்சிகளுக்குத் தாவி வேறு ஒரு கட்சியிலே இருந்த காலத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசியவர்கள் எல்லாம் இன்றையதினம் உங்கள் பக்கம் சேர்ந்து இருக்கிறார்கள், என்பதை நான் நினைவுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: உங்கள் பக்கம் யார் யார் இருக்கிறார்கள் என்பதை உலகம் அறியும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எங்கள் பக்கம் நல்லவர்கள் இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவைக் கேவலமாகப் பேசியவர்கள் உங்கள் கட்சியிலே இருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நல்லவர் களுக்கு இலக்கணமே நாட்டிலே மாறிவிட்ட காலத்தில் நல்லவர்களைப் பற்றி நண்பர் பேசுவது எனக்கு வியப்பாக இருக்கிறது. நல்லவர்கள் யார், நல்லவர்கள் அல்லாதவர்கள் யார் என்பதை நாடு நன்றாக உணர்ந்து வைத்திருக்கிறது. திருவாளர் அண்ணாதுரை என்று பேசியவர்கள் இன்று பக்கம் பக்கமாக அவர்கள் பத்திரிகையிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது.

திரு. க.உரொ. எட்மண்ட்: அண்ணாதுரை என்று எழுதியவர் களுக்கு இன்றைக்கு உங்கள் அமைச்சரவையில் இடம் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சியின் தலைவர்களும், அனைத்துக்கட்சிகளின் உறுப்பினர் களும் எடுத்துவைத்த பல அரிய கருத்துக்களைப் பற்றி யெல்லாம் நான் இங்கே நீண்ட நேரம் என்னுடைய விளக்கங்களை அளித்திருக் கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ்நாட்டில் எவ்வளவு பெரிய நெருக்கடிகள் வந்தாலும் அந்த நெருக்கடிகளையெல்லாம் சமாளிக்கின்ற அளவிற்கும், தமிழ்நாட்டுப் பெருமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுகின்ற அளவிற்கும், நெருக்கடிகளை அலட்சியப்படுத்தாமல், அவைகள் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை என்று உணர்ந்து செயல்படும் அளவிற்கும் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்திருக்கிறது என்பதையும் இந்தப் பதிலுரையில் நான் தேவையான அளவிற்குச் சுட்டிக்காட்டி யிருக்கிறேன். அந்த வகையிலே தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதன் மூலமாக இந்த நிதிநிலை அறிக்கையை நிறைவு செய்த எல்லாக் கட்சிகளின் தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவில் நான் அமைகின்றேன். வணக்கம்.

உரை : 13 நாள் : 14.03.1974

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது 77 உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரையும் சேர்த்து கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். இந்த விவாதத்திலே காரசாரமாகப் பேசியவர்களுக்கும், கடுமையாகப் பேசியவர்களுக்கும், நல்ல ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துச் சொன்னவர்களுக்கும், அரசு தன்னுடைய கடமையிலிருந்து எங்காவது நழுவிவிடுமானால் அதனைத் திருத்திக் கொள்ளுகின்ற அளவிற்கு நல்ல செம்மையான வழிமுறைகளைச் சொன்னவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியை இந்தக் கட்டத்தில் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்பொழுது பாதிப் பேச்சு அவருடைய பேச்சாகவும் பாதிப் பேச்சு அறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சாகவும் இருந்ததை நாமெல்லாம் கவனித்தோம். அண்ணா அவர்கள் 1957லிருந்து 1962 வரையில் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்து அவர்கள் பல்வேறு கட்டங்களிலே அவைகளைப் படித்துக்காட்டினார்கள். அண்ணா அவர்கள் அந்த உரையை 1957–58ஆம் ஆண்டிலே ஆற்றிய நேரத்திலே அந்த உரை இந்த அளவிற்கு வரவேற்கப்படும், இந்த அளவிற்குக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டு ஆஹா எவ்வளவு அழகான வாதம், எவ்வளவு அழகான பொன்மொழிகள் என்று சொல்லக்கூடிய ஒரு நாள் வருமென்று நாங்கள் அன்றைக்கு எதிர்பார்க்க வில்லை. அந்த நாள் இந்த நாளாக இருப்பதை பார்த்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின்

பல பகுதிகளை பொன்னப்பநாடார் அவர்களே இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

ஆனால் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து உரையாற்றியபோது நம்முடைய நாடார் அவர்கள் இந்த அவையிலே இருந்தார்களா என்று கேட்டபொழுது அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் இருந்திருந்தால் அப்பொழுதே ஆளுங்கட்சிக்கு அண்ணா அவர்களின் அறிவுரைகளை நீங்கள் நிச்சயமாக நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருப்பார்களென்று நம்புகிறேன். ஆனால் அண்ணா அவர்களின் துரதிருஷ்டமோ அல்லது நாடு இன்னும் கொஞ்சம் காலதாமதமாகத்தான் நலன்களைப் பெற வேண்டுமென்ற காலமோ அப்பொழுது பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த அவையிலே இல்லாமல் போய்விட்டார்கள்...

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எங்களுடைய அரசியல் கொள்கை வேறு. நான் உங்களுடைய கட்சியிலே நிச்சயமாக வரமாட்டேன். நான் மேற்கோளாகத்தான் எடுத்துக்காட்டினேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இதை யெல்லாம் செய்ய வேண்டுமென்பதைத்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் தங்களை அழைக்கின்ற முயற்சியிலே ஈடுபடவேயில்லை. நீங்கள் அந்தக் கருத்துக்களைக் காலதாமதமாக ஏற்றுக்கொண்டு அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபொழுது எடுத்துக் கூறிய அந்தக் கருத்துக்களை மாத்திரம்தான் எடுத்துச் சொன்னீர்கள். எங்கள் கட்சி ஆளுங்கட்சியானதற்குப் பிறகு அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள், ஆளுங்கட்சியாக இருக்கின்ற கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபொழுது எடுத்துச் சொன்ன கருத்துக்களை ஞாபகப்படுத்திய நேரத்திலே அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையும் அடுத்த விவாதத்தில், பொன்னப்ப நாடார் அவர்கள் படித்துப்

பார்த்து, என்ன சொன்னார்கள் என்பதையும் எங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கட்சி எதிர்கட்சியாக இருந்தபொழுது என்ன என்ன விவகாரங்களை ஆளுங்கட்சியாக அப்பொழுதிருந்த காங்கிரஸ் கட்சிக்கு எடுத்துக் கூறியதோ அதையெல்லாம் எங்களுடைய ஆட்சி மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக நிறைவேற்றுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தப் பணியை நாங்கள் தொடர்ந்து செய்துவருகிறோம் என்ற கருத்தினை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்கள், எதிர்க்கட்சியாக இருந்தபொழுது சொல்லப்பட்ட கருத்துக்கள் இந்த ஆட்சியிலே நிறைவேறாமல் போய்விடும் என்று கருதத் தேவையில்லை.

காங்கிரஸ் கட்சித் தலைவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான கே.டி.கே. தங்கமணி அவர்களும் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசுகின்ற நேரத்திலே அண்ணா அவர்கள் வாதாடுவதற்காக எடுத்துக் கொண்ட அழகான வாக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சிக்கு லாலி பாடுவதற்காக இல்லை, ஆளுங்கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத்தான் எதிர்க்கட்சி யிருக்கிறது என்று கூறினார்கள். அண்ணா அவர்கள் ஆளுங் கட்சி செய்கின்ற நல்ல காரியங்களைப் பாராட்டுகின்ற உணர் வோடு தவறான காரியங்களை எடுத்துரைக்கின்ற உணர்வையும் கொண்டிருந்தார்கள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

காங்கிரஸ் கட்சித் தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் இங்கே பேசிய நேரத்திலே நாங்கள் லாலி பாடுவதற்கு இங்கே வரவில்லை என்று சொன்னபோது நான் எண்ணிக் கொண்டேன், இந்த அரசை இழித்துப் பழித்துப் பேசிய நேரத்திலேயெல்லாம் நான் அதை லாலியாகக் கருதிக் கொள்ளாவிட்டாலும் பழைய கல்யாண வீடுகளிலே பாடுகின்ற நலங்குப் பாட்டாகத்தான் கருதிக் கொண்டேன். பழைய கல்யாண வீடுகளிலே உண்மையிலேயே மாப்பிள்ளையும்

அழகாகத்தான் இருப்பார், பெண்ணும் அழகாகத்தான் இருப்பாள் – பெண் வீட்டார் அழகான மாப்பிள்ளையாக இருந்தாலும் பழித்துப் பாடுவார்கள், அதைப்போல மாப்பிள்ளை வீட்டாரும் பெண் அழகாக இருந்தாலும் பழித்துப் பாடுவார்கள். பெண் வீட்டார் எங்கள் அழகான பெண்ணுக்கு இந்த அழுமூஞ்சி மாப்பிள்ளையா என்றும், மாப்பிள்ளை வீட்டார், இந்த சிடுமூஞ்சிப் பெண் எங்கள் சுந்தரனுக்குப் பொருத்தமோ என்றும் பாடுவார்கள். இதை பழைய கல்யாண வீடுகளிலே நலுங்குப் பாட்டு என்று சொல்வார்கள். அப்படிப் பழித்துப்பாடினாலுங்கூட மாப்பிள்ளையையும் பெண்ணையும் பாராட்ட வேண்டுமென்ற உள்ளம்தான் அவர்களுக்கு இருக்கும். அந்த முறையிலே நலுங்குபாடுவது என்பது கேலி பேசவும், கிண்டல் பேசவும், பழைய கல்யாண வீடுகளிலே வழக்கம். அந்த வகையிலே அவர்கள் சொன்னதை நான் லாலியாக இல்லாவிட்டாலும் நலுங்காக எடுத்துக் கொள்கிறேன். அந்தப் பாட்டிலே உள்ள கருத்துக்களுக்கு ஏற்றதாக இந்த அரசு இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை பற்றி மொத்தமாகப் பல கருத்துக்கள் கூறப்பட்டன. வரவு – செலவுத் திட்டம் எப்படி அமைகிறது என்றால் வளர்ச்சி வேகத்தைப் பெருக்க வேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும், வேலையில்லாத திண்டாட்டத்தைக் குறைக்க வேண்டும் என்பது போன்ற முக்கியப் பிரச்சினைகளோடு தொடர்பு கொண்டதுதான் வரவு– செலவுத் திட்ட அறிக்கையாகும்.

அப்படித் தொடர்பு கொண்டிருக்கின்ற அந்த நிலைமையை, விலைவாசிகளைக் குறைக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்கின்ற இரண்டு தலைப்புகளிலே பார்த்தால் அது மாநில அரசு தயாரித்து வெளியிடுகின்ற வரவு– செலவுத் திட்டத்திலே அதிகத் தொடர்பு கொண்டிருக்கிறதா அல்லது மத்திய அரசு தயாரித்து வெளியிடுகின்ற வரவு செலவுத் திட்டத்திலே அதிகத் தொடர்பு கொண்டிருக்கிறதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். தேசிய மட்டத்திலே விலைவாசிகளைக் குறைக்க,

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க தேசிய மட்டத்தில் மத்திய அரசின் சார்பாக வெளியிடப்படுகின்ற வரவு–செலவுத் திட்டத்திற்கு இருக்கின்ற சக்தி மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்திலே நிச்சயமாக இருந்திட முடியாது என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும்.

அந்தக் காரணத்தால்தான் நம்முடைய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலேயும், ஆளுங் காங்கிரசைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலேயும் இது பஞ்சாயத்து போர்டு ஆண்டறிக்கை போல் இருக்கிறது, பஞ்சாயத்து யூனியன் ஆண்டறிக்கை போல் இருக்கிறது, மாவட்ட ஆட்சி வளர்ச்சிக் குழுவினுடைய ஆண்டறிக்கை போல் இருக்கிறது. ஒரு கம்பெனியின் ஆண்டறிக்கை போல இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

அதற்காக நான் வருத்தப்படவில்லை. இந்த அளவிற்கு உண்மையை ஒத்துக்கொண்டு இப்பொழுது மாநிலங்கள் ஒரு பஞ்சாயத்து யூனியன் நிலைமையிலேதான் தன்னுடைய வரவு – செலவுத் திட்டத்தை வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொண்டதற்காக நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் நிலைமையில் இல்லாமல் மாநில அரசுகள் உண்மையிலேயே மாநில அரசுகளாக இருந்து மாநில அரசு சமர்ப்பிக்கின்ற வரவு செலவுத் திட்டமாகச் சமர்ப்பிக்கின்ற அளவிற்கு நிச்சயமாக வளர வேண்டும், அத்தகைய சக்தியை, வலிமையை நாம் பெற வேண்டும் என்பதை அவர்கள் சூசகமாக எடுத்துச் சொன்னதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில அளவில் வைக்கப்படும் வரவு செலவுத் திட்டங்கள் அந்த மாநிலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், மாநிலத்தினுடைய நிதி வசதி ஆதாரங்கள் ஆகிய இந்த அடிப்படையிலேதான் அமைய முடியும். ஒரு விவாதம் இங்கே எழுப்பப்படுகிறது. பற்றாக்குறை பட்ஜெட் நல்லதா, அல்லது உபரி பட்ஜெட் நல்லதா என்ற விவாதம்

எழுப்பப்பட்டது. பற்றாக்குறை பட்ஜெட் தீமை என்று, 19ஆம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்து இருபதாம் நூற்றாண்டின் துவக்கம் வரையில் 1930 என்று கோடிட்டுக் கொள்ளலாம் – அதுவரையில் பற்றாக்குறை பட்ஜெட் தயாரிப்பது என்பது ஆபத்தானது, விலைவாசிகளை உயர்த்தும் என்றறெல்லாம் ஒரு கருத்து கூறப்பட்டன. பட்ஜெட் நல்லது என்பது மட்டுமின்றி, உபரி பட்ஜெட்டுக்கள் அவ்வளவு சிலாக்கிய மானவை அல்ல என்ற மாற்றுக் கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

நாம் உபரி பட்ஜெட் அல்லது பற்றாக்குறை பட்ஜெட் நல்லதா என்ற விவாதத்திலே நேரத்தைச் செலவழிக்காமல் எந்தச் சூழ்நிலையில் பட்ஜெட் தயாரிக்கப்படுகின்றது. அந்த பட்ஜெட்டிலே வருகின்ற பற்றாக்குறையின் அளவு, இடைவெளி, (கேப்) எந்த அளவில் இருக்கிறது, அதை நிறைவு செய்ய என்ன முயற்சி எடுக்கப்படுகிறது, அந்த முயற்சியின் காரணமாக அடித்தள மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்ற இந்த சூழ்நிலைகளின் அடிப்படையிலே ஒரு நிதிநிலை அறிக்கையை நாம் ஆராய வேண்டும்.

இன்றைக்கு மாநில அரசு பற்றாக்குறை பட்ஜெட் தயாரிக்கின்ற நேரத்தில், அதை ஈடுகட்ட, சில வரிகளைப் போட வேண்டியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்து வெளியிடும் நேரத்தில் வரிபோடுவதோடு அல்லாமல் அதை ஈடுகட்ட பணப் புழக்கத்தைத் தாராளமாக அனுமதிக்கிறது. பணப்புழக்கத்தைத் தாராளமாக அனுமதிப் பதற்குரிய அந்த அதிகாரம் மத்திய அரசுக்கு இருப்பதைப் போல் மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது, எந்தச் சூழ்நிலையும் இல்லை.

ஆகவே பணப்புழக்கத்தைத் தாராளமாக அனுமதிக் கின்ற மத்திய அரசினுடைய பட்ஜெட்டின் காரணமாகத்தான் விலைவாசி உயர்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் எழுகின்றது என்கின்ற உண்மையை நாம் உணர வேண்டுமே யல்லாமல் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக ஒருசில வரிகளைப் போடுவதால் மாநில அரசினுடைய நிதிநிலை

அறிக்கையால்தான் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஏற்படுகின்றது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமுடையதாக ஆகாது என்பதை நான தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வரி போடுவதில் தாங்கக் கூடியவர்களுக்கு வரி தாங்க முடியாதவர்களுக்கு புதிதாக வரி போடக்கூடாது என்ற கொள்கை, போடுகின்ற வரிகளின் மூலம் விலைவாசியோ அல்லது மற்றக் காரியங்களோ உயர்ந்து விடாமல் ஒரு கட்டுக்கோப்புக்குள் அடக்கிவைக்க வேண்டுமென்ற அந்த இலட்சியத்தின் அடிப்படையில்தான் நாம் வரிபோடும் கொள்கையைக் கடைப் பிடித்து வருகிறோம். அந்த நிலைமையில் 10 கோடி ரூபாய்க்கு இந்த பற்றாக் குறையை ஈடுசெய்ய வரி போட்டிருக்கிறோம்.

மோட்டார் வரி சீர்த்திருத்தத்தின் வழியாக 6½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல ஆண்டுகாலமாக வியாபாரிகள் பலமுனை விற்பனை வரி வருவதை ஒருமுனை விற்பனை வரி என்று மாற்ற வேண்டுமென்று செய்து வந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் 59 பொருள்களுக்கு பலமுனை வரியை ஒருமுனை வரியாக ஆக்கியதன் காரணமாகவும், அந்த சீரமைப்பிலே வருகின்ற வருவாயும், அதையொட்டி 50,000 ரூபாய் வரையிலும் வியாபாரம் செய்பவர்களுக்குச் சலுகை கொடுத்து, 10 இலட்சம் ரூபாய்க்குமேல் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு சர்சார்ஜை 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் என்று தாங்கக்கூடியவர்களுக்கு உயர்த்திய தாலும் 3½ கோடி ரூபாய் கிடைக்கிறது. ஆக மொத்தம் இந்தப் பற்றாக் குறையை ஈடுகட்ட 10 கோடி ரூபாய்க்கு நாம் இன்றைக்கு வரி விதித்திருக்கிறோம். வரி விதித்தோம் என்று சொல்வது கூடச் சரியல்ல, வரி விதிப்பில் மாற்றம் செய்திருக்கிறோம்.

நாட்டிலேயுள்ள அத்தியாவசியப் பொருட்களில் அகவிலைப் படியை நிர்ணயிக்க என்றே சில பொருட்கள் இருக்கின்றன. அகவிலைப்படியை எந்தப் பொருள்களைக் கொண்டு நிர்ணயிக்கிறார்கள் என்று எண்ணிப்பார்க்க

வேண்டும். அந்தப் பட்டியலிலே உள்ளவற்றை நான் உங்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன். அரிசி, கோதுமை, சர்க்கரை, கேப்பை, பச்சைப்பயறு என்று ஆரம்பித்து பூண்டு, வெந்தயம், சீரகம் என்றெல்லாம் தொடர்ந்து நல்லெண்ணெய், கடலை எண்ணெய், முட்டை, பால், தயிர், நெய் என்று நீண்டு, பொடி, ஜிலேபி, விறகு, மண்ணெண்ணெய், மின்விசைக் கட்டணம் என்று தொடர்ந்து, தலையணை உறை, செருப்பு, குடை என்று மீண்டும் நீண்டு முகப்பவுடர், பற்பொடி, தையற் கூலி என்ற வகையில் இப்படி 100 பொருள்களும்தான் அத்தியாவசியப் பொருள்கள். எதற்கு அத்தியாவசியப் பொருள்கள்? தொழிலாளர்களின் அகவிலைப்படியை உயர்த்த இந்த அத்தியாவசியப் பொருள்களின் விலையை மனத்திலே கொண்டுதான், கணக்கில் கொண்டுதான் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படுகிறது.

அகவிலைப் படியை உயர்த்த அத்தியாவசியமாக இருக்கும் பொருள்களின் மீது 59 பொருள்கள் மீது இன்றைக்கு வரி மாற்றம் செய்திருக்கிறோமே அது பாதிக்கிறதா என்றால் இல்லை. நாம் வரி மாற்றம் செய்துள்ள பொருள்கள் என்ற பட்டியலில் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் இரண்டு மூன்று கட்டங்களில் 7 சதவிகித வரியாக இருந்த பொருள்கள் அப்படியே 7 சதவிகிதமாக ஒருமுனை வரியாக, நிர்வாக வசதிக்காக, பல தொந்தரவுகளை நீக்கிக் கொள்வதற்காக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு போன்றவைகளுக்கு 7 சதவிகிதம் என்று இருந்ததை 3½ சதவிகிதம் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. எதற்கு அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த 59 பொருட்களில் சீட்டுக்கட்டுகளுக்கு 9 சதவிகிதம், செயற்கை இரப்பர் பொருள்களுக்கு 9 சதவிகிதம், இரப்பரால் செய்யப்பட்ட பொருள்களுக்கு 9 சதவிகிதம், தூய பட்டுத் துணிகள் (கைத்தறி நீங்கலாக) 10 சதவிகிதம், எஃகினால் செய்யப்பட்ட மேஜை, நாற்காலிகள் போன்ற தளவாடங்களுக்கு 10 சதவிகிதம், லினோலியம் 15 சதவிகிதம், சலவைக் கற்களும் சலவைக் கற்களினால் ஆக்கப்பட்ட பொருள்களும் 15 சதவிகிதம், நீளமான தரை விரிப்புகளுக்கு 15 சதவிகிதம்,

மண் மற்றும் மற்றும் வழுவழுப்பான ஓடுகள் (மொசாயிக் ஓடுகள்) 15 சதவிகிதம், விசை ஏணி (லிப்ட்)க்கு 15 சதவிகிதம், மொலாசஸ் 25 சதவிகிதம், அரிஷ்டங்களுக்கு 30 சதவிகிதம், இண்டியன் மேட் ஃபாரின் லிக்கருக்கு 25 சதவிகிதம் என்ற அளவிற்கு இந்த ஆடம்பரப் பொருள் களுக்குத்தான் இந்த வரி மாற்றத்தின் மூலம் நாம் வரி உயர்வு செய்திருக்கிறோமே அல்லாமல் மற்றப் பொருள்களுக்குக் கூடுமான வரையில் வரியைக் குறைத்திருக்கிறோம். ஏற்கனவே பலமுனை வரியாக இருந்ததை ஒருமுனை வரியாக மாற்றும் நேரத்தில் அதிகப்படுத்தாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, வரி உயர்வால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். வரி உயர்வை 10 கோடி ரூபாய்க்கு போட்டுவிட்டோம் என்ற வாதம் பொருத்தமுடையது அல்ல என்பதற்காகத்தான் இவைகளை நான் சொன்னேன்.

ஏதோ தமிழகத்திலே மட்டும்தான், இந்த மாநிலத்திலே மட்டும்தான் வரிகளைப் போட்டுவிட்டோம் என்று வாதிடுவது சரியான கருத்து அல்ல. மற்ற மாநிலங்களில் போடப்பட்ட வரவு – செலவுத் திட்டங்களை எனக்குக் கிடைத்தவரையிலே அந்த தகவலை உங்களுக்குச் சொல்ல நான் விரும்புகிறேன்.

மராட்டிய மாநிலத்தில் வருவாய் 693 கோடி ரூபாயும், செலவு 728 கோடி ரூபாயும் வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டு பற்றாக்குறை 35 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டு, வரி 31 கோடி ரூபாய்க்கு மராட்டிய மாநிலத்தில் போடப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்கத்தில் வருவாய்க் கணக்கில் வருவாய் 367 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, செலவு 455 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, பற்றாக்குறை 19 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, வரி 24 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கிறது.

கர்நாடக மாநிலத்தில் வருவாய்க் கணக்கில் வருவாய் 367 கோடி ரூயாக்குக் காட்டப்பட்டு, செலவு 362 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, உபரி 4 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டு, 19 கோடி ரூபாய்க்குக் கர்நாடகத்தில் வரி போடப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தில் வரவு – செலவு பற்றிய விவரங்களை கிடைக்கவில்லை என்றாலும் பற்றாக்குறை 21 கோடி ரூபாய் என்றும், வரி விதிப்பு 17 கோடி ரூபாய் போடப்பட்டிருக்கிறது என்றும் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த நிலையில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 470 கோடி ரூபாய் வருவாயும், 483 கோடி ரூபாய் செலவும் உள்ள நம்முடைய வரவு – செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை 12.55 கோடி ரூபாய் என்பதும், நாம் போட்டிருக்கும் வரி 10 கோடி ரூபாய் என்பதும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் அதிகம் இல்லை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தமிழகத்து மக்களுக்கு உணர்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : இந்த லிஸ்டில் கொடுத்திருக்கும் 59 பொருள்களைப்பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் கேட்கிறேன். ஆயில் கேக்சுக்கு வரி போடப் படவில்லை என்ற முறையில் பிரசங்கம் இருந்தது. ஆனால் இதற்கு 3½ சதமானம் வரி இருப்பதையும், ஏரேடெட் வாட்டர் சுக்கு 5 சதமானம் வரி இருப்பதையும் பார்க்கிறோம். இவை எல்லாம் சாதாரண மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய பொருள்கள் அல்லவா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாட்டுத் தீவனத்திற்கு விதிவிலக்கு என்று சொன்னோம். ஏற்கனவே, எண்ணெய்களுக்கு விதிவிலக்கு தற்காலிகமாகச் செய்திருக்கிறோம். இப்போதும் அமலில் இருக்கிறது. அப்படிச் செய்ததன் காரணமாக விலை குறைந்ததா என்றால் இல்லை. அதையும் மனதில் கொள்ள வேண்டும். அந்த விதிவிலக்கைப் பெரிய வியாபாரிகள் அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதே தவிர, வாங்கி உபயோகப்படுத்து கிறவர்கள் –கன்ஸ்யூமர்ஸ் பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட வில்லை. புண்ணாக்கைப் பொறுத்தவரை, 3½ சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம். அதைப் போல் எண்ணெய்க்கு 3½ சதவிகிதம் ஆக்கியிருக்கிறோம். இல்லாவிட்டால் பல முனை வரியில் 7 சதவிகிதமாக ஆக்கியிருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாட்டுத் தீவனத்திற்கு வரிவிலக்கு என்று சொல்லுகிறார்கள். பிண்ணாக்கும் மாட்டுத் தீவனத்தில்தானே வரும். புண்ணாக்குக்கு வரி போட்டுவிட்டு எப்படி மாட்டுத் தீவனத்திற்கு வரிவிலக்கு என்று சொல்ல முடியும்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : புண்ணாக்கு மாட்டுத் தீவனமாக மாத்திரமல்லாமல் வேறுபல காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, மாட்டுத் தீவனத்தில் புண்ணாக்கு இல்லாமல் என்று போட்டிருக்கிறோம். அதையும் 3½ சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம். நான் முன்னாலே சொன்னதையும் மறந்துவிடக் கூடாது. இப்படி குறைக்கின்ற காரணத்தால் அது பொதுமக்களுக்குப் பயன்படுகிறதா என்றால் இல்லை. அதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

ஆக்க வேலைக்கான ஒதுக்கீடுகளைக் குறைத்துவிடுவோமானால் பற்றாக்குறை பட்ஜெட்டைப் போடாமலே வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியும். ஆனால் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கருதுகிற ஓர் அரசு, எப்படியும் நல்ல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற முனைப்போடு பற்றாக்குறையாக இருந்தாலும் பரவாயில்லை. தாங்கக்கூடியவர்களிடத்தில் வரி போட்டு அல்லது வருமானத்திற்கு வேறு வழிவகைகளை யோசித்து, சிந்தித்து, செயல்படுத்தி அதன் மூலமாகத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணுவது தவறு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் ''இது மத்திய அரசைக் குறை கூறுகின்ற நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது'' என்று கூறினார்கள். நல்லவேளையாக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ''மத்திய அரசு நமக்குத் தரவேண்டிய பங்கை ஒழுங்காகத் தந்துதான் தீரவேண்டும்; நிதி விவகாரங்களில் அநீதி இழைக்கப்படக்கூடாது; அப்படி இழைக்கப்படுமானால் அதைத் தட்டிக் கேட்க, வலியுறுத்திக் கேட்க, மாநில அரசுக்கு உரிமை இருக்கிறது; மாநில அரசு தட்டிக்கேட்க வேண்டும்; இல்லையேல் தமிழ்ச் சமுதாயம் பாழ்பட்டுவிடும்''

என்றெல்லாம் அவர் கூறிய வாசகங்கள் இந்த அரசுக்குத் தெம்பூட்டுகிற வகையில் அமைந்திருக்கின்றன என்பதை மறுத்து விடுவதற்கில்லை.

மத்திய சர்க்காரைக் குறைகூறுகிறோம் என்றால், பாராளுமன்றத்தில், நின்றுகொண்டு பேசுகிற உறுப்பினர்களைப் போல் மத்திய அரசினுடைய அரசியல் கொள்கைகளில் வேறுபட்டு விமர்சிக்கின்ற கோணத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் குறைகூறல் அமையவில்லை என்பதைத் தயவு செய்து இந்த மன்றத்தில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

நிர்வாகத்தில் இருக்கும் சிக்கல்கள், பல்வேறு அதிகாரங்கள் இல்லாத காரணத்தால் நமக்கு ஏற்படுகிற தினறல்கள், திக்குமுக்காடல்கள் நிதி ஒதுக்கீட்டில் ஒழுங்கான பங்குத்தொகை அளிக்காத காரணத்தால் ஏற்படும் சங்கடங்கள் ஆகியவற்றைத்தான் நிர்வாகத்தில் ஏற்படுகிற இன்னல்களைத் தான் அந்தக் கோணத்தில்தான் இந்த நிதிநிலை அறிக்கை முழுதும் வாதிட்டிருக்கிறோமே அல்லாமல் மத்திய சர்க்காரைக் குறை கூற வேண்டுமென எண்ணம் கிஞ்சிற்றும் கிடையாது என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுத் திட்டம் வருகிற ஏப்ரல் திங்களில் தொடங்கியாக வேண்டும். பத்திரிகையில் என்ன செய்தி படிக்கிறோம்? இன்னும் திட்டத்திற் கான திட்டவட்டமான முடிவு தெரிவிக்கப்படவில்லை. இன்னும் மூன்று மாத காலத்தில் அல்லது ஆறுமாத காலத்தில் திட்ட நடவடிக்கையைப் பற்றி இறுதி முடிவு எடுக்கலாம் என்ற செய்தியைப் படிக்கிறபோது நாம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் காலடி எடுத்து வைக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோமா இல்லையா என்ற கேள்வியைக் கேட்டால் அது மத்திய சர்க்காரைக் குறைகூறும் காரியமாக ஆகிவிட முடியாது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25,000 கோடி ரூபாய் அகில இந்திய அளவில் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டது. இப்போது இரண்டு மடங்குக்கு மேலாக 50,000

கோடி ரூபாய் அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு திட்டத் தொகையாக ஒதுக்குகிறார்கள். நான்காவது திட்டத்தில் நடப்பு ஆண்டினுடைய ஆண்டுத் திட்டத்திற்கு நம்முடைய மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 129 கோடியாக இருக்கும்போது அதாவது 25,000 கோடி ரூபாய், திட்டத்தில் நடப்பு ஆண்டுக்கு 129 கோடி ரூபாய் என்ற நிலையில் 50,000 கோடி ரூபாய் திட்டத்தில் அடுத்து வருகிற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டினுடைய திட்டத்திற்கு ஒதுக்கீடு 118 கோடி ரூபாய்தான அது 118 ஆக இருக்கட்டும் அல்லது 108 ஆக இருக்கட்டும் – என்றால் அது நியாயமா? இதைக் கேட்பது எப்படி மத்திய சர்க்காரைக் குறை கூறுவதாக ஆகிவிடும், மீறுவதாக ஆகிவிடும் என்பதையும் அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்த்திடல் வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடன் தவணை முறையில் தள்ளுபடி செய்து கொடுத் திருக்கிறார்கள். 87 கோடி ரூபாயை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. தவணை முறைகளில் தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருக்கிறது. சில நேரங்களில் வேறு ஒரு மாநிலத்தை விட அதிகமான சலுகை பெறுகிறோம். சில நேரங்களில் ஒப்பிட்டுப் பார்த்தால் வேறு சில மாநிலங்களைவிட குறைவான சலுகை பெறுகின்ற நிலையும் இருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், அதற்காகக் குறிப்பிடுகிறேன். 87 கோடி ரூபாயைக் கடன் தவணை முறையில் தள்ளிக் கொடுத்திருக் கிறார்கள் என்ற காரணத்தை எண்ணிப் பார்க்கும்போது அதை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தவணையாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தரப்பட்டதாகச் சொல்லப்படுவது – தருவதாக என்று திருத்திக்கொள்ள வேண்டும் – ஒப்புதல் தருவதாகச் சொல்லப்படுகிற 118 கோடி ரூபாய்க்குள்ளேதான் கடன் தவணையும் இணைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் நடப்பு ஆண்டில் நாம் திட்டத்திற்காகச் செலவிடுகிற 129 கோடி ரூபாய் எங்கே? ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் நாம்

செலவழிக்கலாம் என்று ஒப்பளிக்கப் படுவதாகச் சொல்லக்கூடிய கடன் தவணை உள்ளிட்ட 118 கோடி ரூபாய் எங்கே? இதை எண்ணிப் பார்க்கும்போது மத்திய அரசு, அல்லது திட்டக்குழு அல்லது நிதிக்குழு ஆகியவை நம்முடைய மாநிலத்திற்கு அநீதி வழங்குகின்ற சூழ்நிலை தென்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவது அரசுப் பொறுப்பில் இருக்கும் எங்களுடைய கடமையாக இருக்கிறதே யல்லாமல் வேறு அல்ல.

நிதி ஆணைக் குழுவில் என்ன செய்திருக்கிறார்கள்? ஒரு புதிய தலைப்பு, என்ன தலைப்பு? ''நிர்வாகத்தைச் சீரமைத்து மேம்படுத்தும் மானியம்'' ""Upgradation Grants" என்பதே அந்த மானியம், அந்தத் தலைப்பில் சில மாநிலங்களுக்கு உதவித் தொகை, சிறப்புத்தொகை அளிக்கப்படுகிறது. அதைப் பெற முடியாத மாநிலங்கள் எவையெவை? தமிழ்நாடு, குஜராத், கேரளம், மராட்டியம் ஆகிய இந்த நான்கு மாநிலங்களும் அந்த மானியத் தொகையைப் பெற முடிய வில்லை. நிர்வாக மேம்பாட்டுக்காக என்ற அந்தக் காரணத்தைக் காட்டுகிறார்கள். கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற துறைகளில் இது வரை அதிகம் செலவு செய்யாமல் இருக்கிற மாநிலங்களுக்கு "Upgradation grants" என்று தருகிறார்கள். அப்படித் தரப்படுகிற மானியம், உத்திரப் பிரதேசத்திற்கு 290 கோடி ரூபாய்: பீகாருக்கு 166 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்திற்கு 72 கோடி ரூபாய்; ஓரிஸ்ஸாவுக்கு 57 கோடி ரூபாய்; ஆந்திரத்திற்கு 52 கோடி ரூபாய், மத்தியப்பிரதேசத்திற்கு 50 கோடி ரூபாய்; மைசூருக்கு 27 கோடி ரூபாய்.

தமிழகம், குஜராத், கேரளம், மராட்டியம் போன்ற மாநிலங்களுக்கு கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற துறைகளில் அதிகச் செலவு செய்திருக்கிறது என்ற ஒரு காரணம் காட்டி இந்த மானியம் தர மறுக்கப்பட்டிருக்கிறது.

அந்த மானியம் நமக்கு வேண்டுமென்று போராடுகிற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களுடைய உறுதுணை ஆளுங் கட்சிக்கு இருந்திட வேண்டுமென்று கேட்பது மத்திய அரசுக்கு விரோதமான போக்கு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சர்' அதிகமாக ஆகிக்கொண்டு போகிறது என்று. ஆகவே, எல்லா அரசாங்கங்களும் என்று அவர்கள் ஆங்கிலத்தில்கூடச் சொன்னார்கள். "They must reduce the non-plan Expenditure என்று அன்றைக்கு அழுத்தந்திருத்தமாக அவர்கள் சொன்னார்கள். 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சர்' என்றால் என்ன? ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் திட்டத்திற்கென்று செலவிடப்படுவது அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் திட்டமல்லாத செலவு ஆகிறது. அதுதான் 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சர்'. இப்போது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப ஆண்டில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதாக வைத்துக் கொள்வோம். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் அது 'நான்–ப்ளான் எக்ஸ்பெண்டிச்சரில்' வந்துவிடும். அதைக் குறைக்க வேண்டும் என்கிற அம்மையார் அவர்களின் வாதத்தை ஒத்துக் கொண்டால் அந்த ஆயிரம் ஆசிரியர்களை திட்டமல்லாத செலவை நாங்கள் குறைக்கப் போகிறோம், ஆகவே, நீங்கள் வீட்டுக்குப் போங்கள் என்று சொல்ல வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிடும்.

அதேபோல் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் ஒரு நூறு மருத்துவமனைகளைக் கட்டுவது என்ற திட்டம் போட்ட பிறகு அந்த ஐந்தாண்டுகள் முடிந்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்பத்தில் அந்த மருத்துவ மனைகள் எல்லாம் 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சரில்' வந்து விடுகிறது. திட்டமில்லாத செலவில் வந்துவிடுகிறது. அப்படி வரும்போது திட்டமில்லாத செலவைக் குறைக்க வேண்டு மென்பதற்காக அந்த மருத்துவமனைகளை இழுத்து மூடி விடவும் முடியாது. அதனுடைய செலவுகளை, பராமரிப்புகளை குறைத்துவிடவும் இயலாது.

திருமதி த.ந. அனந்தநாயகி : ஒரு ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகும்போது அந்த 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சர்' ஏற்பட்டால் அதை

ஒத்துக்கொள்ளலாம். ஆனால் வருடாவருடம் உங்கள் 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சர்' மேலே போய்க்கொண்டிருக்கிறது, 1969–70, 1970–71 என்று, எந்த ஆண்டு ஐந்தாண்டுத்திட்டம் முடிந்தது, எந்த ஆண்டு புதிதாக ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஒரே ஒரு ஐந்தாண்டுத்திட்டம் போட்டு அமைதியாக முடித்துவிட்டால் பரவாயில்லை. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டமும் மற்ற ஐந்தாண்டுத் திட்டத்தை தொடர்ந்து துரத்திக் கொண்டிருக் கிறது. அப்படி சக்கரம்போல் சுழலும் விதத்தில் ஒருமுறை திட்டச் செலவாக இருந்தது அடுத்த முறை திட்டம் இல்லாத செலவாகிறது. ஆகவே குறைக்க முடியாது. அம்மையார் அவர்கள் 'நான்–ப்ளான் என்ஸ்பென்டிச்சர்' என்பதற்குப் பதிலாக 'நான்–டெவலப்மென்ட் எக்ஸ்பென்டிச்சர்' என்று கூறி யிருப்பார்களேயானால் அதைப்பற்றி விவாதிப்பது அர்த்த முண்டு. ஆனால் 'நான்–ப்ளான் எக்ஸ்பென்டிச்சரைக்' குறைப்பது ஏதுவான ஒன்று அல்ல.

நம் நண்பர், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேசிய திரு. வடிவேல் அவர்கள் பேசுகிறபோது நிலச்சீர்திருத்தத் தினால் எடுத்த நிலங்களை எல்லாம் எங்கே என்று கேட்டார்கள், நீங்கள் நிலங்களை எடுத்தீர்களே, நிலம் எவ்வளவு எடுத்தீர்கள், எத்தனை ஏக்கர்கள் எடுத்தீர்கள் என்று கேட்டார்கள். அவர் பெயருக்கு ஏற்றாற்போல் ஆக்ரோஷமாகப் பேசினார்கள். உருக்கமாகவும், உணர்ச்சிவசமாகவும் இருந்த அந்தப் பேச்சில் நிலங்கள் எல்லாம் எங்கே எங்கே என்று கேட்டபோது எனக்குக்கூட சந்தேகமாக இருந்தது. எங்கேதான் போய் விட்டது, நமக்குத் தெரியாமல் போனதை திரு வடிவேல் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களே என்று கூட சந்தேகப்பட்டேன்.

பிறகு புள்ளி விவரங்களைப் பார்க்கிற நேரத்தில் நிலச்சீர்த்திருத்தத்தால் 1967 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டவை, அதாவது ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது நிலச்சீர்திருத்தம் கொண்டுவந்து 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு

வந்தபோது, முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, கிடைத்தது கூட அல்ல 24,194 ஏக்கர்தான் உபரி நிலம் என்று அறிவிக்கப் பட்டது. அப்போது எதிர்க்கட்சி துணைத் தலைவராக இருந்த போது நான் கேட்டேன். அப்போது ரெவன்யூத்துறை அமைச்சராக இருந்த திரு. மாணிக்கவேலர் அவர்களைப் பார்த்துக்கேட்டேன். திரு. வடிவேல் அவர்கள் கேட்ட இதே கேள்வியை கேட்டேன். எவ்வளவு நிலம் எடுத்தீர்கள், எங்கே இருக்கிறது என்றெல்லாம் கேட்டபோது அன்றைய அமைச்சர் மாணிக்கவேலர் அவர்கள் சொன்னார்கள், அவைகள் எல்லாம் பிரிக்கப்பட்டுவிட்டன என்று. அவரவர் பிரித்துக்கொண்டு போய் விட்டார்கள் உபரி நிலத்தை என்று அவர்கள் நகைச் சுவையோடு சொன்னார்கள். நிலம் பிரிக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை, ஆகவே பிரித்துக் கொண்டார்கள். இதற்காகக் கவலைப்படக்கூடாது என்று திரு. மாணிக்கவேலர் அவர்கள் நகைச்சுவையாகச் சொல்லி எங்கள் வாயையெல்லாம் அன்று அடைத்துவிட்டார்கள்.

இதில் 1967 மார்ச் திங்கள் வரையில் அப்போது அறிவிக்கப்பட்ட உபரி நிலம் 24,194 ஏக்கர். இதிலே எடுத்துக் கொள்ளப்பட்டவை 16,330 ஏக்கர். உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டவை 16,330 ஏக்கர். 1967 வரையில் இதில் விவசாயிகளுக்காக யாதொரு நிலமும் கொடுக்கப்படவில்லை. அதை கோடிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு 1970ஆம் ஆண்டு இந்த ஆட்சியில் 30 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று குறைத்தோம். அப்படிக் குறைத்தபோதுதான் கரும்பு நிலங்களுக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. மேய்ச்சல் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு இவை எல்லாம் ரத்து செய்யப்பட்டன. ஆக, இந்தச் சட்டத்திற்குப் பிறகு 31.1.1974 வரையில் அறிவிக்கப்பட்ட உபரிநிலம் 90,284 ஏக்கர். இவற்றில் வழக்குகள் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிற நிலங்கள் 20,429 ஏக்கர். நோட்டீஸ் கொடுக்கப்பட்டு எடுக்கும் தருவாயில் உள்ள நிலங்கள் 2,306 ஏக்கர். எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் 67,519 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டதாக நிலத்தில்

குத்தகைத்தாரர்களுக்கும் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கும் அளித்தவை 62,387 ஏக்கர். இதிலே பட்டா கொடுக்கப்பட்டு முழுமையாக அவர்களுக்கு உரிமையாக்கப்பட்டது 39,970 ஏக்கர். தொடர்ந்து பட்டாக்கள் மேலும் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே நிலம் எங்கே என்று தேட வேண்டிய அவசியமில்லை. இன்னும் அதிகமாகக்கூட 90,000 ஏக்கருக்கு மேல்கூட நிலம் கிடைத்திருக்கக்கூடும். ஆனால் முப்பது ஸ்டான்டேர்ட் ஏக்கர் வரப்போகிறது என்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட காரணத்தால், ஆளுக்கு ஆள், அன்று திரு. மாணிக்கவேலர் அவர்கள் சொன்னதைப் போல் பிரித்துக் கொண்டு விட்டார்கள் என்ற காரணத்தால் நாம் பதினைந்து ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று கொண்டு வந்த நேரத்தில் அதிக உபரி நிலம் நமக்கு கிடைக்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டு என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நண்பர் வடிவேல் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். 64 லட்சம் பேர்கள் சொந்த நிலமற்றவர்கள் என்று சர்க்கார் கணக்கு கூறுவதாகச் சொன்னார்கள். அப்படி எந்த சர்க்கார் கணக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் தனியாகவோ அல்லது மன்றத்தின் வேறு ஒரு நேரத்தில் வெளியிடுவார்களேயானால் அவைகளை ஆராய்ந்து அது பற்றி பரிசீலக்க நான் தயாராயிருக்கிறேன். இப்போது எனக்குக் கொடுத்துள்ள தகவல்படி, 1971 மக்கள் தொகை கணக்குப்படி தமிழ்நாட்டிலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 45 லட்சமாகும். விவசாயத் தொழிலாளர்கள் சில நேரங்களில் விவசாய வேலையும் செய்வார்கள் மற்ற நேரங்களில் வேறு வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் எல்லோரையும் உள்ளிட்டு விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 45 இலட்சம். இதில் குத்தகைக்காரர்களின் எண்ணிக்கை 4 இலட்சம். இந்தக் கணக்கைத் தவிர நிலமற்றவர்கள் 64 இலட்சம் என்பதற்கு தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. ஆகவே அவர்கள் தெரிவிப்பார்க ளானால் அதைப்பற்றி பரிசீலிக்க நான் தயாராயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலச்சீர்த்திருத்தத்தால் எடுக்கப்படுகிற எந்த நிலமானாலும் அதை முதல் கட்டமாக அந்த நிலத்தை யார் குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப் படுகிறது. அப்படி குத்தகைதார்கள் யாரும் இல்லா விட்டால் நிலமற்ற விவசாயிகளுக்கு அது வழங்கப்படுகிறது என்பதையும் நண்பர் வடிவேல் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுங்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. குமாரசாமி அவர்கள் பேசும்போது இந்த அரசு நீர்ப் பாசனத்திற்காக என்ன திட்டங்களைத் தீட்டியது, என்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஏற்கெனவே இருந்து இடையில் தேங்கிவிட்டு நின்றதை புதுப்பித்து 68,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிற நிலைமை இருந்ததை 1,42,000 ஏக்கர் என்று அறிவிக்கப் பட்டிருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் முழு சக்தியையும் உபயோகித்து 47,000 ஏக்கர்கள் இப்போது பயிர் செய்யப் படுகிற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

1967ஆம் ஆண்டுக்கு பிறகு எடுத்துக்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மணிமுக்தா நதி, நெல்லை மாவட்டத்தில் இராம நதித் திட்டம், நெல்லை மாவட்டத்தில் கடனா திட்டம், மதுரை, இராமநாத புரத்தில் வைகைக் கால்வாய் புதுப்பித்தல், மதுரை மாவட்டத்தில் பரப்பலார், மதுரையில் பாலார் பொரந்தலார், தருமபுரியில் சின்னாறு திட்டம், வடஆர்காடு, செங்கல்பட்டு மாவட்டத்தில் தண்டரை அணைக்கட்டுத் திட்டம், வட ஆற்காடு, தென் ஆற்காட்டில் நந்தன் கால்வாய் புதுப்பிக்கப்படும் திட்டம், நெல்லை மாவட்டத்தில் கருப்பா நதித் திட்டம், திருச்சி மாவட்டத்தில் பொன்னையாறு திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் பிளவுக்கால் திட்டம், மதுரையில் மருதா நதித் திட்டம் மொத்தமாக 27 கோடியே 7 லட்சம் ரூபாய்க்கு திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதன் காரணமாக 1,87,530 ஏக்கர் புதிதாக சாகுபடிக்கு வருகிற சூழ்நிலையில் இந்த அரசு இந்த ஐந்தாறு ஆண்டுக்காலத்தில் செய்து முடித்திருக்கிறது.

இன்னும் 1973–74இல் அனுமதியளிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப் பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் உறுப்பினர்கள் படித்துப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும் என்று கருதுகிறேன்.

சிறுபாசனத் திட்டத்தின்கீழ் கூடுதலாக பாசனம் செய்யப் பட்ட கணக்கைப் பார்த்தால் நீங்கள் எல்லாம் வியப்படைகிற கணக்கை இந்த அரசு உருவாக்கிக் காட்டியிருக்கிறது, ஐந்தாறு ஆண்டுக் காலத்தில்.

1965 – 66 முடிய பல ஆண்டுகள் தொடர்ச்சியாக 1966ஆம் ஆண்டு முடிய தனியார் குழாய்க் கிணறுகள் 4,369 இருந்தன. இன்றைக்கு 14,477 கிணறுகள். 1966 முடிய வடிமுனைக் குழாய்கள் 2,248 இருந்தன. இன்றைக்கு 14,737 இருக்கின்றன. 1966 முடிய, 1967இல் 565 துளைக்குழாய்கள் (போர் வெல்ஸ்) இருந்தன. இன்றைக்கு 4,873 துளைக் குழாய்கள் இருக்கின்றன. 1967இல் ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் 100 இருந்தன. இன்றைக்கு 8,042. 1966 முடிய கூடுதலாகப் பாசனம் செய்யப்பட்ட நிலத்தின் அளவு 1,10,160 ஏக்கராகும். இன்றைக்கு 4,71,782 ஏக்கராகும். இவைகளெல்லாம் சிறுபாசன திட்டத்தின் மூலமாக நாம் செய்து இருக்கிற அரிய சாதனை என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்ற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மற்றவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் பேசுகிற நேரத்தில் கூட்டுத்துறை தமிழக அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதையும், குறிப்பாக தூத்துக்குடியில் இருக்கிற உரத்தொழிற்சாலைப் பற்றியும், அது கூட்டுத்துறையில் தான் இருக்கவேண்டுமா, ஏன் பொதுத்துறையில் இருத்தலாகாது என்றும் கேட்டார்கள். கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய் உரத் தொழிற்சாலை திட்டத்தை மாநில அரசு திட்டமாக, பொதுத் துறை திட்டமாக நாமே நடத்த வேண்டுமென்று மத்திய திட்டக் குழுவிடம் வலியுறுத்தினோம். மத்திய திட்டக்குழு இணங்க மறுத்துவிட்டது. மத்திய அரசின் உதவி கிடைக்காத நேரத்தில் 85 கோடி திட்டத்தை நம்மால் நிறுவ முடியாது.

இதற்கிடையில் மத்திய வங்கிகள் (பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன்ஸ்) இவைகளெல்லாம் தனியார் துறையில் உரத் தொழிற்சாலை யாராவது நிறுவுவதாக இருந்தால், அதற்கு பண உதவி செய்யத் தயாராக இருந்தன. இதைத் தனியார் துறைக்கு விட்டுவிடக்கூடாது, பொதுத்துறைக்கு மத்திய திட்டக்குழு அனுமதிக்காத சூழ்நிலையில்தான், மாநிலஅரசு தலையிட்டு நாமும் இதிலே பொறுப்பு ஏற்றுக்கொண்டு 26 சதவிகிதம் அரசுக்கும் 25 சதவிகிதம் தனியாருக்கும், மீதமுள்ள 49 சதவிகிதம் பொதுப்பங்குகள் என்ற முறையில் கூட்டுத் துறையில் துவங்கியிருக்கிறோம். பொதுத்துறை வேண்டாம் என்று இல்லை. பொதுத் துறைக்கு வராமல் முழுக்க முழுக்க தனியார் துறைக்கு போகும் சூழ்நிலையில் – மத்திய திட்டக்குழு நம்முடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததால் – நாம் கூட்டுத்துறை என்ற அளவில் வரவேண்டுமென்று முயற்சியை எடுத்துக் கொண்டோம் என்பதை நான் விளக்கமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, 85 கோடி ரூபாய் மூலதனம் போட்ட நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் மட்டும் போட்ட, தனி நபரின் நிர்வாகத்தில் அந்த உர உற்பத்தித் தொழிற்சாலையின் முழு பொறுப்பை கொடுத்தது நியாயமா? அவர்கள் மற்ற சகோதர கம்பெனிகளுக்கு உர உற்பத்தி தொழிற்சாலையின் வேலைகளை காண்ட்ராக்ட் கொடுப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எல்லா வற்றையும் கட்டுப்படுத்துகிற வகையில்தான் நாம் 26 சதவிகிதம் வைத்து இருக்கிறோம். அதிலே இயக்குனர் என்ற அளவில் அரசாங்கத்தின் சார்பில் 4 இயக்குனர்கள் இருக்கிறார்கள். இருக்கின்ற சங்கடத்தைச் சொன்னேன். பொதுத்துறைக்கு மத்திய திட்டக்குழு சம்மதிக்கவில்லை. இதைத் தவிர வேறுவழி இல்லாமல் நாங்கள் செய்து இருக்கிறோம். வேறு தவறு ஏற்படாமல் செய்வதற்கு அரசு கண்காணிப்போடு இருக்கிறது என்ற உறுதியை நிச்சயமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : மத்திய சர்க்கார் உர தொழிற்சாலைகளைப் பொதுத் துறையில் இருக்கவேண்டு மென்று ''இண்டஸ்டியரில் பாலிசிரெசல்யூஷன்'' போட்டு இருக்கிறார்களே, அதை மத்திய அரசு மாற்றிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நாம் கேட்ட நேரத்தில் பொதுத்துறைக்கு மத்திய திட்டக்குழு அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே, நாம் எடுத்த முடிவு அது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கப்பல் கழகம் பற்றிச் சொன்னார்கள், அம்மையார் அவர்கள், தனி நாடு என்ற அளவிற்கு நாம் கப்பல் விடப் போகிறோம். மத்திய சர்க்காரை எதிர்த்து இந்தக் காரியத்தைச் செய்யப்போகிறோம் என்று பொருள்படும்படி பேசினார்கள். இன்று காலையில் பேசிய பெரியவர் மணலி அவர்கள் இந்தக் கப்பல் போக்குவரத்துக்கழகம் நாம் ஏற்று நடத்துவது ஒரு துணிகரமான முயற்சி என்று சொன்னார்கள். இது எந்த முயற்சியாக இருந்தாலும், மத்திய சர்க்காரை எதிர்த்து நடத்துகிற முயற்சி அல்ல என்பதை நான், தெரிவித்துக் கொள்கிறேன். நாம் மத்திய அரசோடு வாதாடி, போராடக் கூடியவர்கள் என்றாலும், நமது உரிமைகள் தேவை என்று கேட்பதில் அழுத்தம் திருத்தமாக இருப்பவர்கள் என்றாலும், இன்று இருக்கும் விதிமுறைகளைத் தாண்டி மத்திய சர்க்காரை எதிர்த்துப் போகும் கொள்கை இந்த அரசுக்கு என்றும் இருந்தது இல்லை. இன்றைக்கும் இல்லை. என்றைக்குமே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு மாநில அரசுக்கு இருப்பதைவிட மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை, ஹேமாவதியில் மைசூர் அணை கட்டுவது போல் மற்ற மாநிலங்கள் மத்திய அரசின் ஆணைகளை மதிக்காமல் இருப்பது போல் உள்ள சூழ்நிலைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசு தள்ளப்படாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு தமிழ்நாடு அரசிலே இருக்கும் நமக்கு மாத்திரம் அல்ல, மத்திய அரசின் பொறுப்பில் இருப்பவர்களுக்கும் நிச்சயமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இது மத்திய அரசின் சப்ஜெக்டாக இருக்கிறதே, இதற்கு அனுமதி பெற்று இருக்கும் நீங்கள், ஏன் காவிரி பிரச்சினையை உடனடியாக தீர்க்கவில்லை என்று கேள்வி கேட்டார்கள். மத்திய சர்க்காரிடத்தில் 'ஷிப்பிங்' என்ற சப்ஜெக்ட் இருந்தாலும், அவர்கள் இன்று தனியார் கம்பெனிகள் கப்பல் போக்குவரத்துக் கழகங்கள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கிறார்கள். இப்படி தனியாருக்குக் கொடுக்கும்போது ஏன் மாநில அரசுக்கு கொடுக்கக் கூடாது என்ற கேள்வியை திட்டக் குழுவில் எழுப்பிய போது, திட்டக்குழு அதற்கு இணக்கம் தெரிவித்தது. அந்த இணக்கம் தெரிவித்ததன் பேரில்தான் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறோம். 'பூம்புகார் போக்குவரத்துக் கழகம்' என்று அறிவிப்புச் செய்திருக்கிறோம். அதற்காக ஒருகோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இவைகளெல்லாம் நிதிநிலை அறிக்கையில் நான் விவரமாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

இந்தியாவில் உள்ள போக்குவரத்துக் கப்பல்களில் 90 சதவிகிதம் பம்பாய்த் துறைமுகத்தில்தான் வந்து நிற்கின்றன. ஏன்? அந்த பெரும்பாலான தனியார் கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் அந்தப் பகுதியிலுள்ள தனிப்பட்ட முதலாளி களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. மேற்குக் கடற்கரையில் ஏற்பட்டு இருக்கும் இந்தக் கப்பல் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்து, கிழக்குக் கடற்கரையை விரிவுபடுத்தி, நம்முடைய தமிழ்நாடு, தென்னிந்திய பகுதிகள் இவைகளெல்லாம் பரவலாக நிறைவு செய்ய, இந்திய ஒருமைப்பாடு என்பது பேச்சளவில் இல்லாமல், இந்திய ஒருமைப்பாடு என்றால் பம்பாய், உத்திரப்பிரதேசம் என்று இல்லாமல், இந்திய ஒருமைப்பாடு என்றால் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்கிற உணர்வு ஏற்படுகிற அடிப்படை நோக்கம் நெஞ்சில் கொண்டும் கிழக்குக் கடற்கரையில் கப்பல் போக்குவரத்து அதிகமாக ஆக வேண்டு மென்ற நிலையிலும்தான் இதை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

மத்திய அரசாங்கத்தின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் ஒரு கொள்கை வகுக்கிறார்கள். 90 லட்சம் டன் கொள்அளவுள்ள கப்பல் திறனை வளர்க்க வேண்டுமென்று மத்திய சர்க்காரின் ஐந்தாவது ஐந்தாண்டுத்

திட்டத்தின் எண்ணமாகும். அதற்கு உறுதுணையாகத்தான் இந்தக் கப்பல் போக்குவரத்துக்கழகம் ஆரம்பமாகிறதே அல்லாமல் ஏதோ பூம்புகார் என்ற பெயர் வைக்கவேண்டுமென்பதற்காகவோ அல்லது தமிழ்நாடு முழுவதும் தனிக்கொடி பறக்க விட்டு, தமிழ்நாடு தனி நாடாக பிரிந்துவிட வேண்டும், உலகம் முழுவதும் அந்தக் கப்பல் சுற்றிவர வேண்டுமென்பதற்காக அல்ல. பூம்புகார் என்ற பெயர் வைத்ததால் அந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி வந்துவிடக்கூடாது.

ஒருமுறை பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது போலீஸ் நிலையம் என்று இருந்தவற்றை காவல் நிலையம் என்று மாற்றி இருந்தார்கள். பிறகு மறுபடியும் பக்தவத்சலம் அவர்கள் ஆணையிட்டு காவல்நிலையங்களை அழித்து போலீஸ் நிலையம் என்று எழுதச் சொன்னார்கள். நானும், நாவலர் அவர்களும் ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் திருவொற்றியூரில் திராவிட முன்னேற்றக் கழகம் காவலர் கூட்டம் போட்டது. அதற்குப் பிறகு காவலர் என்பதை அழித்து போலீஸ் என்று எழுதச் சொன்னோம் என்ற விளக்கம் தந்தார்கள்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : காவலர் என்றால் வாட்ச்மேன் என்ற அளவிற்கு அர்த்தம். அதைவிட உயர்ந்த பணியை போலீஸ்காரர்கள் செய்கிறார்கள் என்று கனம் பக்தவத்சலம் அவர்கள் சொன்னதாக நினைவு. நானும் அப்போது இந்த மன்றத்தில் அங்கத்தினராக இருந்தேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : போலீஸ் செய்வது உயர்ந்த வேலை. வாட்ச்மேன் செய்வது தாழ்ந்த வேலை என்று சொல்லி, வாட்ச்மேன் வேலையைத் தாழ்வாகக் கருத வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) இது தெரிந்தால் முதலிலேயே காவல்நிலையம் என்று போட்டு இருக்க வேண்டியது இல்லையே. திருவொற்றியூரில் திராவிட முன்னேற்றக் கழகம் காவலர் கூட்டம் போட்டவுடன்தான் காவலர் நிலையம் என்பதை போலீஸ் நிலையம் என்று போட்டதாக விளக்கம்

சொன்னார்கள். ஆகவே, தமிழ் மொழியில் இருக்கும் வெறுப்பின் காரணமாக – பூம்புகார் என்ற பெயரை வெறுக்கக் கூடாது. நல்ல காரியங்களை எதிர்த்துப் பேசக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேனே அல்லாமல் வேறு அல்ல.

வாரியங்களைப் பற்றி இங்கே பேசக்கூடாது. நம்முடைய கே.டி.கே. தங்கமணி அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் வாரியங்களை நிறைய வைத்துக்கொண்டே போகிறீர்களே என்று எல்லாம் சொன்னார்கள். வாரியங்களை, கார்ப்பரேஷன்களை அதிகமாக வைப்பதற்கு மிக முக்கியமான காரணம். நிர்வாகத்தைப் பரவலாக ஆக்கி செம்மைப் படுத்த வேண்டும் என்பது ஒரு நோக்கம். அடுத்தது அதிக நிதியை மாநில அரசோ, மத்திய அரசோ அதற்கு ஒதுக்க முடியாத சூழ்நிலையில் வங்கிகள் உட்பட இன்றைக்கு இருக்கிற பினான்ஷியல் இன்ஸ்ட்டிடியூஷன்களிடமிருந்து பெரும் தொகை பெறலாம் என்கிற அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் தான் இந்த கார்ப்பரேஷன்கள், வாரியங்கள் வைக்கப்படுகின்றன.

நம்மைவிட சிறிய மாநிலமான கேரளாவில் அரிஜன் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ரூரல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், பிஷ்ஷரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், எலக்ரானிக் கார்ப்பரேஷன் போன்ற பல கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த பெயர்களை மாத்திரம் சொன்னேன்.

அதே போல மகாராஷ்டிரா மாநிலத்தில் ஸ்மால் இண்டஸ்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் ஆஃப் மகாராஷ்டிரா, சிட்டி இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் பைனான்ஸ் கார்ப்பரேஷன், 'கொன்கன்' டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன், விதர்பா டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் ஆகிய வாரியங்கள் மராட்டியத்தில் அமைக்கப்பட்டிருக் கின்றன. மேலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மராட்டியத்தில் 'பாசன

வாரியம்' என்ற ஒரு வாரியத்தை, ஒரு கார்ப்பரேஷனையே அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் 'ஆஸ்பிடல் கார்ப்பரேஷன்' என்று ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 'பிரிட்ஜஸ் கார்ப்பரேஷன்' என்ற ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கார்ப்பரேஷன்கள் ஏற்படுத்துவது என்பது – ஏதோ வாரியங்கள் என்று சொல்கிறார்கள். ஒருவர் தலைவரைப் போடுவதற்கு என்று சொல்கிறார் – நாங்கள் 2, 3 வாரியங்களை ஏற்படுத்தி, அவைகளில் தலைவர்களைப் போட்டதோடு சரி –இனிமேல் வாரியங்கள் ஏற்படுத்தினால் ஏதோ ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை தலைவராகப் போடப்போகிறார்கள் என்ற ஐயத்தின் காரணமாக, எப்படி பூம்புகார் என்ற பெயரைத் தாங்கி கப்பல் போக்குவரத்து கார்ப்பரேஷன் ஏற்படுத்திய வுடன் கப்பல் போக்குவரத்து கார்ப்பரேஷன் வேண்டியதில்லை என்ற எண்ணம் ஏற்பட்டதோ அப்படி ஏற்படாமல், வாரியங்கள் நல்ல காரியங்களைச் செய்வதற்கு பயன்படக்கூடிய நிர்வாகத்தை பகிர்ந்துகொள்ளக்கூடிய திறம்பட செய்யக்கூடிய, அதிக நிதி வசதி பெறக்கூடிய சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக் கின்றன என்ற எண்ணத்தில் இவைகளையெல்லாம் வரவேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி பிரச்சினையைப் பற்றி இங்கே பயங்கரமாகப் பேசப்பட்டது. ஏதோ காவேரி பிரச்சினையில் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம், இனிமேல் அடைபட்டுப் போய்விடும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. 18.2.1974வுடன் அந்த ஒப்பந்தம் முடிந்து விடுகிறது என்றால், அதற்குப் பிறகு, காவேரி தண்ணீர் தமிழ்நாட்டிற்கு வராமல் போய்விடவில்லை. 1924இல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1974வுடன் முடிந்து விடுகிறது என்று பொருள் அல்ல. இதற்குப் பிறகு புதிய ஒப்பந்தம் எழுதப்பட வேண்டும் என்பதும் பொருள் அல்ல. காவேரி பற்றி எந்த ஒரு முடிவு எடுப்பதாக இருந்தாலும், அது தமிழ் நாட்டிலுள்ள பெரிய பிரச்சினை என்ற அடிப்படையில் எல்லாக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை அடிக்கடி கூட்டி, அவர்களுடைய சீரிய சிறந்த ஆலோசனைகளைப் பெற்றுத்தான் அந்த முடிவினைத்தான்

மத்திய அரசோடு நாங்கள் பேசும் பொழுது விவாதிக்கிறோம். அந்த முடிவினுடைய மையத்தை வைத்துக் கொண்டுதான் இந்தப் பிரச்சினையை அணுகுகி றோமேயல்லாமல் வேறு அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி பிரச்சினையில் பல கமிட்டிகளை எல்லாம் மத்திய சர்க்கார் போட்டு முடித்துவிட்டார்கள். நாம் மிகுந்த பொறுமையோடு இருக்கிறோம், இல்லை என்று மறுக்கவில்லை. ஏனென்றால், இந்திய ஒருமைப்பாட்டில் மற்ற மாநிலங்களுக்கு இருக்கிற அக்கறையில் எள் அளவு பங்கு குறைந்த அக்கறை நமக்கு இல்லை என்பதை நிரூபிக்கின்ற வகையில் நாம் பொறுமையோடு இருக்கிறோம்.

ஹேமாவதி அணையை அங்கே கட்டுகிறார்கள். தண்ணீர் அங்கிருந்து வருகிறது, நாம் ஏன் அதை தடுக்கக்கூடாது என்று அம்மையார் கேட்டார்கள், ஒருமுறை பட்டுக்கோட்டை சீனுவாசய்யர் அவர்கள் நீர்ப்பாசன மகாநாட்டில் பேசும் பொழுது தமிழ்நாட்டிலிருந்து ஒரு பெரும்படை சென்று அங்கு இருக்கிற காவேரி அணையை உடைக்க வேண்டும் என்றுகூட பேசினார்கள். அவைகளெல்லாம் தீவிரவாதத்திற்கு, வேகமான பேச்சுகளுக்கு பொருத்தமுடையதாக இருக்கும். சில பேர்களுக்கு பேச்சில் வேகம் இருக்கும், செயல் மிக மிகச்சாதாரணமாக ஆகிவிடும். ஆகவேதான் பேச்சில் ஏகத்தைக் காட்டி, செயலில் எதையும் குறைத்துவிடக்கூடாது என்ற சூழ்நிலையில் இன்றைக்கு இந்த அரசு இந்தப் பிரச்னையில் மிகுந்த பிடிவாதம் காட்டிவருகிறது. காவேரி ஆறு இல்லாவிட்டால், காவேரி ஒப்பந்தத்தில் ஏதாவது சீர்கேடு ஏற்பட்டுவிடுமேயானால், கர்நாடக மாநிலத்திற்கு ஆதரவாக, ஒருதலைப் பட்சமாக மத்திய அரசு ஏதாவது முடிவு எடுத்துவிடுமேயானால், 4½ கோடி தமிழ் மக்களுடைய வாழ்வு அதோகதி ஆகிவிடும். அப்படி ஏற்படுகின்ற நிலையில் இந்த அரசு நிச்சயம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது; அப்போது, தமிழ்நாட்டிலிருக்கிற தி.மு.க தோழர்களுடைய கரங்கள் மாத்திரமல்ல, எல்லா தமிழர்களுடைய கரங்களும் அன்றைக்கு யாரை எதிர்க்க வேண்டுமோ அவர்களை எதிர்க்க வேண்டிய அளவுக்கு ஓங்கி உயரும் என்ற உறுதியை நாம்

நிச்சயமாகப் பெற்றிருக்கிறோம். ஆகவே, இதிலே எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை. மத்திய அரசு நீதி வழங்கும் என்று எதிர்பார்ப்போமாக. கர்நாடக அரசும், கேரள அரசும், தமிழக அரசும் கூடிப் பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வருவார்கள் என்று எதிர் பார்ப்போமாக என்று கூறி இந்தப் பிரச்சினையைப் பற்றி என்னுடைய கருத்தை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

மற்றும் பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் பேசப்பட்டது. சோஷலிஸம் கிடையாது, தேசீயமயமாக்குவது மாத்திரம் சோஷலிஸம் அல்ல என்றெல்லாம் திரு.கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தேசீயமயமாக்குவது மாத்திரம் சோஷலிஸம் அல்ல. ஆனால், தேசீயமயக் கொள்கை சோஷலிஸத்தினுடைய வெற்றி முகட்டிற்கு செல்லுகின்ற வழியில் உள்ள ஒரு கட்டம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, அந்தக் கட்டத்தை நாம் இன்றைக்கு படிப்படியாகச் செய்து வருகிறோம். கடைசியிலே சோஷலிஸம் வருவதற்கு நாம் செய்திருக்கிற பல்வேறு காரியங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே பல இடங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவைகளை எல்லாம் மீண்டும் நான் இங்கே எடுத்துச்சொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கூட இன்றைக்கு தொழிலாளர்கள் நல இன்ஷூரன்ஸ் திட்டம் என்கின்ற திட்டத்தைப் பார்த்தால் நம்முடைய மாநிலத்தில் தான் அவர்களுக்கெல்லாம் வரையறுக்கப்பட்ட சட்ட வரம்பு மீறி தொகையை செலவழித்திருக்கிறோம். ஓரிஸாவில் சட்ட வரம்புக்குள்ளேதான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. குஜராத்தில் 21 லட்சம் ரூபாய் சட்ட வரம்புக்கு மீறி தொழிலாளர் நல இன்ஷூரன்ஸூக்கு அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அரியானாவில் சட்டவரம்பிற்குள் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பீகாரில் ரூ. 9 லட்சம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவில் ரூ. 7 லட்சம் அதிகமாக செலவழிக்கப் பட்டிருக்கிறது. மராட்டியத்தில் சட்டவரம்புக்குட்பட்டுத்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மத்தியபிரதேசத்திலும் சட்ட

வரம்புக்குள்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் ரூ. 23 லட்சம் அதிகமாக செலவழிக்கப் பட்டிருக்கிறது. அசாமில் சட்டவரம்புக்குள் செலவழிக்கப் பட்டிருக்கிறது. கேரளாவில் சட்டவரம்புக்குள் செலவழிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில்தான் சட்டவரம்பை மீறி தொழிலாளர் நல இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் ரூ. 72 லட்சம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இந்தியாவி லேயே அதிகமாக செலவழிக்கின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறே. (கரவொலி).

முப்பத்தைந்தாயிரம் பஸ் தொழிலாளர்களுக்கு அகில இந்தியாவிலும் ஒரு பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற அரசு தமிழ்நாடு அரசு அல்லவா? அதையாவது நீங்கள் பாராட்டக்கூடாதா? பாராட்ட வேண்டும் என்ற இப்படி வேண்டி வேண்டி உங்களைக் கேட்கிறேனே, அதற்காகவாவது ஒருமுறை பாராட்டக்கூடாதா?

திரு. தங்கமணி அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். 6,7 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை வாணி மஹால் தியேட்டரில் நடைபெற்ற ஒரு பாராட்டுக் கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள். அதை மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏதேதோ அரசியல் சூழலில் எத்தனையோ விஷயங்கள் மறந்துபோய்விடுகின்றன. அன்று அவர்கள் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார்கள். ஒரு காலத்தில் கம்யூனிஸ்டு கட்சிக்கு தமிழ்நாட்டில் ஆபத்து வந்த நேரம். அந்த நேரத்தில் அடக்குமுறைக்கு ஆளாக நேர்ந்தது என்பதை எடுத்துச் சொல்லி, கம்யூனிஸ்டு கட்சிக்கு உயிரூட்டம் தந்தவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே முதன்மையானவர் கருணாநிதி என்று தங்கமணி அவர்கள் அன்று கூறினார்கள். இன்றைக்கு அவர்கள் பாராட்டா விட்டாலும், அன்றைக்குப் பாராட்டியதை நான் நினைத்துக் கொண்டு இன்றைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு மணலி அவர்கள் பாராட்டினார்கள். அவர்கள் பேசும்பொழுது நான் அவர்களை கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு சொன்னார்கள்.

நம்முடைய முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொகைதீன் அவர்களும் மிகுந்த உருக்கத்தோடு பேசினார்கள். நம்முடைய பெருமாள் அவர்கள் பேசினார்கள். சுதந்திர கட்சித் தலைவர் திரு. வெங்கடசாமி அவர்களும் பேசினார்கள். இந்த விவாதம் தொடங்கிய போது இன்றைக்குக் கொஞ்சம் சூடாக ஆரம்பித் தாலும், நண்பர் ராஜகோபால் அவர்கள் பேசும்பொழுது கொஞ்சம் சூடாக விவாதம் இருந்தாலும், பின்னால் எதிர்க்கட்சித் தலைவர்கள், தமிழரசுக் கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சித் தலைவர் உள்பட அத்தனை பேரும் பேசிய நேரத்தில் உள்ள படியே நிலைமைகளை நல்லமுறையில் எடுத்துச்சொல்லி மிகுந்த உருக்கத்தோடு பேசினார்கள்.

நம்மிடையே எவ்வளவு மனமாச்சாரியங்கள் இருந்தாலும், எவ்வளவு கட்சி வேறுபாடுகள் இருந்தாலும், எவ்வளவு கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ் சமுதாயத்திற்கு சில நல்ல காரியங்களைச் செய்வதற்காக மக்கள் எங்களைப் பணித்திருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இதுதான் கடைசி பட்ஜெட் என்று கூட சொன்னார்கள். நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஒருவேளை ஐந்தாண்டு காலம் முடியாமல் 1976இல் பட்ஜெட் வைக்காமலே கூட இந்த அரசு கவிழ்ந்துவிட வேண்டும் என்று அவர்கள் கருது கிறார்களோ என்னவோ தெரியாது. கடைசி பட்ஜெட்டாக இருக்கிற காரணத்தினால படம் எடுத்தார்கள் என்று கூட சொன்னார்கள். ஒருவரை கடைசி கட்டத்தில், சந்தேகப்படுகிற கட்டத்தில் படம் எடுப்பது என்றால்...

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : போன தடவை 1972 இல் எலக்ஷன் நடக்க வேண்டியிருந்தது. அது 1971இல் நடந்துவிட்டது. அதே மாதிரி தமிழகத்தில் இப்பொழுதும் வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படிச் செய்வார்களா இந்திராகாந்தி என்பது எங்களைவிட உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும் என்று கருதுகிறேன். அப்படிச் செய்தால் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

திருமதி த.ந. அனந்தநாயகி : அப்பொழுது இந்திராகாந்தி செய்யவில்லை. நீங்களே சென்றுதான் நாங்களும் கலைத்துவிடுகிறோம் என்று சொன்னீர்கள். இந்திராகாந்தியா செய்தார்கள்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர்கள் கலைப்பதாகச் சொன்னார்கள். பிறகு நாங்களும் கலைப்பதாகச் சொன்னோம்.

ஆகவே, தமிழ் மக்கள் பார்த்து முன்னேற்றக் கழக அரசு ஐந்து ஆண்டுகளுக்கு, 10 ஆண்டுகளுக்கு 1967லும் சரி, இப்பொழுதும் சரி எங்களிடம் பொறுப்பை ஒப்படைத்திருக் கிறார்கள், அந்தப் பொறுப்பை எங்கள் கட்சியினால் நிறை வேற்ற முடியும் என்பதை எடுத்துச்சொல்லிக் கொள்கிறேன்.

இருந்தாலும், அதே நேரத்தில் வேறுபட்ட கருத்துக்களை யெல்லாம், ஆட்சியை ஒழுங்காக நடத்திச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கிற விதத்தில் எழுதி, பேசி எங்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேறு யாருக்கும் இடம் தராமல் நாங்களேதான் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறோம் என்ற பிடிவாதம் நிச்சயம் எங்களுக்குக் கிடையாது.

ஆனால், ஒன்றைச் சொல்வேன், இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். ஏதோ தமிழ்நாட்டிலே மலையாளிகளை எல்லாம் தமிழர்கள் அடிக்கிறார்கள். துரத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட பேச்சு கூட நல்லது அல்ல. ஏனென்றால், ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையோர் இருக்கிறார்கள். கேரளத்தில் தமிழர்கள் வாழ்கிறார்கள், ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். இங்கே ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். கேரளத்தவர் வாழ்கிறார்கள். பம்பாயில் தமிழர்கள் வாழ்கிறார்கள், பம்பாயிலே தமிழர்களுக்கு, மலையாளிகளுக்கு, ஆந்திரர்களுக்கு, கன்னடியர்களுக்கு ஏற்பட்ட கதியைக் குறித்து நாமெல்லாம் கடுமையான கண்டனத்தை அரசியல் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு அத்தனை பேர்களும் தெரிவித்திருக்கிறோம்.

அதே நேரத்தில் திருவனந்தபுரத்திலே இருக்கிற தமிழர்கள் எவ்வளவு அடக்க உணர்ச்சியோடு நடந்து கொள்கிறார்களோ அதேபோல இங்கே இருக்கின்ற மற்ற மாநிலத்தவர்களும் அடக்க உணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும். அது மிக மிக முக்கியம். அதை விட்டுவிட்டு, ஏதோ இங்கே இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் மிகச் சாதாரணமானவர்கள் என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. தமிழ் நாட்டிலே மலையாளிகளுக்கு இடமுண்டு; தெலுங்கர்களுக்கு இடமுண்டு; ஏனைய சிறுபான்மையோருக்கு இடமுண்டு; குஜராத்தியருக்கு இடமுண்டு. அத்தனை பேரும் பாதுக்காக்கப் படுவார்கள்.

ஆனால், ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தென்னிந்தியாவிலே ஒரே ஒரு கேரள ராஜ்ஜியம்தான் இருக்கலாம்; இரண்டு கேரள ராஜ்ஜியங்களுக்கு இடமில்லை என்று கூறிக்கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.



உரை : 14 நாள் : 10.03.1975

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர் களும் எடுத்து வைத்துள்ள மிகச் சிறந்த வாதங்களுக்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்றிய பலரில் ஒரு சிலர் வரவு செலவுத் திட்டத்தில் புள்ளி விவரங்களில் அதிகமாகப் புகுந்து தங்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை விளக்க வேண்டுமென்றும், சில தவறுகள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன என்றும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த நண்பர் ஹாண்டே அவர்களும், எனக்கு முன்பு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்களும் பேசியபோது இது என்னுடைய இறுதி நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிட்டார்கள். அது எந்த வகையில் இறுதியாக இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாத உள்ளத்துடன் தான் கழக அரசு தன்னுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது என்கின்ற உறுதியை மாத்திரம் 'இறுதி' என்று கூறுகின்ற எனது இனிய நண்பர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

வரவு செலவுத் திட்டத்தில், நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே.டி.கே. அவர்களும், நண்பர் ஹாண்டே அவர்களும் சில ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். அதாவது,

மூலதனச் செலவு முந்தைய ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டை விடக் குறைந்துவிட்டது என்கின்ற ஒரு குற்றச்சாட்டும், இந்த ஆண்டு 41 கோடி ரூபாய் என்று இருப்பது மேலும் குறைவானது என்கின்ற ஒரு குற்றச்சாட்டும் கே.டி.கே. அவர்களாலும் ஹாண்டே அவர்களாலும் எடுத்து வைக்கப் பட்டது.

இது பற்றி ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டபோது

The budget bristles with a dangerous trend of systematic erosion into capital expenditure that may ultimately rain the development of our State.

என்று குறிப்பிட்டார்கள். திரு. தங்கமணி அவர்களும் இது நம்முடைய வளர்ச்சிக்காகக் கொடுத்த மூலதனச் செலவில் ஏற்பட்டிருக்கும் இந்த வேறுபாடு என்று நண்பர் ஹாண்டே அவர்களின் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

நம்முடைய நிதிநிலை அறிக்கை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. வருவாய்க் கணக்கு (ரெவின்யூ கணக்கு), மூலதனக் கணக்கு (காபிடல் எக்ஸ்பென்டிச்சர்), கடன்கள் என்ற மூன்று பிரிவுகளாக நம்முடைய நிதிநிலை அறிக்கை வகுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜட் தயாரிக்கப்படுகின்ற முறையே இவ்வாறுதான்.

இப்படித் தயாரிக்கப்படுகின்ற நேரத்தில் நம்முடைய 1975–76ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை எடுத்துக் கொண்டால் வருவாய்க் கணக்கைப் பொறுத்தவரை மொத்த வருவாய் 501.37 கோடி ரூபாய்; மொத்தச் செலவினங்கள் 537.50 கோடி ரூபாய்; பற்றாக்குறை 36.13 கோடி ரூபாய்.

வருவாய்க் கணக்கில் வரவுகள் தனியாகவும், செலவுகள் தனியாகவும் காட்டப்படுகின்றன. அந்த வகையிலே இந்த மொத்தக் கணக்கை நான் குறிப்பிட்டேன். மூலதனக் கணக்கு என்பது அவ்வாறு அல்ல. மூலதனக் கணக்கைப் பொறுத்த வரையில் மொத்தச் செலவுகளையும், வரவுகளையும் எடுத்துக் கொண்டு நிகரச் செலவை மாத்திரம் (நெட்) எடுத்துக் கொண்டுதான் கணக்குக் காட்டப்படும். அப்படித்தான் நாம் கணக்குப் பார்க்க வேண்டும். மூலதனக்

கணக்கில் வருவாய்கள் தனியாகக் காட்டப்படுவதில்லை. நிகரச் செலவு மட்டுமே மூலதனக் கணக்கில் காட்டப்படுகிறது. இதுதான் பட்ஜட் கணக்கு முறையாக, பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. மூலதனச் செலவுகளைப் பொறுத்தவரை மொத்தச் செலவு எவ்வளவு, மூலதன வரவுகள் எவ்வளவு என்பதைப் பார்த்த பின்னரே மூலதனம் உயர்ந்துள்ளதா இல்லையா என்பதை நாம் சரிவரக் கணக்குப் பார்க்க முடியும்.

மூலதனச் செலவுகள் என்றாலே நான் சற்று விளக்கம் தர விரும்புகிறேன். கட்டடங்கள் கட்டுதல்; அதாவது அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புகள், பள்ளிக்கூடக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், மருத்துவமனைக் கட்டடங்கள். கட்டடங்கள் அன்னியில், பாசனத் திட்டங்கள், புதிய சாலை அமைப்பு, சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், பல்வேறு அரசு நிறுவனங்களுக்காகக் கொடுக்கப்படும் பங்கு மூலதனங்கள், அரசுப் போக்குவரத்துத் துறைக்குப் புதிய பேருந்துகள் வாங்குதல், உரம் போன்ற விவசாயப் பொருள்கள் மக்களுக்கு வினியோகிப்பதற்காக வாங்கி சேமித்து வைத்தல், காடு வளர்ச்சி போன்ற இப்படிப்பட்ட பல்வேறு இனங்கள் இந்த மூலதன நிகரச் செலவு என்பதிலே அடங்கும். மூலதனச் செலவுகளுக்கு எதிராக ஆண்டுதோறும் சில வருவாய்களும் வந்து கொண்டே இருக்கும்.

குறிப்பாக, உரங்களை விற்கும்போது கிடைக்கின்ற வருவாய், இந்த வருவாய்களை மூலதனச் செலவில் இருந்து கழித்து பின்பு நிகரமாக இருப்பதை மட்டும்தான் நாம் மூலதனக் கணக்கில் காட்டுவது வழக்கம்.

உதாரணமாக, டாக்டர் ஹாண்டே அவர்கள், நிதிநிலை அறிக்கையின் பின்சேர்க்கையில் 29வது பகுதியில் கடைசி கூடுதலைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1974–75ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் மூலதனச் செலவு 56.36 கோடியாக இருந்தது. தற்போது மதிப்பீட்டில் 32.64 கோடியாகக் குறைந்துவிட்டது என்பது அவருடைய கருத்தாகும். இது தவறு என்பதுதான் என்னுடைய வாதமாகும்.

1974–75ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் மூலதன மொத்தச் செலவு 86.83 கோடி ரூபாய். இது எங்கே

இருக்கிறது? இதிலே குறிப்பிடப் படவில்லையே என்றால், தனியாகத் தந்திருக்கிற 'நிதிநிலைக் குறிப்பு' என்ற புத்தகத்தில் அந்த விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

மூலதன மொத்தச் செலவு 86.83 கோடி ரூபாய்; திருத்திய மதிப்பீடு 1974–75ஆம் ஆண்டுக்கு 99.71 கோடி ரூபாய். இதைத் துணை மானியத்திலே நான் காட்டியிருக்கிறேன். இந்த அளவில் 1974–75ஆம் ஆண்டு 86.83 கோடி ரூபாய் என்ற நிதிநிலை மதிப்பீட்டில் நம் மூலதனச் செலவு என்று காட்டியிருப்பதில் அந்த இனத்தின்கீழ் வரவாக வந்தது 30.47 கோடி ரூபாய். அதைக் கழித்துக் கொண்டால் 'நெட் எக்ஸ்பென்டிச்சர்' நிகரச் செலவு ரூ. 56.36 கோடி ஆகும்.

அதைப் போலவேதான் தற்போது திருத்திய மதிப்பீட்டில் 99.71 கோடி என்பதும் அந்த இனத்தின் கீழ் வரவு வந்து வகையில் 67.06 கோடி ரூபாய் கழிக்கப்பட்டு நிகரச் செலவு 32 கோடி என்று குறைந்ததே அல்லாமல் வேறு அல்ல.

இந்த ஆண்டு 1975–76இல் மூலதன மொத்தச் செலவுக்காக 103.80 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நிர்ணயித்திருக்கிறோம். இந்த இனத்தின்கீழ் வரவு 62.04 கோடி என்ற அளவிற்கு வரவு வந்து 41.76 கோடி ரூபாய் என்ற அளவுக்கு மூலதன நிகரச் செலவு அமைகிறது. ஆகவே, நம்முடைய மூலதன மொத்தச் செலவு 86 கோடியிலிருந்து 99 கோடியாகத் திருத்தப்பட்டு, தற்போது 103 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வருகிற திருத்த மதிப்பீட்டில் இன்னும் அதிகமாகுமே தவிர, அது குறையவில்லை என்ற அவர் களுடைய சந்தேகத்தைப் போக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

மூலதனக் கணக்கில் மொத்தச் செலவு 1974–75 நிதி யாண்டில் சுமார் 87 கோடி ரூபாய் என்று கணக்கிட்டபடி அது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் ஆக வளர்ந்து 1975–76இல் 104 கோடி ரூபாயாக அதிகமாகி யுள்ளது. திருத்தப்பட்ட மதிப்பீடு அதைவிட அதிகமாக இருக்கும். ஆகவே மூலதனச் செலவுகள் உண்மையில் வளர்ந்துள்ளதே தவிர, மற்றவர்கள் இங்கே குறிப்பிட்டது

போல் குறையவில்லை என்பதை இந்த விளக்கத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்வேன்.

அடுத்தபடியாக திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றித் தம்முடைய முன் பகுதியிலே குறிப்பிட்ட போது, என்.ஜி. ஓக்களுக்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரை உயர்வு கிடைக்குமென்று சொல்கிறார்கள், அதனால் 24 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள், எப்படி என்று தெரியவில்லை, வறட்சிக்கு 30 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிற நேரத்தில் 24 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுக்காகத் தருவது என்று அரசு அறிவிக்குமானால் பொது ஏற்படுத்தாதா அரசாங்க ஊழியர்கள் மீது ஒரு தவறான எண்ணத்தை மக்களுக்கு என்ற வருத்தத்தை அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். அதற்குச் சரியான கணக்கு வேண்டுமென்றும் திரு. கே.டி.கே. அவர்கள் கேட்டார்கள்.

நான் தற்போது அறிவித்த அகவிலைப் படி விகிதங்கள் மூலம் அரசாங்க அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள். அதில் யார் யார் எவ்வளவு பயன் பெறகிறார்கள் என்ற கணக்கைப் பார்க்கவேண்டும். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு, பொங்கல் அன்று அகவிலைப் படிகளை உயர்த்தி சில மாற்றங்களைச் செய்து அரசின் சார்பில் ஒரு அறிக்கையினைப் பிறப்பித்தோம். அது, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்றும் பல தரப்பட்ட ஊழியர்களுக்கு மனநிறைவைத் தராத காரணத்தினால் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டு மென்று என்னை அவர்கள் சந்தித்துப் பேசிய போது சொன்னார்கள். அதன் பேரில் ஜனவரியில் செய்யப்பட்ட அந்த அறிவிப்பை அடுத்த இரண்டொரு மாதங்களுக்குள்ளாக மாற்றி அமைத்திருக்கிறோம். எப்படி 24 கோடி ரூபாய் வர முடியும், 30 கோடி ரூபாய்களை வறட்சிக்காகச் செலவழிக்கும்போது 24 கோடி ரூபாய் அரசு அலுவலர்களுக்கு அதிகமாகத் தருவது என்று சொல்வது, பழி போடுவதாகாதா என்ற பாதத்திற்கு நான் தருகிற பதில் 100 முதல் 180 ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறவர்கள் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் இந்த அறிவிப்பின் மூலமாக அதிகம் பெறுகிறார்கள். அப்படிப் பெறகிறவர் களுடைய தொகை

1 லட்சத்து ஏழாயிரம் ஆகும். அவர்களுக்கு ஆகும் மொத்த அதிகச் செலவு 2 கோடியே 57 லட்சம் ரூபாய். 185 முதல் 210 ரூபாய் வரை சம்பளம் பெறுகிறவர்கள் மாதம் ஒன்றுக்குக் கூடுதலாக 20 முதல் 30 ரூபாய் வரை பெறுகிறார்கள். அப்படிபயன் பெறுகிறவர்களுடைய எண்ணிக்கை 1 லட்சத்து 43 ஆயிரம் பேர்களாகும். அவர்களுக்கு அதிக மொத்தச் செலவு 4 கோடியே 29 லட்சமாகும். ரூபாய் 215–ம் அதற்கு மேலும் சம்பளம் பெறுகிறவர்கள் மாதம் ஒன்றுக்கு இன்றைக்குக் கூடுதலாக 30 ரூபாய் பெறுகிறார்கள். அப்படிப் பயன் பெறுகிறவர்களுடைய மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 38 ஆயிரம் ஆகும். அதற்கு ஆகிற மொத்தச் செலவு 12 கோடியே 17 லட்சமாகும். உள்ளாட்சி நிறுவன ஊழியர்களுக்கு ஆகும் செலவு 3 கோடியே 17 லட்சம் ரூபாயாகும். ஆக, மொத்தம் 22 கோடியே 20 லட்ச ரூபாய். அது அன்னியில் ஏற்கெனவே அளிக்கப்பட்ட அக விலைப்படி வீதங்களை பென்ஷன், கிராச்சுவிடி. தரும் பொருட்டு சம்பளத்தோடு சேர்த்து கணக்கிடலாம் என்ற முடிவின்படி அரசுக்காகும் கூடுதல் செலவு ஒரு கோடியே 50 லட்ச ரூபாயாகும். 54 ஆயிரம் கிராம அலுவலர்களுக்குக் கூடுதல் சிறப்பு ஊதியம் தருவதால் ஆண்டுக்கு ஆகும் கூடுதல் செலவு 46 லட்ச ரூபாயாகும்.

ஓய்வூதியம் பெறும் 62 ஆயிரம் பேர்களுக்குக் கூடுதலாக 5 ரூபாய் அதிகமாக அகவிலைப்படி. தருவதால் பொங்கல் நேரத்தில் அறிவித்த வகையில் – அரசுக்கு ஆகும் கூடுதல் ஆண்டுச் செலவு 37 லட்சமாகும். ஆக மொத்தம் 24 கோடியே 53 லட்ச ரூபாய் இந்தக் கணக்கின்படி ஆகிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

30 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவாகும் போது 24 கோடி ரூபாய் அரசாங்க ஊழியர் களுக்காகச் செலவிடப்படலாமாவென்று மக்கள் அவர்கள்மீது வருத்தப்படுவார்கள் என்று திரு. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னது சரியல்ல. அப்படி இருந்த போதிலும் மக்கள் வருத்தப்படமாட்டார்கள். வறட்சி காரணமாக கஷ்டப்படு கிறவர்களில் அரசு ஊழியர்களும் இருக்கின்ற காரணத்தினால் 24 கோடிக்காக மக்கள் வருத்தப்பட

மாட்டார்கள். இதிலே தவறில்லை என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

திரு. கே.டி.கே. அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள், சேல்ஸ் டாக்ஸ் மூலமாக 138 கோடி ரூபாய் கிடைக்குமென்று சொன்னார்கள். ஆனால் ரிவைஸ்டு எஸ்ட்டிமேட்டில், திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 174 கோடியாக உயர்ந்திருக்கிறது, 36 கோடி ரூபாய் அதிகமாக கிடைத்திருக் கிறது. அதே மாதிரி ஸ்டாம்ப் ரெஜிஸ்ட்ரேஷனில் 23½ கோடி ரூபாய்க்குப் பதிலாக 28½ கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. வாகன வரியில் இருபத்தி மூன்றே முக்கால் கோடியை எதிர்பார்த்தோம். ஆனால் கிடைத்தது 33 கோடி. செலவினங்களை எடுத்துக்கொண்டாலும் கல்விக்காக 108 கோடி என்பது 112 கோடியாக ஆகியிருக்கிறது. இப்படிச் செலவினங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, வரவினங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, இவைகள் சரியான வகையில் செய்யப்படவில்லை என்று கே.டி.கே. அவர்கள் கூறினார்கள். விற்பனை வரி 1974-75 மதிப்பீட்டின்போது 139 கோடி என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி அது 175 கோடியாக மாறியது. அதனால் அதிகமாக வந்தது 36 கோடி என்பதை ஒத்துக் கொள்கிறேன். இந்த 36 கோடி, உயர்வாக வந்தது என்றால் என் வந்தது என்று யாரும் கேட்கமாட்டார்கள், எப்படி வந்தது இந்தக் கணக்கு என்று திரு. கே.டி.கே. கேட்டதன் காரணமாக, நான் அவர்கள் தவறாகச் சொன்னார்கள் என்று கருதவில்லை, விளக்கம் அளிப்பது நிதித் துறை பொறுப்பேற்றிருக்கிற என் கடமை என்ற வகையில் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இந்த ஓராண்டுக் காலத்தில் ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வு ஒரு காரணம். விற்பனை வரி விலைவாசி உயருகிற நேரத்தில் அதிகமாகும் என்பதை மறந்துவிடக் கூடாது. இது தவிர பொருளாதார வளர்ச்சி, இது மாத்திரமல்லாமல் முனைப்பான விற்பனை வரி வசூல் – கெடுபிடியான அல்ல – பல முனை விற்பனை வரியை 3½ சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக மாற்றி அமைத்தது, ஆகஸ்டில் இதைச் செய்தோம். இவையெல்லாம், இந்த விற்பனை வரி 36 கோடி ரூபாய் அளவிற்கு உயர்வதற்குக் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

திரு. கே.டி.கே. இன்னொன்றைக் கேட்டார்கள், முத்திரைத் தாள்களில் 23.50 கோடிக்குப் பதிலாக திருத்திய மதிப்பீட்டில் 28.50 கோடியாக உயர்ந்திருக்கிறது, இதற்குக் காரணம் என்னவென்று கேட்டார்கள். இதற்குக் காரணம் நகரங்களிலும், பிற சுற்றுப் புறங்களிலும் வீட்டு மனைகளின் விலை ஏற்றம், நிலங்களின் மதிப்பில் ஏற்றம், நில உச்ச வரம்புச் சட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருவதால் சொத்து மாற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவையாகும். இவைகளின் காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

வாகன வரியில் 23 கோடியாக இருந்தது 33 கோடியாக திருத்திய மதிப்பீட்டில் ஆகியிருக்கிறதென்று சொன்னார்கள். இந்த உயர்வுக்குக் காரணம் வாகனங்கள் அதிகமானது என்பது ஒன்று. இரண்டாவது 1974 அக்டோபர் முதல் சீட்டிற்குக் கூடுதலாக நாம் வரியை உயர்த்தியிருக்கிறோம். அதன் காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது. திரு. கே.டி.கே. அவர்கள் வருவாய் இனங்களிலே மட்டுமல்லாமல் செலவினங் களிலே இப்படி வித்தியாசங்கள் இருக்கலாமென்று கேட்டார்கள். செலவினங்களில் கல்விக்காக 1974–75 நிதிநிலை மதிப்பீட்டில் 108.52 கோடியாக இருந்தது, திருத்திய மதிப்பீட்டில் 112.50 கோடியாக உயர்ந்து இருக்கிறதே என்று கேட்டார்கள். இதற்கும் காரணங்கள் உண்டு. 1.10.1974இல் குடும்பப் பாதுகாப்பு திட்டத்திற்காக அரசு ஊழியர்கள் செலுத்தி வந்த தொகையை அரசே செலுத்த முன் வந்தது. இப்படி அரசு ஊழியர்களுக்குச் செலுத்தியபோது அதிலே ஆசிரியர்களும் உட்படுவார்கள். அந்த வகையிலும், மதிய உணவுத் திட்டத்திற்காக அரசு தரும் பங்கை மேற்கொண்டு உயர்த்தியதன் காரணமாக இரண்டு கோடி ரூபாய் அதிகச் செலவினம் ஏற்பட்டது. அது அன்னியில் பல கல்லூரிகளுக்கு மானியங்களையும் உயர்த்தி வழங்க வேண்டி வந்தது. இவ்வாறு நிதி நிலை வரவு–செலவுகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளுக்காக துணை மதிப்பீடுகளின் வாயிலாக அவ்வப்போது சட்ட மன்ற ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வேன்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, வாகன வரி பொறுத்த வரையில் சீட்டின் அடிப்படையில் கணக்குப் போடுகிறார்கள். எத்தனை ஊர்திகள் ஓடுகின்றன, இவைகளில் எவ்வளவு சீட்டுக்கள் உள்ளன என்ற விவரங்கள் தெரியும். ஆகவே, ஏறக் குறைய அந்த வரியின் மூலமாக இவ்வளவு எதிர்பார்க்கிறோம் என்று சொல்லுகிற போது அப்படிப் போடக் கூடிய கணக்கில் இவ்வளவு பெரிய வித்தியாசம் வரக் கூடியதைப் பார்த்தால் வியப்பாக உள்ளது. இதற்கு என்ன காரணம் என்று விளக்கத்திலிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை. டாக்ஸைக் கூட்டும் போது அப்ராக்ஸிமேட்டாக இவ்வளவு வரும் என்று தெரியும். அதற்கும் மேலே இவ்வளவு வருகிறதென்று சொன்னால் கணக்குப் போட்டு சட்டசபைக்குச் சொல்கிற தகவல் தவறான தகவலா, அல்லது குறைத்துக் காட்டி கூடுதலாகப் பிறகு காட்டவேண்டுமென்ற முறையில் போடப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வரவு–செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகிற போது ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வரவு வைக்கப்படுகிறது. இந்த நிதி ஆண்டில் அதற்குப் பிறகு வரி கூடுதலாக ஆக்கப்படுகிற போது கூடுதலான தொகையை ரிவைஸ்ட் எஸ்ட்டிமேட்டில் கொண்டு வர முடியுமே தவிர, ஒரிஜினல் பட்ஜெட் எஸ்ட்டிமேட்டில் கொண்டு வர முடியாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைத்தான் நான் சொன்னேன். நாம் மதிப்பீட்டில் 23 கோடி ரூபாய் வாகன வரி மூலமாக வரும் என்று நிர்ணயித்து, அதற்குப் பிறகுதான் 1974ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சீட்டுகளுக்கு வரி உயர்த்தியிருக்கிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அதன் மூலமாகக் கிடைத்த தொகைதான் திருத்த மதிப்பீட்டில் 33 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னேன்.

ஆகவே, இந்த வரவுசெலவுத் திட்டம் முழுவதும் ஏதோ செயலாக்க ரீதியில் அமையவில்லை என்று திரு. கே.டி.கே. அவர்கள் சொன்னார்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி : ஏற்கெனவே போட்ட எஸ்ட்டிமேட் படி, ரிவைஸ்ட்டு எஸ்ட்டிமேட்டிலும் 23 கோடி

தான் வரி, புதிய வரி போட்டதால்தான் 10 கோடி அதிகமாக வரி வந்தது என்று சொன்னால் அது பட்ஜெட் தயாரிக்கும் முறை ஒழுங்கு என்று வரும். அப்படியல்லாமல், ரிவைஸ்ட் எஸ்ட்டிமேட் போடுவதற்குக் காரணம் உண்டு, இங்கே வந்து ஒப்புதல் பெற்று இருக்கிறோம் என்று சொல்வது வேறு. நான் தெரிந்து கொள்ள விரும்புவது, முதலில் போட்டு இருந்த 23 கோடி வருமானம் தான் முதலில் இருந்த வரியின் அடிப்படையில் வந்திருக்கிறது, பின்னால் புதிய வரி போட்டதால்தான் 10 கோடி அதிகமாக வரி கிடைத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : ஒன்ஸ்மோர் பாயின்ட் டூ கிளாரிபை. கூடுதல் வரி போடும் போது 10 கோடி வரும் என்று சொல்லியிருக்கிறீர்களா, குறைவாக வரும் என்றுதானே சொல்லியிருக்கிறீர்கள்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஏதோ சில இனங்களில் வரி அதிகமாக எதிர்ப்பார்ப்போம், குறைவாக வரும், குறைவாக எதிர்ப்பார்ப்போம், அதிகமாக வரும். அப்படி அதிகமாகக் கிடைத்தது என்பதால் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்ல முடியாது.

ரூ. 23 கோடி நிதி நிலை மதிப்பீட்டில் என்று, சொல்கிற போது. சீட்டுக்கு வரியை உயர்த்தக்கூடிய நிலை இல்லை. வரி உயர்த்தியதால் 23 கோடி ரூ. 33 கோடியாக ஆகி இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. கே.டி.கே. அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த பட்ஜெட் முழுவதுமே ஏதோ ஒரு 'வெல்பேர் ஆர்கனைசேஷன்' என்ற அளவுக்கு அமைந்து இருக்கிறதே அல்லாமல் இதிலே பெரிய சாதனைகள் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

எனக்கு நினைவு, கம்யூனிஸ்ட் சித்தாந்தம் கூட, மாநிலங்கள் வெல்பேர் ஸ்டேட்களாக இருக்கவேண்டும், போலீஸ் ஸ்டேட்களாக இருக்கக்கூடாது. அது கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைத் தத்துவம் என்று கூட நான் கருதுகிறேன். ஒரு வேளை நான் கம்யூனிஸ்ட் கட்சி

உறுப்பினனாக இல்லாததால், நான் சொல்கிற இந்த வாதம் தவறாக ஆகிவிட முடியாது.

கண்ணொளி வழங்கும் திட்டம், சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், இவைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு அரசின் சாதனைகளாக நீங்கள் முழங்கிக் கொண்டு இருக்கிறீர்களே, வேறு என்ன சாதனை செய்தீர்கள் என்று கே.டி.கே. அவர்கள் கேட்டார்கள்.

அவர்களுடைய நினைவிற்கு, 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்ற இருந்ததை 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று ஆக்கிய அந்தத் தீர்மானம், வரவில்லை என்று கருதுகிறேன்.

அதைப் போலவே குடியிருப்பு மனைச்சட்டத்தின் மூலம், ஏறத்தாழ 2 லட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் மனைகளைச் சொந்தம் ஆக்கிய சாதனை, அவர்களுடைய நினைவுக்கு வரவில்லை என்று கருதுகிறேன்.

பஸ்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 1967இல், 17% ஓடிக்கொண்டிருந்த பஸ்கள்தான் தேசீயமயமாக்கப்பட்டன. இன்றைக்கு 48% பஸ்கள் தேசீயமயமாக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள பஸ்களையும் தேசியமயமாக்குவதற்கும் நாம் முயற்சிகளை எடுத்தும் அவர்கள் நீதி மன்றத்திற்கு வழக்குகளைக் கொண்டு சென்றிருக்கிற காரணத்தால் அந்த முயற்சி முற்றுப் பெறாமல் இருக்கிறதேயல்லாமல் இந்தத் தேசீயமயத்திட்டத்தை சாதனை இல்லை என்று திரு. கே.டி.கே. அவர்கள் கருதுகிறாரா' என்று புரியவில்லை.

அதைப்போலவே குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம், அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டித்தரும் திட்டம் – இதுவரையில் கட்டித் தரப்பட்டிருக்கும் வீடுகள் 15,000 மீனவர்களுக்கும் அரிசனங்களுக்குக் கட்டித் தரப் பட்டிருப்பது போல் வீடு கட்டித் தர அறிவித்து இருக்கிற புதிய வீட்டு வசதித் திட்டம், புகு முக வகுப்பு வரை இலவசக்கல்வி, மாநிலம் முழுவதும் எல்லா கிராமங்களுக்கும் மின்

விளக்குகள், 1,500 – மக்களுக்கும் குறைவாக வாழ்கிற கிராமங்களைக் கூட இணைக்க சாலை வசதிகள், 2 லட்சம் பம்ப் செட்களை 7 லட்சம் பம்ப் செட்களாக்கி இருக்கிற இந்தக் காரியங்களெல்லாம் திரு. கே.டி.கே. அவர்களுக்கு வெறும் 'வெல்போர் நடவடிக்கைகளாகத் தெரிவதற்காக அல்லது இன்னொரு நண்பர் சொன்னதைப்போல், ஒரு அறநிலையம் செய்கின்ற காரியங்களாக்கப்பட்டதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஆனால், அண்ணா வழி அற வழிதான்; அந்த அறவழி அரசுதான் நடைபெறுகிறது என்று திரு. கே.டி.கே. அவர்கள் சொல்வார்களானால் அப்படிப்பட்ட வயதான மூத்தவர்களிடமிருந்து அந்த வாழ்த்தைப் பெறுவதில் நான் உள்ளபடியே நன்றி உடையவனாக இருக்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : அது பற்றி ரொம்பவும் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். இப்போது சில விஷயங்களைச் சொன்னீர்கள். இப்போது பெரிய மடங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு 4½ லட்சம் ஏக்கருக்கு திட்டமாக நிலங்கள் சொந்தமாக இருக்கிறதே, அந்த மடத்திற்குச் சொந்தமான நிலங்களை, ஏற்கெனவே, மசோதா கொண்டு வந்திருக்கிறோமே அந்த மசோதா மூலமாக குத்தகைய விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தால், விவசாயப் பெருங்குடி மக்களும், உழவர்களும் பயனடைவார்களே, அப்படிப்பட்ட ஆலோசனை வரவில்லை. அது குறித்துச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உழவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற மசோதா இந்த மன்றத்தில் விரைவில் விவாதிக்கப்படும் என்று கருதுகிறேன். அப்போது இது பற்றிய கருத்துக்களை நாம் மிக விரிவாக ஆராயலாம் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் என்னுடைய பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் மாரிமுத்து – ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் வருவாய்க் கணக்கில், பொருளாதார வளர்ச்சிப் பணிகள் என்ற பெரும் தலைப்பின் கீழ் உள்ள மொத்த நிதி ஒதுக்கம் சென்ற ஆண்டு 147 கோடியாக

இருந்தது, இந்த ஆண்டு 131 கோடியாக நாம் செலவழித்திருக்கிறோம், பொருளாதார வளர்ச்சிக்கு இது ஏற்றது அல்ல என்று குறிப்பிட்டார்கள். 147 கோடியாக இருந்தது 131 கோடியாகக் குறைந்திருக்கிறது என்பது சரியான வாதம்தான். ஆனால் ஒதுக்கீடுகள் குறைந்துள்ள இனங்களில் அரசு நேரடியாகச் செலவு செய்வதற்குப் பதிலாக அரசு சார்புடைய நிறுவனங்களின் சார்பாக செலவை இந்த ஆண்டு மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நான் நண்பர் மாரிமுத்து அவர்களின் சந்தேகத்திற்கு விளக்கமாகத் தர விரும்புகிறேன்.

எடுத்துக்காட்டாக சொல்லவேண்டுமேயானால், 1974–75ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் 147 கோடி ரூபாயில் போக்குவரத்துப் பணிகளுக்காக 12.98 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருந்தோம். செலவு செய்தோம். 1975–76இல் அந்த 12.98 கோடிக்கு பதிலாக 8.08 கோடி என்கிற அளவுதான், கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் குறைவாகச் செலவு செய்கிறோம். இதற்குக் காரணம் என்னவென்றால், அரசு போக்குவரத்துத் துறையிலேயுள்ள, மாவட்ட வழித்தடப் பேருந்துகள் அனைத்தும் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் நாம் மாற்றியிருப்பதால் மதிப்பீட்டில் கணிசமான அளவிற்குக் குறைவு ஏற்பட்டு இருக்கிறது.

அது மாத்திரமல்ல, மதுரை பால்வளத் திட்டத்தின் பணிகளை தமிழ்நாடு பால்வழங்கும் நிறுவனத்திற்கு மாற்றியதால் பால்வழங்க திட்டம் என்ற மானியக் கோரிக்கையில் 80 லட்சம் ரூபாய் குறைந்து இருக்கிறது.

அது மாத்திரமல்ல, நடப்பு ஆண்டில் மின் வாரியத்திற்கு 10 கோடி ரூபாயை நாம் மானியமாக வழங்கியிருக்கிறோம். மின் வாரியம் இன்று இழப்பிலே பணியாற்றிக் கொண்டு இருக்கிறது. என்பதை அனைவரும் அறிவோம். காரணம் மின் வாரியத்துறையின் மூலமாக மின் கட்டணங்களை அதிகமாக வசூலிக்க வேண்டுமென்று மத்திய அரசு எடுத்துச் சொல்கிறது. மத்திய அரசின் அறிவுரைகளை யெல்லாம் நாம் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம், பிற மாநிலங்களில் விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 26 காசு, 20

காசு, 18 காசு, 30 காசு என்று இருக்கிறது. ஆனால் நம் மாநிலத்தில் நாம் இன்றைக்கு 12 காசுக்கு மேல் உயர்த்த முடியாத நிலையில் இருக்கிறோம். விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இந்த முடிவை மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் அந்த 147 கோடி ரூபாயில் நாம் 10 கோடி ரூபாயை மானியமாகவும் வழங்கியிருக்கிறோம். இவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் அரசு சார்புள்ள மற்ற நிறுவனங்களுக்கு நாம் தொகையை மாற்றிக் கொடுப்பதின் மூலமாக பொருளாதார வளர்ச்சி குறைந்து விட்டது என்பது அல்ல, அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் 1974–75ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 2.56 கோடி துண்டுவிழும் என்று எதிர் பார்க்கப்பட்டது என்று கூறி தற்போது 15.83 கோடி ரூபாய் துண்டு விழும் என்று கூறப்படுகிறது. இதற்கான காரணங்கள் சரியில்லை, விற்பனை வரி மூலமாக ரூ. 40 கோடி கூடுதலாக வரவு வந்திருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொன்னதில் சிலபுள்ளிகள் தவறாக இருந்தாலும் அதாவது 15 கோடி என்பதை 11 கோடி என்றும், 40 கோடி என்பதை 36 கோடி என்றும் மாற்றிக் கொள்ளவேண்டும்.

அவர்களுடைய வாதம் என்னவென்றால் இப்படி விற்பனை வரி 36–40 கோடி வந்து இருக்கும் போது, 2 கோடி ரூபாய் எப்படி 11 கோடி ரூபாயாக உயர்ந்து துண்டு விழுந்து இருக்கிறது என்று வாதிட்டார்கள். அதற்கு நான் அளிக்கின்ற பதில், விற்பனை வரியில் 36 கோடி ரூபாய் நமக்கு உயர்வு ஏற்பட்டது. மற்றத் துறைகளில் நமக்குக் கொஞ்சம் அதிகமாக வரவினங்கள் கிடைத்தது என்றாலும், வரவு இனங்களில் ஏற்பட்ட குறைவுகளை நாம் மறந்துவிடக்கூடாது. மத்திய அரசிடமிருந்து மத்திய அரசு போடுகிற வரிகளிலிருந்து நாம் எதிர்பார்த்த பங்கில் ஏறத்தாழ 12 கோடி ரூபாய் குறைந்து இருக்கிறது. வட்டி வரவுகளில் நம்முடைய அரசு தந்துள்ள கடன்களுக்கு வரக்கூடிய வட்டி வரவுகளில் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் அளவுக்கு குறைந்து இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து 150 கோடி ரூபாய்க்கு திட்டத்திற்காக நாம்

வாதிட்டு, அவர்கள் கொடுத்து இருக்கும் தொகை போதாது என்று மேலும் தரவேண்டுமென்று 15 கோடி ரூபாய்க்கு அவர்களிடம் வாதிட்டுக் கொண்டு இருக்கிறோம்.

பிறகு 11 கோடி ரூபாயாவது வரும் என்று எதிர் பார்த்தோம், வரவில்லை. அதிலே 11 கோடி ரூபாய் அளவுக்கு குறைந்து விட்டது. இப்படி இந்த வரவினங்கள் குறைந்தது மட்டும் அல்ல. செலவினங்களும் உயர்ந்துவிட்டது. அவைகளைப் பற்றி அவ்வப்போது துணைமானியங்களில் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. கல்வித்துறையில் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் அதிகம் செலவு ஆகியிருக்கிறது. மருத்துவத் துறையில் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அதிகச் செலவு ஆகியிருக்கிறது. வறட்சித் துயர் தணிப்பு பணிகளுக்காக 8½ கோடி ரூபாய்க்குமேல் அதிகச் செலவாகியிருக்கிறது. வேளாண்மைத்துறையில் 1 கோடி 80 லட்சம் ரூபாய் அதிகம் செலவினத்தில் உயர்ந்திருக்கிறது. பாசனத்துறையில் 4 கோடி 30 லட்சம் ரூபாய் உயர்வு. சாலை களில் 2 கோடி 46 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அது அன்னியில் வறட்சி காரணமாக வரிச் சலுகைகள் அளித்து இருந்தோம். அதிலும் நமக்கு வரவேண்டிய வருவாய் குறைந்திருக்கிறது. இந்தக் காரணங்களால்தான் இரண்டு கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்பட்டு துண்டுவிழும் நிலைமை 11 கோடி ரூபாய் அளவு உயர்ந்தது என்பதை திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு விளக்கமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய அம்மையார் திருமதி. சத்தியவாணிமுத்து அவர்கள் பட்ஜெட் பற்றி பேசுகிற நேரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 3.97 கோடியும் மலைஜாதி மக்களுக்காக ஒதுக்கப்பட்ட 0.14 கோடியும் மத்திய அரசின் வற்புறுத்தலால் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு இந்த அளவு வற்புறுத்தவில்லை என்றால் நிதி ஒதுக்கீடு இன்னும் மிக குறைந்த அளவு இருந்திருக்கும் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில்தான் திட்டச் செலவு என்றால் என்ன, திட்டத்தில் சேராத செலவு என்றால் என்ன என்ற பிரச்சினைகள் எல்லாம் எழுந்தன: திட்டச் செலவு என்பது நான்காவது ஐந்தாண்டு

திட்டம் என்று வைத்துக் கொள்வோம். திட்டச் செலவு என்பது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்காவது 'ஐந்தாண்டு திட்டத்தை வரையறுத்து மத்திய அரசு திட்டக்குழுவோடு பேசி இன்னின்ன திட்டங்களுக்காக இன்னின்ன தலைப்புகளில் எங்களுக்குத் தொகை அளிக்க வேண்டும் என்று கேட்கிறோம். அந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஐந்தாவது ஆண்டு முடிகிற வரையில் அதற்காக ஒதுக்கப்படுகிற தொகையெல்லாம் திட்டச் செலவு ஆகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஐந்தாவது ஆண்டு முடிந்து ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் தொடங்கும் போது முதலில் தொடங்கப்பட்ட திட்டங்களின் வேலை பாக்கி இருந்தால் அதற்கு ஒதுக்கப்படுகிற தொகை திட்டத்தில் சேராத செலவுகள் ஆகும். அதுதான் திட்டச்செலவு. திட்டம் சேராத செலவு. இது அன்னியில், மாநில அரசின் சார்பாக போடப்படுகின்ற திட்டத்தில் சேராத செலவுகளும் உண்டு. இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு இந்த விவகாரத்தை நாம் பார்க்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக 1975–76இல் தாழ்த்தப்பட்டோர் நலம் என்ற தலைப்பில் கீழ் நான் வைத்துள்ள அறிக்கையில் திட்டத்திற்கு அப்பாற்பட்ட வளர்ச்சி 'பணிகளுக்காக தாழ்த்தப் பட்டவர்களுக்காகச் செலவு செய்ய இருப்பது 6 கோடியே 41 லட்சம். திட்டத்தின் கீழ் செலவு செய்ய இருப்பது 3 கோடியே 97 லட்சம். மத்திய அரசு முழுமையாகப் பொறுப்பு ஏற்று நமது அரசின் மூலம் நடத்தும் திட்டங்களுக்காகச் செலவு மிச்சம் இருப்பது 50 லட்சம். ஆக மொத்தம் 10 கோடியே 88 லட்சம் என்று நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். மாநில ஆண்டுத் திட்டத்தை மத்திய திட்டக்குழுவோடு கலந்து பேசி நாம் அவ்வப்போது முடிவு செய்கிறோம். மத்திய திட்டக்குழு மாநில திட்டத்தின் அளவு எந்த அளவில் இருக்கவேண்டும் என்றுதான் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் மத்திய அரசிடமிருந்து மொத்தமாகக் கிடைக்கும் உதவியின் அளவையும் குறிப்பிடுகிறது. உங்களுடைய வருவாய் (resources) என்ன, உங்களுடைய வருவாயை எப்படிப் பெருக்குவீர்கள், வரிகளை அதிகமாக்குவதாலோ அல்லது பல்வேறு வருவாய் இனங்களைப் பெருக்குவதாலோ உங்களுடைய வருவாய்

எவ்வளவு இருக்கும் என்றெல்லாம் கேட்டு திட்டத்திற்கு அனுமதி கொடுக்கிறார்கள். நாம் 160 கோடி கூட போட்டுக் கொள்ளலாம். நாம் 140 கோடி என்ற அளவுக்கும் இணங்கலாம். ஆனால் அதிலே நாம் 143 கோடி என்று இந்த ஆண்டு இணங்கி இருக்கிறோம் என்றால் அதில் மத்திய அரசு மானியமாகவும் கடனாகவும் வழங்குகிற தொகைதான் (Central assistance)143 கோடியில் மத்திய அரசு வழங்குகிற மானியம் கடன் உள்பட மொத்தத் தொகை 41 கோடியே 15 லட்சமாகும். மத்திய திட்டக்குழுவில் நான் பேசும்போது தமிழ்நாட்டு மக்களுக்காக...

திருமதி. சத்தியவாணிமுத்து : நான் அன்றைக்குக் கூறியதெல்லாம் 143 கோடி மத்திய அரசு வற்புறுத்தியதன் பேரில் மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகளோ அமைச்சர்களோ ப்ளானிங் கமிஷனிடம் விவாதிக்கும் போது அவர்கள் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட தொகை. அதை நான் இப்போதும் இல்லை என்று சொல்லவில்லை. எனக்குத் தெரிந்தவரை தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக இங்கே இருக்கிற அதிகாரிகள் சென்று கேட்டது 13 கோடி ரூபாய். ஆனால் ப்ளானிங் கமிஷன் ஒத்துக் கொண்டது 19 கோடி ரூபாய். 41.15 கோடி மத்திய அரசின் நிதி உதவியாகத் தரப்படுகிறது. அந்தப் பணம் 143 கோடி ரூபாயில் சேரும் என்றால் தனியாக அதை ஏன் இனம் பிரித்து தாழ்த்தப்பட்ட மக்களின் கீழ் காட்டவேண்டும். அதைத்தான் நான் திருப்பிக் கேட்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எல்லாம் மத்திய அரசுதான் செய்கிறது என்ற தவறான பிரச்சாரத்தை நாட்டு மக்களிடையே சிலர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பேசுவதாகக் கூறிக்கொண்டு பேசிய காரணத்தால்தான் அவைகளை தனித் தனியாகப் போட வேண்டியிருக்கிறது. மறுபடியும் ஏதோ அவர்கள் வலியுறுத்தியதால்தான் நாங்கள் திட்டமாக ஆக்கினோம் என்று சொல்லுவது தவறு. 13 கோடி கேட்டோம் 19 கோடி தருவதாக அவர்கள் கொடுத்தார்கள் என்றெல்லாம் சொல்வது மிகமிகத் தவறு. முழுமையான தவறாகும். நம் 143 கோடி திட்டத்தில் பல தலைப்புகள்

வருகின்றன. நான் இன்னும் சொல்வேன் மத்திய சர்க்கார் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் என்று பிரிப்பதே கிடையாது. நம் மாநிலத்தில்தான் பிற்படுத்தப்பட்டவர் நலனுக்காக ஒரு தனி இலாகாவை வைத்து அவர்களுடைய நலன்களைக் கவனித்து வருகிறோம்.

Backward Community என்றாலே மத்திய சர்க்காரில் தாழ்த்தப்பட்டவர்கள் நலனுக்காக என்ற அளவுக்குத் தான் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். நாம் நிலைமைகளை எடுத்து அவர்களிடம் சொல்லி அவர்களிடத்தில் கேட்டது தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நலன் ஆகிய இரண்டிற்கும் நாம் கேட்டது 4.56 கோடி ரூபாய் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இது திட்டத்தில் 143 கோடி ரூபாயில் கேட்ட தொகை. ஆனால் மத்திய திட்டக்குழு செலவிட நமக்கு அறிவுரை கூறியிருப்பது 3 கோடி ரூபாய். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செலவிட மத்திய அரசு ஆலோசனை கூறியது 3 கோடி ரூபாய். ஆனால் திட்டத்தின் அடிப்படையில் நாம் ஒதுக்கி இருப்பது அந்த மொத்தம் 3 கோடிக்கு மாறாக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 3.97 கோடியும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக 64 லட்சமும் ஆக மொத்தம் 4 கோடி 61 லட்சம் ரூபாய். அவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். நான் ஏற்கெனவே மொத்தமாக 10 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்றும் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் பின்தங்கிய மக்களுக்காக என்றும் குறிப்பிட்டு இருக்கிறேன். அது அன்னியில் அரிசனங்களுக்காக வீட்டு வசதி செய்து தருவதற்காக ஏறத்தாழ 3 கோடி ரூபாயில் 15 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த மாதத்தோடு அந்த வேலைகள் முடிவடைகின்றன. ஒரு லட்சம் வீடுகள் முதல் கட்டமாகக் கட்டுவதற்கு நாம் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே ஏதோ மத்திய சர்க்கார் வலியுறுத்தி அதை நாம் பெறத் தவறிவிட்டோம் என்று கூறுவது சரியான வாதமாகாது.

(திருமதி. சத்தியவாணிமுத்து எழுந்தார்கள்)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதற்கு மேலே உங்களுக்கு விளக்கம் தர முடியாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்னொரு பெரிய குற்றச்சாட்டை சொல்லி பத்திரிகைகளில் எல்லாம் அதை மிக விரிவாகப் போட்டிருந்தார்கள். அவர் சொன்னார்.

"The total irregular financial dealings per year on an average is 42416 cases involving a sum of over Rs. 25 crores. I saw the exact sum. It is Rs. 25,02,75,000 for one year. What a fantastic record of our wonderful Chief Minister for himself."

என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை 42,416 எண்ணிக்கை ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் என்று போட்ட அந்த பத்திரிக்கைகள் எல்லாம் இந்த விளக்கத்தையும் போடுவார்கள் என்ற எண்ணத்தோடுதான் இந்த விளக்கத்தைத் தருகிறேன். இல்லாவிட்டால் மாநில மக்கள் ரொம்ப குழப்ப மடைவார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட வேண்டும் என்றே சொல்லியிருக்கமாட்டார் என்று கருதுகிறேன். அவர் நம் பழைய பட்ஜெட் வரலாறுகளைப் பார்க்காமல் கூறியிருக்க முடியும். அவர்கள் சொன்னதின் அர்த்தம் மற்றவர்களுக்கு எப்படிப் புலப்படும் என்றால் ஏதோ இந்த ஆண்டு 1972–73ஆம் ஆண்டு ரிப்போர்ட்டில் 42,416 எண்ணிக்கை உள்ள ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் இருந்தது என்று எண்ணிடத் தோன்றும். நாம் 1962ஆம் ஆண்டிலிருந்து பார்த்தால் 1962–63இல் மொத்தம் நம்முடைய மாநில பட்ஜெட் 163 கோடி. இன்றைக்கு நம் மாநில பட்ஜெட் 499 கோடி அதாவது 499.97 கோடி. ஏறக்குறைய 500 கோடி என்று வைத்துக் கொள்ளலாம். பட்ஜெட் 163 கோடி போட்ட போது மொத்தம் 31,502 ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ். தொகை கிட்டத்தட்ட 15 கோடி involve ஆகிற அப்ஜெக்ஷன்ஸ். இப்போது 42,416 எண்ணிக்கை அப்ஜெக்ஷனில் involve ஆவது 25 கோடி சொச்சம் அதாவது 1962–63இல் 163 கோடி பட்ஜெட் இருந்தபோது 9.67 சதவீதம் அப்ஜெக்ஷன்ஸ். 1972–73இல் 500 கோடி பட்ஜெட் இருக்கிற போது 5 சதவீதம் அப்ஜெக்ஷன்ஸ். ஆகவே, குறைந்து இருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. இன்னும் ஒன்று, ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் என்றால் ஏதோ 1962 இல் காங்கிரஸ் ஆட்சியில் 15 கோடி ரூபாய் இருந்தது, 1972–73இல் 25 கோடி. ஆகவே ஏதோ தவறு நடந்து விட்டது என்று

அர்த்தம் இல்லை. சில செலவினங்களுக்கு ரசீது கொடுக்காமல் இருக்கலாம். கையெழுத்துப்போடத் தவறியிருக்கலாம். கையெழுத்து போடுகிற அதிகாரி ஊரில் இல்லாமல் இருக்கலாம். தொடர்ந்து 5–6 பேர் கையெழுத்து போட வேண்டிய இடத்தில் ஒருவர் போட்டு விட்டு இருக்கலாம். அவர் மாறுதலாகி வேறு வேலைக்குப் போயிருக்கலாம். இந்த அப்ஜெக்ஷனை எழுப்பியிருக்கலாம். அது மறுபடியும் அந்த அதிகாரிக்குச் சென்று கையெழுத்துப் போட்டவுடன் அந்த அப்ஜெக்ஷன் தள்ளப்படும். இந்த 31,562 என்பது 1962ஆம் ஆண்டுக்கு மட்டும் உரியது அல்ல. அது பல ஆண்டுகளாக 'காரி ஓவர்' ஆகி, கொஞ்சம் கொஞ்சமாக 31,562 ஆகி, மறுபடியும் கூடி, குறைந்து, கூடி குறைந்து 1972 – 73 இந்த 42,416 என்று ஆடிட் அப்ஜெக்ஷன் வருகிறது. இது 1962ஆம் ஆண்டை விட கிட்டத்தட் 4½ சதவிகிதம் குறைவானதுதான். இதற்கான பதில் அவ்வப்போது சான்றிதழ், சர்டிபிகேட், ரசீது அதிகாரிகளால் தரப்பட்டு வருகின்றன என்றும் அதிலே வேறு ஒன்றுமில்லை என்ற விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : என்னுடைய வாதம் எல்லாம் இப்படி 1962ஆம் ஆண்டு வந்ததைவிடக் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் அந்த பிரச்சினைக்குள் போகவில்லை. கூடியவரை நம்முடைய 'பிஸிகல் கன்ட்ரோல்', 'பினான்சியல் கன்ட்ரோல்', சரியாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சுட்டிக்காட்டினேனே அல்லாமல் வேறொன்றுமல்ல. அப்படிச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அவர்கள் உஷாராக இருப்பார்கள்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஏதோ ஆபீஸர் கையெழுத்துப் போடவில்லை, ரசீது வரவில்லை என்று அப்ஜெக்ஷன் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். இவ்வளவு சிம்பிள் அப்ஜெக்ஷன் எல்லாம் மட்டுமா அவர்கள் கூறுவார்கள்? அதுமட்டுமல்ல.

Some serious irregularities also have been pointed out in the Audit Report. The explanation of the Hon. Chief Minister will look as though there are only very small unnoticeable objections which are raised by the Auditor. That is not correct.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : சார், இன்னும் ஒன்று. அது மட்டுமல்ல. 5 ஆண்டுகளாக 75 லட்சம் டன் சர்க்கரை விரயத்திற்கு ரிக்கார்டு காட்டவில்லை என்று ஆடிட் ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதை எல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் கூறினேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இது ஒன்றும் தி.மு.கழக அரசுக்கு மட்டும் புதிதல்ல. தமிழக ஆட்சியில் வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து காங்கிரஸ் ஆட்சியி லிருந்து ஆடிட் அப்ஜெக்ஷன் என்பது, ஆடிட் எல்லாம் ஒழுங்காக செய்து சில தவறுகள் இருந்தால் கண்டு பிடித்து, இன்னின்ன தேவை என்ற கேள்விகளை எழுப்புவதும், அதிகாரிகள் பதில் சொல்வதும் வழக்கமாக இருக்கிறது. இதில் 'ஒண்டர்ஃபுல் சீப் மினிஸ்டர்' என்று சொன்ன காரணத்தால்தான் நான் இதைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 1962இல் 163 கோடிக்கு 32,000 ; இப்போது 500 கோடிக்கு 42,000 ; ஆகவே இதில் குறைவாக இருப்பதைத்தான் 'ஒண்டர்ஃபுல் சீப் மினிஸ்டர்' என்று கூறி என்னை வாழ்த்தியிருப்பார் என்று கருதுகிறேன். (சிரிப்பு.)

பிறகு இந்த வரவுசெலவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மிக முக்கியமாக எதிர்க்கட்சிகள் அளவில் இப்போது இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஆரம்பத்திலும் நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்களும் போடப்பட்டிருக்கின்ற வரிகளுக்கு பெரிய எதிர்ப்புக்களை தெரிவித்தார்கள்.

பொன்னப்ப நாடார் அவர்கள் பழைய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரிகளுக்கான எதிர்ப்புகளைத் தெரிவிப்பதில் தற்காலிகமாக நியாயம் இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் ஆட்சியிலிருந்து வரிகளைப் போட்டவர்கள். அதனால் தற்காலிகமாக நியாயம் என்று சொன்னேன். பருவா அவர்

களுடைய ஸ்டேட்மெண்டைப் பார்க்கின்றபோது தற்காலிகமாக என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பருவா அவர்களுடைய ஸ்டேட்மெண்டுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நாடார் அவர்கள் இப்போது என்று சொன்னதைத்தான் தற்காலிகமாக என்று நான் சொன்னேன். தற்காலிகமாக என்பது வடமொழியோ என்னவோ.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : திரு. பருவா அவர்கள் ஏதோ பொது மக்களைக் குழப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அறிக்கையைக் கொடுத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். ஏனென்றால் அவர்கள் இங்கு வந்து போகிற நேரத்தில் மறுமுறையும் இங்கு அரசியலைக் குழப்ப வேண்டு மென்று கூறியிருப்பார்கள் என்ற கருதுகிறேன். ஆகையால் அதைப் பற்றி நோக்கம் கற்பிக்க வேண்டாமென்று மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : குழப்பம் உண்டு பண்ண வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. இந்த மாதிரிக் குழப்பம் அங்கே தான் இருக்கிறது. கோயம்புத்தூரில் வந்தீர்கள், பிறகு போனீர்கள். பாண்டிச்சேரியில் வந்தீர்கள். பிறகு போனீர்கள். இப்படிக் குழப்பம் இருப்பதால் சொல்லியிருக் கிறார்கள். (சிரிப்பு).

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அம்மையார் அவர்கள் கூறுகின்றது வேடிக்கைக்காக நாங்கள் எல்லாம் சிரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அம்மையார் அவர்கள் எங்கள் கட்சியில் துணைத் தலைவராக இருந்தார்கள். இப்போது வேறு கட்சிக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் இந்த வாதத்தைச் சொல்லும்போது உள்ளபடியே நாங்கள் வேதனைப் பட வேண்டியிருக்கிறது. யார் யாரோடு போனார்கள் (சிரிப்பு) என்பதை நான் சொல்ல வேண்டிய தில்லை. ஆகையால் இந்த மாதிரியான வாதமெல்லாம்

இப்போதைக்குத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : எங்கள் வாதத்தில் சத்து இருக்கிறது. நான் ஒரேயடியாக வந்துவிட்டேன். நீங்கள் அடிக்கடி வருவதும் போவதுமாக இருக்கின்றீர்கள். எப்போது வேண்டுமானாலும் வரலாம். (சிரிப்பு) கதவு எப்போதும் திறந்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : உங்கள் வாதத்தில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை. (சிரிப்பு).

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்கள் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்று பத்திரிக்கையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வரிகளைப் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. டில்லியில் இருக்கிற மத்திய அரசின் சார்பில் திட்டக்குழு கூடுகிற நேரத்திலும், நிதி அமைச்சரை நாங்கள் சந்திக்கின்ற நேரத்திலும் முதலமைச்சர் களுடைய மாநாடு நடக்கின்ற நேரத்திலும் நீங்கள் வரிகள் மூலமாக மாநிலங்களின் வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற திட்ட வட்டமாக அறிவிப்புகள் எங்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றன. அது பற்றிப் பலமுறை நான் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். முன்னாள் நிதியமைச்சர் திரு. சவான் எழுதிய கடிதத்திலும், திட்டக்குழுவின் சார்பில் உறுப்பினர்கள் எழுதிய கடிதத்திலும் விவசாய முனையிலும் நீங்கள் வரி விதிக்க வேண்டுமென்று மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து இந்த அவையில் நான் பலமுறை சொல்லி யிருக்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் நாம் விதித்திருக்கின்ற வரி மிகமிக குறைவானதுதான் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், இதை எதிர்க்கா விட்டால் எதிர்க்கட்சியாக இருக்க முடியாது என்பதை நானும் எதிர்க்கட்சியாக இருந்தவன் என்ற முறையில் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இது நாம் எல்லாம்

கூறுகின்ற அளவுக்கு இவை ஏழை எளியவர்களை, சாமானியர்களைப் பாதிக்கக் கூடியதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் 59 பொருட் களின் மீது விதிக்கப்பட்ட பல முனை விற்பனை வரியை ஒரு முனை வரியாக மாற்றி அமைத்தோம். ஒன்றல்ல இரண்டல்ல. 59 பொருட்கள் மீது, அப்போது 3½ சதவிகிதம் பருப்பு, எண்ணெய் வகைகள் இவற்றின் மீது பல முனை வரி விதிக்கப்பட்டது. அந்தப் பல முனை வரியின் மூலம் பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களுக்கெல்லாம் பல முனை வரியாக 7 சதவிகிதம் அவர்கள் வரியாகக் கட்ட வேண்டியிருந்தது. நாம் அதை 3½ சதவிகிதமாக்கி, இப்போது அந்த 3½ சதவிகிதத்தை 4 சதவிகிதம் ஆக்கியிருக்கிறோம். ஆகவே, சென்ற ஆண்டு வரை இருந்த 7 சதவிகிதத்தோடு ஒப்பிடும்போது இந்த 4 சதவிகிதம் என்பது 3 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கின்றதே தவிர இது அதிகமானது அல்ல என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

அது மட்டுமல்ல, அண்டை மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும், சிக்கரி, காப்பி, பிரெஞ்சு காப்பி, இவைகளுக்கு ஆந்திரத்தில் 6 சதவிகிதம்தான். கேரளத்தில் 6 சதவிகிதம், கர்நாடகத்தில் 10 சதவிகிதம், மராட்டியத்தில் 6 சதவிகிதம், நாம் விதித்திருப்பதும் 6 சதவிகிதம். 5½ சதவிகிதமாக இருந்தது 6 சதவிகிதமாக இருக்கிறது.

தேயிலை, ஆந்திராவில் 6 சதவிகிதம், கேரளத்தில் 5 சதவிகிதம், கர்நாடகத்தில் 6 சதவிகிதம், மராட்டியத்தில் 6 சதவிகிதம், நாம் தற்போது விதித்திருப்பது 5¾ சதவிகிதத்திலிருந்து ½ சதவிகிதம் கூட்டி 6 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம்.

எண்ணெய் வகையைப் பொறுத்த வரையில் – ஆந்திராவில் 2½ சதவிகிதமாக இருந்தது 5 சதவிகிதம் ஆகி யிருக்கிறது. கேரளத்தில் 5, சதவிகிதம், கர்நாடகத்தில் 4 சதவிகிதம், மராட்டியத்தில் 4 சதவிகிதம், நாம் விதித்திருப்பது 4 சதவிகிதம்.

இயந்திரத்தால் செய்யப்பட்ட தீக் குச்சிகளுக்கு ஆந்திராவில் இருந்தும் கர்நாடகத்திலிருந்தும் விபரம் கிடைக்கவில்லை. கேரளத்தில் 3 சதவிகிதம், மராட்டியத்தில் 2 சதவிகிதம், நாம் 4 சதவிகிதம்.

பருப்பு வகைகளுக்கு ஆந்திராவில் 3 சதவிகிதம், மற்ற மாநிலங்களில் விபரம் கிடைக்கவில்லை; நாம் 4 சதவிகிதம் போட்டிருக்கிறோம்.

இப்படி அண்டை மாநிலங்களோடு அதிக வித்தியாசப் படுகின்ற அளவில் இல்லாமல் நாம் இந்த வரிகளை இன்றைக்கு அரை சதவிகிதம், அதிலும் ஏற்கெனவே சொன்னதைப்போல சென்ற ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சென்ற ஆண்டு 7 சதவிகிதமாக இருந்ததை 3 சதவிகிதம் குறைத்து 4 சத விகிதமாக ஆக்கியிருக்கிறோம்.

அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இந்த கால்நடைகள் என்ன பண்ணின, கால்நடை வரி ஏன், அதை குறைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை தமிழ்நாட்டு விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையாக ஏற்று, பிண்ணாக்குக்கு போட்ட இந்த அரை சதவிகிதம் உயர்த்திய வரியை ரத்து செய்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

திருமதி. த.ந. அனந்தநாயகி : பிண்ணாக்கு வரியை ரத்து செய்ததற்காக கால்நடைகள் சார்பாக, மாடுகளின் சார்பாக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு). ஆனால் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மத்திய அரசு ஏதோ வரி போட தூண்டுவதைப் போலவும் அதற்காகவே இன்றைய தினம் 6 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருப்பதைப் போலவும் சொன்னார்கள். ஆனால் பக்கத்தில் இருக்கிற கேரளாவில் 26 கோடி துண்டு விழும் பட்ஜெட்டைப் போட்டும், இந்த வருஷம் வரியை போடவில்லை. அதைப்போல ஆந்திரப் பிரதேசமும், அங்கே வரி போடவில்லை. இந்த 6 கோடி ரூபாயைக்கூட more buoyancy of taxes என்ற முறையில் அடுத்த ஆண்டு சமாளிக்க முடியும் என்று இருக்கும்போது நீங்கள் ஏன் புது வரி போடவேண்டும்? அதற்கு பதில் வரவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இங்கே மதுவிலக்கை நடைமுறை செய்கிறோம். வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிறோம். அதற்கான வரி விலக்குகளைத் தருகிறோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்து அதிலே 2 கோடியை இழக்கிறோம். இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டால் அதற்கான பதில்தானே அவர்களுக்குக் கிடைக்கும்.

விலைவாசி உயர்வை இன்றைக்கு மாநில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று மாநில அரசின் மீது ஆளும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் நண்பர்களால் குற்றஞ்சாட்டப் பட்டது. திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள். விஜயவாடாவில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களை இங்கே படித்துக் காட்டினார்கள். சாதியை ஒழிக்க, தீண்டாமையை அகற்ற நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யெல்லாம் படித்தார். அவர்களது கட்சியின் சார்பில் விஜயவாடாவில் நடைபெற்ற மகாநாடு சாதாரணமானது அல்ல பத்தாண்டுக் காலத்திற்கு ஒருமுறை நடைபெறும் மாநாடு ஆகும் என்று கருதுகிறேன் – விஜயவாடாவில் கூடிய மிக முக்கியமான அகில இந்திய கம்யூனிஸ்டுகள் மகாநாடு அது. அந்த மகாநாட்டில் ஜனவரி 27 முதல் பிப்ரவரி 2ஆம் தேதி வரை 1975இல் நடைபெற்ற மகாநாட்டில் போடப்பட்ட முக்கியமான தீர்மானத்தை இங்கே நான் படித்துக் காட்டுவதே முறை என்று கருதுகிறேன். திரு. கே.டி.கே. படித்துக்காட்ட மறந்திருக்கலாம். ஆகவே, நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"The responsibility for this state of affairs must be placed squarely on the shoulders of the Ruling Congress Government which has not only failed to protect the Indian economy from the ravages of the world-wide inflationary crisis of capitalism and the efforts of the big imperialist powers to transfer its burdens on to the countries of the third world, but has itself contributed to the inflationary spiral by embarking upon a reckless course of deficit financing and mounting taxation of consumer articles and intermediates and essential raw materials."

என்ற இந்த விஜயவாடா தீர்மானம் மிக முக்கியமான தீர்மானமாகும்.

இன்றைக்கு இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வுக்குப் பொருளாதார ஏற்றத்தாழ்வு, பொருளாதார வீக்கம் இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை ஆணித்தரமாக மத்திய சர்க்காரை நோக்கி விரலைச் சுட்டிக் காட்டுகின்ற தீர்மானம்தான் இந்த விஜயவாடா தீர்மானம். இந்தத் தீர்மானத்தை நான் கம்யூனிஸ்டு கட்சியோடு உறவு கொள்ளாவிட்டாலும், திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் கம்யூனிஸ்டு கட்சி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக என்னுடைய பாராட்டு தலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அந்த விஜயவாடா தீர்மானத்தில் இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார்கள்.

"Black money which has become a parallel economy is causing havoc to the national economy, apart from boosting the price-spiral. As this has created a most dangerous situation where even the previous limited planning has become impossible...."

இது கறுப்புப் பணத்தைப் பற்றியதாகும். கறுப்புப் பணத்தை அடியோடு ஒழிப்பதற்கு மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளோடு மாநில அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள மாநில அரசுகளுக்கும் அதிகாரம் தர வேண்டும் என்கிற தீர்மானத்தை இங்கே நாம் ஏகமனதாக நிறைவேற்றினோம். அப்படி ஒரு தீர்மானம் போடுவீர்களா என்று திரு. கே.டி.கே. கேட்ட போது, 'நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் ஆதரிக்கிறீர்களா' என்று கேட்டு, 'ஆதரிக்கிறோம்' என்று அவர் சொல்லி, இந்த மாமன்றத்தில் கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்கு மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்கிற அதிகாரம் மாநில அரசுகளுக்கும் வழங்கப் பட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, வழி மொழிந்து ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பினோம். அதற்கு மத்தியிலிருந்து இன்று வரை எந்தவிதமான பதிலும் கிடையாது என்று தெரிவித்துக்

கொள்கிறேன். இதிலிருந்து மத்திய அரசுக்கு அதிகாரம் கூடாதென்பது அல்ல மத்திய அரசுக்கும் இருக்கட்டும் மாநில அரசுகளுக்கும் இருக்கட்டும் என்றுதான் நாம் கூறினோம். அதற்கு எந்தவிதமான பதிலும் கிடையாது.

அடுத்து சில குறைபாடுகளும், குற்றச்சாட்டுகளும் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குப் பதில் அளித்தாக வேண்டியது என் மாபெரும் பொறுப்பாகும். நண்பர் திரு. ஏ.ஆர். மாரிமுத்து பேசுகையில், பரம்பிக் குளம் - ஆளியாறு திட்டத்தின் வாய்க்கால்களில் தற்போது தண்ணீர் ஓடுவது இல்லை. இந்த ஆண்டு 89 ஆயிரம் ஏக்கருக்குக் கூடுதலாக நீர்ப்பாசனம் அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் வீணாக முதலீடு செய்ய வேண்டாம் என்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள்.

இந்தக் கருத்து உள்ளபடியே ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. பயங்கரமான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், பரம்பிக்குளம் ஆளியாற்றில் தண்ணீரே இல்லாததைப் போலவும், ஆனால் நாம் 89,000 ஏக்கர்களுக்கு விரிவுபடுத்துவது ஆபத்தான காரியம் என்பதைப் போலவும் குறிப்பிட்டார். உண்மை என்னவென்றால், ஆண்டு ஒன்றுக்கு 2.5 இலட்சம் ஏக்கருக்கு நீர் கொடுக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் - ஆளியாறு ஒப்பந்தமாகி, இடையில் சில கசப்புணர்ச்சிகள் ஏற்பட்டு அது முடிவுபெறாமல் இருந்த சூழ்நிலையில் நம்முடைய ஆட்சி வந்த பிறகு திரு. ஈ.எம்.எஸ். அங்கே முதலமைச்சராக இருந்தபோதும், அதற்குப் பிறகு திரு. அச்சுதமேனன் அங்கே முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகும், நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் அடிக்கடி அவர்களைச் சந்தித்து, பேச்சு வார்த்தை நடத்தியதின் விளைவாக, பரம்பிக்குளம் ஆளியாறு ஒப்பந்தத்தில் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர், 30 டி.எம்.சி., அதாவது 30,000 மில்லியன் கன அடி தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டும்.

இதில் தற்போது நமக்குக் கிடைப்பது 16.5 டி.எம்.சி., இதற்குப் பிறகு மேலும் 9 டி.எம்.சி., வருவதற்கான வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே இப்போதே ஏழு டி.எம்.சி. கிடைக்கும். இன்னும் போகப் போக மேலும் இரண்டு டி.எம்.சி. நமக்குக் கிடைக்கவிருக்கிறது. ஆகவே, அந்த ஏழு டி.எம்.சி. நீரைக் கொண்டுதான் பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை, தாராபுரம் ஆகிய தாலுக்காக் களில் உள்ள 89,000 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் கொடுக்க நாம் திட்டமிட்டிருக்கிறோம். இதில் ஆண்டு ஒன்றுக்கு 45,000 ஏக்கரா வீதம் மாறி மாறி நீர் வழங்கப்படும். இப்படி மாறி மாறி நீர் வழங்கினால் நல்லது என்றுகூடச் சொன்னார்கள். இல்லா விட்டால் அந்த நிலங்கள் கூட பாழாகிவிடும் என்ற கருத்தும் இருக்கிறது. அப்படி ஒரு கருத்து இல்லாவிட்டாலும், நமக்குக் கிடைக்கின்ற தண்ணீரை வைத்துக்கொண்டு இப்படி மாறி, மாறி பாசன வசதிக்காக தண்ணீரை விடுவது சாலச்சிறந்தது என்ற முறையில் தான் செய்திருக்கிறோம். ஆகவே, சரியான திட்ட மில்லை என்ற வாதத்தை ஒத்துக் கொள்வதற்கில்லை. இன்னொன்றைக் கூட நண்பர் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். நான் நீண்ட நேரம் பேசுவதற்காக வருத்தப்படக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் சில நல்ல பல கருத்துக் களையும் அரிய விளக்கங்களையும் இந்த விவாதத்தின்போது எடுத்து வைத்திருப்பதன் காரணத்தினால் நான் பேசவேண்டிய தாக இருக்கிறது – திரு. மாரிமுத்து அவர்கள் இன்னொன்றைக் குறிப்பிட்டார்கள். ஒரு கோடியே நாற்பது லட்சம் ஏக்கரா நிலம் சாகுபடி செய்யப்படாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளைச் சாகுபடி செய்ய அரசு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : அது தவறாக ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. மொத்தம் சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் ஒரு கோடியே நாற்பது லட்சம் என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தவறாக இருந்தால் ஒரு வேளை நிருபர்களால் தவறாக எழுதப்பட்டிருக் கலாம். 1974ஆம் ஆண்டு நம்முடைய

விவசாயத்துறை தந்துள்ள புள்ளி விவரப்படி நமது மாநிலத்தில் பதினோரு லட்சத்து இருபத்தையாயிரம் ஏக்கரா விவசாயம் செய்யப் படாமல் இருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த பதினோரு லட்சத்து இருபத்தையாயிரம் ஏக்கராவை படிப்படியாக விவசாயம் செய்ய வேண்டிய பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

இதிலே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை எல்லாம் அரசுப் பண்ணைகளின் மூலமாக எடுத்துக் கொண்டு நாம் சாகுபடி செய்வது என்ற முடிவை மேற்கொண்டு அதை வரவு செலவுத் திட்ட அறிக்கையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதில் முதல் கட்டமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கும்முடிப்பூண்டி தாலுக்காவில் தெருவாய, கரடிப்புத்தூர் என்ற இரண்டு கிராமங்களில் ஆயிரத்து ஐநூற்றிருபத்திரண்டு ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

மாவட்டங்களில் சாகுபடிக்குத் தகுந்த ஆனால் சாகுபடி செய்யப்படாமல் இருக்கிற இத்தகைய நிலங்களை எல்லாம் எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த அரசுப் பண்ணைக் கழகங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு நில உபயோகச் சட்டம் என்று 1961இல் ஒரு சட்டத்தை நிறைவேற்றிருக்கிறோம். அந்தச் சட்டத்தின் மூலம் நிலம் பெற்றவர்கள் பல பேர் நிலத்தைப் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். அப்படி இருந்தால் அப்படிப் பயன்படுத்தாமல் இருப்பவர்களிடம் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலையிட்டு அந்த நிலங்களையும் எடுத்துக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இன்றுள்ள உணவு நிலையை உத்தேசித்தும், மேலும் உற்பத்தியைப் பெருக்கவும் தமிழ்நாட்டின் எதிர்கால வளம் சிறக்கவும், இந்த 11 லட்சம் ஏக்கராவையும் நாம் சாகுபடிக்குக் கொண்டு வரும் திட்டத்தின் முதல் கட்டமாக அரசுப் பண்ணை மூலமாக இவைகளைச் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

திரு. எஸ். வடிவேல் : நாம் அந்த நிலத்தை எடுப்போம் என்று சொல்கிற நேரத்தில், ஒரு சிலர் தங்களுடைய பட்டா நிலமென்று சொல்லி, 5 வேலி, 10 வேலி என்று பட்டா போட்டு வாங்கிக் கொண்டு, வருஷா வருஷம் சாகுபடி பண்ணாமலிருக்கிற நிலையிருக்கிறது. அம்மாதிரி நிலங்களைக் கூட சர்க்கார் உடனடியாகச் சாகுபடி பண்ண ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்களுக்கே தெரியும், காரியமங்கலம் பிள்ளை என்பவர் வருஷா வருஷம் 15 வேலி நிலத்தை சாகுபடி பண்ணாமல் போட்டுவிடுகிறார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தனிப் பட்டவர்கள் பயிர் செய்யாமல் இருந்தால் அதை எடுத்துக் கொள்ள சட்டம் இடம் கொடுக்கிறதா என்பதை எல்லாம் பார்க்கவேண்டும். இல்லையென்றால், புதிதாகச் சட்டம் போடுவதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு ஏ.ஆர். மாரிமுத்து : அரசு புதிதாக மசோதா கொண்டுவந்து அதை பாஸ் செய்யலாம்.

திரு. எஸ். வடிவேல் : நெருக்கடியை உத்தேசித்து, எமர்ஜன்ஸி ஆர்டர் போட வேண்டியதுதானே? எல்லாவற்றையும் சட்டம் போட்டு எடுக்க வேண்டியதுதானே.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு வறட்சியின் காரணமாகக்கூட அப்படித் தரிசாகப் போடப்பட்டிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு, இந்த ஆண்டு சட்டம் போட்டு, அவைகளையெல்லாம் எடுத்துக் கொள்வது முறையாக இருக்க முடியாது. வேண்டுமென்றே வைத்துக்கொண்டிருந்தால், அவைகளைப் பற்றி என்ன சட்டம் போடலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. சார்பில் பேசிய நண்பர் துரை கோவிந்தராசன் அவர்கள் கர்நாடக மாநிலத்திற்கு ஏற்புடைய ஒரு பயங்கரமான கருத்தைச் சொன்னார். தமிழகத்திலே நீர்வளங்களைப் பொறுத்தவரையில் காவிரியாறு, மற்ற ஆறுகள் மூலமாக 50 சதவிகித நீர் வீணாகக் கடலிலே போய் சேருகிறது என்று குறிப்பிட்டார். இதைத்தான் கர்நாடக அரசும்

தன்னுடைய வாதமாகச் சொல்கிறது. இதை சொல்லித்தான் நாம் பயன்படுத்துகிற தண்ணீரை குறைத்துக் கொள்ளவேண்டு மென்று அவர்கள் கூறி வருகிறார்கள். இது முற்றிலும் தவறான வாதமாகும்.

பயன்படுத்த முடியாத, ஆயக்கட்டுகள் இல்லாத பகுதி, காவிரிப்பூம்பட்டினத்தில் போய் கடலோடு காவிரி கலக்கிற அந்த 10 மைல், 20 மைல்களுக்குள் மழை பெய்தால் அந்த நீரைப் பயன்படுத்திக் கொள்ள யாரும் இருக்க முடியாது. அப்படி ஏதாவது தண்ணீர் வீணாகலாமே தவிர 50 சதவிகித தண்ணீர் வழக்கமாக வீணாகிறது என்று சொல்வது தவறான வாதமாகும். அவர் அதைத் திருத்திக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட பிரச்சாரத்தை தயவு செய்து வெளியேகூடச் செய்ய வேண்டாமென்று நான் நண்பர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். நாம் எந்தத் தண்ணீரையும் வீணாக்கவில்லை; ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட வீணாக்காமல் ஆயக்கட்டுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் வடிவேல் அவர்கள் உலகத்திலேயே எங்கு மில்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில் மின்சார இழப்பு 20 சதவிகிதம் ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த 20 சதவிகிதத்தை இன்னும் குறைக்க வேண்டுமென்பதிலே நான் ஒத்தக் கருத்து உடையவன்; இன்னும் குறைக்கவேண்டும். ஆனால், உலகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு என்று சொல்லி விட முடியாது. உலகம் வரையில் போய்ப் பார்க்க நேரமில்லை என்றாலும், இந்திய அளவில் பார்த்தால், 1971-72 புள்ளி விவரப்படி, ஆந்திரப் பிரதேசத்தில் மின்சாரக் கம்பிகளுடைய நீளம் 1,06,590 கிலோ மீட்டர். அங்கே, இந்த டிரான்ஸ்சிட் லாஸ், அதாவது மின்னியல் நஷ்டம் 26.84 சதவிகிதம் ஆகும். அரியானாவில், 66,695 கிலோ மீட்டர் மொத்த மின்சாரக் கம்பி நீளம், எல்லா இடத்திற்கும் போடப்பட்டிருக்கிற மின்சார கம்பியின் நீளம். அங்கே மின்னியல் நஷ்டம் 28.52 சதவிகிதம். பஞ்சாபில் 53,536 கிலோ மீட்டர் மின்சாரக் கம்பிகளின் நீளம். அங்கே மின்னியல் நஷ்டம் 24.19 சதவிகிதம். இராஜஸ்தானத்தில் 47,063 கிலோ மீட்டர் மின்சார

லைன் நீளம். அங்கே மின்னியல் நஷ்டம் 23.62 சதவிகிதம். உத்திரப் பிரதேசத்தில் 1,45,587 கிலோ மீட்டர் மின்சார லைன் நீளம். இங்கே மின்னியல் நஷ்டம் 26.14 சதவிகிதம். கேரளத்தில், 34,845 கிலோ மீட்டர் குறைவான கிலோ மீட்டர் நீளம்.

அங்கே 17.29 சதவிகிதம் நஷ்டம். கர்நாடகத்தில், 1,47,266 கிலோ மீட்டர் நீளம். அங்கே நஷ்டம் 15,86 சதவிகிதம். தமிழ்நாட்டில் 2,21,040 கிலோ மீட்டர் கம்பியின் நீளம். இங்கே பல பகுதிகளுக்கும் மின்சாரக் கம்பிகள் இழுப்பதற்கு, தொலை தூரத்திலே கம்பிகளை இழுக்க வேண்டியிருக்கிற காரணத்தால் 2,21,040 கிலோ மீட்டர் லைன் நீளம். அதிலே மின்னியல் நட்டம் 18.80 சதவிகிதம். இப்பொழுது கொஞ்சம் அதிகமாகி 20 சதவிகிதமாகி இருப்பதாகச் சொன்னார்கள். அது குறைய வேண்டு மென்பதிலே எனக்கு எந்த விதமான கருத்து வேறுபாடு மில்லை. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்திலே அதிகமாக இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : 1971ஆம் வருஷத்திலே யிருந்து பார்த்தால் வருஷா வருஷம் கூடிக் கொண்டே போகிறதே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது. ஒவ்வொரு மாநிலத்தினுடைய நிலைமைகளை யெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. டிரான்ஸ் மிஷன் லாசைப் பொறுத்த வரையிலும். அண்டை மாநிலங்கள் இரண்டிலே டிரான்ஸ் மிஷன் லாஸ் கம்மியாக இருக்கிறது. இங்கே, இரண்டு மூன்று வருஷமாக, கூடிக்கொண்டே போகிறதே, என்ன காரணம்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்த 3 ஆண்டுக் காலத்தில், மின்சாரக் கம்பிகள் போடுகின்ற நீளமும் அதிகமாகியிருக்கிறது. அந்தக் காரணத்தாலேதான் கூடுதலாக இருக்கிறது. நான் குறைய வேண்டுமென்ற கருத்துக்கு மாறுபட்டவன் அல்ல என்று கருத்தை ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டேன்.

நம்முடைய கோரிக்கைகள் சரியாக வலியுறுத்தப் படவில்லை, அவை 'இன்றும் அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டுமென்பதை பெரியவர் மணலி அவர்களும், ஹாண்டே அவர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்த முஸ்லீம் லீக், பார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், அனைவருமே கூறி, மேலும் மத்திய அரசிடமும், திட்டக் குழுவிடமும் வலியுறுத்த வேண்டுமென்று கூறினார்கள். நாம் மத்திய திட்டக் குழுவிடமும், மத்திய அரசிடமும் வலியுறுத்தி வருகிறோம்.

1975–76ஆம் ஆண்டு திட்டம் பற்றிய பேச்சு வார்த்தைகளைத் திட்டக் குழுவோடு நடத்தியபோது, நாம் வறட்சி நிவாரணத்துக்கு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட தொகையாக ரூ. 20 கோடி வேண்டுமென்று வற்புறுத்தி யிருக்கிறோம். அது மாத்திரமல்ல, 1975–76இல் நமக்கேற் படுகின்ற பற்றாக்குறையைச் சரிக்கட்ட நில வரி ரத்து, கடன்கள் தள்ளிவைப்பு போன்றவைகளால் நமக்கேற்பட்ட வருமான குறைவை கருத்தில் கொண்டு ரூ. 15 கோடி மத்திய அரசு அதிகமாக நிதியுதவி தரவேண்டுமென்றும் வலியுறுத்தி யிருக்கின்றோம்.

மதுவிலக்கை மறுபடியும் அமுல்படுத்தியதால் 5வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 ஆண்டுகளில் நமக்கு ஏற்படும் இழப்புத் தொகை ரூ. 234 கோடி. இதில் 50 சதவிகித மான ரூ. 117 கோடியை ஆண்டொன்றுக்கு ரூ. 29 கோடி வீதம் தமிழக அரசுக்கு வழங்கவேண்டுமென்று வலியுறுத்தியிருக் கிறோம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குப் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களோடு ஒப்பிட்டுத் திட்டத்துக்கு அப்பாற்பட்ட செலவாக ரூ. 10 கோடி ஒதுக்கவேண்டுமென்றும் கேட்டிருக் கிறோம். இவைகள் மாத்திரமல்லாமல், தொடர்ந்து வேறு பல திட்டங்களையும் கேட்டு வருகின்றோம்.

சுதந்திராக் கட்சி சார்பிலே பேசிய வெங்கடசாமி அவர்கள் நெய்வேலி இரண்டாவது நிலக்கரிச் சுரங்க வேலை நடக்கவில்லையென்றெல்லாம் இங்கே குறைபட்டுக் கொண்டார்கள்.

470 மெகாவாட் மின்விசை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்ட கல்பாக்கம் அனு மின் திட்டம், தன் முதல் மின் உற்பத்தியாக 238 மெகாவாட்டை, 1977–78லேதான் தொடங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்திக்கு வழி செய்கிற நெய்வேலி இரண்டாவது நிலக்கரி சுரங்க வேலைக்கு இன்னும் மத்திய திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. இது பற்றி பலமுறை திட்டக் குழுவுக்கும், மத்திய அரசுக்கும் நாம் எடுத்துச் சொல்லிவருகிறோம். இந்த மாமன்றத்திலும் நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலைப்பற்றி நாம் பேசி வருகிறோம். எல்லா கட்சிக் காரர்களும் அதை வலியுறுத்துகிறோம்.

அண்மையிலே டில்லிக்குப் போயிருந்த நேரத்தில் மத்திய நிதி அமைச்சரிடத்திலே அது பற்றி பேசப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் 15.11.1973இல் பிரதமருக்கு கடிதம். பிறகு 19.11.1973இல் பிரதமருக்கு மீண்டும் ஒரு கடிதம். பிறகு 9.2.1974இல் பிரதமருக்குக் கடிதம். 9.2.1974இல் திட்ட அமைச்சருக்குக் கடிதம். 16.8.1974இல் நிதி அமைச்சருக்குக் கடிதம். நேரிலே பல நேரங்களில் வற்புறுத்தல், இப்படி நாம் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லியும், நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கியதைவிட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கிய ஒரு பாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

1974–75இல் மத்திய நிதி ஒதுக்கீடு நெய்வேலிக்கு ரூ. 33 கோடியாக இருந்தது, திருத்திய மதிப்பீடு ரூ. 54 கோடி ரூபாயாக இருந்தது. நாம் இரண்டாவது சுரங்கம் கேட்கப் போன குற்றம் நெய்வேலிக்கு ஒதுக்கிய பணம் இந்த ஆண்டு ரூ. 15 கோடியாகக் குறைந்துள்ளது. நெய்வேலிக்கு ரூ. 54 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு ரூ. 15 கோடியாக குறைந்துள்ளது. இதனால் நிலக்கரி எடுப்பதிலும் நமக்கு பாதகம் ஏற்படும். அதனால் கிடைக்கின்ற மின் உற்பத்தியிலும் நமக்குப் பாதகம் ஏற்படும். அதன் மூலம் நமக்குக் கிடைக்கின்ற உர உற்பத்தியிலும் நமக்கு பாதகம் ஏற்படும். ரூ. 10,000 கோடியில் திட்டம் போடுகிற நேரத்தில் ரூ. 54 கோடி நெய்வேலி நிலக்கரிக்கு இந்த ஆண்டு ரூ. 15 கோடியாகக்

குறைக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் எடுத்துக்காட்டாம லிருக்க முடியாது.

இவைகளன்னியில் நாம் மத்திய அரசிடம் 1968 முதல் 1974 வரையுள்ள இந்த ஆண்டுகளில் சோழத்திபுழா, பாளையாறு, மேல்அமராவதி, சண்முகநதி, மேல் தாமிரபரணி, கீழ் மேட்டூர், மணிமுத்தாறு ஆகிய நீர்மின் திட்டங்களில் 535 மெகாவாட் மின்விசை கிடைக்கக்கூடிய திட்டங்களுக்கு நாம் கோரிக்கை வைத்துப் போராடி வருகிறோம். கிடைக்கவில்லை. மேட்டூர் அனல் மின் திட்டம் 330 மெகா வாட் கிடைக்கக்கூடிய திட்டம். அதற்கு 1972லேயிருந்து வலியுறுத்தி வருகிறோம். அதுவும் நமக்கு கிடைக்கவில்லை.

வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் சேலம் உருக்காலை பற்றி மிக உருக்கமாகப் பேசினார்கள். பிரதமர் அவர்கள் 1972ஆம் ஆண்டில் அதற்கான அடிக்கல் நாட்டு விழாவினை மிக விமரிசையாக நடத்தி வைத்தார்கள். அந்த சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக அண்ணா அவர்கள் காலத்திலேயே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து எழுச்சி நாள் எல்லாம் கொண்டாடினோம். அதற்குப் பிறகு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில், டில்லியில் நாங்கள் இருந்தபோது சேலம் இரும்பாலைத் திட்டம் அறிவிக்கப் பட்டது. பிரதமரை அனைவரும் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சென்று பாராட்டினோம். அவர்கள் அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்தார்கள். 1972இல் ஆரம்பிக்கப் பட்டு 1976இல் இந்தத் திட்டம் முடிவு அடைந்துவிடும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது. என்ன ஆயிற்று?

இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 518 கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக வேலை தொடங்க 120 கோடி ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டது. 1974 –75ஆம் ஆண்டு நிதியாண்டில் 15 கோடி ரூபாய் மத்திய அரசு இதற்காக ஒதுக்கியிருந்தும் கூட சேலம் திட்டத்திற்காக வந்து சேர்ந்தது 3 கோடி ரூபாய்தான். அதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த ஆண்டிலும் 3 கோடி ரூபாய்க்கு மேல் அளிக்கப்படவில்லை என்பதை எண்ணுகின்ற

நேரத்தில் அது அங்கே நிர்வாகச் செலவுகளுக்குத்தான் போதுமானதாக இருக்குமே யல்லாமல், சேலம் இரும்பாலை வரும் என்ற நம்பிக்கையை நாம் இழந்து விடக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. (குறுக்கீடு). ஹாண்டே அவர்கள் சொல்வது போல் அவர்கள் ஒதுக்கும் பணம் பெட்ரோல் செலவுக்குத்தான் போதும்போல் இருக்கிறது. ஆகவே, இந்த 3 கோடி ரூபாய் போதுமானதல்ல. 1972இல் ஏதோ ஒரு காரணத்திற்காக ஆரம்பித்துவிட்டு மெல்ல மெல்ல இப்போது சேலம் உருக்காலை இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்களோ என்றுதான் நாம் கவலைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

திரு. கே.டி.கே. தங்கமணி : பாராளுமன்றத்தில் பதில் சொல்லக் கூடிய நேரத்திலே தெற்கில் இருக்கும் மூன்று மாநிலங்களுக்கும் உருக்காலை சம்பந்தமாகக் கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகமாக தொகை ஒதுக்க வேண்டுமென்று அங்கே ஏன் சண்டை போடவில்லை?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர்களும் கேட்பார்கள்; நாமும் கேட்கவேண்டும் ஒன்றாகச் சேர்ந்தது. பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஹனுமந்தையா பெரிய குற்றத்தைச் சாட்டியிருக் கிறார்கள். அது – நம்முடைய தென்மாநிலங்களை எல்லாம் பாதிக்கும் அளவுக்கு ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையைக் காங்கிரஸ் கட்சியில் மிக முக்கியமான ஹனுமந்தையா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். தென்பிராந்தியங்களில் ரயில்வேக்களின் மூலதன நிதியிலிருந்து 5.5. கோடி ரூபாய் பீகாருக்குத் திருப்பி விடப்பட்டிருக்கிறது என்பது அவருடைய குற்றச்சாட்டு.

1972ஆம் ஆண்டில் திருநெல்வேலி – கன்னியாகுமரி ரயில் பாதைக்கு அடிக்கல் நாட்டு விழா நடந்த அப்போது அறிவிக்கப்பட்டது. '1976இல் ரயில் பாதை முடிந்துவிடும்' என்று இப்போது 1975ஆம் ஆண்டு நடக்கிறது. அடிக்கல் அப்படியே இருக்கிறது. அந்த ரயில் பாதை அடிக்கல் நாட்டு

விழா எவ்வளவு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தமிழ் நாட்டு மக்கள் எல்லாம் நன்கு அறிவார்கள். ரயிலுக்காக போடப்பட்டிருந்தும் இரண்டு தண்டவாளங்களைப் போலவே இரண்டு தண்டவாளங்களாகத் தான் இரண்டு கட்சிகளும் இருக்கின்றனவேயல்லாமல் இருப்புப் பாதை போடப்படவில்லை. கன்னியாகுமரியில் நடைபெற்ற அந்த விழாவோடு முடிந்துவிட்டது.

கன்னியாகுமரி ரயில் பாதை தேவை என்பதற்காகக் கட்சி சார்பற்ற முறையில் அனைவரும் வாதாடியிருக்கிறோம். அது போடப்படும் என்ற நம்பிக்கை தெரிவித்தார்கள். ஆனால் தென் பிராந்தியத்திற்கு ஒதுக்கிய 5½ கோடி ரூபாய் பீகாருக்கு எடுத்துச் செல்லப்பட்டதற்கு என்ன காரணம்? என்ன அவசியம் பீகாருக்கு ஏற்பட்டது? வேறு அவசியங்கள் பல அங்கே இருக்கின்றன. அதற்காக நாம்தான் இளித்தவாயர்கள் கிடைத்தோமா என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசிடம் நம்முடைய முறையீடுகள் எவ்வளவு தேங்கிக் கிடக்கின்றன? எந்த அளவுக்கு நாம் வலியுறுத்தி னாலும் அவை நமக்குக் கிடைக்காமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நிலச் சீர்திருத்தம் பற்றி சோஷலிஸ்டு கட்சி, காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி எல்லோருமே பேசுகிறார்கள் நிலச் சீர்திருத்தம் தேவை என்பதை. அதற்காக இந்த அவையில் எட்டுக்கு மேற்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தோம்.

குத்தகைதாரர்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்தை எட்டு வருடக் கால வரையறையிலிருந்து பத்து வருடமாக நீடிக்க வேண்டுமென்றும் ஒரு சீர்திருத்தம் 1970இல் கொண்டு வரப்பட்டது.

நிலச் சொந்தக்காரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நில உச்சவரம்பை முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்து ஒரு சட்டம் கொண்டு வரப் பட்டது. இவைகளை சாதனைகளுக்காகச்

சொல்லவில்லை. இதிலே வருகின்ற விளைவுகளுக்காகச் சொல்கிறேன்.

சர்க்கரை ஆலைகள் முன்பு உச்ச வரம்பைக் காட்டிலும் அதிகமாக நிலத்தை கரும்பு வேளாண்மைக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கை நீக்குவது;

மேய்ச்சல் நிலங்களுக்கு இருந்த விதிவிலக்கை ரத்து செய்வதற்கு 1971ஆம் ஆண்டு ஒரு சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

குத்தகைதாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பிற்கான தற்காலிக ஷரத்துக்களை நிரந்தரமாக ஆக்கப் பட்டது. இது 1972ஆம் ஆண்டு சட்டப்படி செய்யப்பட்டது.

அதற்குப் பிறகு ஒரு குடும்பத்திற்கு நாற்பது ஸ்டாண்டார்டு ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை முப்பது ஸ்டாண்டார்டு ஏக்கர் என்று குறைத்து, 1972இல் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது.

நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தை மற்றவருக்கு எழுதி வைப்பது சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்குமானால், அவ்வாறு மாற்றப்பட்ட நிலம் அவருடைய உச்ச வரம்பு நிலத்தோடு சேர்த்துக் கணக்கிடப்படும் என்று 1972இல் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இவ்வளவு சட்டங்களையும் எதிர்த்து இன்றைக்குப் பலர் நீதிமன்றங்களுக்குச் செல்ல முடிகிறது. இதை 9வது ஷெட்யூலில் சேர்த்து விடுங்கள் என்று இரண்டு மூன்று ஆண்டு காலமாக நாம் கேட்டு வருகிறோம். அப்படி இதைச் சேர்த்து விட்டால் யார் நீதிமன்றங்களுக்குச் சென்றாலும், இந்தச் சட்டங்களுக்கு எந்தப் பாதகமான தீர்ப்பளிக்கப்பட்டாலும், இந்தச் சட்டங்களை அது தொட முடியாது; ஆகவே, இந்தச் சட்டங்களை 9வது பின் இணைப்பில் சேர்த்துவிட வேண்டுமென்று அரசியல் சட்டம் 31பி பிரிவு கூறுவதற்கேற்ப, செய்யுங்கள் என்று நாம் 11.3.74இல், 4.11.74இல், 16.11.74இல், அண்மையில் 23.11.74இல் கேட்டுக் கொண்டோம். இப்படிக் கேட்டுக் கேட்டு இன்னும் இந்தச் சமதர்மத் திட்டம் – இந்தச் சட்டம்

பாதுகாக்கப்பட நாம் விடுத்த கோரிக்கை கூட, இன்றளவும் மத்திய அரசால் அரசியல் சட்டத்திலே இணைப்பதற்கேற்ற வகையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. கே.டி.கே. தங்கமணி : குத்தகை விவசாயிகள் சம்பந்தமாக வறட்சி ஏற்பட்டவுடனே இரண்டு உத்தரவுகள் போட்டோம். ரெவின்யூ கோர்ட்டுகள் ரத்தும், ரென்ட் கோர்ட்டுகள் ரத்தும் செய்யப்பட்டது. ரெவின்யூ கோர்ட் ரத்து செய்தது குத்தகை விவசாயிகளுக்கு ஓரளவு நன்மைதான். ரென்ட் கோர்ட் ரத்து செய்த பிறகு சரியான உற்பத்தி இல்லை யென்ற முறையில் குத்தகையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் என்ன செய்வது, யாரிடத்தில் போவது? குத்தகை நெல்லைத் திருப்பிக் கேட்பார்களேயானால் யாரும் ஒத்துக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதற்காக அரசு தனி உத்தரவோ, டைரக்டிவ்ஸோ போட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அது தனியான பிரச்சினை. அது பற்றி அரசு கவனிக்கும். (திரு. எஸ். வடிவேல் குறுக்கீடு) அது நான் பேசிக் கொண்டிருப்பது தொடர்பானது அல்ல. அதிலே இருக்கின்ற சிக்கலை தனியாக அரசாங்கம் கவனிக்கும்.

மத்திய அரசிடத்தில் முறையீடுகள் எப்படித் தேங்கிக் கிடக்கின்றன என்பதைக் காட்டத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். சம தர்ம அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்கள் முடங்கிக் கிடக்கின்றன என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

1973–74ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான போக்கு வரத்துக் கழகங்களின் முதலீட்டில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளும் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. அதிலே வந்த சங்கடம் என்னவென்றால் லாபத்தைப் பகிர்கின்ற நேரத்தில் வருமான வரியைச் செலுத்திவிட்டுத்தான் மீதியை பகிர்ந்திட வேண்டுமென்பது. இன்றைக்கு சூழ்நிலை – வருமான வரியைச் செலுத்திவிட்டால் பிறகு லாபத்தில் எவ்வளவு கிடைக்கும்? ஆகவே தொழிலாளர்கள் நன்மைக்காக, வருமான வரியைச் செலுத்துவதற்கு முன்பு தொழிலாளர்கள்

பங்கினைக் கொடுத்துவிட்டு, மொத்த லாபத்தில் அவர்களுக்குப் பங்கீடு கொடுத்துவிட்டு, பிறகு வருமான வரி என்ற வகையில் கம்பெனி ஆக்டை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டோம்.

பதில் வந்தது. 1974 ஜூலையில் வந்த அந்தப் பதிலில் ''மத்திய அரசு இந்தத் திட்டத்தை மிக ஆர்வத்தோடு கவனித்து வருகிறது; விரைவில் முடிவு எடுக்கப்படும்'' என்று பதில் வந்ததே தவிர வேறு இல்லை. ஆர்வம் இருக்கிறது; கவனம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது வரையிலே இந்தச் சமதர்மத் திட்டத்திற்கு – நேரிலே பல முறை எடுத்துச் சொல்லியும், தொழிலாளர்களுக்காக இந்தச் சட்டம்; நல்ல காரியத்திற்கான இந்தச் சட்டத்தை எழுந்து நடமாடச் செய்யும் திருத்தத்தை அவர்கள் செய்ய இன்றைக்கும் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நான் இதை இன்றைக்குக் குறிப்பிட விரும்பினேன்.

மால்கோ அலுமினியத் தொழிற்சாலையை தேசீய மயமாக்க வேண்டுமென்று 1973–74 நிதி ஆண்டிலே வரவு செலவு திட்டத்திலே அறிவித்தோம். பிறகு, அந்த நகலை மத்திய அரசுக்கு 27.2.73இல் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து 28.2.73இல் உள்துறைக்கும் கடிதம் எழுதினோம். பிறகு 2.3.73இல் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக பதில் வந்தது. அதற்கு அடுத்து மறைந்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர் களிடத்திலேயும் இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்தினோம். பிரதமர் அவர்களுக்கு மறுபடி நினைவூட்டி 30.07.73இல் கடிதம் எழுதினோம். இதுவரையில் மால்கோ தொழிற்சாலையை எடுத்துக் கொள்வது சம்பந்தமாக அனுப்பப்பட்டச் சட்ட நகலுக்கு நாம் கேட்ட ஒப்புதல் கிடைக்கவில்லை. இதற்குப் பிறகு எந்தப் பதிலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இந்து மத அறக் கட்டளைகள் திருத்தச் சட்டம் அதை அர்ச்சகர் சட்டம் என்று சொன்னால் அனைவருக்கும் புரியும். ஒரு குறிப்பிட்ட ஜாதியார்தான் ஆண்டவனை பூஜிக்கத் தகுந்தவர்கள், அர்ச்சிக்கத் தகுந்தவர்கள் என்று இல்லாமல், அர்ச்சிக்கத் தகுதி உடைய

தேர்வு பெறகிற அனைவரும் எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் ஆண்டவனை அர்ச்சிக்கலாம் என்ற கருத்து அமைந்த அந்தச் சட்டம் அந்த சட்டத்தை எதிர்த்து உச்ச நீதி மன்றத்திற்குப் சில பேர் சென்றார்கள். அதிலே இந்தச் சட்டம் இன்றைக்கு முடங்கிக் கிடக்கிறது. அந்த முடக்கத்தை நீக்கி இந்தச் சட்டத்தை நடை முறைக்குக் கொண்டு வருவதற்கேற்ற வகையில் அரிசனங்கள் இடம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற மத்திய அரசுக்கு நாம் பல நேரங்களில் எழுதிக் கேட்டு, நம்முடைய இந்தச் சட்டம் என்ன என்பதையும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லியும்கூட சமுதாயத்திலே அரிசன மக்களுக்கு, தாழ்ந்த மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, உயர்ந்த ஜாதி மக்களால் கொடுமைப்படுத்தப்படுகிற மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்பதற்கு, உள்ள இந்த சமதர்ம கொள்கைக்கும் இன்னும் அரசியல் சட்டம் திருத்தப்படவில்லை.

திருமதி. சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, அரிசன மக்கள் மாத்திரம்தான் அர்ச்சகராக முடியாத ஒரு நிலை இருப்பது போலவும், சமுதாயத்திலே இருக்கிற மற்றவர்கள் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற நிலை இருப்பது போலவும் அரிசனங்களுக்காக மட்டுமே இந்தச் சட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறதா என்பதற்கு முதலமைச்சரவர்களிட மிருந்து விளக்கத்தை கேட்க விரும்புகிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவரவர்களே, நம்முடைய சபையிலேயே இது சம்பந்தமாக ஏகோபித்த தீர்மானத்தை நிறைவேற்றி நாம் அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. கே.டி.கே. அவர்களுக்கு நன்றி. இப்படிப்பட்ட பல்வேறு குறைபாடுகள் ஒரு மாநில அரசின் சார்பாக எடுத்துச் சொல்லப்படுகிறது. இப்படி பல்வேறு முறையீடுகள் மத்திய அரசில் தேங்கிக் கிடக்கின்றன. இந்த மன வேக்காடு நமக்கு மாத்திரமல்ல மராட்டியத்தின் முன்னாள் முதல்வர் திரு. நாயக் அவர்களுக்கே ஏற்பட்டது. அந்த காரணத்தினால்தான் மராட்டிய முதலமைச்சர் திரு. வி.பி. நாயக் அவர்களும் அந்த மாநிலத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுள் சிலரும்

பிப்ரவரித் திங்கள் 11ஆம் நாள் 1975ஆம் ஆண்டு – இந்த ஆண்டுதான். பம்பாயிலே கூடி – மராட்டிய முதல்வரின் இல்லமான வார்ஷா ரெஸிடென்சிலே கூடி என்னென்ன காரியங்களை மாநில அரசு கேட்டு மராத்திய மாநில அரசு கேட்டு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டோ அல்லது புறக்கணிக்கப் பட்டோ, அல்லது அலட்சியப்படுத்தப்பட்டோ கிடக்கின்றன, எவ்வளவு கோரிக்கைகள் இன்றைக்கு முடங்கிக் கிடக்கின்றன என்ற புள்ளி விவரங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தையே தயார் செய்து அதை டில்லிக்கு அனுப்பி வைத்தார்கள். இது நடந்தது 1975ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் நாள் – அனுப்பியவர் சீப் மினிஸ்டர் ஆஃப் மஹாராஷ்டிரா. அவருடைய பெயர் திரு. வி.பி. நாயக் அதே மாதம் 21ஆம் தேதி அவருக்கு முதலமைச்சர் பதவி போய்விட்டது. 11ஆம் தேதி அவர் மாநிலத்திற்காக வாதாடினார். 21ஆம் தேதி முதலமைச்சர் பதவி போய்விட்டது. நீ வாதாடினால் என்ன ஆவாய் என்று கேட்கலாம். ஒரே கட்சியினுடைய ஆட்சி மராத்தியத்திலும் மத்தியிலும் இருந்த காரணத்தினால் இந்த நிலைமை திரு. நாயக் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது என்பதைத் தவிர நான் வேறு எதுவும் சொல்லி இந்த அரசியலிலே நுழைய விரும்பவில்லை.

நம்முடைய மாநில அரசு இந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டு என்ன செய்தது? இன்னும் இவைகளையெல்லாம் கேட்கிறீர்களே, சுயாட்சி, கூடுதல் அதிகாரம் என்றெல்லாம் சொல்லுகிறீர்களே என்றெல்லாம் வாதிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் இன்று ஏற்பட்ட வறட்சிக்காக நம்மால் முடிந்தவைகளை செய்திருக்கிறோம். ஆளும் கட்சி சார்பிலும், தோழமைக் கட்சிகளின் சார்பிலும் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் இந்த 8 ஆண்டு காலத்திலே கழக அரசு அண்ணா அவர்கள் தலைமையிலும் அவர்களுக்குப் பிறகு எங்களுடைய முயற்சியிலும் எந்த அளவிற்கு அரும் பெரும் சாதனைகளைச் செய்திருக்கிறதென்ற பட்டியல்களையெல்லாம் போட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் வரிசைப்படுத்தி இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணத்தை ஒட்டிக் கூட நாம் பல சலுகைகளை அளித்துள்ளதை இந்த மாமன்றம் நன்றாக அறியும். இந்த விளக்கங்களையெல்லாம் இப்போது சொல்ல விரும்பவில்லை.

இதன் தொடர்பாகச் சொல்லவேண்டுமானால் நில வரி வசூலுக்கு விலக்கு அளித்தோம். விவசாயக் கடனை ஒத்தி வைத்து, கூட்டுறவுக் குறுகிய காலக் கடனை செலுத்துவதில் சலுகை அளித்தோம். ஆயில் பம்ப் செட் வாங்க ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கினோம், பரவலாக மாநிலம் முழுவதும் பல்வேறு வறட்சி துயர் தணிப்புப் பணிகள், கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்டு, எடுக்கப்பட்டுள்ளன. விவசாய பெருங்குடி மக்களுக்காக துயர் தணிப்பு வகையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் இவைகள். வறட்சியின் விளைவாக இப்போது சில புதிய அறிவிப்புக்களை நான் செய்ய விரும்புகிறேன். வறட்சியின் விளைவாக கூட்டுறவு கடன்களை வாங்குவதில் உள்ள சங்கடங்களை உணர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு தக்காவிக் கடன்களை தரவேண்டுமென்று என்னிடம் முறையீடுகள் வந்திருக்கின்றன. ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் தோழமை கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் என்னிடத்தில் வலியுறுத்திச் சொன்னார்கள். தூதுக் குழுவாக வந்து சொன்னார்கள். பல்வேறு பகுதியிலிருந்தும் விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த கோரிக்கையை வைக்கிறார்கள். அதாவது, மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து கிணறுகளை ஆழப்படுத்த தக்காவிக் கடன் தரவேண்டுமென்ற கோரிக்கை. இந்த கோரிக்கையின் இன்றியமையாமையை இந்த அரசு உணர்ந்து கிணறுகளை ஆழப்படுத்த குறைந்தது 500 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரைக்கும் தக்காவிக் கடன் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இதற்கான முதல் கட்டமாக 5 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது அறிவிப்பு, அக விலைப்படிக் குழு அளித்த பரிந்துரையில் இனிமேல் அக விலைப்படி தரும்

போது அரசு ஊழியர்களுக்கு அளிக்கும் அக விலைப்படியில் 33/80 பங்கை ஓய்வூதியம் பெறுகிறவர்களும் அளிக்க வேண்டுமென்று பரிந்துறை செய்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு நாம் தற்போது அகவிலைப்படி உயர்வு ரூபாய் 20 முதல் 30 வரை வழங்கியிருப்பதையொட்டி ஓய்வு ஊதியம் பெறுகிறவர் களுக்கு 8 ரூபாய் அளவில் என்று கூடுதலாக வழங்க முடிவு செய்திருக்கிறோம். பொங்கலின் போது அறிவிக்கப்பட்ட 5 ரூபாய் அகவிலைப்படி உயர்விற்குப் பதிலாக 8 ரூபாய் உயர்வு கிடைக்குமென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அவர்கள் பெற்று வந்த 20 ரூபாயோடு இந்த 8 ரூபாயும் சேர்ந்து 28 ரூபாயை அகவிலைப்படியாக அவர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள். இதனால் ஓய்வூதியம் பெறகிற 62 ஆயிரம் பேர்கள் இதனால் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவது அறிவிப்பாக, 14.1.1970க்கு முன்பு ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்கள் 25 ரூபாய்க்கு அல்லது அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் கால் பகுதி எது அதிகமோ அதை தற்காலிக ஓய்வூதியமாக அட் ஹாக் பென்ஷனாக 14.1.1970 முதல் பெற்று வந்தார்கள். 1.4.1974 முதல் இவர் களுக்கு 10 ரூபாய் ஓய்வூதியம் உயர்த்தப்பட்டது. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் குறைந்த ஓய்வூதியமான 50 ரூபாய் என்பது போல் ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்களுக்கும் 1.4.1975 முதல் குறைந்த அளவு ஓய்வூதியமாக ரூபாய் 50 அளிக்கப் படுமென்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து நீலகிரி மாவட்டத்திலேயே உருளைக் கிழங்கு பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் இண்டோஜெர்மன் நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது ஆண்டு விவசாயத்திற்கு அவர்கள் ஒரு ஏக்கருக்குக் கட்ட வேண்டிய 'தசனித்' என்ற பூச்சிகொல்லி மருந்துக்காக கட்ட வேண்டிய தொகையையும், வறட்சியின் காரணமாக செலத்த முடியாத நிலைமை இருப்பதைத் தெரிவித்தார்கள். நான்காவது, ஐந்தாவது

ஆண்டுகளில் உருளைக் கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் மொத்தப் பரப்பளவு 3,417 ஏக்கர், இதற்குக் கட்ட வேண்டிய பூச்சிக் கொல்லி மருந்துக் கட்டணமாகிய பத்து இலட்சம் ரூபாய் ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும், உணவு வழங்கும் நிறுவனத்திற்குப் பயன்படும் வகையிலும், அரசின் பல்வேறு துறைகள் பொருள் போக்கு வரத்திற்கு தனியார் துறையினை நம்பிடும் போக்கைப் படிப் படியாகக் குறைக்கவும் தமிழக அரசு தமிழ் நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் (Tamil Nadu Goods Transport Organisation) ஒன்றை நிறுவ தீர்மானித்துள்ளது. இதனுடைய முதலீடு 120 இலட்சம் ரூபாய் ஆகும்.இதில் நாற்பது இலட்சம் ரூபாய் ஆரம்ப முதலாகவும், ரூபாய் எண்பது இலட்சம் வங்கிகள் மூலம் பெறும் கடனாகவும் அமையும். இந்த நிறுவனம் 100 லாரிகளோடு ஆரம்பித்து, படிப்படியாக தன்னுடைய எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளும். ஆரம்பத்தில் சுமார் 600 பேரும், இரண்டு மூன்றாண்டுகளில் இரண்டாயிரம் பேரும் முன்னாள் இராணுவத்தினர் இதன் மூலம் பயன்பெறுவார்கள். 'முதலீட்டில் பங்கு நிர்வாகத்தில் பொறுப்பு' என்ற இந்த அரசின் கொள்கைக்கு ஏற்ப, முதலீட்டில் இருபத்திநான்கு சதவிகிதம் தொழிலாளர்களுக்கு பங்காக அமையும். நிர்வாகக் குழுவில் இரு தொழிலாளர்கள் இடம் பெறுவார்கள். இதன் தலைமையகம் சென்னையிலே அமையும். இத்திட்டம் மேலும் வளர இந்திய அரசின் முன்னாள் இராணுவ மறுவாழ்வுத் துறை உதவியை இது வரையில் வழங்க முன்வரவில்லை என்றாலும், இனிமேலாவது முன் வந்து உதவி வழங்கிடுவார்கள் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்து, இத்திட்டத்தை இங்கே மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : பல அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உத்தரப் பிரதேசத்தில் அரிசனங் களுக்குள்ள கடன்களை எல்லாம் அரசு ரத்து செய்திருப்பதைப் போல இங்கே ரத்து செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவைகளைப் பற்றி எல்லாம் நிதி ஆதாரத்திற்கேற்ப பரிசீலிக்க வேண்டும், சொல்லிக் கொண்டே வரும் போது அதைச் செய்வீர்களாக, இதைச் செய்வீர்களா என்றுகேட்டுக் கொண்டிருந்தால், பட்ஜெட் உரைக்கு நான் தருகிற பதிலாக இது அமையாமல் போய்விடும்.

'அதிகாரங்களை வைத்துக் கொண்டு என்ன சாதித்து விட்டீர்கள்? பிறகேன் கூடுதல் அதிகாரம், மாநில சுயாட்சி கேட்கிறீர்கள்?' என்றெல்லாம் இங்கே கேட்கப்பட்டது. எட்மண்ட் அவர்கள் இன்று மிகத் தெளிவாக மாநில சுயாட்சி என்றால் கூடுதல் அதிகாரம், கூடுதல் அதிகாரம் என்றால் மாநில சுயாட்சி என்று கூறிவிட்டார்.

திரு. க.உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. உங்களுக்கு மாநில சுயாட்சி என்றால் தன்னாட்சி; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் மாநில சுயாட்சி என்றால் அது கூடுதல் அதிகாரம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) அவ்வளவுதான். தி.மு. கழகத்திற்கு மாநில சுயாட்சி என்றால் கூடுதல் அதிகாரம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாநில சுயாட்சி என்றால் கூடுதல் அதிகாரம், அதைத்தான் சொல்லுகிறேன்.

திரு. க.உரொ. எட்மண்ட் : நான் ஏற்கெனவே என்னுடைய வாதத்தில் சொல்லியிருக்கிறேன். மாநில சுயாட்சி என்ற வார்த்தையை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் நாங்கள் கூடுதல் அதிகாரம் கேட்கிறோம். நாங்கள் மாநில சுயாட்சி என்று சொல்லி கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், தன்னாட்சி என்ற முறையில் உங்களுடைய கருத்து இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அது தன்னாட்சி இல்லை என்பதற்கு பிறகு வருகிறேன். நேரம் ஆனாலும் பரவாயில்லை.

தலைவரவர்களே, இங்கே நம்முடைய கே.டி.கே. அவர்கள் பாரம்பரியம் பற்றி எல்லாம் பேசி சிங்காரவேலுவை நீங்கள் மறந்து விட்டீர்கள் என்று சொன்னார். பிறகு திடீரென்று கோபம் வந்து விட்டது. யார் யாரைப்பற்றி யெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள், சிங்காரவேலர், சர்க்கரைச் செட்டியார் இவர்களைப் பற்றி எல்லாம் பேசவில்லை என்று குறிப்பிட்டு, பெரியாரோடு நிறுத்தினார். அண்ணாவை அந்த நேரத்தில் அவர் மறந்த காரணத்தால் சொல்லாமல் இருக்கலாம். அதனால் அவர் மனத்தில் அண்ணா இல்லை என்று நான் கருதமாட்டேன். சிங்காரவேலுவை யாருக்குத் தெரியும்? என்.வி.எனக்குத் தான் தெரியும் என்றார். உடனே, அரங்கண்ணல் எல்லோருக்கும் தெரியும் என்றார்.

ஒரு புத்தகம் 'மனிதருள் மாமேரு' லெனினைப் பற்றி எல்.வி. மித்ரோகின் என்பவர் எழுதிய புத்தகம். அதிலே அவர் குறிப்பிடுகிறார். 'மதம் பற்றி லெனின்' என்ற தலைப்பில் 1933இல் அவரது மேற்பார்வையில் ஒரு நூல் வெளிவந்தது. அரியதொரு புத்தகமான இதனைக் கண்டுபிடிப்பது எளிதா யிருக்கவில்லை. ராமசாமி நாயக்கரிடமோ, முருகேசனிடமோ இந்த நூல் இல்லை. 'குத்தூசி' என்ற தமிழ் வாரப் பத்திரிகையின் ஆசிரியரும், ஒரு பெரும் புத்தக விரும்பியும், அரிய நூல்களைச் சேகரிப்பவருமான திரு. எஸ். குருசாமியை அணுகுமாறு அவர்கள் எனக்கு ஆலோசனை கூறினர். சென்னை நகருக்கு சற்று வெளியேயுள்ள ஒரு சிறிய வீட்டிற்கு நாங்கள் சென்றோம். நுழை வாயிலில் 'குருசாமியும், குமாரி ருஷ்யாவும் இங்கே வசிக்கின்றனர்' என்ற அறிவிப்புப் பலகையை நாங்கள் கண்டோம். திரு. குருசாமி எங்களை அன்புடன் வரவேற்று அவரது அழகிய மகள் குமாரி ருஷ்யாவை எங்களுக்கு அறிமுகம் செய்தார். 'நானும் மறைந்த எனது மனைவியும் 'அவர் ஒரு கம்யூனிஸ்ட்' சேர்ந்து எங்கள் மகளுக்கு 'ருஷ்யா' என்று பெயரிட்டோம். இப்போது அவள் பெரியவளாகி டாக்டராகியுள்ளாள். சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டவள் என்ற முறையில் நான் 200 குழந்தைகளுக்கு லெனின் என்று பெயர்

சூட்டியிருக்கிறேன். அவர்களில் பலரும் அதன் விளைவாகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது'' என்று எழுதியிருக்கிறது. திரு. குருசாமி சொன்னதாக ருஷ்ய எழுத்தாளர் குறிப்பிட்டு இருக்கிறார்.

திரு. கே.டி.கே. தங்கமணி : நான் சொன்னேன். மதம் பற்றி, லெனின் என்ற புத்தகம் 1924இல் லெனின் இறந்த பிறகு 10ஆண்டு காலத்தில் லெனின் புத்தகங்கள் எல்லாம் என்னென்ன வெளியிடப்பட்டு இருக்கின்றனவோ அவையெல்லாம் லெனின் நிலையத்தில் வைத்து இருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்ட புத்தகமும் 1932ஆம் வருஷம் வெளியிடப்பட்ட புத்தகம்: விடுபட்டுப் போய் இருக்கலாம். அங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில், நான் சிங்காரவேலரைப் பற்றி சொன்னது – திராவிடர் கழகம் எந்த அளவுக்கு மரியாதை காட்டினார்கள் என்பது வேறு விஷயம் விஜயவாடா மாநாட்டைப் பற்றிச் சொல்லி, விஜயவாடாவில் கட்சி ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. 50 ஆண்டுகள் விழா கொண்டாடுகிற நேரத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு 1925ஆம் வருஷம் நடைபெற்றது. கான்பூரில் நடைபெற்றது. 1926ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி, அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் சிங்காரவேலர் என்று சொல்லி, சர்வதேச அமைப்பான கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பை இங்கே ஏற்படுத்தியவர் சிங்காரவேலர் என்பதற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எங்களுக்குத் தொடர்பு இல்லாமல் போய்விட்டது என்கிற கருத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அந்தப் புத்தகத்தைத் தேடவே குருசாமி வீட்டிற்குத் தான் வந்தார்கள். அதற்குப் பிறகு விடுதலை ஆசிரியர் வீரமணி தனது பத்திரிகையின் வாசகர்கள் யாரிடமேனும் அந்நூலின் பிரதி இருக்குமா எனக் கேட்டு பத்திரிகையில் ஒரு கோரிக்கை விடுத்ததின் மூலம், அந்த நூலை ஒருவர் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் என்று அந்த ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆகவே, நான் இதைச் சொல்வதற்குக் காரணம் சிங்கார வேலருக்கும், எங்களுக்கும் உள்ள தொடர்பு இன்றளவும்

நீடித்துக் கொண்டுதான் போகிறது என்பதற்காகத்தான். இந்த ஆசிரியரே, குருசாமி 200 பேருக்கு லெனின் என்று பெயரிட்டதைக் கூட குறிப்பிட்டு இருக்கிறார்.

நண்பர் சுப்பு பேசும்போதுகூட கம்யூனிஸ்ட் என்பதில் எப்போதும் மாஜியாக இருக்க முடியாது. எல்லோரும் கம்யூனிஸ்ட்டுகள்தான். அந்தக் கொள்கையை ஒத்துக் கொண்டால் என்று சொன்னார். பெரியவர் மணலியும் அதைத் தான் குறிப்பிட்டார். குருசாமி இருநூறு பேர்களுக்கு லெனின் என்று பெயரிட்டேன். நான் என்னுடைய மகனுக்கு ஸ்டாலின் என்ற பெயரிட்டார். இப்போது கம்யூனிட் கட்சி ஸ்டாலினை எந்த அளவிற்கு அணுகி வருகிறது என்பது எனக்குத் தெரியாது. ஸ்டாலின் இறந்த நேரத்தில் பிறந்த பிள்ளைக்கு ஸ்டாலின் என்று பெயர் வைத்தேன். ஒரு பிள்ளை முத்து, இன்னொருவன் அழகிரி, இன்னொருவன் ஸ்டாலின், இன்னொருவன் தமிழ். இந்த நால்வருக்கும் ஏன் இப்படி பெயர் வைத்திருக்கிறீர்கள் என்று கூட ஒருவர் எழுதிக் கேட்டார். நான் அதற்குச் சொன்னேன். 'முத்து என்பது வீட்டிற்காக, அழகிரி நாட்டிற்காக, தமிழ் என்பது மொழிக்காக, ஸ்டாலின் என்பது உலகத்திற்காக' என்று பெயர் வைத்திருக்கிறேன் என்று பதில் எழுதினேன்.

லெனின் என்று பெயர் வைத்துக் கொண்ட காரணத்தால் எப்படி சிலர் சங்கடப்பட்டார்களோ அதைப் போல, ஸ்டாலின் என்று பெயர் வைத்த காரணத்தால் என்னுடைய மகனுக்கு ஒரு கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். பெயரை மாற்றிக் கொண்டு வா, சேர்த்துக் கொள்கிறோம் என்றார்கள். கல்லூரி வேண்டாம், பெயர் நிலைக்கட்டும் என்று அதற்குச் சொல்லிவிட்டேன். ஆகவே, இந்தத் தத்துவங்களில் எங்களுக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு என்பதை எடுத்துச் சொல்வதற்காகவும், சிங்காரவேலர் போன்ற பகுத்தறிவுவாதி களுடைய அந்தக் கோட்பாடுகளை இன்றளவும் கழகத்தில் இருக்கிற நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கவும் தான் இதைச் சொன்னேன்.

வரவு செலவுத் திட்டத்தின் இறுதிப் பகுதியில் மாநில சுயாட்சி பற்றி சில பக்கங்கள் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்

கொண்டு, பேசிய அனைவரும் பெரும் பகுதி மாநில சுயாட்சி பற்றிப் பேச அதிக நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

''ஜெயப்பிரகாஷ் நாராயணனோடு உங்களுக்கு என்ன தொடர்பு, அவரோடு நீங்கள் சேரலாமா'' என்றெல்லாம்கூட சில பேர் கேள்வியாகக் கேட்டார்கள். ஜெயபிரகாஷ் நாராயணனோடு இந்திரா காந்தி அம்மையாருக்கு தகராறு வந்தது இப்போது; பீகார் மாநிலத்தில் ஜெயப்பிரகாஷ் போராட்டம் ஆரம்பித்தது இப்போது, ஆனால் 1972ஆம் ஆண்டிலேயே ஜெயப்பிரகாஷ் நாராயணன் 'பீப்பிள்ஸ் ஆக்ஷன்' என்கிற ஒரு தலைசிறந்த பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே ஜெயப்பிரகாஷ் நாராயணன், வினோபா பாவே போன்றவர்கள் எல்லாம்கூட எழுதியிருக் கிறார்கள். 1972லேயே ஜெயப் பிரகாஷ் சொல்கிறார். ''ஷேக் அப்துல்லாவோடு மோதாதீர்கள், அழைத்துப் பேசுங்கள்'' என்றெல்லாம் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் மேலும் குறிப்பிடுகிறார்.

The only question that may still be considered to be relevant is that of the quantum of autonomy that Jammu and Kashmir should enjoy within the Union of India and Jammu and Ladak regions in their turn should enjoy within the constitutional framework of that State. But this is not a question in any way peculiar to Jammu and Kashmir. There are several States in this country which have been demanding larger measure of autonomy. There is for instance the Rajammannar Committee's report in regard to Tamil Nadu but at the same time it must be recalled. with pride, the ringing words of Chief Minister Mr. Karunanidhi which he is recently reported to have spoken at a public meeting at Thanjavur. "The demand for greater autonomy to the States," he declared, "was never meant to divide the country but only to promote the welfare of the people -". The Prime Minister Mrs. Indira Gandhi herself could examine the demand for more powers to the State for advancing the people's interest without in any way affecting the unity and integrity of the country.

பிறகு சொல்கிறார்.

There is enough flexibility in our Constitution and our Central and State leaders have been wise enough to appreciate the limits within which the demand for autonomy may be pressed. I myself have been a consistent advocate of a much larger measure of autonomy to the states in view of the vastness of our population and diversity of our problems.

ஜெயபிரகாஷ் நாராயணனுக்கும் எங்களுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பதற்கு இதைவிட வேறு என்ன காரணம் உங்களுக்கு நான் சொல்ல வேண்டும் என்று கருதுகிறீர்கள்? இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங் களுக்கும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளைப் பேசித் தீர்க்க வேண்டும். விவாத மேடைக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஜெயப்பிரகாஷ் 1972ஆம் ஆண்டே திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வைத்த மாநில சுயாட்சி கோரிக்கையில் பிரிவினை வாதம் கிடையாது. இந்திய ஒற்றுமைக்கு எந்தவிதமான பங்கமும் கிடையாது அதை அந்தக் கட்சியின் தலைவர் தஞ்சை பொதுக் கூட்டத்தில் சொல்லி இருக்கிறார் என்று குறிப்பிட்டு நீங்கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராகுங்கள் என்று ஜெயப்பிரகாஷ் கேட்டு இருக்கிறார்.

1972இல் அவர் சொன்னதில் ஒன்றை இப்போது கேட்டு இருக்கிறார்கள். இதை பிறகு கேட்பார்கள் என்று நாம் எதிர்பார்ப்போம். ஷேக் அப்துல்லாவோடு படை கொண்டு மோதாமல் திரு. செழியன் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதைப் போல பனிப்பாறைகளில் கொண்டுபோய் அவரைச் சிறையில் வைக்காமல் 13 ஆண்டுக் காலம் சிறையில் பூட்டாமல் பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்த்துக் கொண்டு இருந்தால் காஷ்மீர் பிரச்சினை எப்போதோ முடிவு அடைந்திருக்கும். அதைப் போலவேதான் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பாரதத் தாய், என்று மகிழ்ச்சியோடு பேசுகிறோம். ஆனால் மாநிலங் களுக்கு அதிக அதிகாரங்களை சுயாட்சி தன்மையை வழங்க வேண்டும் என்று கேட்டால் காஷ்மீர் தனி என்று சொல்கிறார்கள். கன்னியாகுமரி முதல் காஷ்மீர்வரை என்கிற

அந்தத் தத்துவம் அதற்கு மட்டும் அடிபட்டு போவானேன் என்று நாம் இன்றைக்கு கேட்கிறாமே அல்லாமல் வேறல்ல.

பல அறிஞர்கள் மாநில சுயாட்சி தத்துவத்தை தேவை என்று எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். முன்னாள் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி திரு. சுப்பாராவ் அவர்கள் சென்னையில் 20.06.1974 அன்று பேசுகையில் மாநிலத்தில் வாழும் மக்கள் நல்வாழ்வுக்கு அத்தியாவசியமான எத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசை விட மாநில அரசு செம்மையாக நிறைவேற்ற முடியுமோ அத்தகைய அதிகாரங்களை மத்திய அரசின் தலையீடுகள் குறுக்கீடும் இன்றிய பிரயோகிக்கும் மாநில அரசுக்குள்ள அரசுரிமை Soverign என்பதற்குப் பெயர்தான் சுயாட்சி என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

கேரள காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜார்ஜ் அவர்கள் 10.05.1974இல் பாதுகாப்பு, தகவல், ஒலிபரப்பு வெளிநாட்டு விவகாரங்கள் ஆகிய அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டு மீதம் உள்ள எல்லா அதிகாரங்களையும் மாநில அரசுகளுக்கு வழங்க முன் வரவேண்டும் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்.

பழைய காங்கிரஸ் கட்சியின் கர்நாடக மாநில தலைவர் திரு. வீரேந்திர பட்டீல் சென்னையில் 9.6.1974இல் கலைவாணர் அரங்கத்தில் பேசும்போது மாநில சுயாட்சி என்னும் புனிதப் போரில் தமிழக முதல்வர் நிச்சயம் வெற்றி வாகை சூடுவார். மாநில சுயாட்சிக்காக திரு. கருணாநிதி புனிதம் மிக்க போரைத் தொடர்ந்திருக்கிறார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை. பல்வேறு துறைகளில் அதிக சுயாட்சி தேவை. அப்போதுதான் தவறுகள் இழைக்கும் மத்திய அரசின் பிடியில் சிக்காமல் மாநிலங்கள் பாதுகாப்போடு இருக்க முடியும். இந்த விஷயத்தில் திரு. கருணாநிதி அவர்களின் வாதத்தை முழுவதும் ஒப்புக் கொள்ளுகிறேன். இந்தப் புனிதப் போரில் அவர் வெற்றி பெறுவார் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

இன்னும் பல பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திருமதி. சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் மன்னார்குடி மாநாட்டில் பேசும்போது மாநில சுயாட்சிக் கோரிக்கையை

மிக சாதாரணமாகக் கருதுகிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் இதற்காக போராடியதற்காக இந்த கோரிக்கையில் வெற்றி பெற்றதற்காக நாடு நம்மை பாராட்டத்தான் போகிறது. நேரு அவர்களும் அம்பேத்கார் அவர்களும் State autonomy என்பதை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது மனப்பூர்வமாக அதை வரவேற்றவர்கள் இப்போது அதே மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பிரிவினை வாதம் என்பது வேடிக்கையாக இருக்கிறது என்று முழங்கி இருக்கிறார்கள்.

இப்போது மாநில சுயாட்சி பெற்றிருக்கிறதே அந்த காஷ்மீருக்குச் சென்ற என்னுடைய இனிய நண்பர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கும் மாநில சுயாட்சி கோரிக்கை பிரிவினை உணர்ச்சியை அடிப் படையாக கொண்டது அல்ல என்று, எட்மண்ட் அவர்களே (சிரிப்பு) அங்கேயே கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறியிருக் கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் கூறி வரும் சுயாட்சி கோரிக்கை பிரிவினை உணர்ச்சியை அடிப்படையாக கொண்டது அல்ல. மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும் என்ற கோரிக்கைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் பொது மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. இந்தியாவிலிருந்து தமிழகம் பிரிந்து செல்ல வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறவில்லை. மாநிலங்களின் கையில் கூடுதல் அதிகாரம் இருக்க வேண்டும் என்றுதான் கூறுகிறது. இது 18.05.1972இல் எம்.ஜி. இராமச்சந்திரன் நிருபர்களுக்குத் தந்த பேட்டியாகும்.

இன்றுள்ள அரசியல் சட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும். மாநில சுயாட்சி பற்றிய கலைஞரின் கருத்தை ஏற்காவிட்டால் இதே கோரிக்கை எல்லா மாநிலங்களிலும் பரவி இந்தியா சின்னாபின்னமாகும். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு பெரும் துணையாக விளங்கும் மாநில சுயாட்சி கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவேண்டும். இது நீலகிரி திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் திரு. கோவை செழியனுடைய முழக்கம்.

I am the spokesman of the DMK party in Parliament. Do not belittle the importance of my position as the leader of the party

in Parliament. And my Chief Minister Mr. Karunanidhi has categorically declared that we will never revive our demand for separation. On the contrary we want State Autonomy.

இது என்னுடைய இன்னொரு இனிய நண்பர் திரு.மனோகரன் பாராளுமன்றத்தில் மார்ச் 21ஆம் தேதி ஆற்றிய உரை.

மாநில சுயாட்சி என்பது புதிதாக நாம் சொல்லும் கோரிக்கை அல்ல. அண்ணா அவர்களே சொன்னதாகும். எதிர்க்கட்சியாக இருந்தபோதே டில்லிக்கு காவடி தூக்குகிறீர்களே என்று அண்ணா கேட்டார். அதற்கு அர்த்தமே அங்கே போய் சாதிக்கிற அதிகாரம் இங்கே நம்மிடமே இருந்தால் என்ன என்பதுதான். ஆகவேதான் மாநில சுயாட்சி என்பது அண்ணா அவர்களே சொன்னதாகும். இது தர்மபுரி மாநாட்டில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பேசியதாகும்.

இப்போது ஒரு புதிய குரல் இன்னும் பத்திரிகையில் பார்த்தோம். பஞ்சாப்பில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குரு சரண்சிங் தாரா என்பவர் ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டது போல் எல்லா மாநிலங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மாநிலங்கள் அனைத்துக்கும் முழு அளவில் சுயாட்சி வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டு முதல்வர் திரு. கருணாநிதி கூறி வருவதுபோல் அயலுறவு. பாதுகாப்பு, தகவல் தொடர்பு ஆகியவை தவிர மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற இந்தக் கருத்தை அகாலி தள தலைவர் கூறியிருக்கிறார்.

1942ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது.

A resolution of the September Plenary meeting of the Central Committee, based on report by G. Adhikari, definitively out lined the Party's new orientation. Its critical passage was as follows:-

"Every section of the Indian people which has a contiguous territory as its homeland, common historical tradition, common language, culture, psychological make-up and common economic life

would be recognised as a distinct nationality with the right to exist as an autonomous state within the free Indian Union or Federation and will have the right to secede from it if it may so desire..... Thus, free India tomorrow would be a federation or union of autonomous States of the various nationalities such as the Pathans, Western Punjabis, Sikhs, Sindhis, Hindustanis, Rajasthanis, Gujaritis, Bengalis, Assamese, Beharies, Oriyas, Andhras, Tamils, Karnatiks, Maharashtrians, Keralas, etc."

அந்த அளவுக்கு 1942ஆம் ஆண்டிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாட்டுக்குத் தேவையான இந்த தீர்மானத்தில் இந்தத் தேசீய இனங்கள் எல்லாம் தனித் தனி கலாசாரங்கள் வரலாற்றுத் தொடர்பு கொண்டவை. ஆகவே இவைகள் எல்லாம் இந்திய யூனியனில் சுயாட்சி பெற்ற தன்மையோடு விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அதே 1942ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட, ஏ.ஐ.சி.சி. மாநாட்டில் போடப்பட்ட ஒரு தீர்மானம்:

"The constitution according to the Congress view should be a federal one, with the largest measure of Autonomy for the federating units with the residuary powers vesting, in these units." - A.I.C.C. 8th August Resolution 1942.

இது வெள்ளையனே வெளியேறு என்று சொன்ன நேரத்தில் இந்திய நாட்டு மக்களக்குத் தரப்பட்ட உறுதிமொழி. இது காங்கிரஸ் கட்சி தந்த உறுதிமொழி. இதைத்தான் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி, கூடுதல் அதிகாரம், மத்தியிலே கூட்டாட்சி என்கின்ற வகையிலே எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. நாம் இதற்காகப் போராடத் தேவையா? அரசியல் சட்டம் திருத்தப்பட்டால் போதாதா என்ற வாதங்கள் வைக்கப்பட்டன. ஷேக் அப்துல்லா போல் கருணாநிதி சிறைக்குச் செல்வதாகச் சொன்னாரே, அவர் சிறை செல்ல வேண்டுமா என்று ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அனுதாபத்தோடு கேட்கப்பட்டது. செல்லாமலேயே மாநில சுயாட்சி தருகிறோம்

என்று ஒருவேளை அவர்கள் கூறுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்கு முன் கூட்டியே அச்சாரமாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் மணலி அவர்கள் பேசிய நேரத்தில் நான் இங்கு இல்லை. இங்கே இல்லாவிட்டாலும் அவர்களுடைய பேச்சைப் படித்துப் பார்த்தேன். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். போராட்டம் இல்லாமல் லட்சியங்களில் வெற்றிபெற முடியாது என்ற உணர்வை பெயரிவர் மணலி அவர்கள் தன்னுடைய உரையிலே எடுத்துக் காட்டினார்கள். நான் ஷேக் அப்துல்லாவை என் இல்லத்திலே சந்தித்த நேரத்திலும், ஜெயபிரகாஷ் நாராயண் அவர்களை டெல்லியில் சந்தித்த நேரத்திலும் பெற்ற உணர்வுகள் அவைகள்தான். என்ன உரையாடினேன் என்பதெல்லாம் வேறு விவகாரம். ஆனால் நான் பெற்ற உணர்வுகள், 'தியாகங்கள் செய்வதற்கு யார் தயாராக இருந்தாலும் அவர்கள் லட்சியங்களில் நிச்சயமாக வெற்றி பெற முடியும்' என்பதுதான்.

அப்படியானால் பதவியை விட்டு வெளியே வாருங்களேன் என்று அழைக்கிறார்கள். அழைப்பதற்கான அவசரம் என்னவென்றால் யார் யார் என்னென்ன மந்திரிகள் என்று இப்போதே நிர்ணயித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனே வந்து உட்கார்ந்துவிடலாம் என்று பார்க்கிறார்கள். பதவியை விட்டு கருணாநிதியோ, நாவலரோ, பேராசிரியரோ, மற்றவர்களோ போய்விட்டால், மிச்சம் இருக்கிற 160 பேரும் இங்கே உட்கார்ந்திருப்பார்கள்; அவர்களை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தலாம் என்று யாராவது கருதினால் அது பகல் கனவு; பதவியை விட்டு போராட்டத்தில் தி.மு.கழகம் இறங்குகிறது என்றால் அத்தனை பேரும் இறங்குகிறார்கள் என்றுதான் அர்த்தம். அதற்குரிய காலம் வரத்தான் போகிறது. அந்த நேரத்தில், அந்தப் போராட்ட நினைவோடு, உணர்வோடு மாநில சுயாட்சி பெறுவதற்கு அண்ணா வழியில் நாங்கள் அயராது பாடுபடுவோம்; பாடுபடுவோம் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

உரை : 15 நாள் : 03.08.1977

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, அறிவாற்றல் மிகுந்த என்னுடைய அருமை நண்பர் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்துள்ள நிதி நிலை அறிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிட்டு இந்த மாமன்றத்திலே அவர் வைத்துள்ள இந்த அறிக்கையில் எதிர்க்கட்சிகளின் சார்பாக பல்வேறு கருத்துக்கள் குறிப்பிட்ட போதிலும் நிதி அமைச்சர் அவர்கள் புதிய அரசின் சார்பாக முதல் தடவையாக வைத்துள்ள இந்த அறிக்கையின் மீது கருத்து மாறுபாடுகளை நான் கூற வேண்டியவனாக இருந்தபோதிலும் நிதிநிலை அறிக்கையை அவையிலே வைத்த நிதி அமைச்சர் அருமை நண்பர் மனோகரன் அவர்களை நான் வாழ்த்துகின்றேன்; பாராட்டுகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையினுடைய விவாதம் தொடங்கியபோது, கழகத்தின் சார்பில் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் கருத்துக்களை எடுத்துரைத்து இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டதை வைத்து இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் பலரும் அவர்களுடைய விமர்சனங்களைச் செய்தார்கள்.

பேராசிரியர் நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டு, முடிக்கின்ற நேரத்தில் இந்த அறிக்கையிலே உப்பு இல்லை. ஆகவே சப்பென்றிருக்கிறது என்று குறிப்பிட்டார். அதற்கு எப்படியாவது பதில் சொல்லியே தீர வேண்டுமென்ற முறையிலே ஆளுங்கட்சியின் சார்பிலே பேசிய ஒரு உறுப்பினர். இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல்,

ஏற்கனவே கழக அரசின் சார்பில் இங்கே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை சாக்கடையாக இருந்தது. சாராய வாடை வீசியது. என்றெல்லாம் பேச்சைத் தொடங்கி விவாதத்திலே ஒளி ஏற்றுவதற்குப் பதிலாக, கொஞ்சம் வெப்பம் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினார். அவரே கூட சொல்லி இருக்கலாம். ''எங்கள் நிதியமைச்சர் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையிலே உப்பில்லை என்று பேராசிரியர் சொல்கிறார். உங்களுடைய நிதியமைச்சர் கருணாநிதி கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையிலே புளியில்லை. காரம் இல்லை, உறைப்பு இல்லை'' என்று கூறியிருக்கலாம். அதற்குப் பதிலாக, சாராய வாடை வீசியது, சாக்கடை மணம் கமழ்ந்தது என்றெல்லாம் கூறி விவாதத்திலே அந்த அளவுக்குச் சூடேற்றியிருக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினர் நேற்றைய தினம் பேசும்போது குறிப்பிட்டார். ''தி.மு.க. அரசிலே மக்களெல்லாம் நோயாளிகளாக ஆக்கப்பட்டு விட்ட காரணத்தால், அவர்களுக்கு உப்பில்லாப் பத்தியம் தேவைப்படுகிறது. எனவே இந்த அறிக்கை உப்பில்லாமல் அமைத்திருக்கிறது' என்று பேராசிரியர் எடுத்துச்சொன்ன கருத்தை அவர் ஒப்புக்கொள்கிற வகையில் 'ஆமாம் உப்பில்லை', என்று அவரே நேற்றையதினம் எடுத்துச்சொன்னார்.

நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பது என்பது ஒன்று, சில நேரங்களில் நோய் இல்லாதவர்களுக்கு மருந்து கொடுப்பதன் மூலம் ஆபத்தை உருவாக்குவது ஒன்று. சில நேரங்களில் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கத் தெரியாதவர்கள் பச்சைவெட்டு மருந்தைக் கொடுத்து அதன் காரணமாக, நோயாளிகளை இறப்புலகுக்கு அனுப்புவது ஒன்று. எனவே மருந்து கொடுக்கின்ற நேரத்தில் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் கூறப்பட்டதே தவிர, எதிர்க்கட்சிகள் சார்பிலே நிதிதிலை அறிக்கையை எப்படியாவது தாக்கித் தீர வேண்டும், எதிர்த்தே தீரவேண்டுமென்றல்ல. சில ஆக்க பூர்வமான யோசனைகளையும் எடுத்துச்சொல்லக் கடமைப்

பட்டிருக்கின்றோம். உப்பில்லை என்று சொன்னதை பெரிய குற்றச்சாட்டாக நிதியமைச்சர் கருதிக் கொள்ளமாட்டார் என்றே கருதுகின்றேன். நமது வீடுகளில் கூட சில நேரங்களில் குழம்போ ரசமோ வைக்கிற நேரத்தில், உப்புக் குறைவாக இருக்குமானால் – அதிகமாகப் போய்விட்டால்தான் ஆபத்து. உப்பு குறைவாக இருக்குமானால், அதை எடுத்துச்சொல்ல வேண்டியவர்கள் – சாப்பிட்டுப் பார்த்தவர்கள் சொன்னவுடன், மேலும் கொஞ்சம் உப்பைப் போடுவதற்கு வசதியாக இருக்கும். அதேபோல், நீங்கள் கொஞ்சம் உப்பைச் சேர்த்துக்கொள்ளுங்கள் – இந்த நிதிநிலை அறிக்கையிலே உங்களுடைய திட்டங்களிலே என்று எடுத்துக்காட்டுகின்ற வகையிலே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமே அல்லாமல், ஏதோ இந்த அறிக்கையிலே உப்பில்லை என்கின்ற வகையிலே எதிர்க்கிறார்கள் என்று கருதிடத் தேவையில்லை.

இங்கே 1975–76ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அதற்குப் பிறகு இந்தத் தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்ட பிறகு, டெல்லி பாராளுமன்றத்திலே நிதியமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் முன் வைத்த தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கை – அதற்குப் பிறகு ஜனதா ஆட்சி அங்கே உருவான பிறகு, எச்.எம். பட்டேல், நிதியமைச்சர் என்கிற முறையிலே வைத்த நிதிநிலை அறிக்கை – இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் இங்கே வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கை இவைகளை எல்லாம் ஒருமுறை ஒப்பிட்டுப் பார்ப்பது நலமென்று நான் கருதுகின்றேன்.

1975–76ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப் படுவதற்கு முன்பு மார்ச் திங்கள் இந்த அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அந்த ஆண்டின் வரவு – செலவுத் திட்டத்தைப் பற்றி நான் குறிப்பிடும்போது வருவாய்க் கணக்கில் துண்டு விழுவது 30 கோடி ரூபாய் என்றும் எல்லாக் கணக்குகளையும் மொத்தமாகப் பார்த்தால் ஏறத்தாழ அந்தப் பற்றாக்குறை 20 கோடி ரூபாயாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன். என்றாலும், திட்டப் பணிகளுக்காகவும் வறட்சித் தணிப்புப் பணிகளுக்காகவும் மத்திய அரசிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் உதவி வரும் போது அந்தப் பற்றாக்குறை நிறைவு செய்யப்பட்டுவிடும்

என்றும் நான் 1975–76ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருந்தேன். நான் கூறியவாறு, மாநில அரசுக்குக் கிடைத்துள்ள வருவாய் காரணமாக 1976–77 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வரவு.செலவுத் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்திலே முன்வைத்தபோது, 1975–76ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின்படி, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ஏழேமுக்கால் கோடி ரூபாய் என்றும், மொத்தத்தில் பற்றாக்குறை சுமார் ஆறேகால் கோடி ரூபாயாகவும் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே 1975–76இல் ஏறத்தாழ 20 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்கும் வரவு–செலவுத் திட்டம், நிதிநிலை என்று நான் எடுத்துக்காட்டியதற்கு ஏற்பவும், அவைகள் எப்படி ஈடு செய்யப்படும் என்று நான் எடுத்துக்காட்டியதற்கேற்பவும் அவர்கள், அரசு கலைக்கப்பட்ட பிறகு டெல்லி நாடாளு மன்றத்தில் வைக்கப்பட்ட அறிக்கையில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நான் சொன்னதற்கேற்ப மொத்தத்தில் பற்றாக்குறை ஆறேகால் கோடி ரூபாயாகத்தான் இருக்கும் என்று அறிவித்ததை எண்ணிப்பார்க்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிதிநிலையைப் பொறுத்து எந்த விதமான ஆபத்தான கட்டத்திலும் இந்த மாநிலத்தை வைக்கவில்லை என்பது மிகத் தெளிவாகப் புலனாகும் என்பதை நான் இங்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முரண்பாட்டையும் நான் இங்கே எடுத்துக் கூறாமல் இருக்க முடியாது. அதை நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

1976–77ஆம் ஆண்டு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்தில் வைத்த தமிழ்நாட்டு வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கும் 1977–78ஆம் ஆண்டுக்கான அறிக்கையை, திரு. எச்.எம். பட்டேல் அவர்கள் நாடாளுமன்றத்தில் வைத்த தமிழ்நாடு வரவு–செலவுத் திட்ட அறிக்கைக்கும் ஒரு முரண்பாடு உள்ளது. திரு. சுப்பிரமணியம்

அவர்கள் வைத்த அறிக்கையிலே கூறியுள்ள வாசகத்தை அப்படியே தருகிறேன். அவர்களுடைய அறிக்கையில் பத்தாவது பக்கத்தில் இருபதாவது பாராவில் என்ன சொல்லுகிறார்கள் என்றால்,

> ''...1976–77 ஆம் ஆண்டு வருவாய் கணக்கி வருவாய்கள் 575.63 கோடி ரூபாயாகவும், செலவுகள் 587.95 கோடி ரூபாயாகவும், ஆகவே பற்றாக்குறை 12.37 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கே சேர்த்து முழுமையாகப் பார்க்கும்போது 9.98 கோடி ரூபாயாக பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது''.

இது திரு. சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்றத்தில் வைத்த அறிக்கை. அதற்குப் பிறகு திரு. பட்டேல் அவர்கள் பாராளுமன்றத்தில் வைத்த நிதிநிலை அறிக்கையில் என்ன குறிப்பிடுகிறார்கள்?

> ''1976--77 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும், எல்லாக் கணக்கையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும்போது 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.''

என்பதாக பட்டேல் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதே பட்டேல் அவர்களுடைய அறிக்கையை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் 30வது பக்கத்தில், '1976–77 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்கமென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும்போது 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப் பட்டது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே நான் சொல்கிற முரண்பாடு, திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது, 'பற்றாக்குறை 12.37 கோடியாக வருவாய்க் கணக்கில் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது; வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு,

மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்துப் பார்த்தால் 9.98 கோடி ரூபாயாக பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, என்பதாகும். 1976–77ஆம் ஆண்டு பற்றியது அது. ஆனால் அதே 1976–77ஆம் ஆண்டு பற்றி திரு. பட்டேல் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், ஏழு கோடி ரூபாய் வித்தியாச அளவில், 'வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறை என்றும் எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்த்தால் 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது' என்று குறிப்பிடுகிறார்கள்.

திரு. பட்டேல் அவர்கள் குறிப்பிட்ட அதே வாசகத்திற்கும், திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்ட வாசகத்திற்கும் முரண்பாடாக 7 கோடி ரூபாய் வித்தியாசம் அளவிற்கு அதே கணக்கை நமது நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. மனோகரன் அவர்களும் இங்கே வைத்துள்ள நிதிநிலை அறிக்கையில் 1976–77ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறை, எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்த்தால் 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, எதிர்பார்க்கப்படுவது 137 கோடி ரூபாய் என்று கூறிவிட்டு, அடுத்தாண்டு சொல்லும் போது எதிர்பார்க்கப்பட்டது. 5.37 கோடி ரூபாய் என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல, இதற்கு வேறு எங்கேயாவது கணக்குகள் இருக்கின்றன என்று தேடிப் பார்த்துச் சொன்னாலும் நிதிநிலை அறிக்கையில் திட்டவட்டமாக அதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். எனவே, இப்படிப்பட்ட ஒரு பெரிய தவறு விளைந்ததை நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் வேறு ஏதாவது கூடுதல் நிதி சேர்ந்துள்ளதா, அப்படியென்றால் அதற்கு என்ன கணக்கு; எந்த வகையில் சேர்ந்துள்ளது, ஏன் இவ்வாறு கவனிப்படவில்லை? இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிற நேரத்தில் பட்டேல் அவர்களது அறிக்கையை ஒப்பிட்டுப்பார்க்கவில்லையா, சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த அறிக்கையை ஒப்பிட்டுப்

பார்க்கவில்லையா என்று இயல்பாக நினைக்க வேண்டியிருக் கிறது. அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் விளக்கம் அளிப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முதலில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்தபோது சில விவரங்களைச் சொல்லியிருப் பார்கள். அதன் பின்னால் அடுத்து திரு. எச்.எம். பட்டேல் அவர்கள் திருத்தப்பட்ட மதிப்பீட்டைப் பற்றி சொல்லியிருப் பார்கள். திருத்தப்பட்டு வருகின்றவைகளை நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டது எதிர் பார்க்கப்பட்டது என்று நான் கருதுகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : திருத்தப்பட்ட மதிப்பீடு என்பது அதற்கடுத்த வரியில் வருகிறது. இதைப் படித்துப் பார்த்தால் தெரியும். சுப்பிரமணியம் அவர்கள் எதிர்பார்க்கப் பட்டது என்று தனியாகச் சொல்லுகிறார். எதிர்பார்க்கப்பட்டது எவ்வளவு தொகை என்று சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது 12 கோடி, அல்லது மொத்தமாக 9 கோடி என்று கூறி இவ்வளவு துண்டு விழுகிறது என்று சொல்லியிருக்கிறார். எதிர்பார்க்கப்படுகிறது என்று போன ஆண்டில் சொல்லப் பட்டது. இந்த ஆண்டு பட்டேல் அவர்கள் எதிர்பார்க்கப் பட்டது என்று குறிப்பிடும் பொழுது குறிப்பிட்டு எதைச் சொல்ல வேண்டுமோ அதைத் தான் சொல்ல வேண்டுமே தவிர, அதற்கு மாறாகக் குறிப்பிட்டிருப்பது தவறானது, முரணானது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் ஆண்டுத்திட்டம் என்ற தலைப்பில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு வாசகத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். அதைப் படிப்பது அவசியம் என்று கருதுகிறேன். அதில்,

'அடிப்படைத் தேவைகளான வேளாண்மை, பாசனம், மின்சக்தி, தொழில்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் அளித்து, இந்த வரவு – செலவுத் திட்டத்தில் 1977–78ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதே நேரத்தில், குடிநீர் வழங்கல், கல்வி,

சுகாதாரம், அரிசனங்கள் பழங்குடி மக்கள் பின்தங்கிய வகுப்பினர் நலன் முதலிய சமூகப் பணிகளுக்கும் சிறப்புக் கவனம் அளித்துள்ளோம்...

என்றும் நமது நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதே ஆண்டு திட்டத்தை மார்ச் மாதத்தில் பட்டேல் அவர்களால் டெல்லியில் வைக்கப்பட்டபோது என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்று பார்த்தால், மின் சக்திக்கு இந்த அரசு 94.9 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்கள் இந்த ஆண்டுத் திட்டத்திற்கு இந்த மின்சக்திக்கு 95 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பாசனத்திற்கு இந்த அறிக்கையில் 24.7 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் பாசனத்திற்கு 25 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மையும் அதன் தொடர்பான துறைகளுக்கும் 30.2 கோடி என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களது அறிக்கையில் 30 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழில்களுக்கு இந்த அறிக்கையில் 13.8 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 14 கோடி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. போக்குவரத்து, சாலை வசதி என்ற தலைப்புக்கு இந்த அறிக்கையில் 25.2 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 24 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. குடிநீர் வழங்கலும் கழிவு நீர் அகற்றலும் என்ற தலைப்பில் இங்கு 26.5 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களது அறிக்கையில் 25 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்விக்கு 13.3 கோடி ரூபாய் என்று சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 13 கோடி ரூபாய் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஏனைய சமூக பொருளாதார பணிகளுக்கு 34.9 கோடி ரூபாய் என்று இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 34 கோடி என்று அதாவது வீட்டுவசதி என்கிற தலைப்பில் 16 கோடியும் சமூகப் பொருளாதாரம் என்பதில் 18 கோடி என்றும் ஆக மொத்தம் 34 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மை,

பாசனம், குடிநீர், மின்சக்தி போன்ற எந்தெந்த தலைப்புகளில் தனிக்கவனம் செலுத்தப்படும் என்று ஜனதாகட்சியைச் சேர்ந்த திரு. பட்டேல் அவர்களுடைய ஆண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அதே வாசகத்தைத்தான் எழுத்து பிசகாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலும் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு நிதிநிலை அறிக்கையையும் எடுத்துப் படித்துப் பார்த்தால் நான் சொன்னவை எவ்வளவு சரியானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

எனவேதான், டெல்லியிலே நாடாளுமன்றத்திலே மத்திய நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்திற்கும் இங்கே இப்போது வைத்துள்ள தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்திற்கும் எள்ளளவும் வேறுபாடு இல்லை. குறிப்பாக, சொல்ல வேண்டுமானால், இந்த ஆண்டுத் திட்டத்தைப் பார்த்த பிறகு, இதை ஒரு ஜனதா பட்ஜெட் என்றேகூட சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் அதிலே, 260 கோடி ரூபாய் ஆண்டுத் திட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே 263.5 கோடி ரூபாயாக அதாவது 3.5 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிற ஒன்றைத் தவிர, மத்திய நிதி அமைச்சர் திரு. பட்டேல் அவர்கள் சமர்ப்பித்த திட்டங்கள்தான் இதிலேயும் இருக்கின்றதே தவிர, வேறு எந்தப் புதிய அம்சமும் நமது நிதி அமைச்சர் அவர்களது நிதிநிலை அறிக்கையிலே கிடையாது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, எல்லா அரசுகளும் எந்தெந்தப் பிரச்சினை களிலே சிறப்புக் கவனத்தை நிதிநிலை அறிக்கையிலே செலுத்துமோ அதையேதான் நாம் இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் காணமுடிகிறது. பாசன வசதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, ‘‘கடந்த காலத்தில், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் போதுமான ஒதுக்கீடு செய்யாமலேயே பாசனத் திட்டங்கள் பல அறிவிக்கப் பட்டன. இதனால் இத்திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கும் காலதாமதம் ஆயிற்று’’ என்று கடந்த கால

அரசைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறை கூறியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் பாசனத் திட்டங்களுக்கு எவ்வளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதற்குச் சில உதாரணங்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கழக அரசு வருவதற்கு முன்பு தீட்டப்பட்ட திட்டங்களான இராமா நதி, மணிமுக்தா ந்தி, கடானா நீர்த் தேக்கத் திட்டம் எல்லாம் கழக அரசு காலத்தில் தொடர்ந்து நிறை வேற்றப்பட்டுள்ளன. பரப்பலாறு திட்டத்திற்கு 1974–75ஆம் ஆண்டில் 13.46 லட்சமும், 1975–76இல் 4.79 லட்சமும் 1976–77இல் 4.60 லட்சமும் செலவழிக்கப் பட்டதால், இந்த ஆண்டு 2.81 லட்சம் மாத்திரம் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்தால் நீர்ப்பாசனத் திட்டங்களை முன்பிருந்த கழக அரசு நிறை வேற்றாமல் விட்டுவிடவில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அதைப்போலவே, சன்னாறு திட்டத்திற்கு, கழக அரசு 1974–75 ஆம் ஆண்டு 32.49 லட்சமும், 1975–76இல் 13.90 லட்சமும், 1976–77ல் அதன் தொடர்பாக 24.18 லட்சமும் ஒதுக்கப்பட்ட காரணத்தால், இப்போது 2.56 லட்சம் மட்டுமே இந்த ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

தண்டரை அணைக்கட்டுத் திட்டத்திற்கு, 1974–75இல் 18.76 லட்சமும், 1975–76இல் 7.49 லட்சமும், 1976–77இல் 4.04 லட்சமும் செலவழித்த காரணத்தால், இந்த ஆண்டு இந்த திட்டத்திற்கு 1.51 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

நந்தன் கால்வாயைப் புதுப்பித்தலுக்காக கழக அரசு 26.41 லட்சம் 1974–75லும், 39.64 லட்சம் 1975–75லும் செலவழித்தக் காரணத்தால், இப்போது வெறும் 50 ஆயிரம் மாத்திரமே இந்தக் கால்வாய்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

கருப்பா நதித் திட்டம், பிளவுக்கால் திட்டம், பாலாறு, பொருந்தலாறு, குடகனாறுத் திட்டம் வறட்டுப்பள்ளம் நீர்தேக்கத்

திட்டம் போன்றத் திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கி, கழக அரசு பெரும்பகுதியை முடித்துவிட்டது என்பதை யாரும் மறுக்க இயலாது. எனவே, கழக அரசு பாசன வசதிகளைத் தோற்றுவிக்கவில்லை. போற்றப்படவில்லை என்கிற குற்றச் சாட்டை யாரும் கூற இயலாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேர, சோழ, பாண்டியர் காலத்திலே இருந்து தமிழகத்தில் ஏறத்தாழ 40 லட்சம் ஏக்கராதான் பாசன வசதி பெற்றது என்றாலும், இடையில் 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திரு. பக்தவச்சலம் ஆட்சிக்காலம் வரை 8 லட்சம் ஏக்கரா புதிதாகப் பாசன வசதி பெற்றது என்பதும், பிறகு கிட்டத்தட்ட 9 ஆண்டுகால ஆட்சியின்போது 16 லட்ச ஏக்கரா பாசன வசதி பெற்றது என்பதையும் நாம் மறுத்துவிடலாகாது.

1975–76இல் அறிவித்த வீராணம் ஏரியினை சீரமைத்தல், செண்பகத் தோப்பு நீர்த்தேக்கம், தொட்டஹள்ளா நீர்த்தேக்கம், சித்தமல்லி நீர்த்தேக்கம், உப்பாறு நீர்த்தேக்கம், சிறுமலையாறு நீர்த்தேக்கம், பொய்கை அணைக்கட்டு, கௌண்டியா நதி நீர்த்தேக்கம் ஆகிய திட்டங்கள் மேற் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான தொடக்கப் பணிகள் செய்யப்பட்டதையும் மறைத்துவிட இயலாது.

பரம்பிக்குளம் – ஆளியாறு பிரச்சனையை எடுத்துக் கொண்டால், கேரள அரசோடு சுமுகமாகப் பேசி தீர்த்து, நீராறு வாயிலாகக் கிடைக்கும் தண்ணீரை பரம்பிக்குளம் ஆயக்கட்டுப்பகுதிகளில் கிட்டத்தட்ட 89,000 ஏக்கராவிற்குப் பகிர்ந்து அளிப்பது என்கிற ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அது செயல்படுத்தப்படக்கூடிய நிலைக்கு வந்தது.

1975–76ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இதைப்பற்றி நான் அப்போதே குறிப்பிட்டிருந்தேன் – கழக அரசு சார்பாக அதற்குப் பிறகு கோவையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி சார்பற்ற முறையில் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து 89,000 ஏக்கர் என்பதை ஏறத்தாழ ஒரு லட்சம்

ஏக்கர் அந்தப் பகுதியிலுள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு, அதாவது பரம்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட்டுதாரர் களுக்கு,பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பல்லடம், தாராபுரம், வட்டங்கள் ஆகியவற்றில் வேலைகள் தொடங்க ஏற்பாடாயிற்று. கழக அரசு அந்த நேரத்தில் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு அந்தத் திட்டங்கள் – எந்த வேலையும் நடைபெறாமல் அப்படியே நிறுத்தி வைக்கப் பட்டுவிட்டன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுவது – பாசன ஆதாரங்களில், பாசன வசதிகளைப் பெருக்குவதில் முன்பு இருந்த கழக அரசு எள்ளளவும் பின் தங்கியிருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

நிதியமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்துள்ள சென்பகத் தோப்புத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் கேளவரப் பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நிதிநிலைக் குறிப்பின்படி ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள அந்தப் பெரிய திட்டம் நிதிநிலை அறிக்கையில் காணப்படாமல், சென்பகத் தோப்புத் திட்டம் மாத்திரம் நிதிநிலை அறிக்கையில் காணப்படுகிறது. ஆனால் அதற்காகக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் சென்பகத் தோப்புத் திட்டமும் இருக்கிறது. கேளவரப்பள்ளி திட்டமும் இருக்கிறது. பெரிய திட்டம் நிதிநிலை அறிக்கையில் எடுத்துக் காட்டப்படாததற்குக் காரணம் என்ன? என்று எனக்குப் புரியவில்லை. நிறைவேற்ற இருப்பதாக அறிவித்துள்ள ஏழு திட்டங்களையும் கூட நிதிநிலை அறிக்கையில் ஒரு பக்கம், இரண்டு பக்கம் அதிகமானாலும் பரவாயில்லை என்று அதனுடைய விவரங்களை அறிவித்திருந்தால் உறுப்பினர் களுக்கு வசதியாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ஏழு திட்டங்களுக்குச் சுமார் இரண்டு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது – விவரங்களைப் பார்க்கும்போது, அதிலே, கழக அரசு போதுமான நிதியைத் திட்டங்களுக்காக வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்

தார்கள். குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ஆயிரம் ரூபாய் மாத்திரமே ஒதுக்கியிருப்பதாகக் குறிப்புகளில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது போதுமான நிதியா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல; அறிவிக்கப்பட்டுள்ள செண்பகத் தோப்புத் திட்டத்திற்கு 3½ கோடி ரூபாய் செலவாகுமென்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டு, இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய்தான் அதற்காக ஒதுக்கியிருப்பதை நான் குறை சொல்லமாட்டேன். ஏனென்றால், திட்டங்களைத் தொடங்கும்போதே அதனுடைய மதிப்பீட்டுத் தொகை அவ்வளவையும் ஒரேயாண்டில் ஒதுக்குவது இயலாது. நான் இப்படி ஆளும் கட்சிக்காக வாதாடுகின்ற அதே நேரத்தில், ஆளும் கட்சி வைத்த நிதிநிலை அறிக்கையில், முன்பு இருந்த ஆளும் கட்சி எத்தனையோ திட்டங்களை எல்லாம் கன்னாபின்னா என்று அறிவித்துவிட்டு அதற்குப் பணத்தை ஒதுக்க முடியாமல் அவஸ்தைப்பட்டது என்ற குற்றத்தைச் சொல்லியிருக்கும் காரணத்தால்தான் இதைக் குறிப்பிடுகிறேனே தவிர வேறல்ல. பாசன வசதியைப் பெருக்கப் பெரும் பணியை மேற்கொண்ட கழக அரசைக் குறை கூறுவதற் காக இந்த நிதிநிலை அறிக்கையில் அப்படிப்பட்ட வாசகத்தை சேர்த்திருப்பது உள்ளபடியே பொறுத்துக்கொள்ள இயலாதது ஆகும். எனினும் பொறுத்துக்கொண்டு நான் ஆளும் கட்சியின் சார்பாக 3½ கோடி ரூபாய் திட்டத்திற்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படித்தான் ஒதுக்க முடியும் என்று உங்களுக்காக வாதாட வேண்டியவனாக இருக்கிறேன். அப்படித்தான் ஒதுக்க முடியும் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் புதிய திட்டம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அது முன்பே சென்ற ஆண்டிலே அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இந்த அறிவிப்பு வேறோரிடத்தில் செய்யப்பட்டிருக்கிறது.

> ‘‘தொழுநோய் பெருமளவில் பரவியுள்ள செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் தொழுநோயைத் தடுத்தல், தொடக்க நிலையிலேயே கண்டறிதல், கட்டப்படுத்துதல்

ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவ உதவி அளிக்க புதிய திட்டம் தொடங்கப்படும்''

என்று இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. 1976–77 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் நாடாளு மன்றத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது திரு. சுப்பிரமணியம் அவர்கள் இதனை அறிவித்திருக்கிறார்கள்.

எனவே 1976–77இல் அறிவித்துவிட்ட காரணத்தாலே இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒரு பழைய திட்டம் ஆகிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே 35ஆவது பாராவிலே 'மற்றொரு புதிய திட்டத்தை அறிவிக்கிறேன்' என்று குறிப்பிட்டு,

''குறிப்பாக, செங்கற்பட்டு, தருமபுரி, வட ஆற்காடு, தென்ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் அதிக அளவில் உள்ள தொழுநோயைத் தடுப்பது இத்திட்டத்தில் முக்கிய நோக்கமாகும்.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு புதிய திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. அது இந்த அவையைத் திசை திருப்புவதாகிவிடும். நான், வேண்டு மென்றே நிதியமைச்சர் அவர்கள் திசை திருப்புகிறார்கள் என்று சொல்லமாட்டேன். ஏனென்றால் இது கன்னி பட்ஜெட், ஆகவே இப்படிச் சொல்லியிருப்பது இந்த அவையை திசை திருப்புவதாக ஆகிவிடும். அந்தத் திட்டத்தை அங்கே சி.எஸ். அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தையே புதிய திட்டம் பார் என்று சொல்லியிருக்கிறீர்கள்.நான் என்னுடைய உரையிலே முதலிலே ஜனதா கட்சியின் பட்ஜெட்டாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட் இருக்கிறது என்று கூறினேன். இப்போது இன்னொரு பக்கத்திலே பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் பட்ஜெட்டாகவும் இந்த திட்டத்தை எடுத்துக்கொண்ட வகையிலே தோற்றம் அளிக்கிறது. இப்படி ஒரு பக்கத்திலே பார்த்தால் ஜனதா கட்சியின் பட்ஜெட்டாகவும் இன்னொரு பக்கத்திலே

பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் பட்ஜெட்டாகவும் தெரிகிறது. இப்போதுள்ள ஆளுங்கட்சியின் பட்ஜெட் எது என்று கேட்கிறேன். என்ன புதுமைகள் செய்திருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். பக்கத்திற்குப் பக்கம் கிராமம், மகளிர், குடிநீர், அரிஜனம் என்கின்ற வார்த்தைகள் வந்து வந்து போகின்றன. இப்படி வார்த்தைகள் அடிக்கடி நிதிநிலை அறிக்கையில் புழக்கத்திலே காணப்படுகிறதே அல்லாமல் அந்தத் தலைப்புகளில் உருவான திட்டங்கள் எதுவும் குறிப்பிட்டுச் சொல்கின்ற அளவிற்கு வகுக்கப்பட வில்லை என்பதே எங்களுடைய குற்றச்சாட்டாகும்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும் இங்கே பேசிய நேரத்திலே முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கிராமங்கள் மேல் அக்கறையே காட்டவில்லை என்று பேசினார்கள். இப்போதுள்ள ஆளுங்கட்சித்தான் கிராமங்களின்பால் அக்கறை காட்டுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் அல்லது ஆயிரத்து ஐநூறு கிராமங்களைத் தவிர எல்லா இடங்களிலும் கழக ஆட்சியின் காலத்திலேயே மின்விளக்கு வசதிகள் செய்யப்பட்டன என்பதை யாரும் மறந்துவிடலாகாது. சில பேர்கள் சொல்கிறார்கள், இந்தியாவிலேயே அரியானா மாநிலத்தில் தான் முழுமையாக மாநிலம் முழுவதும் மின்விளக்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் அப்படி செய்யப் பட்டதாக பெருமை அடித்துக்கொள்ள கழக அரசிற்கு உரிமை இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அரியானா எவ்வளவு பெரிய மாநிலம் என்பது அரியானா மாநிலத்திற்கு அடிக்கடி டெல்லியிலிருந்து அந்தப் பகுதிக்குச் சென்று வருகின்ற வாய்ப்பை பெற்றிருந்த நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், ஏறத்தாழ செங்கற்பட்டு மாவட்டத்தின் பரப்பளவு உள்ள மாநிலம்தான் அரியானா மாநிலம். அங்கே மின்சார வசதி முழுமையாக செய்யப் பட்டிருக்கிறது, ஆனால் பல செங்கற்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழகத்தோடு அதை ஒப்பிடுவது முறையாகாது, சரியாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1967ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டிலே 2 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த எண்ணிக்கை 1975ஆம் ஆண்டில் 7 இலட்சமாக உயர்ந்தது என்பதை எண்ணிப்பார்க்கிற போது அது கிராமங்களுக்குச் செய்யப்பட்ட காரியமாகத் தெரிய வில்லையா? எங்கோ ஒன்றிரண்டு பம்பு செட்டுகள் வேலை செய்யாவிட்டால் கிராமங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போய்ச் சேரவில்லை, மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று மற்றொரு புதிய வார்த்தையைச் சொல்கிறார்கள். ஊழல், லஞ்சம் இப்போது மூன்றாவது செலவு செய்த பணம் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று சொல்கிறார்கள். புள்ளி விவரங்களைக் காட்டினால் புள்ளிவிவரங்களைப் பார்த்து நாங்கள் ஏமாறத் தயாராக இல்லை என்கிறார்கள். புள்ளி விவரங்களை வைத்துத்தான் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் படுகிறது. புள்ளிவிவரங்களை வைத்துத்தான் அரசாங்க அறிக்கை வெளிவருகிறது. புள்ளிவிவரங்களிலே ஒன்றிரண்டு தவறுகள் இருக்கலாம். அதனால் மொத்தமே தவறு என்று யாரும் கூறமுடியாது. 1967ஆம் ஆண்டில் இரண்டு இலட்சமாக இருந்தது. 1975ஆம் ஆண்டிலே 7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக் கிறது. இவைகள் எல்லாம் கழக அரசிலே கிராம மக்களுக்குச் செய்யப்பட்ட காரியங்கள் இல்லையா?

கிராமங்களிலே உள்ள அரிசனங்களுக்கு ஒரு இலட்சம் முதல் இலக்காக கொண்டு இலவசமாக 4,000 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள 40 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப் பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் கிராமங்களிலே உள்ள அரிசனங்களுக்குச் செய்யப்பட்ட காரியமாகத் தோன்ற வில்லையா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் 40 ஆயிரம் வீடுகள் என்று குறிப்பிட்டார்கள். 40 ஆயிரம் அல்ல, 30,022 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : பத்தாயிரம் வித்தியாசத்தில் ஒன்றும் பறிபோய் விடவில்லை. நாற்பதாயிரம் வீடுகள் கட்டித் தரப்பட்டன என்கின்ற புள்ளிவிவரங்களை எங்களுக்கு அளித்த அதே அதிகாரிகள்தான் இப்பொழுது முப்பதாயிரத்து

சொச்சம் என்கின்ற புள்ளி விவரத்தையும் உங்களுக்கு அளித்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு பேரும் அதிகாரிகளிடத்தில் சண்டை போட வேண்டுமே தவிர நமக்குள் சண்டை போட்டுக்கொள்வதிலே அர்த்தமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமச் சிறப்பு சாலை மூன்றரை கோடி ரூபாய் 1974–75ஆம் ஆண்டில் இந்த அரசின் சார்பாக மூன்றரை கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். அதாவது, ஏற்கெனவே கிராமத்தில் இருக்கிற சாலை வசதிகள் போக சிறப்பு சாலை வசதிகளுக்காக கழக அரசு 1974–75இல் மூன்றரை கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக 1975–76ஆம் ஆண்டுக்கும், வரும் ஆண்டுத் திட்டம் என்ற பெயரில் 1976–77ஆம் ஆண்டுக்கும் ஏழரை கோடி ரூபாய் கிராமச் சிறப்புச்சாலைத் திட்டத்திற்காக 1975–76ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நான் அந்தப் பொறுப்பிலிருந்த பொழுது அறிவித்திருக்கிறேன். அவ்வாறு 1975–76ஆம் ஆண்டுக்கு இரண்டரை கோடி ரூபாயும், 1976–77ஆம் ஆண்டுக்கும் இரண்டரை கோடி ரூபாயும் ஆக ஐந்து கோடி ரூபாய் கிராமச் சிறப்புசாலை வசதிக்காக அப்பொழுதே செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மிச்சமுள்ள இரண்டரை கோடி ரூபாயில் மிச்சமுள்ள இரண்டாண்டுகளுக்குச் செலவிடக் குறிப்பிட்ட தொகையை மூன்றாண்டுகளில் செலவழிப்பதாக இருந்தால் கூட அந்த இரண்டரை கோடி ரூபாயை இந்த ஆண்டு செலவழிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அல்லது குறிப்பேடுகள் ஏதாவது இருந்திருக்க வேண்டும்.ஆனால் சுமார் ஒன்றரை கோடி ரூபாய்தான் கிராமப்புற சிறப்புச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இதைவிட அதிகமாகக் கிராமப்புற சிறப்புச் சாலைகளுக்கு முன்பிருந்த கழக அரசு அக்கறையோடு பணியாற்றியதை எடுத்துக்காட்டு வதற்காகத் தான் இதைக் குறிப்பிடுகிறேன். இந்த இரண்டரை கோடி ரூபாயில் ஒன்றரை கோடி ரூபாய் போக மிச்சமுள்ள பணம் கிராமச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். வேறு எந்தத் துறைகளுக்குத் திருப்பப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி திருப்பப்பட்டிருக்குமானால் கிராமச்

சிறப்புச் சாலைகளின் மீதுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதாக இருக்காது என்பதை இங்கே எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கிராமங்களின் மின் வசதிக்காக 1974–75இல் 9 கோடி ரூபாயும், 1975–76இல் 13.75 கோடி ரூபாயும் ஆக இருந்தது, 1976–77இல் 9.50 கோடி ரூபாயாகவும், 1977–78இல் 11.20 கோடி ரூபாயாகவும் என்று குறைந்துள்ளதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கிராமங்களில் உள்ள அரிசன காலனிகளில், குடியிருப்புகளுக்கு 1933ஆம் ஆண்டு, மின்சாரம் தமிழ்நாட்டுக்கு அறிமுகமான அந்தக் காலத்திலேயேயிருந்து 1967ஆம் ஆண்டு வரையில் 4,345 அரிசனக் குடியிருப்புக்களுக்குத்தான் மின்விளக்கு வசதி செய்யப் பட்டன. கிட்டத்தட்ட 33 ஆண்டுகாலத்திற்கு, ஆனால் இந்த ஒன்பதாண்டுக்கால கழக ஆட்சியில் 23,768 அரிசனக் காலனிகள் மின்விளக்கு வசதிகள் பெற்றிருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்டும்பொழுது இவையெல்லாம் கிராமங்களுக் காகச் செய்யப்பட்ட காரியங்கள் அல்லவா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

குடிநீர் எல்லாக் கிராமங்களும் முழுமையாகப் பெற வில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதிலே இந்த அரசும் முதல் அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும், ஏன் இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியை மனத்திலே வைத்தும், ஆங்காங்கு இருக்கின்ற கிராம மக்களுடைய அவதியை மனத்திலே பதிய வைத்தும் இன்னும் குடிநீர் வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை எல்லா கிராமங்களுக்கும் பெருக்கிட வேண்டுமென்பதில் அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கிறோம். எனவே, அதிலே இரண்டு விதமான கருத்து களுக்கு இடமில்லை. அது முழுமை அடையவில்லை என்கிற அதே நேரத்தில் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட முறையில் குடிதண்ணீர் தர வேண்டுமென்பதில் பழைய அரசு அக்கறை எடுத்துக் கொண்டதா இல்லையா என்பதையும் நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. வெள்ளைக்காரர்களுடைய காலத்திலேயிருந்து 67ஆம் ஆண்டு வரையில் குடிநீர் வசதிக்காகச் செலவழிக்கப் பட்ட தொகை 80 கோடி ரூபாய்.

ஆனால் 71ஆம் ஆண்டிலேயிருந்து 75ஆம் ஆண்டு வரையில், குடிநீர் வாரியம் அமைக்கப்பட்ட பிறகு நான்காண்டுக் காலத்தில் குடிநீர் வழங்குவதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 53 கோடி ரூபாய் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டுவது சிறப்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நகரங்களும், கிராமங்களும் இப்பொழுது குடிநீர் வாரியத்தில் சேர்கிறது. நகரங்களுக்கு குடிநீர் அளிக்கும் நேரத்தில் வழியிலே உள்ள பல கிராமங்களுக்கும் இணைந்துப் பயன்பட்டிருக்கிறது. கிராமங்களைப் பற்றி அறிக்கையிலே அதிகமாகச் சொல்லப்பட்டிருப்பதால் முன்பிருந்த அரசு செய்திருக்கும் காரியங்களை இந்த அரசும் மேற்கொள்ளும், மேற்கொள்கிறது, மேற்கொள்ள முயற்சிக்கிறது என்ற அடிப் படையில்தான் இந்த விவரங்களை நான் சொல்ல விரும்பு கிறேன்.

உதாரணமாக சிவகங்கை குடிநீர்த் திட்டத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறதென்றால், இடைக்காட்டூர், பாப்பான்குளம், பிக்கூர், பெரியகோட்டை, கீழக்கநந்தாரி, வானியங்குடி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

இராமநாதபுரம் நகருக்குத் தண்ணீர் கொண்டு செல்கிறோம் என்றால், கொட்டி, செட்டிகுறிச்சி, கருத்தனேந்தல், தேவேந்திரநல்லூர், மாவிளங்காரி, கீழ்க்கோட்டை, தீயானூர், எட்டிவயல், அச்சுடன் வயல் ஆகிய கிராமங்கள் பயன் பெறுகின்றன.

பெருந்துறை நகருக்கு குடிதண்ணீர் கொண்டு செல்கிறோம் என்றால், வழியிலுள்ள சென்னிமலை, கேசி பாளையம், சித்தோடு, குமரியான் பரப்பு, நசியனூர், கங்காபுரம், துடுப்பதி, ஜீனப்புரம், முக்காத்திப் பிடரியூர், சுள்ளிபாளையம், ஒட்டப்பாறை, அம்மாபாளையம் ஆகிய கிராமங்கள் பயன் பெறுகின்றன.

தஞ்சை, கொள்ளிடம் குடிநீர்த் திட்டத்தின் மூலம் விளாங்குடி, புனல்வாயில், திருவையாறு, முகாசா கல்யாணபுரம், கண்டியூர், ஆவிக்கரை, மணக்கரம்பை, ராஜேந்திரம், ஆற்காடு ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

எனவே குடி தண்ணீர் திட்டத்திலே முன்பிருந்த அரசு கவனம் செலுத்தவில்லையென்று குறை சொல்வது என்பது முறையாகாது என்பதற்காகத்தான் இந்த விவரங்களை அதிக அளவுக்குக் கொடுக்க நேரமில்லை என்பதாகவே, ஓரளவுக்குச் சுட்டி காட்டினேன்.

மகளிர் நலன் பாதுகாக்கப்படும் என்கின்ற தலைப்பிலே தரப்பட்டிருக்கின்ற உதவிகள் மிகவும் குறைவானவை. ஆனால் மகளிர் நலனுக்காக மேற்கொண்டிருக்கிற அக்கறையைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில் ஆயிரம் மகளிருக்கு மாத்திரம் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற மாதம் ஒன்றுக்கு ரூ. 12 அளவில் உதவி வழங்குவதென்பது மிகக் குறைந்த தொகை. குறைந்த எண்ணிக்கையுள்ள மகளிரே பயன்பெறுகின்றார்கள்.

விதவைகளுக்குப் பழைய கழக அரசால் தையல் இயந்திரங்கள் வாங்கித் தரப்படுவதென்று, ஒரே நாள் விழாவிலே ஆயிரம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று எண்ணினோம். ஆனால் குடியரசுத் தலைவருடைய ஆட்சியிலே, அந்தத் திட்டம் நடைபெற்றதா இல்லையா என்று கூடத் தெரியவில்லை. நடைபெற்றதாகச் செய்திகள் வெளி வராத காரணத்தால் நடைபெறவில்லை என்றே கருதுகிறேன்.

விதவைகள் துயர் தீர்க்கப் பல திட்டங்கள் இருப்பதாக, தேர்தல் அறிக்கையிலே இன்றைய ஆளுங்கட்சி சொன்ன போதிலும் அவை அனைத்தும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

கழக ஆட்சிக்காலத்தில் விதவைகள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் – விதவைத் திருமணம் நடைபெற வேண்டுமென்ற பகுத்தறிவுக் கொள்கையின் அடிப்படையில் பெரியாரும், அண்ணாவும் எந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டார்களோ அந்த அடிப்படையில் செயல்பட வேண்டு மென்று விதவைகளைத் திருமணம் செய்துகொள்கிற வாலிபர்களுக்கு, அந்தத் தம்பதிகளுக்கு, சிறுசேமிப்புப் பத்திரம் ரூ. 5000 தரப்படுமென்றும் 7 ஆண்டுக் காலத்தில்

அது ரூ. 10,000 ஆக மாறுமென்றும் அப்பொழுது பரிசுகள் வழங்கப்பட்டன. அந்த, ஆண்டுக்காலம் வைப்பதற்குக் காரணம் ரூ. 5,000 வாங்குவதற்காக ஒரு விதவையைத் திருமணம் செய்துகொண்டு பிறகு, கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டால் என்ன ஆவது என்பதற்காகத்தான் 7 ஆண்டுகளுக்கு ஒழுங்காக நடந்து அதற்குப் பிறகு ரூ. 10,000 பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற அளவில் விதவைத் திருமணத்திற்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே அந்தத் திட்டத்தைப் பழைய அரசு வகுத்தது. அதை இந்த அரசும் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே எதுவும் சொல்லாத காரணத்தால் அதனைச் சொல்ல வேண்டியவன் ஆனேன்.

மகளிர் நலன் என்ற தலைப்பிலே இந்த அறிக்கையிலே இன்சூரன்ஸ் போன்ற காரியங்களிலே அவர்களுக்கு உதவுவதற்கும் பிராவிடென்ட் பண்ட் போன்ற காரியங்களிலே அவர்களுக்கு உதவுவதற்கும் ஆங்காங்கு மகளிருக்கு உதவ உதவி நிலையங்கள் மாநிலத்தில் பல இடங்களில் வைக்கப் படும் என்று ஏற்படுத்துவது தேவைதானா என்பது எனக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம். கேள்வி அல்ல. சந்தேகம். கேள்வி என்றால் தேவை இல்லை என்று பொருளில் அமைந்துவிடும். ஏன் சந்தேகம் எழுகின்றதென்றால், ஏற்கனவே மாவட்டங்களில் மாவட்ட மகளிர் மன்றங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. அரசு உதவியோடு பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. அவைகளே இந்தப் பிரச்சினைகளைக் கவனித்துக்கொள்ள முடியுமென்று கருதுகிறேன்.

அது மாத்திரமல்ல இன்சூரன்ஸ் செய்துகொள்ளக்கூடிய அளவுக்குச் சூழல் உள்ளவர்கள் தங்களுக்குப் பிறகு யாருக்கு அந்த இன்சூரன்ஸ் தொகை சேர வேண்டுமென்று எழுதிவிடச் செல்கிறார்கள். அதே போல், பிராவிடென்ட் பணம் யாருக்குச் சேர வேண்டுமென்று குறிப்பிட்டுவிட்டுச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஏதாவது தவறுகள் ஏற்படுமானால் அதைத் தீர்த்து வைப்பதற்கு இப்போதுள்ள மாவட்ட மகளிர் நல அதிகாரிகளேகூடப் போதும். எனவே அதற்கென்று

உதவி நிலையங்கள் தேவையில்லையென்பது என்னுடைய கருத்து

வரிகளைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையில் வரவேற்கத்தக்க அம்சங்களும், அதே நேரத்தில் சில மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச்சொல்லி அதற்கு நிவாரணம் காணவேண்டும் என்று கூறுகின்ற தகுதி வாய்ந்த அம்சங்களும் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

இங்கே நம்முடைய நண்பர் ப.உ..ச அவர்கள் காங்கிரஸ் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசிய நேரத்தில் குறுக்கிட்டு விளக்கியதைப்போல, இப்போது நீங்கள் பெரும்பாலும் நீக்கியிருக்கிற அல்லது குறைத்திருக்கிற வரிகள் எல்லாம் கழக ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட வரிகள் அல்ல. குடியரசுத் தலைவருடைய ஆட்சிக்காலத்தில்தான் கரும்பு, தென்னை, வெற்றிலை, மஞ்சள் போன்றவைகளுக்குத் தீர்வை 25 ரூபாய் என்று விதிக்கப்பட்டு, பிறகு 20 ரூபாயாகக் குறைக்கப்பட்டு, இப்போது 20 ரூபாயிலிருந்து 15 ரூபாய் என்று குறைக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வெற்றிலையும், மஞ்சளும் என்ன பாவம் செய்தது என்று எனக்குப் புரியவில்லை. இதிலே அறவே நீக்குகின்ற வரிகளில் ஒன்றாக மஞ்சளைச் சேர்த்து அதற்குப் போடுகிற வரியை நீக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் நலனில் மிகுந்த அக்கறை உள்ளதாக அறிவித்திருக்கிற இந்த ஆட்சி மஞ்சளுக்கு வரி போட்டது என்ற கெட்ட பெயரை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று முதலமைச்சர்பால் எனக்குள்ள அன்பின் காரணமாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கழக ஆட்சி காலத்திலேயும் இது பற்றி யோசிக்கப்பட்டது. நிதித் துறை மஞ்சளுக்கு வரி போட வேண்டுமென்று சொன்ன நேரத்தில் 'சென்டிமென்ட்டாக' நான் 'மஞ்சளுக்கு வரி போட்ட ஆட்சி என்று சொல்வார்கள் ஆகவே வேண்டாம்' என்று அப்போதே சொன்னேன். அதைத்தான் இப்போதும் சொல்லி, கரும்பு, தென்னை, வெற்றிலை போன்றவைகளுக்கு அறவே நீக்க முடியா விட்டாலும், மஞ்சளுக்கு உள்ள வரியையாவது நீக்க

வேண்டுமென்று மகளிர் சார்பாக – நான் இந்த ஆடவன் கேட்டுக்கொள்கிறேன்.

வரி விலக்குவதையும், வரி குறைப்பதையும் வரவேற்கும் அதே நேரத்தில் நீங்கள் இந்த வரிகளைக் குறைத்திருப்பது அல்லது நீக்கியிருப்பது, ஏற்கனவே குடியரசுத் தலைவர் ஆட்சியில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வரிகளைப் போட்டபோது என்ன காரணங்களைச் சொன்னாரோ அந்தக் காரணங்களைச் சிந்தித்தால் அதிலே நீங்கள் முரண்படுகிறீர்கள் என்பதையும் யோசிக்க வேண்டும். அவர் சொன்னார், ''இந்த வரிகள் பணப் பயிர்களுக்குப் போடப்படுகிற வகையில் சாதாரண மக்களையோ சமுதாயத்தின் அடித்தளத்து மக்களையோ பாதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்பதற்காக அவர் குறிப்பிட்டு அப்போது இந்த வரிகளை எல்லாம் போட்டார். அந்த வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் காலத்தில் நிறை வேற்றியது. அப்போது நம்முடைய நிதியமைச்சர் அங்கே என்ன கருத்துக்களைச் சொன்னாரோ எனக்கு ஞாபகம் இல்லை அல்லது எனக்குத் தெரியவில்லை. இப்போதாவது அது சமுதாய மேல்மட்டத்தில் உள்ளவர்களைத்தான் பாதிக்கும். அடித் தளத்து மக்களைப் பாதிக்காது என்று சொன்ன கருத்திற்கு மாறுபாடாக அது குறைக்கப்பட வேண்டும் அல்லது அறவே நீக்கப்பட வேண்டும் என்கின்ற வகையில் நிதிநிலை அறிக்கையில் நீங்கள் அறிவித்திருப்பது மெத்தவும் பாராட்டுக்குரிய ஒன்று என்பதை நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே கழக அரசு காலத்தில் 59 பொருள்கள் மீது பலமுனை விற்பனை வரி இருந்ததை ஒரு முனை வரியாக ஆக்கியிருக்கிறோம். அதைத் தமிழ்நாட்டிலுள்ள வணிகப் பெருமக்களும், வாங்குவோரும் மெத்தப் பாராட்டிப் பேசினார்கள். மேலும் பலமுனை வரிகளை எல்லாம் ஒருமுனை வரியாக ஆக்க வேண்டும் என்கிற முறையீடுகள் அடிக்கடி அரசுக்கு வந்து கொண்டிருக்கும் என்பதை நான் அறிவேன். அதே நேரத்தில் பலமுனை வரி வெல்லம், வெல்லத்தூள், உருண்டை வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவைகளுக்கு ஏற்கனவே இருந்த ஒரு முனைவரியை

மாற்றி பலமுனை வரியாக விதித்திருப்பது தேவையில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். ஏன் என்றால் இது பற்றி என்னிடம் மற்ற எதிர்க்கட்சியினரிடமும் வந்த வணிகப் பெருமக்கள் இப்போது இருந்த 5 சதிவிகித ஒருமுனை வரியை 6 அல்லது 7 இன்னும் கூட கொஞ்சம் அதிகமானால் 8 சதவிகிதத்திற்கு வேண்டு மானாலும் வைத்துக்கொள்ளுங்கள். இந்தப் பலமுனை வரி என்ற அளவிலே கூட, முதலமைச்சர் அவர்கள் நிதி அமைச்சருக்கு, அந்த அறிவுரையை ஆலோசனையைத் தருவார்கள் என்று நம்புகிறேன். ஏன் என்றால் அவரே கூட தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக 1977ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி அன்று அவரை ஆசிரியராகக் கொண்ட அண்ணா பத்திரிகையிலே, பழனித் தொகுதியிலே பேசிய பேச்சு வெளிவந்திருக்கிறது.

அதிலே இன்றைக்கு முதலமைச்சராக உள்ளவர். அன்றைக்கு குறிப்பிட்டு இருக்கிறார்கள். 'பலமுனை விற்பனை வரி விதிப்பது விலைகள் உயரக் காரணமாகி விடுகிறது என்று வியாபாரிகள் தரப்பில் சொல்லப்படுகிறது. அதுபற்றி பரிசீலித்து ஒருமுனை வரியாக மாற்றுவோம்' என்று பழனியில் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலித்து மாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார். எனவே, அதை மனதில் வைத்துக்கொண்டு மாற்றுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : சில வற்றிற்குப் பலமுனை வரியும், சிலவற்றிற்கு ஒருமுனை வரியும் இருக்கிறது என்று சொல்லி, எந்த அளவிற்கு மாற்ற வேண்டுமோ, அந்த அளவிற்கு மாற்றப்படவேண்டும், என்று குறிப்பிட்டு, பலமுனை வரி பல்வேறு நிலைகளில் உள்ள பொருள்களுக்கு மாற்றப்படவேண்டும் என்று சொல்லிய கருத்தை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : விளக்கம் அளிக்கிற காரணத்தால் அச்சப்படுகிறேன். பலமுனை வரியை நீட்டாமல் மேலும் இப்போது பலமுனை வரி விதிக்கப்படும் பொருட் களுக்கு ஒருமுனை வரியாக அவைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கேளிக்கை வரி பற்றிய பிரச்சினையில் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் அது விவாதிக்கப் பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் இதிலே வரி ஏய்ப்பு எந்த வகையில் நடைபெறுகிறது என்ற பிரச்சினைகளும் ஆராயப்பட்டிருக்கின்றன. சென்னை போன்ற இடங்களில் உள்ள திரையரங்குகளில் அவர்கள் வாராந்திர வாடகை, மாதாந்திர வாடகை இவைகளை நிர்ணயிப்பதின் மூலமாக சிறுசிறு படங்களை எடுப்பவர்கள், குறைந்த செலவில் படமெடுப்பவர்கள் எவ்வளவு அவதிக்கு ஆளாகுகிறார்கள் என்ற கருத்து அப்போது ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்ற இரு தரப்பிலிருந்தும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் முதலமைச்சருக்கு நான் புதிதாகக் கவனப்படுத்தவேண்டிய அவசியமில்லை. இதையெல்லாம் மனதில் நிறுத்தி 1975ஆம் ஆண்டு கழக அரசு காலத்தில் நவம்பர் திங்களில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதிலே கட்சி சார்பற்ற முறையில் எல்லோரும் பங்கு பெறவும், சினிமா தொழில் அதிபர்களும் அந்தக் குழுவில் பங்கு பெறவும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டு, அந்தக் குழு ஒரு பரிந்துரையை இந்த அரசிடம் வழங்கியிருக்கிறது. அதற்குப் பிறகு கழக அரசு கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இடையில் உள்ள ஓராண்டுக்காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் அது கவனிக்கப்படவில்லை.

இப்போது செய்யப்பட்டிருக்கிற இந்த வரிக் குறைப்பால் அதிக பலன் கிட்டவில்லை என்று அந்தத் துறையில் உள்ளவர்கள் எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கை என்னவாயிற்று என்பதையும், அதைபற்றி என்ன முடிவை இந்த அரசு எடுக்க இருக்கிறது என்பதையும், இன்றைக்கு இல்லாவிட்டாலும், தொடர்ந்து வருகின்ற மானிய விவாதங்களில் அரசின் சார்பில் விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக பத்து ரூபாய் கொடுத்து, அதனை 200 ரூபாய்க்கு மேல் மாதச் சம்பளம் வாங்குபவர்களுக்குத்தான் என்று கூறி 200 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குபவர்களுக்கு அந்தப் பத்து ரூபாய் இல்லை என்று கூறியிருப்பது சோஷலிசத்திற்கு

உகந்த ஒரு நிலையாகாது என்பதை நான் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, 200 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்கள் கடைநிலை ஊழியர்கள், காவல்துறை நண்பர்கள், சாலைகளில் வேலை செய்யும் மேஸ்திரிகள் என்று இப்படி மூன்றரை இலட்சம் பேர் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த பத்து ரூபாய் இடைக்கால நிவாரணத்தை அனைவருக்கும் சேர்த்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்போதும் பதிலின்போது சலுகைகள் சிலவற்றை அறிவிப்பது வழக்கம். அந்த வகையில் இன்றைக்கு இதனை அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். நிதியமைச்சர் இன்று அப்படி அறிவிப்பதின் மூலமாக நிச்சயமாக பெயரைத் தட்டிக்கொண்டு போவார் என்று நான் நம்புகிற காரணத்தினால் அந்த அறிவிப்பை இன்று இங்கே செய்வார் என்ற மன நிறைவோடு, முழு நம்பிக்கையோடு அந்த வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக 15 ரூபாய், சம்பளத்தில் பிடித்தம் செய்வதன் மூலமாக 25 ஆண்டுகளுக்குப் பிறகு 10,000 ரூபாய் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் என்கிற இந்தத் திட்டம் - ஆளும் கட்சியில் இருப்பவர்கள் வருத்தப்படக்கூடாது இந்தத் திட்டத்தை யோசித்துத் தந்தவர்களும் வருத்தப்படக்கூடாது உடனடியாக கைவிட வேண்டிய திட்டம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் உள்ளவர்களுக்குப் பத்து ரூபாய் கொடுத்து, அவர்களிடமிருந்தும் 15 ரூபாயைப் பிடித்துக் கொள்ளுகிறீர்கள். அந்தப் பத்து ரூபாய் கொடுக்கப்படாத மூன்றரை இலட்சம் பேர்களிடமிருந்து 15 ரூபாயை பிடித்துக் கொள்கிறீர்கள். ஆகவே, பத்து ரூபாய் கிடைக்காதவர்களும் இதிலே பாதிக்கப்பட்டு அவதிக்கு ஆளாகுகிறார்கள். பல உறுப்பினர்கள் இது பற்றிய கணக்குகளை எடுத்துக் காட்டினார்கள்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிலே பண சேமிப்புத் திட்டம் என்கின்ற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தில் ஒரு நபர் மாதம் ரூபாய் 15 வீதம் கட்டிக்

கொண்டிருந்தால், 25 ஆண்டுகளில், அவருக்கு 20,948 ரூபாயாகக் கிடைக்கிறது. அந்தப் பலாப் பழத்தை விரும்பு வார்களா, இந்த களாப் பழத்தை விரும்புவார்களா என்பதை தயவு செய்து நிதியமைச்சர் எண்ணிப்பார்க்கவேண்டும். அது இஷ்டப்பட்டால் கட்டுகிற பணம், இது கட்டாயமாக நீங்களே எடுத்துக்கொள்கின்ற பணம். இன்னும் சொல்லப்போனால் அதே 15 ரூபாய்க்குப் பதிலாக மாதம் ரூபாய் 5 வீதம் 30 ஆண்டுகளுக்குக் கட்டினால், முடிவில் ரூபாய் 12 ஆயிரம் பெறலாம். ரூபாய் 5 வீதம் 30 ஆண்டுகள் கட்டினால், ரூபாய் 12 ஆயிரம் பெறுகிறார்கள். ரூபாய் 15 வீதம் 25 ஆண்டுகளுக்குக் கட்டினால் ரூபாய் 20 ஆயிரம் பெறுகிறார்கள். ஆகவே, இது அதிகமாக லாபத்தைத் தராது. இப்படிப்பட்ட சேமிப்பை விட்டுவிட்டு, நீங்கள் அவர் களிடத்தில் வரி போடுவதைப்போல, சுருக்கமாகச் சொல்லி விடலாம் அரசு ஊழியர்களுக்கெல்லாம் தலைக்கு ரூபாய் 15 வரி என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். அதே போல, ரூபாய் 15 பிடித்துக்கொண்டு விடுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. ரூபாய் 15 என்று கணக்கு வைத்துப் பார்த்தால், ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 13 கோடி உங்களுக்கு கிடைக்கும். அந்தக் கணக்கு எங்கேயாவது இருக்கிறதா என்று பார்த்தேன். இருப்பதாகத் தெரியவில்லை. அதிலிருந்து புரிந்து கொண்டேன். அந்த 13 கோடி ரூபாயை வரவு வைக்காத காரணத்தால், அதைப்பற்றிக் குறிப்பிடாத காரணத்தால், அதை விட்டுவிடுவீர்கள் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால், அதை வரவு வைத்து 13 கோடியைக் காட்டி இருப்பீர்கள். ஆக, ஒரு ஆண்டு 13 கோடி ரூபாயை அரசு ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள எண்ணுகிறீர்கள். அருமையான திட்டங்கள் - இதைவிட லாபகரமான திட்டங்கள் இருக்கின்றன - எனவே இதை விட்டுவிட வேண்டும். இல்லையேல் 13 கோடிக்குக் கணக்கு வைத்திருக்கிறோம், ஆகவே வைத்துக்கொள்கிறோம் என்றெல்லாம் ஆதாரங்களைக் கொடுப்பார்களானால் - அரசு பொறுப்பிலிருப்பவர்கள் - ஆகவே அதிகமான ஆதாரங்களைக் கொடுப்பதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஆதாரங்களை எடுத்துக்காட்டுவதன் மூலமாக, 13 கோடி ரூபாய்க்கு கணக்குளைக் காட்டியிருக்கிறோம். ஆகவே, அந்த

13 கோடி ரூபாயை பயன்படுத்திக்கொள்கிறோம் என்று வாதிடாமல், அந்த அரசு ஊழியர்களின் வயிற்றில் அடிக்காமல், 15 ரூபாய் பிடிக்கின்ற திட்டத்தை தயவு செய்து கைவிட வேண்டுமென்று நான் வற்புறுத்தி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கவர்னருடைய உரையில், 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்களில் இந்த அரசின் சார்பில், நியாய விலைக் கடைகளைத் திறக்கப்போகிறோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்ட மிக முக்கியமான ஒரு திட்டம் - நிதிநிலை அறிக்கையிலே காணப்படவில்லை. அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் தெரியவில்லை. இந்த 16 ஆயிரம் கிராமங்களில் 9 ஆயிரம் கிராமங்களுக்கு மேல், அரிசி, சர்க்கரை, கோதுமை ஆகியவை வழங்கப்படுகிறது. அவை மாத்திரமல்லாமல் உப்பு, புளி, மிளகாய் போன்ற பலசரக்கு சாமான்களும், நியாய விலையில் கிடைப்பதற்கு ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் இவ்வளவு என்று சொன்னால், இப்போது சென்னை என்று எடுத்துக் கொண்டால், சென்னையிலே இருக்கின்ற 100 கடைகளைப் பொறுத்த வரையில் ஒரே ரெவின்யூ கிராமமாக ஆக்கிவிட்டால், ஒரு கடை என்றுதான் கணக்குப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்களில் இன்னும் ஆயிரத்திற்கு மேல் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதையும் சேர்த்துக்கொண்டு பார்ப்போமானால், 17 ஆயிரம் கிராமங் களுக்கும், இந்தக் கடைகளை மாற்றிக்கொடுத்தால், மிகக் குறைந்த கணக்குப்படி, ரூபாய் 10 கோடியாவது ஆகும். இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்குமானால் நிதிநிலை அறிக்கையில் ஏன் எடுத்துச் சொல்லப்படவில்லை என்று அறிந்துகொள்ள ஆவல் உடையவனாக இருக்கிறேன். ஏனென்றால், கவர்னர் உரையில் சொல்லப்பட்டதை எல்லாம் நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக்காட்டவேண்டும்.

ஏனென்றால், தமிழ் மக்களுக்கு, தமிழ் கலாச்சாரத்திற்கு தமிழுக்கு, இன்னென்ன காரியங்கள் செய்யப்படும் என்று

கோடிட்டுக் காட்டி, இவைகளை எல்லாம் நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே விவரமாக எடுத்துச்சொல்லி இன்னென்ன செய்வோம் என்று சொல்லியுள்ளதால், இங்கே பெரிய பிரச்சினையாக இருக்கின்ற அந்தப் பிரச்சினையைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கலாம் என்பதற்காகக் கவலைப்பட்டு கேட்கிறேனே அல்லாமல் வேறல்ல.

அந்த நியாய விலைக் கடைகள் எப்போது திறக்கப்படும், அதற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்ற விவரங்களை எல்லாம் நிதியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தால் நல்லது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், புதிதாக எந்தக் கொள்கையும் சொல்லப்படவில்லை என்பதுதான் எனது வாதம், எதிர்த் தரப்பில் பேசிய சில கட்சித் தலைவர்களுக்கும் இதே கருத்து இருக்கிறது என்பதை இந்த அவையிலுள்ள யாரும் மறந்திருக்க முடியாது.

நிலச் சீர்த்திருத்தம் பற்றி தேர்தல் நேரத்தில் அளித்த உறுதிமொழிகள் எதுவும் இங்கு இடம் பெறவில்லை. நம்முடைய மார்க்ஸிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள்கூட தேசீய உடைமையாக்கும் திட்டங்களைப் பற்றி எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்திப் பேசவில்லை. நாளைக்கு பேசுகிற எதிர்கட்சித் தலைவர் அவர்களாவது அது பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் பேசினாலும் பேசாவிட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் தேசியமயமாக்கும் கொள்கையில் மிகத் தீவிரமாக இருந்து வருகிறது என்பதை நண்பர் சங்கரய்யா அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன்.

அந்தக் காரணத்தால்தான் ஏற்கனவே அலுமினியம் தொழிற்சாலை தேசிய மயமாக்கப்படவேண்டும் என்று இந்த அவையில் தீர்மானித்தோம். ஆனால் மத்திய அரசினுடைய ஒப்புதல் இதுவரையில் அதற்குக் கிடைத்தபாடில்லை. அதேபோல் பஸ்கள், கிட்டத்தட்ட 10,000 பேருந்துகளில்

4,000க்கு மேற்பட்ட, பேருந்துகள் கழக ஆட்சிக் காலத்தில் தேசீய மயமாக்கப்பட்டன. டி வி.எஸ், ராமன் அன்ட் ராமன் போன்ற பெரிய கம்பெனிகளுடைய பஸ்கள் எல்லாம் அன்றைக்கு அரசுடைமையாக்கப்பட்டு அவைகள் பல்வேறு கழகங்களாக, பல்வேறு வாரியங்களாக இன்றைக்கு அமைக்கப்பட்டு அவைகள் எல்லாம் இன்று சிறந்த பணியினை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. எனவே தேசிய மயமாக்கும் கொள்கையில் எங்களுக்கு எள்ளளவும் பின்வாங்கும் தன்மை கிடையாது என்று அவைக்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. ஆர். உமாநாத் : கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது செலக்டிவ்வாக சில இன்டஸ்ட்ரீஸ், பாக்டரிகளை தேசிய மயமாக்குவது என்று முன்பிருந்ததைப் பற்றிச் சொல்கிறார்கள். அதை ஒத்துக்கொள்கிறேன். திரு. சங்கரய்யா, அவர்கள் குறிப்பிட்டது 75 குடும்பங்கள், பெரிய பிஸினஸ், ஹௌஸஸ் தேசீய மயமாக்கப்படுவது பற்றித்தான், அவைகள் எல்லாம் தேசீய மயமாக்கப்படுமா என்றுதான் கேட்டார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : அண்ணா அவர்கள் இங்கே எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது அதைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கொள்கையில் நாங்கள் எள்ளளவும் பின்வாங்கிட மாட்டோம் என்பதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கொள்கை ரீதியாக தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்ட பல விவரங்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பதை நான் கோடிட்டு காட்டாமல் இருக்க முடியாது. விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாக்க பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படும் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையிலே கூட அவ்வாறு கருத்து அமைந்த அந்த வார்த்தைகள் போடப்பட்டிருக்கின்றன. பழனியில் அவர்கள் பேசிய பேச்சில் - மே மாதம் 24ஆம் தேதி அவர்களுடைய 'அண்ணா' பத்திரிகையிலேயே வெளிவந்திருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன்

விவசாயிகளின் நலன்களைப் பாதுக்காக பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் செயல் படுத்தப்படும். விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை தேர்தல் அறிக்கையிலும் கழகம் அறிவித்துள்ளது... விவசாயிகள் கடன் தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருக்க இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். இப்போது, தேர்தல் நேரத்தில் தருகிற வாக்குறுதிகள் வேறு, இந்த இடத்தில் வந்து உட்கார்ந்துவிட்ட பிறகு பொறுப்புகள் வேறு, நிலைமைகள் வேறு, இப்போது இதையெல்லாம் மத்திய அரசுதான் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து மத்திய அரசு இதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று இன்றைக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயி களுடைய தினக்கூலியை மாற்றி மாதச் சம்பளம் அளிக்கப்படும் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கட்சிக் கொள்கையை ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். நான் கவர்னர் அவர்கள் உரையின் மீது பேசும்போது கூடச் சுட்டிக் காட்டினேன். இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் தினக்கூலி மாற்றப்பட்டு அவர்களுக்கு மாதச் சம்பளம் அளிக்க என்னென்ன வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று இந்த அறிக்கையில் நான் தேடித் தேடிப் பார்த்தேன். அது காணப்படவில்லை. சர்க்கரை ஆலை ஒன்று அமைக்கப் படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த கழக அரசுக் காலத்தில் ஒரு முக்கியமான முடிவு எடுக்கப்பட்டிருக் கிறது. இனிமேல் அமைக்கப்படும், சர்க்கரை ஆலைகள் எதுவாக இருந்தாலும் அது தனியார்துறையில் இல்லாமல் பொதுத் துறையில்தான் அமையும் என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறுதான் இது அமையும், அமையவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த நம்பிக்கையையும் நான் பெறுகிறேன். படி அரிசித் திட்டம் பற்றி இந்த மன்றத்தில் விவாதம் நடைபெற்றது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு தேதி கூறி பதில் தருவதாகச் சொல்லிவிட்டு அதிலுள்ள சங்கடங்களை எல்லாம் இங்கே எடுத்து விளக்கினார்கள். படி அரிசி கிடையாது என்று முடிவாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அறிவித்த

தேர்தல் பிரகடனத்திலும் வானொலிப் பேச்சிலும், அண்ணா அவர்கள் ஆட்சியில் அமர்ந்ததும் ஏழை மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்றார்கள். ஆனால் அதிகாரிகள் சர்க்காரின் வரவு செலவுக் கணக்கைக் காட்டி ஆண்டு ஒன்றுக்கு எட்டுகோடி ரூபாய் துண்டுவிழும் என்று கூறினார்கள். எட்டு கோடி ரூபாயை எப்படித் தேடுவது என்று அதற்கு வழி கண்டுபிடிக்க வேண்டுமே தவிர ஏழைகளின் வயிற்றில் அடிக்காதீர்கள்; என ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை முதல் கட்டமாக அண்ணா அவர்கள் நிறைவேற்றினார்கள்.

அவர்களுடைய பேச்சிலே ''இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றிட ஆட்சியில் இருப்பவர்களுக்கு அறிவாற்றலோடு, கஷ்டப்படுகிற மக்களிடத்திலே கருணை காட்டும் உள்ளமும் வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் வாதிட்டதெல்லாம், அண்ணா அவர்களுக்கு அடைமொழியாக ''படியரிசித் திட்டம் கொண்டு வந்த அண்ணா'' என்று குறிப்பிட்டதாக தெரிவித்திருக்கிறார்கள். இந்த அமைச்சரவையின் அறிவாற்றலை நான் சந்தேகிக்கமாட்டேன். அறிவாற்றல் நிரம்பப் பெற்றவர்கள் இருக்கின்றனர். அறிவாற்றல் அதிகம் இருக்கிறது என்றாலும் கூட இன்னும் அதிகமாக பெறுவதற்காக 'பிரெயின் டிரஸ்ட்' ஒன்று வைக்கப்போவ தாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே உங்களுடைய அறிவாற்றலை நான் சந்தேகிக்கவில்லை. நிரம்ப இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் நீங்கள் தேர்தல் நேரத்தில் சொன்னபடி கருணை காட்டும் உள்ளத்தோடு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்றுதான் நான் மீண்டும் மீண்டும் இந்த ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகளுக்கும், வேளாண்மைத் துறைக்கும் மின் கட்டணத்தை குறைப்போம் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளும் படியரிசி போன்றவை களும் நிலைமைகளை ஆராயாமல் தரப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் என்பதை இப்போதாவது உணர்கிறீர்களா

அல்லது ஏதாவது குறைக்கப் போகிறீர்களா என்பது எனக்குப் புரியவில்லை. நிதிநிலை அறிக்கையில் அது பற்றி கோடிட்டு காட்டவில்லை என்ற காரணத்தால்.

விலைவாசி பற்றி கழக அரசின் மீது முன்பு குற்றஞ் சாட்டப்பட்டது. இதற்குக் காரணம் மத்திய அரசா அல்லவா என்பது இங்கே வந்து அமர்ந்த பிறகு தெரிந்துகொண்டிருக்க முடியும். விலைவாசி அதிகமாகிவிட்டது என்று சொன்ன நேரத்திலே இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தபோது மத்திய அரசுதான் அதற்குக் காரணம் என்று சொல்லி வந்தாலும், பிரிவு ஏற்பட்டுவிட்ட பிறகு முன்னேற்றக் கழக அரசுதான் காரணம் என்று சொல்ல வேண்டிய நிலை அன்று எதிர்க்கட்சியாக இருந்த இன்றைய ஆளுங்கட்சிக்கு தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டது. இப்போது விலைவாசியை மத்திய அரசுதான் குறைக்க வேண்டிய இடத்தில் இருக்கிறது என்கின்ற பேருண்மையை நாம் அனைவரும் உணர்ந்து கொண்டிருக் கிறோம். ''விலைவாசி நிலையாக ஒரு சில காலம் இருந்திருப்பினும்'' என்று நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் குறிப்பிட்ட ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர் ஒன்றைச் சொன்னார். அந்த வாசகத்திற்கு அவர் தந்த விளக்கம், ''அந்த ஒரு சில காலம் என்பது எந்தக் காலம் தெரியுமா, அதுதான் அவசர காலம், நெருக்கடி காலம் அப்போதுதான் விலைவாசி ஒரு நிலையாக இருந்தது'' என்று இங்கே பேசினார்.

ஆனால் அந்தக் காலத்திலே விலைவாசி நிலையாக இல்லை என்பதை நானல்ல, அன்றைய நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களே எடுத்துக் காட்டியிருக்கிறார். அதாவது 1976ஆம் ஆண்டு மார்ச் மாத நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் விலைவாசிகள் 15.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது உண்மையே என்று அப்போதைய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார். இந்த விலை உயர்வினால் பழையபடி பணவீக்க நிலைமைக்கு இப்போது இந்தியா வந்துள்ளது. பொருளாதாரத்தில் பண வீக்கப் போக்கு ஏற்பட்டுள்ளது என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார் என்று 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிக்கையில், 1977ஆம்

ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் தேதியில் வெளி வந்திருக்கிறது. ஆகவே அவசர காலத்தில் விலைவாசி 15.5 சதவீத அளவுக்கு அதிகரித்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பல புரட்சிகரமான திட்டங்களை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம் என்று சொன்னீர்கள். இங்கே பேசிய சில உறுப்பினர்கள்கூட, இதிலே புரட்சியில்லை, புதுமையில்லை என்று இந்தத் தரப்பிலிருந்தும், என்ன புரட்சி வேண்டும், என்ன புதுமை வேண்டும் என்று அந்தத் தரப்பிலிருந்தும் பேசிக்கொள்ளப்பட்டது. நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. விவாதத்தில் இறுதியான கட்டத்தில் இந்த விவாதத்திற்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற இந்தக் கட்டத்தில் நான் இதிலே புரட்சி இருக்கிறதா புதுமை இருக்கிறதா என்ற அந்த வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்த விரும்பவில்லை.

ஆனால் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற தேர்தலின் போது, வாணியம்பாடியில் பேசிய பேச்சு 'அண்ணா' பத்திரிகையில் 1977ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29ஆம் தேதியன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிறார், ''பல புரட்சிகரமான திட்டங்களை நாங்கள் தயாரித்து வைத்திருக்கிறோம். அத்தனை திட்டங்களையும் தேர்தல் அறிக்கையில் நாங்கள் வெளியிடவில்லை. இப்போது வெளியிடவேண்டாம் என்பதற்காகத்தான் நாங்கள் வெளியிட வில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டங்களை செயல்படுத்திக் காண்பிப்போம்... என்று சொல்லி யிருக்கிறார்கள். ஒருவேளை பட்ஜெட் ரகசியங்கள் என்பதால் அப்போது அவைகளை வெளியிடாமல் இருந்திருக்கலாம். அந்தத் திட்டங்களை உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே வெளியிடவில்லை. ஆளுநர் உரையிலும் அவைகளை வெளியிடவில்லை. நிதிநிலை அறிக்கையிலும் வெளியிட வில்லை ஆகவே எப்போதுதான் அவைகளை வெளியிடப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

இப்படிக் கேட்டால் காலம் வற்புறுத்தும்போது வெளியிடுவேன் என்று அவர் பதில் சொன்னாலும் சொல்லக் கூடும். எனவே, தேர்தல் நேரத்தில் சொல்லப்பட்ட இந்த

வாக்குறுதிகளில் ஓரளவாவது இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்பதற்காகத்தான் இவைகள் எல்லாம் சுட்டிக்காட்டினேனே அல்லாமல் வேறு அல்ல.

வண்டியிழுப்பவர்களுக்கும், பாரம் தூக்குபவர் களுக்கும், கல் உடைப்பவர்களுக்கும், லாரி ஓட்டுபவர் களுக்கும் வேலை பாதுகாப்பு, வேலை நேர நிர்ணயம் போன்ற உத்தரவாதம் அளிக்கப்படும் என்று அதே வாணியம்பாடி கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் சட்டமன்ற தேர்தல் நேரத்தில் பேசி 1977ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் தேதி, 'அண்ணா' பத்திரிக்கையில் வெளியாகி இருக்கிறது. அது பற்றியும் இதில் இடம்பெறவில்லை.

பிறகு அவர்கள் குற்ற பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்வதாக தேர்தல் நேரத்தில் அறிவித்தார்கள். ஆனால் அது இந்த நிதி நிலை அறிக்கையிலே இடம் பெறவில்லை. எனவே, குற்ற பரம்பரைச் சட்டத்தை எப்போது ரத்து செய்யப் போகிறீர்கள்? ரத்து செய்யாததற்குக் காரணம் என்ன? ஏன் இந்த அறிக்கையிலே அது இடம்பெறவில்லை என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதற்கு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

தபால் ஆபீசுகளில் கடன் கொடுக்கின்ற திட்டத்தைப் பற்றி இங்கே இந்த மன்றத்திலே பேராசிரியர் அவர்கள் கேள்வி எழுப்பியபோது, இந்த அவையிலே முதல் அமைச்சர் அவர்கள் கடன் கொடுப்பதற்கான வசதிக்கான இடம்தான் வேண்டுமென்று கேட்டேன் என்று பதில் சொன்னார்கள். ஆனால், முதல் அமைச்சர் மேலவையிலே பேசும்போது, அப்படி ஒரு பிரிவு தபால் ஆபீஸ்களில் ஒதுக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் கேட்பதாக உத்தேசம்: இதற்கு மேல் இதை வற்புறுத்திக்கேட்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை இப்போது டெல்லி சென்றபோது அதைப் பற்றி அவர்கள் பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதன்படி தபால் ஆபீஸ்களில் விரைவில் இப்படிப்பட்ட கடன் வழங்கும் பிரிவுகள் ஏற்படும் என்றும் நான் நம்புகிறேன்.

பொதுவாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், மத்திய உதவிகளைப் பொறுத்த வரையில் மாநில அரசுக்கு

நியாயமாகக் கிடைக்கக் கூடிய உதவிகள், உரிமைகள் கிடைக்கவில்லை என்பதை இந்த மன்றத்திலே ஆளும் கட்சியிலே உள்ளவர்களும் சரி, எதிர்க் கட்சியிலே வீற்றிருக் கின்ற நாங்களும் சரி அல்லது ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற சில கட்சிகளும் சரி எடுத்துச் சொல்லத் தவறில்லை. அப்படி மத்திய உதவிகளைப் பெறுவதில் மாநில அரசோடு திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா வகையிலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்கூறி, இந்த கன்னி பட்ஜெட்டை இந்த அவையின் முன் வைத்த நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் மனோகரன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சமர்ப்பித்த பட்ஜெட்டுக்கு அல்ல, அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்கின்ற அளவில், விடைபெறுகிறேன்.

உரை : 16 **நாள் : 1.3.1978**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கு பேசிய பல்வேறு உறுப்பினர்களும் கட்சிகளின் தலைவர்களும் இந்த அவையில் அரசாங்கத்தினுடைய கொள்கை ஏடான ஆளுநர் உரை ஆற்றப்படாமல் நிதிநிலை அறிக்கைக்கே நேரடியாக வந்து விட்டது அவையின் மரபுக்கு உகந்தது அல்ல என்பதையும் சுட்டிக்காட்டி இப்படி ஒரு தவறு நடந்தது வருந்தத்தக்கது என்ற தங்களுடைய ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து அரசாங்கத்தினுடைய கொள்கையின் மீது 6 அல்லது 7 நாட்கள் விவாதிக்கக் கூடிய வாய்ப்பினை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் இழந்துவிட நேரிட்டது என்பதையும் குறிப்பிட்டு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை நானும் வழிமொழிகின்ற நிலையிலே இருக்கிறேன்.

ஆளுநர் என்கின்ற பதவி ஒன்று தேவையா என்ற விவாதம் எழுகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கின்ற பதில் வேறானது. ஆனால் அந்தப் பதவி ஒன்று இருந்து அந்தப்பதவிக்கு உரியவர் மூலமாக அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கங்கள் நிதிநிலை அறிக்கைக்கு முன்பு வைக்கப்படுகிற மரபு இந்த ஆண்டு கைவிடப்பட்டிருப்பது உள்ளபடியே ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்பதை நான் அவை முன்னவர் என்னுடைய நண்பர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978–79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு வரவாக வரக்கூடியது 680 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டு விட்டு இதுவும் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை தான் என்று நிதியமைச்சர் தன்னுடைய அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார். கடந்த 7, 8 திங்கள்களுக்கு முன்பு நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்து அந்த அறிக்கையில் பற்றாக்குறை எவ்வளவு என்பதைச் சுட்டிக் காட்டி இந்தப் பற்றாக்குறையை எந்த எந்த வகைகளில் எல்லாம் சரிக்கட்டுவோம் என்பதற்காக சில வழிமுறைகளை எடுத்துச் சொல்லி அவைகளிலே தலைசிறந்த வழிமுறை லஞ்ச லாவண்யங்கள், ஊழல்கள் இவைகளை ஒழிப்பதன் மூலம் இந்தப் பற்றாக்குறை சரிக்கட்டப்படும் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

பற்றாக்குறை சரிக்கட்டப்படாத நிலையைக் காணுகிற நேரத்திலே அவர்கள் குறிப்பிட்ட லஞ்ச லாவண்யங்கள், ஊழல்கள் இவைகள் எல்லாம் இன்னும் அகற்றப்பட வில்லையோ என்ற ஐயப்பாடு – இப்படி பற்றாக்குறை மேலும் வளருகிற நேரத்திலே – அவை உறுப்பினர்களுக்கு ஏற்படாமல் இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ‘‘பார்த்தீர்களா இந்த ஆண்டு எங்களுடைய வரவு – செலவுத் திட்டத்தில் 680 கோடி ரூபாய் வரவு காட்டி யிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு 500 கோடி ரூபாய் அளவிற்குத்தான் தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே வரவினைக் காட்டினார்கள். இது எவ்வளவு பெரிய முன்னேற்றம் என்றெல்லாம் அதை ஒரு பெரிய சாதனை என்ற தலைப்பிலே கூடக் கொண்டுவந்து இங்கே உரையாற்றினார்கள். அவர்கள் அவைகளை வேண்டுமென்று பேசினார்கள் என்று நான் கருதவில்லை. சிலர் புரிந்து கொண்டு பேசியிருக்கலாம், சிலர் அதைப் பற்றி புரியாமலும் பேசியிருக்கலாம்.

ஆனால், இந்த அவைக்கு நான் விளக்க வேண்டிய அவசியத்திலே இருக்கின்ற ஒன்று, 1968–69 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்த பொழுது வரவு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட தொகை 248 கோடி ரூபாய், 1975–76இல், அதாவது கழக அரசு கலைக்கப்பட்ட

அந்தக் காலக் கட்டத்தில் இந்த அரசினுடைய வரவு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட வரவு 501 கோடி ரூபாய். பிறகு 1976–77இல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் 501 கோடி ரூபாய் 576 கோடி ரூபாயாக வளர்ந்து 1977–78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்திலே நிதியமைச்சர் எச்.எம். படேல் அளித்தபொழுது அது 635 கோடி ரூபாய் வரவு என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த 635 கோடியாக வளர்ந்ததுதான் 1978–79 ஆம் ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் 680 கோடி ரூபாய் வரவு வரும் என்று வடிவம் எடுத்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

இதிலே மிக முக்கியமாக மூன்று துறைகளை எடுத்துக் கொண்டால், கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்தத் துறைகளுக்குச் செலவிடப்பட்ட தொகை 1968–69 ஆம் ஆண்டிலே எவ்வளவு என்பதையும் இப்பொழுது எவ்வளவு என்பதையும் ஒப்பிடுகின்ற நேரத்தில் இது எப்படி படிப்படியாக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 248 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்க்கப் பட்ட 1968–69 ஆம் ஆண்டில் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்த மூன்று முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 47.10 கோடி ரூபாய், 501 கோடி ரூபாய் வரவு வரும் என்று மதிப்பிடப்பட்ட கழக ஆட்சியில் அதாவது 1975–76இல் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்த மூன்று துறைகளுக்காக 181.78 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1976–77இல் 576 கோடி ரூபாய் வரவு வரும் என்று மதிப்பிடப்பட்ட அந்தக் காலக்கட்டத்தில் இந்த மூன்று துறைகளுக்கும் – கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய மூன்று துறைகளுக்கும் –195.64 கோடி ரூபாய் மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 635 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்த்து மதிப்பிடப்பட்ட 1977–78ஆம் ஆண்டு எச். எம். படேல் நாடாளுமன்றத்தில் வைத்த நிதிநிலை அறிக்கையில் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய துறைகளுக்கு

229.69 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 680 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற பொழுது இந்த மூன்று துறைகளுக்கும் 253.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக, 229 கோடியிலிருந்து 253 கோடியாக உயர்ந்துள்ளது. வரவும், படேல் அவர்கள் பட்ஜெட் சமர்ப்பித்தபொழுது 635 கோடியாக வளர்ந்தது, 680 கோடியாக இப்பொழுது அந்த நிலையை அடைந்திருக்கிறது.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் அவ்வப் பொழுது வரவுகள் அதிகப்பட்டு வருகின்ற நேரத்தில் அதற்கான ஒதுக்கீடுகளும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன என்பதைத்தான் இது காட்டுகிறது என்பதைச் சுட்டிச் சொல்லத்ததான் இந்த விவரங்களை இந்த மாமன்றத்தில் நான் சொல்ல முன் வந்தேன்.

இப்படி ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் மக்கள் ஆட்சி நடைபெற்றாலும், அல்லது மக்களால் தோந்தெடுக்கப் பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்காமல் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றாலும், வரவுக்கு ஏற்றவாறு ஒதுக்கப்படுகின்ற நிலைமையைத்தான் இந்த அறிக்கைகள் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இது ஒரு மரபு வழியில், நேற்றைய தினம் பேராசிரியர் குறிப்பிட்டதைப் போல தொடர்ந்து நடைபெற்று வருகின்ற செலவுகள், ஒதுக்கீடுகள், வரவுக் கேற்றவாறு ஒதுக்கப்படு கின்றன என்ற அளவிலே நாம் இதை வரவேற்கிறோம். அதுதான் நிலைமை என்பதை உணர்கிறோம்.

இதற்கிடையிலே நாங்கள் புதிதாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்தப் புதிய அரசினுடைய கொள்கைகள், திட்டங்கள், அவைகளின் மூலம் செய்யப்படப்போகின்ற காரியங்கள் சாதனைகள் என்னென்ன என்பதைத்தான் இந்த அவையிலே நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

அப்படிப்பட்ட கொள்கை அறிவிப்புகளும், புதிய திட்டங்களும் எதுவும் இல்லாமல், தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற வருவாய்க்குத் தக்க பல துறைகளுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிற இந்தத் தொகை

அதிகப்பட்டிருக்கிறதேயல்லாமல், கழக ஆட்சிக்காலத்திலே என்ன நடைபெற்றது என்ற வினா எழுப்புகிறவர்களைப் பார்த்து நான் சொல்ல விரும்புவதெல்லாம், கழக ஆட்சிக் காலத்திலே அரசு அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த கொள்கை வழிநின்று பல திட்டங்களை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும், கொள்கை அடிப்படையிலும் அறிவித்து, அதற்கேற்ப நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறது என்பதை மாமன்றத்து உறுப்பினர்கள், இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள், ஆளுங்கட்சியிலே இருக்கிறோம் என்ற காரணத்திற்காக மறுத்தாலும் கூட, அவர்களுடைய மனதில் இவைகளெல்லாம் நிச்சயமாக நிழலாடாமல் இருக்கமாட்டா என்று சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், 1968–69 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர், ஆகிய இரண்டுசாரார் நலன்களுக்காக, ரூ. 6 கோடியே 51 இலட்சம் அளவில்தான் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. அந்த ரூ.6 கோடி 51 இலட்சம் நிதி ஒதுக்கமும் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் என்று சேர்த்து ஒதுக்கப்பட்ட தொகை. அந்த ரூ. 6 கோடியே 51 இலட்சத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்தால், ரூ. 1 கோடியே 73 இலட்சம்தான். இதிலே, அரிசனங்களுக்கு அதிகமாகச் செலவிட்டார்கள், பிற்படுத்தப் பட்டவர்களுக்குக் குறைவாகச் செலவிடப்பட்டது என்கின்ற குறைபாட்டை நான் சொல்ல வரவில்லை.

அரிசனங்களுக்கும் இன்னும் அதிகமாகச் செலவிட வேண்டுமென்கிற அதே நேரத்தில், மக்கள் தொகையில் அவர்களைவிட அதிகமாகவுள்ள பிற்படுத்தப்பட்டவர் களுக்கும் அதிகமாகச் செலவிட வேண்டுமென்ற குறிக் கோளுடன் 1969–க்குப் பிறகு கழக அரசு தாழ்த்தப்பட்டோர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன் ஆகிய இரண்டு சமூகத்தாருக்கும் விரிவாகப் பணியாற்ற வேண்டுமென்ற ஒரு கொள்கை நோக்கோடு, ஒரு வழிமுறையை வகுத்து, அரிசன நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இரண்டையும் அன்றைக்கு இருந்ததை மாற்றியமைத்துத் தனித்தனி

இலாகாக்களாக்கி, தனித்தனி இலாகாக்கள் ஆக்கியது மாத்திர மல்ல; அந்த இலாகாக்களைத் தனித்தனி அமைச்சர்களிடம் ஒப்படைத்தோம். இன்னும் சொல்லப்போனால், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் என்கிற தலைப்பிலே ஒரு அமைச்சர் உருவாக்கப்பட்டு, அவரிடத்திலே வேறுசில இலாகாக்களும், பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டன என்பதை நாடு நன்கு அறியும்.

அப்படி இலாகாக்கள் பிரிக்கப்பட்டு அமைச்சர்களும் தனித்தனியாக ஆக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், பிற்படுத்தப் பட்டோர் நலன்களைக் கவனிப்பதற்கான ஒரு குழு அமைக்கப் பட்டு அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, ரூ. 1 கோடியே 73 இலட்சம் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக 1969ல் ஒதுக்கப்பட்டதற்குப் பதிலாக, 1975–76ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் பிற்படுத்தப்பட்டோர் நன்மைக்காக ஒதுக்கப்பட்டது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1975–76ல் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அன்றைக்குக் கழக அரசு பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு ஒதுக்கிய ரூ.17 கோடி இன்றைக்கு ரூ.25 கோடியாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நான் குறிப்பிடுவதற்கே காரணம், இது அரசினுடைய, அரசை இயக்கிய கழகத்தினுடைய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திலே கொண்டிருந்த கொள்கை அடிப்படையிலே, 1969ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ஒரு பிரகடனம். அதற்குப் பிறகு, தொடர்ந்து செய்யப்பட்ட சாதனை. அதன் காரணமாக, இன்றைக்கு நாட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றம், வளர்ச்சி, இவைகளுக்கு, அன்றைக்குக் கழக அரசு அடித்தளம் அமைத்தது என்பதை மறந்துவிடக்கூடாது.

மனு நீதித் திட்டம் என்ற ஒன்றைக் கழக அரசு நிதி அறிக்கையிலே அறிவித்து, 1969–லே அறிவித்து, மக்களுடைய குறைகளைக் கூடுமானவரையில் அந்தந்த இடத்திலேயே தீர்ப்பது என்பதற்கேற்ப கிராமங்களை நாடி

அதிகாரிகள் சென்றார்கள். ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்று அவைகளுக்கான தீர்வுகள் அங்கங்கே காணப்பட்டன.

அதை நான் சொல்வதை விட State Administration Report என்ற தலைப்பில் உள்ள புத்தகம் 1977 ஆம் ஆண்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியிலே அச்சேற்றப்பட்டது. நல்லவேளையாக 1977லே அச்சேற்றப்பட்டாலும் கூட, 1975–76 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரையிலும், கழக அரசு புரிந்த சாதனை எதையும் அந்த ஏடு மறைத்திடவில்லை. இன்றைக்குள்ள தலைமைச் செயலாளர் அவர்கள்தான் இதற்கு முன்னுரையும் கூறி எழுதியுள்ளார். ஆனால் இவைகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமல் 7,8 பிரதிகளே காக்கப்பட்டிருக்கிறது, என்றும் அனைவருக்கும் வழங்கப்பட்டிருந்தால் கழக ஆட்சி அடித்தள மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எந்தெந்த வகையில் எல்லாம் ஆற்றி வந்தது என்கின்ற பேருண்மை மற்றவர்களுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்ற காரணத்தால் மற்றவர்களுக்கு மறைக்கப்பட்டு விட்டது என்ற செய்தியும் உலவுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது.

அந்த அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலே, 1977ஆம் ஆண்டிலே அச்சிடப்பட்ட அந்தப் புத்தகத்தில் கழக ஆட்சியில் வெளியான சாதனைகள் வரிசையாகத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஆங்கிலத்திலே உள்ளதை அப்படியே தமிழில் நான் இங்கே படித்துக் காட்டுகிறேன்.

‘‘1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஏற்படுத்தப் பட்ட குடிசை மாற்று வாரியத்தினுடைய குறிப்பின்படி, சென்னை நகரில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதாகவும் அவைகளில் மொத்தம் 1,63,804 குடும்பங்கள் இருப்பதாகவும் அக்குடும்பங்களிலே மொத்தம் 7½ லட்சம் பேர்கள் வாழ்வதாகவும் அவர்களுக்காக 38,335 குடியிருப்புகளை கட்டுவதற்கு, குடிசை மாற்று வாரியத் திட்டங்களில் கட்டுவதற்கு, 33½ கோடி ரூபாய் அரசினால் வழங்கப்பட்டது. இது வரையில் அதாவது மார்ச்சு 1976 வரையில் 183,85 குடியிருப்புக்கள் கட்டப்பட்டன அதாவது

இன்னும் 3,044 குடிசைகள் கட்டப்பட விருக்கின்றன. மொத்தம் 21 ஆயிரம் குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டன.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரம் சென்னையில், திடீர் திடீரென்று குடிசைகள் தீப்பிடித்து எரிந்ததன் விளைவாக, அண்ணா அவர்கள், எரியாத வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை அமுல்படுத்தினார்கள். அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, அந்தத் திட்டமும் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அதைவிட குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடிசைவாழ் மக்களுக்கு, மாடி வீடுகள் கட்டித் தருகிற அந்தத் திட்டம். நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அதற்கென்று கட்டப்பட்ட வீடுகள்தாம் அந்த 21 ஆயிரம் குடியிருப்புக்கள். நகரத்திற்குத்தானே செய்தீர்கள் கிராமங்களுக்கு என்ன செய்தீர்கள் என்று இந்தக் குறிப்பினை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பயன் படுத்தமாட்டார் என்று நாம் நம்புகிறோம்.

அதே அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலே, 1974–75ல் தாழ்த்தப்பட்டோர் நல வீட்டு வசதிக் கழகம் செயல்படத் தொடங்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டுவதற் காக மாநில அரசால் கையகப்படுத்தப்பட்ட மனைகளைப் பெற்று, பல இடங்களில் முதல் கட்டமாக ஒரு இலட்சம் வீடுகளை, 5 ஆண்டு காலத்திற்குள் கட்டுவதற்காக, திட்டம் வகுக்கப்பட்டு, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டதற்கிணங்க, 1975–76 ஆண்டு இறுதிக்குள், ஏறத்தாழ 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அரிசனங்களுக்கு இலவசமாகக் கட்டித்தரப்பட்டது. அதே 1975–76 ஆண்டு ரிப்போர்ட்டில் இதுவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்திலே ஒன்றை நிதி அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சென்ற நிதிநிலை அறிக்கையில் அவர் குறிப்பிட்டார். அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார். ஆனால் நான் விசாரித்து அறிந்து கொண்ட வகையில் அப்படி வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அந்த வாரியத்திற்கு அளிப்பதற்கான அரசாங்க ஆணை, இதுவரையிலே பிறப்பிக்கப்படவில்லை என்கிற

வருந்தத்தக்க செய்தியினை நான் கேள்விப்பட்டேன். நிதி அமைச்சர், அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்து 7 மாதங்கள் ஆகியும் அந்த வாரியத்திற்கு அந்தப் பணத்தை ஒதுக்குவதற்கான அரசாங்க ஆணை இதுவரை 7 மாதங்களுக்குப் பிறகும் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்பது பெரிய குறைபாடு. அதை நிதி அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னுடைய பெரிய கடமையாகும்.

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

எனவே, கிராமங்களிலே இருக்கும் அரிசனங்களுக்கும், மீனவர்களுக்கும் இலவசமாக வீடு கட்டித் தருவது என்கின்ற கொள்கை வழித் திட்டத்தை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மறந்துவிடக்கூடாது.

கிராமங்கள், சிறு கிராமங்கள், பெரு நகரங்கள் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை பெருக்குவதற்காகத்தான் கழக அரசு குடிநீர் வாரியத்தை அமைத்து, விரிவான அளவில் அந்தப் பணியை நிறைவேற்றி இருக்கிறது. கிராமத்தைப் பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் பல இடங்களில் குறிப்பிட்டு இருப்பதை ஆளும் கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக்காட்டி, எத்தனை இடங்களில் கிராமங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று கூறிவிட்டு, எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். நானும் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1971–1972 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்–நான் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலம்–நான் நினைவூட்ட விரும்புகிற அந்த வாசகம்– ''பரந்து கிடக்கின்ற பல்லாயிரம் கிராமங்களிலும், பட்டினக் கரைகளிலும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் அளிப்பது என்பதை நோயற்ற வாழ்விற்கான அரு மருந்தாகக் கருதி, இந்த அரசு வேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற குடிநீர் திட்டம் ஒன்றை அமைத்துள்ளது'' என்று அப்போதே குறிப்பிட்டு இருக்கிறேன்.

கிராமங்களை முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் கவனிக்க வில்லை என்று சொல்லுகிறார்களே, அதற்காக 1971ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள வாசகத்தையும், அது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளையும் நான் இங்கே எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமையாகும் என்று கருதுகிறேன்.

1971–1972 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள மற்றொரு வாசகத்தையும் நினைவூட்டு கிறேன். நகர்ப்புறங்களின் வசதி வாய்ப்புகளை கிராமப்புறத்து மக்கள் ஒரு கால கட்டத்திற்குள் பெற்றிட வேண்டும் என்னும் குன்றா ஆர்வத்துடன் செயல்படும் இந்த அரசு வெகு விரைவில் எல்லா கிராமங்களுக்கும் மின் ஒளியும், மின் வசதியும் கிடைத்திட முயற்சிகள் மேற்கொள்ளும்'' என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறோம்.

1973–1974ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட ''கிராம முன்னேற்றம்'' என்ற தலைப்பில் நான் வெளியிட்ட வாசகங்களை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ''ஆயிரத்து ஐநூறு மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும் இடையே உள்ள ஊர்களையும் முக்கிய சாலைகளுடன் சேர்க்க இணைப்புச் சாலைகள் அமைப்புத் திட்டம் ஒன்றைக் கடந்த ஆண்டு வரவு-செலவு திட்ட அறிக்கையில் நான் வெளியிட்டேன். இவ்வகையிலே 19 கோடி ரூபாய் அளவில் தீட்டப்பட்ட திட்டத்தின் கீழ் 1972–1973 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். இப்பணிக்கென 1973–1974 ஆம் ஆண்டிலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டு இருக்கிறேன்.

எனவே, கிராமங்களுக்கு சாலை வசதித் திட்டம், குடிநீர் திட்டம், வீட்டு வசதி திட்டம், சுகாதார திட்டம், இவைகள் அத்தனையும் முன்பு இருந்த கழக ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட திட்டங்கள் என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இத்தகைய நல்ல காரியங்கள் முந்தைய ஆட்சியில் நடைபெற்று இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கிராமங்கள் கிராமங்கள் என்று பல இடங்களில் சொல்லப்பட்டு இருந்தாலும், கிராம வளர்ச்சி பற்றி பேசப்பட்டு இருந்தாலும், குறிப்பாக கிராமத்திட்டங்களை, இன்னின்ன காரியங்களைச் செய்தோம். செய்கிறோம், எந்த அளவிற்கு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களை நிதி அமைச்சர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. எனவே, புதிய அறிவிப்புகள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்ற குற்றச்சாட்டை திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் அல்ல மற்றும் உள்ள கட்சியின் தலைவர்களும் இங்கே எடுத்துக்காட்டி இருக்கின்றனர்.

குடியிருப்பு மனைகள் குடியிருப்பவர்களுக்குச் சொந்த மாக்கப்படவேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அது நகரங்களுக்கா, கிராமங்களுக்கா, என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தச் சட்டத்தின் மூலம் பயன் பெற்ற குடும்பங்கள் 1,28,000 குடும்பங்கள். அந்த 1,28,000 குடும்பங்களில் முக்கால் வாசிபேர் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் எஞ்சியோர் பிற்படுத்தப்பட்ட மக்கள். அந்தச் சட்டம் இயற்றப்பட்டு, அதற்கான செயல்படுத்தப் படுகின்ற விழா திருத்துறைப் பூண்டியில் நடத்தப்பட்டபோது மறைந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். பல ஆண்டுகாலமாக சொந்த குடிசையில் படுத்துத் தூங்க வழி இல்லாத அரிசன பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்று இரவு இந்தக் கூட்டம் முடிந்ததும் வீட்டிற்குச் செல்லுகிற நேரத்தில் அப்பாடா, இன்று தான் சொந்தக் குடிசையில் தூங்கப் போகிறேன் என்று சொல்வார்கள் என்று உணர்ச்சிப் பெருக்கெடுக்க அவர் கூறிய வாசகத்தை நான் மறந்து விடுவதற்கு இல்லை. எனவே அந்தக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க செய்யப்பட்ட அந்தச் சட்டம் கழகம் தன்னுடைய அகத்திலே கொண்டு இருக்கிற கொள்கையின்பால் விளைந்த சட்டம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

30 ஸ்டாண்டார்டு ஏக்கரா என்று காங்கிரஸ் ஆட்சியில் உச்சவரம்பு கொண்டுவரப்பட்டு, அது 15, ஸ்டாண்டார்டு ஏக்கரவாகக் குறைக்கப்பட்டு, குறைக்கப்பட்டது மட்டுமல்ல; அதுவரை உபரியாக இருந்த நிலங்களை, அதற்கு முன்பிருந்த அரசு கையகப்படுத்தாத நிலங்களை, ஏறத்தாழ 30,000 ஏக்கரா நிலங்களை கையகப்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயி களுக்கு தகுதியுள்ளவர்களுக்கு அளித்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே மின்வசதி இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான் கழக ஆட்சிக்காலத்தில்.

அரியானாவை சொல்வார்கள். அரியானாதான் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளித்தது என்று, அந்த அரியானாவை நம்முடைய தமிழ் நாட்டுடன் கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டிலேயே இருக்கிற செங்கல்பட்டு மாவட்டம் அளவுதான் அரியானா அதை மறந்துவிடக்கூடாது. முதல் மாநிலம் என்ற வரிசையில் அந்த அரியானாவை முதலில் வைத்து, தமிழ்நாட்டை இரண்டாவதாக வைப்பது சரியாக இருக்கலாம். ஆனால் நிலப்பரப்பு சரியாகாது. அதைவிட பல மடங்கு பெரிய அளவு கொண்ட தமிழ் நாட்டில் இன்னும் 1000 அல்லது 1500 கிராமங்கள் தவிர மற்ற எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி, அதிலும் குறிப்பாக 20,000–க்கு மேற்பட்ட அரிசின காலனிகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசில்தான்.

அவைகளை எல்லாம் மறந்துவிடாமல் நம்முடைய தலைமைச் செயலாளர் 1976ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதி வெளியிட்ட 1974–1975 ஆம் ஆண்டு ஸ்டேட் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில் அதை வெளியிட்டார்கள். அதிலே ஆச்சரியம். அந்த அறிக்கையிலே கூட குடியரசுத் தலைவர் ஆட்சியில் தலைமைச் செயலாளர் திரு.கார்த்திகேயன் அவர்களுடைய முன்னுரையில் :

"It is hoped that this publication will prove to be very useful, in that it contains a detailed account of the progress made by the State in all its developmental activities, particularly in the implementation of the Plan Schemes and the social welfare measures" என்று மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளியிடப்பட்டது குடியரசுத் தலைவர் ஆட்சியில், அந்த உரை கிழிக்கப்படாமல் வெளியிடப்பட்டது மகிழ்ச்சியளிக்கக் கூடியது. அது இங்கே மறைக்கப்பட்டிருந்தாலும் இந்த மாமன்றத்திலே இப்போது என்னுடைய உரையின் மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்று அந்தத் கொள்கை அண்ணா அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பிறகு அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அது தீவிரமாக்கப் பட்டு, பெரிய பஸ் அதிபர்களின் ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டு, டி.வி.எஸ், ராமன் அண்டு ராமன், ஏ.பி.டி., போன்ற பெரிய கம்பெனிகளை அரசு ஏற்று, தந்தை பெரியார், அண்ணா, கட்டபொம்மன், சேரன், சோழன், பாண்டியன் பல்லவன் ஆகியோர் பெயரால் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

இன்றைக்கு திரு.மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி அளிப்பது பற்றிக் கூறினார்கள். பணிக் காலத்தில் மறைந்துவிட்ட அரசு ஊழியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியாக 10,000 ரூபாய் தருவது என்ற மிக அருமையான திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் அறிமுகப்படுத்தியது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. ஆக, நகரங்கள், சிறு நகரங்கள், கிராமங்கள், பட்டித் தொட்டிகளில் வாழும் மக்கள், அடித்தளத்திலே இருக்கிற மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய இந்தக் காரியங்கள் ஏதோ இன்றைக்கு கேலி செய்யப்படுகின்றவைகளாக இருந்தாலும் அவைகள் மறைக்கப்படக்கூடிய காரியங்கள் அல்ல. இன்று அவைகளைத்தான் இந்த அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. சிலவற்றை அவர்கள் மந்தப் போக்கிலே செய்து

வந்தாலும் அவைகளை கைவிட்டுவிட முடியாத அளவில் செய்து வருகிறார்கள்.

நிதியமைச்சர்கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த சில காரியங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால் அதோடு நிறுத்திவிடாமல் ஒவ்வொரு கட்டத்திலும் புதிய புதிய திட்டங்கள் அடித்தளத்து மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவைகள் இந்த அறிக்கையிலே காணப்படவில்லை என்பதை கழகத்தின் சார்பாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி, சென்ற அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட அல்லது கவர்னர் உரையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களாவது நிறைவேற்றப்படும் திட்டங்களாக இருக்கின்றனவா என்றால் இல்லை. 16,000 நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் என்று – கவர்னர் சென்ற ஆண்டு அறிவித்தார்கள். இப்போது கவர்னர் உரை இல்லாமல் இருப்பதற்கு காரணம், ஒருவேளை கவர்னர் ஆற்றிய அந்த உரை நினைவிற்கு வந்து, அந்த 16,000 நியாயவிலைக் கடைகள் எங்கே என்று கேட்டுவிடுவார்களோ என்பதற்காக நம்முடைய திறமையான நிதியமைச்சர், அதை (avoid) 'அவாய்ட்'செய்து விட்டாரோ என்று கருதுகிறேன்.

16,000 நியாயவிலைக் கடைகள் அறிவிக்கப்பட்டு பிறகு ஏழெட்டு மாதங்களாகியும் பலமுறை இந்த மன்றத்தில் அது பற்றி கேட்கப்பட்டு நம் முதல் அமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும் வெளியே சென்று அதிகாரிகளை அழைத்து அந்த 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்கும் வேலைதான் முதல் வேலை என்று அவர்கள் சொன்னார்கள். அதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி நாங்கள் ஆக்கபூர்வமாக எடுத்துச் சொன்னோம். அப்போது எல்லாம் அதிகாரிகளைக் கலந்துகொண்டுதான் செய்திருக்கிறோம், எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு. கருணாநிதி அவர்கள் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று அன்று சொன்னார்கள்.

ஆனால் சொல்லி ஏழெட்டு மாதங்கள் உருண்டுபோய் விட்டன. 16,000 நியாய விலைக்கடைகளில், நெல்லை மாவட்டத்தில் 400 நியாயவிலைக் கடைகள் வரும் என்று உணவு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அங்கும் நியாயவிலைக் கடைகள் வந்ததாகத் தெரியவில்லை. இப்போது மிக ஜாக்கிரதையாகச் சொல்லி விட்டார்கள். நியாயவிலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் எல்லாம் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்படும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன பொருள் என்றால் ஏற்கனவே கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் இருக்கிற கடைகளை யெல்லாம் எண்ணிக்கையில் சேர்த்துக்கொண்டு மிச்சமுள்ள கடைகளை வைப்பதற்கு அதில் உத்தேசித் திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அதிகாரிகளின் திறமையை நானும் ஏழாண்டுகளாக முதல் அமைச்சராக இருந்த முறையில் அறிவேன். ஆகவே அதிகாரிகளின் திறமையும் நிதி அமைச்சர் அவர்களுடைய வாக்கு சாதுர்யமும் இரண்டும் சேர்ந்த வாசகமாக மாறி அந்த 16,000 என்ற எண்ணிக்கையை மிகத் தந்திரமாக திரை போட்டு மறைத்திருக்கிறது. அப்படி மறைப்பதற்காக எங்கள் பாராட்டுதல்களைச் சொல்லவேண்டுமே தவிர 16,000 நியாயவிலைக் கடைகள் எங்கே என்று கேட்கிற நேரத்தில் நான் பாராட்ட முடியாதவனாக இருக்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் நம்முடைய மாநில நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுகிற நேரத்தில் மதுவிலக்கை இன்று செயல்படுத்துகிற தன்மையால் 140 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு இழப்பு ஏற்படுகிறது, அதை மத்திய அரசாங்கம் தரவேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். இது இன்று நேற்றல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலும், இப்போதும் வலியுறுத்தப்படுகிற ஒரு கோரிக்கையாக இருந்து வருகிறது. 140 கோடி ரூபாய் மதுவிலக்கு நிறைவேற்றுகிற மாநிலத்திற்கு நஷ்டயீடாக, இழப்பீடாக தரவேண்டும் என்று கேட்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த அரசு

சார்பில் தன்னுடைய குரலைக் கொடுக்கத் தயாராயிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் கவர்னர் அவர்கள் பேசியதாக ஒரு கருத்து வெளிவந்தது. நம் முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட பேசியதாக ஒரு கருத்து வெளி வந்தது. ஏற்கெனவே மதுவிலக்கிற்காக விற்பனை வரி என்ற ஒரு பெரிய காமதேனுவை உற்பத்தி செய்திருக்கிறார்களே, அந்த காமதேனு வந்த பிறகு இதற்காக ஏன் மத்திய அரசாங்கத்தினிடம் பணம் கேட்கிறீர்கள் என்று குரல் எழுப்புகிறார்கள். உண்மை. விற்பனை வரியை ராஜாஜி அவர்கள் கொண்டுவந்து மதுவிலக்கினால் ஏற்படுகிற இழப்பிற்கு நஷ்டயீடு கட்டத்தான். ஆனால் மதுவிலக்கு இருக்கிற மாநிலங்கள் மாத்திரமல்லாமல் ராஜாஜி அவர்களுடைய வழியைப் பின்பற்றி மதுவிலக்கில் நீண்ட அக்கறை இருப்பவர்கள் மாத்திரமல்ல, அந்த மாநிலங்களும் விற்பனை வரியை இன்றைக்கு அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். கள்ளுக்கடைகள் இருக்கிற கர்நாடகாவிலும் விற்பனை வரி இருக்கிறது. கள்ளுக்கடைகள் இருக்கிற ஆந்திராவிலும் விற்பனை வரி இருக்கிறது. கள்ளுக்கடைகள் இருக்கிற மேற்கு வங்கத்திலும் விற்பனை வரி இருக்கிறது. ஆக, அவர்கள் எல்லாம் கள்ளுக்கடைகளும் வைத்துக் கொள்வார்களாம், விற்பனை வரியையும் அனுபவித்துக் கொள்வார்களாம். இங்கே நாம் கள்ளுக்கடைகளை அகற்றிவிட வேண்டுமாம். ஆனால், விற்பனை வரியை வைத்துக்கொண்டு அதைச் சரிக்கட்ட வேண்டுமாம் என்ற அந்த வாதம் பொருந்தாத வாதமாகும்.

ஆகவே மதுவிலக்கினால் ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவதற்கு மத்திய அரசு தமிழக அரசுக்கு, எங்கெங்கு மதுவிலக்கு அமல்படுத்தப்படுகிறதோ அந்த மாநில அரசு களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதுதான் நியாயமாகும் என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு பெருமகிழ்ச்சி ஏற்படும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், நாம் எழுப்பிய அதே கோரிக்கையை – ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது – நாங்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பிய நேரத்தில்

இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற அண்ணா தி.மு.க.வினர் பக்தவத்சலம் அவர்களுடைய வாதத்தை எடுத்துவைக்கத் தவறவில்லை. விற்பனை வரியால் வரக்கூடிய வருமானத்தைக்கொண்டு அந்த இழப்பை சரிக்கட்டிக் கொள்ளக்கூடாதா என்ற வாதங்களை சில நேரங்களில் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசியிருந்தாலும் மாநில நன்மை கருதி அதில் போட்டாபோட்டி காட்டா குஸ்தி என்று இல்லாமல் அதற்காக பழிக்குப்பழி என்று இல்லாமல் மாநில உரிமை கருதி நீங்கள் கோருகிற அந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய மாநில உறவுகள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகமாகக் கோடிட்டு காட்டவில்லை என்பதை நம்முடைய எதிர்க்கட்சி துணைத்தலைவர் பேராசிரியர் அவர்களும் நண்பர் சங்கரய்யா, நண்பர் உமாநாத் போன்றவர்களும் பேசும்போது எடுத்துச்சொன்னார்கள். மத்திய மாநில உறவுகள் பற்றி என்ன பேசவேண்டும், என்ன எழுதவேண்டும், என்ன சொல்லவேண்டும், என்பதை இம் மாமன்றம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பில் இருந்தநேரத்தில் ஒரு தீர்மான வடிவிலே கொடுத்திருக்கிறது. மாநில சுயாட்சித் தீர்மானம் நாலைந்து நாட்களாக விவாதிக்கப் பட்டு அந்தத் தீர்மானம் இங்கே பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது.

இன்றைக்கு ஷேக் அப்துல்லா, ஜோதிபாசு, பாதல் போன்றவர்கள் எல்லாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று சொல்லுகின்றார்கள், அவர்கள் மட்டுமல்ல, மீண்டும் இன்றைக்கு கர்நாடகத்தில் முதலமைச்சராக வந்திருக்கிற தேவராஜ் அர்சும் கூட கூறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைச் சுட்டிக்காட்டித்தான் மாநில சுயாட்சி கோரிக்கையை நாம் வலியுறுத்தினோம். எப்பொழுதும் மத்தியிலே ஒரே கட்சி ஆட்சியும் மாநிலங்களில் ஒரே கட்சி யினுடைய ஆட்சியும் இருக்கின்ற நேரத்தில், ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து, காரியங்கள் நடைபெறக்கூடும். ஒருவரை ஒருவர் இணைந்து போய்விட முடியும்.

ஆனால் இன்றைக்கு இந்தியாவின் நிலைமை என்ன? மத்தியிலே ஜனதா ஆட்சி, மேற்கு வங்காளத்தில் மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி, தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி, கேரளத்தில் கூட்டணி ஆட்சி, பஞ்சாபிலே அகாலி தளத்தின் ஆட்சி. இப்படி மத்தியில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய ஆட்சியும், நான்கைந்து மாநிலங்களில் வேறு கட்சிகளின் ஆட்சிகளும் நடைபெறுகின்ற நேரத்தில்தான் மாநில சுயாட்சியின் பெருமையை உணர முடியும். இந்திராகாந்தி அம்மையாரே இன்றைக்கு மீண்டும் மத்தியிலே வீற்றிருப்பார்களேயானால் தேவராஜ் அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற குரலை இவ்வளவு பலத்த குரலில் எழுப்பியிருக்கமாட்டார் அவருக்கே தலைவலி என்று வந்த பிறகுதான் மத்திய சர்க்காரை எதிர்த்து ஒரு அறிக்கை விட முடிந்தது. மாநில சர்க்காரை கேள்வி கேட்க மத்திய சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கிறது. மாநில சர்க்கார் மீது புகார் கூறப்பட்டால் அதைப் பற்றி விசாரிக்க மத்திய அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற கேள்வியை அவருக்கே ஒரு சங்கடம் வந்தபோது தான் அறிவிக்க முடிந்தது.

ஆனால் எங்களுக்குச் சங்கடம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, மாநில சுயாட்சி தேவை என்று கேட்பது. எங்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங் களுக்கும் மாநில சுயாட்சி தேவை என்ற காரணத்தினால்தான் இந்த நிலை வந்தது. ஆகவே மற்றவர்களைப்போல் சங்கடம் வந்த பின்னால் நாங்கள் மாநில சுயாட்சி கேட்கவில்லை. மாநில சுயாட்சி கேட்டு எங்கள் உரிமைகளை வற்புறுத்திய காரணத்தினால்தான் எங்களுக்குச் சங்கடமே வந்தது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மாநில சுயாட்சி கேட்கும்போது இது பிரிவினையிலே கொண்டு போய் விடுமோ என்று நாங்கள் அஞ்சுவதால், அதன் காரணமாகத்தான் நாங்கள் மாநில சுயாட்சியை ஆதரிக்க வில்லை என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு.மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேறு பலரும் பேசினார்கள். இன்றைக்கு ஆளும் கட்சியாக

இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இது ஒரு பிரிவினை கோஷம்; எனவேதான் நாங்கள் இதை ஆதரிக்கவில்லை என்று அன்றும் சொன்னார்கள், இன்றும் சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

முதலமைச்சராக வீற்றிருக்கின்ற நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் பல கூட்டங்களில் ''நாங்கள் விரும்புவது மாநில சுயாட்சியல்ல. மக்கள் சுயாட்சி'' என்று சொன்னார்கள். அது என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை. காலம் வரும்போது புரிய வைப்பார் என்று கருதுகிறேன்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்பது மறைமுகமாகப் பிரிவினை உணர்ச்சி என்று சொல்லுகின்றவர்களுக்கு ஆப்பு அடித்ததுபோல், ஆணி அறைந்ததைப்போல் என்னுடைய அருமை நண்பர் மனோகரன் அவர்கள், அவருடைய மணிவாசகத் தமிழில் எழுதிய கட்டுரை ஒன்றைப் படித்துக்காட்ட விரும்புகிறேன். 'தென்னகம்' பத்திரிகையில் எழுதப்பட்டு 'அரசியல் அலைகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரை, நான்தான் இதை வெளியிட்டேன் என்று நினைவு, அது என்ன கட்டுரை, அதில் என்ன எழுதியிருக்கிறார். ''ராஜபாளையத்தில் நடைபெற்று முடிந்துவிட்ட தி.மு.க. மாவட்ட மாநாட்டில் பேசிய பேச்சாளர்களில் பெரும்பாலோர் மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்படாவிட்டால் பழைய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற லட்சியத்திற்குப் புத்துயிர் தருவோம் என்று பேசியதாக சில பத்திரிகைகள் விஷமப் பிரச்சாரம் புரிந்திருக்கின்றன. (இன்றைக்கு அப்படி யாராவது சொன்னால் அது விஷம் பிரச்சாரம்தான் என்பது இன்றைய நிதி அமைச்சரின் அன்றைய தீர்ப்பு...)

''மாநாட்டிலே பேசிய பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் தி.மு.க. கோரும் மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினைவாதம் அல்ல'' என்றார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது

அதிகப்படியான அதிகாரங்களைக் கோரும் அல்லது அளவுக்கு மீறி மத்தியில் குவிக்கப்பட்டுக் கிடக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கும் கோரிக்கைக்கு பிரிவினை முலாம் பூசாதீர்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இது தமிழகம் ஒன்றுக்கே உரித்தான தனிக்குரல் அல்ல என்றும், ஆகையினாலே தி.மு.க.வைத் தனிமைப் படுத்துகிற முயற்சியின்று தரங்கெட்ட அரசியல்வாதிகள் விலகிக் கொள்ளவேண்டிய நியாயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். ''செல்ப் ஆட்டோனமி'' என்பதற்கும் ''செல்ப் டிட்டர்மினேஷன்'' என்பதற்கும் இருக்கின்ற இடைவெளியை இணைக்க முடியாத தொலை தூரத்தைச் சுட்டிக்காட்டி இந்த நியாயமான மாநில சுயாட்சி கோரிக்கையை கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கிளறிவிடும் அரசியல் மஞ்சள் பத்திரிகைகள் ஏதோ ஓர் போராட்டத்துக்கே மத்திய சர்க்காரோடு தி.மு.க. தயாராகிவிட்டது போலவும் தளநாயகன் கலைஞர் கருணாநிதி ஓலை அனுப்பி விட்டதைப் போலவும் ஆர்ப்பாட்ட போர் பாட்டைப் பாடி தடந்தோள் தட்டிக்கொண்டு தானைத் தலைவர்கள் முன் நடக்க, தமிழர் படையினர் பின்பற்றிச் செல்வதைப் போலவும், எந்த நேரத்திலும் போர் வெடிக்கலாம்: போர் மேகங்கள் குவிக்கின்றன என்ற வகையில் விளக்கங்கள் தந்துகொண்டிருப்பது வேதனைக்குரியது.

மாநில சுயாட்சி என்பது குறிப்பிட்ட மாநிலத்தோடு அடங்கி விடுகின்ற பிரச்சினை அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாநில கட்சியின் கண்ணோட்டம் அகில இந்திய அளவுக்கு உயர்ந்து கூர்மை பெற்றதற்குப் பிறகு, 'நம் வரைக்கும் சுயாட்சி கேட்போம், மற்றவர்கள் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன, என்ற பொறுப்பற்ற போக்கினை மேற்கொள்ள மாட்டோம் என்பதை வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். மாநில சுயாட்சிப் பிரச்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை தனிமைப்படுத்தும் முயற்சியும், அதன் மூலம் அதை ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறக்கிவிடும் முயற்சியும் நடைபெறுவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன. கருத்துக் குருடர்களும், அரசியல் கோமாளிகளும்

[இது அவருக்கே (நண்பர் மனோகரனுக்கு) உரித்தான வார்த்தைகள்] சிந்தனைக் குழப்பவாதிகளும், குதர்க்கவாதி களும் ஐக்கிய முன்னணி அமைக்க தலைப்பட்டுவிட்டனர். எந்தெந்தக் கட்சிகள் கடந்த காலத்தில் மாநில சுயாட்சிக்காகப் போரிடுவோம், உடம்பிலே ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை அயராது படை நடத்துவோம் என்று பேசியதோ, அதே அகில இந்தியக் கட்சிகளிலே சில நிலை தடுமாறி, மாநிலங்களுக்கு மாநிலங்கள் சுயாட்சிக் கொள்கையைப் பொறுத்து முரண்பட்ட மோதிடும் விளக்கங்களைத் தருவதையும் பார்க்கிறோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு, ''இத்தனைத் தெளிவான விளக்கத்திற்குப் பிறகும் உண்மையை ஒப்புக்கொள்வதற்கு யாருக்காவது தயக்கம் வருமானால் அது ஒரு வகையான நோயின் அறிகுறி என்றே நான் கருதுகிறேன்''.

இவைகள் எல்லாம் நான் பாராட்டுகின்ற நம்முடைய நிதி அமைச்சர் மனோகரன் அவர்களுடைய மின்வெட்டுச் சொற்கள். அன்றைய தினம் 'தென்னகம்' பத்திரிகையிலே அவர்கள் எழுதியதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறேன். நான் அவர்களை அன்றைக்குப் புகழ்ந்திருக்கலாம். இன்றைக்கு மாற்றிக்கொண்டிருக்கலாம். அதேபோல், அவர்கள் அன்றைக்கு என்னைப் புகழ்ந்திருக்கலாம். இன்றைக்கு மாற்றிக்கொண்டிருக்கலாம். அதேபோல் இன்றைக்கு நான் அவர்களை மேடையிலே தாக்கலாம்; அவர்கள் என்னை மேடைகளிலே தாக்கலாம். அது வேறுவகையான விவகாரம். ஆனால், அவர்களும், நானும் சேர்ந்து ஒத்துக்கொண்ட ஒரு கொள்கைக்காக, எவ்வளவு அழுத்தம் திருத்தமான கருத்துக்களை எனது அருமை நண்பர் நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் அன்றைக்கு எடுத்து வைத்தாரோ, அதிலே இருந்து ஏன் இப்போது பாதைமாற வேண்டுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

எனவேதான், மாநில சுயாட்சி பிரச்சினையில் இன்றைக்குள்ள அரசை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை வலுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள

மாட்டேன். அது முறையாகாது. அவர்கள் ஆளும் கட்சி: நாங்கள் எதிர்க்கட்சி, நீங்களும் சேர்ந்து ஜோதி பாசு, சேக் அப்துல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பாதல் ஆகியவர்களோடும் சேர்ந்து குரல் கொடுப்பீர்களானால், உங்களை அரவணைத்து உங்களுக்குத் துணையிருக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயங்காது என்பதை மாத்திரம் இந்த மாமன்றத்திலே நான் சூளுரைத்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாநில சுயாட்சி தீர்மானம் வந்தபோது, நீங்கள் ஆட்சியிலே இருக்கின்ற காரணத்தினால், அது வரையிலே மாநில சுயாட்சி வேண்டாம் என்று நண்பர் எட்மண்ட் போன்றவர்கள் அப்போது பேசினார்கள். நான் குறுக்கிட்டுக் கேட்டேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டேன். பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இப்போதாவது இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை யெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்திலே, முதலிலே நான் சில விவரங்களை எடுத்துச் சொல்லி, பிறகு மாநில மத்திய உறவுகளைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறுவதோடு அமையாமல் இங்கே பேச வேண்டாம் என்று ஒரு சில விஷயங்களைப் பற்றிப் பேசுமாறு, என்னுடைய நண்பர் இராகவானந்தம் அவர்கள் காலையிலே சில கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் என்னை உசுப்பிவிட்டிருக்கிறார்கள். நான் குறிப்பு வைத்திருந்தேன். இருந்தாலும் பேச வேண்டாம் என்றிருந்தேன். ஆனால், காலையில் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, திரு.ப.உ. சண்முகமும், திரு.மன்னை நாராயணசாமியும் குடிசை மாற்று வாரியத்தில் ரொம்ப முறைகேடாக நடந்துகொண்டார்கள் என்று கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் தேவையில்லாமல் காலையிலே குற்றஞ்சாட்டினார்கள். யாரோ ஒரு நகரசுத்தி தொழிலாளருக்கு கோயம்புத்தூரிலே ப.உ.ச. அவர்கள் குடிசை மாற்று வாரியத்திலே ஒரு வீடு கொடுக்கச் சிபார்சு செய்து விட்டார்கள் என்று அதை பெருங்குறையாக

எடுத்துச் சொன்னார்கள். அதை ப.உ.ச. அவர்களும் இங்கே மறுத்தார்கள். அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

நான் கேட்பதெல்லாம் கடந்த 7 மாத காலமாக தமிழகத்திலே இந்த அரசு புரிந்த சாதனைகளை நீங்கள் எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக, கடந்தகால திராவிட முன்னேற்ற கழக அரசு பற்றிப் பேசுவதிலேயே அதிக நேரம் செலவழிக்கிறீர்கள்.

இன்னொன்றையும் சொல்கிறேன். அமைச்சர்கள் அடிக்கடி சவால் விடாதீர்கள்; அது நல்லதும்கூட அல்ல. எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் கொஞ்சம் கடுமையாகக்கூட பேசிவிடலாம். பொறுப்பிலே இருக்கின்ற அமைச்சர்கள் அடிக்கடி சவால் விடுவதும், பிறகு பதில் சவால்கள் எதிர்க் கட்சியினர் விடுவதும் நல்லதல்ல. இன்னும் சில அமைச்சர்கள் இருக்கிறார்கள். மேடைகளிலே என்ன பேசுகிறார்கள் என்பதையெல்லாம் பத்திரிகைக் குறிப்புகள் மூலம் அவையின் முன்னவர் அவர்களும் அறிந்திருப்பார்கள். முதல் அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள் ஆகவே, இந்த விளக்கங் களுக்கெல்லாம் செல்ல இப்போது நான் விரும்பவில்லை. ஆனால், 7 மாத காலமாக ஆட்சியை நடத்தத் தொடங்கிய பின், பழைய ஊழலைப் பற்றி புகார்களைப் பற்றி, சர்க்காரியா பற்றி நாள்தோறும் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்கு இந்திராகாந்தி மொழியில் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி மாநாட்டில் பேசிய இந்திராகாந்தி அம்மையார் சொல்லியிருக்கிறார் ''என்னோடு இருக்கும் வரையில் அவர்கள் எல்லாம் ஊழல் பேர் வழிகள்; அவர்களுடைய கட்சிக்குப் போய்விட்டால் புனித மானவர்களாகிவிடுகிறார்கள்'' என்று சொல்லியிருக்கிறார்கள். போன வருடம் நான் சொன்னதை இந்த வருடம் இந்திரா காந்தி அம்மையார் சொல்லுகிறார். போன வருடம் எனக்கு சர்க்காரியா: இந்த வருடம் அவருக்கு ஷா. இப்படிக் கமிஷன்கள் மாறிமாறி வந்த பிறகு மனோநிலைமையும் மாறிமாறி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற வரை அவர்கள் ஊழல் பேர்வழிகள், விசாரணைக் குரியவர்கள். இங்கிருந்து அங்கு வந்துவிட்டால்

அவர்கள் நல்லவர்களாக, உத்தமர்களாக, புத்தர்களாக ஆகி விடுகிறார்கள்.

54 குற்றச்சாட்டுகள் திராவிட முன்னேற்றக் கழக அரசு பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 28 குற்றச்சாட்டுக்களுக்கான அறிக்கையில் முதல் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிச்சமுள்ள பகுதிக்கு விரைவில் கொடுக்கப்பட இருக்கிறது. அதைப் பற்றி நாள்தோறும் அமைச்சர் பெருமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நல்லவேளை இப்போது சட்ட மன்றம் நடைபெறுவதால் பேச வாய்ப்பில்லாத காரணத்தால் பேசாமல் இருக்கிறார்கள். இது முடிந்தவுடன் மீண்டும் ஆலாபனங்களை ஆரம்பிக்கிறோம் என்ற அந்த அளவுக்குப் பேசுகிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம் 28 குற்றச்சாட்டுகளுக்குச் சர்க்காரியா தன்னுடைய அறிக்கையை அறிவித்திருக்கிறார். மிச்சமுள்ள குற்றச்சாட்டுகளுக்கு என்ன செய்ய போகிறீர்கள்? நீங்களே அவைகளை கைவிட்டு விட்டீர்களா? அந்த 28 குற்றச்சாட்டில் சாரம் இல்லையா? வேண்டுமென்றே கொடுத்தோம் என்று பகிரங்கமாக அறிவிக்கப் போகிறீர்களா? அல்லது நீங்களே கமிஷன் போட்டு விசாரிக்கப் போகிறீர்களா? அந்தக் கமிஷனுக்குக் குற்றச்சாட்டு கொடுத்த நீங்கள் வாக்குமூலங்களை அளிக்கத் தயாராக இருக்கிறீர்களா? இவைகளுக்கெல்லாம் நாடு உங்களிடத்திலிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல. நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கூடப் பேசினார்கள். மற்றவர்களைக் குற்றம் சொல்லுகிற நேரத்தில், கடந்த காலத்தில் இருந்த ஆட்சியின் தவறுகளை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில் அவற்றைத் திருத்தும் வாய்ப்பைப் பெற்றா நீங்கள் சரிவரச் செய்திருக்கிறீர்கள் என்றால் இல்லை.

திரு.ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப் போல் புயல் நிவாரண நிதிக்கு நட்சத்திர இரவு நிகழ்ச்சி நடத்தப்பட்டிருக் கிறது. வேண்டாமென்று சொல்லவில்லை. எப்படி அதற்கான நிதி வசூலிக்கப்பட்டது? பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி தரவேண்டியதுதான். நான்கு கோடி ரூபாய்க்கு மேல் மக்கள் தந்திருக்கிறார்கள். இதிலே இரண்டு கோடி ரூபாயோ,

ஒன்றரைக் கோடி ரூபாயோ கிடைத்திருக்கிறது. ஆனால் அது வசூலிக்கப்பட்ட முறை என்ன? முதலமைச்சர் அவர்கள் மதுரையிலேயோ வேறு ஒரு நிகழ்ச்சியிலேயோ பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''அதிகாரிகள் தவறு செய்தார்கள் இந்த நிதி வசூலில் என்று யாராவது சொன்னால் அதற்காக யாரும் அதிகாரிகள் கவலைப்படவேண்டாம்; நானே அதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறேன்'' என்ற அளவுக்கு முதலமைச்சர் பேசியிருக்கிறார், இதோ ஒன்றைப் படிக்கிறேன்.

'நகராட்சி அலுவலகம் சேலம்.'

சி. 11 – 4280/78 என்ற எண்ணுள்ள சுற்றறிக்கை. நாள் 4.2.1978.

பொருள்: நட்சத்திர இரவு – புயல் வெள்ள நிவாரண நிதி – நன்கொடை வசூல் – குறித்து.

பார்வை: இவ்வலுவலக 27.1.1978 தேதிய சி. 11– 4280/78 எண். சுற்றறிக்கை.

'நட்சத்திர இரவு' நிகழ்ச்சி நடத்தி புயல் வெள்ள நிவாரண நிதிக்கு நிதி வசூலிக்க நன்கொடை டிக்கட்டுகள் ஒவ்வொரு பிரிவிற்கும் குறியீடு நிர்ணயித்து 31.1.1978 – ல் வழங்கப்பட்டது.

டிக்கட்டுகள் வழங்கி ஒரு வாரம் ஆகியும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் 10% கூட எந்த ஒரு பிரிவும் வசூலிக்காதது வருந்தத்தக்கதாயுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு டிக்கட் கூட விற்காமல் திருப்பித் தரக்கூடாதென கூறி வருகிறார். மற்ற அரசுத் துறையினர் வசூலில் தீவிரம் காட்டுவதுபோல் நகராட்சியும் தீவிரம் காட்டவேண்டும். ஆகையால் எல்லாப் பிரிவு தலைமை அலுவலர்களும் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கி வழங்கப்பட்ட டிக்கட்டுகள் அனைத்தையும் விற்பனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 11, 12–2–1978 ஆகிய இரு தினங்களும் விடுமுறையாதலால் 10–2–1978க்குள் விற்பனை செய்த

தொகை செலுத்துவதுடன் விற்பனை செய்ய இயலவில்லை யென ஒரு டிக்கட்கூடத் திருப்பித் தரக்கூடாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது வற்புறுத்தப்பட்ட ஒன்று அல்லவா? ஒரு டிக்கட்கூடத் திருப்பித் தரக்கூடாது என்று சொல்லி அனைத்துப் பிரிவு தலைமை அலுவலர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மிச்சப்பட்டிருக்கும் டிக்கட்டுகளை யாரிடத்தில் கொடுப்பார்கள்? யாரும் வாங்கவில்லை என்றால் அவர்களே பணம் போட்டுத்தானே தரவேண்டும். இது கெடுபிடி அல்லவா. இதற்கு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

அதைப் போல் இன்னொன்று, கோபி பிரஸ், கோவையில் அச்சடிக்கப்பட்ட நன்கொடைச் சீட்டு. தமிழக அரசு முதலமைச்சர் புயல் நிவாரண நிதி என்று போடப்பட்டிருக்கிறது. நன்கொடைச் சீட்டில் எண்ணே கிடையாது. கையெழுத்து கிடையாது. பத்து ரூபாய்ச் சீட்டு; இதில் ஊழல் நடைபெற்றிருக்கக்கூடுமா, கூடாதா? இதை விசாரிக்க வேண்டுமா வேண்டாமா?

இன்னொன்று. மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முக உதவியாளர் என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடாமலே ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஊழல் நடைபெற்றிருக்கலாமா இல்லையா? சேலம் நகராட்சி அலுவலகத்தின் அறிக்கையை நான் படித்துக் காட்டினேன். அந்த அறிக்கையின் நகலை நான் வைத்திருக் கிறேன். தேவையானால் நான் அரசுக்குத் தர தயாராக இருக்கிறேன்.

ஒரு நகரசுத்தி தொழிலாளருக்கு சிபாரிசு செய்தது ஒரு பெரிய குற்றமாக அமைச்சர் இராகவானந்தத்தால் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டது. ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிலும் தலையிடுவதில்லை என்று முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் பெருமையாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பர்கூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை, திரு. ரா. தேவராஜன் ந. க. எண். 12354/77சி. 1 நாள் 4–1–1978 பொருள் கல்வி ஆரம்பக் கல்வி பர்கூர் சட்டமன்றத் தொகுதி எம். எல். ஏ. எஸ். ஜி. ஆறுமுகம் அவர்களின் சிபாரிசின் பேரில் மாறுதல் அளித்தல் ஆணையிடல் தொடர்பாக, பார்வை மாவட்ட கல்வி அலுவலர் ந. க. எண். 15218/77 இ. நாள் 20–12–1977.

ஆணை: பார்வையில் கண்டுள்ள மாவட்ட கல்வி அலுவலரின் ஆணையின்படி கீழ்க்கண்டுள்ளபடி மாறுதல் அளித்து ஆணையிடப்படுகிறது. அவர்கள் உடனடியாக விடுவிப்புப்பெற்று புதிய பள்ளிகளில் சேர்ந்துகொள்ள வேண்டியது. தொடர்புள்ள தலைமையாசிரியர்கள் விடுவிப்பு மற்றும் சேர்த்துக்கொண்டு அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டியது, ஆசிரியரின் பெயர் என். பெரிய தம்பி. இடைநிலை உதவி ஆசிரியர், கரடிக் கொல்லுப்பட்டி, மாறுதல் அளிக்கும் பள்ளியின் பெயர், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கே. புதூர் வரிசை எண் 2க்குப் பதிலாக ஆசிரியர் ஆ. சிவானந்தம் இடைநிலை ஆசிரியர் கே. புதூர் மாறுதல் அளிக்கும் பள்ளியின் பெயர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கரடிகொல்லுப்பட்டி, வரிசை எண். 1க்குப் பதிலாக ஒப்பம் தேவராஜன்.

ஆக, ஒரு எம். எல். ஏ.வுக்குப் பிடிக்காத காரணத்தால் எம். எல். ஏ. அவர்களின் சிபாரிசின் பேரில் மாறுதல் அளித்தல் என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள், இதனுடைய நகல் என்னிடத்தில் இருக்கிறது. உங்களுக்கு அது தேவையானால், நீங்கள் விசாரணை நடத்த வேண்டுமென்றால் கடிதத்தின் நகலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சிக் கண்ணோட்டத் தோடு எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை என்று அடிக்கடி கூறப்படுகிறது. அது பெரிதாகப் பேசப்படுகிறது.

மக்கள் குழு அமைக்க ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். க. அ. எண். 3 – 1025/78 நாள் 28–1 – 1978 ஊராட்சி ஒன்றியம் அரவக்குறிச்சி, அனுப்புதல் எம். சிதம்பரம், தி. எஸ். ஸி. ஆணையர், ஊராட்சி ஒன்றியம். அரவக்குறிச்சி

பெறுதல்: எல்லா ஊராட்சித் தலைவர்களுக்கும் பொருள்: குழு ஊராட்சி அளவில் சட்டப்படி இல்லாது அமைக்கும் குழுப் பட்டியலில் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர் பட்டியல் அனுப்பப்பட்டது. தகவல்: இந்த அலுவலகத்தின் இதே எண்ணுள்ள 25–1 – 1978 தேதிய கடிதம் தங்கள் ஊராட்சியில் மக்கள் குழு அமைத்து உறுப்பினர்கள் பட்டியல் அனுப்பிவைக்கும்படி மேற்காணும் இந்த அலுவலகத்தின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. அப்படி அமைக்கப்படும் குழுவில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் தங்கள் ஊராட்சிப் பொறுப்பில் உள்ள நபரை அ. இ. அ. தி. மு. க. கட்சியின் சார்பில் உறுப்பினராக அவசியம் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒப்பம் எம். சிதம்பரம் நகல் தொடர்புள்ள ஊர் உதவியாளர்களுக்கு. இது கட்சித் தலையீடா இல்லையா?

குழு அமையுங்கள் அதிலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று ஆணை போகவில்லை. இதிலே அகில இந்திய அண்ணா தி. மு. க.வைச் சேர்ந்த ஒருவரை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆணை போகிறது. இது கட்சித் தலையீடா இல்லையா? முதலமைச்சர் சொல்கிறார்: அதிகாரிகளே, கவலைப்படாதீர்கள், நான் இருக்கிறேன், நான் இருக்க பயம் ஏன் என்று அபயம் கொடுத்திருக்கிறார்.

இதைப் போலவே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மிகப் பயங்கரமாக மிகக் கெடுபிடியாக தரப்பட்டுள்ள அறிக்கையிலே ஒரு நபருக்கு இவ்வளவு பேர்கள் அழைத்து வரவேண்டும். தவறினால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஒரு கிராம சேவக் 15 பேர்களை அழைத்து வர வேண்டும். இது சாதாரண காரியமா? ஒரு மருத்துவ மாது 27 பேர்களை அழைத்து வர வேண்டும். ஒரு ஆயா ஒரு நபர் 27 பேர்களை அழைத்து வர வேண்டும். கிராமசேவகிகள் ஒரு நபர் 15 பேர்களை அழைத்துக்கொண்டு வரவேண்டும். பால சேவகிகள் ஒரு நபர் இரண்டு பேர்களை அழைத்துக்கொண்டு வந்தாக வேண்டும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு. இந்த

கெடுபிடியின் காரணமாகத்தான் சில பைத்தியம் பிடித்தவர் களுக்கும் மனநோய் உள்ள வாலிபர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள் என்று ஏடுகளிலே எல்லாம் கூட செய்திகள் வந்தன. இவைகள் எல்லாம் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறுகின்ற தவறுகள் என்று அரசின் சார்பில் சொன்னால்கூட அவைகளில் அரசுக்கும் பொறுப்பு உண்டு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெயரே பிடிக்காதவர்கள், உயிரோடிருப்பவர்கள் தங்கள் பெயரை நகரங்களுக்கு வைக்கிறார்கள், ஊர்களுக்குப் பெயர் வைத்துக் கொள்கிறார்கள், அவைகளை எல்லாம் அழிக்க வேண்டும் என்று முடிவெடுத்தவர்கள்.

ஒரு அறிக்கையைப் படிக்கிறேன்.

From

K.T.Vaidyalingam
Assistant Executive Engineer,
TWAD Board/EWS SUB-DIVISION
Tiruchengodu

TO THE COMMISSIONER
PALLIPALAYAM.

Sub : HONOURABLE MINISTER FOR LABOUR - INSPECTION OF Tiruchengode, Salem II and Mettur Constituencies on 16th and 17th December 1977 - instruction issued to provide water supply for the newly formed colony Raghavananda Nagar, in Alampalayam Panchayat.

காலனிக்கு வாட்டர் சப்ளை செய்வதில் என்ன தவறப்பா என்று கேட்பீர்கள். என்ன காரணம் தெரியுமா?

To provide water for the newly formed colony (Raghavananda Nagar, Alampalayam Panchayat).

''இராகவானந்தம் நகர்'' என்று பெயரிட்டதும் அமைச்சரே உடனடியாகக் கவனித்து குடிதண்ணீர் திட்டத்தை

உடனடியாக கவனிக்கிறோம் என்று கவனிக்கின்ற அளவுக்குப் பெயரிலே மோகம் இல்லாதவர்கள் இப்படிச் செயல்படுகிறார்கள்.

நிதியமைச்சர் கூடச் சொன்னார். நல்ல காரியத்திற்காக – அரசாங்கக் காரியத்திற்காக அதிகாரிகள் கொஞ்சம் கெடுபிடியாக நிதி வசூலிப்பது தவறாகாது, கட்சிக் காரியத்திற் காகத்தான் இப்படிச் செய்யக்கூடாது என்று நிதியமைச்சர் திருச்சியிலே நிருபர்களிடம் கூறினார். நிருபர்களிடம் பேசிய அதே திருச்சியில்தான் கட்சி நிதி திரட்டும் நிகழ்ச்சிக்காக அமைச்சர் ஒருவரே பல இடங்களுக்குச் சென்று வணிகர்களைச் சந்தித்து கட்டாய நிதி வசூல் செய்த குற்றச்சாட்டை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக்காட்டினேன்.

இன்னொன்று, ''அண்ணா'' பத்திரிகை வாங்காவிட்டால் என்ன நடவடிக்கை தெரியுமா? அதையும் படிக்கிறேன்; கேளுங்கள்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
காட்பாடி.
தேதி: 10.11.1977

குறிப்பு.

பொருள்: சமூக நலம் – அண்ணா நாளிதழ் – சமூக கல்வி நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல் – மேற்படி நாளிதழினை பெற்றுக் கொள்ளாமைக்கு சமாதானம் கேட்டல்.

பார்வை: நிர்வாக மேலாளர் அண்ணா நாளிதழ் சென்னை அவர்களின் கடிதம் நாள் 7.12. 1977.

சேவூர் சமூகக் கல்வி நிலையத்திற்கு அனுப்பப்படும் அண்ணா நாளிதழை சேவூர் ஒன்றியப் பள்ளித் தலைமை ஆசிரியர் திருப்பி அனுப்பிவிட்டதாக பார்வையில் குறிப்பிட்ட கடிதத்தில் நிர்வாக மேலாளர் தெரிவித்துள்ளார். அண்ணா நாளிதழினைத் திருப்பி அனுப்பிவிட்டமைக்கான சமாதானத்தை இக்குறிப்பாணை கிடைத்த மூன்று தினங்

களுக்குள் அனுப்பத் தவறினால் மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்.)

ஆணையாளருக்காக.

நீங்களும் இதையெல்லாம் செய்யவில்லையா என்று ஒரே வரியில் கேட்கலாம். இதையெல்லாம் மாற்றிச் செய்ய நீங்கள் வந்ததாகச் சொன்னீர்களே, நீங்கள் ஏன் செய்யவில்லை என்பதுதான் கேள்வி. இதையே தொடர்ந்து செய்வதென்றால் நாங்களே இருந்துவிட்டுப் போகிறோம், நீங்கள் ஏன் வர வேண்டும். உத்தமர்களைப்போலப் பேசிவிட்டு, கடுகளவு தவறும் எங்கள் ஆட்சியிலே நடைபெறாது என்று கூறினீர்கள். நான் இப்படி அடுக்கடுக்காக எடுத்துக்காட்டியிருக்கிறேன், இவ்வளவு குற்றச்சாட்டுகளையும்.

இன்னுமொன்று. அமைச்சரின் பெயரைச் சொல்லாமல் சொல்கிறேன். முதலமைச்சர்கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் குதிரைப் பந்தய மைதானத்திற்குச் சென்றார். அதாவது சீப் மினிஸ்டர்ஸ் கப் என்ற அந்த விழாவுக்கு முதலமைச்சர் செல்வது வாடிக்கை: அதற்காக நம்முடைய முதலமைச்சர் சென்று அங்கே பேசியிருக்கின்ற பேச்சைப் படித்துப் பார்த்தேன். அங்கே நடக்கின்ற ஊழல்களைப் பற்றி முதல்வர் அங்கே பேசி இருக்கிறார். அந்தக் குதிரைப் பந்தயத்திற்கு முதல்வர் செல்வதைப் போலவோ அல்லது ஒருநாள் அழைக்கப்பட்டு நிதி அமைச்சர் செல்வதாக இருந்தால். அதைப்போலவோ கவர்னர் செல்வதைப் போலவோ இல்லாமல், பந்தயம் நடைபெறுகின்ற தினம் எல்லாம் ஒரு அமைச்சரின் தாயார் போய் வருகிறார். அமைச்சரின் தாயார் போவதைக் கட்டுப்படுத்த முடியுமா? எப்படித் தடுக்க முடியும் என்று கேட்கலாம். அமைச்சருடைய தாயார் எதிலே போகிறார் என்றால், சர்க்காருடைய காரிலே போகிறார்.

முதலமைச்சர் பேசியதாக நான் படித்தேன்; அல்லது கேள்விப்பட்டேன். சினிமா தியேட்டர் வாசலில் அமைச்சர் களின் கார்கள் நின்றால்கூட, கட்சியின் தொண்டர்கள் அந்தக் காரைத் தள்ளிக்கொண்டு வந்து அவர்களுடைய வீட்டு

வாசலில் போட்டு விடுங்கள் என்று கடுமையான உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக நான் கேள்விப்பட்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைந்தேன். இது சினிமா தியேட்டர்கூட அல்ல; முதலமைச்சருடைய துறையான சினிமா தியேட்டர்கூட அல்ல. முதலமைச்சருக்கும், எனக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் பிடிக்காத குதிரைப் பந்தயத்திற்கு ஒரு அமைச்சருடைய தாயார் செல்கிறார், சர்க்காருடைய காரிலே செல்கிறார். போட்டோக்கள் இருக்கின்றன. நான் நிதியமைச்சரிடம் தருகின்றேன். இதைத் தந்துவிட்ட காரணத்தால் வேறு போட்டோக்கள் இல்லாமல் போய்விடவில்லை. ஆகவே, நிதியமைச்சரிடம் அந்தப் போட்டோக்களைத் தருகிறேன். அந்தக் காரின் நம்பர் இருக்கிறது. அந்தப் போட்டோவைத் தருகின்றேன். இந்தப் போட்டோ – அவர்கள் போய் டிக்கெட் வாங்குகிறார்கள், அதையும் தருகிறேன், இது காரிலிருந்து இறங்குகிறார்கள், இதையும் தருகிறேன். இது டிக்கெட் வாங்குகின்ற இடத்திற்குச் செல்கிறார்கள், அதையும் தருகிறேன். அவர்களோடு செக்யூரிட்டி ஆபிசர் செல்கிறார். அதையும் தருகிறேன். இவ்வளவு படங்களையும் தருகின்றேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க்கட்சித் தலைவருக்கு எவ்வளவோ வேலைகள் இருந்தும், இதிலேயும் அக்கறை காட்டுகிறார் என்பதில் எனக்குத் திருப்தி.

கலைஞர் மு. கருணாநிதி : இப்பொழுதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இதுதான் வேலையாக இருக்கும். ஏனென்றால், நீங்கள் செய்ததை நாங்கள் செய்ய வேண்டாமா? இவ்வளவு ஆதாரங்களையும் உங்களுக்குத் தந்திருக்கிறேன். இவைகளைப் பற்றி நீங்கள் பதில் அளிக்கும்போது எனக்கு விளக்கம் அளிப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால், புத்தருடைய ஆட்சி, உத்தமர்களுடைய ஆட்சி என்று கூறி கழக ஆட்சி ஊழல் ஆட்சி, ஊழல் ஆட்சி என்று புகார் கூறித் தொடர்ந்து 5 ஆண்டுக் காலத்தைக் கடத்தி விடலாம் என்று எண்ணாதீர்கள். உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே நல்ல திட்டங்கள், மக்களை வாழ்விக்கின்ற திட்டங்கள், மக்களுக்கு முன்னேற்றம்

தருகின்ற திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை உண்மையிலே முன்னேற்றுகிற திட்டங்கள் இருந்தால்தான் நீங்கள் மக்கள் மத்தியிலே தொடர்ந்து செல்வாக்கைப் பெறமுடியும் என்பதை எடுத்துக் கூறி, அவைகளைப் பெறுகிற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை இல்லை என்பதைக் கூறி, இந்த அளவோடு அமைகிறேன், வணக்கம்.



உரை : 17 22 & 23.3.1979

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையை ஒரு நாற்பது ஆண்டுக்கால வரலாற்றை உற்று நோக்கினால் வருவாய்த் துறையிலே எந்த அளவுக்கு நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதை அறிந்துகொள்கின்ற வகையிலே இது அமைந்துள்ளது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகத்தினுடைய சில பகுதிகள், கேரளத்தின் சில பகுதிகள் இணைந்து இருந்து, இணைந்த மாநிலமாக சென்னை மாகாணம் இருந்தபொழுது 1938–39 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையிலே வருவாய் 16.13 கோடியாகவும், செலவு 16.10 கோடியாகவும் இருந்து 3 இலட்சம் ரூபாய் உபரி பட்ஜெட் என்று காட்டப்பட்டு 38ஆம் ஆண்டு நிதிநிலை வரலாற்றையும் இன்றைக்கு நாற்பது ஆண்டகளுக்குப் பிறகு அது வளர்ந்திருக்கிற வரலாற்றையும் நாம் ஒருமுறை திரும்பிப் பார்ப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். பின்னர், 196667ஆம் ஆண்டில் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்து அவர்களுடைய ஆட்சி முற்றுப்பெற்ற நேரத்தில் 1966–67ஆம் ஆண்டினுடைய வருவாய் 194.55 கோடியாகவும், செலவு 201.43 கோடியாகவும் இருந்து பற்றாக்குறை 6.78 கோடி ரூபாய் என்று வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டது.

1967–68இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வரான நேரத்தில், வருவாய் 233.39 கோடி ரூபாயாகவும், செலவு 233.33 கோடி ரூபாயாகவும் இருந்தது.

6 இலட்சம் ரூபாய் உபரி என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஏற்பட்ட வருவாய் வளர்ச்சியின் காரணமாக நான் ஒவ்வொரு ஆண்டையும் பற்றி இங்கே எடுத்துக் கூற விரும்பவில்லை. 1975–76இல் கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு 1975–76ஆம் ஆண்டு வருவாய் 563.36 கோடி ரூபாயாகவும், செலவு 557.9 கோடி ரூபாயாகவும் இருந்தது. உபரி நிதிநிலை அறிக்கை என்ற அளவில் 5.44 கோடி ரூபாய் உபரியாக அறிவிக்கப்பட்டது. 1978–79இல் இன்றுள்ள ஆட்சியில் வருவாய் 680.08 கோடி ரூபாயாகவும், செலவு 726.76 கோடி ரூபாயாகவும் இருந்து, துண்டு விழுந்த தொகை வருவாய்த் துறையிலே 46.68 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு 79.80இல் நம்முடைய நிதியமைச்சர் இங்கே வைத்துள்ள இந்த அறிக்கையின்படி வருவாய் 849.83 கோடி ரூபாயாகவும் பெருகியிருக்கிறது. கடந்த ஆண்டு வருவாய் 680.08 கோடி ரூபாயாகத்தான் இருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த ஆண்டு திடீரென்று இந்த 680 கோடி ரூபாய் வருவாய் 849 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்ததற்குக் காரணம் என்னவென்பதை எனக்கு முன்னால் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாரிமுத்து அவர்களும், மற்றும் நண்பர் அழகர்சாமி அவர்களும் எடுத்துக் காட்டினார்கள். கடந்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து பிரித்துக் கொடுக்கப்படும் வரிகளிலிருந்து மாநில அரசுக்கு, நம்முடைய தமிழக அரசுக்குக் கிடைத்தது 145.75 கோடி ரூபாய்தான் கடந்த ஆண்டு. ஆனால் இந்த ஆண்டு ஏழாவது நிதி ஆணைக்குழு செய்த பரிவுரையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதன் விளைவாக நமக்குக் கிடைக்கின்ற வரிப்பங்கீடு 264.80 கோடி ரூபாய் என்ற அளவிற்கு மாறியிருக்கிறது. எனவே, சென்ற ஆண்டைவிட 119.05 கோடி ரூபாய் இந்த ஆண்டு ஏழாவது நிதி ஆணைக்குழு பரிந்துரையின் காரணமாக, அதனை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதன் காரணமாகப் பல்வேறு மாநிலங்களுக்கும், அந்தந்த மாநிலங்களில் வசூலிக்கப்படுகின்ற மத்திய அரசாங்கத்தினுடைய வரித் தொகைகளைப் பிரித்துக் கொடுப்பதிலே காட்டப்பட்ட சலுகைகளின் காரணமாக இந்த ஆண்டு 119 கோடி ரூபாய்

நமக்கு அந்த வரிப் பங்கீட்டின் மூலம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

வருவாய் இந்த அளவிற்குப் பல முனைகளிலே அதிகரித்து இருந்தாலும் கூட, கிராம மக்களுக்கு இந்த ஆட்சி பாடுபடுகிறது என்கின்ற பிரகடனம் அடிக்கடி செய்யப் பட்டாலும்கூட இந்த அளவிற்கு வருவாய் உயர்ந்திருக்கின்ற ஒரு சூழலில் எனக்கு முன் இங்கே பேசிய அழகர்சாமி அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, மாரிமுத்து அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல அதற்கான, கிராம மக்களுடைய வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கான, வசதி வாய்ப்பு களுக்கான திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை.

நான் ஒரு ஒப்புவமையை இங்கே காட்ட விரும்புகிறேன். 1975–76ஆம் ஆண்டு கழக ஆட்சி நடைபெற்ற பொழுது 563 கோடி ரூபாய் வருவாய் இருந்த பொழுது, சிறிய பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 4.19 கோடி ரூபாய். ஆனால் இந்த ஆண்டு அதாவது 849 கோடி ரூபாயாக வருவாய் உயர்ந்திருக்கின்ற நேரத்தில், சிறிய பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கி உள்ள தொகை 3.46 கோடி ரூபாய்தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒரு கோடி ரூபாய் அளவுக்கு மேல் சிறிய பாசன திட்டங்களுக்குக் குறைத்திருப்பது ''கிராம மக்களை நாங்கள் என்றென்றும் இதயத்திலே வைத்து அவர்களுக்காகவே பாடுபடுவதாக உறுதி எடுத்து ஆட்சி செய்கிறோம்'' என்று கூறுகின்ற இந்த அமைச்சரவைக்கு பொருத்தமாகாது என்று இங்கே நான் சுட்டிக்காட்டுவேன்.

பாசனம், நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாடு போன்ற மிக முக்கியமான திட்டங்கள், இவைகளுக்காக 1975–76 கழக ஆட்சியில் அதாவது, ரூ. 563 கோடி வருவாயிருந்த பொழுது. ரூ. 19.09 கோடி செலவிடப்பட்டது. ஆனால், இன்று ரூ. 849 வருவாய் என்று அறிவிக்கப்படுகிறது இந்த ஆண்டில். இந்தத் தலைப்பில் ரூ. 18.70 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் எதிர்க்கட்சி என்கின்ற

முறையில் நாங்கள் இங்கே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறோம்.

சாலை, நீர்வழிப் போக்குவரத்து என்கின்ற தலைப்பில் 1975–76ஆம் ஆண்டில் ரூ. 6.81 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு ரூ. 2.83 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. சாலைகளுடைய பராமரிப்பும், புதிய இணைப்புச் சாலைகளை உருவாக்குவதும் கிராமப்புற மக்களுக்கு எவ்வளவு தேவை என்பதை அடிக்கடி வலியுறுத்தியும் அதை உணர்ந்து முன்பிருந்த கழக அரசு செயலாற்றியதைப் பலமுறை சுட்டிக்காட்டியும்கூட ரூ. 6.80 கோடியாக, 1975–76இல் இருந்த அந்த ஒதுக்கீடு, இந்த ஆண்டு சாலைகளுக்கும் நீர்வழிப் போக்குவரத்துக்கும் ரூ. 2.83 கோடியாகக் குறைக்கப்பட்டது வருந்தத்தக்கது. நாம் இன்று பயணம் செய்கிற நேரத்தில் பல ஊர் சாலைகள் பல்லாங்குழி போல் இருக்கிற காட்சிகளைக் காணுகிறோம். அவைகளுடைய பராமரிப்புகள் நடைபெறவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் சீர்படுத்தப் படவில்லை. அவைகளில் பயணம் செய்கிற ஒவ்வொருவரும் நேரடியாகக் காணமுடிகிறது. அன்றாடம் அல்லலுறுகிற கிராம மக்கள் இந்த அவதியை உணர முடிகிறது.

வீட்டு வசதி என்ற தலைப்பைப் பார்த்தால்கூட, 1975–76ஆம் ஆண்டில் ரூ. 6.02 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் மிக அதிக வருவாய் வருகிற, ஏறத்தாழ ரூ. 850 கோடி வருவாய் வருகிற இந்த ஆண்டில் வீட்டு வசதிக்காக ரூ. 3.86 கோடிதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப் பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள் முதலானவர்கள் என்ற தலைப்பில், கழக ஆட்சியில், ரூ. 563 கோடி வருவாய் இருந்த காலத்தில், அதாவது, 1975–76இல் ரூ. 19.38 கோடிதான் அவர்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், ரூ. 849 கோடி வருவாய் வருகிற இந்த நேரத்தில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நலன்களுக்காக ஒதுக்கப் பட்டிருப்பது ரூ. 18.46 கோடிதான் என்பதை வருத்தத்துடன் நான் இங்கே கண்டிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். கழக

ஆட்சியிலே நான் ஏற்கனவே சொன்ன ஏறத்தாழ ரூ. 19 கோடி, பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டது மாத்திரமல்ல. எனக்கு முன் இங்கே பேசிய மற்ற கட்சிகளுடைய தலைவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல், ஏறத்தாழ ரூ. 13 கோடி அளவுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இலவசமாகவே வீடுகள் கொடுக்கப்பட்ட திட்டமும் அந்த ரூ. 19 கோடியிலே சேராமல், தனித்திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்டுவது மிகமிக அவசியம்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கான நலன் – இதிலே. 1975–76இல் ரூ. 563 கோடியாக வருவாயிருந்த பொழுது, ரூ. 5.71 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 7.04 கோடி ஒதுக்கப்பட்டது. இதை மிகவும் அதிகம் என்று கருதமுடியாது. ரூ. 1.35 இலட்சம் அதிகம் ஒதுக்கப்பட்டது.

ஆனால் 563 கோடி ரூபாயில் 5.71 கோடி ரூபாய் பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட அந்த விகிதாசாரத்தையும், இப்பொழுது 849 கோடி ரூபாயில் 7 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்ட விகிதாசாரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் கழக ஆட்சியில் 1.02 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிறது 0.82 சதவிகிதம்தான் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாக, இந்தக் குரலை இந்த மன்றத்திலே நான் எழுப்பியாக வேண்டும். அதை கவனிக்க வேண்டும் என்ற அவசியத்தை எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக 6.10 இலட்சம் ஒதுக்கப்பட்டது, இந்த அரசால் கடந்த ஆண்டு. அது கடந்த ஆண்டில். இந்த ஆண்டு என்ன ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் எதுவுமே ஒதுக்கப்படவில்லை என்ற சோகமான சூழ்நிலையைத்தான் இந்த புத்தகம் ஏற்படுத்துகிறது.

பார்வையற்றோர் மறுவாழ்வுக்கு என்று சொன்னால், சென்ற ஆண்டு 1.36 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதிலே 41 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

முட்டுக்காட்டில் ஊனமுற்றோர்களுக்கு நவீன பயிற்சிக்கும் பயிற்சி பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் 16.80 லட்சம் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு அதற்காக எதுவும் ஒதுக்கப்படவில்லை. எனவே, சமுதாய நல திட்டங்களுக்காக கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இப்படிப்பட்ட முக்கியமான திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே நான் எடுத்துக் காட்டிய குறைபாடுகளை நிதியமைச்சர் அவர்கள் கவனித்து களைய முன்வரவேண்டும் – அவர்களுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கமும் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1978–79இல் 609.08 கோடியாக இருந்த வருவாய் 849.83 கோடியாக ஆனபிறகு, அதாவது 169.75 கோடி ரூபாய் அதிகமாக இருந்தும் கூட நான் குறிப்பிட்ட முக்கிய திட்டங்களுக்கு தொகையை ஒதுக்காததோடு, மேற்கொண்டும் மக்களை பாதிக்கக்கூடிய அளவிலே அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்களாக உள்ள அனைவரும் எடுத்துக் காட்டியதைப் போல, ஏழை எளிய மக்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் வரிவிதிப்பு செய்திருக்கிறது. இதிலே தேங்காய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. நான் நினைத்துப் பார்க்கிறேன், தேங்காய் மீது இருந்த வரியை, திராவிட கழக ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில், அண்ணா அவர்கள் இறந்து நான் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்தில் இன்றைய தினம் முதலமைச்சர் ஆக உள்ள திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அன்றைய தினம் கழக உறுப்பினராக இந்த மன்றத்திலே இருந்த நேரத்தில், தேங்காய் வியாபாரிகளுக்கு, அந்த வியாபாரிகளின் சங்கத் தலைவர் மாணிக்கம் என்பவர் தற்போதைய முதலமைச்சருக்கு நெருங்கிய நண்பர். அவர்களின் சார்பாக அவர்களின் சங்கம் சார்பாக எங்களிடத்திலே அடிக்கடி வந்து முறையீடுகள் தருவார். இன்றையதினம் முதலமைச்சர் ஆக உள்ளவர், தேங்காய் மீது வரி போடுவது கொடுமையல்லவா? ஏழை எளிய மக்களை பாதிக்காதா என்று கேட்டார். அவருடைய

பரிந்துரைகளை கேட்டு அன்றைக்கு தேங்காய் மீது போடப்பட்டிருந்த வரியை விலக்கப்பட்டது என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அந்தப் பழைய நிகழ்ச்சியை நினைவு கொண்டாவது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த தேங்காய் மீதிருக்கும் வரியை நிச்சயமாக நீக்கிவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

ஏனென்றால், இன்றைக்கு முதல் மந்திரியாக உள்ளவர் அன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினர் ஆக இருந்தபோது அவருடைய பரிந்துரைகளை எடுத்துக்கொண்டோம். இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் இதைப் பற்றி வெளிப்படையாக சொல்லாவிட்டாலும் தனியாகவாவது சொல்லியிருப்பார்கள். இன்னும் மற்ற எதிர்கட்சித் தலைவர் களும் சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்பரிந்துரைகளை எடுத்துக்கொண்டு, ஏழை எளிய மக்களை பாதிக்கக்கூடிய வரி இது என்று கருத்தில் கொண்டு உடனடியாக நீக்கி, இன்றைக்கே இந்த அறிவிப்பை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அதைப் போலவே கையால் செய்யப்படுகிற தீப்பெட்டிகள் மீது வரி போட்டு இருக்கிறீர்கள். அதிலே ஒன்று, சிறுதொழில் அதிபர்கள் ஆண்டு ஒன்றுக்கு 25,000 ரூ. மேற்படாமல் உற்பத்தி செய்பவர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இது ஒரு ஏமாற்று வித்தையே தவிர நடைமுறையில் செயல்படாத ஒன்றாகும். இந்த சிறிய தொழில் அதிபர்களுக்கு 25,000 ரூபாய்க்கு குறைவான விற்பனை இல்லை. எனவே, அந்தத் தொழிலதிபர்கள் பாதிக்கப்படுவதன் மூலம் கையினால் தீப்பெட்டி செய்யும் பல தொழிலாளர்கள் நீங்கள் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று இன்று அறிவித்துக் கொண்டிருக்கிற இனிய ஆனால் ஏட்டுச் சித்திரங்களாக இருக்கும், அறிவிப்புகளுக்கு இடையே புதிய வேலை இழந்தவர்களை நீங்கள் உருவாக்குகிறீர்கள் என்பதுதான் இதற்குப் பொருளாகும். எனவே, அந்த வரியை உங்களுடைய பதிலுரையில் விலக்கிவிட்டேன் என்று அறிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே பலரையும் கவரக்கூடிய அனைவரும் எதிர்பார்த்து இருக்கக்கூடிய ஒரு அற்புதமான, புரட்சிகரமான என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பாராட்டிப் பேசிய ஒரு கவர்ச்சிகரமான அறிவிப்பு அதைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாரிமுத்து அவர்கள் இதை எப்படிச் செய்யப்போகிறீர்கள் என்று கேட்டு, அதற்கு மேல் அதிலே அவருக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்பதை விளக்கி நீங்களே சொல்லுங்கள் என்ற அளவிற்கு அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டார். அதுதான் உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம். இந்த உரையில் குறிப்பிட்டு இருக்கும் வாசகத்தை அப்படியே படித்தால்... படித்த, படிக்காத, வேலை யில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு, ''உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்றி இருக்கும். 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (காண்டிராக்டர்) இல்லாமல்; அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப் பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாளொன்றுக்கு சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும், கோதுமையும் ஒவ்வொரு வருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும்.

இது நிதி அமைச்சரின் அறிக்கையில் காணப்படுகிற ஒரு புரட்சிகரமான அறிவிப்பு. பத்திரிக்கைகள் எல்லாம் கொட்டை எழுத்தில் இந்தச் செய்திகளை வெளியிட்டுள்ளன. தமிழ்நாட்டில் எல்லோருக்கும் வேலை தரப்படும், வேலை இல்லாதவர்களுக்கெல்லாம் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்

சம்பளம், அதோடு உணவு தானியங்கள், இந்தச் செய்தியை நம்பி பத்திரிகைகாரர்களும் அந்தச் செய்தியை பெரிதாக வெளியிட்டு இருக்கிறார்கள். ஒரு கணக்கைப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஊராட்சி ஒன்றியங்கள் 374. மார்க்சிஸ்ட் கட்சி தலைவர் சங்கரய்யா அவர்கள் பேசுகிறபோது சொன்னார். அந்த வேலை வாய்ப்புக்கு பதிவு செய்து கொள்கிறவர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாவட்ட அளவில் வந்து பதிவு செய்து கொள்வது என்றால் இயலாது. அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அவரும் இது நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறார் என்று கருதுகிறேன். ஊராட்சி ஒன்றிய அளவில் பதிவு செய்யப்படுகிறது என்று வைத்துக் கொண்டால்கூட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய பரப்பளவிற்குள்ளே 5,000 பேராவது வேலை இல்லாதவர்கள் இருப்பார்கள். நீங்கள் கொஞ்சம் அதிகமாகச் சொல்கிறீர்கள், நான் அந்த 5,000இல் 2,500 பேருக்கு வேலை கொடுத்து விடுவோம் என்று நிதி அமைச்சர் வாக்களித்தால் 2,500 ஆக குறைத்துக் கொள்கிறேன். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 2,500 என்ற கணக்கிட்டால் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் எவ்வளவு பேர் வேலை இல்லாதவர்கள் இருப்பார்கள் என்ற கணக்கையும் பார்த்தால், ஏறத்தாழ 10 லட்சம் நான் குறைவாகச் சொல்கிற கணக்கில் 10 லட்சம் பேர் வேலை இல்லாத சூழ்நிலையில் இருப்பார்கள். 5,000 பேரில் 2,500 பேருக்கு வேலை கொடுத்தாலும், 2,500 பேர் வேலை இல்லாமல் இருப்பார்கள். 2,500 பேருக்குக் கொடுக்கப் போகிறீர்களா என்பது வேறு விவகாரம். நான் கேட்கிறேன். 2,500 பேருக்கு வேலை இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு 1 ரூபாய் தரப்போகிறோம் என்று சொல்கிறீர்களே, அப்படிப் பார்த்தால் 10 லட்சம் பேருக்கு ஒரு நாளைக்கு 1 ரூபாய் என்றால் மொத்தமாக மாதத்திற்கு எவ்வளவு ஆகும்? கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் ஆகும். ஆண்டு ஒன்றுக்கு 36 கோடி ரூபாய் தேவைப்படும். நானும் நீங்கள் தந்து இருக்கிற நிதி நிலை அறிக்கையின் பக்கங்களிலே எல்லாம் ஒன்றுவிடாமல், பக்கம் பக்கமாக புரட்டிப் பார்த்தேன். அதிலே

எங்கே 36 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதை அந்தப் புள்ளி விவரங்களில் இருந்து என்னால் காண முடியவில்லை. எனவே, எந்தத் தலைப்பின் கீழும் எப்படி இந்த வேலை வாய்ப்புக்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்ற தொகையை நீங்கள் குறிப்பிடவில்லை.

ஒரு வேளை நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடும். நாங்கள் கிராமப்புறங்களில் நிறைவேற்றுகின்ற திட்டங்களில் எல்லாம் இவர்களை ஈடுபடுத்தி, அவர்களுக்கு இந்தச் சம்பளம் தரப்படும் என்ற பதிலை சொல்ல முடியும். அப்படிச் சொல்வார்களானால் நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கின்ற 1975–76இல் இருந்த கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்களைவிட, அதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை விட பாதிக்கும் குறைவாக, சில பகுதிகளில் முக்கால்வாசிக்கும் குறைவாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கும்போது ஏற்கெனவே அந்த பகுதிகளில் வேலை செய்கிறவர்கள் அன்னியில் நீங்கள் புதிதாக எப்படி அவர்களுக்கு வேலை தரப்போகிறீர்கள் என்பது புரியவில்லை. அதனால் நிதியமைச்சர் மிகுந்த ஜாக்கிரதையாக இந்த அறிவிப்பின் கடைசியில் ஒரு அழகான வாசகத்தைச் சேர்த்து, பிறகு எங்களை எல்லாம் ஏமாற்றி விடலாம் என்ற நினைப்பில் செய்திருக்கிறார்கள் அந்த வாசகம் இதுதான். ''இந்தப் புதிய திட்டத்திற்கென நிர்வாக அலுவலர் களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.''

குதிரை வாங்கப் போகிறோம். அதற்கு இப்போது சவுக்கு வாங்கி விட்டோம். குதிரை வாங்கியவுடன் சவுக்கு பயன்படும் என்று சொல்வதைப் போல இது இருக்கிறது. இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்றெல்லாம் அறிவிக்காமல், தரப்பட்டிருக்கிற பெரிய புத்தகங்களில் அதைப்பற்றிய குறிப்பு களைப் போடாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக அலுவலர்களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்த பயிற்சி அளிக்கிற திட்டம் நிறைவேறிய பிறகுதான் இந்தத் திட்டம் வரப்போகிறது என்பதை நிதியமைச்சர் அவர்கள் மிகுந்த திறமையோடு ஜாக்கிரதையாக அந்த வாசகத்தின் மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு இருக்கிற அச்சமெல்லாம் சென்னையிலே அமுல்படுத்தப்பட்ட காய்கறித் திட்டம், அது மனைதோறும் வரும், யாரும் மார்க்கெட்டுக்குச் செல்லத் தேவையில்லை, வீடு தேடி வரும், மூன்று சக்கர வண்டியில் வரும், 150 வட்டங்களுக்கும் வரும், அந்த மூன்று சக்கர வண்டிகள் அதிகம் தேவைப்படுவதால் அதற்கான தொழிற்சாலை ஏற்படுத்தப்படும்; அப்படி ஏற்படுத்துகின்ற தொழிற்சாலையில் இளைஞர்கள் வேலைக்கு வருவார்கள்; வேலைக்கு வருகின்றவர்களுக்கு தொழில் செய்கின்ற உபகரணங்கள் செய்யவேண்டும்; அந்த உபகரணங்களைச் செய்யும் தொழில்கள் கிராமப்புறங்களில் வரும்; ஆகவே, கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்களே; கடைசியில் அமுல்படுத்த முடியாமல் காய்கறித் திட்டம் மனை தேடி மண்ணுக்குள் போய்விட்டதே அதைப்போல இந்தத் திட்டம் போய்விடக் கூடாது என்பதே எங்கள் கவலை. வேலை வாய்ப்புத் தருவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி எங்களுக்கு. ஆனால் காய்கறித் திட்டம்போல் ஆகிவிடக்கூடாது.

16,000 நியாய விலைக் கடைகள் கிராமங்களில் திறக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. இப்போது, 13,000 கடைகள் திறக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. நான் சென்ற முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசும்போது கூட பல விவரங்களைச் சுட்டிக்காட்டினேன். தனியார் கடைகளில் விற்கப்படும் பொருட்களுக்கும் நியாயவிலைக் கடைகள் என்ற பெயரால் உள்ள கடைகளில் விற்கப்படும் பொருட்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள விலை வித்தியாசம் இருக்கிறது. தனியார் கடைகளில் குறைந்த விலையும், நியாயவிலைக் கடைகளில் அநியாய விலையும் இருப்பதற்கு பல எடுத்துக்காட்டுக்களை இங்கே இந்த மன்றத்தின் முன்னால் வைத்தேன். இப்போது புதிதாக ஒரு விவரத்தை இந்த நியாயவிலைக் கடைகள் பற்றி சொல்ல விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம், காரிபட்டி கிராமம் அங்கே ஒரு நியாய விலைக்கடை. அவர்கள் 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் நாளில் 383.85 காசுக்கு நியாய விலைக்

கடைக்கு பொருட்களை கொள்முதல் செய்கிறார்கள். 18ந்தேதி கொள்முதல் செய்து, 20ந்தேதி அன்று வியாபாரத்தைத் தொடங்குகிறார்கள். முதல் நாள் விற்பனை 4 ரூபாய் 17 காசு. 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதி விற்பனை 82 ரூபாய் அல்ல; 82 பைசா. ஒவ்வொரு நாளும் நடைபெற்ற விற்பனைப் பட்டியல் என்னிடம் இருக்கிறது. ஆனால் நேரம் குறைவாக இருக்கிறது. அந்த காரிபட்டி நியாயவிலைக் கடையில் முதல் ஒரு மாதம் விற்பனையான தொகை 42 ரூபாய் 19 காசு என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விற்பனையில் லாபம் சுமார் 10 சதவீதம் என்று வைத்துக்கொண்டால் கூட மொத்த லாபம் 4 ரூபாய்தான் அந்த நியாயவிலைக் கடைக்கு ஒரு மாதத்தில் கிடைக்கும்.

இன்னும் சில இடங்கள். அதாவது சேலம் மாவட்டத்தில் கருமாபுரம் என்ற இடத்தில் ஒரு கடை இருக்கின்றது. அந்தக் கடையிலே மாத விற்பனை 248 ரூபாய் 18 காசாக இருக்கிறது. வடாற்காடு மாவட்டம் வாலாஜா தாலுகாவில் அம்மணந்தாங்கல் என்ற இடத்தில் உள்ள கடையில் மாத விற்பனை 154 ரூபாய் 34 காசுகள். சென்னசமுத்திரம் என்ற இடத்தில் உள்ள கடையில் மொத்த விற்பனை 290 ரூபாய் 55 காசாக இருக்கின்றது. அதிகமான தொகையாக இருக்கின்ற இந்த 290 ரூபாயை எடுத்துக் கொண்டால் கூட 10 சதவீதம் லாபம் என்று வைத்துப் பார்த்தால் 29 ரூபாய் அல்லது 30 ரூபாய்தான் அந்தக் கடைக்கு மாதத்தில் லாபமாக கிடைக்கும். ஆனால் கடையிலே வியாபாரம் செய்வதற்கு போட்டிருக்கின்ற ஆளுக்கு தர வேண்டிய சம்பளம் மாதம் 100 ரூபாய். அந்த அளவிலே தந்து கொண்டிருக்கிறீர்கள். எத்தனை நாளைக்கு நியாயவிலைக் கடைகளை நடத்தப் போகிறீர்கள். ஒரு ஆளுக்கு 100 ரூபாய் வீதம் 13 ஆயிரம் கடைகளுக்கு ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் என்ற அளவுக்கு அந்தக் கடைகளிலே வேலை செய்கின்றவர் களுக்கு சம்பளமாகத் தர வேண்டியிருக்கும். அது மட்டுமல்ல. கொள்முதல் செய்வதற்குச் செல்கிற நேரத்திலே போக்குவரத்து செலவுக்கும் பணம் செலவழிக்க வேண்டும். கடைகள் இருக்கின்ற இடங்களுக்கு வாடகையும் கொடுக்க வேண்டும்.

இதெல்லாம் உங்களால் இயலுமா? இதைத்தான் அன்றைக்கு நீங்கள், நியாயவிலைக் கடைகளை திறக்கப் போகிறோம் என்று அறிவித்த நேரத்திலே சட்டமன்றத்தில் இது நடக்கக்கூடிய காரியமா – நடக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. நடக்கக் கூடிய காரியமா என்றும் நன்றாக யோசித்தீர்களா என்றும் கேட்டபோது முதலமைச்சரவர்கள் அதிகாரிகளை எல்லாம் கலந்து கொண்டுதான் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வீம்புக்காக சொல்லிவிட்டோம் என்ற ஒரே காரணத்திற்காக, செய்யப் படுகிற காரியமே தவிர வேறல்ல.

நீங்கள் வைத்திருக்கிற நியாய விலைக் கடைகள் இருக்கட்டும். இன்றைக்கு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நியாய விலை கிடைக்காமல், அதாவது கட்டுப்படியாகிற விலை கிடைக்காமல் துயரப்படுகிறார்கள். அவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 120 வேண்டு மென்று கேட்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நேற்றைய தினம் திரு. சங்கரையய்யா அவர்கள் பேசும்போது 'ஒரு குவிண்டாலுக்கு ரூ.120 அல்ல. ரூபாய் 100ஆவது கொடுங்கள்' என்று குறிப்பிட்டார். நானும் அதையேதான் கேட்கிறேன். அதாவது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் ரூ. 85ஆவது ஒரு குவிண்டாலுக்கு அந்த விவசாயிகளுக்கு கொடுக்க முன்வருகிறதா? இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ஒரு குவிண்டால் 70 ரூபாய்க்குத்தான் உற்பத்தி செய்த விவசாயிகளால் விற்க முடிகிறது. அந்த விலைக்குக்கூட நெல்லை வாங்குவதற்கு ஆள் இல்லாமல் திண்டாடுகிறார்கள். அதிலும் குறிப்பாக ராஜராஜன் என்று பெயரிடப்பட்ட நெல்லை வாங்குவதற்கே ஆள் இல்லை என்கிற ஒரு சூழ்நிலை இன்றைக்கு தஞ்சைத் தரணியிலே ஏற்பட்டிருக்கிறது. முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்தபோது விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கிற பண்டங்களுக்கு குறிப்பாக மிக அத்தியாவசிய பொருளாகிய நெல்லுக்கு நியாயமான கட்டுப்படியான விலை கிடைக்குமா என்று சந்தேகப்பட்டபோதெல்லாம், அவர்கள் அந்த

உற்பத்தியைத் தொடங்குவதற்கு முன்பே கழக அரசின் சார்பாக நானோ உணவு அமைச்சரோ அந்த விவசாயிகளைக் கூட்டி வைத்து அவர்களுக்கு உறுதிமொழிகளைத் தந்தோம். நீங்கள் கவலைப்படாமல் உங்களுடைய கழனிகளில் உற்பத்திகளைத் தொடங்குங்கள், நாங்கள் விலை குறையாமல் பார்த்துக்கொள்கிறோம், கட்டுப்படியான விலை தருகிறோம், அப்படித் தரமுடியாத சூழ்நிலை வருமேயானால் சப்போர்ட்டிங் ப்ரைஸ் அரசாங்கத்திலிருந்து தர நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற அளவில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே கழக ஆட்சிக் காலத்திலே உணவு உற்பத்தியிலே விவசாயிகள் மிகுந்த நம்பிக்கையோடு அவர்களுடைய வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டார்கள். ஆனால் இன்றைக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற ஒரு குவிண்டாலுக்கு 85 ரூபாய் என்ற அளவில்கூட கொள்முதல் செய்ய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தயாராக இல்லை. என்ன காரணம்? பணம் இல்லையா? வேறு என்ன காரணம்? குவிண்டாலுக்கு ரூபாய் 85 நிர்ணயம் செய்தால்தான் பணம் கொடுக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்தால், அந்தப் பணத்தையாவது வாங்கி, 'எந்த விலைக்காவது எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற அனாதைகளின் நிலையிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடிமக்களுக்கு இருக்கின்ற துயரைத் துடைப்பதற்கு நீங்கள் ஏன் அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அரசு அலுவலர்களைப் பற்றி இங்கு பேசப்பட்டது அரசு அலுவலர்களுக்கு இந்த அரசு நன்மை செய்கிறதோ இல்லையோ, எப்படி தொழிற்சங்கங்களை, உடைப்பது என்பதில் மும்முரமாக இருக்கிறதோ அதே வேகத்தை அரசு அலுவலாளர் சங்கத்திலும், என்.ஜி.ஓ. யூனியனிலும் காட்டி, போட்டி சங்கத்தை உருவாக்கி அதற்கு அங்கீகாரமும் அளிப்பதில் அரசுக்கு இருக்கிற அக்கறை மூன்றாவது புதிய குழுவின் பரிந்துரைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைவதற்கு ஒரு கமிஷன் அமைப்பதற்கு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அதன் காரணமாக என்.ஜி.ஓ. சங்கத்தினர் இன்று முதல் உண்ணாவிரதம் போன்ற

கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏன் இவ்வளவு காலமாக – மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும், அதிலுள்ள முரண்பாடுகளைக் களைவதற்கு ஏன் ஒரு குழு நியமிக்கப்படவில்லை என்பதை நான் கேட்க கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில்தான் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எந்த இடத்திலும் ஊழலைப்பற்றி சொல்லவில்லை. நிதிநிலை அறிக்கையில் ஊழல் என்ற அந்த வார்த்தை இல்லை. அந்த வாசகம் இல்லை. ஊழல் என்ற வார்த்தை குறிப்பிடாத காரணத்தினாலேயே அது இந்த இரண்டாண்டு காலத்தின் ஆட்சியில் அறவே களையப்பட்டுவிட்டது என்று அர்த்தமல்ல. அதைச் சொல்வதற்கு நாங்கள் தகுதி படைத்தவர்கள் அல்ல என்று அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான் நிதிநிலை அறிக்கையில் அதுபற்றி விமர்சனம் செய்யப்படவில்லை என்று கருதுகிறேன். நான் ஆறு, ஏழு உதாரணங்களை முறைகேடுகளை, ஊழல்களை எல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது, இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தேன். அதற்கான பதில்கள் எதுவும் அந்தத் தீர்மானத்திற்கு விடையளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நீண்ட நேர பேச்சில் எதற்கும் பதில் அளிக்கவில்லை என்பதை இந்த அவையும் அறியும், இந்த நாடும் நன்கு அறியும். மீண்டும் நான் அந்தக் குற்றச்சாட்டுக்களை சொல்ல விரும்பவில்லை. புதிய குற்றச்சாட்டுகள், அந்தக் குற்றச்சாட்டுகள், மிகச் சிறிய அளவிலிருந்து ஆரம்பித்து, பெரிய அளவு வரை, எப்படி நடைபெற்றிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு அச்சகத்தில் ஒரு பெண் இந்த ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படுவதாக ஆணை பிறப்பிக்கப்படுகின்றது. ஆணை எண். 3428 டி.இ. 12/79, தேதி 1979ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8ஆம் நாள். இப்படி அவர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் படுவது 1979ஆம் ஆண்டு ஜனவரி: திங்கள் 8ந்தேதி அன்று. இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால் வேலை

நீக்கம் செய்யப்பட்ட மறுநாளே அதாவது 9ஆம் தேதியே அந்தப் பெண் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதாக ஒரு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது. அந்த உத்தரவு என்னிடத்தில் இருக்கிறது அதில்.

C.P.No.3428/TE/12/79
dated 9.1.1979.

Office of the Works Manager,
Government Central Press,
Madras.

PROCEEDINGS

Sub : ESTABLISHMENT - Government Central Press. Madras Time and Gate Section - Thirumathi Jayalakshmi - Suspension from service - Orders revoked.

REFERENCE - Proceedings of the Works Manager Government Central Press, Madras No. C.P.3428/TE/12/79, dated 8.1.79.

Pending charges to be levelled against Tmt. V. Jayaiakshmi, Junior Time Keeper, Government Central Press, Madras, orders passed in the Proceedings cited suspending her from service is revoked with immediate effect.

என்று இருக்கிறது. அதில் இந்த முறைகேட்டுக்கு என்ன காரணம். இடையில் என்ன நடைபெற்றது. 8ஆம் தேதி பதவியிலிருந்த தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுகின்ற பெண்மணி, மறுநாளே, 9ஆம் தேதி மீண்டும் அந்த வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு பதவியில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள் என்றால் இந்த ஒருநாள் கூத்து ஏன் நடைபெற்றது. இந்த ஆட்சியில் இப்படி நடப்பது அதிசயம் ஒன்றுமல்ல. ஏற்கனவே சின்னாளப்பட்டியில் – மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டியில் – ஒரு டாக்டரை உத்தமபுத்திரனை – உத்தமபுத்திரன் என்ற டாக்டரை – இந்த உத்தமபுத்திரன் ஆட்சியில் உள்ள மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களே....

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ அரசு அச்சகத்தில் முதல் நாள் ஒரு பெண்மணி சஸ்பெண்ட் செய்யப்பட்டு மறுநாளே வேலைக்கு அமர்த்திய இந்த ஒருநாள் கூத்து எப்படி நடந்தது என்று கேட்டிருக்கிறார்கள்.

எப்படி நடந்தது என்றால், அந்த பெண்மணி வேலைக்குப் போயிருக்கிறாள். அப்போது அங்கிருந்த வொர்க்ஸ் மானேஜர் வேலைக்கு வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். ஏன் என்று கேட்டு இருக்கிறாள் வேலைக்கு வரக்கூடாது என்றால் வரக்கூடாதுதான் என்று சொல்லி உடனே ஒரு சஸ்பெண்ட் ஆர்டர் எழுதி கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நிரம்ப அனுபவம் பெற்றவர். அந்த நிர்வாகத்தின் பொறுப்பிலே இருப்பது நெறியாளர்தான். அதாவது டைரக்டர். அந்த அம்மையார் ஏதாவது தவறு செய்திருப்பார்களானால், அந்த ஓர்க்ஸ் மானேஜர் நெறியாளருக்கு எழுதி, விளக்கம் பெற்று நெறியாளர்தான் அந்த ஆணையைப் பிறப்பித்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, அந்த ஓர்க்ஸ் மானேஜரே நெறியாளரின் அதிகாரத்தை எடுத்து, அந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறார். நெறியாளரின் கவனத்திற்கு வந்த பிறகு, விவரங்களுக்கு விளக்கம் கேட்டபோது, அதற்கு தகுந்த விளக்கம் அளிக்கவில்லை. ஆகவே, அந்த அம்மையார் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். இதுதான் நடந்திருக்கிறது. எனவே, நிர்வாக சீர்கேடு இல்லை என்பது நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படியானால் ஏன் அந்த ஓர்க்ஸ் மானேஜர்மீது நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாது. என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நெறியாளரிடம் இந்த அரசாங்கம் விளக்கம் கேட்டிருக்கிறது. வந்த பிறகு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கலைஞர் மு. கருணாநிதி : இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட காரணத்தினால், இந்த உண்மையை ஊர் அறியவும், அதை அறிந்த பிறகு இந்த ஓர்க்ஸ் மானேஜர் மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் நெறியாளரிடம் விளக்கம் கேட்டிருக்கிறோம் என்று இங்கே அமைச்சர் அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சரி அதற்குப் பதில் சொல்லி

விட்டார்கள். சின்னாளப்பட்டியிலே நடந்ததைப் பற்றி நான் சொன்னேனே, அதற்கு வருவோம். சின்னாளப்பட்டியிலே உத்தமபுத்திரன் என்ற டாக்டர் மருந்துகளை எடுத்துச் சென்றபோது, கையும் களவுமாக பிடிபட்டிருக்கிறார். சாதாரண ஒர்க்ஸ் மானேஜர் அல்ல. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே பிடிபட்டார். அதே இடத்திலே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். அப்படி செய்யப்பட்டவர், விசாரணை எதுவுமில்லாமல், 10 நாட்களுக்குள் அவர் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டதற்கு என்ன காரணம்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற முறை எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, நான் இந்த மருத்துவமனை நிர்வாகத்திலே இருக்கின்ற டைரக்டர் ஆப் பப்ளிக் எல்த் அவர்களைக் கேட்டபோது, அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, 10 நாட்களுக்குள் அல்ல, இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவர் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் தன் தவறை ஒப்புக்கொண்டு, அதாவது அந்த மருந்தை முன் அனுமதி பெறாமல் பள்ளி மாணவர்களுக்காக நடைபெற்ற விழாவுக்கு எடுத்துச் சென்றதை தவறு என்று ஒப்புக்கொண்டு, பிறகு வேலையில் மீண்டும் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்பதை டீ.டீ.பி.எச். தெரிவித்திருக்கிறார்.

கலைஞர் மு. கருணாநிதி : அதை நான் மறுக்கிறேன். இடையிலே பணம் புரண்டிருக்கிறது என்பது என் குற்றச்சாட்டு. முதலமைச்சர் அவர்கள் விசாரணை வைப்பார்களானால், தகுந்த சாட்சியங்களோடு நான் இதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மருந்தோடு கையும், களவுமாக அவர் பிடிபட்டாரே, அப்போதே அமைச்சர் அவர்களிடம் இந்த விளக்கத்தை அளித்திருக்கக்கூடாதா? பள்ளியிலே மாணவர்களுக்காக எடுத்துச் செல்கிறேன். ஆகவே, திருடிச் செல்லவில்லை என்ற விளக்கம் அளித்திருக்கக்கூடாதா? இந்த விளக்கத்தை ஏன் அமைச்சர் அவர்களிடம் அவர் சொல்லியிருக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சென்ற காலத்தில் இந்த விளக்கம் தரப்படவில்லை. சின்னாளப்பட்டியில் நடைபெற்ற ஒரு பள்ளியின் விழாவிற்கு எடுத்துச் சென்றதாக, அந்தப் பள்ளி நிர்வாகிகளோடு, டீ.டீ.பி.எச். விசாரணை செய்து, ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார். அந்த குறிப்புகள் இருக்கின்றன. தேவையானால் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அப்படியானால் இவ்வளவு அவசரப்பட்டு ஏன் ஒரு அமைச்சர் அவர்கள் செயல்பட்டிருக்கவேண்டும். கையும் களவுமாக பிடிபட்ட அந்த டாக்டரிடம் ஏன் அப்போதே விவரங்கள் கேட்டிருக்கக் கூடாது.

மாண்புமிகு திருச்சி திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, கையும், களவுமாக பிடிபட்ட அந்த டாக்டரிடம் விவரம் கேட்டேன். அந்த டாக்டர் சரியான விளக்கம் தர முடியவில்லை. பார்மசிஸ்டு இடத்திலும் கேட்டேன். அவராலும் விளக்கம் தர முடியவில்லை. ஆகவே, மருத்துவ மனையிலே இருக்கவேண்டிய மருந்தை, வெளியே கொண்டு வந்த காரணத்தினால், அவர் கைப்பையிலே இருந்த காரணத்தினால், இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : சரியான விவரத்தை அந்த மருத்துவர் தர முடியவில்லை. என்ன காரணம்? அப்போது விவரத்தை தர முடியாதவர் பிறகு ஏன் தந்தார்? அப்படியானால் அமைச்சர் அவசரப்பட்டிருக்கிறார், அமைச்சரையாவது தண்டிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் : விவரம் தந்தார் தரவில்லை என்று சொல்லவில்லை. அவர் சொன்ன விவரம் சரியான விவரம் என்பதற்கு விசாரணை செய்ய உடனடியாக வழிவகை இல்லை. பிறகு விசாரணைக்குப் பிறகு தெரிய வந்தது.

கலைஞர் மு. கருணாநிதி : 25,000 ரூபாய் வரை பணம் புரண்டு மீண்டும் அவர் அந்த வேலையில் சேர்த்துக்

கொள்ளப்பட்டார். முதலமைச்சர் அவர்கள் ஒரு விசாரணை வைத்தார்களானால் முதலமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை யானவர்களைக் கொண்டு விவரங்களைத் தரத் தயாராக இருக்கிறேன். அடுத்து, ஆளும் சட்சிக்காரர்கள் சில ஆக்கிர மிப்புகளிலே ஈடுபட்டு அரசுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம்கூட கையகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது பற்றிய விவரங்களைக் கடந்த ஆண்டு இந்தச் சட்டமன்றத்தில் உறையாற்றியபோது சைதாப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் இங்கு சொன்னார்கள். அப்போது இன்றைய நம்முடைய மின்வாரியத் துறை அமைச்சர் அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த பண்ரூட்டி ராமச்சந்திரன் அவர்கள் அதற்கான விவரங்களை கொடுக்கும்படி புருஷோத்தமன் அவர்களிடம் போட்டார்கள். அதற்கான விவரங்களை புருஷோத்தமன் கொடுத்து அது பற்றிய குறிப்புகள் சட்டசபை நடவடிக்கை குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது.

சைதாப்பேட்டையில் அரசினர் பயிற்சிக் கல்லூரிக்கு எதிரில் ஜோன்ஸ் சாலையும் அண்ணா சாலையும் சந்திக்கும் இடத்தில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த பால கிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்திருப்பதுபற்றியும் அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பற்றியும், அண்ணா மருத்துவமனை என்ற பெயர் பலகை அங்கே போடப் பட்டிருப்பது பற்றியும் 5.1.1978இல் இந்தச் சபையில் பேசினார். அதற்கான புகைப்படங்களும் இங்கு காட்டப் பட்டது. அந்தப் புகைப்படங்களை மீண்டும் நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் அன்றைக்கு விளக்கம் கூறிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் காட்ட விரும்புகிறேன். (புகைப்படத்தைக் காட்டியவாறு) இதுதான் புகைப்படம். அண்ணா மருத்துவ மனை, மூலிகை தயாரிக்கும் இடம் என்று ஒரு கொட்டகையைப் போட்டிருக்கிறார்கள். அது அரசாங்க நிலம், ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்த இடத்தை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அண்ணா நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு, அது மாத்திரமல்ல. அதற்கு

அதிகாரி அனுமதியும் வழங்கியிருக்கிறார். இந்தச் சாலையை அகலப்படுத்துகிற வரையில் நீங்கள் இந்த இடத்தில் இருக்கலாம் என்று அதிகாரி அனுமதி வழங்கியிருக்கிறார். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு முறை கேடானது அல்லவா, ஆளும் கட்சிக்காரர்களுக்குச் செய்யப் பட்ட சலுகை அல்லவா என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று ஒரு படத்தைக் காட்டியிருக்கிறார்கள். ஆக்கிரமித்திருக்கலாம். ஆனால் அவர் ஆளும் கட்சிக்காரர் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்படிக் குறிப்பிடுகிறார்கள். என்ன ஆதாரத்தில் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. இன்னொரு தகவலையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர், இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளைச் சிலர் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற புகாரைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : ஆகையால் இந்த அரசாங்கத்தில் ஆமை வேகத்திற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப்படிப்பட்ட புகார்களைச் செய்த பிறகும், 5.1.73இல் கிளப்பப்பட்ட இந்தப் பிரச்சினைக்கு இது வரை முடிவு காணாமல் இன்னும் ஆக்கிரமிப்பாளர் பாலகிருஷ்ணன் அவர் ஆளும் கட்சி இல்லையென்று சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன். யாராக இருந்தாலும் ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரசாங்க இடத்தில் இப்படி ஒரு கொட்டகையைப் போட்டுக் கொண்டு அண்ணா மருத்துவ மனை மூலிகைப் பண்ணை என்ற பெயரை வைத்துக் கொண்டு நடத்துகிறார். மாண்புமிகு அமைச்சர் நண்பர் வீரப்பன் அவர்கள் இன்றைக்கே கூட – நெடுந்தூரத்தில் இல்லை. அண்ணாசாலைக்கு காரில் சென்று பார்த்தால் அந்த இடத்தைக் காணலாம். அதற்குப் பிறகாவது ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுப்பார்களானால் மெத்தவும் மகிழ்ச்சியடைவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆக்கிரமிப்பு மாத்திரமல்ல நடைபாதைக் கடைகள் என்ற பெயரால் நம்முடைய உயர்நீதி மன்றத்தைச் சுற்றி கடைகள் கட்டப்படுகின்றன. அந்தக் கடைகளை கட்டுகிறவர்கள் ஆளும் கட்சிக்காரர்கள் என்பதை அங்கு சென்று விசாரித்தால் நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும். நூற்றுக் கணக்கான கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நீதி மன்றத்தைச் சுற்றி தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டு அந்த கடைகளில் வியாபாரம் செய்கிற சாதாரண வியாபாரி களிடத்தில் வசூல் செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு பல்லாயிரக் கணக்கான ரூபாயை ஒரு சில ஆளும் கட்சிக்காரர்கள் பங்கு போட்டுக் கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டை நான் இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

அங்கு சாதாரண வியாபாரிகள் பிழைப்பு நடத்த வேண்டாமா அவர்களுடைய பிழைப்பைக் கெடுக்கலாமா என்று அரசு என்னைத் திரும்பக் கேட்குமானால் நான் அரசுக்குச் சொல்வேன். அந்தக் கடைகள் இருக்கலாம் என்று கருதுவார்களானால் அந்தச் சின்னஞ்சிறு கடைகள் அரசு சார்பிலே கட்டப்பெற்ற அதற்குரிய வாடகையை அரசோ அல்லது மாநகராட்சியோ பெறுகிற அந்த வழி வகைகளைச் செய்யலாமே ஏன் செய்யவில்லை? அந்தக் கடைகளின் படங்களும் இருக்கின்றன. இந்தப் படங்களைக் காட்டினால் கூட ஆளும் கட்சியினர் இல்லை என்று சொல்லக்கூடும். (சில படங்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காட்டினார்கள்). நீதி மன்றத்தைச் சுற்றி கட்டப்பட்டுள்ள கடைகளின் படங்கள்தான் இவைகள், ஒரு படத்தில், உயர்நீதி மன்ற முன்புற அண்ணா சிறுகடை வியாபாரிகள் முன்னேற்றச் சங்கம் என்று அண்ணா படமும் முதலமைச்சருடைய படமும் போடப்பட்ட ஒரு பெரிய பலகையையும் வைக்கப்பட்டு, அந்தச் சிறுகடை வியாபாரிகளுடைய சங்கம் அந்தப் பணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்தில் என்னுடைய அருமை நண்பர் அமைச்சர் வீரப்பனார் மாறுபடமாட்டார் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவருக்கே சென்னையில் உள்ள ஆளுங்கட்சியிலே உள்ள தோழர்கள் இந்தப் புகாரைக் கொடுத்திருக்கக்கூடும். எனவே இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் சென்னை மாநகரத்திலே பல

இடங்களிலே செய்யப்படுகின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர வேறு அல்ல.

இன்னொன்று, முறை கேடுகள், எப்படி எப்படி நடக்கின்றன என்பதற்கு மற்றொரு சாட்சியம். 30–07–1978 அன்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இணைப்புக் காவியக் கலை மன்னர் எம்.ஜி.ஆர். பொதுநல மன்றம், சூரியநாராயணச் செட்டித் தெரு, சென்னை–81 என்ற ஒரு லெட்டர் பேடிலே கே.தனபால் என்பவர் முதலமைச்சருடைய ஸ்பெஷல் ஆபீஸருக்கு (சீப் மினிஸ்டர்ஸ் செல்) ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார். அதற்கு ஸ்பெஷல் ஆபிஸர், சீப் மினிஸ்டர்ஸ் செல் அந்தக் கடிதத்தின் மீது,

"Forwarded to the Chairman, Tamil Nadu Slum Clearance Board, Madras, for necessary action."

Special Officer,
Chief Minister's Cell,
Fort St.George, Madras -9.

என்ற முத்திரையோடு அந்தக் கடிதம் நெசசரி ஆக்ஷன் எடுப்பதற்காக சிலம் கிளயரன்ஸ் தலைவருக்கு அனுப்பப்படு கிறது. அந்தக் கடிதத்தினுடைய வேண்டுகோள் என்ன தெரியுமா? மழையின் காரணத்தால் தற்காலிகமாக ஹவுசிங் போர்டு வீடுகளிலே 2,000 பேர்கள் குடியேறப்பட்டிருக் கிறார்கள். அந்த இரண்டாயிரம் குடும்பங்கள் கீழே இறக்கப்படும் என்று 30.07.78 அன்று பத்திரிகையில் குடிசை மாற்றுவாரியத் தலைவர் விட்டிருந்த அறிக்கையைப் பார்த்த பூண்டி தங்கம்மாள் தெருவில் உள்ள மீனவர் குடியிருப்பு காலனியில் மழையின் காரணமாக குடியேறிய ஊர் மக்கள் மிகவும் பீதியடைந்து இதைப்பற்றியே பெரும்பாலும் பரவலாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குரிய இடம் அது அல்ல என்றாலும் கூட தயவு செய்து அவர்களை இப்போது அந்த வீடுகளிலிருந்து கீழே இறக்க வேண்டாம் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மாத்திரமல்ல, கடைசியாக எழுதுகிறார்கள், அடுத்து வருகிற சென்னை மாநகராட்சித் தேர்தல் காலத்திற்குள்ளாக அவர்களை இறக்கிவிடாத

அளவிற்கு, தாங்கள் கருணை வைத்து, சென்னை மாநகராட்சி தேர்தலுக்குப்பின் இறக்க அனுமதி தந்து, சட்டப்படி என்ன செய்யப் போகிறீர்களோ. அப்படி செய்யுங்கள் என்பதனைக் கோரி தாழ்மையுடன் ஐயாவின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன், அன்பன் கே. தனபால்; இந்தக் கடிதம் 'நெசசறி ஆக்ஷனு'க்காக அனுப்பப்படுகிறது. சென்னை மாநகராட்சித் தேர்தலில் அந்த மக்களின் வோட்டுக்களைப் பெற்ற பிறகு தேர்தல் முடிந்த பிறகு அவர்களை அனுப்பலாம் என்ற முறையிலே ஆளுங்கட்சியினைச் சேர்ந்த செயலாளர் ஒருவர் ஒரு வேண்டுகோளை விடுகிறபோது அதனை ''பார் நெசசரி ஆக்ஷன்'', என்று அனுப்பப்படுகிறது என்பதைப் பற்றி நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கடிதம் இங்கே அவையிலே நம்முடைய அமைச்சருக்குப் பாராளுமன்றச் செயலாளராக இருக்கிறவரைப் பற்றிய கடிதம். மணச்சநல்லூர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றம், திருச்சி மாவட்டம், அதனுடைய செயலாளர் இ. சுப்பிரமணியம் என்பவர் 1979ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 8ஆம் நாளில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான திரு. சௌந்திரராஜனுக்கு ஒரு கடிதம் எழுதினார். முசிறி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் முசிறிப்புத்தன் மணக்கநல்லூர் அரிசி ஆலைக்காரர்களிடம் 'மக்கள் திலகம்' என்ற நாளேட்டை கழகத்திற்காகத் துவக்கப் போவதாகச் சொல்லி நிதி திரட்டுகிறார்.

அதைப்பற்றி மனுவில் விளக்கமாகச் சொல்லி யிருக்கிறேன்.

இப்படிக்கு,

இ. சுப்பிரமணியன்,

அவர் இணைத்து அனுப்பி இருக்கும் மனுவில் என்ன இருக்கிறது என்றால் –

''பொதுச் செயலாளர் அவர்களுக்கு,

வணக்கம். நமது அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற தலைவரும், எங்கள் முசிறி தொகுதி சட்டமன்ற உறுப்பினரு

மான மாண்புமிகு முசிறிப் புத்தன் அவர்கள் தலைமைக் கழகச் சார்பில்'' ''மக்கள் திலகம்'' என்ற பெயரில் தினசரி செய்திப் பத்திரிகை ஆரம்பிக்கப் போவதாகவும், அதற்காக இங்குள்ள அரிசி ஆலை அதிபர்களிடமும், அரிசி வியாபாரிகளிடமும், நிதி வசூல் செய்கிறார். தொகை ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வசூல் செய்வதற்கு திட்டமிட்டு அதற்கு வசூல் செய்வதற்கு கிழ் கண்டவர்களை முசிறிப்புத்தன் நியமனம் செய்துள்ளார் :-

1. பி.எஸ். தனக்கோடி செட்டியார், அசோகா ரைஸ்மில்.
2. பி.என். ஆறுமுகம், தண்டபாணி ரைஸ் மில்.
3. எஸ். ஆறுமுகம் செட்டியார், ஜெகதாம்பிகா ரைஸ் மில்.
4. கே.ஆர். வைத்தியலிங்கம் பிள்ளை, பாலசுப்பிரமணியம் ரைஸ் மில்.
5. டி.பி.கே. நடேசன் செட்டியார், ஜெயலக்ஷ்மி ரைஸ் மில்.

மேலே சொன்னவர்கள் வசூல் செய்கிறார்கள். இது உண்மையா? என்று அறிய விரும்புகிறோம். காரணம் இதுவரையில் தலைமைக் கழகத்திடமிருந்தோ அல்லது தங்கள் மூலமாகவோ இதைப் பற்றி செய்தி வரவில்லை.

1. தலைமைக் கழகம் 'மக்கள் திலகம்' என்ற பெயரில் தினசரி பத்திரிகை ஆரம்பிக்கிறதா? 2. 'மக்கள் திலகம்' என்ற பெயரில் பத்திரிகை ஆரம்பிக்க இருப்பதை பொதுச் செயலாளராகிய தாங்கள் ஏன் அறிக்கை வெளியிடவில்லை?

உடனடியாக தாங்கள் 'மக்கள் திலகம்' என்ற பத்திரிகையைப் பற்றிய உண்மையை அறிக்கையாக வெளியிட்டு மக்கள் மத்தியிலும் – கழகத்தினர்களுக்கும் விளக்கம் கொடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

இ. சுப்பிரமணியம்,
செயலாளர், எம்.ஜி.ஆர். மன்றம்,
மணச்சநல்லூர்.

இப்படி ஒரு கடிதம் வந்ததா இல்லையா என்று தெரியவில்லை. அவர் ஏதோ சொல்வதற்காக எழ முயற்சிக்கிறார் என்று நினைக்கிறேன். சொல்ல வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, இப்படி ஒரு கடிதம் எனக்கு வந்ததாக ஞாபகம் இல்லை.

கலைஞர் மு. கருணாநிதி : வந்ததாக ஞாபகம் இல்லை என்று சொல்கிறார் அமைச்சரவர்கள். இதோ இந்தக் கடிதம். எம்.ஜி.ஆர். மன்றம், மணச்சநல்லூர், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம், இந்தக் கடிதத்திலே, 'மினிஸ்டர் பார் ஹெல்த், 12த் பிப்ரவரி 1979, கவர்ன்மெண்ட் ஆப் தமிழ்நாட் என முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய அலுவலக முத்திரை குத்தப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரை குத்தப்பட்டது நேராக எதிர்க்கட்சித் தலைவருக்குப் போயிருக்கிறது. ஆகவே, இதுவே விசாரணைக்குரிய ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் இதைப்பற்றி நாம் விசாரித்தாகவேண்டும். நான் மேலும் ஒன்றை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களிடத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவர்கள் குடிசை மாற்று வாரியத்தைப் பற்றிப் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். எவ்வளவோ மனுக்கள் எங்களுக்கு வருகின்றன. அப்படி மனுக்கள் வருகின்ற பொழுது சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு பார்வர்டட், பார் கன்சிடரேஷன், பார் டிஸ்போசல், பார் நெசசரி ஆக்ஷன் என்று போடுவது சாதாரண மரபுக்கு உகந்ததாக இருந்து வருகிறது. அதை அவர்களும் நன்றாக அறிவார்கள். ஆகவே, அதிலே உள்ள சம்பவங்களுக்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு உத்தரவு போடுவதாக அது அமையாது. அதைப்பற்றியும் தாங்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : மாநகராட்சித் தேர்தல் முடிந்த பிறகு இறக்கி விடலாம் என்ற மனப்பான்மை ஆளுங்கட்சியில் இருக்கின்றவர்களுக்கு இருக்கின்றது

என்பதற்காக அதைக் குறிப்பிட்டேனே அல்லாமல் வேறல்ல. இன்னொன்றைச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஒரு வேளை ஏற்கனவே இருந்த பழக்கத்தின் காரணமாக அந்த உணர்வில் இருப்பவர்கள் இங்கேயும் இருக்கலாம்.

கலைஞர் மு. கருணாநிதி : உங்கள் பழக்கம் எங்களுக்கு எப்பொழுதும் கிடையாது. அதெல்லாம் உங்கள் பழக்கம்.

தலைவரவர்களே, நம்முடைய பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொன்னதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னார். விசாரணை வைக்கட்டும் எப்படி எனக்கு வந்தது என்று கேட்க. நான் சொல்வது, மணச்சநல்லூர் எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் சுப்பிரமணியம், வேறு யாரும் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் அல்ல, முசிறிப்புத்தன் இப்படி அங்கே வசூல் செய்கிறார், அரிசி ஆலை அதிபர்களிடம், பத்திரிகையின் பெயரைச் சொல்லி என்ற குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாகத்தான் இந்தக் கடிதத்தைக் காட்டினேன்.

திரு. பி. முசிரிபுத்தன் : (அமைச்சரின் பேரவைச் செயலாளர்)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தைப் படித்திருக்கிறார்கள். அவர் படித்துக்காட்டிய கடிதத்தின்படி, அப்படியொரு முயற்சி அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் எடுக்கப்படவும் இல்லை. அப்படி வசூலிக்கப் போனவர்கள் அவர்களுடைய கடிதத்தின் படி, அவர்கள் யாரும் எங்கள் உறுப்பினர்கள் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், இதுபோல் கடிதங்களை அச்சடிப்பதும், எழுதுவதும் உள்ள இது போன்ற ஆதாரங்களைக் கொண்டு வந்து தேவையில்லாமல் சபையிலே சொல்வதும் அவருக்கு அழகு அல்ல. இந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட நபர்கள் யாரும்

கழகத் தோழர்கள் அல்ல. எங்கள் மன்றத்தைப் பொறுத்த அளவில் அப்படிப்பட்ட பத்திரிகை எதுவும் நடத்துவதாக உத்தேசம் இல்லை. அது மட்டுமல்ல. அத்தகைய முயற்சிகள் எதையாவது நாங்கள் எடுத்திருக்கிறோமா என்பதற்கு அவரிடம் அது சம்பந்தப்பட்ட அதிகாரபூர்வமான ரசீது ஏதாவது இருந்தால் அதை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இங்கு படித்துக் காட்டியதெல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். மன்றத்தைச் சேர்ந்த செயலாளர் எழுதிய கடிதத்தைத்தான் படித்தேன். ஆளுங்கட்சிக்காரர்களே அவரைப் பற்றி குறை கூறி, முறைகேடாக நடந்திருக்கிறது, இவ்வாறு வசூலாகிறது என்று எழுதியதைத்தான் படித்துக் காட்டினேன்.

திரு. பி. முசிரிபுத்தன் : ஏனென்றால், மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் மீது இது போன்ற ஒரு கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் படித்ததையும் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அவையெல்லாம் சபை நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. திரும்பப் படித்துப் பார்த்தால் தெரியும்.

அடுத்து, மதுரையில் 'சோலார் பார்மசியூட்டிக்கல்ஸ் இன்டஸ்ட்ரீஸ்' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த கம்பெனிக்கு ஒரு ஆண்டு ஸ்பிரிட் கோட்டா 40,000 ப்ரூஃப் லிட்டர் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது; 1977–78இல் இதுவரை கூடுதலாகப் பெற்ற அட்ஹாக் கோட்டா 80,000 ப்ரூஃப் லிட்டர். ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதே 40,000 ப்ரூஃப் லிட்டர். ஆனால், 1977–78இல் கூடுதலாகப் பெற்ற அட்ஹாக் கோட்டா 80,000 ப்ரூஃப் லிட்டர். இது ஆண்டு கோட்டாவைவிட இரண்டு மடங்காக ஆக்கப்பட்டிருப்பது என்பது முதல் ஊழல். ஆக, மொத்தம் கோட்டா 1,20,000 ப்ரூஃப் லிட்டரில் இதுவரையில் எடுத்திருப்பது 75,000 ப்ரூஃப் லிட்டர். அதில், உண்மையில் மருந்துக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பது 25,000 லிட்டர் போக, மீதி 50,000

லிட்டரில் கள்ளத்தனமாக ஜிஞ்ஜர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அன்ரெஸ்டிரிக்டட் மருந்துகள் என்ற பெயரில், காம்பனன்ட்ஸ் பென்சாயின், சோப் எலிமென்ட் என்ற பெயரில் தயாரித்து, அவைகள் ரிலீசாகி இருக்கின்றன. இப்படிச் செய்வதன் நோக்கம், ஒரு ஜிஞ்ஜர் பாட்டிலுக்கு டியூடி சுமார் ரூ. 5 நிதியமைச்சருக்கு, எவ்வளவு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. எப்படி ஏமாற்றப் படுகிறோம் என்பதற்காக இதை எடுத்துக்காட்டுகிறேன். பென்சாயின் ஜிஞ்ஜர் தயாரிப்பதாகப் பெயர் சூட்டிவிட்டால் அதற்கு டியூடி ரூ. 2 என்றிருக்கிறது. ஆக, ஒரு பாட்டிலுக்கு ரூ. 3 இலாபம் கம்பெனிக்கு; அரசுக்கு ரூ. 3 நஷ்டம், ஒரு பாட்டிலுக்கு. ஆண்டொன்றுக்கு அரசாங்கத்திற்கு ரூ. 4 இலட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்படுகிறது, இது இரண்டாவது ஊழல்.

ஜிஞ்ஜர் பாட்டில்களைத் தயாரித்து, நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களை மதுக்காடாக இன்றைக்கு மாற்றி வருகிறார்கள். இது மூன்றாவது குற்றச்சாட்டு. இதை அரசு அதிகாரிகள் கவனிப்பதில்லையா, நடவடிக்கை எடுப்பதில்லையா என்ற கேள்வியை எழுப்பக்கூடும். விசாரிக்க வருகிறார் ஒரு டெப்புட்டி கமிஷனர். அவர் விசாரிக்க வரும்போது, அந்தக் கம்பெனியின் முதலாளி ராகவன் என்பவருடைய காரிலேயே தான் வருகிறார். அவருடைய காரிலேயே வந்து விசாரிக்கிறவர் அங்கே இருக்கிற தவறுகளை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? டி.எஸ்.பி. ஒருவர் இருக்கிறார். அவருடைய அன்றாடச் செலவுகள் அந்தக் கம்பெனியாலேயே கவனித்துக் கொள்ளப்படுகிறது. சீனியர் டிரக் இன்ஸ்பெக்டர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை அந்தக் கம்பெனியால் செலவிடப்படுகிறது. மேலும் அவருடைய மகனுக்கு, அந்த டிரக் இன்ஸ்பெக்டர் மகனுக்கு லட்சுமி சிட் பண்ட்சில் – இந்த சோலார் பார்மசியூட்டிக்கல்ஸ் இன்டஸ்ட்ரியின் அதிபர் ராகவன் இருக்கிறாரே. அவருடைய கம்பெனிதான் அந்த லட்சுமி சிட் பண்ட்சும் அந்தக் கம்பெனியில் சீனியர் டிரக் இன்ஸ்பெக்டர் மகனுக்கு வேலையும் தரப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டிருக்கிற அரசு ஊழியர் மாதந்தோறும் கம்பெனி தரும்

லஞ்சத்தைப் பெற்றுக்கொள்கிறார். ஆண்டு கோட்டாவை 40,000 லிட்டரி லிருந்து 1 இலட்சம் விட்டராக உயர்த்த டெப்புட்டி கமிஷனர் இப்பொழுது சிபாரிசு செய்திருக்கிறார் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது.

இப்படிச் சேர்க்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபாயில் பழங்கானத்தம் பை–பாஸ் சாலையில் புதிய கட்டிடத்தை இந்த அதிபர் கட்டியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அதற்கு நமது முதல் அமைச்சர் அவர்கள் திறப்பு விழா நடத்துவார் என்று கூறிக்கொண்டிருக்கிறார். முதலமைச்சர் அதற்குச் செல்வாரோ இல்லையோ அது தெரியாது, ஆனால் முதலமைச்சர் அவர்கள் திறப்புவிழா நடத்தப்போவதாக அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி பெரிய ஊழல் ஜிஞ்ஜர் என்கிற பெயரால் கிட்டத்தட்ட 80 ஆயிரம் லிட்டர்கள் அதிகமாக பெற்று 40 ஆயிரம் லிட்டர்கள்தான் அனுமதி பெற்றிருக்கிறார்கள் – ஆனால் அந்தக் கம்பெனிக்காரர்கள் 80 ஆயிரம் லிட்டர்கள் அதிகமாகப் பெற்று 2,3 மாவட்டங்களை மதுக்காடாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நீங்கள் என்னதான் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தினாலும், அது வெற்றியடையுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். மிகப் பெரிய மனிதர்கள் எல்லாம் அந்த முதலாளியின் பக்கத்திலே இருக்கிறார்கள் என்றும், அந்தப் பெரிய மனிதர்கள் யார் யார் என்பதை முதல்வர் அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கிறேன்.

சொல்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்கள் சர்க்காரியா விசாரணையில் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டவர்கள் நேற்றைக்குக்கூட நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். டெல்லி நாடாளு மன்றத்திலே உள்ள அமைச்சர், சர்க்காரியா விசாரணையில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருக்கிற கருணாநிதியை அடிக்கடி சந்திக்கலாமா என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிருபர்களிடம் கேட்டிருக் கிறார்கள்.

ஏதோ அங்கே ஓட்டு போடாததற்குக் காரணம் கேட்டபோது ஜார்ஜ் பெர்னான்டஸ் என்னை வந்து சந்தித்தது மிகப் பெரிய குற்றம் என்கிறார். சர்க்காரியா விசாரணையில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருக்கும் என்னை வந்து சந்தித்துவிட்டார் – சர்க்காரியா விசாரணையில் ஒன்றிரண்டு குற்றங்கள் மட்டும் நிரூபிக்கப்பட்டு குற்றவாளி என்று சொல்லப்படும் என்னை சந்திப்பது குற்றம் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே சர்க்காரியா கமிஷனில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்ட நாவலர் நெடுஞ்செழியனை தங்கள் கட்சிக்குப் பொதுச் செயலாளராக ஆக்கியிருக்கிறார்களே. அதைவிட வெட்கக்கேடு வேறென்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மைசூர் மாநிலத்திலே குரோவர் கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அவரை பிரதம மந்திரியே வந்து சந்தித்திருக்கிறார்கள்; கைகுலுக்கியிருக்கிறார்கள். மற்ற மந்திரிகளும் வந்து சந்தித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் – சர்க்காரியா கமிஷனில் குற்றவாளி என்று சொல்லப்பட்ட கருணாநிதியை, டெல்லி அமைச்சர் வந்து பார்க்கக்கூடாது, பேசக்கூடாது என்று. ஆனால் அதே கட்சியில் இருந்த நாவலர் நெடுஞ்செழியனை அதே சர்க்காரியா கமிஷனில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டவரை உங்கள் கட்சியில் பொதுச் செயலாளராகவே போடப்பட்டிருப்பதை என்ன நியாயம் என்று முதல்அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது ஊழல் புகார் சொல்லப்பட்டு இருப்பதற்கு முதல் காரணமே, அப்போதிருந்த காங்கிரஸ் கட்சிக்காரர் ஒருவர் சத்யா ஸ்டூடியோவிற்கு நிலம் கொடுத்த விவகாரம்தான். அந்த விவகாரம் என்ன? 39 கிரவுண்டு 60 ஸ்கொயர்பீட் நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. அவர் கட்சியை விட்டுப்போன பிறகு அடுத்த ஆண்டே அறிக்கை விட்டார். அந்த நிலங்களைத்திருப்பிக் கொடுத்து விடப்போவதாக. ஆனால் 73ல் கொடுக்கவில்லை. பிறகு 26 – 5. – 1976 அன்று அந்த நிலங்களை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்தார். அதை அரசு 28–05–1976இல்

வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்தது. நிலத்தை ஒப்படைத்தபோது அனுபவித்த காலத்திற்கு குத்தகை பாக்கி 1,26,350 ரூபாய் செலுத்தப்படாமல் இருந்தது. இன்றளவும் அது செலுத்தப் படவில்லை. குத்தகை தொகை அதிகமாக, இருப்பதாகவும் அதைக் குறைக்க வேண்டும் என்றும் மனு கொடுக்கப்பட்டது. இந்த மனு ஆர்பிட்ரேஷனில் போடப்பட்டு, சத்யா ஸ்டூடியோவின் சார்பில், என்.சி. இராகவாச்சாரியார் ஆஜரானார். அதற்குள் எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆகிவிட்டார். ஆர்பிட்ரேஷனில் எந்தப் பிரச்சினை வந்தாலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை மேல் நடவடிக்கை தொடரப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் இந்த விதிக்கு மாறாக அது சம்பந்தமான பைல் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் லாக்கரில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கிறது. கிணற்றில் போடப்பட்டிருக்கிறது. அந்த பைலுடைய எண் கூட ஏ2/36745/76.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழக ஆட்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர்ஆக இருந்தபோது சத்யா ஸ்டூடியோவிற்குப் பின்னால் பயன் படுத்தப்படாமல் போடப்பட்டிருந்த நிலம்...

கலைஞர் மு. கருணாநிதி : அப்பொழுது அண்ணா அவர்கள் இருக்கவில்லை.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : நீங்கள் இருந்த போதா, சரி ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோது அமரர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சத்தியா ஸ்டூடியோவுக்குப் பின்னாலே இருந்த எதற்கும் பயன்படாமல் போடப்பட்டு இருந்த நிலம் (குறுக்கீடு) அதை ஏற்றுக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் உண்மை அதுதான். நான் ஒன்றைச் சொல்கிறேன், அதற்கு முதலில் கொடுக்கப்பட்ட வாடகை, கொடுக்க வேண்டும் என்று சொல்லியது, எனக்குத் தெரிந்தவரையில் ஒன்பதாயிரத்து சில்லரை ரூபாய் ஆண்டுக்கு. நான் கழகத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு ஏதோ என்னவோ தெரியவில்லை. அதற்கு திடீரென்று ஒரு ஆண்டுக்கு

லட்ச ரூபாய்க்கு மேல் வரி போடப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அதைக் கொடுக்க முடியாது என்றும், அப்படிக் குத்தகைப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் சட்டத்தில் இல்லை என்பதையும் தெரிவித்து வழக்கு மன்றத்திற்குப் போயிற்று. வழக்கு மன்றத்தில் இருக்கிறது. இன்னும் தீர்ப்பு ஆயிற்றா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நிலைமை என்னவென்றால், ஏமாற்றுவதற்காகவோ அல்லது அந்த நிலத்தை வைத்துக் கொள்வதற்காகவோ லாபத்தை அதிகரித்துக் கொள்வதற் காகவோ பயன்படுத்தவில்லை என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும். அந்த நிலத்தை ஏன் ஸ்டூடியோவிற்கு சொந்தக்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். வேண்டும் என்று கேட்டார்கள் என்றால், பக்கத்திலே நாதசுவரம் சொல்லிக் கொடுக்கும் இடம், பாட்டு சொல்லிக் கொடுக்கும் இடம் இருக்கிறது. அவைகளைத் தொடர்ந்து அந்த இடத்திற்குக் கொண்டு வருவார்களானால் அங்கே படப்பிடிப்பு நடைபெற முடியாது.

ஆகவே அந்த இடத்தைப் பெற்று பயன் இருக்கிறதோ இல்லையோ, அந்த இடத்தில் வேறு தொல்லைகள் ஏற்படாமல் அந்த ஸ்டூடியோ காப்பாற்றப்படவேண்டும், தொழிலாளர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்று அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் வாடகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு வழக்கு மன்றத்திற்குச் சென்ற பிறகு, அந்தப் பிரச்சினை எந்த லாபத்தையும் கருதாமல் நடைபெற்றது என்று நிலைமையில் ஒரு முடிவை எதிர்பார்த்து காத்து இருக்கிறது என்பதையும் என்னைப் பொறுத்த வரையில் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். எனது லாபத்தைக் கருதி அந்த இடத்தை எடுத்துக் கொண்டதாக, பயன்படுத்திய தாக இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிரூபிப்பார்களானால் முதலமைச்சர் பதவியை நான் ராசினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். (ஆரவாரம்) (கை தட்டல்) இந்த ஒரு காலத்திலே திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் லாபத்தைச் சம்பாதிப்பதற்காக அதைப் பயன்படுத்தினார் என்று நிரூபிப்பார்களானால் நான் இந்த முதலமைச்சர் பதவியை ராசினாமா செய்கிறேன் என்பதை மீண்டும்

சொல்கிறேன். ஏதோ மக்களை ஏமாற்றி அல்லது அரசை ஏமாற்றி எடுத்துக்கொண்டது போலவும், கொடுக்கவேண்டிய வாடகையைக் கொடுக்காமல் இருப்பதைப் போலவும் சொல்வது நியாயமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 9 ஆயிரத்து சில்லரை ரூபாய் ஆண்டுக்கு குத்தகையாகச் செலுத்தப்பட்ட பணம் லட்ச ரூபாய்க்குமேல் அதற்கு போடப்பட்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது நிலைமை எப்படி ஏற்படும் என்றால் வழக்கு மன்றத்திற்குப் போவதைத் தவிர வேறு என்ன வழி? அதிலும்கூட அவர்கள் சரியாக ஒத்துழைக்க முடியாத நிலையில் இருக்கிறபோது அந்த இடத்தைத் திரும்பக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வகையில் இப்படிப் பட்ட பழைய குற்றச்சாட்டுக்களை உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டக்களை, நியாயத்திற்கு உட்படாத குற்றச் சாட்டுக்களை, ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக வெளியிடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே! நான் சொல்ல வந்தது, வாடகை உயர்த்தப்பட்டதைப் பற்றியோ, அல்லது அந்த இடம் கொடுக்கப்பட்டதைப் பற்றியோ அல்ல. அவர் கூட சொன்னார். அண்ணா காலத்தில் தரப்பட்டதாக. எனக்கு நினைவு, நான் முதலமைச்சரான பிறகு, அதுவும் ஒரே நாளில் 3 அமைச்சர்களின் கையெழுத்து பெற்று, அந்த இடம் தரப்பட்டது. அதற்கு அந்த பைல்கள் எல்லாம் ஒரு முறை சட்டமன்றத்தில் காட்டப்பெற்று விவாதங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதற்கு வாடகை உயர்த்தப் பட்டது எவ்வளவு ரூபாய் என்பது பிரச்சினை அல்ல. அதற்கு ஒரு மனு கொடுத்தார்கள். அது ஆர்பிடரேஷனுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது. அந்த மனு விசாரணைக்கு வந்த போது அந்த விசாரணையில் ஸ்டூடியோ சார்பில் யாரும் ஆஜராக வில்லை. நான் கூறுகின்ற குற்றச்சாட்டு அடுத்தது, ஆர்பிடரேஷனுக்கு எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் 3 மாதத்திற்கு ஒரு முறையேனும் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது விதி. ஆனால் அந்த மேல் நடவடிக்கை ஏதும் அந்த ஆர்பிடரேஷன் மீது எடுக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பைலை அப்படியே

கிடப்பில் போட்டுவிட்டார். லாக்கரில் வைத்துவிட்டார் என்பது குற்றச்சாட்டு, அந்த ஆர்பிடரேஷன் நடத்தப்பட வில்லை என்பதுதான் குற்றச்சாட்டே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆர்பிடரேஷன் நடத்தினார்கள். யாரும் ஆஜராகவில்லை என்று சொல்கிறார்கள். அது எந்த ஆண்டு என்று சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். நான் முதலிலேயே எழுந்தேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொல்கிறபோது அங்கே சாராயம், ஜிஞ்சர் காய்ச்சப் படுவதாகவும் மதுரையில் போலீஸ் அதிகாரிகள், டி.எஸ்.பி., சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கு மாமூல் தரப்படுகிறது என்றும், முதலமைச்சர் அவர்களிடத்திலே பெரும்புள்ளி இருப்பதாகவும் சொன்னார்கள். நான் மதுரையைச் சேர்ந்தவன் என்கிற காரணத்தால் அதை அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தான் முதலமைச்சராக இருந்தபோது மாண்புமிகு இந்நாள் முதலமைச்சர் அவர்களுக்கு சத்தியா ஸ்டூடியோவுக்கு இடம் கொடுக்க ஒரே நாளில் 3 அமைச்சர் களிடத்தில் கையெழுத்து வாங்கி உத்தரவு பிறப்பித்ததாகச் சொன்னார்கள். அது சலுகை அல்லவா என்று விவரத்தையும் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : நான் மன நிறைவோடு சொல்கிறேன். எப்படிக் கையெழுத்திடப்பட்டது. எப்படி கொடுக்கப்பட்டது என்பதேகூட அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில்தான் என்பது தெரியும். ஆகவே என்னை இதில் உட்படுத்தமாட்டார் என்று நான் கருதுகிறேன். எப்படி கேட்கப்பட்டது. எப்படி கொடுக்கப்பட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அந்த ஸ்டூடியோவுக்கு நான் சொந்தக்காரன் இல்லை என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். இப்போது எனக்கு அதில் சொந்தமில்லை என்னுடைய பங்குகளை எல்லாம் நான் கொடுத்துவிட்டேன். என்றாலும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த தேதியை மட்டும் தயவு செய்து சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டு, கொடுத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு கலைஞர் அவ்வாறு உத்தரவு போட்டார் என்பதாகத்தான் குறிப்பிட்டேன்.

கலைஞர் மு. கருணாநிதி : 26.5.1976இல் திருப்பிப் பெற்றுக் கொள்ளப்பட்டது. 26.5.1976இல் அரசாங்கம் திருப்பிப் பெற்றுக் கொண்டு, 28.5.1976இல் அப்போது அனுமதித்த காலத்திலுள்ள குத்தகைப் பாக்கிக்காக அரசாங்கம் ஒரு நோட்டீஸ் கொடுத்தது. அந்த பாக்கி மிகவும் அதிகம் – அது அதிகமான வாடகை என்று ஸ்டூடியோ சார்பில் மனு கொடுக்கப்பட்டது. ஆக, 1976 முதல் 1979 வரையிலுள்ள அந்த இடைக்காலத்தில்தான் ஆர்பிட்ரேஷன் எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த இடைக்காயத்தில் இரண்டு முறை கூடியும். ஆர்பிட்ரேஷன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும் யாரும் ஆஜராகவில்லை.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. ஆர்பிட்ரேஷனில் எந்தப் பிரச்சினை வந்தாலும் 3 மாதத்திற்கு ஒருமுறை மேல் நடவடிக்கைத் தொடரும் என்பதே விதி. ஆனால் ஆர்பிட்ரேஷன் நடத்துகிறவர் மாவட்ட ஆட்சித் தலைவர்; அவர் லாக்கரிலே பூட்டி வைத்துவிட்டார்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி. 1976லே அந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அப்போது விசாரணைக்கு வந்தது என்று சொல்கிறார்கள். மகிழ்ச்சி. நான் கழகம் தொடங்கிய பிறகு எந்த அளவுக்கு இருந்தேன் என்பதை விட நிர்வாகத்தில் எப்போதும் எனக்கு தொடர்பு இருந்ததில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். நிர்வாகத்திலிருந்து ஆர்டர் அனுப்பவில்லை என்றால் இந்த செய்திக்குப் பின்னால் அந்த ஸ்டூடியோவுக்கு சொந்தக்காரர்களாக இருக்கிறவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

கலைஞர் மு. கருணாநிதி : நீதிமன்றங்களிலே (மணி யடிக்கப்பட்டது) இன்னும் 15 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். நீதிமன்றங்களிலே எப்படிப்பட்ட தலையீடுகள் இருக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டம் கிழக்கு சரக காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் 31-1-1978இல் தலைமைச் செயலக உள்துறைத் துணைச் செயலாளருக்கு ஒரு டி.ஓ. லெட்டர் எழுதுகிறார்.

I Ravi Arumugam, I.P.S.,
Superintendent of Police,
Chingleput East District, St.Thomas Mount,
Madras - 16.

D.O.C.No.6691/C1/78.

Dear Thiru Eswara Sastry,

Sub : Criminal Cases st. Thomas Mount u/s 304/(A)
P.S.Crime No.708/77-I.P.C.
Copies of Depositions of witnesses.

Ref : D.O.R.C.1592/44 Courts-I/77-3 Home dated 20.11.78.

இங்கிருந்து எழுதப்பட்ட டி.ஓ. லெட்டருக்கு ரவி ஆறுமுகம், சூப்பரின்டெண்டு ஆப் போலீஸ் பதில் எழுதுகிறார். அந்த வழக்கு விரைவாக நடைபெறாமல் இருப்பதற்கு சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் விரைவிலே அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்பது இங்கே இருக்கிற டிபுடி செக்ரட்டரி, ஹோம் டிபார்ட்மெண்டுக்கு கடிதம் எழுதுகிறார். அதன் காப்பியில் அதே ரவி ஆறுமுகம் குறிப்பிட்டிருக்கிறார்.

Copy to the Inspector of Police.

He is requested to push through the trial in this case in court.

என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார். அதோடு விட்டாரா? அதனுடைய காப்பி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட், பூந்தமல்லிக்கும் போகிறது.

Copy to Sub-Divisional Magistrate, Ponnamalli.

He is requested to complete the trial in this case in the court as quickly as possibel, since the government is keenly watching the progress in this case.

போலீஸ் அதிகாரிகளே பூவிருந்தவல்லியிலே உள்ள ஒரு நீதிபதிக்கு சப்டிவிஷனல் ஜூடிஷியல் மாஜிஸ்ட்டிரேட்டுக்கு கடிதத்தினுடைய நகலை அனுப்பி

"He is requested to complete the trial in this case in the court as quickly as possible, since the Government is keenly watching the progress in this case."

இவ்வாறு எழுதினால் என்ன பொருள்? இந்த விஷயத்திற்கே நீதியிலே தலையிடுகின்றார்கள். விஷயம் சாதாரணமானதுதான். அதை விளக்க விரும்பவில்லை – அதிலே சம்பந்தப்பட்டவர் ஒரு அமைச்சர், அவர் பெயரையும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் இந்த சாதாரணமான விஷயத்திற்கே, நீங்கள் நீதிபதிக்கே போலீஸ் துறையிலே இருந்து பிரதிகளை அனுப்பி வைக்கின்ற அளவிற்கு நீதியில் தலையீடு இருக்குமேயானால் இதைவிட பெரிய வழக்குகளில் எந்த அளவிற்கு இந்த அரசு நீதியிலே தலையிடுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

எனவேதான் இந்த உதாரணத்தை மாத்திரம் எந்த அளவிற்கு அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்காகக் கோடிட்டுக்காட்டவிரும்புகிறேன். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு பிரச்சினைகள் இங்கே விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவிற்கு கிளர்ந்து எழுந்திருக்கிறார்கள். இந்த அரசினுடைய போக்கில் அவ நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதிருப்தி அடைந்திருக் கிறார்கள் என்பதற்கு நாள்தோறும் வளர்ந்துகொண்டு வருகின்ற செய்திகளே தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

சிம்கோ மீட்டர் விவகாரத்திலே இந்த அரசு எப்படி நடந்து கொண்டது, கடைசியாக பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு, சட்டசபையிலேயே வரலாறு காணாத நிகழ்ச்சிகளெல்லாம்

ஏற்பட்டு அதற்குப் பிறகு ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு, அந்த அதிபர் எங்கள் 12 (3) செட்டில்மென்ட்டை உடைக்காமல் பார்த்துக்கொண்ட இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்கின்ற அளவிற்கு அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றார். சிம்கோ மீட்டரினுடைய அதிபர் என்றால் தொழிலாளர் நலத்துக்கு விரோத அரசாக இந்த அரசு எப்படி செயல்படுகிறது...

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மற்ற சங்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் வெற்றி வெற்றி என்று கோஷம் போட்டு மிட்டாய் எல்லாம் கொடுத்து பாராட்டு விழா நடத்திவிட்டு வேலைக்குச் சென்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் சொல்வது 12(3) செட்டில்மென்டை உடைக்கவில்லை என்று...

திரு. ரா. உமாநாத்: மற்ற சங்கத்தைச் சார்ந்தவர்கள் வெற்றி வெற்றி என்று சொன்னதாக அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். மற்ற சங்கத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள் தான். நாங்கள் தெளிவாக இந்த அவையிலே அவர் அறிக்கை படிக்கிற போதே 23 பேரை பழிவாங்குவது என்பது மற்ற பர்மனன்ட் தொழிலாளருக்கு உயிர் கொடுக்காமல் இருப்பது– தொழிலாளர்களை மிருகத்தனமாக வெளியே நிறுத்தி இருப்பது ஆகியவற்றிற்கு ஆட்சேபணை செய்து வெளிநடப்புச் செய்திருக்கிறோம். பிறகு வந்திருக்கக்கூடிய 12(3) சம்பந்தமாக வந்திருக்கிற கோஷம் நாலரை ரூபாய் ஆறாகி இருக்கிறது என்பது எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன இவ்வளவு விவகாரத்திற்குப் பிறகு நடந்திருக்கிறது. அந்த விஷயத் திற்காக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, என் பணியை ஏற்றுக் கொண்டதற்காக திரு. உமாநாத் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே ஆவடி சைக்கிள் தொழிற்சாலையிலே தொழிலாளர்களுடைய போராட்ட உணர்வை, அவர்களுடைய

ஒற்றுமையைக் குறைக்கிற வகையில் அரசு செயல்பட்டது பற்றி இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது.

கரூர் எல்.ஜி.பி. பேருந்து தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில் எந்த அளவிற்கு அத்துமீறி காவல்துறையினர் மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பதையும் நாடு அறியும்.

நேற்று முன்தினம் பொள்ளாச்சியிலே குவாலிட்டி மில்லில் எண்பது தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு போலீசார் உள்ளே சென்று அவர்களையெல்லாம் தாக்கி இருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளுடைய குரல் ஆங்காங்கு பொங்கி வெடித்துக் கொண்டிருக்கிற செய்திகள் நாள் தோறும் வந்து கொண்டிருக்கின்றன. கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய இன்னல்களை போக்கிக்கொள்ள வழிவகை தெரியாமல் இன்றைக்கு திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

வழிக்கறிஞர்கள் கிளர்ச்சியில் அவர்கள் வைத்துள்ள சாதாரண கோரிக்கை ஒரு துணை நடிகையைக் கைது செய்த ஒரு போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்தீர்களே, ஒரு வழக்கறிஞரை அடித்த போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்யக்கூடாதா என்று உருக்கமாகக் கேட்கின்ற அந்தக் கோரிக்கையைக்கூடக் கேட்காமல் பிடிவாதத்தோடும் அதே நேரத்தில் நீதி விசாரணைக்கும் தயாரில்லை என்கின்ற அந்த பிடிவாதத்தோடும் அரசு நடந்துகொண்டு சட்டம், ஒழுங்கு, அமைதி தமிழகத்திலே கெடுவதற்கான சூழ்நிலையை இந்த அரசு இன்றைக்கு ஏற்படுத்தி இரக்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே சாட்ட விரும்புகிறேன்.

இன்று கூட திராவிட கழகத் தோழர்கள் ஏறத்தாழ மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கோட்டையை நோக்கி ஊர்வலமாக வந்து மறியலில் ஈடபட்டு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. வீரமணியும் மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களும் ஆடவரும் பெண்டிரும் இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏன் அந்த மறியலில் ஈடுபட்டார்கள்

என்பது முதலமைச்சருக்குத் தெரியும். அவையில் உள்ள பெரியார் மீதும் அண்ணா மீதும் பெரியாருடைய அருமைத் துணைவியார் நாகம்மையார் மீதும் அன்பும் பாசமும் கொண்ட அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

அரசுக்கு கவிஞராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றவர். இந்த அரசவைக் கவிஞர்....

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏதோ ஒரு சம்பவம் பற்றி சொல்லப் பட்டது. துணை நடிகை ஒருவரைக் கைது செய்ததற்காக ஒரு அதிகாரியை சஸ்பென்ட் செய்ய முடியும் என்றால் வக்கீலை அடித்ததற்காக ஏன் ஒரு அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று வழக்கறிஞர்கள் கேட்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஒன்றை பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இத்தனை மணி நேரத்திற்குப் பிறகு பெண்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக்கூடாது என்று உத்தரவிடப் பட்டிருக்கிறது. அதை மீறுகின்ற வகையில் யாராவது நடந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்பதற்காக இந்த மாமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு ஆத்திரப்பட்டார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அந்த நிலையில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள் என்று இருவரும் புகார்கள் கொடுத்திருக் கிறார்கள். ஒருவருக்கு ஒருதலைப் பட்சமாக ஆதரவு தரமுடியும் என்ற நிலையிருப்பது முறையல்ல என்ற நிலையில்சஸ்பென்ட் கிடையாது என்று சொல்லுகிறோமே தவிர யார் யார் மீது தாக்குதல் நடந்தது என்பதையும் ஒருவர் ஒருவரை தாக்கினார் என்றும் அதே போன்று இன்னொருவர் தாக்கப்பட்டார் என்று இரு தரப்பிலிருந்தும் புகார்கள் வருகின்ற நேரத்தில் போலீஸ் துறையினர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்து இருக்காது. ஆனால் என்னிடம் நேரில் பேசிய வழக்கறிஞர் ஒன்றை என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இப்போது அப்படி சொல்லவில்லை என்று சொன்னதாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது. என்னை சந்தித்தபோது அவர்கள் சொன்னது நாங்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டோம். அவரும் அடித்தார்; நானும் அடித்தேன் என்று சொல்லியிருக்கிறார். நானே இதைச் சொல்லுவேன். முதலமைச்சர் என்கிற ரீதியில் அல்ல. எப்போதாவது வாய்ப்புக் கிடைத்தால் நானே இதைக் கூண்டிலேறி சாட்சியம் கூறத் தயாராக இருக்கிறேன். நேரில் என்னை சந்தித்தபோது நாங்கள் இருவரும் அடித்துக் கொண்டோம் என்று பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது இருவரும் புகார்கள் செய்திருக்கிறார்கள். இருவர் மீதும் வழக்கு போடவேண்டும் என்கின்ற நிலைமை ஏற்பட்டு இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைப் பற்றி இதைத்தான் சட்டமன்றத்தில் மறுபடியும் சொன்னேன். ஆனாலும் கூட இன்னும் நீதி விசாரணை நடத்துவதற்கு இருதரப்பாரும் ஒப்புக்கொள்ள முடியுமா என்பதில் தான் நான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு தலைபட்சமாக நீதி வழங்கப்படக்கூடிய நிலையில் கேள்வி கேட்க ஆள் இல்லாத நிலைமையில் அதிகாரிகள் இருக்கக் கூடாது என்பதும் அதே சமயத்தில் வழக்கறிஞர்களுடைய தன்மானத்தையும் காப்பாற்றிக் கொள்ளும் முறையில், செயல்முறை, ஒழுங்குமுறை அமைய வேண்டாம் என்பதில் இந்த அரசுக்கு கருத்து வேறுபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆக, முன்னால் போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால், அது துணை நடிகையை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார் என்ற காரணத்திற்காக – அந்த போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் ஒரு பெண் மீது இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது தவறு என்ற முறையில்தான் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதை முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எனது இனிய எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்வார் என்று நம்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாலை ஆறு மணிக்கு மேல் பெண்களை போலீஸ் லாக்கப்பில் வைக்கக்கூடாது என்று முன்னாள் முதலமைச்சராக நான் இருந்தபோது போலீஸ் ஐ.ஜி. மூலம் ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டதுதான் என்பதை இந்நாள் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் குறிப்பிட்டது சென்னை கோடம்பாக்கம் ஸ்டேஷனில் அல்ல. இப்போதும், பெண்கள் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்படுகிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 13-02-1979 அன்று மிஸ்ஸி என்ற பெண் சாராய வழக்குக்காக கைது செய்யப்பட்டு, சைதாப்பேட்டையில் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டு, இப்போது கொண்டு வந்திருக்கின்ற அவசர சட்டத்தின் காரணமாக ஜாமீனில் வெளியே விடக்கூடாது என்ற நிலைமையில் அன்றிரவே ஜாமீனில் விடப் பட்டிருக்கிறார்கள். 15ஆம் தேதி இன்னொரு பெண் சாராய வழக்கில் கைது செய்யப்பட்டு, பின்னால் ஜாமீன் கோரியும் கிடைக்காத காரணத்தால் அன்றைய தினம் இரவு போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டு, பின்னால் தண்டிக்கப்பட்டு சென்னை சிறைச்சாலையில் வைக்கப்படுகிறாள். இந்த உதாரணங்களை எல்லாம் மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவருடைய எண்ணமும், என்னுடைய எண்ணமும் இந்த மகளிர்களைப் பொறுத்த வரையில் காவல் துறையிலே லாக்கப்பில் வைக்கக்கூடாது, இந்த விஷயத்திலே வேறுபட்டு இருக்கவில்லை என்று சொல்லும்போது அது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. மிஸ்ஸி அம்மையாரைப் பற்றிய செய்தியைச் சொல்லுகிறார்கள். இந்த அம்மையாரைப் பற்றி யாராவது மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்து, ஜாமீனில் விட வேண்டும். மற்ற இடத்தில் மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கலாம். ஆனால், தகவல் மேலதிகாரிக்குக் கிடைக்காமல் இருந்ததினால். சட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால், இது போன்ற நிகழ்ச்சி வரக்கூடாது என்பதற்குத்தான் இந்த அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, வழக்கறிஞருக்கும், போலீஸ் அதிகாரிக்கும் இடையே ஏற்பட்ட சம்பவத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி சொல்லுகிறபோது, விசாரணை செய்வது பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் கேட்பது, காலதாமதம் ஏன் செய்கின்றார்கள் என்பது. அதையும் சீக்கிரம் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் எப்போதுமே எனக்கு உதவியாக கேள்வி கேட்டு, நான் பதில் அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கிறார் என்பதை இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதிலிருந்து ஒரு பதிலை என்னிடமிருந்து இந்தச் சபைக்கு கிடைக்கும்படி செய்கிறார். சஸ்பென்ட் செய்தால்தான், நாங்கள் இதிலே பேச முடியும் என்று வழக்கறிஞர்கள் இருந்தார்கள், இருக்கின்றார்கள் என்பது நிலை. அவர்கள் அதை விட்டுக்கொடுக்காததினால், இந்தப் பிரச்சினை மாறி, இருவருமே குற்றவாளிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலையில், இருவரும் புகார் கொடுத்திருப்பதால், அவர்கள் இருவரையும் சமநிலையில் நடத்த வேண்டுமென்ற அவசியம் அரசுக்கும் இருக்கிறது. அரசினுடைய செயலை நிறைவேற்றுகின்ற, செயல்படுத்துகின்ற அதிகாரம் அதிகாரிகளுக்கு இருக்கிறது.

நீதிமன்றத்திற்குப் போவது என்றால், வெகு எளிதில் போய் விடலாம். இங்கே முன்னாள் முதல் அமைச்சரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருக்கு, இந்நாள் முதல் அமைச்சராகிய நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவருக்கு இதைப் பற்றி நன்கு தெரியும். என்ன நடைமுறை என்பதும் தெரியும். அந்த வகையிலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இருவர் மீதும் புகார் இருக்கிறது. இருவரும் புகார் செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினையை மாஜிஸ்ரேட்டுக்கு அனுப்பு வதற்கு நியாயம் இருக்கிறது; அதிகாரம் இருக்கிறது. ஆனாலும், இது நிறுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம். இரு தரப்பாரையும் அழைத்துப் பேசி, குறிப்பாக நிர்வாகத்தில்

சரியாக காரியங்களைச் செய்யவேண்டுமென்பதற்காகத்தான். வழக்கறிஞர்களுடைய கோரிக்கையில் நியாயமில்லை என்று சொல்லவில்லை. ஆனால், இருவரையுமே, சமமாகக் கருதி, அந்த வகையிலே நாம் இதைப் பற்றிச் சிந்திப்போம் என்று தெரிவித்திருக்கின்றேனே தவிர, வழக்கறிஞர்கள் குற்றம் செய்துவிட்டார்கள் என்றோ, காவல் துறையைச் சார்ந்தவர்கள் குற்றம் செய்துவிட்டார்கள் என்றோ, நான் குறிப்பிடவில்லை. நான் சொல்வதைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். இருவரும் ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொண்டு, இருவரும் புகார் கொடுத்து, இருவரும் மருத்துவமனைக்குச் சென்றிருக் கிறார்கள். அந்த நிலையில்தான் இந்த அரசு தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது.

நீதிபதியை நியமிப்பதற்கு இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லையென்றாலும் – ஒரு தரப்பார் சஸ்பென்ட் செய்யவேண்டுமென்று கேட்கின்றார்கள்; இன்னொரு தரப்பாருக்கு வழக்கறிஞர் தனியாக ஒரு புகார் கொடுத்திருக்கிறார்....

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லையோ அல்லது என்னால் அவர்களுக்குப் புரியவைக்க முடியவில்லையோ என்னவோ தெரியவில்லை. இருவரும் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு: ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதாக என்றால் அது வேறு விவகாரமாகப் போய்விடும்...

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, துணை இன்ஸ்பெக்டர் தன்னை அடித்ததாக வழக்கறிஞர் புகார் கொடுத்திருக்கிறார், வழக்கறிஞர் தன்னை அடித்ததாக துணை இன்ஸ்பெக்டர் புகார் கொடுத்திருக்கிறார். இரண்டு பேர்களும் புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, நீதிமன்றத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, இரண்டு தரப்பிலும் ஒத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் சொல்லப்படுகிறது.

திரு. க. சுப்பு: போலீஸ் அதிகாரி மீது விசாரணை என்று வந்துவிட்டால் அவரை சஸ்பெண்ட் செய்யவேண்டும். போலீஸ் அதிகாரியின் மீது விசாரணை வந்தால் அவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரே இருக்கிறது. அது எதற்கு இருக்கிறது?

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் சொல்வதை அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். புகார் கொடுத்திருக்கிறார்கள். வழக்குப் பதிவு செய்து கோர்ட்டிற்குப் போகவேண்டுமா அல்லது நீதி விசாரணைக்குப் போகவேண்டுமா? நீங்கள் வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், இம்மீடியட்டாக மாஜீஸ்திரேட் கோர்டிற்குப் போவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு: வழக்கறிஞர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? சப்இன்ஸ்பெக்டர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? போலீஸ் அதிகாரி மீது விசாரணை வருகிறபோது அவரை சஸ்பெண்ட் பண்ண வேண்டுமென்று போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிறது, அது எதற்காக இருக்கிறது, ஒன்று அதை மாற்றுங்கள் இல்லையென்றால்...

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சார்ஜ் ஷீட் இன்னும் கோர்ட்டிற்குப் போகவில்லை யென்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கலாம். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டாமென்ற நிலையில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. மேஜிஸ்திரேட் கோர்ட்டிற்குப் போகவேண்டு மென்று அவர்கள் அதற்கு முதலிலே தயாராக இருந்தார்கள். ஆனால், என்னுடைய வேண்டுகோளினால் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் விவாதத்திற்குள்ளே போய்க்கொண்டிருப்பது நாட்டிற்கு நல்லதல்ல. வாதப் பிரதி வாதங்களை வைத்துக் கொண்டு நாட்டிலே மேலும் இந்த பிரச்சினையை பெரிதாக்க வாய்ப்புக் கொடுத்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் சொன்னது போன்று, * என்று சொன்னதையும், அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதையும், அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் கிளர்ச்சி குறித்த சட்ட நுணுக்கங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது என்பதிலும், நடைமுறையிலே எழுந்துள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்கு அவர்களுடைய சாதாரண கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டால் என்ன என்பதிலும் நான் என்னுடைய கருத்துக்களை அழுத்தமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நான் இதிலே சட்ட நுணுக்கங்கள், சட்டப் பிரச்சினைகள் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. அவர்கள் வைத்தது சாதாரணக் கோரிக்கை, அதற்குப் பல முன்னாதாரங்கள் இருக்கின்றன. சஸ்பெண்ட் செய்யாமலும் விசாரணைகள் நடைபெற்றிருக்கின்றன. சஸ்பெண்ட் செய்தும் விசாரணைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

முதலமைச்சர் சொன்னார், போலீஸார்களுக்கு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு சங்கம் ஏற்படுத்தலாமா என்ற எண்ணம் வந்திருக்கிறது என்று. அவர்களுக்கு அந்த எண்ணம் இப்போதல்ல; தேனாம்பேட்டையிலே கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடிக்கப்போனபோது அவர்களைப் பிடித்து கட்டிவைத்து அடித்து கத்தியாலே குத்தியபோதுகூட அப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்கு வந்தது. கிணத்துக் கடவு போலீஸ் லாக்கப்பிலே இருந்து குற்றவாளிகளை அங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர் அவர்களைப் பலாத்காரமாக விடுவித்துக்கொண்டு வந்தபோதுகூட அவர்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் வந்தது. போலீஸ்காரர்கள் மாத்திரமல்ல, அரசு அலுவலர்கள், ஆளுங்கட்சிக்காரர்களால் தாக்கப்படுகிறார்கள் என்ற சூழ்நிலைகள் எல்லாம்கூட நாட்டிலே இன்றைக்கு ஏராளமாக இருக்கின்றன.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடும்பொழுது ஆளுங்கட்சியால் அச்சுறுத்தப்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த வகையில் ஆளுங்கட்சியால் பயமுறுத்தப்படுகிறார்கள் என்பது எப்பொழுதுமே சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு. எல்லோரும் ஆதாரத்தோடு வந்திருக்கிறோம் என்று சொல்லத் தயாராக இருப்பார்கள். யாராவது ஏதாவது சொல்லிவிட்டால் அந்தக் கட்சியையே சொல்வது ஒரு மரபாகச் சில சமயங்களிலே ஆக்கப்பட்டு விடுகிறது. எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு என்ன எண்ணம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. கிணத்துக்கடவைப் பற்றிச் சொன்னார்கள் அல்லது தேனாம் பேட்டையைப் பற்றிச் சொன்னார்கள் அல்லது குத்து வெட்டு, கட்டிப்பிடித்தார்கள் என்று சொன்னார்கள். அப்பொழுதி லிருந்தே அது இருக்கிறது என்பதைப் போலச் சொல்கிறார்கள். இதிலிருந்து அப்பொழுதிலிருந்தே எதிர்க்கட்சித் தலைவ ரவர்கள் இதற்காக முயற்சி எடுத்ததாகத் தெரிகிறது. எப்படியோ, எனக்குத் தகவல் வந்தது இப்பொழுதுதான். துண்டுப் பிரசுரம் இருந்தது. அது ஆசையாக இருந்தால் இருக்கலாம், அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் பொதுவாக நாட்டுக்கு நல்லது அல்ல என்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் வேகமாக உள்ளே வந்தபொழுது நான் பேசிக் கொண்டிருந்த பிரச்சினை இதைவிட வேகமான பிரச்சினை. திராவிட கழகத்தார் மறியலில் ஈடுபட்டு, அதன் பொதுச் செயலாளர் வீரமணி, இன்னும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆடவரும் பெண்டிருமாக இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொன்னேன். அவர்களுடைய மறியலுக்கான காரணத்தை விளக்கி யிருக்கிறார்கள். அதையும் இங்கே குறிப்பிட்டேன். நாமெல்லாம் தந்தை பெரியார் என்று போற்றுகின்ற அந்தப் பகுத்தறிவுப் பகலவன், அவருடைய குடும்பத்தைப் பற்றித் தாறுமாறாக எழுதுகின்ற, எழுதிக் கொண்டிருக்கின்ற ஒருவர் அரசவையினுடைய கவிஞராக இருக்கிறார். அது மட்டு

மல்லாமல், அரசாங்கம் நடத்துகின்ற பெரியார் விழாக்களுக்கு நான் வரமாட்டேன் என்று தெரியப் படுத்தி விட்டேன் என்று பகிரங்கமாகக் கூட்டங்களிலே பேசுகிறார். அவர் பெரியாரைப் பற்றிச் சொல்லிய இழிவான வார்த்தைகள், அவைகளை இங்கே நான் சொல்லி குறிப்பேட்டிலே பதிவு செய்து வைக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை அரசவைக் கவிஞராக வைத்திருக்கவேண்டுமா என்ற கோரிக்கையை வைத்துத் திராவிடக் கழகத்தார் இன்றைக்கு மறியல் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஜி.இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசவைக் கவிஞர் அல்ல, அரசுக் கவிஞர். அரசவைக் கவிஞர் அல்ல. தமிழக அரசுக் கவிஞர். அப்படித்தான் வைத்திருக்கிறோம். அவர் எழுதியது தவறு என்பதை எப்படிச் சுட்டிக்காட்டவேண்டுமோ அப்படிச் சுட்டிக்காட்டி கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்காக வருத்தமும் தெரிவித் திருக்கிறார்.

இதிலே உள்ள பிரச்சினை என்னவென்றால், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதாக அவர் எழுதிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. போட்டா போட்டி போடுவது பற்றி. ஆனால் அப்படித் துணிந்துவிட்டால் நான் அதற்குப் பின்வாங்கப் போவதில்லை. ஆனால் ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அங்கே நடைபெறுகின்ற கருத்து வேறுபாடுகள் உண்மையா இல்லையா என்பதற்கு நான் தீர்ப்புச் சொல்லவில்லை, அதற்குத் தகுதி இல்லை, தெரியவும் தெரியாது. அப்படி நடந்ததா என்பது அவருக்குத்தான் தெரியும். இதை அவர்களுக்குள் பேசிக்கொண்டுதான் வெளியிடவேண்டும். ஒருவர் சொன்னதை அவர் மீண்டும் எழுதிக் கொண்டிருக்கிறார். அதற்கு எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அவர்கள் எடுக்க வேண்டியதுதான் நியாயம். எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இதற்காக வழக்கு தொடர்ந்தால் – அவர்மீது வழக்குத் தொடர்ந்தால் நிச்சயமாக நான் மகிழ்ச்சி கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவர்கள்மீது வழக்குத் தொடர்வதாக இல்லை, நீதி மன்றத்திற்குச் செல்வதாகவும் இல்லை. மக்கள் மன்றத்திற்குச் செல்வதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்களோடு சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திற்குச் செல்லத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, மக்கள் மன்றத்திற்குச் செல்வது அவர்களுடைய விருப்பம். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதும், விளைவுகள் என்ன ஏற்படுகின்றன என்பதும் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரியவேண்டியது. ஆனால் அவர் சொல்வது. இன்னொருவர் என்னிடத்தில் சொன்னதாக அவர் எழுதுகிறார். அதைத்தான் அவர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். தன்னுடைய பெயரை இழுத்து, இப்படிப்பட்ட புகார்கள் உண்மைக்குப் புறம்பாகச் சொல்லியிருக்கிறார் என்றால் நியாயமாக வழக்கைப் போடுவது முறையாக இருக்கும் என்பதற்காகச் சொன்னேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அப்படித் தந்திரமாக யார் வேண்டுமானாலும் எழுதலாம். முதலமைச்சரைப் பற்றி யாராவது ஒருவர் மஞ்சள் பத்திரிகையிலே எழுதி விடலாம். அதற்காக முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி குற்றவாளியாக்கிவிட முடியாது. ஆகவே, வேறு பத்திரிகையிலே இது வந்திருந்தால் நான் கவலைப்படமாட்டேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, இது குறிப்பேட்டிலே எப்பொழுதுமே இருக்கும். மிகுந்த நன்றி. அதை நான் வரவேற்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: இப்படிச் சொல்கிற காரணத்தால் முதலமைச்சர்மீது குற்றங்களே சாட்டப்பட மாட்டாது என்று இதைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, குற்றம் சாட்டுவதைப்பற்றி பயந்திருந்தேனானால்,

நான் இங்கே வந்து உட்கார்ந்திருக்க முடியாது. அதைப்பற்றி கவலையில்லை. எவ்வளவு குற்றம் வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் சாட்டட்டும். அதைப் பற்றி கவலையில்லை. யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் எழுத முடியும் மஞ்சள் பத்திரிகையில் என்று சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. எல்லோருக்கும் அது ஒரு படிப்பினையாக இருக்கிறது.

கலைஞர் மு. கருணாநிதி: குற்றம் சாட்டுவதற்குப் பதிலைச் சொல்லாமல் இருந்துவிட்டால், எவ்வளவு குற்றம் சாட்டினாலும் கவலைப்படாமல் இருந்துவிடலாம், அது வேறு விவகாரம்.

இன்னொன்று, பெரியாருடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. காஞ்சிபுரத்தில் பெரியார் சிலையை வைப்பதற்காக திராவிட கழகம், அதற்கான இடத்தைக் கேட்டு, அதற்குரிய பணத்தைக் கட்டி, பராமரிப்புச் செலவுக்கான பணம் உட்பட சுட்டி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, பணம் கட்டப்பட்டு அனுமதி கேட்டு வழங்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அங்கே சிலை வைக்க அனுமதி அளிக்கப் படவில்லை. இந்த ஆட்சியால்...

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, ஒரு விளக்கம் தருவதற்கு நல்ல வாய்ப்பு தந்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) அவர்கள் கேட்டிருந்த இடம் மடம். கோயில் போன்ற மத நம்பிக்கைக்குரிய இடம். கோயில், மடம் போன்றவற்றிற்கு எதிராக இருப்பதால், அவற்றிற்கு இடைஞ்சலாக இருக்கிற இடத்தைக் கேட்கிற காரணத்தால், முன்னாலிருந்த குடியாட்சித் தலைவர் ஆட்சியிலே அதுபற்றி பரிசீலிக்கப்பட்டது. அது கூடாது முடியாது என்று மறுக்கப்பட்டது. நான் வந்தபிறகு அந்தப் புகாரைக் கவனித்து, யார் என்ன சொல்கிறார்கள் என்று கருத்தையும் கேட்டபொழுது, பொதுவாக எனக்குச் சொல்லப்பட்ட யோசனை மட்டுமல்ல, ஒருமுறை காஞ்சிபுரத்தைப் பார்க்க போன பொழுது அந்த இடத்தைப்

பார்த்துவிட்டு வந்தவுடனே உத்தரவு போட்டேன். எத்தனையோ மாதங்களுக்கு முன்பு – வேறு இடத்தில் வைக்க அவர்கள் கேட்பார்களானால், உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் உத்தரவு போட்டு பல மாதங்களாகிவிட்டது.

கலைஞர் மு. கருணாநிதி: சங்கராச்சாரியார் மடம் இருக்கிறது என்றால், அந்த மடத்திற்கு வெளியிலே பெரியாருடைய சிலை ஏன் இருக்கக்கூடாது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: நாட்டிலே அமைதி தேவை என்பதால், இந்த அரசு எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும். நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கலாம். நம்பிக்கை இல்லாதவர்களாகவும் இருக்கலாம். ஒவ்வொருவருக்கும், மன நம்பிக்கையும் பாதுகாப்பும் அளிப்பது இந்த அரசின் கடமை. அங்கே சச்சரவுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, யாரோ அந்தச் சிலையை வைக்க வேண்டாம் என்று சொன்ன உத்தரவை மாற்றி, வேறு இடத்தில், எங்கு கேட்டாலும், வசதியான இடத்தில், மக்களுக்குப் பயன்படுகிற வகையில் ஒரு இடத்தை ஏற்பாடு செய்துகொடுங்கள் என்று நான் உத்தரவிட்டேன்.

கலைஞர் மு. கருணாநிதி: ஒருவேளை, போக்கு வரத்துக்கு இடைஞ்சலான இடம் என்பதால் அது அனுமதிக்கப்படவில்லையென்று முதலமைச்சர் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். சங்கராச்சாரியாருக்காகத்தான் அந்த இடம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லத்தான்....

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: சங்கராச் சாரியாருக்காகத்தான் கொடுக்கப்படவில்லையென்றால் அதைத் துணிவோடு சொல்கிறவன் நான். ஏனென்றால், நான் அவரைப் போய் நேரிலே கண்டு, அவர் என்ன சொல்கிறார் என்பதை நேரிலே பேசி, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டவன். அந்த அளவு துறவியாக, உண்மையிலே துறவிக்கு அடையாளமாக வாழ்கிறார் என்பதை இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவருக்காகவோ, அந்த மடத்திற்காகவோ அல்லது

இட நெருக்கடிக்கோ என்று பிரித்துப் பார்ப்பதற்கில்லாமல், இட நெருக்கடியும் இருக்கிறது. அதோடு, வேறு அரசியல் நெருக்கடி, மத நெருக்கடி, மற்றும் சச்சரவுகள், குழப்பங்கள் வரலாம். அதெல்லாம் வரக்கூடாது என்பதற்காக இந்த நிலையை நான் மேற்கொண்டேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தியாகராய நகரிலே கூட, கழக ஆட்சியிலே ஒரு கோயிலுக்கு எதிரிலே பெரியார் சிலையை வைக்க திராவிடர் கழகத்திலே அனுமதி கேட்டபொழுது, கோயிலுக்கு எதிரிலே பெரியார் சிலையை வைக்கலாமா அது தகுமா என்று பத்திரிகைகள் எல்லாம் எழுதின. அந்த மடத்திற்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதே இடத்திலே அனுமதி தரப்பட்டு, பெரியார் சிலையும் வைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியார் சிலை வைக்கின்ற காரணத்தால் பெரிய மதப் புரட்சி மதப் போராட்டம் எல்லாம் வந்துவிடும் என்பதை என்னைப் பொறுத்தவரையில் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நான் ஏற்கனவே அறிவித்திருக்கிறேன், ஒரு மாதத்திற்குள் குறிப்பிட்ட இடத்தில் திராவிடக் கழகத்தார் கேட்டுள்ள இடத்தில் பெரியாருடைய சிலையை வைக்க அனுமதி மறுக்கப்படுமானால் அந்தத் தடையை மீறி, நானே தலைமையேற்று அந்த இடத்தில் பெரியார் சிலையை வைக்க முயற்சி எடுப்பேன் என்று தெரிவித்துள்ளேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் என்கிற நிலையிலே இங்கேயே பதில் சொல்லிவிடுகிறேன், எந்தக் காரணத்தைக் கொண்டும் அங்கே சிலை வைக்க இந்த அரசாங்கம் அனுமதிக்காது.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எப்படியும் அந்த இடத்திலே பெரியார் சிலையை தி.மு.கழகம் வைத்தே தீரும்.

(முறியடிப்போம், முறியடிப்போம் என்ற குரல்கள் எழுந்தன) (கூச்சல் குழப்பம்).

திரு. துரைமுருகன்: பெரியார் சிலையை உடைப்போம் என்றா சொல்கிறீர்கள்?....

கலைஞர் மு. கருணாநிதி: பரவாயில்லை, சங்கராச் சாரியார் அவர்களுக்காக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரியார் சிலையை உடைப்போம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, சங்கராச்சாரியார் அவர்களுக்காக இந்த அரசு பேசவில்லை, சிலையை உடைப்போம் என்றும் சொல்ல வில்லை. பொது அமைதியைக் கருதி...

திரு. துரைமுருகன்: சங்கராச்சாரியாருக்காக பெரியார் சிலையை உடைப்போம் என்று சொல்கிறார்களே. இந்த ஆட்சி, இந்த எம்.எல்.ஏ. பதவி எல்லாம் வந்ததே பெரியாரால்தானே. பெரியார் சிலையை...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து அமருங்கள் துரைமுருகன். எல்லா உறுப்பினர்களுமே தயவு செய்து அமரவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: சார், உங்களுக்கும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். பெரியார் சிலையை உடைப்போம் என்று இவர்கள் சொல்கிறார்களே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பெரியார் சிலையை உடைப்பதாக யாரும் இங்கே சொல்லவில்லை. பொது அமைதியைக் காப்பதற்காக, பின்னால் ஏற்படும் விளைவுகளை யோசித்து...

திரு. துரைமுருகன்: பெரியாருக்காக நாங்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கிறோம். உயிரையும் கொடுக்கத் தயார். சுடப்போகிறீர்களா, வேண்டுமானால் சுடுங்கள், பெரியார் சிலையை உடைக்கப்போவதாக சொன்னால் அதைக் கேட்டுக் கொண்டு...

மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, சொல்லாத வார்த்தையை சொன்னதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பெரியார் சிலையை உடைப்போம் என்று எங்கள் தரப்பிலிருந்து சொல்லவில்லை என்று நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: பகுத்தறிவு மன்றத்தின் முன்னாலே கோயில் கட்டியிருக்கிறார்கள். அதை ஏன் கட்ட அனுமதித்தீர்கள்? அந்தக் கோயிலை இடித்துவிட அனுமதிப்பீர்களா? பெரியார் சிலையை உடைப்பதாகக் சொல்கிறீர்களே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள், அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, முயற்சியை முறியடிப்போம் என்றுதான் சொன்னார்கள். ஆனால் இந்தப் பிரச்சினை எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. சட்டமன்றத்தில் எழுப்பப்பட வேண்டிய பிரச்சினை அல்ல இது. அந்தந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் கொள்கைகளை மக்கள் மன்றத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். சட்டமன்றத்தை மக்கள் மன்றமாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் ஒரு பிரச்சினை உண்டாகி நாட்டில் கொலைகள் விழக்கூடிய நிலைமையை உண்டாக்கக்கூடாது, அதற்கு காரணமாகிவிடக் கூடாது என்ற பொது நன்மையை உத்தேசித்து இடம் மறுக்கப்பட்டதே தவிர இந்த அரசைப் பொறுத்தவரையில் யாருடைய சிலையாக இருந்தாலும் சரி வேறு எங்கே வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும். அதே இடத்தில்தான் வைக்கவேண்டும் என்ற நிலை எப்பொழுது ஏற்பட்டது என்று தெரியவில்லை. இங்கேயா அதற்கு முன்பா என்று தெரியவில்லை. அனுமதி மறுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது தவறு, பொது நன்மையை உத்தேசித்து வேறு இடத்தில் வைத்துக் கொள்ள அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறோம். ஆகையால் பல பிரச்சினைகளை உருவாக்கி நாட்டில் அமைதி இழந்து அபாய நிலை ஏற்படுவதற்கு காரணமாக இருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ஒன்று சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெரியார் சிலை பற்றிய விவகாரம் முடிந்து விட்டது என்றே கருதுகிறேன். சிலையை வைக்க அனுமதிக்க முடியாது அவர்கள் ஆட்சி இருக்கிற வரையில் என்று கூறிவிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் அந்தச் சிலையை அங்கே வைத்தே தீருவது என்ற முடிவை எங்கள் கட்சியின் சார்பாக அறிவிக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள். அவர்கள் பேசி முடித்த பிறகு பேசலாம். ஏதாவது எடுத்துச் சொல்வதாக இருந்தாலும் அவர்கள் பேசிய பிறகு பேசலாம். உட்காருங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: இந்த அவையில் ஆத்திகர்களே கிடையாதா, திரு. கந்தசாமி பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இதற்கிடையில், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சத்தியா ஸ்டூடியோஸ் பற்றி ஒரு குறிப்பைச் சொன்னார்கள். இப்போது எனக்கு செய்தி வந்து இருக்கிறது. அதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். சத்தியா ஸ்டூடியோஸ் நிர்வாகிகள் சார்பில் ஆர்பிட்ரேஷனில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒரு தவறான செய்தியை, உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறார்கள். 1.3.79ம் தேதி ஆர்பிட்ரேஷன் போட்டு இருப்பதாக கவர்ன்மென்ட் ப்ளீடர், சத்தியா ஸ்டூடியோஸ் வழக்கறிஞர் என்.சி. ராகவாச்சாரி ஆகியோருக்கு கலெக்டர் கடிதம் எழுதி இருக்கிறார். 1.3.79 வியாழக்கிழமையாக இருப்பதால், உயர்நீதி மன்றம் இருக்கிறது. எனவே ஏதாவது சனிக்கிழமை போட்டால் கலந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று கவர்ன்மென்ட் ப்ளீடர்

28.2.79 அன்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரும் 31ஆம் தேதி சனிக்கிழமை ஆர்பிட்ரேஷன் போட்டு கடிதம் அனுப்பியிருக்கிறார் என்ற செய்தி சத்தியா ஸ்டூடியோஸ் சார்பில் வழக்கறிஞர் என்.சி. ராகவாச்சாரி தந்து இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் 1–30 ஆகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரத்தில் முடித்துக் கொள்வீர்கள் என்று தெரிந்தால் அவையை நீட்டிக்க உதவிகரமாக இருக்கும்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நேற்றைக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பிரசவ வேதனையோடு அல்லலுற்றுக்கொண்டிருந்தார்கள். சுகப் பிரசவம் இன்று நடைபெற எல்லாம் வல்ல இயற்கையை நான் வேண்டுகிறேன். அந்த சுகப் பிரசவத்தில் நானும், மற்றுமுள்ள எதிர்க்கட்சி தலைவர்களும் எடுத்து வைத்த வரி விலக்குக் கோரிக்கைகள் எல்லாம் உதயமாகும் என்றும் நான் நம்புகிறேன். நேற்றைய தினம்....

திரு. செ. சிவசாமி: சார் பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, சுகப் பிரசவம் என்று சொன்னார்கள். என்ன குழந்தை என்பதை அறிவிப்பார்களா?

கலைஞர் மு. கருணாநிதி: வரி இல்லாத குழந்தை என்பதைக் குறிப்பிடுகிறேன்.

நேற்று மிக வேகமான நிலையில் மன்றத்தினுடைய விவாதங்கள் போய்க்கொண்டிருந்தபோது பேரவையி னுடைய துணைத் தலைவர் அவர்களால் ஒரு சோகமான செய்தி இங்கு அறிவிக்கப்பட்டு, அனைவரும் ஒருவருக்கொருவர் பேசுவதற்குக் கூட இயலாத ஒரு சூழலில் இந்த மன்றத்தில் இருந்து வெளியிலே சென்றோம். சென்ற சில நிமிட நேரங்களுக்கெல்லாம் இந்திய நாட்டினுடைய ஜனநாயகப் பாதுகாவலராக விளங்குகிற, விளங்கிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் உயிருடன் இருக்கிறார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி நமக்கு எட்டியது. பேரவைத் தலைவரவர்களே. தாங்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல

அந்த மகிழ்ச்சிகரமான செய்தி தொடர வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. நாட்டு மக்களுடைய ஆசை; அந்த ஆசை நிறைவேற வேண்டுமென்று நாம் அனைவரும், நம்புவோமாக.

நேற்று என்னுடைய நிதிநிலை அறிக்கையின்மீதான உரையில் பெரியார் சிலை விவகாரம் ஓரளவு சூடு பிடித்தது. பெரியாருடைய சிலையை 1974ஆம் ஆண்டு திராவிடக் கழகத்தினர் கோரிய இடத்தில் வைப்பதற்கு அன்றைக்கு காஞ்சிபுரம் நகராட்சி மன்றம் அனுமதி அளித்து, அதற்குரிய செலவினங்கள், பராமரிப்புச் செலவிற்கான பணம் இவைகள் எல்லாம் கட்டியதற்காக ரசீதையும் திராவிடக் கழக நண்பர்கள் காஞ்சிபுரத்திலே பெற்றிருக்கிறார்கள்.

அதன் பின்னர் நெருக்கடி கால ஆட்சியில் – இரண்டு மூன்று பேர் (சங்கராச்சாரியார் அல்ல) எல்லப்பன், கணபதி, ராமநாதன் ஆகிய மூன்று பேர் கொடுத்த ஒரு மனு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது என்று கூறப்பட்டது. அப்போது மன்றம் இல்லை. நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு – தனி ஆணையரின் நிர்வாகத்தில் காஞ்சிபுரம் நகராட்சி இயங்கிய நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் 27–08–1976ஆம் தேதி காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தீர்மானம் எண் 310 நகல் கெங்கைகொண்டான் மண்டபம் அருகில் நகரளவு எண் 1865இல் தந்தை பெரியார் அவர்களின் உருவச்சிலை அமைக்க 30–09–1974ஆம் தேதிய தீர்மானம் எண் 459இல் மன்றம் ஒப்புறுதி அளித்துள்ளது. இந்தச் சிலை அமைக்க ஆட்சேபணை செய்துள்ள திருவாளர்கள் சி.கே. எல்லப்பன், மு. கணபதி, என். இராமநாதன் ஆகியவர்களின் மனு மன்றத்தில் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 05–08–1976 தேதி எண் 2566–74 அனுப்பப்பட்டுள்ளது. ''ஆட்சேபணை இருப்பதால் முந்திய தீர்மானத்தின் பேரில் மேல் நடவடிக்கை தேவையில்லை.'' யு. சுப்பிரமணியன், தனி அதிகாரி – என்று போட்டு நெருக்கடி காலத்திலே நடைபெற்ற கொடுமைகளில் ஒன்றாக அத்துமீறிய நடவடிக்கைகளில் ஒன்றாக முதலில் அனுமதிக்கப்பட்டு, பெரியார் சிலை வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட இடம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மறுபடியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்த பிறகு மீண்டும் காஞ்சி திராவிடர் கழகத்தினர் அதே மனுவைச் செய்துகொண்டார்கள். நான் நேற்று குறிப்பிட்ட போதுகூட ஏதோ சங்கராச்சாரியார் மடத்திற்கு எதிரே அதை வைக்கவேண்டும் என்கிற தோரணையில் எடுத்து கொண்டதாக நான் கருதுகிறேன். அதனுடைய வரை படங்களை எல்லாம் உடனடியாக காஞ்சிபுரத்திலிருந்து கொண்டுவரச்சொல்லி நான் பார்த்தேன்.

கிட்டத்தட்ட இரண்டும் இரண்டு வெவ்வேறான தெருக்கள்; சங்கராச்சாரியாரின் மடம் ராசாத்தெரு முனையில் இருக்கிறது. பெரியாருடைய சிலை வைக்கக் கோருகின்ற இடம் தேர் வீதியும், செங்கழுநீர் சாலை என்று சொல்லப்படுகின்ற தெருவும் சந்திக்கும் இடம். அந்தச் சாலையில் மத்திய பாகத்திலே கூட அந்தச் சிலையை வைக்கவேண்டும் என்று கோரவில்லை. இரண்டு வீதிகளும் சந்திக்கின்ற ஒரு மூலையில் வைக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டது. நல்ல திறமையான எஞ்சினீயர்களான வருவாய்த்துறை அமைச்சரவர்களும் மின்சாரத் துறை அமைச்சரவர்களும் அந்த வரை படத்தைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் சிகப்பு குறியிட்ட இடம் பெரியாருடைய சிலை வைக்க கேட்கப்பட்ட இடம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். நேற்று இந்த விவாதம் நடந்தபோது நான் கவனித்த வரையில் எனக்கு நினைவில் இருப்பது, அது சங்கராச்சாரியார் அவர்களுடைய மடத்திற்கு அருகில் இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோதுதான் அந்த வாசகம் வந்ததாக எனக்கு நினைவு.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நிச்சயமாக இல்லை. மதத் தகராறு ஏற்படும் அதனால் என்று முதலமைச்சர்தான் சொன்னார். இதிலே பச்சை கோடிட்ட இடம்தான் சங்கராச்சாரியாருடைய மடம் இருக்கின்ற இடம். சிகப்பு வட்டமிட்ட இடம்தான் பெரியார் அவர்களுடைய சிலை வைக்கவேண்டும் என்று கோரப்பட்ட இடம்.

ஆட்சேபணை சங்கராச்சாரியாரால்கூட அல்ல. வேறு யாரோ இரண்டு மூன்று பேரால் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவல் எனக்கு எப்படித் தெரியுமென்றால், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு – நம்முடைய என்று சொல்ல நான் தயாராக இல்லை – உங்களுடைய ஆஸ்தான கவிஞர் ஒரு கூட்டத்தில் பேசிய நேரத்தில் குறிப்பிட்டார். ''காஞ்சிபுரத்தில் சிலை வைக்க திராவிடர் கழகத்தார் அனுமதி கேட்டார்கள். நான் எம்.ஜி.ஆர். அவர்களிடம் சொல்லி அதைத் தடுத்துவிட்டேன்'' என்று அர்த்தமுள்ள இந்து மதம் எழுதிய ஆஸ்தான கவிஞர் அந்தச் செய்தியை வெளியிட்ட பிறகுதான் எனக்கே தெரியும். எனவே அது பற்றி பிரச்சினை எழுப்பினேன். சங்கராச்சாரியார்கூட பெரியார் சிலை வைப்பதை வேண்டாமென்று சொல்லமாட்டார். கழக ஆட்சிக் காலத்தில் கூட நான் முதலமைச்சராக இருந்தபோது பெரியார் அவர்களின் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. அப்போது அந்தச் சிலையின் பீடத்திலே எழுதப்படுகின்ற எழுத்துக்கள் சிலருக்கு ஆட்சேபகரமாக இருப்பதால், மீண்டும் அந்தச் சிலைகள் வைக்கப்படுகிற நேரத்தில் அப்படிப்பட்ட எழுத்துக்களை எழுத வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, திராவிடர் கழகத்தினரும் கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் அப்படிப்பட்ட எழுத்துக்களை கடவுள் இல்லை என்பது போன்ற எழுத்துக்களை – அதிலே எழுதாமல், பெரியாரின் வேறு பொன்மொழிகள் எழுதப்பட்டு சிலைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, விளக்கத்திற்காக இதை சொல்கிறேனே அல்லாமல், சங்கராச்சாரியார் மடத்திற்கு நேராகத்தான் வைக்கவேண்டும் என்பதற்காக அல்ல, சிலை வைக்க வேண்டும் என்ற இடத்திற்கும் மடம் இருக்கும் இடத்திற்கும் இடையே 120 அடி, 150 அடி வித்தியாசம் இருக்கிறது என்பதை விளக்கத்திற்காக இதைக் கூறுகிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினைகள் பற்றி நேற்றைய தினம் நான் பேசும்போது, அவர்களுடைய பல்வேறு – கொள்முதல் விலை போன்ற தொல்லைகளை எல்லாம் எடுத்துக்காட்டினேன். மின்துண்டிப்புக் காரணமாக

ஏற்பட்டுள்ள கிளர்ச்சி, ஏற்கனவே போடப்பட்ட வரிகளை வஜா செய்யவேண்டும் என்ற அளவில் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், கொஞ்சம் வசதி படைத்த விவசாயிகள், போன்ற பாகுபாட்டின் பேரில் உதவி, கடன் வசதிகளை அவர்களுக்கு தருவதிலும், ஏற்கனவே உள்ள கடன்களை ரத்து செய்வதிலும், வட்டிகளை அறவே குறைப்பதிலும் இந்த அரசு முன்வர வேண்டும், என்ற பிரச்சினைகளை வைத்து விவசாயிகள் இன்றைக்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சேலத்திலிருந்து கிடைத்திருக்கின்ற செய்தி அங்கே பாலசுப்பிரமணியம் அவர்கள், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர் அல்ல. குறிப்பாக விவசாயப் போராட்டங்களை நடத்துகின்ற எந்த தலைவர்களும் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆனால், எந்த போராட்டத்தை யார் நடத்தினாலும், அதை திராவிட முன்னேற்றக் கழகம்தான் தூண்டிவிடுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகிறோம். அதைப்பற்றி நான் கவலைப்படவும் இல்லை. ஆக நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த ஆறு, ஏழு நாட்களாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது என்று செய்திகள் வருகின்றன. அரசு இதைப்பற்றி மௌனமாக இருப்பது முறைதானா என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, முறைகேடுகளை சொன்னால், குற்றச் சாட்டுகளை சொன்னால், நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் கூட, இவைகள் நிரூபிக்கப்பட்டால் நான் ராஜினாமா செய்ய தயாராக இருக்கிறேன் என்று அறைகூவல் விடுத்தார். சத்தியா ஸ்டூடியோவுக்கு நிலத்தை எடுத்துக் கொண்டதில் எனக்கு எந்த விதமான பயனும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். எந்தவிதமான பயனும் இல்லாமல் 9,000 ரூபாய் கொடுத்து 20 வருட காலத்திற்கு ஏன் எடுத்துக் கொண்டார்கள் என்பதெல்லாம் கவனிக்க வேண்டிய விவகாரம். அந்த பைல்களை எல்லாம் விசாரணைக்கு வைப்பார் என்றால், இந்த நிலம் எடுக்கப்பட்டதால், இவர்

பயன்பட்டாரா இல்லையா என்பதெல்லாம் நாட்டுக்கு விளங்கும் என்பதை இங்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்கள் தந்துள்ள நிதிநிலை அறிக்கை மீது எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எடுத்துக்காட்டிய குறைபாடுகள் இவை இவை என்பதெல்லாம் நேற்று நான் ஆற்றிய பேச்சின் முன்பகுதியில் சொல்லி யிருக்கிறேன். நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை யோடு சொல்லியிருக்கிறேன். இதை எல்லாம் கண்டித்துத் தீரவேண்டும் என்பதற்காக அல்ல. நல்லவைகளை எல்லாம் பாராட்டக்கூடாதா என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்பார் என்று எனக்குத் தெரியும். இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்ட அதே நேரத்தில் நிருபர்களிடம் நான் பேசுகிற நேரத்தில் சொல்லியிருக்கிறேன். அதை ஆளும் கட்சி உறுப்பினர் சிலரும் இங்கே குறிப்பிட்டதாக நினைவு. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு சமூகநல திட்டங்களுக்காக, குடிதண்ணீர் பாதுகாப்பு திட்டங்களுக்காக போடப்பட்ட திட்டங்களுக்கெல்லாம் ஓரளவு நிதி அதிகப் படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில்..... ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடைகோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையுமே ஏமாற்றிவிட முடியாது... என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதையேதான் நான் மீண்டும் திருப்பி சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற நிலைமைகளை காண்கிற நேரத்தில் இதே அறிவுரையை இந்த அரசுக்கு சொல்ல வேண்டியது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. பெரும்பான்மையான மக்களில் பலர் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் பல்வேறு பகுதியினர். விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள், ஏன் வழக்கறிஞர்கள் உட்பட, மருத்துவர்கள் உட்பட பல்வேறு கிளர்ச்சிகளில் இறங்க வேண்டிய நிலையில் இருப்பதை

நாட்டில் நாம் பார்க்கிறோம். மாணவர்கள் பல இடங்களில் தாக்கப்படுகிறார்கள். இவைகளைப்பற்றியெல்லாம். இந்த அவையில் முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், மற்ற கட்சிகளின் சார்பிலும் அவைகள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானங்களாக கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

எந்த ஒரு தாக்குதலுக்காவது நீதி விசாரணை வைக்கிறேன் என்ற அளவுக்கு இந்த அரசு ஒத்துக்கொண்டதா என்றால் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே திருச்சியிலே கிளைவ் ஆஸ்டலில் நடைபெற்ற சம்பவத்தைக் காண இன்றைய நிதி அமைச்சர் என் அருமை நண்பர் மனோகரன் அவர்கள் அன்றைக்கு கிளைவ் ஆஸ்டலுக்கு விரைந்தோடிச் சென்றார். அன்றைக்கு மாணவர்களை எல்லாம் சந்தித்தார். அங்கே மாணவர்கள் ரத்தம் சொட்டச் சொட்ட அடிக்கப்பட்டார்கள் என்ற அறிக்கையை விடுத்தார்கள். சட்டமன்றத்திலே எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். நாங்களும் சேர்ந்து ஒரே பிடிவாதமாக இருந்து விடவில்லை. எங்களுக்கு வந்த தகவலை படித்துவிட்டு, இந்தத் தகவலுக்கு மேல் நீங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்ற காரணத்தால், நீதி விசாரணை வைக்கப்படும் என்று அறிவித்து, அவ்வாறே நீதி விசாரணை வைத்து, அந்த நீதிபதி அதிகாரிகள் குற்றம் இழைத்தார்கள் என்கின்ற அளவுக்கு தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறார் என்று நான் ஏற்கனவே குறிப்பிட் டிருக்கிறேன். எனவே, இப்படி மாணவர்கள் ரத்த காயம் படுகின்ற அளவுக்கு, மண்டை உடைகின்ற அளவுக்கு அவர்கள் தாக்கப்படுகிறார்கள். விடுதிகளிலும், கல்லூரிகளிலும் அத்துமீறி போலீசார் மாணவர்களைத் தாக்குவதும் உள்ள இந்த நிலையை ஒரு கட்டத்திலாவது நிறுத்துவதற்கு நீங்கள் நீதி விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்தால்தான் முடியும் என்பதை நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் ஒரு உறுதி மொழியை எனக்கும் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் அளித்தார். மதுவிலக்கு அவசரச் சட்டம் பற்றி நானும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச்

சொல்லி, இது மிகக் கடுமையான சட்டம், காட்டுமிராண்டி காலத்திலேகூட இப்படிப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்ட தில்லை, நாகரிகமான இந்த காலத்தில் இப்படிப்பட்ட சட்டத்தை இயற்றுவது, ஜாமீனில் கூட விட முடியாது என்கின்ற சட்டத்தை கடுமையாக்குவது முறையல்ல என்பதை எடுத்துச் சொன்னோம். மதுவிலக்கு நிறைவேற்றப் பெற வேண்டும் என்பது எல்லோருடைய ஆசைதான். அந்தக் கொள்கையில் மாறுபாடு இல்லை. ஆனால் இந்திய நாட்டைப் பொறுத்தவரையிலே மதுவிலக்கிலே மிகத் தீவிரமான எண்ணங்கொண்ட, இந்திய நாட்டின் பிரதமர் மொரார்ஜீ தேசாய் அவர்கள் இந்தியா முழுவதற்குமான ஒரே நாளில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் படுத்த துணிவு படைத்திருக்கிறாரா அல்லது அப்படிப்பட்ட வசதி வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. நம்மைச் சுற்றி, பக்கத்திலே பாண்டிச்சேரியானாலும் சரி, அருகாமையிலே இருக்கின்ற பெங்களூர் ஆனாலும் சரி, இன்னொரு பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலம் ஆனாலும் சரி, இன்னொரு பக்கத்தில் கேரள மாநிலம் ஆனாலும் சரி, அனைத்திலும் மது இன்றைக்கு விலக்கு என்ற கொள்கைக்கு ஆளாகாமல், தாராளமாகப் புழங்கிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்தக் கொள்கை தமிழகத்திலே வெற்றிபெற முடியாது என்கின்ற ஒரு கருத்து நிலவுகிற நேரத்தில், ஏதோ ஒரு அளவுக்கு மக்களைத் திருத்தவும், பிரசாரத்தின் மூலம் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன் வந்திருக்க வேண்டுமே அல்லாமல், இப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டம் தேவையில்லை என்ற கருத்தை தெரிவித்த போது நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அறிக்கை விட்டார்கள், முதல்வர் அவர்கள் வெளிநாடு சென்றிருக்கிறார். இந்த நேரத்தில் இப்படிப்பட்ட அறிக்கைகள் வருகின்றன. அவைகள் பிரச்சினையை குழப்புவதாக இருக்கின்றன என்றும், என்னையும், மற்ற கட்சித் தலைவர்களையும் பொறுமையாக இருந்து, சட்டமன்றத்திலே அதற்கான விவாதங்களை நடத்தி, அதற்கேற்ற அளவில் திருத்திக்கொள்ளலாம் என்ற உறுதி மொழியை அன்றைக்குத் தந்தார்கள். அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற அச்சத்தின் காரணமாகவோ என்னவோ அந்த

மசோதா நிறைவேற்றுகின்ற நேரத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மன்றத்திற்கு வராமல் இருந்து விட்டார்கள். (குறுக்கீடு) ஏதோ ஒரு காரணம், கோசிஜீனைப் பார்க்கச் சென்றதாகச் சொல்கிறார். அங்கே மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி இங்கே அன்று பேசாமல் இருந்து முதலயமைச்சர் அவர்கள் போய்இருக்கலாம். ஆனாலும், அவர் போனதாக சொல்லிவிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் களுக்கு உறுதிமொழி அளித்திருப்பதால் இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பார் களானால், அவருடைய அருளின் காரணமாக இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு இப்படிப்பட்ட கொடுமையான சட்டம் திணிக்கப்படுகின்ற சூழ்நிலை வராமல் இருந்திருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்.

இந்தியா பூராவும் இன்றைக்கு மது ஆறாக ஓடிக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலும், மது ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதிலே யார் யார் ஈடுபட்டிருக் கிறார்கள். சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் இங்கே பேசிப் பேசித் தீர்ந்து விட்டப் பிரச்சினை. எனவே, நான் மீண்டும் அதைப்பற்றிச் சொல்வதற்கு விரும்பவில்லை.

எனவே, நல்ல சித்தாந்தந்தான் அது. ஆனால், நிதியமைச்சருடைய கொள்கையில் சொல்ல வேண்டு மென்றால் செல்லரித்துப்போன சித்தாந்தமாக அது இன்றைக்கு ஆகிவிட்டிருக்கிறது. செல்லரித்துப்போன சித்தாந்தத்தைக் காப்பாற்ற அதி தீவிர அவசரச் சட்டம் அல்லது அவசரச் சட்டத்தை நிறைவேற்றி கடுமையாக ஆக்கப்படுகிற சட்டம் வெற்றிகரமாக அமையாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எவ்வளவோ திட்டங்களை அறிவித்தீர்கள். அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப் படவில்லை என்பதை நேற்று என்னுடைய உரையிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நான் பேசிய நேரத்திலே குறிப்பிட்டு காட்டியிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிகூட முதலமைச்சர் என்ன பேசினார். வெளியிலே. வெளியிலே பேசும்போது கள்ளச்சாராய வியாபாரிகள் யார்

யார் என்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது என்று சொன்னார். அந்தப் பட்டியல் என்னவாயிற்று என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது நண்பர்கள் கேட்டபோது யார் யார் என்று பட்டியலை அதிகாரிகளிடத்தில் நம்பிக் கொடுத்தேன். அதை அவர்கள் அவர்களுக்குச் சொல்லிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது தொழிலதிபர்களில் யார் யார் மின்சாரத்தைத் திருடுகிறார்கள் என்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். பிறக அந்தப் பட்டியலை அதிகாரி களிடத்தில் கொடுத்து அந்த ரகசியம் வெளியாகிவிட்டது என்று சொல்லக்கூடும். ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தில் அக்கறையும் ஆர்வமும் இருக்குமானால் கட்சி சார்பற்ற முறையில் அந்தக் கண்ணோட்டத்தோடு சட்டத்தினுடைய கடுமையைக் குறைத்து எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப் போடும் அதனை நிறைவேற்ற முன்வர வேண்டுமென்றும், எதிர்கட்சியினரை மிரட்டலாம், பழி வாங்கலாம் என்ற அளவில் ஏழை எளியவர்கள் மிக இன்னலுக்கு ஆளாகின்ற இந்தச் சட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உங்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் சார்பாக எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கை. தேர்தல் அறிக்கையில் அண்ணா அவர்கள் கைப்பட எழுதியிருக் கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு கழக ஆட்சியில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. ஏற்கனவே குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தை முடக்கி வைத்திருந்தார்கள். அந்த முடக்கத்தை நீக்க அந்தச் சட்டத்தை நடமாடவிட்டோம் தீர்மானத்தின் மூலமாக. குதிரைப்பந்தய மைதானத்திற்குச் சொந்தக்காரர்கள் அல்லது அந்தக் குழுவினர் உச்சநீதி மன்றத்திற்குச் சென்றார்கள். அந்த வழக்கு அப்படியே தூங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கை எழுப்புவதற்கு அவசரத்தைக்காட்டி, ஆர்வத்தைக்

காட்டி குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக முதலமைச்சர் சொன்னார் – 'நான் அதை அரசுடைமையாக்கப் போகிறேன்' என்று அறிவித்தார். ஓராண்டுக் காலமாகி விட்டது. அது நாட்டுடைமையாக்கப் பட்டதா அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. அறிவிப்புகள் ஏராளமாக வருகின்றன. அவை புரட்சிகரமாகத் தோன்றுகின்றன. பிறகு அவைகளைக் கிடப்பில் போட்டுவிடுவது இந்த அரசினுடைய வழக்கமாக இருந்து வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியிலும் அடுத்து வந்த அண்ணா அவர்கள் ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து ஏழாண்டுக் காலம் நடைபெற்ற திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலும் மொத்தம் ஒன்பது ஆண்டு கால கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப் பட்ட நிறைவேற்றுவது என்று சொல்லப்பட்ட திட்டங்களுக்கு ஓரளவு நிதி வருவாய் அதிகரிப்பதன் காரணமாக கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர, பல்வேறு திட்டங்கள், குடிசை மாற்று வாரியம் போன்ற திட்டங்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம், மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் போன்ற புரட்சிகரமான திட்டங்கள் எல்லாம் சமுதாய நலத் திட்டங்கள் எல்லாம் கைவிடப் பட்டிருக்கின்றன. அறவே விலக்கப்பட்டுள்ளன.

'தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மைப்படம் தெரியும்' என்று நிதியமைச்சர் குறிப்பிட்டார். தாழ்வாரமும் தந்த மாளிகையின் ஒரு பகுதிதான். ஏனென்றால் தந்த மாளிகையில் இருக்கும் தாழ்வாரத்திலே இருந்து பார்த்தாலும் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மையான படப்பிடிப்பைக் காண முடியாது. ஆகவே, அந்தத் தாழ்வாரத்திலிருந்து கொஞ்சம் வெளியே வந்து பார்த்தால்தான் தமிழகத்தின் உண்மைப்படம் தெரியும் என்று நான் அவருக்குக் கூறிக் கொள்வதோடு இதில் நான் என்னுடைய விமர்சனத்தைக் கூறுவதைவிட அவர்களோடு மிகவும் உறவுள்ள கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி, கர்நாடக

மாநிலத்தை ஆண்டு கொண்டிருக்கிற கட்சி, அந்தக் கட்சியின் அமைச்சர்களில் ஒருவர் பசவலிங்கப்பா அவர்கள் மதுரையில் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட்ட வாசகத்தை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

''அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கைக் கோட்பாட்டில் கட்டப்பட்ட ஒரு கோட்டையல்ல. கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக ஏழை பாமர மக்களுக்குச் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விழித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் எந்த அளவு விமோசனமும் இல்லை. பின்தங்கியவர்களை முன்னேற்ற ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்கிறதா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பட்ஜெட்டிலும் எதுவும் ஒதுக்கவில்லை. இனியும் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.''

என்று பசவலிங்கப்பா அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே எடுத்துக்காட்டி நான் சொன்னால் கோபம் வரும் என்பதற்காகத்தான் உங்களுடைய நண்பர் கர்நாடக மாநில அமைச்சர் பசவலிங்கப்பா அவர்கள் சொன்னதை எடுத்துக்கூறி இந்த நிதிநிலை அறிக்கை பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக இந்த அவையின் முன்பு நான் சமர்பித்த நிதிநிலை அறிக்கை பற்றி, கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரைப் போல் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. குறிப்பாக எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்குப் பதில் அளிக்கின்ற வகையிலேயும் விளக்கங்களைத் தெரிவிக்கின்ற முறையிலேயும் எனது பேச்சை நான் அமைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், இறுதியாக தனது பேச்சை முடிக்கின்ற போது, நான் எனது நிதிநிலை

அறிக்கையிலே கடைசியிலே குறிப்பிட்ட அந்த வாசகங்களை சுட்டிக் காட்டி, அவருக்கே உரித்தான ஒரு விளக்கத்தைச் சொன்னார். எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சி. இந்தப் பகுதிகளைப் பல உறுப்பினர்கள் தொட்டுக் காட்டினார்கள். அந்த அளவிற்கு இந்தப் பகுதி அவர்களது உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி. ஆனால் தந்த விளக்கங்கள், நான் எந்த நோக்கத்தோடு அந்தக் கருத்துக்களை எடுத்துச் சுட்டிக்காட்டினேனோ அதற்குரியதாக அமையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் போது, தயவுசெய்து யாரும் வருத்தப்படக்கூடாது.

''தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மைப்படம் தெரியும். இந்த அவை முன் மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்கும். ஆக்கப்பூர்வமான விமர்சனங்களுக்கும் பலனுள்ள யோசனைகளுக்குமாக வைக்கப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை அந்த உண்மை நிலையின் படப்பிடிப்பு'' இது நிதிநிலை அறிக்கையில் நான் எழுதிய கடைசிப் பகுதி.

தந்த மாளிகையினிலே இருந்து கொண்டு நிதியமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கையை எழுதியிருக்கிறார் என்று ஏளனம் பேசியவர்கள் உண்டு. நான் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. நான் தலைநிமிர்ந்து சொல்கிறேன், தந்த மாளிகையிலிருந்து கொண்டுதான் நிதிநிலை அறிக்கையை எழுதினேன். அவர்கள் சொல்கிற தந்த மாளிகைக்கும், நான் சொல்கிற தந்த மாளிகைக்கும் இடையில் இருப்பது இதுதான். அவர்கள் சொல்லியிருக்கின்ற தந்த மாளிகை 'அய்வரி டவர்'. நான் சொல்கிற தந்த மாளிகை 'மக்கள் எனக்குத் தந்த மாளிகை'யிலிருந்து கொண்டு எழுதினேன். இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தந்த மாளிகை என்று நான் குறிப்பிடுவது, ஆங்கிலத்தில் கற்பனையான ஒரு இடத்தில் இருந்துகொண்டு நிஜ நிலைமைக்கு வராமல் இருக்கின்ற நிலைமையாகச் சுட்டிக் காட்டப் பயன்படுத்துகிற ஒரு வார்த்தை. Ivory tower அந்த அணுகுமுறை கூடாது என்று சொல்லிவிட்டு, தாழ்வாரம் என்று நான் கூறுவது down to earth approach என்பது, நிஜமான அடிப்படை தேவையென்று

அடிப்படையிலே எழுப்பப்பட்டதே தவிர, எதிர்கட்சித் தலைவர் தாழ்வாரமே இருக்கக்கூடாது, தெருக் கோடிக்கு வரவேண்டும் என்று குறிப்பிட்ட அந்தக் கருத்திலே நான் எழுதவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது அவருக்குத் தெரியாததல்ல, வேண்டுமென்றே அப்படி ஒன்றைச் சொல்லிப் பார்க்கலாம் என்பதற்காகச் சொன்னார். சொல்லிப் பார்க்கலாம் என்பதற்காகத்தான் சொன்னார் என்று கருதுகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் மக்கள் எனக்குத் தந்த மாளிகை என்று சொன்னார். நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்கள் தந்த மாளிகை என்று சொல்வது சொல்லாட்டம். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். மக்கள் தந்த மாளிகையிலிருந்து கொண்டு நீங்கள் திட்டங்களைத் தீட்டுகிறீர்கள் என்று சொல்கிறீர்கள். பிறகு என் தாழ்வாரங்களுக்கு வருகிறீர்கள்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் திருப்பியும் சொல்கிறேன். down to earth approach என்று நான் குறிப்பிடு கின்ற உண்மையை அவர்கள் தயவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும். ஆட்சிக் கட்சிக்கும் சேர்த்தே சொல்லியிருக்கிறேன் என்பதிலிருந்து தயவு செய்து என்னுடைய தைரியத்தை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

''ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடை கோடியி லிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப் பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது'' என்று ஒரு ஆட்சிக் கட்சியிலேயிருந்து இந்தக் கருத்துக்களை இவ்வளவு துணிச்சலோடு நான் எழுதுகிறேன் என்றால், இந்த அளவிற்கு ஆட்சி உண்மை நிலையைப் புரிந்து வைத்திருக்கிறது. பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு, அந்த எல்லையை மக்கள் தாண்டுவார்களானால் தர்மம் தலை கோடிக்குச் செல்லும் என்ற அடிப்படையை உணர்ந்து இந்த அரசு பணியாற்றுகிறது என்பதைப் புரிந்து வைத்துக்கொண்டு இது எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக ஆதாரமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், நாம் கண்ணை மூடிக்கொண்டு காரியங்களை ஆற்றக்கூடாது என்பதையும், மக்கள் நம்மை எப்படிக் கணிக்கிறார்கள் என்பதை தீவிரமாக நாம் கவனித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதையும், மக்களின் பார்வையி லிருந்து நாம் மறைந்துவிட்டோமானால் விளைவுகள் எவ்வளவு விபரீதமாகச் செல்லும் என்பதையும் நினைவு படுத்தியாக வேண்டும். இதை நிச்சயமாக, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் – இன்றைக்கிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரவர்கள் – நிதியமைச்சராக இருந்திருப்பாரேயானால் இந்த அளவிற்குத் தைரியத்தோடு எழுதுவார்கள் என்று நான் நம்பவில்லை என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் மனதார நம்புகிறேன். அந்த அளவிற்கு அது எழுதப்பட்டது.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன். இதைச் சொன்னவர் யார் என்பதை அப்பாலே சொல்கிறேன்.

"Economic equality is the master key to non-violent independence. A non-violent system of Government is clearly an impossibility, as long as the wide gulf between the rich and the hungry millions presists. The Contrast between the palaces of New Delhi and the miserable hovels of the poor, labouring class cannot last one day in a free India in which the poor will enjoy the same power as the richest in the land. A violent and bloody revolution is a certainty one day, unless there is a voluntary abdication of riches and the power that riches give and sharing them for the common good."

நான் இதற்கு மொழி பெயர்ப்புத் தர வேண்டுமென்று விரும்பவில்லை. உங்களுக்கே தெரியும். இந்த இடைவெளி, பெரும் பணக்காரர்களுக்கும், பரம ஏழைகளுக்கும் இருக்கின்ற இடைவெளி குறைந்தாலொழிய புரட்சிப் பெரும் வெள்ளத்தில் பெருங்கதவுகள் திறக்கப்பட்டே தீரும் என்ற கருத்தைச் சொன்னவர் அமைதியின் வடிவமாக அமரராகி விட்ட பெரும் மதிப்பிற்குரிய காந்தியடிகள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பத்திரிகையாளருக்கும், ஒரு பெரியவருக்கும் நடந்த ஒரு உரையாடல். அந்த உரையாடலின் பகுதி இதுதான்.

"The Budget which represents a departure in presentation has given prominence to a large number of schemes rather than the conventional elaboration of the finance intricacies - designed, as Mr. Manoharan explained, to increase employment opportunities for the poor people in the rural areas and for increasing and expanding the educational and medical facilities." 'எக்கனாமிக் டைம்ஸ்' எழுதிய அந்தக் கருத்தை இங்கே நான் சொல்வதற்குக் காரணம், பம்பாயிலே இருந்து வருகிற அந்தப் பத்திரிகை இந்தக் கருத்தை எழுதுகிற பொழுது, தோளோடு தோள் நின்று ஒரு காலத்தில் பணியாற்றிய என்னுடைய பெருமதிப்பிற்குரிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அந்த அளவுக்குப் பாராட்டும் உள்ளம் பெறவில்லையே என்பதற்கு நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், இன்றைக்கு அவராலே பாராட்டப்படுகிற ஒரு பத்திரிகை, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', அந்தப் பத்திரிகை எழுதியது இதோ இருக்கிறது.

The Finance Minister Mr.Manoharan last Saturday presented the Budget. "His speech contains a number of proposals aimed at achieving the objective he has set-forth. By themselves they are small items, but cumulatively they represent a sound impetus rural industrialisation." இந்தக் கருத்தை இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதியிருக்கிறது என்ற அளவில் நான் முடித்துவிடுகிறேன். 'இந்து' பத்திரிகை தனது நல்லெண்ணத்தை வெளியிட்டிருக்கிறது. அதிலே மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். 'மெயில்' பத்திரிகையைப் பற்றிச் சொன்னால் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கோபம் வரும். ஆகவே, உள்ளே செல்லாமல், நான் தலைப்பை மட்டும் சொல்லி விடுகிறேன். "SENSIBLE BUDGET" அதற்கு மேல் நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்பொழுதும் நம்புகிற பத்திரிகை. அவர் அதைத்தான் ஆதாரத்திற்கு அடிக்கடி எடுத்து வருவார் என்பதும் நமக்குத் தெரியும். அந்தத்

தினமணி பத்திரிகை என்ன எழுதி இருக்கிறது என்பதை நான் படித்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். அப்பத்திரிகை எழுதியிருப்பது இதுதான்.... 'மக்கள் நலம் அல்லது கஷ்ட நிவாரணம்' பற்றிய பகுதியில் 'வேலை வாய்ப்பு அபிவிருத்தி' வேலையில்லாதாருக்கு 'உதவி' ஆகிய ஆரம்ப யோசனைகள் கவனத்திற்குரியவை. ஆனால், 'துர்வினியோகம்' இல்லாமல் செயல்படுத்திப் பார்த்தப்பிறகுதான் அதன் நலன்களை மதிப்பிட இயலும்.''

முன்கூட்டியே முந்திரிக் கொட்டைகள் போல் வரக் கூடாது. ஆனாலும் இது தினமணிப் பத்திரிகையிலுள்ள அபிப்பிராயம்.

'இவை பரிட்சித்துப் பார்க்க வேண்டிய ஏற்பாடுகளே. மொத்தத்தில் இந்த பட்ஜெட்டானது புகார்களுக்கு இடம் தராத பட்ஜெட், சாதுவான பட்ஜெட் என்று சொல்லலாம் என்பது வரவேற்கத்தக்க அம்சம்'. இது தினமணியே தனக்குரிய முறையில் எழுதியிருப்பது. வேறு பல பத்திரிகைகளும் பாராட்டி எழுதியிருக்கிறது. பாராட்டவேண்டிய உள்ளங்கள் பாராட்டியிருக்கின்றன. பாராட்டக்கூடாது என்று யாரும் கருதவில்லை. உள்ளுக்குள்ளேயே சிலர் பாராட்டுகிறார்கள். வெளியே சொல்வதற்கு கொஞ்சம் கூச்சப்படுகிறார்கள். அதிலே ஒருவர்ஆக நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட சில பிரச்சினைகளுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் நேற்றைக்கு பேசிய போது இந்த ஒதுக்கீடுகள் பற்றியெல்லாம் பேசினார். அவர் ஆட்சியிலே இருந்தபோது 575 கோடி ரூபாய் பட்ஜெட் இருந்தது என்றும் அதற்குப் பிறகு இப்பொழுது இருக்கிற ஆட்சி 820 கோடிக்கு பக்கத்திலே வந்ததற்குப் பிறகும், 840 கோடி என்று வந்ததற்குப் பிறகும். அவர்கள் பெரும் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்ற கருத்தை இங்கே சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு அயிட்டத்திலும் அவர்கள் தெரிவித்தார்கள். நான் பணிவன்

போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் அதற்காக குறிப்புகளை இங்கே வைத்திருக்கிறேன். அந்தக் குறிப்புகளிலேயிருந்து அவர்கள் அதற்கு விளக்கம் பெறுவார்கள் என்று மனதார நம்புகிறேன்.

சிறு பாசனத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டபோது அதிலே, அவர்கள் ஆட்சிப் பீடத்திலே இருந்தபோது, அதற்கென்று ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவு 89 லட்சம் என்று குறிப்பிட்டு விட்டு, ஆனால் இவ்வளவு அதிகமான பணத்தைப் பெற்றிருக்கிற இந்த அரசு அந்த அளவுக்கு ஒதுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். நிதியமைச்சர் என்ற முறையில் நான் அதை நியாயமாக மறுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் 1980ஆம் ஆண்டு இதற்கென ஒதுக்கப்பட்டிருப்பது 137 லட்சம் என்பதை நான் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிற புத்தகத்திலிருந்துதான் படிக்கிறேன். 1975–76ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கையில் இணைப்பில் அதிலே 20ஆம் பக்கத்தில் 306வது வரியின்கீழ் 'சிறு பாசனம்' என்ற தலைப்பில் போடப்பட்டிருப்பது 1975–76இல் 419 லட்சம் அதாவது 4 கோடியே 19 லட்சம் கழகஆட்சியிலே. இப்பொழுது 1979–80இல் சிறுபாசனத்திற் காக ஒதுக்கப்பட்டிருப்பது 3 கோடியே 46 லட்சம். இதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். கேப்பிடல் எக்ஸ்பெண்டிசர், மூலதனச் செலவு 1975–76இல் 89 லட்சம். 1979–89இல் 137 லட்சம்.

கலைஞர் மு. கருணாநிதி: வருவாய் அடிப்படையில் வருவாய் செலவுகளைத்தான் முக்கியமாக எடுத்துக் கொள்ளவேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தருவது மூலதனக் கணக்கு. வருவாய் கணக்கில் பார்த்தால் என்ன வருகிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: வருவாய்க் கணக்கிலும் கணக்கெடுத்துப் பார்த்துச் சொல்கிறேன். இந்த

ஆட்சி வந்ததற்குப் பிறகு அதிகப்படியாக செலவழிக்கப் பட்டிருக்கிறது. இந்த பாசனத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை இதிலே தரப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரத்தைப் படித்துக் காட்டினார்கள். நானும் அந்த புள்ளி விவரத்தைப் பார்த்தேன். அதிலே மூலதன செலவு இவ்வளவு என்று குறிப்பிட்டதைவிட மற்ற வருவாய் கீழே சிறிது பார்க்கும்போது 75ஐ விட நிச்சயமாக அதிகமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் பாசன செலவுகளுக்காக 1975–76ஆம் ஆண்டு 17.67 கோடி ரூபாய், ஆனால் 1979–80ஆம் ஆண்டு மூலதன செலவு 29.42 கோடி ரூபாய் குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. பராமரிப்பு செலவுகளைப் பற்றிய ஒதுக்கீடாகும். புதிய பாசனத்திற்கான மூலதன செலவுகளை பொருத்தது அல்ல. தேவைப்பட்டால் பராமரிப்புச் செலவை திருத்த மதிப்பீட்டில் கூட்டுவதற்கு வசதியிருக்கிறது.

அதற்குப் பிறகு வீட்டு வசதி பற்றி அவர்கள் சொன்னார்கள். 1975–76ஆம் ஆண்டு 5.22 கோடி ரூ. என்று குறிப்பிட்டார்கள். ஆனால் உங்களது ஆட்சியில் அந்த அளவிற்கு இல்லை என்றார்கள். 1979–80ஆம் ஆண்டுக்கு இந்த அரசு ஒதுக்கியிருப்பது ரூ. 8.73 கோடி என்பதை நான் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 1975–76இல் ரூ. 0.80 கோடி. ஆனால் இந்த ஆட்சி ஒதுக்கி இருக்கிற தொகை ரூ. 1 கோடி என்பதை நான் நினைவூட்டுகிறேன். ஆக மொத்தம் வீட்டு வசதி (பொது) மீனவர்களுக்கு 1975–76இல் ஒதுக்கிய தொகை ரூ. 6.02 கோடி. 1979–80இல் ரூ. 9.73 கோடி. இது செலவைப் பற்றிய விவரம்.

கணக்கு வைக்கும் முறையில் அரசு நகர்புற வளர்ச்சி நிதியில் இருந்து ரூ. 4.80 கோடி திருப்பிக் கழித்து விடுவதால் நிகர செலவிற்கு அந்தத் தலைப்பின் கீழ் குறைவாக அந்தச் செலவு பதிவு செய்யப்படும். உண்மையில் அந்தச் செலவில் குறைவு ஏற்படாது. பெரிய அளவு உயர்வு ஏற்பட்டு இருக்கிறது.

அதற்குப் பிறகு சாலை, நீர் வழி போக்குவரத்து பற்றி அவர்கள் இங்கே சொன்னார்கள். 1975–76இல் ரூ. 5.25 கோடி ரோடு போக்குவரத்து, நிறுவனங்களுக்கு திருப்பித் தருவதற்காக நிதி செலவிடப்பட்டது. அதற்குப் பிறகு போக்குவரத்து நிறுவனங்கள் நேரடியாகச் செலவு செய்து வருகின்றன. மற்றும் அந்தத் தலைப்பில் மீதமுள்ள ரூ. 1.29 கோடி மோட்டார் வெஹிகில்ஸ் மெயின்டெனன்ஸ் ஆர்கனைசேஷன்களுக்குச் செலவிடப்பட்டது. இது அரசு கார்கள் பராமரிப்புக்காகச் செலவிடப்பட்ட தொகை.

கலைஞர் மு. கருணாநிதி: குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அவை விளக்கம் பெறவேண்டும் என்பதற் காகத்தான் குறுக்கிடுகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள். சாலைப் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து என்று நான் குறிப்பிட்டதும், நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட போக்குவரத்துச் செலவும் ஒன்றாக ஒத்து வரக்கூடியது அல்ல. சாலை நீர்வழிப் போக்குவரத்து என்பது சாலைகள், படகுகளின் மூலமாக கப்பல்களின் மூலமாக போக்கு வரத்துக்கள் இவைகளைப் பற்றி விவரங்கள். அதுவும் வருவாய் கணக்கில் 1975–76இல் ரூ. 6.81 லட்சம். 1979–80இல் ரூ. 2.83 லட்சம். நான் நேற்று கூறிய விவரங்கள் வருவாய் கணக்கில் இருப்பவை. இன்று மூலதனக்கணக்கை பற்றி மட்டும் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் முடிப்பதற் குள்ளாகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்திருக்கிறார்கள். பராமரிப்புக்காக செலவு 1975–76இல் அந்தத் தலைப்பில் 1.30 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. 1979–80இல் மோட்டார் வெஹிகில்ஸ் மெயின்டனென்ஸ் ஆர்க்கனைஷேசன் பற்றிய செலவு ரூ. 2.68 என்று அந்தக் கணக்கு தலைப்பில் இதர நிர்வாகச் செலவுகள் என்ற அகௌண்டில் பதிவு செய்யப்படும். இதற்காக ரூ. 1.54 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்ற செலவுகள் போக்குவரத்து நிறுவனங்கள் நேரடியாக செலவிடப்பட்டு வருகின்றன. அந்தக் கருத்தை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே திரு. சுவாமிதாஸ் அவர்கள், 200 படகுகள் ஏற்கனவே அந்த இலாகாவில் இருக்கிறது, அதை மீன்பிடி தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தைக்கூடச் சொன்னார்கள். மீனவர்களுக்குப் படகுகள் வழங்குகிற திட்டம் ஏ.ஆர்.டி.சி. மூலமாக வங்கிகள் மூலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, பல காரணங்களினால் இந்த ஆண்டு ஏ.ஆர்.டி.சி. மூலமாகக் கொடுக்கப்பட முடியவில்லை....

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை...

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் இங்கே காட்டிய பில்லில் டாக்டர் கே. சமரசம் என்ற பெயர் போடப்பட்டிருக்கிறது. இது சமரசம் சைக்கிள்களை வாங்கிய ஒன்றா அல்லது அவர் அவைகளை விற்றதைப் பற்றியதா? ஏனென்றால் டு, என்று போடப்பட்டு அதிலே யாருடைய பெயரும் போடப்படவில்லை, 2,000 ரூபாய்க்கு போடப்பட்டிருக்கிறது. சமரசம், காவேரிப் பட்டணம் என்று இருக்கிறது, அது இவருடைய கம்பெனியா அல்லது இவர் வாங்கி மீண்டும் யாருக்காவது விற்றாரா?

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் ஒரு சந்தேகத்தை கிளப்பியிருக்கிறார். நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 400 ரூபாய்க்கு சைக்கிள் கிடைக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சொல்லிவிட்டு, வாங்க முடியும் என்று யாராவது காதிலே பூ வைத்திருப்பவர்களிடம் போய்ச்சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் அன்றைய தினம் ஊருக்குச் சென்றபோது அங்கே உள்ள கடையில் எந்த எந்த சைக்கிள்கள் என்ன என்ன விலைக்கு கிடைக்கிறது என்று கேட்டேன். ஒருகிராமத்திலே உள்ள விற்பனை கடையிலே நான் கேட்டபோது சொன்ன விலைகள் அவை கொட்டேஷன். இன்னும் ஒட்டுமொத்தமாக வாங்க வேண்டுமென்றால் கம்பெனியிலிருந்து வாங்க வேண்டுமென்றால் இன்னும் குறைந்த விலையில் வாங்க முடியும் என்பதை டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கே நிதி அமைச்சர் அவர்கள் காட்டியபோது பில் என்று சொன்னார்கள். அதனால்தான் நான் கேட்டேன். நீங்கள் வாங்கிய பில்லா அல்லது விற்ற பில்லா என்று கேட்டேன். ஏனென்றால் 5, 6 சைக்கிளுக்கு 2 ஆயிரம் ரூபாய் அளவிற்குப் போடப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் சைக்கிள் கடை வைத்திருக்கிறீர்களா அல்லது நீங்கள் வாங்கி விற்றிருக் கிறீர்களா என்று கேட்டேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, அதிலே மிகத் தெளிவாக இருக்கிறது. அவர்கள் கொட்டேஷன் அனுப்பியிருக்கிறார்கள். நான் வாங்கி விற்றுக் கொண்டிருக்க வில்லை. விற்கவில்லை, கடை வைத்துக்கொண்டிருக்க வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: அது பில் அல்ல, கொட்டேஷன் என்று சொல்கிறீர்கள். ஆனால், நிதியமைச்சர் அவர்கள் பேசும் போது பில், பில் என்று சொன்னார்கள். ஆனால், தாங்கள் கொட்டேஷன் என்று சொல்கிறீர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, யாராவது ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பினால் முறைப்படி அவர்களை முதலிலே எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும், ஆனால், அப்படித் தாங்கள் அனுமதிக்கவில்லை, நான் முதலிலேயே எழுந்துநின்று கேட்டேன், தாங்கள் அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்து இனிமேல் அந்த முறையைத் தாங்கள் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே நிதியமைச்சர்அவர்கள் ரப்பர் தொழிற்சாலையைப் பற்றி அறிவித்தார்கள். ஏற்கனவே எங்கள் மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாக அது இருக்கிறதே அதைப்பற்றி என்ன நிலைமை?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதைப்பற்றிச் சொல்கிறேன். அந்த ரப்பர் தொழிற்சாலை எப்படி ஆரம்பிக்கப் பட்டது உங்களுக்குத் தெரியும். அதனுடைய கதி என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும், எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது

அதை நடத்துகிறவர்கள் எந்தக் கதிக்கு ஆளாகியிருக் கிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். அதிலேயும், அங்கே ரப்பர் தொழிற்சாலைக்கான மூலப்பொருட்கள் அங்கே கிடைக்காது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலையை நடத்துவதற்கு இயலாது என்று பீஸிபிலிட்டி ரிப்போர்ட் இல்லை என்று மிகத் தெளிவாகச் சொல்லியதற்குப் பிறகு ரப்பர் விளைகின்ற மாவட்டம் திரு. ஜேம்ஸ் அவர்களின் மாவட்டத்தைத் தேர்ந்து எடுத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு தொழிற்சாலையைத் தொடங்கவேண்டுமென்றால் அங்கே மூலப்பொருட்கள் கிடைக்கின்றனவா என்றும் அதற்கேற்ற அளவிற்கு அந்தப் பகுதி நல்ல பகுதிதானா என்றும் அது மட்டுமல்ல, போதுமான அளவிற்குத் தண்ணீர் வசதியிருக்கிறதா என்றும் இவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலே கிடைக்கிற ரப்பர், குவாலிட்டி ரப்பர், அப்படிப்பட்ட தரமான ரப்பர் வேறு எந்தப் பகுதிலேயும் இல்லை என்ற காரணத்தால் அங்கே தண்ணீர் ஏராளமாகக் கிடைக்கிறது, ஒன்று, மற்றொன்று,

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆதாரங்கள் தேவை என்றார்கள். ஆதாரங்களை, சாட்சியங் களைச் சொல்லி அது குறித்து விசாரிக்க ஒரு விசாரணை கமிஷன் போடுங்கள் அந்த நீதிபதியிடத்தில் அந்த சாட்சியங்களையும், ஆதாரங்களையும் எப்படி கையும் களவுமாக பிடிபட்டார்கள், பிறகு என்னென்ன நடந்தது, எப்படி சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள், மீண்டும் சேர்க்கப்பட்டார்கள் என்ற விவரங்களை எல்லாம் நான் அந்த நிதிபதியிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் கேட்ட கேள்விக்கு பதில் வரவில்லை (குறுக்கீடு). நான் சொல்கிறேன், பதில் வரவில்லை. அவர்கள்...

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, முதல் பட்ஜெட் கூட்டத்தில் குமாரபாளையத்தில் நூல் விநியோகத்தில் நடைபெற்ற ஊழலைப்பற்றி பேசினேன். ஆதாரங்களை முதலமைச்சரிடம் கொடுத்தேன், நடவடிக்கை

எடுப்பதாகச் சொன்னார்கள். அந்த ஆதாரங்கள் எங்கே போயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, நீதி விசாரணைக்கு அனுமதியுங்கள்; அவர்களிடம் சாட்சியங்களைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, முதலமைச்சரிடம் தந்திருக்கிற குறிப்புகள் எங்கே, எப்படி கவனிக்கப்படவேண்டுமோ அங்கே அந்த நிலையில் கவனிக்கப்பட்டுவருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இதைப்பற்றி நான் சொல்கிறேன். இந்த 25,000 ரூபாயை யார் வாங்கினார்? அமைச்சர் வாங்கினார் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் அமைச்சர் பதவியை மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர் பதவியையே இராஜிநாமா செய்யத்தயார் என்று சொல்லியிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவரால் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமல் போனால் அதற்கு என்ன செய்யப்போகிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: நீதி விசாரணையில் எவ்வளவு பொறுப்போடு நடந்துகொண்டீர்கள் என்று இலட்சணம் எல்லாம் தெரியும். ஜனாதிபதியிடம் குற்றச்சாட்டைக் கொடுக்கும்போது எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, சர்க்காரியா கமிஷனில் வாக்கு மூலம் கொடுக்கும் போது அதற்கு எல்லாம் நான் பொறுப்பல்ல, சேலத்திலே உள்ள வழக்கறிஞர் கண்ணன்தான் பொறுப்பு என்று சொன்ன தெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே, இந்தப் பிரச்சினையில் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த ஏற்பாடு செய்யுங்கள்; நான் அங்கே நிரூபிக்கத் தயார்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: எம்.எல்.ஏ. பதவியில் இவ்வளவு பற்று வைத்திருக்கிறார் என்பது இப்போது நான் தெரிகிறது (ஆளும் கட்சியினர் ஆரவாரம்) அது பற்றி மிக்க மகிழ்ச்சி. (குறுக்கீடு). நான் சொல்வதைக் கேட்டுவிட்டு அவர்கள் பதில் சொல்லலாம்.

சர்க்காரியா கமிஷனில் சொல்லப்பட்டது ஜனாதிபதி யிடம் கொடுக்கப்பட்டபோதும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான் மேடைகளில் பேசிய பேச்சின் மூலம் தெரியும். நான் பேசிய பேச்சுக்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

தேவையானால் பத்திரிகையில் வந்திருப்பதைக் காண்பிக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யார், எதற்கு உடன்பட்டவர்களோ அவர்கள் அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்வார்கள் என்று சொல்லியது தெளிவாக வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது என்னுடைய இலட்சணம் எல்லாம் தெரியும் என்றார். என்னுடைய இலட்சணத்தைப் பற்றி நான் கண்ணாடியில் பார்த்துக்கொள்கிறேன்; அவரும் பார்த்துக்கொள்ளட்டும்.

கலைஞர் மு. கருணாநிதி: ஜனாதிபதியிடம் கொடுத்த புகாரிலே நானே எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று நமமுடைய முதலமைச்சர், அன்றைக்கு எம்.ஜி. இராமச்சந்திரன் என்று கையெழுத்திட்டு கொடுக்கப் பட்டிருக்கிறது. நானே பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, சர்க்காரியா கமிஷன் முன்னால் வாக்குமூலம் கொடுத்தபோது நான் அதற்கு பொறுப்பல்ல; சேலம் கண்ணன்தான் பொறுப்பு. அவரைத் தான் கேட்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

எம்.எல்.ஏ. பதவியில் எவ்வளவு ஆசை வைத்திருக் கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். இந்த சட்டமன்றமே செத்துவிட்டது என்று சொன்னவர் பதவி பறிபோகாமல் இருக்க இரண்டு மாதம், மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளியிலே இருந்து கையெழுத்து போட்டுவிட்டு, தவறாமல் சம்பளம் பெற்றுக்கொண்டதை (எதிர்க்கட்சியினர் ஆரவாரம்) இந்த மன்றமும் அறியும்; மக்களும் அறிவார்கள். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் நல்ல முறையில்... (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தரப்பினர் இப்படிப் பேசக்கூடாது (குறுக்கீடு) அவர்கள் தட்டினார்கள்; இங்கே சத்தம் போட்டார்கள். இது ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றால், எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படிச் செய்யலாம் என்றால் தாராளமாகச் செய்யட்டும், செய்து கொண்டே இருக்கட்டும்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: நான் கொடுத்த புகாரில் சில குற்றச்சாட்டுகளை எடுத்துக்காட்டி யிருக்கிறேன். நான் இன்னும் அதைத் தட்டிக்கழிக்கவில்லை. அதுபற்றி யார் சாட்சி சொல்ல முன் வருகிறார்களோ அவர்கள் குற்றத்தை நிரூபிக்க முடியாமல் போய்விட்டால் நிச்சயமாக இந்த பதவி எனக்குத் தேவையில்லை. நான் இதில் பின்வாங்கவில்லை.

இங்கே சொல்ல விரும்புவது, இந்தப் பிரச்சினையின் முடிவு என்ன? நீதி விசாரணை வைக்க சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் மீது குற்றச்சாட்டு. அது பத்திரிகையில் வெளியாகி, அவர்கள் நிரூபிக்கப்பட்டால் பதவியை இராஜிநாமா - சட்டமன்ற உறுப்பினர் பதவியையே இராஜிநாமா செய்யத்தயார் என்கிறார்கள். ஆனால் குற்றஞ்சாட்டியவர் அதை நிரூபிக்க முடியாமல் போனால் இவ்வளவு பெரிய பழியைச் சுமத்தியவர் இராஜிநாமா செய்து, சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டுவிடுவாரா என்று கேட்கும்போது இன்னும் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இந்த சட்டமன்றம் செத்துவிட்டது என்று நான் சொன்னேன்; ஆனால் பணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு போனேன் என்ற சொன்னார்கள். சட்டமன்றம் செத்துவிட்டது என்றால் அது என்ன அடிப்படையில் என்பதை நான் பலமுறை விளக்கி இருக்கிறேன். இரண்டு தலைவர்கள் இருந்த அந்த நிலையில், சட்டமன்றம் சட்டமன்றத்துக்குரிய நியாயமான வரன்முறையில் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி என்று தெளிவாகக் கூறினேன்

அப்போது நான் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தேன். பிறகு இந்த சட்டசபைக்கு மீண்டும் உயிர் வரும் என்ற எண்ணத்தில் வழக்கு மன்றத்திற்கு போய் இருக்கிறேன். ஆட்சியும் இறுதியில் டிஸ்மிஸ் ஆகிவிட்டது. நான் வாங்கிய சம்பளமும் நிறுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று சொல்கிறேன். நான் இப்போது இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் ஜனநாயகத்தில் நாம் எதை செய்யவேண்டும் என்று மக்களிடத்தில் சொல்கிறோமோ அதை நீங்களே செய்யுங்கள் என்று மக்கள் முன் வந்து ஆதரவு

தந்தபோது என்னால் முடியாது என்று போகின்ற கோழைத்தனம் எங்களுக்குக் கிடையாது; நாங்கள் அதற்குத் தயாராக இல்லை. ஆகவே பதவி ஏற்றுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். மீண்டும் அடக்கத்தோடும், மரியாதையோடும், பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த எம்.ஜி.ஆருக்கு இத்தகைய பதவிகளில் ஆசை கிடையாது. முன்பு எனக்குக் கிடைத்த எம்.எல்.சி. பதவியையே ராஜினாமா செய்தேன். அப்போது எத்தனையோ பேர் கேட்டார்கள். அப்போது நான் வேண்டாம் என்று சொல்வதற்குரிய காரணங்களைச் சொன்னேன். அப்போதிருந்த நல்ல கருணாநிதிக்கு அவைகள் அனைத்தும் நிச்சயமாகத் தெரியும். ஆனால் இன்றைய தினம் இந்த அரசாங்கத்தின் மீது எப்படியாவது பழி சுமத்திவிடவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறெல்லாம் சொல்கிறார்கள். அன்றைய தினம் நான் எம்.எல்.சி. பதவியை வேண்டாமென்று மறுத்து, அண்ணா அவர்களிடம் நான் என்ன சொன்னேன் என்பது அவர்களுக்குத் தெரியும். இப்போது நடைபெறுகின்ற இந்த விவாதங்களின் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டிய உண்மை தெரிந்தாக வேண்டும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே கேட்ட கேள்வியை எழுத்தில், பெரிய கொட்டை எழுத்தில் அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்கிறது. விசாரணையில் இருந்து இந்த அரசு பின்வாங்காது. பின்வாங்க நாங்கள் தயாராக இல்லை. நீதி விசாரணை நடத்துவதற்காக ஒரு நீதிபதியை நியமிப்பதற்கு நாங்கள் தயார். ஆனால் அப்படிப் பணம் 25 ஆயிரம் ரூபாயை அமைச்சராக இருக்கின்ற திரு. சௌந்திரராஜன் அவர்கள் பெற்றவர்கள் என்பது நிரூபிக்கப்படுமானால் அவர் மந்திரி பதவியையும் ராஜினாமா செய்துவிட்டு, சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்ய தயாராக இருக்கிறார். ஆனால் அவர் மீது இந்தப் பழியைச் சுமத்துவதற்கு யார் காரணமாக இருக்கிறாரோ, இங்கே உட்கார்ந்துகொண்டு கேள்வியைக் கேட்டுக்கொண்டு இருக்கிறாரோ, அவர் திரு. சௌந்திரராஜன் பணம் வாங்கினார் என்பதை நிரூபிக்காவிட்டால், அவர் தனது பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒரு விவகாரத்தில் ஏற்படுகிற முறைகேடுகளை வைத்துத்தான் அதாவது அந்த முறைகேடுகள் நிரூபிக்கப்படுமேயானால் அதிலே ஏதோ நடந்திருக்கிறது என்பது தெரியவருகிறது.

என் மீது எத்தனைக் குற்றங்களை இன்றைய முதலமைச்சர் சுமத்தினார்? சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அவ்வாறு நிரூபிக்கப்படாத குற்றங்களுக்காக அந்தக் குற்றங்களைச் சுமத்திய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜீனாமாச் செய்யவில்லை. சர்க்காரியா கமிஷன் அறிக்கை வந்ததற்குப் பிறகும் அவர் ராஜினாமா செய்யவில்லை. நான் எதிர்க்கட்சித் தலைவராக இங்கே வந்து இருப்பது அவருக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கின்ற காரணத்தால்தானோ என்னவோ நான் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று விரும்புகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது.

ஆகவே இப்போது கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரணை செய்கின்ற வகையில் நீதிபதியை நியமிக்க வேண்டும். இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. மேலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, அப்போது அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்காக நீதிபதியைப் போடவேண்டும் என்றும் அதுவும் வேறு மாநிலத்திலே உள்ள நீதிபதியைப் போட வேண்டும் என்றும் சொன்னார்கள். ஆகவே அது போன்று வேறு மாநிலத்திலே உள்ள நீதிபதியை இப்போது சொல்லப்படுகின்ற இந்த குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு நியமிக்க தயாராக இருக்கிறார்களா? அப்படி அமைத்தால் அப்போது அதற்கான ஆதாரங்களைத்தரத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறேன் என்று என் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தவறாக எண்ணவேண்டாம்.

சர்க்காரியா கமிஷனுக்கு அனுப்பப்பட்ட விவகாரத்தை நான் எடுத்து வைக்க வேண்டிய கட்டாயம் எனக்கு

நேர்ந்தபோது நான் அப்படிப்பட்ட அறிவிப்பை நான் செய்யவில்லை. ஆனால் இங்கே கலைஞர் கருணாநிதி அவர்கள் வரவேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சிகள் வரக் கூடாது என்று கருதுவது ஜனநாயகக் கோட்பாடுதான். ஆனாலும் விவரம் தெரிந்தவர்கள், முன்பு பதவியில் இருந்தவர்கள் சட்ட மன்றத்திற்கு வந்தால் ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்பது மட்டுமல்ல, அவர்களது அனுபவத்தின் மூலமாக கிடைக்கின்ற விளக்கங்கள் நன்மை உடையதாக இருக்கும். அவர்கள் கேட்கின்ற கேள்விகள் உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தில் மாறுபாடு கிடையாது. ஆனால், நான், அவர் குறிப்பிடுகிற அந்தச் சமயத்தில், பதவியை ராஜினாமாச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. ஆகவே அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கின்ற நிலைமை வேறு.

அன்றைக்கு குற்றச்சாட்டுகள் நிறைய சொல்லப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் தள்ளிவிடவில்லை. அதிலே இருக்கின்றவைகளில் சிலவற்றை விசாரிக்கலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இதுதான் நிலைமை. அதாவது நானும், சி.பி.ஐ.யும் சேர்ந்து கொடுத்த குற்றச்சாட்டுகளை முழுமையாகவும், சரியாகவும் விசாரியுங்கள் என்று கேட்டோம்.

அப்போதே இந்தக் கேள்வியை, அதாவது நீ ராஜினாமா செய்யத் தயாரா என்று கேட்டிருந்தால் மகிழ்ந்திருப்பேன். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அப்போது அதாவது நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் மக்கள் மேடைகளில் எல்லாம் நாங்கள் வந்து வாதாடத் தயாரா என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அப்படி நடைபெற்றிருந்தால் விபத்து போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படும் என்பதையும் நாங்கள் சொல்லியிருந்தோம்.

அதைவிட இங்கே உட்கார்ந்து இருப்பதால் – இதில் என்னைவிட மகிழ்ச்சியடைபவர் யாரும் இருக்க முடியாது. இங்கே நேருக்கு நேர் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதில் எனக்கு அச்சமும் இல்லை. இதில் ஏக்கப்படுவதற்கும் ஒன்றுமில்லை. இதனால் அதிர்ந்து

போகவும் இல்லை. அவர்கள் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் இப்படியே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாலும் அத்தனை ஆண்டுகள் நானும் மகிழ்ச்சி பெறுவேன். இங்கே நீங்கள் வந்தது எங்களுக்கு இடைஞ்சலாக இல்லை. உதவியாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேடையில் பேசுவதைவிட இங்கே வந்து நேருக்கு நேர் பேசுவது மிகவும் நல்லது என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

திரு. சு. சுப்பு: முதலமைச்சர் அவர்கள் சொல்வது சரிதான். குற்றச்சாட்டு சொல்பவர்கள், பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். தவறுதலாக இருந்தால் அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்வது நியாயம்தான். அந்த அடிப்படையில்தான் பொது வாழ்வில் ஈடுபடுவோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டால், அவை நிரூபிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் குற்றஞ்சாட்டியவரும் தண்டிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை ரத்து செய்துவிட்டு, இப்போது குற்றச்சாட்டு சொன்னதற்காக தண்டனையை ஏற்றுக்கொள்ள தயாரா என்று 'சேலஞ்சு' பண்ணுவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? They are stopped. இருந்த சட்டத்தையும் ரத்து செய்துவிட்டு இதைப்பற்றிக் கேட்பதற்கு இவர்களுக்கு உரிமையே கிடையாது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: நண்பர் சுப்பு அவர்கள் நல்ல வழக்குரைஞர், அதற்காக நான் பாராட்டு கின்றேன். ஆனால் அங்குள்ள நிலைமை என்ன, நீதி விசாரணை என்று வழக்குமன்றத்தின் முன்னால் யாரும் நிறுத்தப்பட வில்லை என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். நீதி விசாரணைக்காக என்னென்ன ஆதாரங்கள் இருக்கின்றதோ அவைகளை சர்க்காரியா கமிஷன் முன்னால் சொன்னதுபோல் இங்கு சொல்ல முடியாது. மக்கள் கொடுத்த தகவல் இது என்று சொல்லலாம். இப்போது நிலைமை, நீதி விசாரணை தருகின்றோம். வெளிமாநிலத்திலிருந்து நீதிபதி கொண்டுவரப் படவேண்டும் என்றாலும் அதற்கும் தயாராக இருக்கின்றோம்.

ஆனால் ஒரு அமைச்சர் மீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டு அது பத்திரிகைகளில் எல்லாம், விளம்பரம் செய்யப்பட்டப் பிறகு, பொறுப்பேற்றுக்கொண்டு, அதில் உண்மையிருந்தால் நாட்டுக்காக யாராவது நடவடிக்கை எடுத்தாகவேண்டும். அதே நேரத்தில் நீங்களும் ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும். இதன் மீது நான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பொருள், இந்த அரசு என்று சொல்லும்போது, இந்த மாமன்றம் நடவடிக்கை எடுக்கிறது என்று பொருள். அப்படி வரும்போது, இந்த சட்டமன்றம் அவ்வாறு தீர்ப்பளிக்கிறது என்பது பொருள். ஆகவே இதையும் ஒன்று சேர்த்து, அதற்கு உயிரூட்ட விரும்பினாலோ அல்லது அது செத்துபோனது என்று கருதக்கூடிய வகையில், இத்தனை ஆண்டுகள் அதற்கென்று இருந்த நீதிபதி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்த நாட்கள் தீர்ந்த பிறகு, அதைவிட்டுவிட்டபிறகு, இப்போது நாங்கள் நேரடியாக வழக்குமன்றத்திற்கு போகலாம் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். நீதி விசாரணை வைப்பதை மறுக்கவும் தயாராக இல்லை. அமைச்சர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு அது விளம்பரம் செய்யப்படுகிறபோது அதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்கிறபோது, மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் பழி சுமத்துவேன் என்று சொல்லுகின்ற நிலை இருப்பது எப்படி பொருத்தமாகும் என்பதை தெரிவிப்பதோடு, மீண்டும் சொல்லுகிறேன், மாண்புமிகு அமைச்சர் செளந்தரராஜன் அவர்கள் இப்போதும் தயாராக இருக்கிறார்கள் 25 ஆயிரம் ரூபாய் வாங்கினார் என்று நிரூபித்தால் அவர் ராஜினாமா செய்யத் தயார். சட்டமன்ற உறுப்பினர் பதவியையும், மந்திரி பதவியையும், மற்றவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத்தான் கேட்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போது ஸ்பெஷல் கோர்ட் எல்லாம் போடப்படுகிறது. அமைச்சர் செளந்தரராஜன் மீது இன்னும் பல குற்றச்சாட்டுகளை சுமத்த நான் தயாராக இருக்கிறேன். முதலமைச்சரிலிருந்து இன்னும் 5, 6 அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்த என்னிடத்தில் குற்றப்பட்டியல்

இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் அனுமதியைப் பெற்று ஒரு ஸ்பெஷல் கோர்ட் போடுங்கள். வெளி மாநில நீதிபதியைப் போடுங்கள். அங்கே இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் தருகிறேன். அங்கே அவைகள் நிரூபிக்கப்படவில்லை என்றால் நான் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவகாரங்கள் தொடர்ந்து எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: இதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் ஸ்பெஷல் கோர்ட் என்கின்ற அளவில் முக்கியமான தனிப்பட்டவர்கள் சிலரை பழிவாங்குகின்ற முறையில் ஏற்படுத்துவதை புறக்கணித்து டெல்லியில் எங்கள் ஆட்சேபணையை தெரிவித்து அங்கே ஜனதாவை எதிர்த்து வாக்களித்திருக்கிறோம், தனிப்பட்டவர்களுக்காக இதை உருவாக்கக்கூடாது என்று நாங்கள் வாக்களித்திருக்கிறோம். ஆகவே ஒட்டுமொத்தமாக அங்கே கொடுக்க இருப்பதை யெல்லாம் நிச்சயமாக பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களிடமோ – ஜனாதிபதியிடமோ கொடுக்கலாம்.

பிரதம அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கலாம்: அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். ஜனாதிபதி அவர்களுக்குக் கொடுக்கலாம்; அவர்களும் நடவடிக்கை எடுப்பார்கள். வேண்டுமென்றால் எங்களை டிஸ்மிஸ் செய்யலாம், ஆதாரம் இருந்தால். எனவே, தயவுசெய்து, உடனடியாக இந்தக் கருத்தினை அவர்கள் எழுதவேண்டும், பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு, சாட்சியங்களோடு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (திரு. ஜே. ஜேம்ஸ், மற்றும் இரு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச முற்படல்) ஜேம்ஸ், நோ. நேரமாகிவிட்டது. நான் அனுமதிக்க இயலாது. இப்படியே வளர்ந்து கொண்டிருக்குமானால், சபையின் மற்ற நிகழ்ச்சிகள் என்ன ஆவது? மன்னிக்க வேண்டும். நான் அனுமதிக்க இயலாது.

1978–79ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றிருக்கிறது:–

முன்பு, பலகோடி இந்துக்களின் வாக்குகளை பெற்று நாம் வந்திருக்கிறோம். அவர்களுடைய மனதை புண்படுத்துகின்ற வகையில் சங்கராச்சாரியார் இடத்திற்கு எதிரே பெரியார் சிலையை வைத்தே தீருவோம், உங்களுக்கு தெரிந்ததை பாருங்கள் என்று சொன்னால் என்ன பொருள்? இன்றைக்கு இந்துக்கள் இல்லாமல், ஒரு இஸ்லாமியக் கோவிலின் முன்னால் எல்லா மதமும் ஒன்று என்று நினைக்கிறவன் நான்–நான் கேட்டுக் கொள்வது ஒரு இஸ்லாமியக் கோவிலின் முன்போ, அல்லது ஒரு மாதா கோவிலின் முன்போ இந்த மாதிரி சிலை வைப்போம் வைத்தே தீருவோம் என்று பேசியிருந்தால் என்னவாயிருக்கும்? இந்துக்கள் ஏழையாக இருக்கலாம். ஆனால் கோழையாக இருந்தது நினைத்து, இந்து மதத்தை எதிர்த்து, நகையாடுவதும், ஏளனம் செய்வதும் இப்படி அடிக்கடி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இந்த சவாலை எதிர்ப்பதற்கு இந்த இந்துக்கள் ஏழையாக இருந்தாலும், அவர்கள் கோழைகளாக இல்லை என்பதை எடுத்துச் சொல்வதோடு, அதை எதிர்ப்பதற்கு, அதை சந்திப்பதற்கு கந்தசாமி போன்றவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் (சில உறுப்பினர்கள் கைத்தட்டினர்...) தயவு செய்து கைதட்டி ஆரவாரம் செய்ய வேண்டாம். இதை நான் இந்துக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இதை டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களை வம்புக்கு இழுக்க வேண்டாம், சாது மிரண்டால் காடு தாங்காது என்று சொல்வார்கள், அதுபோல...

கலைஞர் மு. கருணாநிதி: தேசீய பார்வார்டு பிளாக் கட்சியின் தலைவர் கந்தசாமி அவர்கள், ஏதோ சங்கராச்சாரியாருக்கு எதிராக பெரியார் சிலையை வைக்க வேண்டும் என்று நாங்கள் சொல்வதாக திரித்துக் கூறுகிறார். ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, திராவிடக் கழகத் தோழர்களால் அனுமதி கேட்கப்பட்டது. அனுமதியும் கொடுக்கப்பட்டது. சங்கராச்சாரியார் மடத்திற்கு

எதிராக சிலை வைத்தேதான் தீருவோம் என்ற சவாலும் விடவில்லை. சங்கராச்சாரியார் மடம் இருக்கின்ற இடத்திற்கும், பெரியார் சிலை வைக்க வேண்டும் என்று கோரப்படுகிற இடத்திற்கும் இடையில் 120 அடிக்கு மேலாக வித்தியாசம் இருக்கிறது. சங்கராச்சாரியார் மடம் இருக்கின்ற சாலை வேறு, சிலை வைக்கவேண்டும் என்று கேட்கின்ற சாலை வேறு. அங்கிருக்கின்ற தேர் வீதியும், இன்னொரு வீதியும் சந்திக்கும் இடத்தில்தான் சிலை வைக்கவேண்டும் என்று இடம் கோரப்பட்டிருக்கிறது. ஆகவே சங்கராச் சாரியாரை எதிர்த்து சிலை வைக்கவேண்டும் என்ற கோரிக்கை அல்ல இது என்பதை கந்தசாமி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மேலும் பெரியார் அவர்கள் மத மூட பழக்க வழக்கங்களை எதிர்த்து வந்திருந்தாலும், தன்னை இந்து என்றோ, முஸ்லீம் என்றோ, கிருஸ்துவன் என்றோ ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும், கடைசி வரை இந்து மதத்தில்தான் இருந்தார். இருந்தாலும், இந்து மதத்திலுள்ள மூடநம்பிக்கைகளையும், ஆஸ்தீக கொள்கைகளையும் எதிர்க்கின்ற உரிமை பகுத்தறி வாளர்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட பகுத்தறிவாளராக விளங்கிய பெரியாருக்கு சிலை வைப்பதற்கு சங்கராச்சாரியார் அவர்களுக்குக் கூட நிச்சயமாக மறுப்பு இருக்காது. ஏதோ ராகவன். இருசப்பன் என்பவர்கள் கையெழுத்திட்டு குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் மறுப்பு தெரிவித்தார்கள். அதை அன்றைக்கு ஆட்சியில் இருந்த ஆணையாளர், கலெக்டர் இதற்கு அனுமதி மறுத்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற பிரச்சினையைப் பற்றி நேற்று பேசிய போதுதான் பிரச்சினை பெரிதாக வளர்ந்தது. பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயரை மதுரை பல்கலைக் கழகத்திற்கு வைக்கவேண்டும் என்று மதுரை மாவட்டத்தி லுள்ள முக்குலத்தோர் மக்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போதுகூட காமராஜ் அவர்களுக்குப் பெருமை தரவேண்டும் என்று அவர்களுடைய பெயரை மதுரை பல்கலைக் கழகத்திற்கு பெயர் வைத்த நேரத்திலும், அதை எதிர்த்து இது போன்ற தந்திகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, பெரியார் சிலை வைக்கும் பிரச்னையில் இந்துக்கள் என்று முக்கியத்துவம் கொடுத்து

இந்தப் பிரச்சினையை வளர்க்கக்கூடாது என்று கந்தசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பெரியார் அவர்களுக்கு விரோதமாக செயல்பட வேண்டும் என்று தந்திகள் வந்திருப்பதாக நான் கூறவில்லை. காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட இருக்கும் இடத்தில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இராது, 120 அடி இடைவெளியிலிருக்கும் என்று குறிப்பிட்டார்கள். 120 அடி என்றால் எவ்வளவு தூரம் இருக்கும், சாதாரணமாக பேசுகின்ற கூட்டத்தில் கூட சிறிய அளவில் தூரத்தில் இருக்கின்ற இடங்கள் கூட ஆட்சேபகரமானவை என்று சொல்லியிருக்கிறார்கள். மனுக்கள் கொடுத்திருக்கிறார் என்றால் எல்லோரும் சேர்த்து கொடுக்க இயலாது. பொறுப்புள்ள ஒன்றிரண்டு பேர்கள்தான் மனுக்கள் கொடுக்கமுடியும். அங்கிருக்கின்ற உணர்வுதான் முக்கியம். அந்த உணர்வை தெரிவிக்கின்ற முறையில் ஒன்றிரண்டு பேர்கள் மனு கொடுக்க கூடும்.

அதைப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, பல சாதனைகள் செய்திருக்கிறார்கள் கடந்த காலத்தில், அப்போது 1974இல் காஞ்சிபுரம் முனிசிபாலிட்டி தீர்மானம் போட்டிருக்கிறது. 1976இல் ஜனவரி வரையில் அவர் ஆட்சி இருந்தது. அதற்குள், அந்த இரண்டாண்டு காலத்தில் எத்தனையோ சாதனைகளைச் செய்திருக்கலாம். யார் தடுத்தார்கள்? அந்தக் காலத்தில் எல்லாம் விட்டுவிட்டு, இப்போது வேண்டாம். ஏன் இப்படி உத்தரவு பிறப்பித்தீர்கள் என்று இப்போது ஏன் கேட்க வேண்டும்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகப் பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. எனவே, அந்த இடத்தில் வைத்து ஒரு குழப்பமான நிலைமையை உருவாக்குவதற்கு ஆளாக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: 74, 76 என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், 74ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்திலேதான் அதற்கான அனுமதி, நகராட்சிக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. பல இடங்களில் கல்நாட்டு விழாச் செய்து விட்டு, பல பெரிய கட்சிகளாலேகூட அதனை நிறைவேற்று வதற்கு 3, 4 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. திராவிடக்

கழகத்திற்கு அப்படிப்பட்ட வசதியில்லை. எனவே, அந்த ஓராண்டு காலத்திற்குள் இதனைச் செய்வதற்கு முடியாமல் போய்விட்டது.

திரு. கே. கந்தசாமி: திராவிடக் கழகத்திற்கு அப்படிப்பட்ட வசதியில்லை என்று சொல்வது தப்பு. தந்தை பெரியார் அவர்களுக்கு கோடிக்கணக்கான பணம் இருப்பது நாட்டுக்குத் தெரியும். அத்தனைக்கும் மேலாக கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கிறார்கள். அவர் விரல் அசைத்தால், சிலை வந்திருக்கும். விளக்கத்திற்கு அவர் அப்படிச் சொல்லலாம். வாய்ப்பு நிறைய இருந்தது. எனவே, இதை ஒரு பர்சனல் சேலஞ்சாக எடுத்துக்கொள்ளாமல், ஏற்கனவே பல இடங்களில் மக்களிடையே பேரணாம்பேடு, புளியந்தோப்பு போன்ற இடங்களில் மதமாச்சரியங்களும், இனக் கலவரங்களும் ஏற்பட்டிருக்கின்றன, அது போன்று விபரீதங்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான்.

கலைஞர் மு. கருணாநிதி: மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு, காமராஜ் அவர்களுடைய பெயர் வைத்தது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

திரு. கே. கந்தசாமி: மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அந்தப் பிராந்தியத்திலே தியாகம் செய்த தேவர் அவர்களுடைய பெயர் குறிப்பிடவேண்டும் என்ற கருத்து பொது மக்களிடையே இருந்தாலும், சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னாலும், இதிலே கருப்பையா நாடார் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே, இது பணத்திற்காகவோ, இனத் துவேஷத்திற்காகவோ அல்ல. அருள்கூர்ந்து கலைஞர் அவர்கள் இதற்கு வேறு கலர் கொடுக்க முயற்சிக்கக்கூடாது. இனத் துவேஷத்திற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. கருப்பையா நாடார் கைது செய்யப்பட்டார். ஆகவே, நாடார் இனத்தவர் இதற்கு எதிர்ப்பு என்று வரக்கூடாது. மற்றும் சோலைக் கொம்பன் என்பவர் கைது செய்யப்பட்டார். இன்னும் சிலர் கைது செய்யப்பட்டார்கள். அதையெல்லாம் சொல்லி முடியாது. ஆகவே இதிலே இனத் துவேஷம் என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிரச்சினையை சீக்கிரம் முடிதுதுவிடுங்கள். அதன் மீது

அமைச்சர் பதில் சொல்லவேண்டும். 1–1–58க்குள் முடிக்க வேண்டும். டிமாண்டுகளை எடுத்துக்கொண்டு. ஓட்டிற்கு விடவேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி: முடித்து விடுகிறேன். ஆகவே, மக்களிடையே அப்படி ஒரு எழுச்சியிருந்தது. அதை அரசு மறுபரிசீலனை செய்தது. மதுரை போன்ற வார்த்தையை சேர்த்துக் கொள்வது என்று சொன்னோம். பொதுமக்களின் அந்த உணர்வுக்கு மதிப்பளித்து, இந்த அரசு நடந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். போராட்டம் நிறுத்தப்பட்டது. இதிலே இனத் துவேஷமோ மத சம்பந்தமோ இல்லை, மக்கள் உணர்வுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதை ஒரு பெரிதாக்க வேண்டாம். மக்கள் உணர்வுதான் முக்கியம். எனவே. அங்கே தந்தை பெரியார் சிலை வைத்து, குழப்பமோ, கலவரமோ ஏற்படுவதற்கு நாம் காரணமாக இருக்கவேண்டாம் என்று தெரிவித்து அமருகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இறுதித் துணை மானியக் கோரிக்கையில் 192 கோடி ரூபாய்க்கான அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசின் கவனத்திற்கு ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அளவுக்கு மானியக் கோரிக்கை கேட்கின்றபோது, நாட்டில் இப்போது இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி இந்த அரசு சற்றுச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது. பல்வேறு பிரச்சினைகள், சிறு அளவில் ஆரம்பித்து, அவைகள் ஆரம்பத்திலேயே தீர்க்கப்படாமல் இருந்த காரணத்தினால், பெரிய பிரச்சினைகளாக இன்று மாறியிருக்கிறது, உருவெடுத்திருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

உரை : 18 09.07.1980

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையிலே அமர்ந்தபோது வாழ்த்துகின்ற வாய்ப்பினை நான் பெற இயலவில்லை என்றாலும், தாமதமாக வாழ்த்தினாலும் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு தங்களையும் துணைத் தலைவரையும் வாழ்த்தி, நம்முடைய நிதியமைச்சர், அன்புக்குரிய நாவலர் அவர்கள் இந்த அவையின் முன்னால் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை குறித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை எடுத்து இயம்ப கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு ஆளுங்கட்சித் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும், தோழமைக் கட்சிகளின் சார்பிலும் பேசிய பல தலைவர்களும் உறுப்பினர்களும் இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து அடைமொழிகளைத் தந்து அமர்ந்திருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலே ''பொய்மான் கரடு'' என்றும் ஆளுங் கட்சி தரப்பில் ''புள்ளிமான் விளையாடும் பூந்தோட்டம்'' என்றும் இப்படி பல்வேறுவிதமான அலங்கார சொற்களுக் கிடையே இரு தரப்பிலும், தோழமைக் கட்சிகள் சார்பிலும் வார்த்தைகள் விளையாடி இருக்கின்றன இந்த மாமன்றத்தில்.

இது சப்ஜக்டே இல்லாத பட்ஜெட் என்று நண்பர் துரை முருகன் கூற, 'ஆப்ஜக்டே' இல்லாமல் அவர் கூறுகிறார் என்று ஆளுங்கட்சி சார்பிலேயிருந்து இன்னொருவர் மறுத்துக் கூற இப்படியும் வாதங்கள் நடைபெற்றிருக்கின்றன.

நம்முடைய நாவலர் அவர்கள் பேசும்பொழுது பேச இருக்கிற ஒரு கருத்தை நான் முன்கூட்டியே எடுத்துக் கொள்கிறேன் என்று அவர் கருதக் கூடும். ஏனென்றால், அவர்

சொல்வார் என்று எனக்கு தெரியும். நீண்ட நெடுங்காலமாக, ஒன்றல்ல, இரண்டல்ல, 40 ஆண்டுக் காலத்திற்கு மேலாக அவரோடு இளமை முதல் பழகியவன் என்ற முறையில் அவர் என்னென்ன பேசக்கூடும், என்னென்ன பாணியிலே பேசக் கூடும் என்பதை நான் அருகிலிருந்தே கவனித்தவன். எனவே பட்ஜெட்டுக்கு அவர் விளக்கம் கூறாமல் இருக்கமாட்டார். அதற்கான குறிப்புகளும் அவை உறுப்பினர்களுக்குத் தரப்பட் டிருக்கின்றன. இந்த அவையிலே வைக்கப்பட்டிருப்பது பட்ஜெட்டே அல்ல. யாரும் திடுக்கிடத் தேவையில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டிலே நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தவர் அந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை ஒரு பையிலே போட்டு எடுத்துக் கொண்டு அவைக்கு வர அவர் வரவு செலவுத் திட்டத்தைப் போட்டு வைத்துக் கொண்டு வந்த அந்த பைக்குப் பெயர் தோல் பைக்குப் பெயர் பட்ஜெட் என்று அழைக்கப்பட்ட காரணத்தால், அதையே பின்பற்றி அனைவருமே தாங்கள் கொண்டு வருகின்ற வரவு செலவு திட்டத்தை ஒரு தோல் பையிலே போட்டுக்கொண்டு அவைக்குள்ளே நுழையவும் அது பட்ஜெட் என்கிற வழக்கமான பெயரைப் பெறவும் உரியதாக ஆயிற்று.

பட்ஜெட் ரகசியம் வெளியே வந்துவிடக் கூடாது. நிதி நிலை அறிக்கையில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் முன் கூட்டியே அது வெளியே வந்துவிட்டால், நிதி அமைச்சரின் பதவிக்கே கூட ஆபத்து என்கிற காரணத்தால், இது ஒரு காலத்தில் தோல் பையிலே வைத்து எடுத்துவரப் பட்டது. அந்தத் தோல் பையையும் சேர்த்துக் திருடிக் கொண்டு போகக் கூடியவர்கள் நாட்டிலே அப்போது இல்லாத காரணத்தால் அது தோல் பையின் அளவிலேயே இருந்தது. எனவே, பட்ஜெட் என்பது நிதி அமைச்சர் அவர்கள் அந்த ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை அளிக்கிறார். அதற்கான குறிப்பேடுகளை மன்ற உறுப்பினர்களுக்குத் தருகிறார். அது குறித்து விவாதம் நடைபெறுகிறது. அந்த விவாதத்திற்கு பிறகு ஆளுங்கட்சித் தரப்பில் நிதி அமைச்சர் தன்னுடைய விளக்கங்களைத் தருகிறார். எடுத்துச் சொல்லப் பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஆக்கப்பூர்வமான காரியங்களை அரசின் சார்பில் நடத்துவதற்காக உதவிகரமான

ஒரு பணி இந்த மாமன்றத்தில் நடைபெறுகிறது என்ற அளவிலேதான், இந்த விவாதம் கடந்த சில நாட்களாக இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நம்முடைய வரவு-செலவுத் திட்டம் கிட்டத்தட்ட இந்த ஆண்டு 1,000 கோடி ரூபாயை எட்டி இருக்கிறது என்பது பெருமைக்குரிய, மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். 1938 – 39 ஆம் ஆண்டில் வரவு-செலவு மதிப்பீட்டின்படி, வருவாய்க் கணக்கிலே மொத்த வருவாய் 16 கோடியே 13 லட்சம் என்றும் செலவு 16 கோடியே 10 லட்சம் என்றும், நிகர உபரி 3 லட்சம் ரூபாய் என்றும், ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பு 16 கோடி ரூபாய்தான் நம்முடைய வரவுசெலவு திட்ட மொத்தக் கணக்கு என்றிருந்த நிலை மாறியது.

காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தை ஆண்டபோது நிதி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு ஆண்டு 100 கோடி ரூபாய்க்கு வரவுசெலவு திட்டத்தைத் தயாரித்து, நான் 100 கோடி ரூபாய்க்கு வரவுசெலவு திட்டத்தை முதன் முதலாக இப்பொழுது இந்த மாமன்றத்திலே வைப்பதிலே பெருமைப்படுகிறேன் என்று புளகாங்கிதம் உற்றார். (குறுக்கீடு). திருத்தியதற்கு நன்றி, அவரால் 100 கோடி ரூபாய்க்கு வைக்க முடியாமல் 100 கோடி ரூபாய்க்கு வைக்க எண்ணியிருந்தேன், ஆனால் 90 கோடி ரூபாய்க்குத்தான் வைக்க முடிந்தது என்று அவர் சொன்னார். இதே நிலைதான் நம்முடைய நாவலருக்கும். அவர் கூட 1,000 கோடி ரூபாய்க்கு இங்கே வரவு செலவு திட்டத்தை வைத்திருக்கலாம். ஒரு 16, 17 கோடி ரூபாய் குறைந்துவிட்ட காரணத்தால் 1,000 கோடிக்கு வரவு-செலவுத்திட்டத்தை இங்கே வைக்கப்பட வழியில்லாமல் இந்த ஆண்டு போய்விட்டது.

1967-68ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலகட்டத்தில் வருவாய் கணக்கிலே 233.39 கோடி ரூபாயும் செலவு 233.33 கோடி ரூபாயும் நிகர உபரி 6 லட்சம் ரூபாயும் என்ற நிலை இருந்தது. பிறகு 1975-76லே இது மேலும் உயர்ந்து. வருவாய்க்

கணக்கிலே 563.36 கோடி ரூபாய் என்றும், செலவு 557.9 கோடி ரூபாய் என்றும் உபரி 5.44 கோடி ரூபாய் என்றும் ஆயிற்று.

7வது நிதிக் குழு அளித்த சிபாரிசுகளின் விளைவு களாலும் நம்முடைய மாநிலத்துக்கு வரவேண்டிய வரி, வருவாயினுடைய பங்கு கடந்த 2 ஆண்டுகளிலே மிக அதிகமாக உயரத் தொடங்கிய காரணத்தினாலும் இந்த ஆண்டு வரவுசெலவு திட்ட மதிப்பீட்டின்படி வருவாய் கணக்கிலே வருவாய் 982.66 கோடிய ரூபாயும் செலவு 967.27 கோடி ரூபாயும் உபரி 15.3 கோடி ரூபாயும் என்று குறிப்பிடப்பட்டு, அனைத்துக் கணக்குகளையும் மொத்தமாகப் பார்க்கும்போது நிதி நிலை அறிக்கையிலே எல்லா கணக்குகளை ஆண்டின் வரவு-செலவில் பார்க்கும்போது இறுதியில் உபரி 33 லட்சம் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஆனால் இங்கே தரப்பட்டுள்ள 1980-81ஆம் ஆடுக்கான ''நிதி நிலை குறிப்பில்'' 33 லட்சம் ரூபாய் உபரி என்று போடுவதற்கு பதிலாக 6வது பக்கத்தில் மைனஸ் 33 லட்சம் என்று தமிழறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதை நிதி அமைச்சர் வாயிலாக அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏனென்றால் உபரியை ''மைனஸ் 33'' என்று போடமாட்டார்கள். ''பிளஸ் 33'' என்று போடவேண்டும். நான் தமிழில் தரப் பட்டுள்ள அறிக்கை பற்றி குறிப்பிடுகிறேன். எனவே இந்தக் குறைப்பாட்டை அதிகாரிகள் நீக்கிக்கொள்ளவேண்டியது அவசியம். பல நேரங்களில் ஆங்கில ஏட்டிற்கும், ஆங்கிலத்தில் தரப்படுகிற அறிக்கைகளுக்கும், தமிழில் தரப்படுகிற அறிக்கைகளுக்கும், இடையே இப்படிப்பட்ட பலத்த வேறுபாடு உள்ளன என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக் காட்டப்படும், அது திருத்திக் கொள்ளப் படவில்லை என்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்று. உபரியாக இருந்தத் தொகை எவ்வளவு என்பதை ''பிளஸ்'' என்று கூட்டல் அடையாளம் போட்டுக்காட்டுவதற்கு பதிலாக ''மைனஸ்'' என்று கழித்தல் அடையாளம் போட்டு இருப்பது மிக மிகத் தவறாகும்.

நிதிநிலை அறிக்கையின் 52வது பக்கத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கும் திட்ட நிதி உதவி குறைந்து கொண்டே வருவதன் காரணமாக தமிழ்நாட்டின் நபர்வாரி திட்டச் செலவும் குறைந்து வருகிறது என்று நமது நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்திற்கு ஒவ்வொரு 5 ஆண்டு திட்டத்திலும், நாம் கேட்கிற நிதி ஒதுக்கீடு தொகை கொடுப்பது இல்லை. திட்டங்களுக்காக மாநில அரசுக்கு மத்திய அரசின் உதவி போதுமான அளவு கிடைக்காவிட்டாலும் தமிழக அரசு திட்டச் செலவோடு, திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகளுக்கு தன்னுடைய சொந்த முயற்சிகளில் வருவாயைப் பெருக்கி, கணிசமான தொகை செலவழித்து தமிழகத்தின் திட்ட அளவை பெருக்கி வரவேண்டும் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டவும் வேண்டுகோளாக வைக்கவும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, அப்படி செய்யப்பட்டதை அதிகாரிகள் நம்முடைய நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் மத்திய அரசின் நிதி உதவி போதுமானதாக இல்லை என்பது பல முறை எடுக்துக் கூறப்பட்டு இருக்கிறது. அதனால் அதற்கு அப்போது இருந்த எதிர்க்கட்சிகளுடைய ஆதரவு ஆட்சிக்குக் கிடைத்ததா இல்லையா என்பது வேறு விவகாரம். ஆனால் ஆட்சியின் சார்பில் மத்திய அரசால் மாநில அரசுக்குத் தரப்படுகின்ற நிதி மிக மிகக் குறைவாக, மேலும் மேலும் குறைந்துகொண்டு போகிற நிலையில் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி வாதாடி இருக்கிறோம். 11.01.1976ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு இதழாளர்களுக்கு – அதாவது நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அன்று பொறுப்பில் இருந்தவன் என்ற முறையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசால் எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கப்பட்ட உதவித் தொகையில் தமிழ் நாட்டிற்கு 10.8 சதவிகிதம் கொடுக்கப்பட்டது என்பதையும், இரண்டாவது திட்ட காலத்தில் 9 சதவிகிதம் கிடைத்தது என்பதையும், மூன்றாவது திட்ட காலத்தில் 7.4 சதவிகிதம்

தான் கிடைத்தது என்பதையும், 4வது திட்ட காலத்தில் 5.5 சதவிகிதம் என்ற அளவிற்கு படிப்படியாக மத்திய அரசின் நிதி உதவி குறைந்து கொண்டே வந்தது என்பதையும், நம்முடைய மாநிலம் அதன் காரணமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றும், நான் அந்த நிருபர்களிடத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். நபர் வாரி திட்டச் செலவு, நபர் வாரி வருமானம், எந்த நிலையில் இருந்தது என்பதையும் நான் அன்றைக்கே சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

இப்போது தமிழ் நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தாலும் கூட, தமிழகத்தின் தேவைகளுக்கு, தமிழ் நாட்டின் தரம் பெருகுவதற்கு, தமிழ் நாட்டில் சீரும், செழிப்பும் ஓங்கிட வேண்டும் என்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் இன்னமும் வாதாடிக்கொண்டு இருக்கிறது, வாதாடியது, இப்போதும் வாதாடுகிறது, தொடர்ந்து வாதாடும் என்பதை நான் இந்த அவையிலே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாநிலங்கள் அவையிலும் மக்கள் அவையிலும் சென்னையில் 'பாதாள ரயில் திட்டத்தை – மெட்ரோபாலிடன் ராபிட் டிரான்சிட் சிஸ்டம்' கொண்டு வரவேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

கன்னியாகுமாரி, நாகர்கோவில், திருநெல்வேலி பகுதியை மதுரை இரயில்வே கோட்டத்தோடு தொடர்ந்து இயங்கச் செய்ய வேண்டும்; திருவனந்தபுரம் கோட்டத்தோடு சேர்க்கக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இரு அவைகளிலும் டெல்லியிலே எடுத்துரைத்ததோடு மட்டுமல்ல; அனைவரும் 3–7–1980 என்று மத்திய இரயில்வே அமைச்சர் கமலபதி திருபாதி அவர்களைச் சந்தித்து ஒரு மகஜரும் அளித்து, எடுக்கப்பட்ட முடிவை மீண்டும் பரிசீலனை செய்வதாக மத்திய இரயில்வே அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் வாக்குறுதி அளித்திருக்கிறார் என்பதையும் ஏடுகளிலே நாம் கண்டிருக்கின்றோம்.

கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, நெல்லை நகரங்களுக்கிடையே அமைக்கப்பட்டுள்ள இரயில் தடத்தை 'ப்ராட் கேஜ்' அதாவது அகல இரயில் பாதையாக அமைக்க வேண்டுமென்று நெடுநாள் எடுத்துச் சொல்லப்படுகின்ற தேவையினை டெல்லியிலே உள்ள இரண்டு அவைகளிலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வலியுறுத்தி யிருக்கிறார்கள்.

போத்தனூர் பணிமனையை ஒலவக்கோடு கோட்டத் தோடு இணைக்கக் கூடாது என்றும், பொன்மலை இரயில்வே தொழிலாளர்கள் வேலைப்பளு குறைக்கப்பட புதிதாக கலாசிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இன்னும் தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் இரயில் பாதைகள் பலவற்றைக் குறித்தும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியிலே இரு அவைகளிலும் வற்புறுத்தி பேசி இருக்கிறார்கள்.

கல்பாக்கம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் விரைவில் உற்பத்தியைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது குறித்தும்; ஹொகனேக்கல் காவிரியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கான பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்றும்; கீழ் மேட்டூர் மின் உற்பத்தி தொடங்க வேண்டும் என்றும்; கீழ் மேட்டூர் மின் உற்பத்தி நிலையத்திற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும்; சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்; சேலம் உருக்காலைத் திட்டத்தை விரைவுபடுத்தவும், விரிவுபடுத்தவும் வேண்டும் என்றும்; பாண்டியாறு – புன்னம்புழா திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும்; தமிழகத்தில் நிலக்கரி, இரும்பு தட்டுப்பட்டால் ஏராளமான சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, அந்தப் பற்றாக் குறையைப் போக்க மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்; தமிழகத்தின் தெற்கு கடலோர பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவேண்டும் என்றும்; மேற்குத் தொடர்ச்சி மலையிலே மேற்கு நோக்கி ஓடி கடலிலே வீணாகும் நீரை தமிழகத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும்; காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் விரைவாக முடிவுகாண அரசு முனைந்திட வேண்டும் என்றும், கங்கை –

காவிரி இணைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும்; இப்படி தமிழகம் வளம்பெறுவதற்கான பல்வேறு திட்டங்களை.. இங்கே இருக்கிற ஆட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லவா? ஏன் இதற்காக வெல்லாம் வாதாட வேண்டும் என்ற குறுகிய நோக்கம் இல்லாமல் தமிழக மக்கள், தமிழ்நாடு வளம்பெற வேண்டுமென்று பெரு நோக்கோடு – நாடாளுமன்றத்திலே கழக உறுப்பினர்கள் வாதாடி இருக்கிறார்கள், வலியுறுத்தி யிருக்கிறார்கள் என்பதை நான் மெத்த பெருமையோடு இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் தேர்தல் நேரத்திலே அளிக்கப்பட்டுள்ள வாக்குறிதிகள் எந்த அளவுக்கு விடுபட்டு போய் இருக்கின்றன என்பது ஒரு பகுதி; அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்ற முன்வந்திருக்கிறார்கள் என்பது மற்றொரு பகுதி. இந்த இரண்டு பகுதிகளையும் நான் இங்கே சற்று விரிவாக எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே ''வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் வேலை கிடைக்கும் காலத்தில் ஓரளவு வாழ்ந்தும், வேலையற்று பட்டினி கிடந்தும் வாழ்க்கை நடத்தும் நிலையை மாற்றி, வேலை கிடக்காத காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வயதுவந்த ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கிடைக்கச் செய்வோம்'' என்று கூறப்பட்டுள்ளது. இது இந்த தேர்தல் அறிக்கையில் மட்டுமல்ல – கடந்த 1979–80 ஆம் ஆண்டு இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையின் சார்பாக வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை பக்கம் 7ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் உறுதியான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு 3 ரூபாயும் அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ கோதுமையோ வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையைப் படித்தவர் யார் என்றெல்லாம் ஆராய்ச்சியில் இறங்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அளித்த அறிக்கைதான் அது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1979 – 80 ஆம் ஆண்டு இங்கே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைக்குப் பொறுப்புடைய அரசு என்ற காரணத்தால் நான் கேட்க விரும்புகிறேன். ஒரு நாளைக்கு 3 ரூபாய் அரிசி, கோதுமை ஒவ்வொருவருக்கும் கிடைக்கும், வேலை எதுவும் அளிக்கப் படாத காலங்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் அல்லது அதற்கு இணையான அரிசி அல்லது கோதுமை வழங்கப்படும் என்று 1979-80ல் உறுதி யளித்திருக்கிறீர்கள். தேர்தல் காலத்திலே அளித்த உறுதி இருக்கட்டும் நிதிநிலை அறிக்கையிலே உறுதியளித்திருக் கிறீர்களே, அப்படி வேலை கிடைக்காத நாட்களில் ஒரு ரூபாய் வீதம் எத்தனை பேருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது 1979 – 80ல் என்ற விவரத்தை இந்த ஆண்டு அறிக்கையிலே தந்திருக்கிறீர்களா? அப்படியானால் எவ்வளவு பேருக்குத் தந்தீர்கள், இந்த விளக்கங்களை எல்லாம் உங்களைக் கேலி செய்வதாகவோ, உங்களை மாட்ட வைப்பதாகவோ எண்ணாமல் கேட்கின்ற விளக்கத்திற்கு சரியான பதிலை அளிப்பீர்கள் என்கிற ஆர்வத்தோடு இந்த அவையின் முன்னால் நிதியமைச்சரிடத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தேர்தல் அறிக்கையிலே இன்னொன்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள், அதாவது ‘‘வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு அவர்கள் 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இலவசமாக கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று இப்படி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கை ஆணித்தரமாக கூறியது. இந்த நிதிநிலை அறிக்கை வந்தபோதும் கூட பல பத்திரிகைகளில் பெரிய தலைப்பு போட்டு கொட்டை எழுத்துக்களில் என்ன போடப்பட்டிருக் கின்றது என்றால் ‘ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசி என்று பல ஏடுகளிலே பெரிய எழுத்துக்களில் விளம்பரப்

படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் எந்த ஏழைகளுக்கு இது என்று பல சல்லடைகளை வைத்து வடிகட்டி கடைசியாக இவர்களுக்குத்தான் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? நீங்கள் எத்தனை பேருக்கு இந்த ஒரு கிலோ அரிசியை வழங்கி இருக்கிறீர்கள்? முதலிலே அறிவித்த 5 கிலோ அரிசி வாங்கினால் அவர்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாகத் தரப்படும் என்ற அந்த நிலையை மாற்றிவிட்டீர்கள், பரவாயில்லை ஏழைக்கு வாரம் ஒரு கிலோ என்று அறிவிப்பு செய்திருக்கிறீர்கள். எந்த ஏழைக்கு? அதிலே எத்தனை குவாலிபிகேஷன்? எத்தனை தகுதிகளைப் பிரித்திருக்கிறீர்கள் என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்கவேண்டும். இந்த வரவு செலவுத் திட்டம் இந்த அவையிலே வைக்கப்பட்டபோது, நிருபர்கள் அதுபற்றி என்னிடம் கேட்டபோது வாக்களித்த மக்களுக்குத் திருப்தி என்றால் எனக்கும் திருப்திதான் என்று நான் சொன்னேன். அதைக்கூட ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவரே ஆதரிக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் இப்போதும் ஆதரிக்கிறேன். வாக்களித்த மக்களெல்லாம் இதை ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையானால் நானும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வாக்களித்த மக்களுக்கு தரப்பட்ட உறுதிமொழிகள் நிறை வேற்றப்பட்டதா? என்ற உண்மை அந்த வாக்களித்த மக்களுக்குத் தெரியுமா இல்லையா என்பதுதான் இப்போது நம் முன்னால் உள்ள கேள்வியாகும். எனவேதான் சிலபோ் இந்த பட்ஜெட்டுக்குள்ளே அதிகமாக வராமல் மத்திய அரசின் பட்ஜெட்டுக்குள்ளே நுழைந்து அந்த பட்ஜெட்டில் குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசுக்காக வக்காலத்து வாங்க நான் விரும்பவில்லை. அதற்குரிய இடமும் இதுவல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏழைகளுக்கு இலவச அரிசி என்று சொல்லப்பட்டிருக்கின்றதே அந்த ஒரு கிலோ அரிசியைப் பெற இருப்பவர்கள் யார்? முதியோர் உதவித்தொகை பெறுவோர், கைம்பெண்கள் உதவித்தொகை பெறுவோர்,

உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர், விவசாயத் தொழிலாளர் உதவித்தொகை பெறுவோர் ஆகியவர்களுக்குத் தான் வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்று நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வறுமைக்கோடு வறுமைக்கோடு என்று நம்முடைய மாமன்றத்தில் கடந்த சில நாட்களாக அது படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. வறுமைக்கோடு என்றால் என்ன, அது என்ன வறுமைக்கோடு என்றெல்லாம் ஆளும் கட்சி சார்பிலேயும் எதிர்க்கட்சி சார்பிலேயும் எடுத்து பேசப்பட்டு நேற்றையதினம் அதற்கான சில விளக்கங்களைக்கூட என்னுடைய அருமை நண்பர் திரு.நெடுமாறன் அவர்கள் இங்கே தந்தார் என்று அறிகிறேன். ஆகவே அதுபற்றிப் பல கருத்துக்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப் பட்டிருந்தாலும்கூட நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய திட்டக் குழு, பேராசிரியர் டி.ஆர். காட்கில் அவர்களுடைய தலைமையில், டாக்டர் பி.எஸ்.கங்குலி, டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ் ஆகியவர்களைக்கொண்ட ஒரு குழுவை நியமித்தது. வறுமைக் கோடு என்றால் என்ன என்பதை வரையறுத்துக் கூறவேண்டும் என்பது அந்தக் குழுவிற்கு இடப்பட்ட பணியாகும். அவர்கள் வறுமைக்கோடு என்பதை Minimum Level of Consumption அதாவது குறைந்த பட்ச உணவு, உடை, உறைவிடம். அதாவது, சாப்பிட ஆகாரம், கட்டத் துணி, இருக்க இடம் ஆகிய இந்த மூன்றையும் அடிப்படையாக வைத்து அந்தக் குழுவினர் இந்த வறுமைக்கோடு பற்றி கணித்தார்கள். அதில் ஒருவருடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் குறைந்தபட்சத் தேவையான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கு என்ன செலவு ஆகுமோ அந்தச் செலவைத்தான் வறுமைக் கோட்டை நிர்ணயிப்பதற்கு அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அளவுகோலாக பணத்தை எடுத்துக்கொள்வதா, அல்லது சத்துணவை எடுத்துக் கொள்வதா என்று சர்ச்சை எழுந்தது? ரூபாயினுடைய மதிப்பு மாறிக் கொண்டேபோகும்.

குறைந்துகொண்டு போகும் என்ற காரணத்தினால் சத்துணவையே அடிப்படையாக வைத்து எடுத்துக் கொள்ளலாம் என்று வைத்து, கிராம மக்களுக்கு ஒரு நாளைக்கு சத்துணவு 2,400 காலரீஸ் என்றும், நகரத்தில் வாழகிற மக்களுக்கு ஒரு நாளைக்கு தேவைப்படுகிற சத்துணவு 2,100 காலரீஸ் என்றும் அந்தக் குழு நிர்ணயித்தது.

அந்த அளவு உணவைப் பெறுவதற்கு கிராம மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 1960–61 ஆம் ஆண்டிலே 20 ரூபாய் தேவைப்பட்டது. நகரத்திலே உள்ள நபருக்கு 1960–61 ஆம் ஆண்டிலே 25 ரூபாய் தேவைப்பட்டது. விலைவாசி ஏற்றத்தாலும், பண வீக்கத்தாலும் 1976–77ல் அந்த அடிப்படைத் தேவைக்கு கிராமமக்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றக்கு 61.80 பைசா என்றும் நகர்ப்புற மக்களுக்கு, ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு 71.30 பைசா என்றும் கணிக்கப்பட்டது. இன்றைய விலைவாசி நிலையில் நம்முடைய மாநில திட்டக் குழு, மதிப்பீடு செய்து கிராமங்களிலே நபர் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 75 ரூபாய் என்றும், நகரத்திலே நபர் ஒன்றுக்கு, ஒரு மாதத்திற்கு 90 ரூபாய் என்றும் கணக்கிட்டது. அந்த அடிப்படையிலே தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகையை கணக்கிட்டுப் பார்த்தால், எனக்கு கிடைத்த தகவல்படி கிராமங்களிலே 48 சதவீதம் பேர்கள் இந்த வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். நகர்ப்புறத்தில் 41 சதவீதம் பேர்கள் இந்த வறுமைக்கோட்டிற்கும் கீழே இருக்கிறார்கள்.

நமது அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் நேற்று தெரிவித்தது போல் ஏறத்தாழ 60 சதவீதம் பேர்கள் தமிழ் நாட்டில் இந்த வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். நீங்கள் என்ன சொன்னீர்கள்? வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளுக்கெல்லாம் 1 கிலோ அரிசி தரப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், இன்றைய தினம், முதியோர், கைம் பெண்கள், உடல் ஊனம் உற்றோர், கண்ணொளி இழந்தோர் உதவித் தொகையை பெறுகிறவர்களுக்கு மாத்திரம் என்று சொல்கிறீர்கள். அவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? நாவலர் அவர்கள் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையிலே 41ஆம் பக்கத்திலே புரட்டிப் பார்த்தால் இந்த 1 கிலோ அரிசி

அறிவிப்பு இருக்கிறது. 40 ஆம் பக்கத்தில் பார்த்தால், அந்த முதியோர், கைம் பெண்கள், உடல் ஊனம் உற்றோர், கண்ணொளி இழந்தோர் ஆகியவர்களுடைய கணக்கு என்னவென்றால் 1,13,970 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை 200 இலட்சம் பேர்கள். சராசரி 2 கோடி பேர்கள். அவர்களுக்கு இலவச அரிசி வழங்குவதாக தேர்தல் அறிக்கையிலே கூறிவிட்டு இப்போது 1,13,970 பேருக்கு அல்லது 1,15,000 பேர்களுக்கு, இன்னும் கொஞ்சம் அதிகமாக விவசாயத் தொழிலாளர்களையும் கணக்கில் சேர்த்துக்கொள்வோமேயானால் 2 இலட்சம் பேர்களுக்கு கொடுக்கப்படுவதாக கணக்கு வருகிறது. 200 லட்சம் பேர்களுக்கு இந்த 1 கிலோ அரிசி இலவசமாக வழங்குவதாக சொல்லிவிட்டு 2 இலட்சம் பேர்களுக்கு வழங்குவதாக நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொன்னேன் வாக்களித்த மக்களுக்கு திருப்தி என்றால் எனக்கும் திருப்திதான் என்று நான் குறிப்பிட்டேன்.

இந்த 1 கிலோ அரிசி 2 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், கொஞ்சம் அதிகமாகவே சொல்கிறேன் சர்க்கார் விலையை 2 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும்கூட மாதம் ஒன்றுக்கு 8 ரூபாய் தருகிறீர்கள். ஏற்கெனவே இந்த முதியோர் பென்ஷன், கைம்பெண்கள், உடல் ஊனம் உற்றோர் பென்ஷன், கண்ணொளி இழந்தோர் பென்ஷன் ஆகிய அத்தனை பேர்களும் 25 ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வாரம் தோறும் 1 கிலோ அரிசியை அளிப்பதற்குப் பதிலாக வாரம் 2 ரூபாய் என்று கணக்கிட்டு நாலால் பெருக்கி, 4 இண்ட்டு 2 எட்டு ரூபாய் என்று கணக்கிட்டு, அந்த 25 ரூபாயோடு 8 ரூபாயைச் சேர்த்து 33 ரூபாயாக தருகிறோம் என்றால் அல்லது 35 ஆக உயர்த்தித் தருகிறோம் என்றால் இந்த முதியோர் பென்ஷன், கைம்பெண்கள், மற்றும் உள்ள உடல் ஊனம் உற்றோர், கண்ணொளி இழந்தோர் ஆகிய பென்ஷன்கள் 20லிருந்து 25 ஆக உயர்ந்து, 25லிருந்து இப்போது 35 ஆக உயர்ந்திருக்கிறது என்கிற அந்த அளவு பெருமையாவது நீங்கள் இதிலே அடையலாம்.

முதியோர் பென்ஷன் என்றாலும், அல்லது அறுபது வயது கடந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்களே அந்தப் பென்ஷன் என்றாலும், நான் கேட்பதெல்லாம் இந்த முதியோர் பென்ஷன் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பேற்றிருந்த காலத்தில் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. அது முதல் இதுவரை தமிழகத்தில் இருக்கிற தகுதி வாய்ந்த எல்லா முதியவர் களுக்கும் இந்தப் பென்ஷன் தரப்படுவதில்லை. நாம் ஓர் அளவுகோல் வைத்திருக்கிறோம். இதற்காக இவ்வளவு தொகை ஒதுக்குவது என்று ஓர் அளவுகோல் வைத்திருக் கிறோம். அது காமராஜ் காலமானாலும் சரி, பக்தவத்சலம் காலமானாலும் சரி, பேரறிஞர் அண்ணா காலமானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமானாலும் இந்த ஆட்சிக் காலமானாலும் சரி எவ்வளவு இலட்சம் ரூபாய் இந்த பென்ஷனுக்காக ஒதுக்குவது என்று ஒதுக்கி வைத்துவிட்டு, அதற்குள்ளேதான் செலவிட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு கிராமத்தில் ஐம்பது பேர்கள் முதியோர் பென்ஷன் பெறுவார்களானால் 51வது நபர் வெயிட்டிங் லிஸ்டில் இருப்பார். இந்த 50 பேர்களில் ஒருவர் இந்த உலகத்தை விட்டு நீங்கிவிடுவார்களானால், 50 என்பது 49 ஆகுமானால் இந்த 51வது நபர், வெயிட்டிங் லிஸ்டில் உள்ளவர் 50வது இடத்தை நிரப்புவார்.

இதுதான் இந்தப் பென்ஷன் முறை. இது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இது சில ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் தெரிந்த ஒன்று. இது சில ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தெரியாமல்கூட இருக்கலாம். எனவே, ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு தெரியும் என்ற காரணத்தினாலும், அனுபவரீதியாகவும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பென்ஷன் எல்லோருக்கும் தருவதில்லை. அதிலும் சல்லடை போட்டு சலித்துத் தருகிறார்கள். இப்போது அறுபது வயது கடந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதில் நான் தெரிந்து கொள்ள

விரும்புவதெல்லாம் இதுவரை இந்த முதியோர் பட்டியலில் இந்த அறுபது வயது கடந்த விவசாயத் தொழிலாளர்கள் வரவில்லையா? அவர்கள் ஏன் ஒதுக்கப்பட்டார்கள்? இந்த விவரம் எனக்குத் தேவை. அறுபது வயது கடந்த எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும். இந்த ஓய்வூதியம் தரப்பட இருக்கிறதா என்ற விவரம் தொழிலாளர்களுக்கு மிகமிக அதிகமாக தேவை. இவர்கள் அத்தனை பேர்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 1,15,000 பேர்களுக்கு வாரந்தோறும் ஒரு கிலோ அரிசி தருகிறோம் என்று கூறினால் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட உறுதிமொழிக்கும், கூட்டங்களில் பேசப்பட்ட உறுதிமொழிக்கும் முற்றிலும் புறம்பானது என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்க அலுவலர்களுக்கு தேர்தல் அறிக்கையில் தரப்பட்ட உறுதிமொழிகள் சாமான்யமானவை அல்ல.

நிலையான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைப்புக் குழு ஒன்று உருவாக்கப்படும் என்றும் அந்தக் கமிட்டி முன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடும் என்றும் அரசாங்க அலுவலர்களுக்கு ஓய்வுகால குடும்ப நலத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும், மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக அகவிலைப்படி, மாநில அரசு ஊழியர்களுக்கும் தரப்படும் என்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் தேடித்தேடிப் பார்த்தாலும் எங்குமே அதற்கான நிதி ஒதுக்கீடோ அதற்கான அறிவிப்போ இல்லை என்பதை நான் ஆழ்ந்த வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமை பட்டிருக்கிறேன். தேர்தல் அறிக்கையில் இன்னொன்றையும் குறிப்பிட்டீர்கள். ஒரு கவர்ச்சிகரமான உறுதிமொழி. பிரசவத்தின்போது தாய், சேய் உடல்நலத்தை பராமரிப்பதற் காக ஏழை தாய்மார்களுக்கு ரூபாய் 50 வீதம் மூன்று மாதங்களுக்கு சத்துணவிற்காக ரூபாய் 150 தரப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இது மாநில அரசின் செலவில் கூட செய்யப்படுகிற காரியம் அல்ல. நலிந்தோர் நல்வாழ்வு என்ற அந்தத் திட்டத்தின் கீழ் உலக வங்கியிலிருந்து பணம் பெற்று உதவி பெற்று செய்யப்படுகிறது இந்தக் காரியம். எல்லோரும் எண்ணிக்கொண்டார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா

மாவட்டங்களிலும், எல்லா ஊர்களிலும் இருக்கிற ஏழைத் தாய்கள் பிரசவத்தின்போது ரூபாய் 150 மூன்று மாதங்களுக்கு தங்களுடைய சத்துணவிற்காக குழந்தைகளின் சத்துணவிற்காக பெறலாம் என்று எண்ணினார்கள். ஆனால் நிலைமை என்ன? இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள கொட்டம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன்னோடித் திட்டமாக இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டு பின்னர் நான்கைந்து மாவட்டங்களைக் குறிப்பிட்டு அந்த மாவட்டங்களில் ஐந்தாண்டுக் காலத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற தாய்கள்தான் ஏழைத்தாய்களா?

இந்த 150 ரூபாய், இந்த பிரசவ காலத்திற்கு சத்துணவுத் திட்டத்திற்காக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளதற்கும், தேர்தல் அறிக்கைக்கும் எள்ளளவும் சம்பந்தம் இருக்கிறதா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய கடன்களைப் பற்றி இங்கே பலரும் பேசியிருக்கிறார்கள். நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசிய அழகர்சாமி அவர்கள், அவர்களுடைய கட்சியின் சார்பில் சில ஆக்கபூர்வமான யோசனைகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கட்சியின் சார்பிலே போடப்பட்டுள்ள – கட்சியல்ல – கம்யூனிஸ்ட் விவசாய சங்கம் அழகர்சாமி அவர்கள் தலைமையிலே போடப்பட்ட தீர்மானத்தில் 150 கோடி ரூபாய் பயிர்க் கடனை ரத்து செய்ய வேண்டும் என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியிலே கூட அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 60 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்ய முன்வந்த தமிழக அரசினுடைய நடவடிக்கைகளை வரவேற்றுவிட்டு, அடுத்துச் சொல்கிறார்கள், ''பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் அளிப்பதற்குப் பதில், சிறிய விவசாயிகளுடைய பயிர்க் கடனில் ஒரு பகுதியை மட்டும் தள்ளுபடி செய்யப்படும் என்பது எந்த வகையிலும் விவசாயிகளுக்கு திருப்தி அளிக்காது; பெரும் ஏமாற்றத்தையே உண்டாக்கும் மாநில

அரசின் கூற்றுப்படி பார்த்தாலும், சிறிய விவசாயிகளின் பயிர்க் கடன் மட்டும் மொத்தமுள்ள பயிர்க்கடன் 300 கோடி ரூபாயில் பாதி உள்ளது. மேலும் தள்ளுபடி செய்யப்பட்டது போக, பாக்கிக் கடன்களை இப்போதே திருப்பிச் செலுத்த வேண்டும் என்று கோருவது மீண்டும் ஜப்தி போன்ற கெடுபிடிகளுக்கு கொண்டு செல்லும் நிலையைத்தான் உருவாக்கும். எனவே, 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு உட்பட்ட விவசாயிகளின் மீதான அனைத்துப் பயிர்க் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; மற்ற விவசாயிகளின் பயிர்க்கடன்களுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து, அசலை 10 ஆண்டுகளில் வட்டியில்லாக் கடனாகச் செல்லும் வகையில் ஒத்தி வைக்க வேண்டும். நடப்பு ஆண்டில் விவசாயக் கடன்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.நீண்ட கால கடனைப் பொறுத்த வரையில், பயன்படாமல் போன கடன்களை சரியான பரிசீலனை அடிப்படையில் தள்ளுபடி செய்து, மிஞ்சிய கடனுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து, 10 ஆண்டு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற'' இத்தகைய தீர்மானங்களை நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைத் சார்ந்த அழகர்சாமி அவர்கள் தலைமையிலே கூடிய விவசாயச் சங்கத்தின் சார்பிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். இதிலே பெரும்பான்மையான அளவுக்கு தி.மு.க.வும் ஒத்துப் போகின்றது என்ற நல்ல கருத்தினை நான் இங்கே எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் என்ன? அதை மறந்துவிடக் கூடாது. நான் குத்திக் காட்டுகிறேன் என்று தயவு செய்து எண்ணிவிடவும் கூடாது. தேர்தலுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் பேசியதாக அண்ணா பத்திரிகையில் 1980ம் ஆண்டு மேத் திங்கள் 17ம் தேதியிட்ட இதழில் வெளிவந்துள்ள பேச்சை மாத்திரம் இங்கே படித்துக் காட்டுவது என்னுடைய பொறுப்பென்று கருதுகிறேன். ''விவசாயிகள் 9 அம்சத் திட்டம் பற்றி தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே தெளிவாக எதையும் குறிப்பிடவில்லை. விவசாயிகளுடைய கோரிக்கைகளிலே முக்கியமான

கோரிக்கை, கடன் தள்ளுபடி கோரிக்கையாகும். அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு உதவ மத்திய அரசை வற்புறுத்தும். மத்திய அரசு மறுத்தால், ஐந்தாண்டு காலத்திற்குள் கழக அரசே அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யும் என்று அண்ணா தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே திட்டவட்டமாகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே இப்படி அவர்கள் கூறவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்வதற்கு திராணியற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தார் இப்போது மேடையிலே பேசுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று மேடையிலே பேசுகிறார்கள். இது ஏமாற்று வேலை என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது. இந்த தேர்தலில் விவசாயிகளை ஏமாற்றி, ஓட்டு வாங்குவதற்காகவே தி.மு. கழகத்தார் இப்படி பேசுகிறார்கள்'' என்று பேசினார். அது மட்டுமல்ல. ''விவசாயக் கடனை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரத்து செய்வோம். மத்திய அரசு ஒத்துக் கொள்ளாவிட்டால், கடன் பணத்தை தமிழக அரசே ரிசர்வ் பாங்கு கொடுக்கும். ஆனால், கருணாநிதி என்ன சொல்கிறார்? விவசாயிகள் கடனை ரத்து செய்ய ஆவன செய்வோம் என்கிறார். ஆவன செய்வோம் என்றால் என்ன அர்த்தம்? ஒருவர் 100 ரூபாய் கேட்கிறார். உடனே அடுத்தவர், ஆவன செய்வதாகக் கூறிவிட்டு, 2 ரூபாய் கொடுக்கிறார். இதுதான் ஆவன செய்வது. இந்தப் பிரச்சினை பற்றி கருணாநிதி உறுதியாகச் சொல்லவில்லை. ஏமாற்றப் பார்க்கிறார்'' என்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குப் பேசி, 1980ம் ஆண்டு மேத் திங்கள் 15ஆம் நாளன்றும், 1980ம் ஆண்டு மேத் திங்கள் 17ஆம் நாளன்றும் அண்ணா பத்திரிகையிலே வந்திருக்கிறது.

''ஆவன செய்வோம்'' என்றால் என்ன அர்த்தம் என்று கேட்பதற்குப் பொருள் கூறியிருக்கிறார்கள். அது 100 ரூபாய் கேட்பவர்களிடம் இரண்டு ரூபாய் கொடுப்பதுதான். அதைத் தான் இப்போது இந்த அரசு சார்பில் சொல்யிருக்கிறார்கள். எல்லாக் கடனையும் ரத்து செய்வதாகச் சொல்லிவிட்டு

60 கோடி ரூபாயை ரத்து செய்திருப்பதாக அறிவித்திருக் கிறீர்கள். அதிலே புள்ளி விவரங்களுக்கு ஆழமாகச் சென்று பார்த்தால் தக்காவிக் கடன் ரத்து 16 கோடி ரூபாய் என்று அறிவித்திருக் கிறார்கள். தக்காவிக் கடன் என்றால் என்ன? வெள்ளைக் காரன் காலத்திலிருந்து தரப்பட்டு இப்போது கொடுக்கப்படாமலே இருக்கும் ஒரு கடன் தக்காவிக் கடன். அது வராக்கடன் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கடன். ஆனாலும் நம்முடைய நிதிநிலை அறிக்கை கணக்கேட்டில் அது தோன்றிக்கொண்டே இருக்கும். அப்படித் தோன்றுவதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. மத்திய சர்க்காரிடம் மாநில அரசே நிதி உதவி கோருகிற நேரத்தில் நம்முடைய ரிசோர்சஸ் என்ன, நிதி ஆதாரம் என்ன என்று கேட்கத் தவறமாட்டார்கள். நம்முடைய நிதி ஆதாரங்கள் அடிப்படையில் ரிசோர்சஸ் அடிப்படையில்தான் மத்திய அரசின் உதவிகளைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, 16 கோடி ரூபாய் கடனை எந்த விவசாயிகளிடத்திலும் அது காமராஜர் ஆட்சியாக இருந்தாலும் சரி, பக்தவத்சலம் ஆட்சியாக இருந்தாலும் சரி, அண்ணா அவர்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியாக இருந்தாலும் சரி ஏன் அ.தி.மு.க. ஆட்சி இதுவரையிலும் சரி, அந்த தக்காவிக் கடனைக் கேட்டதே இல்லை. அது வராக் கடன் என்று ஏறத்தாழ எழுதப்படவில்லையே தவிர, ''ரைட் ஆஃப்''என்று சொல்லப்படவில்லையே தவிர, அது வாராக் கடன் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கடன். அதைப் போய்த் தள்ளுபடி செய்திருக்கிறோம். அது நம்முடைய ரிசோர்சைக் குறைத்துக் காட்டி பாதிக்கப்படுகின்ற நிலையாக இருக்குமே தவிர, உள்ளபடியே விவசாயிகளுக்கு நன்மை செய்கிற ஒன்று என்று நிச்சயமாக என்னால் கூற இயலாது.

நாற்பத்தி இரண்டு கோடி ரூபாய் ஐந்து ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக் கிறார்கள். இந்த ஐந்து ஏக்கர் என்பது மாவட்டத்திற்கு மாவட்டம், ஏன் மாவட்டத்திற்குள்ளேயே வட்டத்திற்கு வட்டம், பகுதிக்குப் பகுதி இந்த ஐந்து ஏக்கர் தன்மை

மாறுகிறது என்பதை மறந்து விடக்கூடாது. அதைத்தான் இங்கு பேசிய தோழமைக் கட்சி உறுப்பினர்கள்கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஐந்து ஏக்கர் ஓரிடத்தில் பத்தாயிரம் ரூபாய் வரக் கூடிய வளமான பூமியாக இருக்கும். ஐநூறு ரூபாய் ஆயிரம் ரூபாய் வரக்கூடிய மிகச் சாதாரணமான பூமியும் உண்டு. ஐந்து ஏக்கராவில் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பொத்தாம் பொதுவில் ஐந்து ஏக்கர் நிலம் உடையவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆங்கில அறிக்கையிலும் " 5 acres owning" உடமையாளர்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. கடன் வாங்குகிறவர்கள் உடைமை யாளர்கள்தானா என்றால் இல்லை. பெரும்பகுதியினர் குத்தகைதாரர்கள். குத்தகைதாரர்கள் தாங்கள் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்யும் நிலத்திற்குக் கடன் பெறுகிறார்கள். ஆக, இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதில் குத்தகைதாரர்கள் நிலை என்ன? விளக்கம் தேவை. நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தாக வேண்டும். ஐந்து ஏக்கர் என்று பொத்தாம் பொதுவில் சொல்வார்களானால் பத்தாயிரம் ரூபாய் வருமானம் உள்ள ஐந்து ஏக்கரும், ஆயிரம் ரூபாய் வருமானம் பெறமுடியாத ஐந்து ஏக்கராவும் ஒன்றுதானா? அப்படித்தான் அதிகாரிகள் உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்களா? ஏதோ கேட்கிறார்கள் – சொல்லி வைப்போம் என்று அதிகாரிகள் சொல்லி விட்டார்களா? தேர்தல் அறிக்கையில் சொன்னதை இந்த அறிக்கையில் தரவேண்டுமென்று அவசரப்பட்டு இந்தக் காரியத்தில் இறங்கி விட்டீர்களா? இந்த விளக்கங்களை நிதியமைச்சர் நாவலர் அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறேன்.

மத்திய அரசு இந்த விவசாயக் கடன்களைத் தீர்ப்பதற் கான 42 கோடியை, 60 கோடியை கொடுக்க மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறோம் என்று நம்முடைய நாவலர் நிதிநிலை அறிக்கையின் 7ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார் நிதிநிலை அறிக்கையில் 7ம் பக்கத்திலே; 9ம் பக்கத்திலே இந்தக் கடன்களை விவசாயிகளுக்கு ரத்து செய்ய மத்திய அரசு உதவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம், எழுதியிருக்கிறோம், கோரிக்கை வைத்திருக்கிறோம் என்று சொல்லி விட்டு மறுநாள் நிருபர்களைச் சந்திக்கிற நேரத்தில்

நிதியமைச்சர் அவர்கள் ''நாங்கள் கடிதம் எழுதுவதாக இருக்கிறோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலே எது உண்மை, உண்மைக்கு மாறானது எது என்று கேட்பதுகூட நாவலர் உள்ளத்தைப் புண்படுத்தும் என்ற காரணத்தால், எது சரி, எது தவறு என்று அடக்கமாக அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசுக்கு எழுதி விட்டோம் என்று கூறியது சரியா அல்லது மறுநாள் நிருபர்களைப் பார்த்து இனிமேல்தான் அரசுக்கு எழுதப் போகிறோம், ஒரு வார காலத்திலே எழுதிவிடுவோம், என்று கூறியது சரியா இதிலே எது சரி எது தவறு என்பதை நாவலர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு தரவேண்டும். நானும் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்கிறேன். ஆனால், மத்திய அரசு தராவிட்டால் என்ன செய்யப்போகிறோம்? 30 இலட்சம் ரூபாய் உபரி விழுந்ததாக அறிவித்திருக்கிறீர்கள். மத்திய அரசு தராவிட்டால் அந்த 42 கோடி ரூபாயை இந்த அரசுதான் பொறுப்பேற்றுக்கொண்டு விவசாயிகள் சார்பாக வங்கிகளுக்குக் கட்டவேண்டும். அந்த 42 கோடி ரூபாயை மொத்தக் கணக்கில் எல்லாக் கணக்கையும் சேர்த்த மொத்த கணக்கில் துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கையாக இந்த அறிக்கை ஆகிவிடுகிறதா இல்லையா என்பதற்கு நாவலர் அவர்கள் எனக்கு விளக்கம் அளிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த 42 கோடி ரூபாயை மத்திய அரசு ஒத்துக்கொண்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும் அந்தக் கடனை தீர்த்தே தீருவோம் என்கின்ற உறுதிமொழி 42 கோடிக்கல்ல, அது 400 கோடியாக இருந்தாலும் சரி, 5 ஆண்டுகளுக்குள்ளே தவணை முறையில் ரிசர்வ் வங்கியிலே அந்தக் கடனைத் திருப்பிச்செலுத்துவோம், மத்திய அரசு ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கவலையில்லை என்று நம்முடைய முதலமைச்சர் மார்தட்டி வீராவேசமாக மத்திய அரசைப் பார்த்துக்கூறி இருக்கிறார்கள். நீங்கள் தந்தாலும் தராவிட்டாலும் நாங்கள் தவணை முறையில் ரிசர்வ் வங்கிக்கு பணத்தைச் செலுத்துவோம், விவசாயிகளுடைய கடன்கள் அனைத்தையும் என்று கூறுயிருக்கிறார்கள். இந்த அறைகூவலிலிருந்து நீங்கள் பின்வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். ஆனால் 42 கோடி ரூபாய்க்கு என்ன

வழிசெய்யப்போகிறீர்கள்? இதிலே இல்லை. பிறகு சொல்லுவதாகச் சொல்கிறீர்கள்? கணக்கிலே காட்டப்பட வில்லை. நிதிநிலை அறிக்கையிலே அது வரவில்லை, ஒதுக்கீடு செய்யப்படவில்லை, நீங்கள் என்ன வழி செய்யப்போகிறீர்கள்? மத்திய அரசு தராவிட்டால் நீங்கள் அது துண்டுவிழுந்த தொகை என்று சொல்லி வரிப் போடப் போகிறீர்களா? வேறு வகை என்ன?

மராட்டிய மாநிலத்திலே ஏறத்தாழ 49 கோடி ரூபாய் விவசாயிகளுடைய கடனை ரத்து செய்து விட்டு அவர்களே நிதி நிலை அறிக்கையிலே பணம் ஒதுக்கீடும் செய்திருக்கிறார்கள் என்ற தகவல்களை பத்திரிகையிலே நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால் இங்கே அதற்கான நிதி ஒதுக்கீடு ஏன் செய்யப்படவில்லை என்பதற்கு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும்.

தேர்தல் அறிக்கையிலே இன்னொன்றைச் சொன்னார்கள். ''ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருவருக்காவது கட்டாயமாக வேலைதரப்படும்'', இது ஒன்று. இரண்டாவது ''வேலை யில்லாத பட்டதாரிகள் தமிழகத்திலே சுமார் ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் இது உங்கள் அறிக்கையிலே உள்ள – வசனம் –மாதம் ரூபாய் 50 உதவித் தொகை வழங்கி ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்தது. இத் திட்டத்தை விரிவுபடுத்திய பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கும் உதவித்தொகை 50 ரூபாய் கொடுக்கப்படும் என்று தேர்தல் நேரத்தில் தேர்தல் அறிக்கையிலே திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். கவர்னர் ஆட்சியலே அது அமல்படுத்தப்படவில்லை என்றுகூட குறையோடு சுட்டிக் காட்டி அதற்காக ஒரு போராட்டத்தைக்கூட நடத்த வேண்டும் என்கிற அளவுக்கு தோழமைக் கட்சிகளின் சார்பாக அன்றைக்கு அறிவிப்புப் பிரகனடங்களையெல்லாம் செய்தீர்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருவருக்காவது கட்டாயமாக வேலை தரப்படும். இந்தத் திட்டம் எங்கே போயிற்று? அதைப் போலவே நீங்களே ஒத்துக்கொண்டதைப்போல வேலையில்லாமல்

இருக்கிற பட்டதாரிகள் ஒரு இலட்சம் பேர்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்குவோம் என்று சொன்னீர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கே இருக்கிறது? இதை நான் கேட்கிறேன் என்றால் நீங்கள் விளக்கம் அளிப்பதற்காகத்தான் கேட்கிறேன், உங்களைச் சிக்க வைப்பதற்காக கேட்கவில்லை, எங்கே அதற்கு நிதி ஒதுக்கீடு என்றுதான் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நாவலர் அவர்கள் நிருபர்களிடத்திலே சொன்னதாகப் பார்த்தேன், பத்திரிகையிலே பார்த்தேன். அதற்கு 50 இலட்சம் ரூபாய் டோக்கனாக அடையாளப் பூர்வமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள். இலட்சம் பேர்கள் உங்கள் கணக்குப்படி, ஒருவருக்கு 50 ரூபாய் என்றால் இலட்சம் பேர்களுக்கு கொடுத்தால் ஒரு மாதத்திற்கு 50 இலட்சம். ஒரு ஆண்டுக்கு வரவு செலவுத் திட்டத்திலே 50 இலட்சம் ஒதுக்கியிருக் கிறீர்கள். நீங்கள் சொன்னது இந்த ஆண்டு முழுவதற்கும் அதற்கு 6 கோடி ரூபாய் ஆகு, 6 கோடி ரூபாய் எங்கே இதிலே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேள்வியாக அல்ல, விளக்கம் பெறுவதற்காக உங்களிடத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம். இது சில உறுப்பினர்களால் – அவர்கள் யாரும் என்மீது தயவு செய்து கோபித்துக் கொள்ளக் கூடாது – ஏதோ 25 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டுவிட்டது என்றெல்லாம் பேசப்பட்டது; ஏடுகளிலே கூட பெரிய எழுத்துக்களில் 25 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அல்லது 23 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு; நாவலருடைய நிதிநிலை அறிக்கை என்றெல்லாம் போடப் பட்டது. நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர், நாவலர் நிதிநிலை அறிக்கையை அளித்த மறுநாளோ அதற்கு மறு நாளோ இங்கே ஒரு கேள்விக்குப் பதில் அளித்த நேரத்திலே சொன்னார்கள், 23 இலட்சத்திற்குப் பதிலாக 25 இலட்சம் பேர் என்று சொன்னார்கள். இரண்டு மூன்று இலட்சம் கூடக் குறைவதில் ஒன்றும் பெரிய வேறுபாடு வந்துவிடப் போவ தில்லை. நிதியமைச்சர் சொன்னது 23 இலட்சம்; உள்ளாட்சித் துறை அமைச்சர் கேள்விக்குப் பதில் கூறும் பொழுது சொன்னது 25 இலட்சம். இந்த 25 இலட்சம் அல்லது 23

இலட்சம் பேருக்கும், 1979-80 ஆம் ஆண்டில் 55,584 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இது நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரம் இந்த 55,584 டன்னை கிலோக்களாக ஆக்கி அதை 23 இலட்சம் பேரால் வகுத்தால் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 24 கிலோ அரிசிதான் கிடைக்கிறது. ஒரு ஆளுக்கு நீங்கள் சொல்கிற 23 இலட்சம் பேருக்கு நீங்கள் தருகின்ற 55,584 டன்னை கிலோக்களாக்கி 23 இலட்சத்தால் வகுத்துப் பார்த்தால் ஒருவருக்கு வருடத்திற்கு 24 கிலோ அரிசி கிடைக்கிறது. அதாவது 40 ரூபாய் வருடத்திற்குக் கிடைக்கிறது; மாதம் மூன்றரை ரூபாய்; நாளைக்கு அல்ல; மாதம் மூன்றரை ரூபாய்; நீங்கள் சொல்லுகின்ற 23 இலட்சத்தை, அப்படியே கணக்கில் எடுத்துக்கொண்டால்.

ஆனால், அது அல்ல உண்மை. 23 இலட்சம் பேர் வேலை செய்தார்கள் என்று சொன்னீர்களே தவிர, நீங்களே அடுத்த வரியிலே குறிப்பிட்டிருப்பதுபோல, 1,89,000 பேர் தான் சுமார் இரண்டு இலட்சம் பேர்தான் அந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இரண்டு இலட்சம் பேரை மறைத்துவிட்டு, 23 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தோம், 23 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்தோம் என்று சொன்னால் ஒரு ஆளுக்கு மாதத்திற்கு மூன்றரை ரூபாய் சம்பளம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதுதான் அதற்குப் பொருள். ஆகவே, அது சரியான வாதமும் ஆகாது; நல்ல புள்ளி விவரமும் ஆகாது. இது பொதுமக்களை, வாக்களித்த மக்களைத் திசை திருப்பி விடுகின்ற வகையிலே தயாரிக்கப்பட்ட ஒரு நிதிநிலை வாசக மாகத்தான் இருக்கிறது என்று நான் குற்றச்சாட்டாக இல்லை குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

நாவலர் சொன்னார், 55,584 டன் அரிசி என்று. உள்ளாட்சித்துறை அமைச்சர் இங்கே நண்பர் குமரி அனந்தன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் அளித்த நேரத்திலே சொன்னார், 64,430 டன் அரிசி என்று அவர் சொன்னார். அது மாத்திரம் அல்ல; உள்ளாட்சித்துறை அமைச்சர் இன்னொரு கணக்கையும் சொன்னார். 1979-80இல் மத்திய அரசு நமக்குத் தந்த அரிசி 73,000 டன் என்று அவர் சொன்னார்.

ஆக, நாவலர் கணக்குப்படி 55,000 டன் அரிசி செலவழிக்கப்பட்டது போக, 73,000 டன்னில் மீதம் உள்ளது எவ்வளவு? என்ன ஆயிற்று? எப்படிச் செலவழிக்கப்பட போகிறது என்பதற்கான விளக்கங்களும் தேவை.

இந்த நேரத்திலே இன்னொன்றையும் நான் குறிப்பிடுவது சாலச் சிறந்தது. 1979-80 ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஒன்றைத் திட்டவட்டமாக இந்த அரசின் சார்பில் எடுத்துக்கூறினார்கள். ''வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ''உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும், 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (Contractor) இல்லாமல், அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும்.

நான் கேட்கிறேன், 1979-80 இல் நிதிநிலை அறிக்கையிலே சொன்ன அந்த உறுதியை நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்களா? காண்ட்ராக்ட் முறை இருக்காது, முழுதும் அரசுத்துறையாக இருக்கும் என்று உறுதி அளித்தீர்களே, அது என்னவாயிற்று? ஆனால், இந்த வேலைக்கு உணவு என்கின்ற திட்டத்திற்கு ஆங்காங்கு காண்ட்ராக்ட் முறையிலேதான் இந்த விநியோகங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும், அந்த விநியோகங்களில் பல தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும் இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னுடைய நீங்காத கடமை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் பொதுவாகச் சொல்லிவிடுவார். தேர்தல் நேரத்திலே எல்லோரும்தான் உறுதிமொழிகளைக் கொடுக் கிறோம். அவைகளையெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்று ஏதாவது இருக்கிறதா என்று. அன்றைக்குக்கூடச் சொன்னார்கள்,

நீங்கள் கொடுக்கவில்லையா உறுதிமொழிகளை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளைக் கூட எடுத்துச் சொன்னார்கள். பட்ஜெட்டைப் பாருங்கள் தெரியும் என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். பட்ஜெட்டை ஆவலோடு நாங்கள் எதிர்பார்த்தோம். ஆகவே, பட்ஜெட்டிலே, எந்தெந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்களோ அவைகளெல்லாம் பட்ஜெட்டிலே நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

உறுதிமொழிகளை இந்த அரசு எப்படி அணுகுகிறது என்பதற்கான ஒரே ஒரு உதாரணத்தை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இது அரசினர் உறுதிமொழிக் குழு 1979-80ஆம் ஆண்டுப் புத்தகம். அதில், 6 ஆவது சட்டமன்றப் பேரவையின் 4 ஆவது அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில், இந்த அவையிலே அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ளன அல்லது, எவ்வாறு படித்து பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பெற்றுள்ளன, அப்படி நிறைவேற்றப்பட்ட, பதிவு செய்யப்பட்ட உறுதிமொழிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு என்ற அந்தக் கணக்குகள் அரசினர் உறுதிமொழிக் குழு 1979-80 ஆம் ஆண்டு 4 ஆவது அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன. 159ஆம் பக்கம், இணைப்பு 2ல் 1968ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள், அதாவது அண்ணா காலத்தில் 199. நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள் 197. மிச்சம் நிலுவையிலே உள்ளவை இரண்டே இரண்டு. 1969 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட உறுதி மொழிகள் 280. நிறைவேற்றப்பட்டதாக, அல்லது படித்து பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டவை 278. நிலுவையிலே உள்ளவை, மிச்சம் உள்ளவை இரண்டே இரண்டு. 1970 ஆம் ஆண்டு அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள் 220. நிறைவேற்றப்பட்ட அல்லது பதிவு செய்யப்பெற்றவை 212. மிச்சம் 8. 1971ஆம் ஆண்டு, 256 அளிக்கப்பட்ட உறுதிமொழிகள். நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு

செய்யப் பெற்றவை 250, மிச்சம் 6, 1972 ஆம் ஆண்டு 158 அளிக்கப்பெற்றவை. அதில், நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு செய்யப்பட்டவை 154, மிச்சம் 4. 1973ஆம் ஆண்டு 252, அளிக்கப்பட்ட உறுதிமொழிகள், நிறைவேற்றப் பட்ட, படித்து பதிவு செய்யப்பட்டவை 219, நிலுவையிலே உள்ளவை 33. 1974இல் 420 அளிக்கப்பட்ட உறுதிமொழிகள். நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு செய்யப்பெற்றவை என்று கருதப்பட்டவை 318. நிலுவையிலே உள்ளவை 102 1975இல் 416 அளிக்கப்பட்ட உறுதிமொழிகள். நிறைவேற்றப் பட்ட, படித்து பதிவு செய்யப்பெற்றவை என்று கருதப் பட்டவை 286, நிலுவையிலுள்ளவை 130. 1977ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் 367, நிறைவேற்றப்பட்ட, படித்து பதிவு செய்யப்பட்டவை என்று கருதப்பெற்றவை 197, நிலுவையில் உள்ளவை 170. 1978ஆம் ஆண்டு நீங்கள் அள்ளிக் கொடுத்த உறுதிமொழிகள் 1,266. நிறைவேற்றப் பட்டதாக, படித்து, பதிவு செய்ததாகக் கருதப்பட்டவை 354. நிலுவையிலே உள்ளவை 912. 1979–ல் நீங்கள் அளித்த உறுதிமொழிகள் 671. நிலுவையிலே, மிச்சம் உள்ளவை 671. இப்படித்தான் நீங்கள் உறுதிமொழிகளை நிறைவேற்றி இருக்கிறீர்கள் என்று அரசினர் உறுதிமொழிக் குழு இந்த மன்றத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அல்லது நியமிக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் இணைந்து அளித்துள்ள அந்த உறுதிமொழிக்குழு புத்தகத்தில், நீங்கள் 1979ஆம் ஆண்டு 671 உறுதிமொழிகளைக் கொடுத்து ஒன்று கூட நிறைவேற்றாமல், பதிவுகூடச் செய்யாமல், 671ஐ நிலுவையிலே வைத்திருக்கின்ற இந்த ஆட்சியாளர்களிடத்தில், தேர்தல் நேரத்து உறுதிமொழிகள் என்னவாயிற்று என்று நான் கேட்பது உள்ளபடியே என்னுடைய குற்றம்தான். இருந்தாலும், கேட்கவேண்டிய எதிர்க்கட்சியிலே இருக்கிற காரணத்தால் கேட்டுத் தீர வேண்டிய கட்டாயத்தின் காரணமாகக் கேட்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே, கொள்கை விளக்கங்கள் என்ன இருக்கின்றன? இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்கள் என்ன இருக்கின்றன?

தேசீயமயம், அதை எதிர்த்து, நம்முடைய ஹாஜா ஷெரீப் ஒரு வார்த்தை, ஒரு கடுகளவு சொல்வாரேயானால்,

கம்யூனிஸ்ட் தோழர்கள் சீறிப் பாய்ந்த காட்சியை எல்லாம் நான் இங்கே பார்த்தேன். ஆனால், தேசீயமயக் கொள்கைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே தரப்பட்டிருக்கிற முக்கியத்துவம் என்ன? பஸ்கள் மாவட்ட ரீதியாக தேசீயமயமாக்கப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, அது உச்ச நீதிமன்றத்திலே ஸ்டே வாங்கப்பட்டு, இன்றைக்கு முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையிலே இரண்டு மாவட்டங்களிலே பஸ்கள் தேசீயவுடமையாக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார். அந்த ஸ்டே தளர்த்தப்படாமல் அவைகளைச் செய்ய இயலாது. நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வது, நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, அல்லது அரசைக் கேட்டுக்கொள்வது, அறிஞர் அண்ணாவினுடைய தேசீயமயக் கொள்கையில் நமக்கு நம்பிக்கையிருக்குமேயானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே படிப்படியாக தொடர்ந்து நிறைவேற்றி, இறுதியாக மாவட்ட வாரியாக பஸ்களை எல்லாம் தேசீயமயமாக்கிய திட்டத்தை, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக, ஸ்டே வாங்கி தேக்கி வைத்திருக்கிறார்கள். அந்த வழக்கை விரைவுபடுத்தி, உடனடியாக பஸ்கள் அனைத்தையும் தேசீயமயமாக்குகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

36 நூற்பாலைகளைப் பற்றி நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தேசீய மயக் கொள்கையிலே ஊறித் திளைத்து இருக்கிற பல தோழர்களின் உள்ளங்களிலே ஏன் பதியவில்லை, ஏன் உறுத்தவில்லை என்று எனக்குப் புரிய வில்லை. 36 நூற்பாலைகளையும் தனியார்களே நடத்துவார்கள். அதுவும் எப்படிப்பட்ட நேரத்தில்? நாவலர் அவர்களே கூறியிருக்கிறார்கள், நூற்பாலைகள் எல்லாம் வளமாக இருக்கின்றன லாபகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அப்படிப்பட்ட நேரத்தில் 36 நூற்பாலைகளை தனியார் நடத்த வேண்டுமா? அதிலே 36ம் இல்லாவிட்டாலும் ஒரு 20ஐயாவது அரசாங்கம் எடுத்து நடத்தக்கூடாதா? தேசீய மயக் கொள்கை அடிப்படையில் நடத்தக் கூடாதா? அந்தக்

கொள்கைகள் எல்லாம் இடம் பெறாத ஒரு நிதி நிலை அறிக்கை இது என்பதை நான் சுட்டிக்காட்டுவது எப்படித் தவறாகும்?

எனவேதான் கருணாநிதி எதிர்க்கவில்லை என்று சொன்னார்கள். பொய் நெல்லைக் குத்தி கை நெல்லையும் விட்டவர் என்றெல்லாம் கதை பாடினார்கள், கவிதை பாடினார்கள். நிதிநிலை அறிக்கையிலேதான் பொய் நெல் நிறைய குத்தப்பட்டிருக்கிறது. அதைத்தான் இங்கே காணமுடிகிறது. தேர்தல் நேரத்து வாக்குறுதிகள் எல்லாம் பொய் நெல்லாக ஆக்கப்பட்டு இன்றைக்கு கை நெல்லும் விடப்பட்ட கதையாக வாக்காளப் பெருமக்களுக்கு ஆகி இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இருந்தாலும், நான் இந்த நிதி நிலை அறிக்கையை எதிர்க்கவில்லை. எதிர்த்தால் நீங்கள் அறிவித்து இருக்கிற குறைந்த பட்ச நலன்களை நான் எதிர்த்ததாக ஆகிவிடும். கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளித்திருக் கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன். நான் பொதுவாக நிதிநிலை அறிக்கையை எதிர்க்கவில்லை. ஏனென்றால் நீங்கள் 1½ கோடி வரிச்சலுகை அறிவித்திருக்கிறீர்களே, அதையும் எதிர்த்ததாக ஆகிவிடும். ஆகவேதான் எதிர்க்கவில்லை. அதேபோல பாராட்டவும் முடியவில்லை. பாராட்டினால் இவனே பாராட்டிவிட்டான். இனிமேல் ஒன்றும் செய்யவேண்டாம் என்கிற மதமதப்பு எங்கே வந்துவிடுமோ என்ற பயத்தால் உங்களைப் பாராட்டவும் பயப்படுகிறேன். ஆகவே பாராட்டவில்லை. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு கண் துடைப்பாக இருக்கிறதே அல்லாமல், கண் ஒளி தருவதாக அமையவில்லை என்று சுட்டிக்காட்டி நிதிநிலை அறிக்கை பற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகளை இந்த அளவோடு கூறி அமைகிறேன், வணக்கம்.

உரை : 19 நாள் : 06.03.1982

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளும் கட்சி அந்தந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வைப்பதும் திட்டங்களுக்கான வழிவகைகளை எடுத்துக்காட்டுவதும் இதுவரையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளையும் அவைகள் களையப் படும் நிலையில் எதிர்காலத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அறிவுரைகளை கூறுவதற்கு ஆக்கபூர்வமாக கடமைப்பட்டது எதிர்க்கட்சி ஆகும். எனவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே வைத்துள்ள நிதிநிலை அறிக்கைக்கு எதிர்க்கட்சியிடமிருந்து வெறும் பாராட்டுகளை மட்டும் எதிர்பார்ப்பாரேயானால் அது அவருக்கும் அரசுக்கும் பயன்படாது என்ற காரணத்தினால் நிதியமைச்சர் நாவலர் அவர்களின் மொழியில் சொல்வதானால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், 1957ல் தேர்தலிலே போட்டியிட முடிவெடுத்த காலம் தொட்டு, 1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பை ஏற்ற காலம் வரையில் அவர் மறக்காமல் ஒவ்வொரு கட்டத்திலும் அழுத்தம் திருத்தமாக சொல்லி வந்தது எதிர்க்கட்சி என்பது ஆளும் கட்சிக்கு ஒரு மூக்கணாங்கயிறு போல; எதிர்க்கட்சி என்பது ஆளும் கட்சி என்ற சகடம் சுழல்வதற்கு ஒரு அச்சாணி போல; எதிர்க்கட்சிதான் ஆளுங்கட்சிக்கு ஒரு கடிவாளம் போல. எனவே எதிர்க்கட்சி இல்லாத ஆளுங்கட்சி கடிவாளம் இல்லாத குதிரையாக மூக்கணாங்கயிறு இல்லாத காளையாக,

தார்க்குச்சி இல்லாத எருதாக ஆகிவிடும் என்று நாவலர் அவர்கள் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எனக்கு அந்தப் பாணியிலே சொல்ல வராவிட்டாலும் அந்தக் கருத்துக்கள் என்னுடைய உள்ளத்திலே பதிந்துபோய் இருக்கின்ற காரணத்தால் இன்றைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எடுத்துக் காட்டப்படுகிற குறைபாடுகளை முறைகேடுகளை நெஞ்சில் நிறுத்தி அரசு மக்களுக்காக நேரிய முறையில் செம்மையான வழியில் திட்டங்களைத் தீட்டுவதற்கு பயன்படுத்திக் கொள்வார் என்று நம்பி எதிர்பார்த்து கருத்துக்களை நான் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் 3ஆம் பக்கத்திலே ஒரு குறிப்பினைத் தந்திருக்கிறார்கள். அந்தக்குறிப்பு ''நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது, மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிமைகளையெல்லாம் கூட்டியதால் ஏற்படும் மொத்த வலிவுதான் என்றால், வாதத்திற்கு ஏற்றது. அரசியலுக்கு நல்லது; காரியத்துக்கும் உகந்தது என்று குறிப்பிட்டு உணரத்தக்கதாகும். இதனை இந்த அவையிலே வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்'' என்று நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 3ஆம் பக்கத்திலே குறிப்பிட்டிருக் கிறார்கள்.

நானும் கடந்த காலத்திலே அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை அல்லது அவர்கள் ஆற்றிய உரைகள் இவைகளையெல்லாம் தேடித்தேடி பார்த்தேன். ஆனால் அவர்களால் 3ம் பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற அண்ணன் அவர்களுடைய அந்த மொழி எந்த இடத்திலும் காணவில்லை. பிறகுதான் எனக்கு ஒரு சிந்தனை வந்தது. அந்தக் கருத்தை நாவலர் அவர்கள் எதிலிருந்து எடுத்திருப்பார்' என்று பார்த்தபோது எனக்கு 1974ஆம் ஆண்டு பசுமையாக நினைவு வந்தது. இதே

மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சார்பிலே மாநில சுயாட்சித் தீர்மானம் கொணரப்பட்டு அப்போது எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணா அவர்கள், மாநில சுயாட்சி பற்றிக் கூறவே இல்லை என்று மிகக் கடுமையாக வாதிட்ட நேரத்திலே என்னுடைய நண்பரும், மாண்புமிகு அமைச்சருமான திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் அன்றைக்கும் அமைச்சராக இருந்த நேரத்திலே அண்ணா அவர்கள் இல்லஸ்ட்டிரேட்டட் பத்திரிகைக்கு தந்த பேட்டியில் நினைவுபடுத்தி அண்ணா ''ஃபுல் அட்டானமி'' மாநிலங்களுக்குத் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று எடுத்துக்காட்டியும் அண்ணா தி.மு.க.வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் மாநில சுயாட்சி எற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியபோது நான் தலைவராகவும், நாவலர் அவர்கள் பொதுச் செயலாளராகவும் பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அண்ணா அவர்களுடைய பேருரை ஒன்று வெளியிடப்பட்ட 'அண்ணா அவர்களுடைய மாநில சுயாட்சி முழக்கம்' என்பதுதான் அந்த நூலின் தலைப்பு. நாவலர் அவர்கள் அந்தக் கருத்தை எடுத்தார்கள் என்பது பிறகுதான் எனக்கு புரிந்தது. அண்ணா அவர்கள் இந்த அவையிலே ஆற்றிய உரை இல்லாது திராவிட முன்னேற்றக் கழகத்தில் சார்பிலே வெளியிடப்பட்ட அண்ணா அவர்களின் மாநில சுயாட்சி என்ற புத்தகத்திலே ''நமக்கு இருக்கிற கவலை எல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது, மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிமைகளையெல்லாம் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால், வாதத்திற்கு ஏற்றது; அரசுக்கு நல்லது; காரியத்துக்கும் உகந்தது. ஆனால் மத்திய அரசு எல்லா உரிமைகளையும் பலத்தையும் வைத்திருக்கும், மாநிலங்கள் தத்தித்தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கிறது என்றால் அது எதற்கும் பொருத்தம் உடையதல்ல'' என்று காணப்படுகிற அந்தக் கருத்துக்களை மாநில சுயாட்சி மாநாட்டிலே அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியதை இங்கே

1974ஆம் ஆண்டே நாம் எடுத்துச் சொன்ன நேரத்திலே அண்ணா தி.மு.க.சட்ட மன்ற உறுப்பினர்கள் நம்பவில்லை.

நாவலர் அவர்கள் தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க.விற்குப் போய்விட்டாரே என்ற கவலை எனக்கு நெடுநாள் இருந்தது. ஆனாலும் அங்கு சென்றதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அண்ணாவினுடைய மாநில சுயாட்சி என்கின்ற அந்தப் புத்தகத்தினுடைய கருத்துக்களை முதலமைச்சருக்குத் தெரிந்தோ தெரியாமலோ அல்லது அந்த அமைச்சரவையிலே இருப்பவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, எப்படியோ நுழைந்துவிட்ட பெருமை நம்முடைய நாவலர் நிதியமைச்சர் அவர்களைச் சாரும் என்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். போனாலும் பரவாயில்லை. நல்ல கருத்துக்களை நாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அங்கிருந்து ஒலிக்கின்ற அளவிற்கு நாவலர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவினுடைய மாநில சுயாட்சி முழக்கம் என்ற புத்தகத்திலேயிருந்து இந்தக் கருத்தை எடுத்து ஆண்டதற்கு நான் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.

ஏழாவது நிதிக் குழுவிற்கு அளிக்கப்பட்ட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அளிக்கப்பட்ட குறிப்பு 77லிலே அச்சேற்றி வெளியிடப்பட்டது. அந்தக் குறிப்பிலே கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சார்பிலே சொல்லப் பட்ட கருத்து.

''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதற்பிரிவே இந்தியா என்பது மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்த ஒரு அமைப்பு என்று விவரிக்கின்றது. எனவே, மொத்தத்தில் பார்க்கப் போனால் மத்திய மாநில நிதி உறவுகளை முறைப்படுத்துகின்ற கொள்கை அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசுக்கு எனவும், மாநில அரசுகளுக்கு எனவும் ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கும் அலுவல்களுக்கும் முற்றிலும் இயைந்த முறையில் நிதி வகையில் தன்னாட்சியை உறுதிப்படுத்துவதாய் இருக்கவேண்டும். இந்தியக் கூட்டாட்சி அமைப்பு மத்திய அரசும் மாநில அரசுகளும் சம உரிமை உள்ள கூட்டு பங்குதாரர்களாகக் கருதப்பட வேண்டும்.''

இது கழக ஆட்சிக் காலத்திலே, ஏழாவது நிதிக் குழுவுக்கு அளிக்கப்பட்ட குறிப்புகளில் காணப்படுகின்ற வாசகமாக இந்த வாசகத்தை ஒட்டித்தான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட நிதியமைச்சரவர்கள், மாநிலங்களின் ஆதாரங்களையும், அதிகார அளவுகளையும் பெருக்கு வதற்காக வழி வகைகளை மத்திய அரசு காண வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். அந்தக் கருத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன்.

மாநிலத்தினுடைய நிதி வருவாய்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது விற்பனை வரி என்பதை நாம் மறந்துவிடுவதிற்கில்லை. மாநிலப் பட்டியலிலே உள்ள விற்பனை வரியைப் பல பொருள்களின் மீது நீக்கிவிட்டு அதற்குப் பதில் எக்சைஸ் வரி போடுவதற்கான திட்டம் குறித்து மத்திய அரசு ஒரு ஆய்வுக்குழுவை மோகன்லால் சுகாதியா அவர்களுடைய தலைமையிலே அமைத்தது. அந்தக் குழுவினுடைய அறிக்கையை நாடாளுமன்றத்திலே மாநிலங்கள் அவையிலே தாக்கல் செய்யப்பட்டபொழுது மேற்கு வங்கம், கேரளம், காஷ்மீரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு கடும் ஆட்சேபணைகளைத் தெரிவித்தார்கள். மேற்சொன்ன மூன்று மாநில அரசுகளும் இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன என்பதை மத்திய அரசின் அறிக்கையும் சுட்டிக்காட்டுகிறது.

நேற்றையதினம் மாண்புமிகு நண்பர் திரு. சங்கரையா அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கூட வருவாய்த் துறை அமைச்சரவர்கள் குறுக்கிட்டு, தமிழக அரசின் சார்பிலேகூட அதற்கான எதிர்ப்புக்கருத்து இரண்டு முறை டெல்லியிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த அறிக்கை நாடாளுமன்ற அவைகளிலே விவாதிக்கப்பட்டபொழுது இந்தக் கருத்தை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மிக அழுத்தந்திருத்தமாக, கட்சியினுடைய உறுப்பினர் கோபால்சாமி அவர்கள் அங்கு எடுத்துச் சொன்ன அவ்வார்த்தைகளை இங்கே நினைவூட்டுவது மெத்தப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அவர் பேசினார், ''தி.மு.கழகத்தின் சார்பில் என்னுடைய

பலத்த கண்டனத்தை மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து ஆணித்தரமாக தெரிவிக்க விரும்புகிறேன். மாநிலங்களின் அதிகாரங்கள் மீதும், உரிமை மீதும் ஆக்கிரமிப்பு நடத்துவதற்காக மத்திய அரசு இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மாநிலங்களின் நிதி ஆதாரங்கள் ஏற்கனவே மிகவும் குறைவாக உள்ளன. அதிக ஆதாரங்களுக்காக மாநில அரசுகள் பல காலமாக வற்புறுத்தி வருகின்றன. விற்பனை வரியை நீக்கி விட்டு எக்சைஸ் வரியைப் போட்டு மத்திய அரசு நிதி ஆதாரத்தை மாற்றுவதன் மூலம் மாநில அரசுகளை சக்தியற்றவைகளாக ஆக்கி மத்திய அரசின் தயவுக்காக மாநில அரசுகள் காத்துக்கிடக்க வேண்டிய நிலையை உருவாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ என்று அஞ்சுகிறேன். மாநில அரசுகளை வெறும் பொம்மை அரசுகளாக ஆக்க போடப்பட்ட திட்டமாகும் என நான் குற்றஞ்சாட்டுகிறேன். நாடாளுமன்றத்திலே கருத்துக்களைக் கேட்காமலேயே இந்த அளவுக்கு வந்து ஒரு குழுவை நியமித்திருப்பது ஜனநாயக விரோத செயலாகும்'' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நண்பர் கோபால்சாமி அங்கே கருத்தறிவித்தார். எனக்குள்ள சங்கடம் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட அதிகமான மாநிலங்களவை உறுப்பினர்கள் இருந்தும் அண்ணா தி.மு.க.வின் சார்பில் ஒரு உறுப்பினர்கூட அந்த அறிக்கை விவாதிக்கப்படுகிற நேரத்திலே, தங்களுடைய எதிர்கருத்துக்களை எடுத்துச் சொல்லவில்லை என்பதுதான் எனக்கிருக்கிற ஆதங்கமும் ஆச்சரியமும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலே மாத்திரமல்ல, மொழிக் கொள்கையிலே கூட நாம் மிகத் தீவிரமாக இருப்பதாக இங்கே இந்த அரசு பேசிக் கொண்டிருக்கிறது. ஜனதா ஆட்சி நடைபெற்ற காலத்தில், இன்றைக்குள்ள நிலையை விட மிக வேகமாக இத்தகைய இந்தி பேசாத மாநிலங்களிலே திணிக்கின்ற முயற்சி நடைபெற்ற பொழுது அதை எதிர்த்து ஒரு தனியார் தீர்மானம் முரசொலி மாறன் வாயிலாக தரப்பட்டு, தனியார் தீர்மானத்திற்கான நாட்கள் ஒதுக்கப்பட்டு, 1 மாத காலம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. அந்த விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்தி திணிக்கப்பட வேண்டும். இந்தி பரவலாக்கப்பட வேண்டுமென்ற கருத்தைக் கூட, எடுத்துச் சொல்கின்ற அளவுக்கு இந்தி ஆதரவாளர்களாக இருக்கின்ற கட்சிக்காரர்கள் அந்த வாதத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற ஆளுங்கட்சியான அண்ணா தி.மு.கவின் சார்பிலே மாநிலங்கள் அவையிலே யாரும் கலந்து கொண்டு அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதாகத் தெரியவில்லை.

எனவே அண்ணாவினுடைய இருபெரும் கொள்கைகள் மாநில சுயாட்சி, பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழை, தமிழர்களைக் காப்பாற்றுதல் ஆகிய இந்தச் செயல்களில் மாநிலங்கள் அவையிலே பணியாற்றுகின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை விட எண்ணிக்கையிலே அதிகம் கொண்டவர்கள் அக்கறை செலுத்தவில்லையென்பதை நான் சுட்டிக்காட்டத்தான் இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு.) நீங்கள் பேசியிருக்கலாம், மாநிலங்களவை உறுப்பினர்கள் பேசவில்லையென்றுதான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன்.

தேசியமயக் கொள்கைத்திட்டம் - ஒவ்வொரு வரவு செலவு திட்டத்திலும் கொஞ்சங்கொஞ்சமாகத் தேய்ந்து, மாய்ந்து, குறைந்து போகிற நிலைமையைத்தான் எங்களால் காண முடிகிறது. ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள பேருந்துகளையும் தேசியமயமாக ஆக்குவது என்கின்ற ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே பேருந்து அதிபர்களால் வழக்கு தொகுக்கப் பட்டு, அரசுக்கு சாதகமாக அந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டு, பிறகு அவர்கள் 1975ஆம் ஆண்டுவாக்கில் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்கள். 1975க்குப் பிறகு 7 ஆண்டுக் காலம் உச்ச நீதிமன்றத்திலே இந்த விவகாரம் உறங்கிக் கொண்டிருக்கிறதே அல்லாமல், அதை விரைவு படுத்தி பேருந்துகளை தேசியமயமாக்கிட திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்ற பணியிலே இந்த அரசு இறங்கவில்லை

என்பதையும் நான் ஒரு பெரும் குறைபாடாக இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையிலே மின்சார உற்பத்தியை இனிமேல் யாரும் செய்யலாம். அது இலாபகரமாக இருக்குமேயானால் அரசுக்கு ஆதாயம் தரத்தக்கதாக இருக்குமேயானால், தனியார் மின்சார உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுவார்களென்று, அவர்களுக்கு உரிமை வழங்கிவிட்டு, நிதிநிலை அறிக்கையிலே சர்க்கரை ஆலைகளைப் பொதுத்துறை ஏற்று நடத்த முன்வராவிட்டாலும் கூட்டுறவுத்துறை ஏற்று நடத்த முன்வராவிட்டால், அவர்களையும் கூட தனியார்களே நடத்தலாம் என்று கூறியிருப்பது எந்த வகையிலே தேசிய மயக் கொள்கைக்கு, பொது உடைமை கொள்கைக்கு, உடைமைகள் அரசின் பொது உடைமைகளாக காக்கப்பட வேண்டுமென்ற கொள்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் தரத்தக்கவை என்பதை ஆட்சியினர் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடுகளில் 1981-82 நிதிநிலை அறிக்கைக்கும் 1982-83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைக்கும் உள்ள சில முரண்பாடுகளை நான் நிதி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர், நான் இங்கே எடுத்து வைக்கின்ற இந்த முரண்பாடுகளை தீர யோசித்து, வேண்டுமானால் அதிகாரிகளோடு கலந்து பதில் அளிப்பதற்கு நிறைய நேரம் இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு உடனடியாக அவர் பதில் அளிக்கப் போவதில்லை. காரணம் அனைவரும் ஒத்துக் கொண்ட வேறொரு அலுவல் காரணமாக அவர் விமான நிலையம் செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தால், இடையிலே ஒரு நாள், 1½ நாள் எடுத்து கொண்டு இந்த கருத்துக்கள் சரிதானா அல்லது நான் புரிந்து கொண்டது தவறா என்பது பற்றிய அறிவிப்பை நிதி அமைச்சர் தருவதற்கு ஏதுவாக நான் தொடர்ந்து இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இது 1981-82க்கான நிதிநிலை அறிக்கை, இதிலே 21ம் பக்கத்தில் 28வது பாராவில், ''சாலை வசதி'' என்ற தலைப்பில்

ஒரு கருத்து. ''1500 மக்கள் கொண்ட கிராமங்கள் பயனடையும் வகையில் சாலைகள் அமைத்துச் சீரமைக்கும் பணியை அரசு படிப்படியாக செய்து வருகிறது. ஐந்து நிலைகளைக் கொண்ட இத்திட்டத்தின் கீழ் 28.25 கோடி ரூபாய் மூலதனச் செலவில் மொத்தம் 4819 கிலோமீட்டர் கொண்ட சாலைகள் 2,789 கிராமங்களில் அமைக்கப்படும். நடப்பாண்டில் தன்னிறைவு வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கு இத்தொகை 7 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது. ஆறாவது திட்டக் கால அளவில் இதற்கென மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.'' இங்கேதான் கவனிக்க வேண்டும். ''ஆறாவது ஐந்தாண்டு திட்டக் கால அளவில் இதற்கென மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது'' என்று 1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 1982-83ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே சாலைகள் என்ற தலைப்பில், 32ம்பக்கம், 58வது பாராவில், ''தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1500க்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. அதே திட்டத்தின் கீழ், சாலை மதகுகள் கட்டப்பட்டுவருகின்றன. 1981-82ஆம் ஆண்டில் சாலைகளுக்காகவும் மதகுகளுக்காகவும் ஏறத்தாழ 43 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படியானால் நடந்த ஆண்டு நீங்கள் இங்கே வைத்த நிதிநிலை அறிக்கையின்படி 40 கோடி ரூபாய் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் கால அளவிலே செலவழிக்கப்படும் என்று கூறி இருக்கிறீர்கள். இப்போது 1981-82லே இந்த மார்ச் மாதம் முடிந்தால் இந்த நிதி ஆண்டு முடிந்துவிடுகிறது. இந்த 1981-82ஆம் ஆண்டில் சாலைகள் மதகுகள் ஆகியவற்றிற்காக ஏறத்தாழ 43 கோடி செலவழிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அது செலவு செய்யப்பட்டிருக்கும் என்று பொருள். இந்த முரண்பாடு எனக்கு விளங்கவில்லை. அதற்கான விளக்கத்தை நிதி அமைச்சர் தன்னுடைய பதில் உரையிலே தெரிவிப்பார் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து 1981-82ம் ஆண்டில், குடிசைமாற்று வாரியத்தை பற்றி ஒரு கருத்து பக்கம் 35, பாரா 45லே குறிப்பிடப்பட்டுள்ளது. ''குடிசை மாற்று வாரியத்தின் பணி நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. 1980வரை, 29 கோடி ரூபாய் செலவில் 2000 அடுக்குத் தொடர் வீடுகள் (டெனமன்ட்ஸ்) கட்டப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.3.24 கோடி செலவில், அத்தகைய வீடு 3200 கட்டி முடிக்கப் பெறுமென எதிர்பார்க்கப் படுகிறது'' என்று சொன்னார்கள். எப்போது? 1981-82லே சொன்னார்கள். 1981 மார்ச்சு வரையில் கட்டப்பட்ட வீடுகள் 29 கோடி ரூபாய் செலவு மறுபடியும் ஒதுக்கியது 3 கோடி. மொத்தம் 32 கோடி ரூபாய். 32 கோடி ரூபாயாக இருக்க வேண்டும். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பற்றி குறிப்பிடுகிறபோது 31ம் பக்கம் 6வது பாராவிலே குடிசை மாற்று வாரியத்தின் பணி செவ்விய முறையில் நடந்தேறி வருகிறது. 1980-81 வரையில் சுமார் 35 கோடி செலவில், 31 ஆயிரம் குடியிருப்புக்கள் கட்டப்பட்டுள்ளன.'' 35 கோடி என்கிறார்கள். அதாவது 29 கோடி. மறுபடியும் 3 கோடி. ஆக 32 கோடியில் கட்டப்படும் என்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறுகிறீர்கள். இந்த ஆண்டு 35 கோடி ரூபாயில் 31 ஆயிரம் குடியிருப்புகளுக்காக இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். கட்டப்படுகின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை மூவாயிரத்து சொச்சம்தான். ஆனால் 3 கோடிக்கு மாறாக 6 கோடி ரூபாய் என்று அதிகமாக சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த முரண்பாட்டுக்கும் எனக்கு விளக்கம் தேவை.

மூன்றாவது கிராம வீட்டு வசதித் திட்டம். கிராம வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் (பக்கம் 34, பாரா 44) 1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 1980 ஜூலை முதல் 1981 பிப்ரவரி வரையிலான கால அளவில் 73,756 கடன் மனுக்களுக்கு 22.68 கோடி ரூபாய் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அக்கால அளவில் 19,952 வீடுகள் கட்டி முடிக்கப் பெற்றன. அந்தக் கால அளவு எத்தனை மாதம். ஜூலை 80 முதல் பிப்ரவரி 81 வரை 8 மாதம். அதில் கிட்டத்தட்ட 20,000 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டன. இந்த

1981-82ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது, நிதி ஆண்டு முடிய இன்னும் ஒருமாதம் தான் குறைவு. ஆனால் நீங்கள் இங்கே குறிப்பிட்டு இருப்பது, 1980-81ல் 40,851 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டன என்று சொல்கிறீர்கள். நிதி ஆண்டில் 8 மாத காலத்தில் ஜூலை 80 முதல் 81 பிப்ரவரி வரையில் 20 ஆயிரம் வீடுகள் கட்டியிருக்கிற போது, ஒரே மாதத்தில் மேலும் 20000 வீடுகள் எப்படி கட்ட முடிந்தது. எப்படி சாத்தியம் ஆனது எப்படி 20,000 வீடுகள் 40,000 வீடுகள் ஆனது, என்பதற்கான விவரங்கள் தேவை. இப்படி ஆண்டு வரவு செலவுத் திட்டங்களிலே 1981-82, 1982-83 தரப்பட்ட திட்டங்களிலே இத்தகைய வேறுபாடுகள் இருக்கின்றன என்றால் ஏராளமாக இத்தகைய வேறுபாடுகள் மலிந்து கிடக்கின்றன என்பதற்குச் சான்றாக நான் இரண்டொன்றை இங்கே குறிப்பிட்டேன். இவற்றிற்கான விளக்கங்களை நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தருவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து இந்த அறிக்கையில் இரண்டு வயது முதல் 10 வயது வரையிலான குழந்தைகளுக்கு சத்துணவு தரப்படும் என்று ஒரு அறிவிப்பு தரப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பைக் கூட வரவேற்க மாட்டீர்களா என்று ஆளும் கட்சி தரப்பிலே கேட்கக்கூடும். இந்த அறிவிப்பை பார்த்தவுடன் யாருக்கும், மேலேழுந்த வாரியாக வரவேற்கத்தான் தோன்றும். இந்த வகையிலேதான் இரண்டு வயது முதல் 10 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவசமாகச் சத்துணவு வழங்கப்படும் என்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் எனக்கு இருக்கும் சந்தேகம் எல்லாம் இதைவிடக் கவர்ச்சிகரமாக அறிவித்த திட்டங்கள் - பொது மேடைகளிலே அல்ல - தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டவைகள் அல்ல. இந்த அவையிலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே தரப்பட்ட திட்டங்கள். அவைகளின் கதி என்ன என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இதனைச் செயலாற்றுவார்களா என்று ஐயுறத்தான் தோன்றுகிறது.

5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாமாக வழங்கப்படும் என்று பொதுவாக தேர்தல் காலத்தில் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு தேர்தல் அறிக்கைக்குப் பிறகு நிதி அமைச்சர் அவர்களால்

சட்டமன்றத்திலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே அது தெரிவிக்கப்பட்டு, யார் யார் அந்த ஒரு கிலோ அரிசியை பெறத் தகுதி உள்ளவர்கள் என்று கூறு காட்டினார்கள். எப்படியென்றால், முதியோர் உதவித் தொகை பெறுவோர், கைம்பெண் உதவித்தொகை பெறுவோர், கண்ணொளி இழந்து உதவித்தொகை பெறுவோர் மற்றும் ஊனமுற்று அதன் காரணமாக உதவித்தொகை பெறுவோர் என்று ஒரு பெரிய பட்டியலைத் தருவார்கள். ஊனம் உற்றவர்கள் எல்லாம் உதவித் தொகை பெறுகிறார்களா என்றால் இல்லை. முதியோர் எல்லாம் உதவித்தொகை பெறுகிறார்களா என்றால் இல்லை. கைம்பெண் எல்லோரும் உதவித்தொகை பெறுகிறார்களா என்றால் இல்லை, இருப்பினும் அப்படி ஒரு நிபந்தனை வைத்து, ஒரு வரையறை வைத்து அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அவர்களின் மொத்த கணக்கு 4 கோடிக்கு மேற்பட்டு மக்கள் தொகை இருக்கும் தமிழ் மண்ணில் 1 லட்சம் பேருக்குத்தான் இந்த கணக்கு வந்தது. சுமார் 1 லட்சம் பேருக்கு வாரம் 1 கிலோ அரிசி என்று அந்தத்திட்டம் மாற்றம் செய்யப்பட்டு 1980-81ம் ஆண்டு அறிக்கையிலே அறிவிப்பு செய்தார்கள். ஆனால் இப்போது எவ்வளவு பேர் பெறுகிறார்கள் என்ற விவரம் தரப்படவில்லை. அதை நிதி அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று நினைக்கிறேன். 5 கிலோ அரிசி வாங்கினால் 1 கிலோ அரிசி தரப்படும் என்கிற அந்தத் திட்டம் கரைந்துபோய்விட்டது. நலிந்து போய்விட்டது என்பதற்குத்தான் இதை எடுத்துக்காட்டாகச் சொன்னேன்.

1980-81 ஆம் ஆண்டிலே நிதிநிலை அறிக்கையில் ஒரு கருத்தைத் தெரிவித்தீர்கள். தாலிக்கு தங்கம் பற்றிய கருத்து. பொற்கொல்லர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்காக, வேலையற்றிருக்கும் பொற்கொல்லர் பற்றிய விவரங்கள் உடனடியாக தொடங்கப்படும். அதன் அடிப்படையில் பொற் கொல்லர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏழை எளியவர்களுக்கு மலிவு விலையில் திருமணத்தாலி செய்து தரும் திட்டம் இதன் மூலம் செயல்படுத்தப்படும். இது 1980-81ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 23-24ம் பக்கத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வாசகங்கள் ஆகும்.

ஆனால் அது நிறைவேற்றப்பட்டதா அந்த ஆண்டில்? பொற்கொல்லருடைய கூட்டுறவுச் சங்கம் காணப்பட்டதா? அது வடிவெடுத்ததா? அங்கே இந்த தாலிகளை செய்கிற தொழில் அவர்களுக்குத் தரப்பட்டதா? அந்தத் தாலிகள் ஏழை எளியவர்களுக்கு மலிவு விலையில் வழங்கப்பட்டதா? 1980-81ஆம் ஆண்டுத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது.

அதற்குப் பிறகு 1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 36ல் வேறு ஒரு கருத்தைச் சொன்னீர்கள். குறைந்த விலையில் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். பொற் கொல்லர்களைக் காணவில்லை. என்ன ஆனதோ தெரியவில்லை.

1981-82ஆம் ஆண்டு முதல் கட்டமாக ஏழை கைம் பெண்கள் மகளிர் திருமணத்திற்கு குறைந்த விலையில் தாலிக்குத் தங்கம் வழங்கப்படும். இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தொகையையே ஒதுக்கி, இதோ ஒதுக்கிவிட்டோம் தாலிக்குத் தங்கத்திற்காக என்று நிதிநிலை அறிக்கை முழக்கமிட்டது. இந்த நிதியாண்டில் அது செயல்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. மார்ச் 3ந்தேதி வெளிவந்த ஆங்கில ஏடுகள் சிலவற்றிலே என்ன செய்தி வந்திருக்கிறது.

The Scheme of supplying Thalis for marriage of daughters of poor widows has been abandoned by the AIADMK Government. A provision of Rs.10 lakhs was made in the 1981-82 Budget for the Scheme with the assurance that a beginning could be made by giving Thali at subsidised cost.

After careful consideration for nearly a year the Government has now decided to grant a marriage allowance of Rs.1000 instead of Thali. According to Government order 1000 widows will be granted this allowance before the end of March 31, 1982.

கவனிக்கவேண்டிய இடம் Before the end of March 1982. அதுதான் நிதி ஆண்டு. 10, இலட்சம் ரூபாய் ஒதுக்கினீர்களே சென்ற ஆண்டு, அது இந்த ஆண்டு, 1982ஆம் ஆண்டு மார்ச் 31ந்தேதிக்குள் செலவழிக்கப்படவேண்டும்.

To meet marriage expenses of one of their daughters who are in the 18-30 age group. Among the conditions totally eight numbers for grant of marriage assistance were "the mother of the bride should furnish proof that she is a widow."

Her annual income should not exceed Rs. 3000.

The family of the widow should not have an Adult Member to support her financially and

a widow has remarried is not eligible for the assistance.

"The application must be made to the authorities three months before the marriage."

இப்படி 7, 8 நிபந்தனைகளைப் போட்டு, அந்த விதவை இவ்வளவு ஏழ்மையாக இருக்கவேண்டும். அந்த வீட்டில் ஒரு (அடல்ட்) ஒரு வயது வந்தவர் ஆதாரமாக இருந்திடக் கூடாது. அந்த விதவை மறுமணம் செய்து கொள்கிற விதவையாகவும் இருந்திடக்கூடாது. இந்த நிபந்தனைகள் எல்லாம் பொருத்தமானவைதானா? விதவையாக இல்லாமல் ஒரு ஏழை தாய், ஒரு வயதான கணவன், 70 வயதோ, 80 வயதோ உள்ள ஒரு கணவன், அவருடைய மனைவி அவர்களுக்கு ஒரு மகள் இருந்தால் அந்தக் கணவன் சம்பாதிக்க முடியாத சூழ்நிலையில் அந்த மகளுக்குத் திருமணம் என்றால் ஆயிரம் ரூபாய் தர மாட்டீர்களா? அதற்காக அவர்களுடைய கணவன் இறந்து போகும் வரை அந்த அம்மாள் காத்திருந்து, அவர்கள் கைம்பெண்ணாகி அதற்குப்பிறகுதான் தன்னுடைய மகளுக்கு திருமணம் செய்து வைக்க உங்களிடத்திலே ஆயிரம் ரூபாயை பெற்றுக்கொள்ள வேண்டுமா?

அது மாத்திரமல்ல. மறுமணம் செய்து கொண்டால் கிடையாது. மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது சுய மரியாதை இயக்கத்தினுடைய ஒரு பெரிய தத்துவக் கருத்து.

''கோரிக்கையற்று கிடக்குதண்ணே இங்கே
வேரில் பழுத்த பலா''

என்று என்னைவிட நாவலர் அழகாக பாரதிதாசனுடைய பாடல்களை எத்தனையோ கூட்டங்களில் சொல்லியிருக் கிறார்கள். அப்படி ஒரு ஏழை தாய், ஒரு ஏழை விதவை தன்னுடைய மகளுக்கு ஆயிரம் ரூபாய் பெற்று திருமணம் செய்துவிட்டு, தான் இன்னொரு கணவனை திருமணம் செய்து கொள்வது தவறு என்று, மறுமணம் செய்துகொள்கிற ஒரு புரட்சிகரமானத் திட்டத்தைக்கூட இந்த நிபந்தனைகள் மூலமாக நீங்கள் எதிர்க்கிறீர்களா இல்லையா என்று பெரியாருடைய சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் சார்பாக நான் மிகப் பணிவன்போடு இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று அல்லது நேற்று முன் தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே கூடச் சொல்லி இருக்கிறார்கள். ''ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று கேட்டார்கள், எனக்குத் தாலி கூட தேவையில்லை, கல்யாணச் செலவுக்கெல்லாம் பணம் வேண்டும். ஆகவே ஆயிரம் ரூபாயாகத் தந்துவிடுங்கள் என்று கேட்டார்கள். ஆகவே ஆயிரம் ரூபாயாகத் தரப்படுகிறது'' என்று சொன்னார்கள். ஆனால் வேடிக்கையும் வேதனையும் என்ன தெரியுமா?

"The application must be made authorities the three months before the marriage."

இது மூன்றாம் தேதி பத்திரிகையிலே வருகின்றது. இன்றைக்கு நாம் 6ஆம் தேதி கூடி இருக்கிறோம். இந்த மாதம் 31 ஆம் தேதிக்குள்ளாக இந்த நிதியாண்டு முடிந்துவிடுகின்றது. நீங்கள் ஒதுக்கிய 10 இலட்சம் ரூபாய் இந்த நிதியாண்டோடு முடிந்து விடுகிறது. இந்தப் பத்து இலட்சம் ரூபாயிலே ஆயிரம் ரூபாயை விதவைகள் தங்களுடைய பெண்களின் திருமணத்திற்காகப் பெற வேண்டுமேயானால் மூன்று மாதத்திற்கு முன்பு அப்ளிகேஷன் போட்டிருக்க வேண்டும். மூன்று மாதத்திற்குமுன் அப்ளிகேஷன் போட்டிருக்க வேண்டும் என்று மார்ச் மாதம் சொல்கிறீர்கள். இது சாத்தியமான காரியமா? இனிமேல் 3 மாதத்திற்கு முன் எப்படி அப்ளிகேஷன் போடுவது? இதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே தாலிக்குத் தங்கம் என்பது பொற்கொல்லர்

சங்கத்திலே ஆரம்பித்து அதற்குப் பிறகு தாலியே தரப்படும் என்று கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டு கைம்பெண்களுடைய பெண்களுக்குத் தரப்படும் என்று சொல்லப்பட்டு இப்போது ஆயிரம் ரூபாய் அந்த பத்து இலட்சம் ரூபாயிலே வழங்கப்படும் என்று சொல்லப்பட்டு அந்தப் பத்து இலட்சம் ரூபாயும் செலவழிக்கப்படாத சூழ்நிலையிலே மூன்று மாதங்களுக்கு முன்பே விண்ணப்பம் வந்திருக்க வேண்டும் என்று ஒரு பெரிய அணை போட்டு அந்தப் பத்து இலட்சம் ரூபாயும் செலவழிக்கப்பட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதற்கு வேறு என்ன மார்க்கம் தேடப் போகிறார்கள் என்று முதலமைச்சரும், நிதியமைச்சரும் கலந்து யோசித்து நாளை மறுநாள் எனக்கு விளக்கம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து நான் கடந்த கால நிகழ்ச்சிகளைச் சொன்னேனே அந்த வரிசையிலே அடுத்தது 1980-81 நிதிநிலை அறிக்கையிலே ஒன்று சொன்னீர்கள். ஏழ்மை நிலையிலே உள்ள கருவுற்ற மகளிருக்கு 7ஆம் மாதம் முதல் குழந்தை பிறந்த 4ஆம் மாதம் முடியும் வரையில் சத்துணவு வழங்கப்படும். மாதந்தோறும் அவர்கள் உடல்நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்துகள் வழங்கப்படும். இந்த வசதிகளுக்காக ஒவ்வொரு ஏழை மகளிருக்கும் 150 ரூபாய்க்கு குறையாமல் செலவிடப்படும் என்று சொன்னீர்கள். எவ்வளவு பேருக்குக் கொடுத்தீர்கள்? கொட்டாம்பட்டியிலே மாத்திரம் இந்தத் திட்டம் நிறைவேற்றப் படும் என்று 1980-81 அறிக்கையில் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டீர்கள். ஆனால் தமிழகத்திலே பரவலாக நிறை வேற்றப்படும் என்று பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாக கொட்டை எழுத்திலே செய்தி வெளியிடப்பட்டு வெளி வந்தது. நிதிநிலை அறிக்கையிலே காணப்பட்ட இந்தக் கருத்தின்படி 150 ரூபாய் பெற்ற கர்ப்பவதிகள் எத்தனை பேர்? அந்தக் கணக்கை நாளை மறுநாள் நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையிலே தருவார்கள் என்று நான் நம்புகிறேன். ஏன்

நம்புகிறேன் என்றால் அந்த அளவிற்கு தரப்படவில்லை. கொட்டாம்பட்டியோடு நின்றுவிட்டது. இந்தத் திட்டம் கொட்டாம்பட்டியோடு கொட்டாவி விட்டுவிட்டதா என்று கேட்கப்படுகின்ற அளவுக்கு அந்தத் திட்டம் இன்று செயலிழந்து கிடக்கின்றது.

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு மாதம் 50 ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வேலை தேட போக்குவரத்துச் செலவுக்காகவது அந்தப் பணம் பயன்படும் என்பதற்காகத்தான் 50 ரூபாய் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அதற்கு வியாக்கியானம் கூடச் செய்தார்கள். ஆனால் அந்தத் திட்டமும், ஒரு இலட்சம் பேர்களுக்கு, படித்த பட்டதாரிகளுக்கு வேலையில்லாதவர் களுக்கு தரப்படும் என்று இதே அவையிலே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டமும் - ஒரு ஆயிரம் இரண்டாயிரம் பேர்களுக்குக் கூட தரப்படுகின்றதா? எத்தனை நிபந்தனைகள் விதிக்கப்பட்டன என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்கின்ற போது அந்தத் திட்டமும் ஏறத்தாழ கிடப்பிலே போடப்பட்ட ஒரு திட்டமாகத்தான் ஆகிவிட்டது. 1979-80 ஆம் ஆண்டு அறிக்கையிலே இந்த அரசின் சார்பிலே அப்போது நிதியமைச்சர் படித்த அறிக்கையில் படித்த, படிக்காத வேலையில்லாத அனைவர்க்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம் செயலாக்கப்படும், இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு இன்றி இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். கான்ட்ராக்ட் ஒப்பந்தக்காரர்கள் இல்லாமல் அரசுத் துறையிலே நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம் அன்றாடம் ஆற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாள் ஒன்றுக்கு சுமார் ரூபாய் மூன்றும் அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும்

கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாளிலே அவர்கள் ஒவ்வொருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கு இணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதா? வேலை அளிக்கப்படும்; அப்படி அளிக்கத் தவறினால் வேலையில்லாமல் இருக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் அவர்களுக்கு ஒரு ரூபாய் வழங்கப்படும் என்ற இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், நீங்கள் சொன்னபடி வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தால் மக்களை வறுமைக்கோட்டுக்குக் கீழே இருந்து மேலே தூக்கிவிடுகின்ற முயற்சி செம்மையாக மேற்கொள்ளப்பட்டு இருந்தால் பட்டினி கிடக்கும் குழந்தைகளே இருந்திருக்க மாட்டார்களே.

வேலையில்லாதவர்களுக்கும் ஒரு ரூபாய் தரப்படும் என்று 1979-80ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தீர்களே அந்த அறிவிப்பின்படி நீங்கள் செயல் பட்டிருப்பீர்களானால் பட்டினி கிடக்கிற குழந்தைகளே வீட்டில் இருந்திருக்க முடியாதே! இன்றைக்கு குழந்தைகளுடைய உணவு, இந்தத் திட்டத்தின்படி எத்தனை குழந்தைகளுக்கு தர இருக்கிறீர்கள்? அந்தக் கணக்கு சொல்லப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல் இந்த நிதிநிலை அறிக்கையிலே அதன் தொடர்பாக எங்களுக்குத் தரப்பட்டு இருக்கிற புத்தகங்கள் அத்தனையையும் நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். எந்த ஒரு இடத்திலும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிற 100 கோடி ரூபாய் இந்தக் குழந்தை களுடைய இலவச சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டிருக்கிற அடையாளமே தெரியவில்லை. ஒதுக்கப்படவே இல்லை. ஒதுக்கப்படாமலேயே 100 கோடி ரூபாய் திட்டம் என்று அறிவித்திருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் 60 இலட்சம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் என்று ஒரு பொதுக் கூட்டத்தில் அல்லது பொது நிகழ்ச்சியில், அல்லது அரசு நிகழ்ச்சியில் பேசியதாக செய்திகள் வந்தன. அந்த 60 இலட்சத்தில் எந்தெந்தக் குழந்தைகள் சேருகிறார்கள்? அல்லது எந்தெந்தக் குழந்தைகள் விலக்கப் படுகிறார்கள் என்ற விவரங்களும் எங்களுக்குத் தேவை.

1981-82ஆம் ஆண்டு அறிக்கையில் சொல்லி யிருக்கிறீர்கள். குழந்தைகள் காப்பகங்கள், சத்துணவுத் திட்டம் இதற்காக 1.54 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று 81-82ல் அறிவித்திருக்கிறீர்கள். அந்தக் குழந்தைகள் இந்த 60 இலட்சத்தில் சேருகிறார்களா அல்லது கழிக்கப் படுகிறார்களா? உலக வங்கி சத்துணவுத்திட்டம் 1981-82ல் இருந்து மதுரை மாவட்டத்தில் வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்படும் என்றீர்கள். அதிலுள்ள குழந்தைகள் எண்ணிக்கை எவ்வளவு? அவர்கள் இந்தத் திட்டத்தில் இணைக்கப் பட்டிருக்கிறார்களா அல்லது கழிக்கப்பட்டிருக்கிறார்களா?

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மதிய உணவுத்திட்டம் இங்கே நடைமுறைப் படுத்தப்பட்டு ஐந்து வயது முதல் பத்து வயது வரை பள்ளிகளில் படிக்கிற சிறார்களுக்கு மதிய உணவு அளிக்கப் படுகிற திட்டம் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தி லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஐந்து வயது முதல் பத்து வயது வரை பள்ளிகளுக்குச் செல்கிற அந்தச் சிறுவர்களுக்கு மதிய உணவு அளிக்கிற நேரத்தில் நீங்கள் சொல்கிற 2 வயது முதல் 10 வயது வரை என்கிற இந்தக் குழந்தைகளுடைய கணக்கில் இந்த ஐந்து வயது முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகளைக் கழித்துவிட்டால் ஆக நீங்கள் சொல்கிற திட்டம் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, மாத்திரம்தான் என்பது தெளிவாகிறதா இல்லையா? இல்லை நாங்கள் பத்து வயதுக்கும் போடுவோம் என்று சொன்னால் பள்ளிக்கூடங்களில் அவர்கள் படிக்காமல் இருந்தால் கூட அவர்களுக்கு சத்துணவு தரப்படும் என்று சொல்வதாக அர்த்தம். எப்படியும் கட்டாயக்கல்வி வேண்டும். குக்கிராமங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாய வீட்டு குழந்தைகள் எப்படியும் படித்திட வேண்டும். அவர்கள் வயிற்றுப் பசி காரணமாக வேறு வேலையில் ஈடுபட்டு வயிற்றுக்கு உணவு தேடுவதற்காக வேறு பணிகளில் ஈடுபட்டு அதன் காரணமாக பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிறார்கள் என்ற அந்தக் குறைபாடு வந்ததால்தான் மதிய உணவுத் திட்டம். அந்த மதிய உணவுத்திட்டம் ஐந்து வயது முதல் பத்து

வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் பயன்படும்போது நீங்கள் இரண்டு வயது முதல் பத்து வயது வரை என்று சொல்கிறீர்களே, என்ன கணக்கு என்று எனக்குப் புரிய வில்லை. எனவே உங்கள் கணக்குப்படி ஐந்து வயது முதல் பத்து வயது என்கிற அந்த வயது வரம்பைக் கழித்துவிட்டால் இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள்தான் பயன் பெற முடியும். அந்தக்குழந்தைகள் எத்தனை பேர்கள், அதுவும் தெரியாது.

ஒரு புதிய திட்டம் அல்லது அறிவிப்பு அல்லது நிர்வாகக் கருத்து அதை நேற்று முதலமைச்சர் அவர்கள் மேலவையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கூட இங்கே பிரச்சினை வந்து பிறகு சுமுகமாக முடிவுற்றது. அவர்கள் கூறும்போது இந்தத் திட்டத்தை தாய்மார்களை வைத்து நடத்தப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், அந்தக் குழந்தைகளுடைய திட்டத்தில் யாரும் தவறு செய்துவிடக்கூடாது. தாய்மார்களுக்குத் தான் குழந்தைகளுடைய பசி அருமை தெரியும். எனவே அந்தத் தாய்மார்களைக் கொண்டே இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறேன் என்ற கருத்தில் அவர்கள் சொல்லியிருக்கலாம். நான் ஒரு மாற்று யோசனையாகச் சொல்கிறேன். தாய்மார் களுக்குத்தான் இந்தத் திட்டத்தில் அக்கறையுள்ளது என்பதைவிட அந்தந்தக் குழந்தைகளை பெற்ற தாய்மார் களுக்குத்தான் அந்த அக்கறை என்பதை மனதில் கொள்வீர் களானால், இந்த சத்துணவிற்காக ஒவ்வொரு குழந்தைக்கும் செலவழிக்கப்படுகிறது ஐம்பது பைசா என்று வைத்துக் கொண்டால், அரை ரூபாய் என்று வைத்துக் கொண்டால் முப்பது நாட்களுக்கு பதினைந்து ரூபாய். சத்துணவு எட்டணாவிற்கு எப்படித் தருவார்களோ ? இருந்தாலும் இன்னும் கொஞ்சம் அதிகமான தொகை ரூபாய். சத்துணவு எட்டணாவிற்குள்ளே தருவதாய் இருந்தாலும், இன்னும் கொஞ்சம் அதிகமான தொகை ஒரு ரூபாய் நான் சொல்லியிருப்பதால் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சொல்ல வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் எண்ணக்கூடும். ஒரு ரூபாய்க்கு சத்துணவு தரப்போகிறோம் என்று இங்கே சொன்னாலும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தாய்மார்களுடைய ஒரு சொஸைட்டி, ஒரு சங்கம் அல்லது ஒரு நிர்வாகப் பொறுப்பை வைத்து அவர்கள் மூலமாக குழந்தைகளுக்கு அந்த உணவு போய்ச் சேருவதைவிட அந்தந்த வீடுகளிலுள்ள, ஏழை வீடுகளிலுள்ள தாய்மார்கள் இடத்தில் ''இந்தாம்மா ஒரு நாளைக்கு எட்டணா, முப்பது எட்டணா ரூபாய் 15, இதை வைத்துக் கொண்டு குழந்தைக்கு மதிய உணவு சத்துணவு போடு'' என்று அந்தக் குழந்தைக ளுடைய வயிற்றுக்கு நேராகப் போய்ச் சேரும்.

அது அந்தக் குழந்தைகளுக்கு நேரடியாகப் போய்ச் சேரும் இல்லாவிட்டால், பல வயிறுகளைத் தாண்டித்தான், அந்தக் குழந்தைகளுக்குப் போய்ச் சேரும். இந்த தாய்மார்களைப் பற்றிச் சொல்லும்போது, பெற்ற தாயைவிட, மற்றத்தாய் உற்றதாயாக இருக்கமுடியாது. ஒரு சில தாய்மார்களை அடையாளம் காட்டி, விதிவிலக்கு வேண்டுமென்று விவாதிக்க வேண்டாம். உரிய தாயிடத்தில் நாளொன்றுக்கு 8 அணா வீதம் அல்லது ஒரு ரூபாய் வீதம் மாதம் ஒன்றுக்கு கணக்கிட்டுக் கொடுத்து விட்டால் அந்தச் சத்துணவு ஒழுங்காகப் போய்ச் சேரும் என்ற யோசனையை நான் சொல்லும்போது இதை மறுப்பீர்களே தவிர, ஆக்கபூர்வமான யோசனையை சொன்னீர்களா? என்று கேட்கக்கூடாது என்பதற்காக இந்த யோசனையை நான் சொல்லி வைக்கிறேன்.

இன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1.38 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள். வரியே போடமாட்டோம் என்று சொல்லப்பட்ட இந்த அரசில் 38 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள். எந்த நேரத்திலே? மதுவிலக்கை பெருமளவிற்கு தளர்த்தியிருக்கிறோம் என்று வார்த்தை ஜாலத்திற்காக வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எது தளர்த்தப்பட்டிருக்கிறது? சாராயக் கடைகளிலும், கள்ளுக் கடைகளிலும் உயரத்திலே தொங்கவிடப்பட்டிருந்த பெயர்ப் பலகைகள் இப்போது கொஞ்சம் தளர்த்தப்பட்டு கீழே தொங்கவிடப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, வேறு எதுவும் தளர்த்தப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. கிட்டத்தட்ட

மதுவிலக்கை ரத்து செய்த மாதரி செய்துவிட்டு, அதிலே ஏறத்தாழ 100 கோடி ரூபாய் வருமானம் வருகின்ற இந்த சூழ்நிலையில், 38 கோடி ரூபாய்க்கு வரி என்கிறீர்கள். அதிலே பட்டு மீது வரி போடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பதாகச் சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில் குழந்தைகள் பயன்படுத்துகின்ற பிஸ்கட், மிட்டாய், சர்க்லேட் போன்றவைகள் மீது வரிகள் போடப்பட்டிருக்கிறது. இந்த வரிகள் எல்லாம் உறுப்பினர்கள் வாதிட்ட பிறகு எடுத்துவிடும் வரிகளாக இருக்கும்; அது எனக்குத் தெரியும். சில வரிகள் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்குப்பிறகு, விலக்குகின்ற வரிகளாக அப்படிப்பட்ட வரிகள் போடப்பட்டு, அதைப்பற்றி உறுப்பினர்களைப் பேசச் சொல்லி, கடைசியாக பலத்த கைத்தட்டலை அவையிலே எதிர்பார்த்து, அந்த வரிகளை விலக்கிவிட்டோம் என்று பொதுவாகச் சொல்வது நிதியமைச்சருக்குள்ள மரபு. நானும் நிதியமைச்சராக இருந்திருக்கிறேன். அதனால் அனுபவத்தில் சொல்கிறேன். எனவே அந்த வகையில் இந்த பிஸ்கட், மிட்டாய், சாக்லேட் ஆகியவற்றின் மீது போடப்பட்டிருக்கின்ற வரிகளும், பட்டு மீது போடப்பட்டுள்ள வரியும் நீக்கப்படலாம்.

பட்டு வியாபாரிகள் எங்களைச் சந்தித்தார்கள். நான் அவர்களைக் கேட்டேன், 'பட்டு' வந்திருக்கிறீர்களா என்று ஆமாம் 'பட்டுத்தான்' வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். எனவே அவர்கள் பட்டுப் போகாமல் காப்பாற்றப்பட வேண்டும்; கைத்தறி தொழில் பட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வதுதான் அரசின் பொறுப்பு. இராஜாஜி அவர்கள் கொண்டு வந்த இந்த விற்பனை வரியை, காமதேனு என்று அனைவரும் சொல்வார்கள். அந்த இராஜாஜி கூட விற்பனை வரியை அறிமுகப்படுத்திய அந்த காலகட்டத்தில்,கைத்தறிக்கு வரி போட்டது கிடையாது. தவறி போடப்பட்ட 1 சதவிதம் வரியைக்கூட உடனடியாக விலக்கிவிட்டார் என்றுதான் நான் கேள்விப்படுகிறேன்.

மத்திய சர்க்காருடைய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற வரவு-செலவு திட்டத்திலேகூட, பாலிஸ்டர் கைத்தறியோடு இணைந்து தயாரிக்கப்படுமானால், அந்த பாலிஸ்டருக்கு வரி கிடையாது என்று மத்திய அரசிலே

கூட விதிவிலக்களித்திருக்கிறார்கள். எனவே கைத்தறியாளர்கள் வாழ்வை உயர்த்தவும், அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், நீண்ட நெடுங்காலமாக பாடுபட்டு வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் இந்த அரசை கேட்டுக் கொள்வேன் கைத்தறிக்கு ரிபேட் போன்ற சலுகைகளை அளிப்பதுதான் நம்முடைய கடந்த கால அரசுகளுக்கு பழக்கமே தவிர, வரி போடுவது வழக்கமல்ல, ஆகவே இப்படி போடப் பட்டுள்ள பட்டு வரியையும், குழந்தைகளின் சத்துணவிற்காக பிஸ்கட், சாக்லேட், மிட்டாய் போன்றவற்றின்மீது போடப் பட்டுள்ள வரியையும் நீக்குவதற்கு இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த வரிகளையெல்லாம் நீக்க வேண்டு மென்று சொல்லும்போது, மற்ற வரிகளை வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணக்கூடாது. இந்த 38 கோடி ரூபாய் விற்பனை வரியைப் போடுவதைவிட, விற்பனை வரியிலே 620 கோடி ரூபாய் வருமென்று சொல்லுகிறீர்கள். 620 கோடி ரூபாயை வசூலிக்கின்ற நேரத்தில், கொஞ்சம் தீவிரமாக ''டிரைவ்'' என்று சொல்வார்களே, அப்படி தீவிரமாக அது வசூலிக்கப்பட்டால் நீங்கள் எதிர்பார்க்கின்ற 38 கோடி ரூபாய் நிச்சயமாக, இந்த வரிகளை உயர்த்தாமல், புதிய வரிகளைப் போடாமல், இந்த 30 கோடி ரூபாயைப் பெற முடியும்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்தில், 10,000 ரூபாய் கொள்முதல் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விற்பனை வரியில்லை என்று விலக்களிக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது 10,000 ரூபாய் என்ற வரம்பை ரூ.15,000 ஆக உயர்த்தி, வரி விலக்கு அளிக்கப்பட்டது. அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அந்தப் பொறுப்புக்கு நான் வந்த பிறகு, முதற்கட்டமாக ரூ. 15,000 என்றிருந்த வரம்பை ரூ. 25,000 ஆக உயர்த்தி வரி விலக்கு அளிக்கப்பட்டது சிறு வியாபாரிகளுக்கு.

அதன் பின்னர் திரு. எஸ். பி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ்., என்ற ஒரு அதிகாரியின் கீழ் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டு அது தந்த பரிந்துரையின்படி 35 ஆயிரம் ரூபாய் வரி விலக்கு அளிக்கலாம் என்று தந்த பரிந்துரைகளை ஏற்று 35 ஆயிரம் அல்ல 50 ஆயிரம் ரூபாய் வரி விலக்கு அளிக்கலாம் என்று விலக்கு அளித்தது. நாவலர் அவர்களுக்கு நன்றாக

நினைவிருக்கும், அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்களுக்கும் இன்று எதிர் வரிசையிலே அமர்ந்திருக்கும் அமைச்சர் களுக்கும் மற்றவர்களுக்கும் நினைவிருக்கும், சபாநாயகர் உள்பட; 59 பொருள்களுக்கு பல முனை வரி ரத்து செய்து ஒரு முனை வரியாக ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஆனால் இன்றையை அரசு அந்த 59யும் 58ஆக ஆக்கி வெல்லத்திற்கு பலமுனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று வியாபாரிகள் சார்பிலே சொல்லப்படுகிறது. கழக ஆட்சிக் காலத்தில் 59 பொருள்களுக்கு பலமுனை வரி நீக்கப்பட்டதல்லவா? ஒரு முனை வரி போடப்பட்டது அல்லவா, அது நீங்கலாக மிச்சமுள்ள பலமுனை வரிக்கு உட்படுத்தப்பட்ட பொருள்களில் இந்த 620 கோடி என்று சுட்டிக்காட்டுகிறீர்களே அந்த 620 கோடி ரூபாயிலே 250 கோடி ரூபாய் பலமுனை வரியாக மாத்திரம் உங்களுக்கு வர காத்திருக்கிறது. இந்த 250 கோடி ரூபாய் வரியைத்தான் 4 சதவீதம் என்பதை நீங்கள் 5 சதவீதம் ஆக ஒரு சதவீதம் உயர்த்தியிருக்கிறீர்கள். அந்த ஒரு சதவீதம் உயர்வின்படி 250 கோடி ரூபாய். பலமுனை வரியில் உங்களுக்கு கிடைக்கப் போவது 60 கோடி; இதுவன்னியில் நீங்கள் போட்டிருக்கிற மற்ற வரிகள் மூலமாக 50 கோடி, ஆக ஏறக்குறைய 100 அல்லது 110 கோடி ரூபாய் அளவிற்கு நீங்கள் வரி போட்டிருக்கிறீர்கள்.

மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதன் மூலமாக 100 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிற இந்த அரசு, 100 கோடி ரூபாய்க்கு மேல் வரியாக போட்டுவிட்டு 38 கோடி ரூபாய்க்கு மட்டும்தான் வரிபோட்டிருக்கிறோம் என்று சொல்வது பொருளாதார ரீதியிலே என்னால் ஏற்கவியலாது. நிச்சயமாக இந்த வரிகள் மூலமாக இந்த அரசுக்கு 110 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வரி உயர்வு ஒரு புறம், புதிய வரிகள் ஒரு புறம். அதே நேரத்தில் கோடிக்கணக்கான வரி தள்ளுபடியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வருந்தத்தக்க ஆனால் சொல்லித்தீர வேண்டிய ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT : Steel Rerolling Mills - Tax - Tamil Nadu General Sales Tax 1959 and Central Sales Tax 1956 - Levy of tax - Levy of tax on the sale of re-rolled products of Iron and Steel - for the period from 19th January 1976 - Exemption - Ordered.

Commercial Taxes and Religious Endowment G. O. Ms. No. 103, Dated 24.1.1982

The Government after careful examination and due consideration have decided to accept the recommendation of the Task Force and order that the end products coming under Item 4 of the Schedule II such as M. S. Rounds, Rolls, and rods, etc. manufactured by the Steel Rolling Mills in Tamil Nadu out of our raw materials specified in Item 4 of Schedule II to the Tamil Nadu General Sales Tax Act which had already suffered tax under the Tamil Nadu General Sales Tax Act be exempted from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act and the Central Sales Tax Act.

என்று ஒரு வரிவிலக்கு செய்யப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு நாளைக்கு ? என்றால்

The exemption will take effect retrospectively from 19th January 1976".

அதன்படி 1976 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரையில் ரீ–ரோலிங் மில்ஸ் கட்ட வேண்டிய வரி இந்த அரசுக்கு ஏறத்தாழ ஏழு அல்லது எட்டு கோடி ரூபாய். இந்த ஏழு அல்லது எட்டு கோடி ரூபாய் கட்டப்பட வேண்டியதில்லை. 19.1.1976 முதல் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட் படி கட்ட வேண்டியதில்லை என்று ஒரு எட்டு கோடி ரூபாயை இந்த அரசு இழந்திருக்கிறது. 38 கோடி ரூபாய் வரி போடுகிற நேரத்திலே, எட்டு கோடி ரூபாயை நாம் இழந்திருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி என்றால், விவசாயிகள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்றால் படம் போட்டு சித்தரிக்கிற இந்த அரசாங்கம் காதும் காதும் வைத்ததுபோல

யாருக்கும் தெரியாமல் ஒரு ஜி.ஓ.மூலமாக கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாயை ஸ்டீல் ரோலிங் மில்ஸ் அதிபர்களுக்கு வரி விலக்கு செய்திருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அப்படித்தான் கிராம அதிகாரிகளுக்கு அவசரப்பட்டு இந்த அரசு எடுத்த முடிவின் காரணமாக அவர்களுக்கு வேலை இல்லாமலேயே சம்பளம் தருவதால் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி ரூபாய் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆக 13 கோடி ரூபாய் நான் இங்கே எடுத்துக் காட்டிய இந்தக் கணக்கின்படியே கூட நாம் வேண்டுமென்றே இழக்கிறோம். 8 கோடி ரூபாய் என்ன காரணத்தாலோ என்ன சலுகையாலோ நான் விவரிக்க விரும்பவில்லை. எப்படியோ 8 கோடி ரூபாயை ஸ்டீல் ரீரோலிங் மில்லினுடைய வரியில் நீக்கம் செய்துவிட்டு, ரத்து செய்துவிட்டு கிராம அதிகாரிகளுக்கு 5 கோடி ரூபாய் தந்து 13 கோடி ரூபாயை வேண்டுமென்றே இழந்து கொண்டிருக்கின்றது, இந்த அரசு என்று குற்றஞ் சாட்டுவது எப்படித் தவறாகும் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அடுத்து பல விரையங்கள், வீணான விரையங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு இருந்தால் இப்படி வரிபோட வேண்டிய அவசியம் இருக்குமா, ஒரு பற்றாக்குறை வரவு-செலவு திட்டத்தை அறிவிக்க வேண்டிய அவசியம் இருக்குமா என்பதையும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. தமிழுக்கு உலக அளவிலே மாநாடு நடைபெறவேண்டியது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. அறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாநாட்டை நடத்தி மாப்புகழ் எய்தினார்கள். மாநில மெங்கும், மாநிலம் என்று நான் குறிப்பிடுவது, உலகத்திலே உள்ள பல நாடுகளாலும் பாராட்டப்பெற்ற மாநாடாக நடைபெற்றது இந்த ஆட்சியின் சார்பிலே உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. நான் அதிலே நடைபெற்ற வேறு சில சில்லரை பிரச்சினைகளுக்குள் தலையிட விரும்பவில்லை. ஆனால் இந்த அவையில் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உலகத் தமிழ் மாநாடு பற்றிய முழு கணக்கையும் இந்த

அவையில் வைப்பதாக இந்த அரசால் உறுதி கூறப்பட்டது. இதுவரையில் அந்தக் கணக்குகள் இந்த அவையில் வைக்கப்படவில்லை. உலகத் தமிழ் மாநாட்டின் போது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட தமிழ்த்தாயின் சிலை பின்னர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் மேடையில் இருக்கிற நேரத்திலேயே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அந்தத் தமிழ்த் தாயின் சிலை இப்போது எங்கே இருக்கிறது. எப்படி தூசி படிந்து கிடக்கிறது. எவ்வளவு கேவலமாக மோசமான முறையிலே அது மதுரையிலே ஏதோ ஒரு மூலையிலே தள்ளப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் பத்திரிகையிலே படம் போட்டுக் காட்டினார்கள். நான் கழக ஏடுகளை சொல்லவில்லை. எந்தக் கட்சியையும் சாராத ஏடுகளிலே அந்த கவலை தரும் சம்பவங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்போது பாரதிவிழா, பாரதிக்கு விழா கொண்டாட வேண்டும். விடுதலைக்கவி பாரதி, புதுமைக்கவி பாரதி எளிய நடையில் அனைவரையும் கவிதை எழுத வைக்கிற ஆசான் பாரதி, அந்த பாரதிக்கு நூற்றாண்டுவிழாக் கொண்டாடுவதில் யாருக்கும் கடுகளவு மறுப்பேனும் இருக்க முடியாது. ஆனால் பாரதிக்கு விழா எடுக்கும் பெயரால் செலவிடப்பட்ட பணம் ஒழுங்காகச் செலவிடப்பட்டிருக்கிறதா? நான் கேள்விப்பட்ட வரையில் சொல்கிறேன். நான் கேள்விப்பட்டது தவறு என்றால் திருத்துவதற்கு சரியான புள்ளிவிவரங்களைத் தருவதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. எட்டயபுரத்திலே உள்ள பாரதி மணி மண்டபம் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களாலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே.பி.எஸ். நாராணயன் அவர்களாலும் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியால் 50 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்பட்ட மிக வலிவான கட்டடம், அந்தக் கட்டடத்திலே ஒரு சிறிது கீரல் கூட இல்லாமல் இருந்ததை புதுப்பிப்பதாகக் கூறி அதற்காக இரண்டரை லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி மெய்யானால் அது வருந்தத்தக்க ஒன்றா அல்லவா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். 50 ஆயிரம் ரூபாய் செலவிலே

கட்டப்பட்ட கட்டடத்திற்கு சிமிண்டால் மேல் பூச்சு பூசுவதற்கு மாத்திரம் 2½ லட்சம் ரூபாய் செலவாகும் என்பது அதிர்ச்சிக்குரிய ஒரு கேள்வியாகும். மணிமண்டப கட்டடத்திற்குப் பின்புறம் 10 ஏக்கர் கொண்ட ஒரு வாழைத் தோட்டம். அந்த நிலத்தை பொருட்காட்சி நடத்த வேண்டுமென்று கூறி அதிகாரிகள் பெற்று அந்த இடத்தில் சரளை அடித்து சமப்படுத்த அந்த வேலைக்கு மாத்திரம் 1 லட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அப்படி கான்ட்ராக்ட் விடப்பட்ட ஒரு லட்ச ரூபாயோடு கணக்குப் பார்த்தாலும் அதிலே கால் பகுதிதான் நிலம் வாங்கப்பட்ட விலை. லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் சமப்படுத்த, நிலத்தின் விலை அதிலே கால் பகுதி, இதுவும் என் காதுக்கு வந்த செய்தி, தவறு என்றால் விளக்கம் அளித்தால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பொருட்காட்சி என்றால் மிகப் பெரிய பொருட்காட்சியல்ல. ஆறே அரங்குகள் மாத்திரம் கொண்ட ஒரு பொருட்காட்சி. அந்த ஆறு அரங்குகளையும் கட்ட கான்ட்ராக்ட் எவ்வளவு தெரியுமா? 2 லட்ச ரூபாய் அளவுக்குத் தூண் நட்டு அதன்மேலே ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் போட இரண்டு லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அந்த விழாவிற்கு பந்தல் போட 4 லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. பெரிய மாநில மாநாடுகளையெல்லாம் இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தபொழுதுகூட நடத்தியிருக்கிறோம். இப்பொழுது அதனுடைய அந்தக் காலத்துச் செலவினங்களோடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பண மதிப்பீட்டை நாம் கணக்கிட்டுப் பார்த்தால்கூட இவ்வளவு செலவாக முடியாது. நான்கு இலட்சம் ரூபாய்க்கு பந்தல் போட மாத்திரம் கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பந்தலிலே மின்விளக்கு அலங்காரம் செய்ய மாத்திரம் ஏதோ செங்கோட்டையைச் சேர்ந்தவராம் ஒருவர். அவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டதாகத் தகவல். தகவல் சரியில்லை என்றால் மறுத்திடுவதற்குக் கடமை அரசுக்கு உண்டு.

எட்டயபுரத்தைச் சுற்றியுள்ள சுற்றுப்புறச் சாலைகள் ஒரு மாத காலத்திற்குக்கூட அவைகள் தாக்குப்பிடிக்கவில்லை.

எல்லாம் பழுதடைந்துவிட்டன. அந்த சாலைகளினுடைய பராமரிப்புக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது.

மதுரையிலே கட்டியதைப்போல எட்டயபுரத்திலே எட்டு கழிப்பிடங்கள். இந்த எட்டு கழிப்பிடங்களைக் கட்ட நான்கு லட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட். இதுவும் தவறு என்றால் மறுத்தால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். எனவே, பாரதி விழா தேவைதான். ஆனால் பாரதிவிழா என்கின்ற பெயரால் இந்த அளவிற்கு வரிப்பணம் விரயம் ஆகலாமா என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று கீழ் மேட்டூர் நீர் மின்சாரத் திட்டத்திற்கு டென்டர் ஷெட்யூல் எண். 1279ன்படி வேலையினுடைய பெயர் சிவில் கட்டுமான வேலை ஒன்று முதல் நான்குவரை நான்கு அணைக்கட்டுகள் மற்றும் பாலம் கட்டும் வேலை foundation, weir pie மற்றும் பிரிட்ஜ் கட்டுதல் இவைகளுக்கு டென்டர் கோரப்பட்டதில் டென்டர் போட்டவர்கள் ஷெட்யூல் ஏக்குப் போட்டவர்கள் குமார் அண்ட் கோ, பெங்களூர், ரவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ். பெங்களூர், ஜி. அண்ட் டி. கம்பெனி, பம்பாய், என்.பி.சி.சி. டெல்லி (இந்திய அரசின் நிறுவனம்). ஐந்தாவது ஹெச். சி. சி. லிமிடெட், பம்பாய். இதில் குறைவாக தொகை கேட்டவர் குமார் அண்ட் கோ. மிக அதிகத் தொகை கேட்டவர் ஹெ.சி.சி. அதிகத்தொகை 30 இலட்சம் ரூபாய் அதிகம். இதிலே யாருக்குத் தரப்பட்டது என்றால் ஹெ.சி.சி. லிமிடெட் என்ற பம்பாய் கம்பெனிக்குத்தான் அந்த வேலை கொடுக்கப்பட்டது.

ஷெட்யூல் பி - இரண்டாவது திட்டம். டென்டர் போட்டவர்கள் ராஜகோபால் அண்ட் கோ. மேட்டூர் அணை, ரவி கன்ஸ்ட்ரக்ஷன், பெங்களூர், குமார் அண்ட் கோ. பெங்களூர், ஜி. அண்ட் டி. கம்பெனி, பம்பாய், என். பி. சி. சி டெல்லி, (இந்திய அரசு நிறுவனம்) ஹெச். சி. சி. லிமிடெட், பம்பாய். இதில் குறைவான தொகைக்கு கேட்டவர் ராஜகோபால் அதிகத் தொகைக்கு கேட்ட ஹெச்.சி.சி. லிமிடெட், பம்பாய்க்குத்தான் இது கொடுக்கப்பட்டது.

அதைப்போல மூன்றாவது திட்டம், இ.ஆர். ரங்கசாமி அண்ட் பிரதர்ஸ், ஈரோடு, ரவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பெங்களூர், குமார் அண்ட் கோ, பெங்களூர், ஜி. அண்ட் டி. கம்பெனி, பம்பாய், என். பி. சி. சி., டெல்லி (இந்திய அரசு நிறுவனம்) ஆறு ஹெச். சி. சி., பம்பாய்.இதிலே குறைவான தொகைக்கு கேட்ட ரங்கசாமி அண்ட் பிரதர்ஸ்க்கு தரப்படவில்லை, மிக அதிகத்தொகைக்கு 46 இலட்சம் ரூபாய் அதிகம் கேட்ட ஹெச். சி. சி. கம்பெனி, பம்பாய்க்குத்தான் இந்த வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஷெட்யூல் நான்காவது திட்டம். டெண்டர் போட்டவர்கள் ரவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பெங்களூர், குமார் அண்ட் கோ, பெங்களூர் ஜி.அண்ட் டி.கம்பெனி, பம்பாய், என்.பி.சி.சி டெல்லி (இந்திய அரசு நிறுவனம்), ஹெச்.சி.சி, பம்பாய், சுமார் 30 இலட்சம் ரூபாய் அதிகம் கேட்டிருந்த ஹெச்.சி.சி கம்பெனிக்கு இந்த வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நான்கு ஷெட்யூலின்படி போடப்பட்ட டெண்டரில் இ.ஆர்.ரங்கசாமி அண்ட் பிரதர்ஸ் மொத்தத்தில் கேட்ட தொகை 2,12,14,160 ரூபாய், ஹெச்.சி.சி.லிமிடெட், பம்பாய் மொத்தத்தில் கேட் தொகை 2,58,43,370 ரூபாய், இதில் யாருக்குக் கொடுக்கவேண்டும்? ரங்கசாமி அண்ட் பிரதர்ஸ்க்கு கொடுத்திருக்க வேண்டும். இதிலே வித்தியாசம் 46,29,210 ரூபாய் அதிகமாக பம்பாய் ஹெச்.சி.சி கம்பெனிக்கு இந்த டென்டர்கள் நாலும் தரப்பட்டிருக்கின்றன.

இதிலே இந்த ரங்கசாமி அனுபவம் இல்லாதவரா என்று கேட்டால், பவானிக்கும் குமாரபாளையத்திற்கும் இடையிலே மிகப்பெரிய பாலம் ஒன்றை 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டி குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடித்துத் தந்தவர். இதைப் போல பல வேலைகளை எடுத்து நிறைவேற்றியிருக்கின்றார். இங்கே அவர்களுக்கு இது தரப்படவில்லை.

அதைப் போலவேதான், இன்னும் இரண்டு உதாரணங்களை மாத்திரம் சொல்கிறேன். பணம் எப்படி விரயமாக்கப்படுகிறது என்பதற்காக.

பஸ் சேசிஸ். உலக நாட்டினுடைய வங்கி, தமிழகத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்துக்கு 555 பஸ் சேசிஸ்கள் வாங்க பண உதவி அளிக்க முன்வந்தது. இதிலே அசோக் லேலண்ட் நிறுவனம் ஒரு சேசிஸ் விலை 1,25,952க்கும் டாட்டா என்ஜினியரிங் அண்டு லோகோமோட்டிவ் கம்பெனி லிமிடெட் நிறுவனம் 1,13,423 ரூபாய்க்கும் விநியோகிக்க முன்வந்தன, அதிலே டாட்டா இன்ஜினியரிங் நிறுவனத்தார் 3,422 ரூபாய்க்கு இதர உதிரி பாகங்களை வழங்கவும், முன் வந்தார்கள், அப்படிக் கணக்கிட்டுப் பார்த்தால் 1,10,000 க்கு டாட்டா என்ஜினியரிங் நிறுவனத்தில் சேசிஸ் கிடைக்கிறது. ஒரு சேசிஸ் மொத்தம் 555 சேஸிஸ்களுக்கும் வெளிநாட்டில் தயாரிக்கப்படும் சேஸிஸ்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பார்த்தால் அசோக் லேலண்டுக்கும், டாட்டா என்ஜினியரிங்கிற்கும் வித்தியாசம் 88,52,805, ஆக அசோக் லேலண்டுக்கு டாட்டா என்ஜினியரிங்கை விட்டுவிட்டு 88,52,805 ரூபாய் அதிகமாகத் தந்து 555 சேஸிஸ் வாங்கப் பட்டிருக்கின்றன.

கேட்டால் ஒரு குழு போட்டோம்; பொறியியல் அதிகாரிகள் இருந்தார்கள் – அவர்கள்தான் பரிந்துரை செய்தார்கள் என்று அரசு சொல்லும். ஆனால் அதே பரிந்துரைக்குழு டாடா இன்ஜினீயரிங் சேசிஸ்தான் சிறந்தது என்று கூறி 1978 ஆம்ஆண்டு 282 சேஸிஸ்களும் 1979 ஆம்ஆண்டு 100 சேசிஸ்களும் 1980 ஆம் ஆண்டு 180 சேசிஸ்களும் டாடாவிலிருந்து வாங்கப்பட்டிருக்கின்றன. சொல்லிவிடலாம் டாடா என்பது தமிழ்நாட்டிலே உள்ளது அல்ல. அசோக் லேலண்ட் தமிழ்நாட்டிலே உள்ளது என்று. ஆனால் இதை எதிர்க்கட்சிகள் எல்லாம் முன்பு எடுத்துக்காட்டிய பொழுது அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்ட பதில் டாட்டா இன்ஜினீயரிங் சேசிஸ்தான் உயர்ந்தவை அசோக் லேலண்ட்டை விட. எனவே, அதை வாங்குகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அசோக் லேலண்டிலிருந்து ரூ.88.52 இலட்சம் அதிகமாக விலை வைத்து கொடுக்கிற நேரத்தில் டாட்டா விட்டுவிட்டு அசோக் லேலண்டில் வாங்க வேண்டிய அவசியம் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி பணம் பாழாகும் படலங்கள் நடைபெறுகிறது.

நான் ஒன்றைச் சொல்கின்றேன். முதலமைச்சர் வருத்தப்படக்கூடாது. இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் ஒரு பெரிய வியாதியாகவே இந்த அரசாங்கத்திற்கு வந்துவிட்டது என்பது என்னுடைய ஆழ்ந்த வருந்தத்தக்க ஒரு குறிப்பாகும். நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு கடைநிலை ஊழியர் அவருடைய பெயர் மாணிக்கம். இதுவரையிலே ஒரு கடைநிலை ஊழியரை ஒரு அமைச்சர் விமானத்திலோ அல்லது டிரெயினில் பர்ஸ்ட் கிளாசிலோ அழைத்துச் செல்வதற்கு அவர்களுக்கென்று பண்ட்ஸ் ஒதுக்கீடு அரசாங்கம் செய்வது இல்லை. ஆனால் G.O.No.1317 Public Establishment IV) dated 3.3.1981ல் என்ன ஆர்டர் போட்டிருக்கிறார்கள்? In relaxation of Rule 37 of Madras Travelling Allowance Rules Government permit Thiru S. Manickam basic servant to Chief Minister to perform the journeys by air while accompanying the Chief Minister on tours both within and outside Tamil Nadu State for administrative reasons with retrospective effect from the date of assumption of present Ministry with effect from 9.6.1980 என்று இப்படி ஒரு உத்தரவு போடப்படுகிறது. தேவைதானா? நான் முதலமைச்சராக இருந்தபொழுது இப்படிப்பட்ட கடைநிலை ஊழியர்கள்கூட அல்ல. பாதுகாவலர்களாக வருகின்ற அதிகாரிகளைக்கூட என்னோடு விமானத்திலே வராமல் பெரும்பாலும் முதல்நாள் ரெயிலிலே டெல்லிக்குக்கூட சென்றுவிடுவார்கள். பிறகு விமானத்திலே நாங்கள் டெல்லிக்குச் செல்வோம். ஆனால் இங்கே மாணிக்கம் என்பவருக்காக ஒரு ரூலே தளர்த்தப்பட்டு ஒரு கடைநிலை ஊழியர் விமானத்திலே வரக்கூடாதா என்றால் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கிற நேரத்தில் சமதர்மத்தின் அடிப்படையில் நான் முழுக்க முழுக்க அதை வரவேற்கிறேன். ஆனால் அப்படி தளர்த்திய அன்று முதல் அது பலனுக்கு வரும் பயனுக்கு வரும் என்று சொல்லாமல் அதையும் 1980 ஆம் ஆண்டு, இந்த ஆட்சி என்றைக்கு கொலுவுக்கு வந்ததோ அன்று முதல் அதற்கும் ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட் தேவைதானா? எல்லாவற்றிலும் ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட். ஸ்டீல் ரீ ரோலிங் மில்லுக்கு வரியை குறைப்பது என்றால், அதற்கு 6 ஆண்டுகள் ரெட்ராஸ்

பெக்டிவ் எபெக்ட் முதல் அமைச்சர் வீட்டுக்கு வாடகை உயர்த்துவது என்றால் அதற்கு 2 அல்லது 3 ஆண்டுக்காலம் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் மாணிக்கத்தினுடைய பயணச் செலவு ஒரு பேசிக் சர்வன்டுடைய பயணச்செலவு என்றால் அதற்கும் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட் தேவைதானா என்பதை நான் மெத்தப் பணிவன்போடு இந்த அரசைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.

இப்படிக் குறைகளைச் சொன்னால் கோபம் வருகிறது. கோபம் வந்தால் வழக்குப் போடுகிறார்கள். போட்ட வழக்கு போதாது என்று இன்னும் என்ன வழக்கு போடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவன் ஒருவன் இருப்பத னாலே இவனை அழித்துவிட்டால்? என்கின்ற எண்ணம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை போன்ற ஒரு சாயல் எனக்குத் தெரியாமல் இல்லை. அந்தக் காரணத்தாலேதான் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலேயிருந்து திருமதி இந்திராகாந்தி வந்த நேரத்திலே ஜனநாயக ரீதியிலே பிடிக்கப்பட்ட கறுப்புக்கொடி நிகழ்ச்சியிலிருந்து வழக்குப் போடப்பட்டு, என்னை பேராசிரியரை மற்றுமுள்ள கழகத்தி னுடைய தலைவர்களை நீதி மன்றத்தினுடைய நெடிய படிக்கட்டுகளிலே ஏற்றி ஏற்றி இறக்கி 400 சாட்சியங்கள் விசாரிக்கப்படவேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இந்திரா காந்தி அம்மையாரைக் கொலை செய்ய முயற்சித்தோம். சதி செய்கின்றோம் என்கின்ற அளவுக்கு வழக்கு. அந்த ஒரு சதி வழக்கிலே தப்பித்துக் கொண்டால் என்ன செய்வது என்பதற்காக மற்றொரு சதி வழக்கு பின்னப்படுவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன். அதிலே, என்னை எப்படி சேர்க்கலாம் என்று இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறேன்.

இந்தக் குறைகளை எடுத்துச் சொல்கிற காரணத்தால், இப்படிப்பட்ட செயல்கள் வருமானால், அவைகளைச் சந்திக்க தனிப்பட்ட முறையில் நானும் பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகமும் தயாராக இருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அவருடைய பொறுப்புமிக்க உரையில், அவருக்கே உரித்தான பாணியில் அவர் என்னென்ன எண்ணுகின்றாரோ அதை எல்லாம் சொன்னார்கள். அவைகளுக்கு எல்லாம் இறுதியிலே பதில் கிடைக்கும் என்ற காரணத்தால் நாங்கள் அவ்வப்போது எதுவும் சொல்லாமல் இருக்கின்றோம். ஆனால் இறுதியில் அவரை ஒழித்துவிட்டால்தான் ஏதோ எனக்கு என்று கூட சொன்னார் என்று நான் கருதுகிறேன். அப்படி ஒரு எண்ணம் இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டு இருப்பார்களேயானால் அது உண்மைக்குப் புறம்பானது என்றும், அப்படிப்பட்ட எண்ணம் எனக்கு இதுவரையில் இல்லை, இனியும் வராது என்றும் தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும். அவர் இருப்பதால் எனக்கு லாபமே தவிர, நஷ்டம் எதுவும் இல்லை. ஏனெனில் அவ்வப்போது அவர் சில காரியங்களைச் சொல்லும்போது எனக்குப் பதில்சொல்வதற்கோ அல்லது அதை எதிர்த்து செயல்படுவதற்கோ அவசியம் ஏற்படும் போது நான் கொண்ட கொள்கைக்கும் என்னுடைய பதவிக்கும், மக்கள் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு பயனாக அமைந்து விடுகிறது.

ஆகவே இதுவரை என்னை அழிக்க நினைத்தவர்களின் எண்ணத்தின் விளைவாக எனக்கு மக்களிடம் அனுதாபமும் வலிவும் ஏற்பட்டிருக்கிறதே தவிர, எனக்கு பலவீனம் ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே இன்றைய தினம் எந்த வழக்கையும் தேடி அலைந்து, உருவாக்கி, யார் மேலும் பழி சுமத்தவேண்டிய அவசியம் எனக்கும் இல்லை; என் கட்சிக்கும் இல்லை என்பதை திட்டவட்டமாக சொல்ல விரும்புகிறேன். இருக்கின்ற சாட்சியங்கள் படி அங்கே வழக்குகள் நடைபெறுகின்றதே தவிர, ஒரே நீதிபதியின் முன் 9 வழக்குகளை என் மீது போட்டார்கள். அதைப்போல நாங்கள் போடவில்லை (குறுக்கீடு). போட்டிருக்கிறார்கள். ஒருவேளை உங்களுக்கு தெரியாமல் செய்திருப்பார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : தலைவர் அவர்களே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி இதைச் சொல்லி வருகிறார். அங்கங்கே பல கூட்டங்களில் முதலமைச்சராக இருக்கிற என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் பல கூட்டங்களில் அவர் எதிர்கட்சியில் இருந்தபோது, அந்தந்த ஊர் எம்.எல்.ஏ–க்களைப் பற்றி பேசியதன் காரணமாக அவர்கள் போட்ட மான நஷ்ட வழக்குகளை எல்லாம் சேர்த்து, அரசு போட்டதாக அவர் கணக்கிடுவது தவறு.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே தலை இல்லாமல் வால் ஆடாது. ஆகவே எது நடந்தாலும் ஒரு முதலமைச்சர் இது சரியில்லை என்று தெரிந்து வேண்டாம் என்றால் அது நடக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அடிப்படையில் ஏதாவது காரணம் இருந்தால்தான் வழக்குகள் வெளிவருகிறதே தவிர விருப்பம் இருந்தால்தான் வருமே தவிர வேறு அல்ல. அந்த விருப்பம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

894.8115
ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 025.

